

கம்பன் காட்டும் கண்ணுதலான்

பள்ளத்தூர் பழ.பழனியப்பன்

வானதி பதிப்பகம்

கம்பன் காட்டும்
கண்ணுதலான்

உரை ஆசிரியர்

பள்ளத்தூர் பழ. பழனியப்பன்

(முன்னாள் முதுநிலை மேலாளர், பரோடா வங்கி)

வானதி பதிப்பகம்

23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை – 17.

முதற் பதிப்பு: டிசம்பர், 2011

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ.130.00

- Title : KAMBAN KATTUM KANNUTHALAAN
- Author : Pallathur Pala. PALANIAPPAN
- Language : Tamil
- Subject : Literature
- Edition : First Edition, December, 2011
- Pages : XIV + 282 = 296
- Published by : VANATHI PATHIPPAKAM
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai–600017.
  ✆ 24342810 / 24310769
  e-Mail: vanathipathippakam@gmail.com
  web : www.vanathi.in
- Price : ₹. 130-00

Printed at: Ganapathi Process, Chennai-5. Ph. : 9841223780

PHONE : 24 56 655

"KAILAI MA MUNIVAR "
THIRU VALAR THIRU KASIVASI
MUTHUKUMARASWAMI TAMBIRAN
SWAMIGAL



SIVA SIVA

HEAD OF KASITHIRU MADAM
TIRUPANANDAL - 612 504.
THANJAVUR DISTRICT

ஆசியுரை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 21ஆவது அதிபர் ''கயிலைமாமுனிவர்'' ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமி தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ காசிமடம் நிறுவனரும் அருட்பெருங் கவிஞருமாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், கம்பரமாயணத்தின் கவிரசத்தில் தோய்ந்தவர்கள் என்றும், காசியில் இந்துஸ்தானி மொழியில் கம்பராமாயண விரிவுரைகளும் நிகழ்த்தினார் என்றும் அவர்தம் அருள் வரலாற்றில் வருகிறது.

ஸ்ரீ காசிமடத்தின் 18வது அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் (3) (1918/1930) அவர்கள், பல மாணவர்களுக்கு இயற்றமிழ் இலக்கண இலக்கியங்களைப் பாடம் சொல்லிப் புலவர்களாக்கியவர். அவர் கம்பராமாயணத்தைப் பாடம் சொல்லும் போது நூற்றுக்கணக்கான அற்புத நயங்களை விளக்குவார் என்பது அவர்களின் மாணாக்கர்கள் வழியிலான செவிவழிச் செய்தியாகும்.

ஸ்ரீ காசிமடத்தின் 18வது அதிபரவர்களின் மாணாக்கரும், 19வது அதிபருமாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இயற்றமிழ் இலக்கண இலக்கியப் பெரும் புலமைகளுடன் கம்பராமாயணத்தில் அசாத்தியப் புலமை பெற்றவர்கள்.

இவர்களெல்லாம் சமயப் பார்வையில் கம்பராமாயணத்தைப் பார்க்கவில்லை. இரசம் ததும்பும் சுவைக்கனிகள் நிறைந்த கனிமரத் தோப்பாகக் கம்பராமாயணத்தைக் கண்டு, காட்டினார்கள்.

கம்பர் பிறப்பால் சைவர், திருமாலுக்குப் பரத்துவம் கொடுத்துப் பாடியது அவர்தம் கவித்துவத்தின் கடமை. அதன் ஊடேயும் சிவபெருமான் ஊழித்தலைவனாகச் சொன்னது அவர்தம்பிறப்பின் உரிமை. எனினும் ''எற்றை நாளிலும் உளன் எனும் இறைவன்'' என அவர் திருமாலைத்தான் சுட்டிக்காட்டினார் என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

சமய வேறுபாடுகளைப் புறந்தள்ளிப் பாடுபொருளுக்கு - காவிய நாயகனுக்கு மிகு ஏற்றம் செய்வதில்தான் காவிய வெற்றி அமையும், காவியத்தில் எந்தப் பாத்திரம் பேசுகிறதோ, அதன் இயல்புக்கும், அறிவுக்கும், புரிதலுக்கும் மாறாகக் கூற்று அமைய முடியாது. அப்படி அமைத்தால் படைப்பாளி தோற்றுப்போவான்; காவியம் பழுதுபடும்.

சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகளைச் சைவர் என்று சில அறிஞர்கள் எழுதுகிறார்கள்; அவரைச் சமணர் என்றும் சில அறிஞர்கள் எழுதுகிறார்கள். அது எவ்வாறாயினும் ஆய்ச்சியர் குரவையுள் ''தொல்லிலங்கை கட்டழித்த சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியோ? திருமால் சீர்கேளாத செவியென்ன செவியோ?'' என்றும், ''நாராயணா என்னா நாவென்ன நாவே?'' என்றும் ஆழ்வாராதிகள் அருளிய திவ்யப் பிரபந்தத் தொடர்களுக்கு ஒப்பான தொடர்களை இளங்கோவடிகள் வழங்கினார். திருமால் பக்தியில் சிறந்த ஆய்ச்சியர்களின் பாட்டல்லவா அவை. எனவே ''இடத்துக்கேற்பக் காவியமாக்கும் ஆற்றல் காவியக் கவிஞனுக்கு வேண்டும்'' என அறியலாம்.

கம்பர் தமக்குத் தாமே ஏற்படுத்திக்கொண்ட கடமைகள் அதிகம். தெய்வத்தை மானுடனாக வைத்துப் பாடுகின்ற கதையமைப்பில், அதன் தெய்வங்களும் சறுக்காதபடி ஏற்றிப் போற்றுவது முதற் கடமை. அதில் எந்த அளவுக்கு அவர் வெற்றிபெற்றார் என்பதில்தான் நம் இரசிப்புத் தன்மை முதலில் பதியவேண்டும்.

சைவத்தில் திருமாலுக்கு முக்கிய இடம் உண்டு. சிவனின் முதலடியார் திருமால். அதனால் சிவ வழிபாட்டில் - ஆத்மார்த்த பூசையில் திருமாலுக்கும் வழிபாடு உண்டு. திருமால் சிவனை வழிபட்ட வரலாறு நம் புராணங்களில் அநேகம் உண்டு. திருமாலின் அவதாரங்களில் சிவனை வழிபட்டுப் பரிகாரங்கள் செய்து கொண்டதாகவும் பல நிகழ்வுகள் சொல்லப்படுகின்றன. இராமேச்சுரத் திருத்தலம் அதற்குத் தலைமைச்சான்றாகும். ''மாலுக்குச்சக்கரம் அன்று அருள்செய்தவன்'' நம் பெருமான். இந்த வரலாறுகளையெல்லாம் விரித்தெடுத்துப் பேசாமல், கம்பனின் கவித்துவம் நடைபோடுவதை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

கம்பர் தம் காவியத்துள் 478 இடங்களில் சிவனைக் குறிப்பிடுவதாக இத்தொகுப்பில் பாடல் சான்றுகள் வருகின்றன. கம்பரின் கவிப்பாற்கடலை முற்றிலுமாக நீந்திவந்த இப்பெருமுயற்சியை நாம் மனதாரப் பாராட்டுகிறோம்.

இத்தொகுப்புக்கு முதல் நூலாகிய 1950களில் வெளிவந்த தமிழறிஞர் இராய.சொக்கலிங்கனார் திரட்டிதந்த ''கம்பனும் சிவனும்'' என்ற நூலில் பல இடங்கள் தவிர்க்கப்பட்டன. அந்தப் பாத்திரம் அந்தச் சூழலில் அப்படிப்

பேசவேண்டும் எனக்கருதியது கம்பரின் சுதந்திரம் என்ற அளவில் அவற்றைக் காண்பது நல்லது.

''கம்பரின் கவிச்சுவை மேலானது'' என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அவ்வகையில் சமயப் பொதுமையும் அடங்கும். அதனை உலகினர்க்கு வெளிச்சமிட்டுக் காட்டவும் சைவப் பார்வையிலும், சைவத் தோத்திர சாத்திரப் பார்வையிலும், சைவப் புராண காவியங்களின் பார்வையிலும், ''அரண்களும் முரண்களும்'' எனத் தலைப்பிட்டுத் திறனாய்வு செய்யவும் இத்தொகுப்பு பெரிதும் பயன்படும். இப்படிக்கு மீண்டும் வித்திட்டமைக்காகவும் தொகுப்பாசிரியருக்கு நம் பாராட்டுகள் உரியன.

''மிகைப் பாடல்கள்'' என அண்மைக் காலத்தார் கம்பராமாயணப் பாடல்களில் பல பாடல்களைத் தள்ளிவைத்துப் பதிப்பினர். ''ஓலை ஏடுகள் சிலவற்றில் இல்லை'' என்பது மிகையானமைக்குக் காரணமானால் ''ஏடுபெயர்த்தெழுதினார் விழ எழுதினார் போலும்'' என்ற நச்சினார்க்கினியர் தொடரை உளங்கொள்ள வேண்டும். பெருங்காப்பியத்தைக் கூலிபெற்றுப் பிரதி செய்தவர்களின் பிழைகளாகவும் இருக்கலாமல்லவா? கம்பரின் ''கவிமேதாவித்வம்'' அவற்றில் இல்லை என நிறுவாமல் எந்த ஒரு பாடலையும் மிகைப்பாடல் என ஒதுக்கிவைப்பது பொருந்துமா? எனச் சிந்திக்கவேண்டும். அக்காரணங்களை அங்கங்கே குறிக்கவும் வேண்டும். இத்தொகுப்பில் மிகைப் பாடல்கள் என ஒதுக்கப்பெற்ற பாடல்களிலும் கவனம் செலுத்தியமை பலருக்கும் நிறைவைத் தரும் என்பது திண்ணம்.

அரிதின் முயன்று இத்தொகுப்பைச் செவ்வனே செய்த தொகுப்பாசிரியருக்கு எல்லா நலன்களும் விளைவனவாகுக! என எல்லாம்வல்ல திருச்செந்திலாண்டவன் திருவருளை வந்திந்து, வாழ்த்துகின்றோம்.

சுபம்

சிவ சிவ

அணிந்துரை

செந்தமிழ்வாரிதி முனைவர். இரா. செல்வகணபதி

[முன்னாள் முதல்வர் தருமபுரம் ஆதீனம் தமிழ்க்கல்லூரி, மயிலாடுதுறை]

''கம்பன் காட்டும் கண்ணுதலான்'' என்ற தலைப்பில், என் அன்புக்குரிய நண்பரும், கம்பராமாயணத்திற்கு புத்துரைகண்டவரும், புதிதாய் அரும்பிய அம்பத்தூர் கம்பன் கழகத்துத் தலைவரும், சிவநெறி போற்றி வாழும் நகரத்தார் திருமரபில் வந்தவருமாகிய திரு.பழ.பழனியப்பன் அவர்கள் பக்கங்களில் கம்பனில் காணக்கிடக்கும் சிவபெருமான் பற்றிய தொடர்களை எல்லாம் முயன்று திரட்டி, தொடர் இடம்பெறும் இடம் சுட்டி, வேண்டிய பொருள் விளக்கங்கள் தந்து அரிய நூல் ஒன்றை வெளிக்கொண்டு வந்துள்ளார். முன்னரே இத்தகு தேடல் தமிழ்க்கடல், ஐயா, அமரர் திரு. இராய.சொ. அவர்களால் அமைந்திருப்பினும், கூடுதல் தேடல் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு வருங்காலக் கம்பன் ஆய்வாளர்களுக்கு ஒரு கைவிளக்காக இந்நூலை ஆக்கி அளித்திருக்கும் முயற்சிக்குப் பாராட்டுக்கள்கூறி மகிழ்கிறேன்.

கம்பன் பிறப்பால் சைவன் என்பது என் கருத்து. நாலாயிரத்தில், கண்ணன் அவதாரச் சிறப்புகள் மிகுந்து கிடந்தபோதும், கம்பன் இராமன் கதை பாட முனைந்ததற்கு தடம்மாறிக் கிடந்த தமிழகத்து ஆடவர்களின் தனி மனித ஒழுக்கத்தை நேர்நிற்க வைத்து, ''ஒருத்திக்கு ஒருவன்'' என்று பொய்மை ஒழுக்கம்கூறிய சமூகத்தை எள்ளிநகையாடி, ''ஒருவனுக்கும் ஒருத்தி மட்டுமே'' என்ற நிலைப்பாட்டை விதைக்கவேண்டும் என்ற எதிர்நீச்சல் நல்லெண்ணமே அடித்தளமாக இருந்திருக்கவேண்டும். மேலும் ஆட்சி, அதிகாரம் என்ற நிலையில் சகோதரபாசம் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட அவலத்திற்கு முடிவு கட்டவும் கம்பன் முனைந்திருப்பதாகத் தெரிகிறது. அவன் விருப்பத்திற்குக் கண்ணனைவிட இராமன் உதவியாக அமைந்தான். ''இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்'' என்ற ஆண்குரல் கம்பன் வரவுக்குமுன் தமிழகத்தில் முணுமுணுக்கப்படக் கூடவில்லை என்பது மறுக்க இயலாத உண்மை. நாடுபிடி சண்டையில் குலைந்துகிடந்த, மேட்டுக்குடி ஆட்சியாளர்களுக்கு அறிவு புகட்ட, பரதன், கம்பனுக்குப் பெரிதாகவே கைகொடுத்தான். வைணவம் போற்றும் அவதாரக் கடவுள்களில் ஒருவனாகக் கருதப்பெற்ற இராமனைக் கதைத்தலைவனாகக்

கம்பன் தேர்வு செய்து கொண்டது. அவன் காலத்தில் அரசோச்சிய பிற்காலச் சோழ மரபினர்களுக்கு உகப்பாக அமைந்திருக்க வாய்ப்பில்லை. சேக்கிழாருக்குக் கிடைத்த அரசு மரியாதையில் யாதொன்றும் கம்பனுக்குக் கிடைக்காமல் போனதற்கு, அக்கால ஆட்சியாளர்களின் சைவப்பிடிப்பேகூட காரணமாதல் கூடும்.

கி.பி.12ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் சங்கரர் எல்லைவகுத்த ஆறு சமயங்களில், சூரியவழிபாடாகிய சௌரம் நீங்கலாக, சிவன், உமை, கணபதி, கௌமாரன் வழிபாடுகள் ஒரு குடைக்கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டன. வைணவம் மட்டும் தனித்து நின்றது. சோழர்களின் விருப்பத்திற்குரிய சமயமாகச் சைவம் திகழ்ந்தது. தமிழகமக்களில் பெரும்பாலானவர்கள், சிவநெறி நின்று ஒழுகியிருக்கவேண்டும். சிறியனவும், பெரியனவுமாக சில சைவ, வைணவப் பூசல்கள், அறிஞர்களின் சொற்போர்கள், எவர் பெரியவர்? என்ற தேடலை முன்வைத்த குழுச்சண்டைகள் நிகழ்ந்துள்ளன. இத்தனையையும்மீறி நண்பர்.திரு.பழ.பழனியப்பன் தொகுத்துச் சுட்டும் 478 சிவன் பற்றிய கம்பனின் பதிவுகள் நமக்கு வியப்பைத் தருவனவாக முன்நிற்கின்றன. இவை கம்பனின் உள்ளார்ந்த சிவ அன்பின் வெளிப்பாடுகளா? அல்லது அக்காலச் சூழ்நிலை தந்த தாக்கத்தின் தவிர்க்க இயலாத சமரசப்பதிவுகளா? என்பதை அறிஞர் உலகம் நாளை ஆராய இந்நூல் களம் அமைத்துத் தந்துள்ளதாகவே கருதுகிறேன்.

என்னைப் பொறுத்தவரை, தமிழ்ச்சமூகத்தை, குறிப்பாக ஆடவர் சமுதாயத்தை நல்லொழுக்க நெறிநிறுத்தவும், பெண்மைக்கு உரிமைகளைப் பெற்றுத்தரவும், அண்ணன் தம்பிகள் பேதமின்றிக் கூடிவாழவும், தம் காப்பியப் பதிவுகளில் முயன்றுள்ள, கம்பனின் சிவன்பற்றிய பதிவுகளில், சைவ-வைணவ பேதாபேதமற்ற சமயவாழ்வு தமிழகத்தில் நிலைபெற வேண்டுமென்ற நல்லெண்ண வெளிப்பாடாகவே தோன்றுகின்றது. முதல் மூன்று ஆழ்வார்களுக்கு பிற்பட்ட ஆழ்வார் பாசுரங்களிலும் மூவர் தேவாரங்களிலும் காணப்படும் சைவ-வைணவ உரசல்களைக் களையக் கம்பன் முயன்றிருக்கிறான் என்றே தெரிகிறது.

நாரணன் திருஅவதாரமாக இராமனைத் தன் காப்பியத்துள் நிறுத்தும் கம்பன், சிவன் பற்றிய இத்தனை பதிவுகளை வைக்காமலேயே விட்டிருந்தால்கூட ஏனென்று வினாத்தொடுக்க இயலாது. கம்பனின் சிவன் பற்றிய சில பதிவுகளில் திருமால் சிவனினும் மேலானவன் என்று சுட்டப்படுவனகூட, கதைப்போக்கில் காப்பியத் தலைவனுக்குத் தரப்படவேண்டிய சிறப்பினைக்கருதியே என்றுகொள்வதில் தவறில்லை.

இன்று கம்பனைப் படிப்போரும், பேசுவோரும், எழுதுவோரும், கேட்போரும், சுவைப்போரும், பெரும்பாலும் சிவநெறியாளர்களாகவே

இருப்பதற்குக் காரணம் கம்பனின் இத்தகு சிவன்பற்றிய பதிவுகளும்கூடத் துணைசெய்துள்ளன என்று கருதலாம். இராமனைப்போற்றும் மரபுவழி வரும் ஸ்ரீவைணவப் பெருமக்களைவிட சிவநெறியாளர்களே, கம்பனை வெகுவாகப் போற்றி நிற்கின்றனர். கம்பனின் சமூக நல்லெண்ணத்தையும் சமய சமரசப் பேருள்ளத்தையும் எம்போன்றார் இனங்கண்டு போற்ற நண்பர் திரு.பழ.பழனியப்பன் அவர்களின் இந்த அரிய முயற்சி துணையாக நிற்கிறது. நண்பர் திரு.பழ.பழனியப்பன் நன்னெஞ்சர், இனிய சொல்லர், தொடர் முயற்சியாளர், கம்பன் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். நூலாசிரியர் நீடு இனிது வாழவும், அவரது பன்முக ஆய்வுத்தடங்கள் விசாலப்படவும், அன்னார்குலம் தழைக்கவும் சிவன் தாள்மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றேன்.

அரிய முயற்சிகளை என்றைக்கும் இருகரம் நீட்டி வரவேற்கும் தமிழினம், நண்பர் திரு.பழ.பழனியப்பன் அவர்களின் ''கம்பன் காட்டும் கண்ணுதலான்'' என்ற இந்த நூலையும் ஏற்றுப்போற்றும் என்ற நம்பிக்கையுடையேன்.

சென்னை
03/05/2011

அன்புடன்
இரா.செல்வகணபதி

முன்னுரை

கம்பன் தான் இயற்றிய இராமாவதாரம் என்னும் நூலில் சிவபெருமானைப் பற்றி எங்கெல்லாம் எப்படி எப்படியெல்லாம் பேசியிருக்கிறான் என்பதைச் சுட்டிக்காட்டுவதே இந்நூலின் நோக்கமாகும். இதில் எவ்வளவு பாடல்கள் சிவபெருமானைப் பற்றியும், அவனது உருவத்தைப் பற்றியும், அவன் விரும்பியணிந்திருக்கின்ற ஆகாயகங்கை, அரவம், கொன்றைமலர், பிறைச்சந்திரன், யானைப்போர்வை, சாம்பல்நீறு, நெருப்பெனச் சிவந்த மேனி, முக்கண், முப்புரம் முருங்கச் சுட்ட நிகழ்ச்சி என்பனவற்றையும் எடுத்துக்காட்டுவதே இந்நூலின் நோக்கமேயன்றி வேறல்ல. இந்தப் பாடல்களைத் தனியாகப் பிரித்துப் பார்க்கும்போது கம்பன், சைவக்குரவர்களுக்குச் சற்றும் சளைக்காமல் சிவப்பெருமானைப் பெருமையாகப் பேசியிருப்பதை நுனித்து உணரலாம்.

''பித்தா பிறைசூடி'' என்பது சுந்தரமூர்த்திகளின் தேவாரம். ''பிட்டு நேர்பட மண் சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே'' என்பது திருவாசகம். எனினும் கம்பன் இவர்களுக்குச் சற்றும் பின்னிடாமல், சிவன் ''அறிவு முற்றிய பித்தன்'' என்று ஏற்றிப் போற்றுவதை அறியலாம். அவன் கையாண்டிருக்கும் சொல்லாட்சியும் நமக்குத் தேவார, திருவாசக, திருமுறைத் திரட்டுகளை நினைவூட்டிப்போவதைக் காணலாம். ''அணங்கார் பாகன், ஆலம் பார்த்து உண்டவன், இமையா முக்கண் ஈசன்'' என்று அவன் சிவபெருமானைக் குறிக்கும் சொற்றொடர்கள் கருதத்தக்கன.

இங்கே கம்பனின் பாடலும், அதற்குரிய பொருளும், அந்தப் பாடலில் சிவபெருமானைக் குறிக்கும் சொல் எது எனவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. சிவபெருமானைப் பற்றிக் குறிப்பிடும் பாடல்களின் தொகுப்பு இந்நூல். எந்தப்பாத்திரம் பேசுகிறது என்பதை வகுத்தும், அப்பாடல்களின் பொருளை விரித்தும் கூறியிருக்கிறது இந்நூல். ஒரு நூல்முறை தொகுத்தல், வகுத்தல், விரித்தல் என்ற முறையைக் கையாளவேண்டும் என்பது தொல்காப்பியம். அதன்படியே இந்நூல் ஆக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கற்போர் நன்கு உணரலாம்.

கம்பன் தன் காப்பியத்தில் சிவபெருமானைப் பற்றிச் சற்றேறக்குறைய 478 இடங்களில் கூறியிருப்பதையும், அந்தச் கூற்றுகள் யாருடைய வாய்மொழி என்பதையும், அக்கூற்றுள் பொருந்தியிருக்கும் பொருள் என்ன என்பதையும் நன்கு விளக்கிக் காட்டுவது இந்நூலின் தனிச்சிறப்பு. எந்தெந்தக் காண்டங்களில் எந்தெந்தப் படலங்களில் எத்தனாவது பாடலாக வந்திருக்கிறது

என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. சென்னைக் கம்பன் கழகம் 1976ல் வெளியிட்ட செம்பதிப்பில் தரப்பட்டுள்ள பாடல் எண்களும் பக்க எண்களுமே இங்கே பின்பற்றப் பெற்றிருக்கிறது.

''கம்பன்'' என்ற பெயர் எப்படிவந்தது என்பதற்குரிய காரணங்களைப் பலர் பலவாறு கூறச் செவிவழி கேட்டிருக்கிறோம். எனினும் சில தேவாரப்பாடல்கள் இதற்குத் தக்க அகச்சான்றுகளாய் அமைந்திருக்கின்றன. தொண்டை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரம் என்னும் நகரில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் ஏகம்பன்-ஏகாம்பரேஸ்வரர் என்பது நாம் அறிந்ததே. அந்தப் பெயர்தான் கம்பனுக்கு இடப்பட்டு அது பிற்காலத்தில் கம்பன் என மருவியிருக்கவேண்டும் என்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு. காஞ்சிபுரத்திற்கு ''ஏகம்பம்'' என்ற ஒரு பெயரும் உண்டு என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தன் தேவாரத்தில் காஞ்சியில் வீற்றிருக்கும் ஈசனை ''கம்பன் எம்மானைக் காணக் கண் அடியேன் பெற்றவாறே'' என்றும், ''மதில் கச்சி மன்னுகின்ற கம்பனை'' என்று திருநாவுக்கரசரும், ''நலங்கொள் கம்பன் இலங்கு சரணே'' என்றும் ''காஞ்சிநகர் மறுகுள் போந்து, வானநதி குதிகொண்டு இழிந்த சடைக்கம்பர் செம்பொற்கோயில்'' என்றும், ''செம்பொன்மலைக் கொடி தழுவக் குழைந்த திருமேனிக் கம்பரை வந்து எதிர்வணங்கும்'' என்றும் தெய்வச்சேக்கிழாரும் பாடியுள்ளமை இங்கு நினைந்து ஒப்பிட்டுப் பார்க்கத் தகுந்தன.

கம்பன் சமத்துவவாதி, சமரசஞானி என்பதைக் கற்போர் நன்கு உணரும்வண்ணம் கூடிய பாடல்கள் இங்கு தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. மும்மூர்த்திகளையும் ஒருசேர இணைத்துப் பாடும் பாடல்களும் இங்கே இடம்பெற்றிருக்கின்றன என்பதையும் நுனித்து உணரவேண்டும். கல்வியில் பெரியன் கம்பன், தன்னை ஆளுடை ஐயன் என்று இராமபிரானைப் பற்றிக்கூறும் பொழுதெல்லாம், இராமபிரான் மும்மூர்த்திகளின் இயல்பும், வலிவும், ஆற்றலும் ஒருசேரப் பெற்றவன் என்றும், மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்டவன் என்றும் கூறிப்போவதைக் காப்பியத்தில் பல இடங்களில் காணலாம். சிவபெருமானையும், திருமாலையும் கம்பன் ஒப்பவே மதிக்கிறான் என்பதையும் புரிந்துகொள்ளலாம். ஆனால் கம்பன் திருமாலைப் போற்றி மகிழும் காட்சிகளும், துதித்துப் பேசும் பாடல்களும் காப்பியத்தில் ஏராளமாக விரவிக்கிடக்கின்றன. அது தானே இந்த அவதாரத்தைப் பற்றிக் கூறவந்த நூலாசிரியரின் உயர்நோக்கம். அது காப்பிய நாயகனிடம், காப்பிய ஆசிரியன் கொண்ட எல்லையற்ற பேரன்பைக் காட்டுகிறது என்றே கொள்ளவேண்டும். எனினும் மற்றைய சமயங்களையோ, சமயக்கோட்பாடுகளையோ கம்பன் ஓரிடத்திலும், சிறிதளவும் தாழ்த்திப் பேசியவன் அல்லன்.

இங்கே இன்னொரு வழக்கையும் நாம் நினைவுபடுத்திக் கொள்வது நலம்பயக்கும். உலகம் முழுவதும் அழியும் காலமான ஊழியிறுதிக்காலமாகிய பிரளயகாலத்தில் தனித்து நிற்கும் ஒரு கடவுளைப் பற்றிச் சைவ சமயமும், வைணவ சமயமும் கூறிவருவது நாம் அறிந்ததே. தேவார திருவாசகங்கள் அக்கடவுள் ''சிவபிரானே'' என்றும், திவ்வியபிரபந்த நூல்கள் அவன் திருமாலே என்றும் கூறுவதையும் நோக்கவேண்டும். எனினும் அரன்அதிகன், உலகளந்த அரிஅதிகன் என்ற சர்ச்சைக்குள் புகுவது நம் நோக்கமல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டால்தான் இந்நூற் சிறப்பை உணரமுடியும்.

''ஊழிமுதல்வனாய் நின்ற ஒருவனை, ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்'' என்பது திருவாசகம். கம்பன் ''ஊழிமுதல்வன் சிவனே'' என்று பல இடங்களில் கூறுவதை நாம் காணலாம்.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு இந்நூலைக் கற்றால் கம்பன் ஒரு சமரசஞானி என்பதும், அவன் ஒரு தனிச் சமயத்தைச் சார்ந்து காப்பியம் படைக்கவில்லை என்பதும், அவன் காலத்திற்கு ஏற்பக் கிடைத்த வான்மீகத்தினை அடிமுதலாகக் கொண்டு இப்பெரும் காப்பியமாளிகையைக் கட்டியிருக்கிறான் என்பதும் போதரும். சமயக் காழ்ப்பின்றிச் சமன் செய்து சீர்தூக்க விழைகிறேன்.

கம்பன் பாடியுள்ள செய்யுள்களில் சிவபெருமானைப் பற்றிப்பேசும் இடங்களை அகரவரிசைப் படுத்திப் பார்க்கலாம். இவற்றில் சிக்கல் உண்டு. ஒரு பாடலைப் பார்க்கவேண்டும் என்றால் அது எந்தக் காண்டத்தில் வருகிறது எந்தப் படலத்தில் வருகிறது எத்தனாவது பாடல், யாருடைய கூற்றாக வருகிறது என்பதை எல்லாம் பார்ப்பதற்கு மூலபாடத்திற்கோ, உரை நூலுக்கோ செல்லவேண்டும். எனவே பாலகாண்டம் முதல், யுத்தகாண்டம் வரை எந்தெந்தப் பாத்திரங்கள் எங்கெங்கே பேசியிருக்கின்றன என்று பார்ப்பதே சாலப்பொருத்தமாகும் என்று கருதியே காண்டவரிசைப்படியே இங்கே பாடல்கள் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. அருகில் தரப்பட்டிருக்கின்ற அட்டவணை தெளிவுப்படுத்தும்.

''கம்பனும் சிவனும்'' என்ற தலைப்பில் தமிழ்க்கடல், சிவம்பெருக்கும் சீலர் சிவமணி, திரு.ராய.சொ. அவர்கள் ஏறக்குறைய 60ஆண்டுகளுக்குமுன் கம்பன் சிவபெருமானைப் பற்றிப் பாடிய பாடல்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். திரு.இராய.சொ. அவர்கள் கம்பன், சிவபெருமானைப் பற்றிப் பாடியதாக 395 இடங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் கூர்ந்து பயிலுங்கால், கம்பன் சற்றேறக்குறைய 478 இடங்களில் சிவபெருமான் பற்றிய குறிப்புகளைத் தந்துகொண்டே செல்லுகிறான்.

இவற்றுள் சென்னைக்கம்பன் கழகச் செம்பதிப்பில் மிகைப்பாடல்கள் என்று தனித்துக் குறிப்பிட்டிருக்கின்ற பாடல்களும் அடங்கும். இப்பதிப்பில் மிகைப்பாடல்களாகப் பிரித்துத் தரப்பட்டிருக்கின்ற பாடல்கள் கம்பனால் பாடப்பட்டவை அல்ல என்று அறுதியிட்டுக் கூறவில்லை. இதை மெய்ப்பிக்கும் வகையில் பெரும்புலவர் திரு.கீரன் அவர்கள் தனது கம்பராமாயணக் களஞ்சியம் என்ற நூலில் (பக்கம்71ல்) கூறியிருப்பதை அடிப்படியே எடுத்துத் தந்திருக்கிறேன்.

''கம்பராமாயணத்தைப் பதிப்பித்த சிலர், இவற்றைக் கம்பன் பாடல் அல்ல என்றும், சிலர் கம்பன் பாடலே என்றும் குறித்துள்ளனர். ஒரு பாடலைக் கம்பன் பாடலா, இல்லையா என்று முடிவுசெய்வது அவரவர்கள் சுவையுணர்வை அடிப்படையாகக் கொண்டது. அதனால் இவை கம்பன் பாடல்கள் அல்ல என்று கூற யாருக்கும் உரிமையில்லை. தன் சுய உணர்விற்கு இது கம்பன் பாடலாகத் தெரியவில்லை என்று மட்டுமே கூறமுடியுமேதவிர ''இவை கம்பன் பாடல்கள் அல்ல'' என்று நுணித்து கூறுவது அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

சென்னைக் கம்பன்கழகச் செம்பதிப்பிலும் பதிப்பாசிரியர்கள் ''சிலபல பிரதிகளில் இல்லாத பாடல்களை'' மிகைப்பாடல்கள் என்னும் தலைப்பில் ஒவ்வொரு காண்டத்திலும் பின் இணைப்பாகத் தருவது எளிதாயிற்று என்றே கூறுகின்றனர். இவற்றை அடிப்படையாகக்கொண்டே நான் மிகைப்பாடல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் பாடல்களையும் இங்கே தந்திருக்கிறேன். எனினும் அவை எளிதில் புரியும்படி இருப்பதால் அவற்றிற்கான விளக்கங்கள் தரவில்லை.

இந்நூலுக்கு ஏற்ற ஒரு ஆசியுரை தந்தருளிய திருப்பனாந்தாள் ஸ்ரீ காசிமடம் 21வது அதிபர் ''கயிலைமாமுனிவர்'' ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமி தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும் அணிந்துரை நல்கிய செந்தமிழ்வாரிதி முனைவர் இரா. செல்வகணபதி அவர்களுக்கும் நான் நன்றிகடப்பாடு உடையேன். கணினியில் இதனை உருவாக்கித் தந்த திருமதி சித்ரா பத்மாநாபன் அவர்கள், உரிய முறையில் புத்தக வடிவாக்கித் தந்த திரு. செந்தில்குமார் அவர்கள் ஆகியோருக்கு என் நன்றி உரித்ததாகும். இதற்கு மெருகூட்டி அச்சிட்டுத் தருகின்ற வானதி பதிப்பக உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும், திரு. இராமநாதன் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

இந்நூல் பற்றித் தங்கள் கருத்துக்களை அறிய மிக ஆவலாக உள்ளேன்.

19/10/2011 — அன்பன்,

சென்னை. — **பழ. பழனியப்பன்**

கைலாச நிகண்டு என்னும்நூல் சிவபெருமானுக்கு 116 பெயர்கள் உள்ளன எனக் கூறுகிறது. அவையனைத்திற்கும் ஏற்ற புராணக்கதைகளும் இருந்திருக்க வேண்டும். அவை,

பிறைமுகக்கடவுள்	பெம்மான்	பித்தன்
கண்ணுதற்கடவுள்	பரமன்	கங்கா வல்லபன்
விண்ணவர்க்கரியோன்	வேதநாயகன்	விமலன்
ஆனந்தன்	மேருவில்லி	அமலன்
அருணன்	அரன்	சிவன்
புராரி	திகம்பரன்	நித்தன்
ஈசானன்	முகுந்தா பங்கன்	முன்னவன்
மூர்த்தி	வெண்ணீற்றன்	தெண்ணீர்ச்சடையோன்
விடையினை உயர்த்தோன்	இடபவாகனன்	மான்இடம் ஏந்தி
மழுவலம் ஏந்தி	ஞான முதல்வன்	நடம்புரி விநோதன்
ஆல்அமர் மௌலி	ஆலபோசனன்	காலகாலன்
கட்செவிக்காப்பான்	அலகைப் படையோன்	அந்தர்யாமி
கலகத்தொழிலோன்	காளகண்டன்	ஐம்முகன்
சித்தன்	அனுபமன்	உமாபதி
கைம்மலை உரித்தோன்	கயிலையாளி	நக்கன்
பசுபதி	நாதன்	எண்குணன்
முக்கட்செல்வன்	மூவிலைவேலோன்	தும்புரு நாதன்
சோதி	சங்கரன்	கிம்புருடேசன்
கிளர்ஒளி	பகவன்	காமநாதன்
கருணயன்	பிதா	நாமதாற்பரியன்
தாண்டவ நடம்புரி	அனகன்	பினாகி
அஞ்சலன்	பூதன்	புனிதன்
சதாசிவன்	புயங்கன்	பிஞ்ஞகன்
அருக்கன்	கபர்த்தி	அர்த்தநாரீசன்
மருங்கமழ்கொன்றையோன்	மகேசன்	யோகினி
தந்தியைப் பயந்தோன்	நந்தி பாண்டரங்கன்	சம்புவாணன்
தும்பைசூடி	புலிஅதள் ஆடையன்	புராதனன்
பிறப்பிலி	கலிமணிச் சிலம்பன்	கங்காளன்
சம்யமன்	வேணுவி பலாரி	தாணு
உருவிலி	தசமுக பலாரி	தக்கன் வயிரி
விசைவில் விரணன்	விளநளாகற்பன்	குபேரசகாமயன்
கபாலி	தமருகன்	வாசவாரியன்
நாச கரணன்	சிம்புள்வேடன்	நம்பன்
எந்தை	ஐயம் ஏற்பவன்	மெய்யன்
மத்தன்சூலி	அத்தன்	தாபன்

வயிரவன்	தத்துவாதீதன்	தேவதேவன்
திருவாதிரையான்	சத்தியோ சாதனன்	நித்தியானந்தன்
சற்குரு	ஐயவன்	பஞ்சரக்கரணன்
ஐயன்	தொல்லவன்	

(நன்றி : முனைவர் திரு. சாவே. சுப்பிரமணியன் ''தமிழ் நிகண்டுகள்'' தினமணி, செம்மொழிக்கோவை 2010)

இந்தப் பெயர்களெல்லாம் சிவபெருமானுடைய தொழில், செயல், உருவம், குணம், முதலியவற்றை விளக்குவனவாகவும், அன்பின் மிகுதியால் குறிக்கப்பட்டனவாகவும் அமைந்திருத்தலைக் கற்போர் உணரலாம். இதுபோல ''சேந்தன் நிகண்டு'' என்னும் நூல் சிவபெருமான் பெயரைக் குறிக்கும் 60 பெயர்களும், 11ம் நூற்றாண்டில் தோன்றிய பிங்கலநிகண்டில் 100பெயர்களும் தரப்பெற்றிருக்கின்றன. இவற்றுள் பெரும்பாலான சொற்களைக் கம்பன் நேராகவோ, உள்பொருளாகவோ குறித்திருப்பதை நாம் உணரலாம். இவற்றுள் அடங்காத இன்னும் பல பெயர்களைக் கம்பன் கையாண்டிருப்பதையும் நாம் காணலாம்.

கம்பன் காட்டும் கண்ணுதலான்

1. பாலகாண்டம்

1. ஆற்றுப்படலம் பக்கம்-5/2 கவிக்கூற்று

நீறணிந்த கடவுள் நிறத்தவான்
ஆறணிந்து சென்று, ஆர்கலி மேய்ந்து, அகில்
சேறணிந்த முலைத் திருமங்கை தன்
வீறணிந்தவன் மேனியின் மீண்டதே. (13)

இங்கே ''நீறணிந்த கடவுள்'' என்ற சொற்றொடர் வெண்ணீற்றைத் தன் உடல்முழுவதும் பூசியிருப்பவனாகிய, காடுடைய சுடலைப் பொடி பூசியவனாகிய, சிவபெருமானைக் குறிக்கும். இது கவிக்கூற்று.

2. நகரப்படலம் பக்கம்-18/3 கவிக்கூற்று

உமைக்கு ஒருபாகத்து ஒருவனும், இருவர்க்கு
ஒரு தனிக் கொழுநனும், மலர்மேல்
கமைப்பெரும் செல்வக்கடவுளும் உவமை
கண்டிலா நகர் அது காண்பான்,
அமைப்பருங் காதல் அது பிடித்து உந்த,
அந்தரம், சந்திராதித்தர்
இமைப்பிலர் திரிவர்; இது அலால் அதனுக்கு
இயம்பலாம் ஏது மற்று யாதோ? (95)

இங்கே ''உமைக்கு ஒரு பாகன்'' என்ற சொற்றொடர் தனது துணைவியாகிய உமையம்மைக்குத் தன் உடலில் செம்பாதியைப் பகிர்ந்து அளித்து உலகிற்குப் பெண்ணின் பெருமையை எடுத்துக்காட்டும் சிவபெருமானைக் குறிக்கும்.

பிருங்கி முனிவர் என்பவர் பெண்களை வணங்கும் இயல்பறியாதவர், உமையம்மையை இடது பாகத்தில் கொண்டுள்ள அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தை வணங்கவேண்டிய சந்தர்ப்பம் ஒன்று அவருக்கு வந்தது. அவர்

பக்க எண்களும், பாடல் எண்களும் சென்னை கம்பன் கழகப் பதிப்பில் உள்ளபடியே தரப்பெற்றிருக்கின்றன.

உமையம்மையை வணங்க விரும்பவில்லை. எனவே ஒரு வண்டுருவம் கொண்டு சிவபெருமானை மட்டும் சுற்றிவந்து வணங்கிச் சென்றார். இதுகண்ட உமையம்மை பெருந்தவம் மேற்கொண்டு சிவபெருமானின் இடதுபாகத்தில் தன்னை அமர்த்திக்கொள்ளுமாறு வரம்பெற்றதால் அர்த்தநாரீஸ்வரர் வடிவம் ஏற்பட்டது என்பது ஒரு புராணக்குறிப்பு.

3. நகரப்படலம் பக்கம்-19/9 கவிக்கூற்று.

மேவ அரும் உணர்வு முடிவு இலாமையினால்,
வேதமும் ஒக்கும்; விண்புகலால்,
தேவரும் ஒக்கும்; முனிவரும் ஒக்கும்
திண்பொறி அடக்கிய செயலால்;
காவலின், கலைஊர் கன்னியை ஒக்கும்;
சூலத்தால் காளியை ஒக்கும்;
யாவையும் ஒக்கும் பெருமையால்;
எய்தற்கு அருமையால் ஈசனை ஒக்கும். (101)

அயோத்திநகரின் மதிலின் உயர்ச்சியையும் சிறப்பையும் கூறவந்த கவிஞன், அதன் ஒவ்வொரு சிறப்பையும் ஒவ்வொரு பகுதிக்கு உவமித்து, அதனை யாரும் எளிதில் அடையமுடியாது என்பதைக் குறிக்க, யாராலும் எளிதில் உணர்ந்து அறிந்துகொள்ள முடியாத குணநலன்களைக் கொண்ட ஈசன் சிவபெருமானை உவமையாகக் கூறினார். ஈசன் என்ற சொல் எல்லா ஐஸ்வர்யங்களுக்கும் தலைவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும். அணுகுவதற்கு அரியதால் அம்மதில்கள், பிறர்க்கு அரியனாகக் காட்சி அளிக்கும் ஈசன் சிவபெருமானை ஒத்திருக்கிறது என்பதாம். ''நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்; ஆறுகோடி நாராயணர் அல்லனே; ஏறுகங்கை மணல் எண்ணில் இந்திரர்; ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே'' என்பது அப்பரின் கூற்று.

பிரமன், திருமால், இந்திரன் முதலான மற்ற கடவுளர்க்குப் பல வடிவங்கள் உண்டு. ஆனால் ஈசனாகிய சிவபெருமானுக்கு ''லிங்கம்'' என்ற ஒரே ஒரு வடிவம்தான் உண்டு. ஊழியிறுதிக்காலத்தில் எல்லா உலகங்களும், உலகத்தில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் அழிந்தாலும், தான்மட்டும் அழியாது உலக உயிரினங்களைத் தன்னுள் அடக்கிக் காத்தருள்பவன் சிவபெருமான் என்பதால் அவனை ''ஈறிலாதவன்'' என்றார் திருநாவுக்கரசர். நான்மறைகளாலும், முடிவுகாணப்படமுடியாதவன் சிவபெருமான். விண்ணுக்கும் மண்ணுக்கும் சோதிவடிவாக நின்ற சிவபெருமானின் முடியையும், அடியையும் காணமுடியாது திகைத்து நின்றனர் திருமாலும் பிரமனும் என்பது ஒரு புராணக்குறிப்பு. இதே ''ஈசன்'' என்ற சொல்லைச் சிவபெருமானையே குறித்துக் கம்பன் ஏறக்குறைய 50 இடங்களில் கையாண்டிருப்பதும் கருதத்தக்கது.

4. திருஅவதாரப்படலம் பக்கம்எண்-33/7 கவிக்கூற்று

சுடுதொழில் அரக்கரால் தொலைந்து, வானுளோர்
கடு அமர்களன் அடி கலந்து கூறலும்,
படுபொருள் உணர்ந்த அப் பரமன்'' யான் இனி
அடுகிலேன்'' என மறுத்து, அவரொடு ஏகினான். (186)

ஆலகால விஷத்தை அருந்தியதால் கரிய கழுத்தைப்பொருந்திய சிவபெருமானை தேவர்கள் அனைவரும் வந்து அடைந்து, கொடிய அரக்கர்களால் தாம் படும் துயரத்தை எடுத்துக்கூறவும், அதன் உட்பொருளை நன்கு உணர்ந்துகொண்ட அந்தப் பரம்பொருளான சிவபெருமான், ''நான் அந்த அரக்கர்களை அழிக்கும் வலிமையற்றவன் ஆவேன்'' என்று கூறி மறுத்துவிடுகிறான். காரணம் இத்தகைய பெரு வரங்களை அந்த அரக்கர்களுக்குத் தந்தவனே இந்தச் சிவபெருமான்தான். எனினும் அவர்கள்பால் இரக்கம்கொண்டு, திருமாலைக் கண்டு அவனிடம் முறையிடுவதற்காக அவனும் அவர்களோடு சேர்ந்து செல்லலானான்.

இங்கே ''கடு அமர் களன்'' என்பது நஞ்சுண்ட கண்டனாகிய சிவபெருமானையும், ''பரமன்'' என்பது பரம்பொருளாகிய சிவப் பரம்பொருள் சிவபெருமானையும் குறிக்கும்.

5. திருஅவதாரப் படலம் பக்கம்-33/13 கவிக்கூற்று.

எழுந்தனர், கறைமிடற்று இறையும், தாமரைச்
செழுந்தவிசு உகந்த அத்தேவும் சென்று, எதிர்
விழுந்தனர் அடிமிசை, விண்ணுளோரோடும்,
தொழும்தொறும் தொழும்தொறும் களி துளங்குவார். (192)

அவ்வாறு தேவர்கள் வந்து தம்மிடம் முறையிட்டதும், தனது கழுத்தில் ஆலகால விஷத்தின் களங்கத்தை உடைய இறைவனான சிவபெருமானும், தாமரைமலரை இருப்பிடமாகக் கொண்ட அந்த நான்முகனும் தேவர்களுடன் எழுந்து நின்று திருமாலின் திருவடிகளைத் தொழும்போதெல்லாம் திருமால் மிகக் களிப்புற்று விளங்கினான்.

இங்கே ''கறைமிடற்று இறை'' என்பது நீலகண்டனாகிய சிவபெருமானைக் குறிக்கும்.

6. திரு அவதாரப்படலம் பக்கம் 34/16 கவிக்கூற்று

விதியொடு முனிவரும், விண்ணுளோர்களும்,
மதிவளர் சடைமுடி மழுவலாளனும்,
அதிசயமுடன் உவந்து அயல் இருந்துழி,
கொதிகொள் வேல் அரக்கர்தம் கொடுமை கூறினார். (195)

இங்கே ''விதி'' என்ற சொல்லுக்கு ''பிரமதேவன்'' என்பது பொருள். உயிரினங்களின் விதியை எழுதுபவன் விதி என்றே அழைக்கப்படுகிறான். ''பிரம்மலிபி'' என்பதும் ''தலையெழுத்து'' என்பதும் வழக்குச்சொற்கள். அந்தப் பிரமதேவனும் முனிவர்களும், தேவர்களும் பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் தாங்கியிருப்பவனும், மழுவாயுதத்தைத் தன் கைகளில் கொண்டிருப்பவனுமாகிய சிவபெருமானும், வியந்து மகிழ்ச்சியுடன் அவர்கள் உடன் இருக்க, தேவர்கள், கொல்லுதல் தொழிலையுடைய வேற்படையையுடைய அரக்கர்கள் தமக்கு இழைத்து வருகின்ற கொடுமைகளையெல்லாம் திருமாலிடம் எடுத்துரைத்தார்கள் என்பதாம்.

இங்கே ''மதிவளர் சடைமுடி மழுவலாளன்'' என்பது பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் தரித்திருப்பவனும், மழுப்படையைக் கொண்டவனும் ஆகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

7. திருஅவதாரப்படலம் பக்கம்-35 / 24 கவிக்கூற்று

''போயது எம் பொருமல்!'' என்னா, இந்திரன் உவகை பூத்தான்;
தூய மாமலருளோனும், சுடர்மதி சூடினோனும்,
சேய் உயர் விசும்புளோரும், ''தீர்ந்தது எம் சிறுமை'' என்றார்
மா இரு ஞாலம் உண்டோன், கலுழன்மேல் சரணம் வைத்தான்.
(203)

இந்திரன் முதலான தேவர்கள் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலை அணுகித் தமக்கு அரக்கர்களால் ஏற்படும் இடையூறுகளை எடுத்துச் சொல்லியதும், திருமால் அவர்களுக்கு ஆறுதல்கூறும் வண்ணம், தான் அயோத்தியில் தசரத மன்னற்கு மகனாகப் பிறப்பதாகவும், தேவர்கள் எல்லோரும் இவ்வுலகில் வானரங்களாகப் பிறக்கும் படியும் அருள்பாலித்துக் கூறியதைக்கேட்ட தேவர்தலைவன் இந்திரன் மனம்மகிழ்ந்து, ''நமது துன்பமெல்லாம் தீர்ந்து போய்விட்டது'' என்று ஆனந்தக் கூத்தாடினான். சிறந்த தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பிறைச்சந்திரனைத் தன் முடியில் சூடியிருக்கும் சிவபெருமானும், மிக நீண்ட உயர்ந்த வானத்தில் உள்ள தேவர்களும், ''நமது அடிமைத்தனம் முற்றும் நீங்கியது'' என்று மகிழ்ந்தார்கள். எனவே ஊழியிறுதிக்காலத்தில் இந்தப் பெரிய உலகத்தையே தன் வயிற்றுக்குள் அடக்கிக்கொள்பவனான திருமாலும் தனது வாகனமாகிய கருடன்மேல் தனது திருவடிகளை வைத்துப் புறப்படலானான். இது கவிக்கூற்று.

இங்கே ''சுடர்மதி சூடினோன்'' என்பது ஒளிபொருந்திய பிறைச்சந்திரனைத் தன் சடாமுடியில் சூடிக்கொண்டிருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

8. திருஅவதாரப் படலம் பக்கம்-35/27. கவிக்கூற்று

வாயு ''மற்று எனது கூறு மாருதி'' எனலும், மற்றோர்
''காயும் மற்கடங்களாகிக் காசினி அதனின்மீது,
போயிடத் துணிந்தோம்'' என்றார்; புராரி ''மற்று யானும், காற்றின்
சேய் எனப் புகன்றான்; மற்றைத் திசையுளோர்க்கு அவதி உண்டோ?
(206)

இந்தப்பாடலும் கவிக்கூற்றே. திருமாலிடம் முறையிடச் சென்ற தேவர்கணங்களையெல்லாம் குரங்குகளாக நிலவுலகில் அவதரிக்கப் பணித்த திருமாலிடம் வாயுதேவன், தனது கூறாக அனுமனை அனுப்புவதாகக் கூறியதும், மற்றெல்லோரும் தாங்களும் வானரங்களாக நிலவுலகுக்குப் போகத் துணிந்துவிட்டோம் என்று கூறினார்கள். அப்போது, முப்புரங்களையும் தன் புன்னகையாலேயே எரித்தழித்த சிவபெருமான், தனது கூறாகக் காற்றின் புதல்வனாகிய அனுமனாக அவதரிப்பேன் என்று கூறினான். எனவே இப்போது அனுமன் வாயுதேவன் மகன் என்ற முறையிலும் சிவபெருமானின் அம்சம் என்ற முறையிலும் நிலவுலகில் அவதரித்தான் என்பது இப்பாடல் மூலம் தெரியவருகிறது.

இங்கே ''புராரி'' என்பது முப்புரங்களையும் சுட்டெரித்து அழித்த சிவபெருமானைக் குறிக்கும்.

9. திருஅவதாரப்படலம் பக்கம்-35/28 கவிக்கூற்று

அருள்தரும் கமலக்கண்ணன் அருள்முறை, அலர் உளோனும்,
இருள்தரு மிடற்றினோனும், அமரரும், இனையராகி,
மருள்தரும் வனத்தில், மண்ணில், வானரர் ஆகிவந்தார்;
பொருள்தரும் இருவர் தம்தம் உறைவிடம் சென்று புக்கார். (207)

அவ்வாறு தாமரைமலர் போன்ற கண்களையுடையவனான திருமால் அருளிச்சென்றதும், தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், கரிய கழுத்துப்பகுதியை உடையவனான சிவபெருமானும், தேவர்களும், அவர்கள் கூறியபடியே அவதாரம் கொண்டு மருட்சி தருகின்ற காடுகளிலும், நிலவுலகிலும், வானரர்களாகி வந்தனர். வேண்டுவார்க்கு வேண்டுவன வற்றை அளிக்கும் இயல்பு படைத்த பிரமதேவனும், சிவபெருமானும் தாம் தாம் வசிக்கும் உறைவிடங்களுக்குச் சென்று சேர்ந்தனர்.

இங்கே ''இருள்தருமிடற்றினோன்'' என்பது நஞ்சுண்ட கண்டனாகிய சிவபெருமானைக் குறிக்கும்.

10. திருஅவதாரப் படலம் பக்கம்-36/31 வசிட்டன் கூற்று

''மாசறு சுரர்களோடு மற்றுளோர் தமையும் ஈன்ற
காசிபன் அருளும் மைந்தன், விபாண்டகன், கங்கைசூடும்
ஈசனும் புகழ்தற்கு ஒத்தோன், இருங்கலை பிறவும் எண்ணின்
தேசுடைத் தந்தை ஒப்பான், திருவருள் புனைந்த மைந்தன்''
(210)

இந்தப்பாடல் வசிட்டன் தசரதனிடம் கூறுவதாக வருவது. தனக்குப்பின் இவ்வுலகில் மறுக்கம் நிகழாது இருக்க ஒரு மகப்பேறு வேண்டும் என்று மனம்வருந்திக் கூறிய தசரதனுக்கு, அவன் குலகுரு வசிட்டன் ''இப்போது அங்கதேசத்தில் வசிக்கும், விபாண்டகனின் மகன், கலைக்கோட்டு முனிவன் எழுந்தருளி மகப்பேறு குறித்த வேள்வி இயற்றினால், இவ்ஒரு உலகை மட்டுமல்ல, ஏழுவகைப்பட்ட உலகையும் ஆளும் திறமைபடைத்த புதல்வர்களைப் பெறலாம்'' என்று அறிவுறுத்தி, அந்தக் கலைக்கோட்டு முனிவன் சிறப்பைப் பற்றியும் அவன் தந்தை விபாண்டகனின் பெருமைபற்றியும் வசிட்டன் கூறுவதாக வருவது இப்பாடல்.

கலைக்கோட்டு முனிவனின் தந்தையாகிய விபாண்டகன் ''கங்கையைத் தன் திருமுடியில் சூடியிருக்கும் சிவபெருமானாலும் போற்றத்தக்கவனாவான். அவனுடைய நூற்பயிற்சியையும், மற்ற சிறப்புக்களையும் பற்றி எண்ணிப்பார்த்தால் அவன் தன் தந்தை காசிபன் போன்ற உடல் ஒளியும் உள்ள ஒளியும் பெற்றவனாவான்'' என்கிறான் வசிட்டன். இங்கே ''கங்கைசூடும் ஈசன்'' என்ற சொற்றொடர் கங்கையைத் தன் சடாமுடியில் சூடியிருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

11. திரு அவதாரப்படலம் பக்கம்-36/33 வசிட்டன் கூற்று

''பாந்தளின் மகுடகோடி பரித்த பார் அதனில் வைகும்
மாந்தர்கள் விலங்கு என்று உன்னும் மனத்தன், மா தவத்தன், எண்ணின்
பூந்தவிசு உகந்துளோனும், புராரியும் புகழ்தற்கு ஒத்த
சாந்தனால் வேள்வி முற்றின், தனையர்கள் உளராம்'' என்றான்.
(212)

வசிட்டன் தசரதனிடம் கலைக்கோட்டு முனிவன் எழுந்தருளி மகவேள்வி இயற்றினால் அவனுக்கு மகப்பேறு உண்டாகும் என்று கூறும் பாடல் இது.

''ஆயிரம் குடங்கள் போன்று விளங்கும் தலையின் நுனியில் ஆதிசேஷன் என்னும் பாம்பு தாங்கிக்கொண்டு நிற்கும் இவ்வுலகில் வாழ்பவனும், இவ்வுலகில் வாழ்பவர்கள் அனைவரும் தன்னைப்போல் இரு கொம்பு முளைத்த உடலினைப் போன்றவர்களாகத்தான் இருப்பர் என்று கருதிக் கொண்டிருப்பவனும், பெரும் தவசீலனானவனும், இன்னும் நன்கு எண்ணிப்பார்த்தால், தாமரைமலரையே தன் மகிழ்ச்சி பொருந்திய

இருப்பிடமாகக்கொண்ட பிரமதேவனும், முப்புரங்களையும் தன் புன்முறுவலாலேயே எரித்து அழித்த சிவபெருமானும் புகழ்ந்து பேசுவதற்குத் தகுதியுடைய சாந்தை என்ற முகநலாளின் கணவனான பொறுமையிற்சிறந்த கலைக்கோட்டு முனிவன் எழுந்தருளி மகவேள்வி இயற்றி முடித்தால் உனக்குப் புதல்வர்கள் தோன்றுவர்'' என்று கூறியருளுகிறார் வசிட்டர்.

இங்கே ''புராரியும்'' என்பது முப்புரங்களையும் சுட்டெரித்தவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

12. திருஅவதாரப்படலம் பக்கம்-38 / 45 வசிட்டன் கூற்று.

வளநகர் முனிவரன் வருமுன், வானவன்
களன் அமர்கடு எனக்கருகி, வான்முகில்
சளசள என மழைத்தாரை கான்றன;
குளனொடு நதிகள் தம் குறைகள் தீரவே. (224)

தனக்குப்பின் தன் நாட்டை ஆளுதற்கு ஓர் புதல்வன் இல்லையே என்று மறுக்கமுற்ற தசரதன், தன் குலகுரு வசிட்டனிடம் தனது தவிப்பினைத் தீர்க்க ஓர் உபாயம் கேட்டபோது, வசிட்டன் முன்பு உரோமபாதன் ஆட்சிசெய்து கொண்டிருந்த அங்க நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடியபோது, அந்தப் பஞ்சத்தைப் போக்க கலைக்கோட்டு முனிவன் என்பவனை வரவழைத்தால் மழை பொழியும் என்று சான்றோர்கள்கூற, அவ்வாறே அங்கநாட்டின் எல்லையில் கலைக்கோட்டு முனிவன் காலடி எடுத்துவைத்ததும், மழை பொழிந்து குளங்களும், நதிகளும் நிறைந்து வழிந்தன'' என்று வசிட்டன் கூற்றாகக் கம்பன் கூறுகிறான்.

இங்கே ''வானவன் களன் அமர் கடு'' என்பது சிவபெருமான் கழுத்தில் இடம்பெற்றிருக்கும் நஞ்சின் கரிய நிறத்தைக் குறிக்கும். அதனை வானத்தினின்றும் மழைபொழியக் காத்திருக்கும் கரிய மேகத்திற்கு உவமை கூறுகிறான் கவிஞன்.

13. திரு அவதாரப்படலம் பக்கம்-51 / 124 கவிக்கூற்று

சவுளமொடு உபநயன விதிமுறை தருகுற்று,
இவ்வளவது என ஒரு கரை பிறிது இலவா,
உவள் அருமறையினோடு ஒழிவறு கலையும்,
''தவள்மதி புனைஅரன்'' நிகர் முனி தரவே. (303)

தசரதனுக்கு இராமபிரான் முதலிய நால்வரும் பிறந்து உபநயனம் முதலிய சடங்குகள் முடிந்து வளர்ந்து வரும்போது அவர்கள் நால்வரும் வசிட்ட முனிவரிடம் எல்லாக் கலைகளையும் பயின்று வந்தனர் என்று கூறுமிடத்துக் கவிஞன், வசிட்ட முனிவரை ''வெண்ணிறமுடைய சந்திரனைத் தன் சடையில் தரித்திருக்கும் சிவபெருமானை ஒத்த முனிவன்'' என்று சிவபெருமானுக்கு ஒப்பிடுகிறான்.

இங்கே ''தவள்மதி புனை அரன்'' என்பது தூய் வெண்ணிறமான பிறைச்சந்திரனை அணிந்திருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

14. கையடைப் படலம்- பக்கம்-56/13 தசரதன் கூற்று

தொடையூற்றின் தேன்துளிக்கும் நறுந்தாரான், ஒருவண்ணம் துயரம் நீங்கி,
''படையூற்றமிலன்; சிறியன் இவன்; பெரியோய்! பணி இதுவேல், ''பனி நீர்க்கங்கை
புடையூற்றும் சடையானும், புரந்தரனும், நான்முகனும், புகுந்து செய்யும்
இடையூற்றுக்கு இடையூறாய், யான் காப்பென், பெரு வேள்விக்கு எழுக!'' என்றான்.

(326)

தசரதன் அரசவைக்கு வந்த விசுவாமித்திரன், தனது வேள்வியைக் காக்கும் பொருட்டுக் ''கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி'' என்று கேட்கிறான். தசரதனுக்கு இராமபிரானைப் பிரிய மனம் ஒப்பவில்லை. எனவே, தசரதன் விசுவாமித்திரனை நோக்கி, ''பெருந்தவமுடையவரே! இந்த இராமன் வயதில் மிகச்சிறியவன்; படைக்கலன்களைக் கையாளும் வலிமையற்றவன்; இன்னும் முற்றிய பயிற்சி பெறாதவன். உன்னுடைய பணி, வேள்வியைப் பகைவரிடமிருந்து காப்பாற்றவேண்டும் என்பதானால், குளிர்ச்சி பொருந்திய நீரையுடைய கங்கையைத் தன் சடைமுடியின் ஒரு பக்கத்தில் தரித்திருப்பவனாகிய சிவபெருமான், இந்திரன், நான்கு முகங்களையுடைய பிரமதேவன், இவர்களில் யார் புகுந்து, உன் வேள்விக்கு இடையூறு செய்தாலும், அந்த இடையூறுக்கு இடையூறாய் நான் காத்துநிற்கிறேன். பெருவேள்வியைக் காப்பதற்கு இப்பொழுதே புறப்படுக'' என்கிறான்.

இங்கே ''பனி நீர்க் கங்கை புடையூற்றும் சடையான்'' என்று சிவபெருமான் குறிக்கப்படுவதைக் காண்க.

15. தாடகைவதைப்படலம் பக்கம்-58/1 விசுவாமித்திரன் கூற்று

''திங்கள் மேவும் சடைத்தேவன்மேல், மாரவேள்
இங்கு நின்று எய்யவும், எரிதரும் நுதல்விழிப்
பொங்குகோபம் சுடப் பூளை வீ அன்ன தன்
அங்கம் வெந்து, அன்று தொட்டு அனங்கனே ஆயினான்''

(339)

''பிறைச்சந்திரன் திகழ்ந்து விளங்குகின்ற சடைமுடியை உடையவனான சிவபெருமானின்மீது, மன்மதன் தனது மலர்க்கணைகளை இந்த இடத்தினின்று செலுத்தவும், அதுகண்ட சிவபெருமானது நெற்றிக் கண்ணினின்றும் நெருப்புப் பொங்கி எழுந்து அவனைச் சுடவும், இலவம் பஞ்சு போன்ற மென்மையான அவனுடைய உடம்பு வெந்துபோய் அன்றி லிருந்து உடம்பே இல்லாதவனாகிப் போனான்'' என்று விசுவாமித்திரன் மன்மதன் அங்கம் இழந்தது பற்றி இராமஇலக்குவர்க்குத் தெரிவிக்கிறான்.

இங்கே ''திங்கள் மேவும் சடைத்தேவன்'' என்று சிவபெருமானையும் ''நுதல்விழி'' என்று அவனது நெற்றிக்கண்ணையும் குறிப்பிடுவதைக் காண்க.

16. தாடகைவதைப் படலம் பக்கம்-58/2 விசுவாமித்திரன் கூற்று

''வாரணத்து உரிவையான், மதனனைச் சினவுநாள்,
ஈரம் அற்று, அங்கம் இங்கு உகுதலால், இவண் எலாம்,
ஆரணத்து உறையுளாய்! அங்கநாடு; இதுவும் அக்
காரணக் குறியுடையக் காமன் ஆச்சிரமமே'' (340)

அங்க நாட்டுக்குரிய பெயர்க்காரணத்தையும், அந்த ஆசிரமத்தையும் பற்றி விசுவாமித்திரன் இராமபிரானுக்கு கூறுகிற பாடல் இது.

சிவபெருமானிடம் வரம்பெற்று அவனையே சோதிக்க விரும்பிய சில முனிவர்கள், அபிச்சாரவேள்வி ஒன்று நடத்தி, அதனின்றும் பல மிருகங்களையும், பொருள்களையும் சிவபெருமான்மீது ஏவினர். அத்தகைய மிருகங்களுள் ஒன்று யானை. அந்த யானை தன்னைநோக்கி வந்தபோது அதனைக் கொன்று, அதன் தோலையே தனது போர்வையாகக் கொண்டவன் சிவபெருமான் என்பது ஒரு புராணக்குறிப்பு.

விசுவாமித்திரன் இராமபிரானை நோக்கி ''வேதங்களில் உறைபவனே! அவ்வாறு யானையின் தோலையே தனக்குப் போர்வையாகப் போர்த்திக் கொண்ட சிவபெருமான் அந்த மன்மதனைக் கோபித்து நோக்கும்பொழுது அம்மன்மதனுடைய அங்கங்கள் அனைத்தும் இந்த இடத்தில்தான் உகுந்தன. எனவே அப்பொழுது முதல் இது ''அங்கநாடு'' என்றும் அவன் இருந்த இடம் ''காமாச்சிரமம்'' என்றும் காரணப்பெயராக வழங்கப்படுகிறது'' என்று கூறுகிறான்.

முதலடியில் ''வாரணத்து உரிவையான்'' என்பது யானையின் தோலை உரித்துத் தனக்குப் போர்வையாகப் போர்த்திக் கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கிறது.

17. தாடகைவதைப் படலம் பக்கம்-58/3 விசுவாமித்திரன் கூற்று

''பற்று அவா, வேரொடும் பசையற, பிறவிபோய்
முற்ற, வால் உணர்வுமேல் முடுகினார் அறிவு சென்று
உற்ற வானவன், இருந்து யோகு செய்தனன் எனின்,
சொற்றவாம் அளவதோ, மற்று இதன் தூய்மையே?'' (341)

விசுவாமித்திரன் இராமபிரானிடம் ''யான், எனது என்னும் அகப்புறப்பற்றுக்களையும், ஆசை முதலான மும்மலங்களையும் வேரோடு அறுத்து, பிறவிப்பிணி நீங்கிப்போய், மெய்யறிவு நிரம்பப்பெற்ற ஞானிகள் இறுதியாகச்சென்று அடைகின்ற தேவர்தலைவனானசிவபெருமானே இங்கே பலகாலம் இருந்து மெய்த்தவம் இயற்றியிருக்கிறான் என்றால், இதன்

பெருமையை என் சொல்லினால் சொல்லிவிடமுடியுமோ?'' என்று கேட்கிறான் விசுவாமித்திரன்.

இங்கே ''அறிவுசென்று உற்ற வானவன்'' என்பது மெய்யறிவு நிரம்பப் பெற்ற ஞானியர் இறுதியில் சென்று அடையும் சிவப்பெரும் பதம் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

18. தாடகை வதைப்படலம் பக்கம்எண்-61 / 20 இராமபிரான் கூற்று

''சுழிபடு கங்கை அம் தொங்கல் மோலியான்
விழிபட வெந்ததோ? வேறுதான் உண்டோ?
பழிபடர் மன்னவன் பரித்த நாட்டினூங்கு
அழிவது என்? காரணம் அறிஞ! கூறு'' என்றான். (358)

விசுவாமித்திரனுடன் உடன் சென்ற இராமபிரான் பாலைவனத்தைச் சுட்டிக்காட்டி ''இந்தப் பாலைவனம் பழியோடு பொருந்திய ஒரு அரசன் பாதுகாக்கும் நாட்டைக் காட்டிலும் மிகுதியாக அழிந்து இப்படிப் பாழ்பட்டு வெந்துபோனதற்கு என்ன காரணம்?'' என்று கேட்கும்போது ''சுழிகள் நிறைந்த கங்கையைத் தன் முடியில் சூடிக்கொண்டிருப்பவனும், அழகிய மலர்மாலையை அணிந்திருப்பவனுமாகிய சிவபெருமானின் நெற்றிக்கண் சுட்டதனால் இவ்வாறு ஆயிற்றா? அல்லது இதற்கு வேறு ஏதேனும் காரணம் உண்டா? கூறுவீராக'' என்று இராமபிரான் விசுவாமித்திரனைக் கேட்கிறான் என்பதாம்.

இங்கே ''கங்கை அம் தொங்கல் மோலியான் விழி'' என்பது கங்கையையும், மலர்மாலையையும் தன் சடைமுடியில் சூடியிருப்பவனாகிய சிவபெருமானின் நெற்றிக்கண்'' என்று சிவபெருமானைக் குறிக்கிறது என்க.

19. வேள்விப்படலம் பக்கம்-73 / 49 கவிக்கூற்று.

நஞ்சுஅட எழுதலும் நடுங்கி, நாள்மதிச்
செஞ்சடைக் கடவுளை அடையும் தேவர்போல்,
வஞ்சனை அரக்கரை வெருவி, மாதவர்
''அஞ்சனவண்ண! நின் அபயம் யாம்'' என்றார். (442)

விசுவாமித்திரன் வேள்வி காப்பதற்காகச் சென்ற இராமஇலக்குவர் வேள்வியைக் காத்துக்கொண்டிருக்கும் ஆறாம் நாளில் மாரீசன், சுபாகு என்ற அரக்கர் இருவரும் தம் கூட்டத்தினருடன் வந்து, மாமிசம் முதலிய துண்டங்களை எறிந்து வேள்வியைக் குலைக்க முயன்றனர். அதுகண்ட இராமபிரான் தன் வில்லாற்றலால் ஒரு சரக்கூடம் அமைத்து அம் மாமிசத் துண்டுகள் வேள்விக் குண்டத்தில் விழாதவாறு காப்பாற்றினான். இவ்வரக்கர்களைக் கண்டு அஞ்சிநடுங்கிய பெருந்தவ முனிவர்கள் இராமபிரானை நோக்கி ''கரிய மை போன்ற நிறம் கொண்டவனே! நாங்கள்

எல்லோரும் உனக்கு அடைக்கலம். எங்களைக் காத்தருள்வாயாக!'' என்று வேண்டிக்கொண்டனர்.

இங்கு கவிஞன் ஒரு உவமையின்மூலம் சிவபெருமானைக் குறிப்பிடுகிறான். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது, அதனின்றும் முதலில் ஆலகால நஞ்சு தோன்றிற்று. அதை ஏற்றுக்கொள்ள ஒருவரும் முன்வராது, தேவர்கள் எல்லோரும் பிறைச்சந்திரனைக் கொண்டுள்ள சிவந்த சடைமுடியை உடைய சிவபெருமானைச் சென்று அடைக்கலம் புகுந்தனர். அதுபோல, இப்போது மாதவர் இராமபிரானை நோக்கி ''நின் அபயம் யாம்'' என்றனர் என்று, இங்கு ''நஞ்சுண்ட கண்டன்'' என்றும், பிறைச்சந்திரனைத் தன் சிவந்த சடைமுடியில் தரித்தவன் என்றும், சிவபெருமானைக் குறிக்கிறார் என்க.

20. அகலிகைப் படலம் பக்கஎண்-76 / 5 கவிக்கூற்று.

அங்கு நின்று எழுந்து, அயன்முதல் மூவரும் அனையார்,
செங்கண் ஏற்றவன் செறிசடைப் பழுவத்தில் நிறைதேன்
பொங்கு கொன்றை ஈர்த்து ஒழுகலால், பொன்னியைப் பொருவும்
கங்கை என்னும் அக் கரை பொரு திருநதி கண்டார். (456)

விசுவாமித்திரன் உடன் சென்ற இராமஇலக்குவர், ஆகிய மூவரும் கங்கைநதியைக் காணும் காட்சியை விளக்குகிறான் கவிஞன். விசுவாமித்திரன் இராமபிரான், இலக்குவன் ஆகிய மூவரையும் பிரமதேவன், திருமால், சிவபெருமான், ஆகிய மூவருக்கும் ஒப்பிட்டு ''அயன்முதல் மூவரும் அனையார்'' என்று கூறிய கவிஞன் கங்கை நதியைக் காவிரி நதிக்கு ஒப்பிட்டுக் கூறுகிறான். ''சிவந்த கண்களையுடைய இடபத்தை வாகனமாகக் கொண்டுள்ளவனும், அடர்ந்த சடைக்கற்றை உடையவனும், தேன்துளிர்க்கும் கொன்றை மலரை மாலையாக அணிந்திருப்பவனும் ஆகிய சிவபெருமான் தன் முடியில் கொண்டுள்ள இரு கரையையும் மோதித் தாக்குகின்ற கங்கை என்னும் அழகிய நதியைக் கண்டார்கள்'' என்கிறான் கவிஞன்.

இங்கே சிவபெருமானை இடபவாகனத்தை உடையவன் என்றும், கங்கையைத் தலையில் தாங்கியிருப்பவன் என்றும், கொன்றை மாலையையணிந்தவன் என்றும் குறிப்பிடுகிறான் கவிஞன் என்க. ஏறு-இடபம்.

21. அகலிகைப் படலம் பக்கஎண்-78 / 19 விசுவாமித்திரன் கூற்று

புக்கு அவளோடும் காமப் புது மணமதுவின் தேறல்
ஒக்க உண்டு இருத்தலோடும், உணர்ந்தனள்; உணர்ந்த பின்னும்,
''தக்கது அன்று'' என்ன ஓராள்; தாழ்ந்தனள் இருப்ப, தாழா
முக்கணான் அனைய ஆற்றல் முனிவனும், முடுகிவந்தான்.
(470)

அகலிகையின் வரலாற்றை விசுவாமித்திரன் இராமஇலக்குவர்க்குக் கூறும் பாடல்இது.

அகலிகையுடன் இந்திரன் கூடி இருவரும் ஒத்த இன்பம் துய்த்தனர். கலந்ததன்பின் கணவனல்லன் என்று உணர்ந்த அகலிகை, இது தகாதசெயல் என்று தான் விலகாமல் தாழ்ந்திருந்தாள். இந்திரனின் இந்த வஞ்சனைச்செயலை உணர்ந்துகொண்ட குற்றமற்ற மூன்றாவது கண்ணாகிய நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைப் போலப் பேராற்றல் கொண்ட கௌதம முனிவன் மிக்க சினம் கொண்டு விரைந்து வந்து சேர்ந்தான்.

இங்கே கௌதம முனிவனின் சீற்றமிக்க தோற்றத்திற்கு நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானை ஒப்புக் கூறினார் என்க.

22. அகலிகைப் படலம் பக்கஎண்-78 / 23 விசுவாமித்திரன் கூற்று

''பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே; அன்பால்
அழல்தரும் கடவுள் அன்னாய்! முடிவு இதற்கு அருளுக!'' என்ன,
''தழைத்து வண்டு இமிரும் தண் தார்த் தசரதராமன் என்பான்
கழல்துகள் கதுவ இந்தக் கல் உருத் தவிர்தி'' என்றான். (474)

தவறுசெய்த அகலிகையைக் கல்லாய்ப் போகும்படி சபித்தான் முனிவன். அவள் கல்லாய்ப் போகும்முன்பு தன் தவறை உணர்ந்து, ''இந்தச் சாபம் நீங்குவது எப்போது?'' என்று சாபநீக்கம் பற்றிக் கேட்கிறாள். அதற்கு விடைகூறுவதுபோல் அமைந்தது இப்பாடல்.

''நெருப்பைக் கக்குகின்ற நெற்றிக் கண்ணை உடையவனும் எரிபோல் மேனிப் பிரானுமாகிய சிவபெருமான் போன்ற முனிவனே!'' என்று அகலிகை கௌதம முனிவனை முகமன்கூறி அழைத்து, ''இந்தச் சாபம் நீங்குதல் எப்பொழுது?'' என்று கேட்கும்பொழுது, கௌதம முனிவன் ''செழித்த வண்டுகள் ரீங்காரம் செய்கின்றதும், குளிர்ச்சி பொருந்தியதுமான மலர்மாலையை அணிந்துள்ளவனான தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தனான இராமபிரான் என்பவன் இங்கு வரும்போது அவனுடைய திருவடித் துகள் உன்மேல் படும்போது இந்தக் கல் உருவம் நீங்கப்பெறுவாய்'' என்று சாபநீக்கம் அருளினான் என்பதாம்.

இங்கே ''அழல் தரும் கடவுள்'' என்பது எரிபோல் மேனிப்பிரானாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க. கௌதம முனிவனின் சீற்றம் எப்படிப்பட்டது என்பதைக் குறிக்கவே அகலிகையை ''அழல்தரும் கடவுள் அன்னாய்!'' என்று அழைக்க வைத்திருக்கும் கவிஞனின் திறம் காண்க.

23. மிதிலைக் காட்சிப்படலம் பக்கம்எண்-82/20 கவிக்கூற்று

வெஞ்சினம் உருவிற்று என்னும் மேனியர், வேண்டிற்று ஈயும்
நெஞ்சினர், ஈசன் கண்ணில் நெருப்புறா அனங்கன் அன்னார்,
செஞ்சிலைக் கரத்தர், மாதர் புலவிகள் திருத்திச் சேந்த
குஞ்சியர், சூழ நின்ற மைந்தர்தம் குழாங்கள் கண்டார். (499)

இராமஇலக்குவர் முனிவரோடும் மிதிலை வீதிகளில் போகும்போது அவர்கள் கண்ட காட்சிகள் பற்றிக் கூறும் பாடல் இது.

மிக்க கோபம் கொண்டதுபோல் கொதிக்கும் உடல்; வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றைத் தரும் ஈரநெஞ்சம்; எல்லா ஐஸ்வர்யங்களுக்கும் தலைவனான சிவபெருமானின் நெற்றிக்கண் பட்டு, உருவமற்றுப் போகாத முந்தைய நிலையில் உள்ள மன்மதனைப் போன்ற பேரழகு; சிவந்த கொடிய வில்லை ஏந்திய கைகள்; பெண்களின் ஊடற்காலத்தே அவரது பாதங்களில் பணிந்து விழுந்ததால் அப்பெண்களின் கால்களில் தோய்ந்திருந்த செம்பஞ்சுக்குழம்பு படிந்த முன்பக்கத் தலைமுடி; இவற்றைக்கொண்ட ஆடவர், சூழ்ந்து குழுக்களாக நின்றதையும் அவர்கள் கண்டு சென்றனர்.

இங்கே ''ஈசன்கண்'' என்பது சிவபெருமானின் நெற்றிக்கண்ணைக் குறித்தது என்க.

24. மிதிலைக் காட்சிப்படலம் பக்கஎண்-96/118 தேவர்கள் கூற்று

நறைத்தரு உடைய கோனும், நான்முகக் கடவுள்தானும்,
கறைத்தரு களனும், மற்றைக் கடவுளர் பிறரும், தொக்கு,
''பொறுத்தருள் முனிவ! நின்னைப் புகல் புகுந்தவனைப் போற்றும்
அறத்திறன் நன்று; தாரா கணத்தொடும் அமைக, அன்னான்!''
(597)

இது திரிசங்குவின் இறுதிநிலை பற்றிச் சொல்லும் பாடல். ''திரிசங்கு சொர்க்கம்'' என்ற வரலாறு நாம் அறிந்ததே. அவனைத் தேவர்கள் தேவலோகத்தினின்றும் தள்ளிவிட அவன் முனிவனைத் தொழவும், முனிவன் அவனை அப்படியே அந்தரத்தில் நிறுத்தினான். அதுகண்ட தேவர்கள், ஒரு புலையன் தன் உடலோடு சொர்க்கலோகம் செல்லுதல் தகாது என்றும் அவன் இப்பொழுது நிற்கிற இடத்திலேயே நட்சத்திரக் கூட்டங்களோடு கூட்டமாய் நிற்கட்டும் என்றும் வசிட்ட முனிவனை நோக்கி வேண்டும் முறையில் அமைந்த பாடல்இது.

நறுமணமிக்க கற்பகத்தருவை உடைய தேவலோகத்துத் தேவர்களின் அரசனாகிய இந்திரனும், நான்கு முகங்களையுடைய பிரமதேவனும், ஆலகால நஞ்சைப் பருகியதால் களங்கம்போன்ற கறைபடிந்த கழுத்தையுடையவனான சிவபெருமானும், மற்றைத் தேவர்களும்,

முனிவர்களும் ஒருங்கு சேர்ந்து, ஒரேகுரலில் விசுவாமித்திரனை நோக்கி, ''முனிவ! பொறுத்தருள்வீராக! தங்களை வந்து சரணடைந்தவரைத் தாங்கள் பாதுகாத்துப் போற்றும் இச்செயல் தருமத்தின்பாற்பட்ட நற்செயலேயாகும். எனினும் பூத உடலோடு ஒரு புலையன் சொர்க்கலோகம் செல்லுவது என்பது தகாது. எனவே அவன் இப்பொழுது நிற்கின்ற இடத்திலேயே நட்சத்திரக் கூட்டத்தோடு ஒரு நட்சத்திரமாகத் திகழட்டும்'' என்று வேண்டிக்கொண்டனர் என்பதாம்.

இங்கே ''கறைத்தரு களன்'' என்பது ஆலகால விஷத்தைப் பருகிய கழுத்தை உடைய நீலகண்டனைக் குறிக்கும் என்பதாம்.

25. மிதிலைக்காட்சிப் படலம் பக்க எண்-98 / 128

விசுவாமித்திரன் கூற்று

''அரசனோடு ஏகி, யூபத்து அணைக்குபு, இம்மறையை ஓதின்,
விரசுவர் விண்ணுளோரும், விரிஞ்சனும், விடைவலோனும்;
உரைசெறி வேள்வி முற்றும்; உனது உயிர்க்கு ஈறு உண்டாகா;
பிரச மென் தாரோய்!'' என்ன, பழிச்சொடும் பெயர்ந்து போனான்.
(607)

சுனச்சேபனுக்கு விசுவாமித்திரன், அவன் உயிர் போகாதிருத்தற்குக் கூறியருளிய மந்திரத்தின் பலன்பற்றிக் கூறும் பாடல் இது. இது ஒரு புராணக்குறிப்பை உள்ளடக்கியது.

விசுவாமித்திரன் மேற்குத்திசையில் தவம் செய்யும் பொருட்டு செல்லுதற்கு முற்பட்டபோது, அம்பரீடன் என்னும் சூரியகுலத்துத் தோன்றல் ஒரு புருடமேத வேள்வி செய்ய விழைந்து, ஒரு ஆடவனைக் கொணரக் கருதித் தன் இரதத்தில் காடுகளில் சென்று தேடினான். அங்கே இரிசிகன் என்னும் ஒரு முனிவன் தவம்செய்து கொண்டிருந்தான். அவனுக்கு மூன்று புதல்வர்கள்; அம்பரீடன் அவர்களை அணுகி ''இம்மூவருள் ஒருவனைத் தருக'' எனக் கேட்டான். தாய் இளையமகனைத் தர இசையவில்லை; தந்தை மூத்தமகனைத் தர இசையவில்லை. இருவரும் இரண்டாவது மகனை வேண்டும் என்று சொல்லவில்லை. எனவே இரண்டாவது மகனான சுனச்சேபன் என்பவனைத் தகுந்த பொருள் பெற்றுக்கொண்டு புருடமேத வேள்வி (நரபலி), செய்ய விழைந்த அம்பரீடனுடன் அனுப்பிவைத்தனர். அந்த அம்பரீடன் சுனச்சேபனுடன் வரும் வழியில் விசுவாமித்திரன் தவம்செய்து கொண்டிருப்பதைக் கண்டு இருவரும் சற்று நின்றனர். அப்போது சுனச்சேபன் மட்டும் தனித்துச்சென்று விசுவாமித்திரனை அணுகி வணங்கித் தன் சோகக்கதையைக் கூறினான். விசுவாமித்திரன் அவன் துயரைப் போக்குவதாக உறுதியளித்துத் தன் மக்களுள் ஒருவரை அம்பரீடனுடன் செல்லுமாறு பணிக்க, அவர்கள் நால்வரும் அதற்கு உடன்படாது எதிர்க்கவே அவர்களைக் காடுகளில் திரியும் வேடுவர்களாகிப் போகுமாறு சபித்தான். பின்னர்

சுனச்சேபனுக்கு இரண்டு மந்திரங்களைச் சொல்லித்தந்து, ''இந்த இரண்டு மந்திரங்களையும், அரசன் உன்னைப் பலியிடும்போது உச்சரித்தாயானால் விண்ணிலுள்ள தேவர்களும், பிரமதேவனும், இடபத்தை வாகனமாகக் கொண்டு செலுத்தும் சிவபெருமானும் அங்கே பிரத்தியட்சமாகித் தம் அவிர்பாகத்தை ஏற்றுக் கொள்ளுவார்கள். எனவே அவன் கருதிவந்த வேள்வி முற்றுபெற்றதாகும். உனது உயிருக்கு ஒரு தீங்கும் நேராது'' என்று கூறி அவனை ஆற்றுப்படுத்தினான்.

இங்கே ''விடைவலோனும்'' என்பது இடபத்தை வாகனமாகக் கொண்டு செலுத்தும் சிவபெருமானைக் குறித்து நின்றது என்க.

26. மிதிலைக்காட்சிப் படலம். பக்கஎண்-98/131 கவிக்கூற்று

''எயில் எரித்தவன் யானை உரித்த நாள்,
பயிலுறுத்து உரிபோர்த்த நல்பண்பு என,
புயல் விரித்து எழுந்தால்எனப் பூதலம்
குயிலுறுத்தி, கொழும்புகை விம்மவே'' (610)

இராமஇலக்குவரை மிதிலைக்கு அழைத்துவந்த விசுவாமித்திரன், நான்கு திசைகளிலும் அமர்ந்து இயற்றிய தவத்தின் மகிமைபற்றிக் கவிஞன் பேசுவதாக வருவது இப்பாடல்.

''முப்புரங்களையும் தன் புன்னகையினாலேயே எரித்தழித்தவனும், தாருகாவனத்து முனிவர்கள் இயற்றிய அபிச்சார வேள்வியினின்றும் கிளம்பிவந்த யானையை அழித்து அதன் தோலைத் தனக்குப் போர்வையாக அணிந்துகொண்டு விளங்குபவனுமான சிவபெருமான், சினம்கொண்டு பொங்கி எழுந்தபோது வெளிக்கிளம்பிய செழுமைவாய்ந்த நெருப்பின் புகைபோல, இப்போது விசுவாமித்திரன் இயற்றுகின்ற அருந்தவமும் மிக்கக் கனல்பொங்கியது போன்றிருந்தது'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''எயில் எரித்தவன்'', ''யானை உரித்தவன்'', ''உரிபோர்த்தவன்'' என்பன முப்புரங்களை எரித்தவன் என்றும், யானையை அழித்து அதன் தோலைத் தன் மேனியில் அணிந்து கொண்டவன் என்றும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

27. மிதிலைக்காட்சிப் படலம் - பக்கஎண்-99/134 கவிக்கூற்று

புண்டரீகனும், புள் திருப்பாகனும்,
குண்டை ஊர்தி, குலிசியும், மற்றுஉள
அண்டர்தாமும் வந்து, அவ்வயின் எய்தி, வேறு
எண் தபோதனன் தன்னை எதிர்ந்தனர். (613)

இது தேவர்கள் கௌசிக மன்னனை ''பிரம்மரிஷி'' யாக்குவதற்காக ஒன்றுகூடி வருவதைக் குறிக்கும் பாடலாகும்.

இவ்வாறு பிரம்மரிஷியாக வேண்டும் என்ற பெருநோக்கோடு இடையறாது தவம்செய்து கொண்டு இருந்த விசுவாமித்திரனை, தாமரைமலரில் வீற்றிருப்பவனாகிய பிரமதேவனும், கருடனைத் தன் வாகனமாகக் கொண்டு செலுத்துபவனாகிய திருமாலும், இடபத்தில் உலாவரும் சிவபெருமானும், வச்சிராயுதத்தைக் கைக்கொண்டிருக்கும் இந்திரனும், இன்னும் மற்றும் உள்ள எல்லாத் தேவர்களும் ஒன்றுகூடி, விசுவாமித்திரன் அருந்தவமியற்றும் இடத்திற்கு வந்துசேர்ந்து அவனைக் கண்டனர்.

இங்கே ''குண்டை ஊர்தி'' என்ற சொற்றொடர், இடபத்தை வாகனமாகக் கொண்டு செலுத்தும் சிவபெருமானைக் குறிக்கும். குண்டை-இடபம்/ரிஷபம்/எருது/காளை

28. மிதிலைக் காட்சிப்படலம் - பக்க எண்.99/135

தேவர்கள் கூற்று

பாதி மாமதி சூடியும், பைந்துழாய்ச்
சோதியோனும், அத்தூய் மலராளியும்,
''வேதபாரகர் வேறிலர் நீயலால்,
மா தபோதன!'' என்ன வழங்கினர். (614)

இவ்வாறு அங்கு வந்தெய்திய சிறந்த பிறைச்சந்திரனைத் தன் சடைக்கற்றையில் அணிந்திருக்கும் சிவபெருமானும், பசுமையான துளசி மாலையில் ஒளிவிட்டுப் பிரகாசிப்பவனான திருமாலும், தூய்மையான தாமரை மலரில் வீற்றிருப்பவனான பிரமதேவன் முதலான தேவர்கள் எல்லோரும் விசுவாமித்திரனை நோக்கி, ''சிறந்த தவத்தை மேற்கொண்டு உள்ளவனே! நீதான் பிரம்மரிஷி-மிக்க தவம் செய்து நான்கு வேதங்களையும் கரைகண்டு உணர்ந்தவன்'' என்று போற்றி அவனைப் ''பிரம்மரிஷி'' என்று அழைத்தார்கள்.

இங்கே ''பாதிமாமதிசூடி'' என்ற சொற்றொடர், பிறைச்சந்திரனைத் தன் சடைக்கற்றையில் அணிந்துள்ளவனான சிவபெருமானைக் குறித்தது என்க.

29. மிதிலைக் காட்சிப்படலம் - பக்க எண்-101/150. கவிக்கூற்று

ததையும் மலர்த்தார் அண்ணல் இவ்வண்ணம்,
　　மயல் உழந்து, தளரும் ஏல்வை,
சிதையும் மனத்து இடருடைய செங்கமலம்
　　முகம் மலர, செய்ய வெய்யோன்
புதை இருளின் எழுகின்ற புகர்முக யானையின்
　　உரிவைப் போர்வை போர்த்த
உதையகிரி எனும் கடவுள் நுதல் கிழித்த
　　விழியேபோல், உதயம் செய்தான். (629)

அண்ணலும் நோக்கி அவளும் நோக்கி இதயம் மாறிப்புக்கு எய்திய பின், இராமபிரான் தனக்குரிய மாளிகையில் கங்குலும் திங்களும் தனியும் தானும் அத்தையலும் ஆனபோது, அல்வழி தன் மனம் ஆகாது என்று உறுதியாக நம்பி உறங்கிய இராமபிரான் விழித்தபோது எழுந்த கதிரவன் தோற்றத்தைக் கூறும் பாடல் இது.

''சிவந்த உதயசூரியனைக் கண்டு செங்கமலம் முகம் மலர்ந்து விரிவதுபோலவும், புள்ளிகளைக் கொண்ட முகத்தையுடைய யானையின் தோலைப்போர்வையாக அணிந்துகொண்ட உதயகிரி போன்ற சிவந்தநிறமுடைய சிவபெருமான் நெற்றியைக் கிழித்துக்கொண்டு தோன்றுகின்ற நெற்றிக்கண்ணைப்போலவும் சிவந்து தோன்றலானான் கதிரவன்'' என்கிறான் கவிஞன்.

கதிரவன் உதயத்தின்போது தோன்றுகின்ற செக்கர் நிறத்திற்கு சிவபெருமானின் சிவந்த நெற்றிக் கண் உவமை. இங்கே ''புகர்முக யானையின் உரிவைப்போர்வை போர்த்த உதையகிரி எனும் கடவுள் நுதல் கிழித்தவிழி'' என்று சிவபெருமானின் நெற்றிக்கண் சிறப்பிக்கப் படுகிறது என்க.

30. மிதிலைக் காட்சிப்படலம் பக்கஎண்-102/153. கவிக்கூற்று

எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட, உலகம் ஏத்த,
விண்ணவரும், முனிவர்களும், வேதியரும்,
கரம்குவிப்ப, வேலை என்னும்
மண்ணும் மணி முழவு அதிர, வான் அரங்கில்
நடம்புரி வாள் இரவி ஆன,
கண்ணுதல் வானவன், கனகச்சடை விரித்தால்
என விரிந்த, கதிர்கள் எல்லாம். (632)

முன்பாடலில் கதிரவன் தோற்றத்தைச் சிவபெருமானின் சிவந்த நெற்றிக்கண்ணிற்கு உவமித்த கவிஞன், இந்தப்பாடலில் கதிரவனுடைய விரிந்து பரந்த கிரணங்களுக்கு, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானின் பொன்நிறம் பொருந்திய சடைமுடியை உவமிக்கிறான். சிவபெருமானுடைய சடைமுடிக் கற்றை விரிந்து பரந்து ஒளிவீசுவதுபோல், சூரியனது கிரணங்கள் எல்லாம் விரிந்து பரந்து ஒளிவீசின என்கிறான்.

இங்கே ''கண்ணுதல் வானவன் கனகச் சடை'' என்பது நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானின் பொன்போன்ற திருமுடிக் கற்றையைக் குறித்தது என்க. இங்கே இன்னும் ஒன்று. எண்ணுதற்கரிய வேதங்களோடு கின்னரர்களும், விண்ணவரும், முனிவரும், வேதியரும்

எப்பொழுதும் சிவபெருமானை வணங்கித்தொழும் இயல்பினர் என்பதும் பெறப்படுகிறது.

31. குலமுறைகிளத்து படலம். பக்களண்-104/9 விசுவாமித்திரன் கூற்று

''தூ நின்ற சுடர்வேலாய்! அனந்தனுக்கும் சொலற்கு அரிதேல்,
யான் இன்று புகழ்ந்துரைத்தற்கு எளிதோ? ஏடு அவிழ் கொன்றைப்
பூ நின்ற மவுலியையும் புக்கு அளைந்த புனற் கங்கை,
வான் நின்று கொணர்ந்தானும், இவர் குலத்து ஓர் மன்னவன் காண்!'' (645)

மிதிலையில் சனகமன்னனது அரசவை அடைந்த இராமஇலக்குவரை சனகனுக்கும் சதானந்த முனிவற்கும் அறிமுகப்படுத்தும் விசுவாமித்திரன், அவர்களது முன்னோனான பகீரதனைப் பற்றிக்கூறும் பாடல் இது.

''ஆயிரம் நாக்குப்படைத்த ஆதிசேஷனாலும் அளவிட்டுக் கூறமுடியாதது இவன் குலத்துப் பெருமை என்றால், நான் என் ஒரு நாவால் புகழ்ந்துரைத்தல் எளிதாகிவிடுமோ? இதழ்கள் விரியும் கொன்றை மலர்மாலையணிந்த சடைமுடியினையுடைய சிவபெருமான் சிரத்தின்மேல் திகழ்கின்ற ஆகாயகங்கையின் வெள்ளப்பெருக்கை, வானத்தினின்றும் இந்நிலவுலகத்திற்குக் கொண்டுவந்தவன் இவன் மரபைச்சார்ந்த பகீரதன் என்னும் மன்னன் ஆவான் என்பதையும் தெரிந்துகொள்வாயாக!'' என்று குலமுறை கிளத்துகிறான் விசுவாமித்திரன்.

இங்கே ''ஏடு அவிழ் கொன்றைப் பூ நின்ற மவுலியையும் புக்கு அளைந்த புனற்கங்கை'' என்பது கொன்றை மலரையும், ஆகாயகங்கையையும் தன் சடைமுடியில் தரித்துக் கொண்டுள்ளவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

32. குலமுறை கிளத்து படலம். பக்களண்-105/11 விசுவாமித்திரன் கூற்று

''சந்திரனை வென்றானும், உருத்திரனைச் சாய்த்தானும்,
துந்து என்னும் தானவனைச் சுடுசரத்தால் துணித்தானும்,
வந்த குலத்திடை வந்த இரகு என்பான், வரிசிலையால்
இந்திரனை வென்று, திசை இருநான்கும் செரு வென்றான்''
(647)

சனகன் அவையில் இராமஇலக்குவரின் குலமுறையைக் கூறிவரும்பொழுது இரகு என்னும் மன்னனின் சிறப்பைக் கூறவந்த விசுவாமித்திரன், அவனது முன்னோர்களின் சிறப்பையும், பெருமையையும் விளக்குகிறான்.

சந்திரனை வென்றவன் திலீபன் என்னும் மன்னன். ''உருத்திரன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும். சிவபெருமானை வென்று சாய்த்தவன் பகீரதன் ஆவான். துந்து என்னும் அசுரனைத் தன் கொடிய அம்பினால் துண்டாக்கியவன் துந்துமாரன் ஆவான். இவர்கள் உதித்த மரபில் உதித்தவன் இரகு என்பவன். இவன் தனது கட்டமைந்த விற்படையால் இந்திரனையும் எட்டுத்திக்குகளையும் போரிட்டு வென்ற பெருமைக்குரியவனாவான் என்பதாம்.

இங்கே ''உருத்திரன்'' என்ற சொல் அழித்தல் தொழிலையுடைய சிவபெருமானைக் குறித்து நின்றது. துந்து என்னும் அசுரனைத் துணித்தவன் குவலயாகவன் என்றும் கூறுவர். எனினும் சிவபெருமானைச் சாய்த்தவன் பகீரதன் என்பதற்கு உரிய புராணக்குறிப்பு கிடைக்கப்பெறவில்லை என்பது கருதத்தக்கது.

33. கார்முகப்படலம் பக்கஎண்-109/12 சதானந்தர்கூற்று

இமையவில் வாங்கிய ஈசன், ''பங்கு உறை
உமையினை இகழ்ந்தனன் என்ன'', ஓங்கிய
கமையறு சினத் தனிக் கார்முகம் கொளா,
சமை உறு தக்கனார் வேள்வி சாரவே. (677)

சதானந்த முனிவன் சிவதனுசுவின் வரலாற்றைத் தெரிவிக்கும் பாடல் இது.

இமயமலையையே வில்லாக வளைத்து முப்புரம் எரிக்க முயன்ற சிவபெருமான், தன் இடப்பாகம் உறைகின்ற உமையம்மையினைத் தக்கன் இகழ்ந்துவிட்டான் என்பதற்காக, மிக்க சினம்கொண்டு, பொறுமை இழந்து, இந்த வில்லைக் கையில் கொண்டு, அப்பொழுது தக்கன் நடத்திக்கொண்டிருந்த வேள்விச் சாலையை அடைந்தான்.

இங்கே ''இமையவில் வாங்கிய ஈசன்'' என்ற சொற்றொடர், இமயமலையையே வில்லாக வளைத்து முப்புரம் எரிக்கமுற்பட்டவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

34. கார்முகப் படலம் பக்கஎண்-109/13 சதானந்தர் கூற்று

''உக்கன பல்லொடு கரங்கள் ஓடினர்;
புக்கனர் வானவர் புகாத சூழல்கள்;
தக்கன் நல்வேள்வியில் தழலும் ஆறின;
முக்கண், எண் தோளவன், முனிவும் மாறினான்'' (678)

அவ்வாறு ஓங்கிய கமைஅறு சினத்தோடு சென்று தக்கன், சமையுறு வேள்வியைச் சார்ந்த சிவபெருமானைக் கண்டு தேவர்கள் எல்லோரும் பல்லும் கைகளும் கீழே சிந்தும்படி அஞ்சி ஓடினார்கள்; இதுவரையில் தாம்

பார்த்தறியாத இடங்களில் எல்லாம் சென்று ஒளிந்து கொண்டார்கள்; இப்போது தக்கன் இயற்றிய ஓமகுண்டத்தில் இருந்த நெருப்புக்கூட அவிந்துபோயிற்று. எனவே மூன்று கண்களையுடையவனும், எட்டுத் தோள்களையுடையவனுமான சிவபெருமான் தன் சினம் தணியப்பெற்றான்.

இங்கே ''முக்கண், எண்தோளவன்'' என்ற சொற்றொடர் மூன்று கண்களையுடையவன் என்றும் எட்டுத் தோள்களை உடையவன் என்றும் சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''பல்உக்கவன்'' சூரியன் என்றும், ''கரங்கள் உக்கவன்'' அக்னி என்றும் கூறுவர்.

''சந்திரனைத் தேய்த்தருளி, தக்கன் வேள்வியினில்,
இந்திரனைத் தோள் விரித்திட்டு, எச்சன் தலையரிந்து,
அந்தரமே செல்லும் அலர் கதிரோன் பல் தகர்த்துச்
சிந்தத்திசை திசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தாப்பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதும் காண் அம்மானாய்!''

என்பது திருவாசகம்

35. கார்முகப் படலம். பக்களண்-109/14 சதானந்தர் கூற்று

''தாளுடை வரிசிலை, சம்பு, உம்பர்தம்
நாள் உடைமையின், அவர் நடுக்கம் நோக்கி, இக்
கோளுடை விடையனான் குலத்துள் தோன்றிய
வாளுடை உழவன் ஓர் மன்னன்பால் வைத்தான்'' (679)

அந்த நீண்ட அடித் தண்டையுடைய கட்டமைந்த வில்லை, சிவபெருமான், தேவர்களுக்கு வாழ்நாள் மிக்கு இருந்தமையையும், அவர்களுடைய அச்சம் கலந்த நடுக்கத்தையும் நோக்கி அவர்களை அதற்குமேல் அப்பொழுது ஒன்றும் செய்யாது, அந்த வில்லை இந்தக் காளைபோன்ற சனகனின் குலத்தில் உதித்த முன்னோனாகிய தேவராதன் என்னும் மன்னனிடம் கொடுத்துவைத்தான்''

இங்கே ''சம்பு'' என்ற சொல் சிவபெருமானைக் குறிப்பதாகும். வில்லேர் உழவர், சொல்லேர் உழவர் என்பதுபோல, இங்கே வாளேர் உழவர் என்று கவிஞன் பயன்படுத்தியிருப்பதை நோக்குக.

36. கார்முகப் படலம் - பக்க எண்-109/15 சதானந்தர் கூற்று

''கார்முக வலியை யான் கழறல் வேண்டுமோ?
வார்சடை அரன் நிகர் வரத! நீ அலால்,
யார் உளர் அறிபவர்? இவற்குத் தோன்றிய
தேர்முக அல்குலாள் செவ்வி கேள்'' எனா. (680)

''இந்த வில்லின் ஆற்றலை நான் எடுத்துக் கூறவேண்டுமோ? நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமானை ஒத்த தன்மைகள் பொருந்திய முனிவனே! விசுவாமித்திர! உன்னைத்தவிர இந்த வில்லின் வரலாற்றை அறிந்தவர்கள் யார் இருக்கிறார்கள்? இந்தச் சனக மன்னனுக்குத் தோன்றிய சீதாதேவியின் சிறப்பினைக் கேட்டருள்வாயாக!'' என்று சதானந்தமுனிவன் விசுவாமித்திரனிடம் கூறுகிறான்.

இங்கே ''வார்சடை அரன்'' என்பது நீண்ட சடைமுடியை உடையவன் என்று சிவபெருமானைக் குறித்து நின்றது என்க.

37. கார்முகப் படலம் - பக்கஎண்-110/20 சதானந்தர் கூற்று

''கலித் தானைக் கடலோடும் கைத் தானக் களிற்றரசர்
ஒலித்து ஆனை எனவந்து, மணம் மொழிந்தார்க்கு எதிர் ''உருத்த
புலித்தானை, களிற்று உரிவைப் போர்வையான் வரிசிலையை
வலித்தானே மங்கை திருமணத்தான்'' என்று யாம் வலித்தேம்''
(685)

''கடல் ஒலிப்பதுபோலப் பிளிறுவதும், மதநீர் பெருக்கும் இயல்புடையதுமான யானைப்படைகளை உடைய அரசர்கள் எல்லோரும் பேராரவாரத்தோடு வந்து சீதாதேவியை மணம்முடித்துத் தரும்படி வேண்டினார்கள். அப்படிக் கேட்டவர்களுக்கு நாங்கள் ''மிக்க சினம்கொண்ட புலியின் தோலை இடுப்பில் அணிந்திருப்பவனும், யானையின் தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்தியிருப்பவனுமாகிய சிவபெருமானின் இந்தச் சிவதனுசை முறிப்பவனுக்கே சீதாதேவியை மணம்முடித்துக் கொடுப்போம்'' என்று உறுதியாகச் சொல்லிவிட்டோம்'' என்று சதானந்த முனிவன் வில்லின் வரலாற்றையும், சீதாதேவியை மணந்துகொள்ள அவர்கள் வைத்திருக்கும் நிபந்தனையையும் விசுவாமித்திர முனிவர்க்கு எடுத்துரைத்தான்.

இங்கே ''உருத்த புலித்தானை, களிற்று உரிவைப் போர்வையான்'' என்பன புலித்தோலை அரைக்கசைத்து இருப்பவனும், யானையின் தோலை விரித்துப் போர்வையாகப் போர்த்தியிருப்பவனும் என்று சிவபெருமானைக் குறித்த சொற்றொடர்கள் ஆகும் என்க.

38. கார்முகப் படலம் - பக்கஎண்-110/23 சதானந்தர் கூற்று

''மல்காக்கும் மணிப்புயத்து மன்னன் இவன், மழவிடையோன்
வில்காக்கும் வாள் அமருள் மெலிகின்றான் என இரங்கி,
எல்காக்கும் முடி விண்ணோர் படை ஈந்தார் என, வேந்தர்
அல்காக்கை கூகையைக்கண்டு அஞ்சினவாம் என அகன்றார்''
(688)

''இவ்வாறு சீதாதேவியை மணம்முடிக்க வேண்டுமென்றால் சிவதனுசை முறிக்கவேண்டும் என்று ஒரு நிபந்தனையையறிந்த சிற்றரசர்கள் சிலர்வந்து முயற்சி செய்து தோற்றுப்போனார்கள். இளமையான காளைவாகனத்தை யுடைய சிவபெருமான் கைக்கொண்ட சிவதனுசுவினால் பகைவருடன் ஏற்பட்ட போரில் அழகிய தோள்களையுடைய சனகமன்னனின் படைகள் குறைந்துபோனதால், சனகன் தளர்வுற்றுப் போகின்றானே என்று இரக்கம் கொண்டு, விண்ணுலகத்துத் தேவர்கள் தம் படைப்பெருக்கத்தை அவனுக்கு அனுப்பி உதவினர். இப்படை எழுந்து வந்ததும், கரிய காக்கைக் கூட்டம் கோட்டான்களின் கூட்டத்தைக்கண்டு அஞ்சிநடுங்கி ஓடிப்போவதைப் போலச் சிற்றரசர்கள் எல்லோரும் மிதிலையை விட்டுத் தலைதெறிக்க ஓடிப்போனார்கள்'' என்கிறான் சதானந்தன்.

இங்கே ''மழவிடையோன்'' என்பது இளமையான இடப வாகனத்தைச் செலுத்துபவனான சிவபெருமானைக் குறிக்கும். ''பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது'' என்ற குறள்-481 இங்கு ஒப்புநோக்கத் தகும்.

39. கார்முகப் படலம். பக்கஎண்-111/30 கவிக்கூற்று

''வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்,
''கொள்'' என முன்பு கொடுப்பதை யல்லால்,
வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து, இப்
பிள்ளைமுன் இட்டது பேதைமை'' என்பார். (695)

மிதிலை மக்கள் இந்த நிபந்தனையை விதித்த சனகமன்னனைப் பலவாறும் ஏசினார்கள்; ''அவன் உண்மையிலேயே தன்மகள் சீதாதேவிக்கு மணம்முடிப்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவன் என்று சொன்னால், இந்தப் பேரழகு வாய்ந்தவனைப் பார்த்தவுடன் ''இந்தா! என் மகளை நீ மணம் செய்துகொள்'' என்று மனமுவந்து அவளுக்கு மணம்முடித்து வைப்பதை விட்டுவிட்டு, கங்கையின் வெள்ளப்பெருக்கைத் தன் சடாமுடியில் தாங்கித் தரித்துக்கொண்டவனான சிவபெருமானுடைய சிவதனுசை எடுத்து இவன்முன்னால் வைத்து, இதை முறித்தால்தான் திருமணம் நடக்கும் என்று கூறுவது அறிவுடைமையாகாது; முட்டாள்தனமாகும்'' என்று பேசிக்கொள்கிறார்கள் என்பதாம்.

இங்கே ''வெள்ளம் அணைத்தவன்'' என்பது ஆகாய கங்கையின் வெள்ளப்பெருக்கைத் தன் சடைமுடியில் தாங்கித் தரித்துக் கொண்டிருப்பவனாகிய சிவபெருமானைக் குறிக்கும்.

40. கார்முகப் படலம். பக்கஎண்-116/60 நீலமாலை கூற்று

''பூண் இயல் மொய்ம்பினன், புனிதன் எய்தவில்
காணிய வந்தனன்'', என்ன, காவலன்
ஆணையின் அடைந்த வில் அதனை, ஆண்தகை
நாண் இனிது ஏற்றினான்; நடுங்கிற்று உம்பரே'' (725)

இராமபிரான் சிவதனுசை முறித்த செய்தியை நீலமாலை என்னும் தோழிவந்து சீதாதேவியிடம் மகிழ்வுடன் ''தோள்வளை போன்ற அணிகலன்களை அணிந்த வலிமைநிறைந்த ஒருவன், தூய்மையான சிவபெருமான் முன்பு செலுத்திய சிவதனுசைக் காணும்பொருட்டு வந்தான் அல்லவா? அவன் நம்தலைவன் சனகமன்னன் கூறிய ஆணையின்படி கொண்டுவந்து வைக்கப்பட்ட அந்த வில்லை, ஆண்மை நிறைந்தவனான இவன், நாண்ஏற்றி எளிதாக வில்லை முறித்துவிட்டான். அவ்வொலியைக்கேட்டு தேவருலகமே நடுங்கிவிட்டது'' என்கிறாள் நீலமாலை.

இங்கே ''**புனிதன்**'' என்பது தூய்மையானவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்து நின்றது.

41. எழுச்சிப்படலம். பக்கஎண்-118/5 தசரதன் கூற்று

வெற்றிவேல் மன்னவன், ''தக்கன் வேள்வியில்,
கற்றைவார் சடைமுடிக் கணிச்சி வானவன்
முற்றஏழ் உலகையும் வென்ற மூரிவில்
இற்ற பேரொலிகொல் அன்று இடித்தது ஈங்கு?'' என்றான்.
(736)

இராமபிரான் மிதிலையில் வில்லைமுறித்த செய்தியைச் சனகனின் தூதுவர்கள் அயோத்தி சென்று தசரதனுக்கு அறிவித்தார்கள். அதனைக்கேட்ட வெற்றிபொருந்திய வேற்படையை உடைய தசரதச் சக்கரவர்த்தி ''அன்று தக்கனது யாகத்தில், நீண்ட சடைமுடியையும், மழுப்படையையும் ஏந்திய தேவர்தலைவனாகிய சிவபெருமான் ஏழு உலகங்களையும் வெல்லுவதற்காகக் கைக்கொண்ட வலிமைவாய்ந்த அந்த வில் இற்று விழுந்ததால் எழுந்த பேரோசைதான் அன்று இங்கு இடிபோன்று ஒலித்ததோ?'' என்று கேட்டு அகம்மிக மகிழ்ந்தான் என்பதாம்.

இங்கே ''**கற்றைவார் சடைமுடிக் கணிச்சி வானவன்**'' என்பது திரட்சியும், நீட்சியும் உடைய சடைமுடியையும் மழுவாயுதத்தையும் தாங்கிய தேவர்தலைவன் என்று சிவபெருமானைக் குறிப்பதாகும்.

42. சந்திர சயிலப்படலம். பக்களண்-132/19 கவிக்கூற்று

மண்உற விழுந்து, நெடுவான்உற எழுந்து,
கண்ணுதல் பொருந்த வரு கண்ணனில்வரும், கார்
உண்நிற நறும்பொடியை வீசி, ஒருபாகம்
வெண்நிற நறும்பொடி புனைந்த மதவேழம். (831)

இராமபிரான் மிதிலையில் வில்லை முறித்த செய்தியைக் கேட்ட தசரதன் அயோத்தியிலிருந்து படை, பரிவாரங்கள், மக்கள், தேவியர், புடைசூழ எழுந்து மிதிலை நோக்கிச் செல்லும்வழியில் சந்திரசயில மலையில் தங்குகின்றனர். அவ்வாறு போகும்பொழுது ஒரு யானை கீழே புழுதியில் விழுந்துவிடுகிறது; பின் தட்டுத்தடுமாறி எழுந்து தனது துதிக்கையால் ஒரு பக்கம் படிந்திருந்த புழுதியைத் துடைத்துவிட்டது; அந்தப்பக்கம் அதன் இயற்கையான கரியநிறத்தோடு தோன்றிற்று. மற்றொருபக்கம் துடைக்காததனால் அது வெண்மைநிறப் புழுதிபடிந்து வெள்ளிய நிறம் கொண்டதாக இருந்தது. இது எப்படி இருக்கிறது என்றால் வெண்ணிறச் சாம்பற்பொடியை உடலெங்கும் பூசியுள்ள சிவபெருமானைத் தனது ஒருபாகத்தில் வைத்திருக்கும் கரிய திருமாலைப்போலத் தோற்றமளித்தது என்கிறான் கவிஞன்.

இவ்வாறு சிவபெருமானும் திருமாலும் ஒருசேரக் காட்சிதரும் உருவத்தைச் சங்கரநாராயணன் என்கிறோம் நாம். ''பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து, பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து, கறைதங்கு வேல் தடங்கண் திருவை மார்பில் கலந்தவன் திருமால்'' என்று பேசுகிறார் திருமங்கையாழ்வார். இதேபோல முன்பும் சிவபெருமானைப் போன்ற வெண்ணிறம் கொண்ட மேகம் கடலினின்றும் நீரை முகந்து மேலே சென்று பின் கருநிறம் கொண்ட திருமால்போல மழையைப் பெய்விக்கிறது என்று முதல் பாடலில் கூறியதையும் ஒப்புநோக்கலாம்.

43. வரைக்காட்சிப் படலம். பக்களண்-136/15 கவிக்கூற்று

நிலமகட்கு அணிகள் என்ன, நிரைகதிர் முத்தம் சிந்தி,
மலைமகள் கொழுநன் சென்னி வந்து வீழ் கங்கை மான,
அலகுஇல் பொன் அலம்பி ஓடி, சார்ந்து வீழ் அருவி மாலை,
உலகு அளந்தவன்தன் மார்பின் உத்தரீயத்தை ஒத்த. (857)

இவ்வாறு மிதிலையைநோக்கிச் செல்லும் தசரதன்படை அங்கேயிருந்த சந்திர சயில மலையில் தங்குகின்றது. அங்கே மலையினின்றும் பொழிகின்ற ஒரு அருவியின் அழகை வருணிக்கிறான் கவிஞன்.

பூமிதேவிக்கு அணிவிக்கின்ற அணிகலன்கள்போல ஒளியோடு கூடிய முத்துக்கள் எங்கும் சிந்திச்சிதறவும், மலைமகளாகிய பார்வதியின் கணவனான சிவபெருமானின் சடைமுடியிலிருந்து இறங்கி விழுகின்ற கங்கை

வெள்ளத்தைப்போல, அளவற்ற பொன்துகள்களை வாரியிறைத்துக்கொண்டு மலைமேல் இருந்து வேகமாய்க் கீழே கொட்டும் அருவி, ஓங்கி உலகளந்த உத்தமனான திருமாலின் மார்பில் அணிந்திருக்கும் மேலாடைபோலத் தோற்றிற்று.

மலைமேல் இருந்து விழும் வெள்ளிய அருவிக்குத் திருமால் மார்பில் அணிந்திருக்கும் வெண்பட்டாடையாகிய மேலாடை உவமை. இங்கே ''மலைமகள் கொழுநன்'' என்பது பார்வதிதேவியின் கணவன் என்று சிவபெருமானைக் குறிக்கும்.

44. நீர்விளையாட்டுப் படலம் பக்களண்-147 / 2கவிக்கூற்று

அங்கு, அவர், பண்ணை நல் நீராடுவான் அமைந்த தோற்றம்,
கங்கைவார் சடையோன் அன்ன மாமுனி கனல, மேல்நாள்,
மங்கையர் கூட்டத்தோடும் வானவர்க்கு இறைவன் செல்வம்
பொங்குமா கடலில் செல்லும் தோற்றமே போன்றதன்றே!
(930)

அயோத்தியிலிருந்து மிதிலைநோக்கி எழுந்து சென்ற படைகளில் இருந்த ஆடவரும் பெண்டிரும் சந்திரசயில மலையைத் தாண்டி, சோணை நதியில் நீராடுதற்காகப் புகுகின்றனர். இந்தத்தோற்றம் கங்கையைத்தன் நீண்ட சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமான் போன்ற சிறந்த முனிவனான துருவாசன், முன்பு இந்திரன்மேல் கோபம்கொண்டு சபிக்க, அதனால் தேவர்தலைவனான இந்திரன் தனது பெருஞ்செல்வத்தோடும் தேவமகளிரொடும் பொங்கி எழுகின்ற அலைகள் நிறைந்த கடலில் சென்று வீழ்ந்ததுபோலத் தோன்றியது என்கிறான் கவிஞன்.

இங்கே ''கங்கைவார் சடையோன்'' என்பது கங்கையைத்தன் சடைமுடியில் சூடியிருக்கும் சிவபெருமானைக் குறித்து நின்றது. துருவாசருக்குச்சிவபெருமான் ஒப்பு. இதே சொற்றொடர் அப்பர் தேவாரத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதை நோக்குக. ''கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்'' என்பது அப்பர்தேவாரம்.

45. உண்டாட்டுப்படலம் பக்களண்-152/3 கவிக்கூற்று

ஆறெலாம் கங்கையே ஆய; ஆழிதாம்
கூறு பாற்கடலையே ஒத்த; குன்றெலாம்
ஈறுஇலான் கயிலையே இயைந்த; என்இனி
வேறு நாம் புகல்வது, நிலவின் வீக்கமே? (964)

சந்திரசயில மலையைத் தாண்டி, சோணையாற்றில் நீராடி முடித்துவிட்டுக் களைப்பாறுகின்றனர் அயோத்தி மக்கள். அப்பொழுது பரந்து பெருகிய நிலவின் தோற்றத்தைப் பற்றிக் கூறும் பாடல் இது.

உலகில் உள்ள ஆறுகள்எல்லாம் கங்கையாற்றைப் போன்றே வெண்ணிறமாய்த் தோன்றின. கடல்கள் எல்லாம் புகழ்ந்து உரைக்கப்படுகின்ற பாற்கடலைப்போலவே தோன்றின; மலைகள் எல்லாம் முடிவேயில்லாதவனாகிய சிவபெருமான் உறையும் வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையைப்போலவே தோன்றின. இதற்குமேல் நிலவின் விரிந்து பரந்த வெள்ளிய ஒளிப்பெருக்கை எப்படிக் கூறுவது?'' என்று கேட்கிறான் கவிஞன்.

இங்கே ''ஈறுஇலான்'' என்பது ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியான சிவபெருமானைக் குறித்ததாகும். ''ஈறிலாதவன் ஈசன் ஒருவனே'' என்பது தேவாரம்.

46. எதிர்கொள் படலம் - பக்கஎண்-164/19 கவிக்கூற்று

இன்னவாறு இருவரும், இனியவாறு ஏக, அத்
துன்னு மா நகரினின்று எதிர்வரத் துன்னினான்;
தன்னையே அனையவன், தழலையே அனையவன்,
பொன்னின் வார்சிலை இறப் புயம் நிமிர்த்து அருளினான்.
(1047)

இவ்வாறு தசரதன்படை மிதிலை வந்துசேருவதற்குமுன்னே, மிதிலை மன்னன்ான சனகன் அவனை எதிர்கொண்டு அழைப்பதற்காக முன்வந்து, தனது தேரில் தசரதச்சக்கரவர்த்தியை ஏற்றிக்கொண்டு இருவரும் இனிதாக வருகின்றபோது, தனக்குத்தானே நிகரானவனும், நெருப்பையே நிகர்த்த சிவபெருமானின் பொன்போன்ற நிறமுடையதும் மேருமலைபோன்ற அசைக்கலாகா வன்மைபடைத்ததுமாகிய நீண்ட தனுசை வளைக்கும் ஆற்றல்பெற்ற இராமபிரான், தனது தோள்களை நிமிர்த்திக்கொண்டு, தந்தையை வரவேற்க வந்து சேர்ந்தான்.

இங்கே ''தழலையே அனையவன்'' என்பது நெருப்புப்போன்ற ஒளிபடைத்த மேனியை உடையவனான சிவபெருமானைக் குறித்து நின்றது. ''எரிபோல் மேனிப்பிரான்'' என்பது தேவாரம். ''தன்துணை ஒருவரும் தன்னின் வேறிலான்'' ஆகிய இராமபிரானைக் கவிஞன் இங்கே ''தன்னையே அனையவன்'' என்றார் என்க.

47. எதிர்கொள் படலம் - பக்கஎண்.165/25. கவிக்கூற்று

''கற்றைவார் சடையினான் கைக்கொளும் தனுஇற,
கொற்ற நீள்புயம் நிமிர்த்தருளும் அக்குரிசில், பின்
பெற்ற தாயரையும், அப்பெற்றியின் தொழுது, எழுந்து,
உற்றபோது, அவர்மனத்து உவகை, யார் உரை செய்வார்?''
(1053)

''அடர்ந்த நீண்ட சடைமுடியை உடையவனான சிவபெருமான் கைக்கொண்ட சிவதனுசை முறிக்கும் பொருட்டு வெற்றிபொருந்திய நீண்ட தோள்களை நிமிர்த்தி எழுந்தருளும் அந்தப் பெருமையிற் சிறந்தவனான இராமபிரான், தன் தந்தை தசரதனை வணங்கியதுபோலவே தன் தாயர் மூவரையும் வணங்கி எழுந்து அவர்களின் பக்கத்தில் வந்துநின்ற பொழுது, அந்தத்தாய்மார்கள் அடைந்த மகிழ்ச்சியின் திறத்தை எடுத்துரைக்க வல்லார் யார் இருக்கிறார்கள்?'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''கற்றைவார் சடையினான்'' என்பது அடர்ந்த நீண்ட சடைமுடியை உடைய சிவபெருமானைக் குறிக்கும். ''கற்றைவார் சடையான் நெற்றிக்கண்ணினைச் சிறிதே காட்ட'' என்பது பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம்.

48. கோலம்காண் படலம். பக்களண்-176/6 கவிக்கூற்று

''வெள்ளத்தின் சடிலத்தான்தன் வெஞ்சிலை இறுத்த வீரன்
தள்ளத் தன் ஆவிசோர, தனிப்பெரும் பெண்மை தன்னை,
அள்ளிக்கொண்டு அகன்ற காளை அல்லன் கொல்? ஆம்கொல்?'' என்பாள்
உள்ளத்தின் ஊசலாடும் குழைநிழல் உமிழ இட்டார். (1122)

மணப்பெண் சீதாதேவிக்குத் தோழியர்கள் அழகுபடுத்தி அணிகலன்களை அணிவிக்கும்போது குண்டலம் அணிவித்த காட்சியைக் கூறுகிறான் கவிஞன்.

''கங்கை வெள்ளத்தைத் தனது சடைமுடியில் தேக்கித் தாங்கிக்கொண்டிருக்கும் சிவபெருமானின் கொடிய வன்மையான வில்லை முறித்துப்போட்ட வீரனாகிய இவன்தான், முன்பு தன்னுடைய தனித்தன்மை வாய்ந்த ஒப்பற்ற பெண்மைத் தன்மையை அள்ளிக்கொண்டு போன இராமபிரானோ? அல்லது வேறு ஒருவனோ?'' என்று உள்ளம் தள்ளாடிச் சோர்வுற்று ஊசலாடுகின்ற சீதாதேவிக்கு, அவள் உள்ளத்தைப்போலவே இங்குமங்கும் ஊசலாடி ஒளிவீசுகின்ற காதணிகளை காதுகளில் அணிவித்தனர் தோழிமார்கள்'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''வெள்ளத்தின் சடிலத்தான்'' என்பது கங்கைப்பெருக்கைத் தன் சடைமுடியில் தேக்கி வைத்திருக்கும் சிவபெருமானைக் குறித்தது என்க.

49. கடிமணப்படலம் பக்களண்-190/53 கவிக்கூற்று

கார்விடக் கறையுடை, கணிச்சி, வானவன்
வார்சடைப் புடையின் ஓர்மதி மிலைச்ச, தான்
சூர் சுடர்க்குலம் எலாம் சூடினான் என,
வீரபட்டத்தொடு திலகம் மின்னவே. (1212)

மிதிலையில் இராமபிரான் வீரபட்டம் அணிந்து மணக்கோலம் பூண்டு மணவறைக்கு வரும் காட்சி இது.

கரிய நஞ்சுக்கறையைத் தன் கழுத்தில் கொண்டவனும், மழுவாயுதத்தை ஏந்தியவனும், தேவர்கள் தலைவனானவனும், நீண்ட சடைமுடியின் பக்கத்தில் ஒப்பற்ற பிறைச்சந்திரனைக் கொண்டிருப்பவனும் ஆகிய சிவபெருமான்போல இராமபிரான், தெய்வத்தன்மை பொருந்திய ஒளிவீசும் வீரபட்டயம் என்ற அணியும், நெற்றியில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் திலகமும் அணிந்த வண்ணம் வந்து சேர்ந்தான்.

இங்கே ''கார்விடக் கறையுடைக் கணிச்சி வானவன் வார்சடைப் புடையின் ஓர் மதிமிலைச்ச'' என்பது, சிவபெருமானின் நஞ்சுண்ட கண்டத்தையும், அவனுடைய மழுவாயுதத்தையும், அவனுடைய நீண்ட சடைமுடியையும், அவன் சூடியிருக்கின்ற ஒப்பற்ற பிறைச்சந்திரனையும் குறிக்கும் என்க. இங்கே சிவபெருமான் ஒளிக்கு இராமபிரான் ஒளி இப்போது உவமை.

50. கடிமணப்படலம் - பக்கஎண்.194/82 கவிக்கூற்று

இந்திரன் சசியொடும் எய்தினான்; இளஞ்
சந்திரமௌலியும் தையலாளொடும்
வந்தனன்; மலர் அயன் வாக்கினாளுடன்
அந்தரம் புகுந்தனன், அழகு காணவே. (1241)

இராமபிரான் - சீதாதேவியின் திருமணவிழாக் காண இந்திரன், தன் மனைவி இந்திராணியுடன் வந்து சேர்ந்தான். இளமையான பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் சூடியிருக்கும் சிவபெருமான், தன் மனைவி உமையம்மையுடன் வந்து சேர்ந்தான்; தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் தன் மனைவி நாமகளாகிய சரஸ்வதி தேவியுடன் இத்திருமண அழகைக்காண வானவெளியிலேயே நின்றிருந்தான்.

இங்கே ''இளஞ்சந்திரமவுலியும்'' என்பது இளமையான பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமானைக் குறித்து நின்றது என்க.

51. பரசுராமப்படலம். பக்கஎண்-199/11 கவிக்கூற்று

பாழிப்புயம் உயர்திக்கிடை அடையப் புடை படர,
சூழிச் சடைமுடி விண்தொட, அயல் வெண்மதி தோற்ற,
ஆழிப்புனல், எரி, கால், நிலம், ஆகாயமும், அழியும்
ஊழிக்கடை முடிவில், தனிஉமை கேள்வனை ஒப்பான். (1273)

இராமபிரான் திருமணம்முடிந்து மிதிலையினின்று நீங்கி, தசரதன் தன் மக்களோடும், மருமக்களோடும், படையினருடனும் அயோத்தி நோக்கி வருகின்றபோது தீயநிமித்தங்கள் தோன்ற, ஒரு நிமித்திகனை அழைத்து,

தசரதன் "என்ன நிகழ்கின்றது?" எனக் கேட்க, அவன் "இன்றே வரும் இடையூறு, அது நன்றாய் விடும்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, வானகம் இருள்சீறிட, மழுவுடையானாகிய பரசுராமன் வந்து தோன்றுவதைக் கூறும் பாடல் இது.

வலிய தோள்கள் உயர்ந்த எட்டுத்திக்குகளையும் சென்றடையும் வண்ணம் உயர்ந்து தோன்றவும், அவனுடைய சடைமுடிகள் பக்கங்களிலெல்லாம் படர்ந்து அதன் உச்சி ஆகாயத்தைத் தொடும்படி விரிந்து பரவவும், அருகில் வெண்மையான சந்திரன் தோன்றவும், நீர், நெருப்பு, காற்று, மண், விண் என ஐம்பூதங்களும் அழிந்து தோன்றும் ஊழி இறுதிக்காலத்தில் தனித்துத் தோன்றும் உருத்திரனாகிய, உமையம்மனின் கணவனாகிய சிவபெருமான் போன்று தோன்றினான் பரசுராமன் என்பதாம்.

இங்கே நேராக "**உமைகேள்வன்**" என்பது உமையம்மையின் துணைவனான சிவபெருமானைக் குறிக்கும். சிவபெருமானுடைய சடைமுடி விரிந்து பரந்திருப்பதுபோலவும், அவன் பிறைச்சந்திரனைச் சூடியிருப்பதுபோலவும் பரசுராமனின் சடைமுடியும் விண்ணைத் தொடுமளவு உயர்ந்து பரந்து நின்றது எனவும், அவ்வாறு அது உயர்ந்து நின்றது ஆகாயத்திலுள்ள பிறைச்சந்திரன் அவன் அருகிலேயே இருப்பதுபோன்று தோன்றியது என்று கூறுவதும் சிவபெருமானின் சடைமுடியையும், அவன் தரித்திருக்கின்ற பிறைச்சந்திரனையும் குறிப்பதாகவும் கொள்ளவேண்டும்.

52. பரசுராமப் படலம்-பக்கஎண்.200/19 தசரதன் கூற்று

அவன் அன்னது பகரும் அளவையின், மன்னவன் அயர்வான்;
"புவனம் முழுவதும் வென்று, ஒரு முனிவற்கு அருள்புரிவாய்!
சிவனும், அயன், அரியும் அலர்; சிறுமானிடர் பொருளோ?
இவனும், எனது உயிரும், உனது அபயம் இனி" என்றான்.
(1281)

அவ்வாறு பரசுராமன் சினந்தெழுந்த சமயத்தில் சக்கரவர்த்தியாகிய தசரதன் சற்றுத்தளர்ந்து, பரசுராமனை நோக்கி, "இந்த உலகங்கள் எல்லாவற்றையும் வென்று, ஒப்பற்ற காசியபமுனிவரிடத்து ஒப்படைத்து அருள்புரிந்தவனே! உனக்கு சிவபெருமானும், பிரமதேவனும், திருமாலும் ஒரு பொருட்டோ? ஆனால் இவர்கள் சிறிய மானிடர்கள், இவர்கள்மீது நீ சினம் கொள்ளலாமா? இப்பொழுது முதல் இவ்விராமபிரானும், எனது உயிரும் உன்னுடைய அடைக்கலப்பொருளாகும்" என்று இரந்து இறைஞ்சினான்.

இங்கேயும் மும்மூர்த்திகளையும் குறிக்கும்போது சிவபெருமானைச் சிவன் என்று நேர் சொல்லிலேயே குறிப்பிட்டிருப்பதை நோக்கலாம்.

53. பரசுராமப் படலம். பக்களண்-201/25. பரசுராமன் கூற்று

மானம் மணிமுடி மன்னவன், நிலை சோர்வுறல் மதியான்,
தான் அந்நிலை உறுவான் உறுவினை உண்டது தவிரான்;
''ஆனம் உடை உமை அண்ணலை அந்நாள் உறுசிலைதான்
ஊனம் உளது; அதன் மெய்ந்நெறிகேள்!'' என உரைப்பான்.
(1287)

அவ்வாறு அபயம்கேட்டு இறைஞ்சிய தசரதனின் தளர்ச்சியை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது, தானே அத்தகைய தளர்வுநிலையை எய்தப்போகிறோம் என்று அந்நிலையையும் தவிர்க்க இயலாதவனாய்ப் பரசுராமன் தசரதனை நோக்கி, ''இடபவாகனத்தையுடையவனும், உமையம்மையைத் தன் ஒரு பக்கத்தில் கொண்டுள்ளவனுமான பெருமைக்குரிய சிவபெருமான் முற்காலத்தில் கொண்டிருந்த வில் சற்றுப் பழுதடைந்ததாகும். அது உனக்குத் தெரியாது அதன் உண்மையான வரலாற்றைக் கூறுகிறேன் கேட்பாயாக!'' என்று கூறத்தொடங்குகிறான்.

இங்கே **''ஆனம் உடை உமை அண்ணல்''** என்பது இடபவாகனத்தைக் கொண்டவனும், உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டவனுமாகிய பெருமைக்குரிய சிவபெருமானைக் குறித்தது என்க. ''ஆன்'' என்ற சொல் பசுவைக்குறிக்கும். அம்சாரியை பெற்று ஆனம் என வந்தது. இதே ''ஊனவில்'' என்ற சொல்லை இராவணன் பின்னால் இராமபிரானிடம் கூறப்போகிறான் என்பதும் இங்கே நினைவுகொள்ளத் தகும்.

54. பரசுராமப் படலம் - பக்களண்.202/27 பரசுராமன் கூற்று

''ஒன்றினை உமையாள் கேள்வன் உவந்தனன்; மற்றை ஒன்றை,
நின்று உலகளந்த நேமி நெடியமால் நெறியின் கொண்டான்;
என்று இது உணர்ந்த விண்ணோர், ''இரண்டினும் வன்மை எய்தும்
வென்றியது யாவது?'' என்று விரிஞ்சனை வினவ, அந்நாள்''.
(1289)

''தேவர்சிற்பியான விசுவகருமன் இரண்டு விற்களை ஒன்றேபோல் செய்து கொடுத்தான். அவற்றில் ஒன்றினை, உமையம்மையின் கணவனான சிவபெருமான் மகிழ்வோடு பெற்றுக்கொண்டான். மற்றொன்றினை ஓங்கி உலகளந்தவனும், சக்கரப்படையைக் கைக்கொண்டிருப்பவனுமாகிய திருமால் முறையாகப் பெற்றுக்கொண்டான். இதனை அறிந்த தேவர்கள், பிரமதேவனிடம் சென்று ''இவ்விரண்டு விற்களுள் மிக்க வன்மை வாய்ந்தது எது?'' என்று கேட்டனர்'' என்கிறான் பரசுராமன்.

இங்கே **''உமையாள் கேள்வன்''** என்பது உமையம்மையின் கணவன் என்று சிவபெருமானைக் குறித்ததாகும்.

55. பரசுராமப் படலம் - பக்கஎண்.202/29 பரசுராமன் கூற்று

''இருவரும், இரண்டு வில்லும் ஏற்றினர்; உலகம் ஏழும்
வெருவர, திசைகள் பேர, வெங்கனல் பொங்க, மேன்மேல்,
செரு மலைகின்ற போழ்தில், திரிபுரம் எரித்த தேவன்
வரிசிலை இற்றதாக, மற்றவன் முனிந்து மன்னோ!'' (1291)

''அவ்விருவரும் தத்தம் வில்லின் நாண் ஏற்றினர். அதுகேட்டு ஏழு உலகங்களும் அஞ்சி நடுங்கின; எல்லாத் திக்குகளும் நிலைகுலைந்தன; கோபத்தீ பொங்கியெழுந்தது; மேலும் மேலும் இருவரும் போர்புரிகின்ற சமயத்தில், முப்புரங்களையும் எரித்தவனான சிவபெருமானின் வில் சற்று இற்றுப்போனது. அதுகண்டு சிவபெருமான் சினம் கொண்டான்'' என்கிறான் பரசுராமன்.

இங்கே ''திரிபுரம் எரித்த தேவன்'' என்பது முப்புரங்களையும் தன் புன்னகையாலேயே எரித்த வல்லமைபடைத்த சிவபெருமானைக் குறித்தது.

56. பரசுராமப் படலம் - பக்கஎண்.202/30 பரசுராமன் கூற்று

''மீட்டும் போர் தொடங்கும்வேலை, விண்ணவர் விலக்க, வல்வில்
நீட்டினன் தேவர்கோன் கை, நெற்றியில் கண்ணன்; வெற்றி
காட்டிய கரியமாலும், கார்முகம் அதனைப் பாரில்
ஈட்டிய தவத்தின் மிக்க இரிசிகற்கு ஈந்து போனான்'' (1292)

''திரும்பவும் இருவரும் போர்செய்யத் தொடங்கும்போது, அதனைத் தேவர்கள் விலக்கிவிட்டனர். எனவே நெற்றியில் கண்களையுடையவனான சிவபெருமான் தன்னுடைய வலிமைமிக்க சிவதனுசை தேவர்கள் தலைவனாகிய இந்திரனிடம் கொடுத்தான். அதுபோல் வெற்றிபொருந்திய கரியநிறமுடைய திருமாலும், தன்னுடைய வில்லை நிலவுலகில் மிக்க தவம் இயற்றிப் பெருமைபெற்ற இரிசிகன் என்னும் முனிவனிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

இங்கே ''நெற்றியில் கண்ணன்'' என்பது நெற்றிக்கண்ணை உடையவனாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

57. பரசுராமப் படலம் - பக்கஎண்.203/37 பரசுராமன் கூற்று

''நீதியாய்! முனிந்திடேல்; நீ இங்கு யாவர்க்கும்
ஆதி; யான் அறிந்தனென்; அலங்கல் நேமியாய்!
வேதியா! இறுவதே அன்றி, வெண்மதிப்
பாதியான் பிடித்த வில், பற்றப்போதுமோ?'' (1299)

அந்த வில்லை வாங்கி வளைத்த இராமபிரான் அவன் வேதவித்தகன் ஜமதக்னி முனிவன் புதல்வன் என்பதனாலும் அவன் இப்போது விரதம்

பூண்டிருப்பதனாலும், அவனைக் கொல்லாது விடுவதாகவும், எனினும் அந்த வில்லினுக்கு ஒரு இலக்கு வேண்டும் என்பதால் ''இலக்கு யாது'' எனப் பரசுராமனை வினவியதும், உண்மைநிலையையறிந்த பரசுராமன், அவனை வணங்கி ''நீதிநெறியில் நிற்பவனே! என்மீது சினம் கொண்டுவிடாதே. நீ இவ்வுலகில் உள்ளோர் எல்லோர்க்கும் மூலமுதல்வன் என்பதைத் தெரிந்துகொண்டேன். அசைந்தாடும் மலர்மாலையையும், சக்கரப்படையையும் கைக்கொண்டவனே! வேதங்கள் போற்றும் மேலோனே! வெண்மையான பிறைச்சந்திரனை அணிந்துள்ள சிவபெருமான் கைக்கொண்ட இந்த வில், இங்கு வளைக்கத் தகுந்ததேயன்றி உன் கையினால் பற்றுதற்குத் தகுதி வாய்ந்ததோ?'' என்று வியந்து இராமபிரான் ஆற்றலைப் பாராட்டிப் பணிகிறான் என்பதாம்.

இங்கே ''வெண்மதிப்பாதியான்'' என்பது வெள்ளிய பிறைச்சந்தினைச் சூடியுள்ள சிவபெருமானைக் குறிக்கும் என்க. இங்கே ''வேதியா!'' என்றசொல்லை விளிச்சொல்லாகவே கொண்டிருக்கிறோம். காரணம் பின்னால் கும்பகருணனும் இராமபிரானை ''அரசர் உருக்கொண்டு அமைந்த வேதியா!'' என அழைக்கப்போகிறான் என்பதால், என்பதையும் கருத்துள் கொள்க.

இந்த 57 பாடல்களைத்தவிர, சென்னைக் கம்பன் கழகச் செம்பதிப்பில் மிகைப்பாடல்கள் என்று தரப்பெற்றிருக்கின்ற பாடல்களில், கீழ்க்காணும் 12பாடல்களில் சிவபெருமான் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவை மிகைப்பாடல்கள் எனப் பிரிக்கப்பட்டிருப்பதால் அவைகளுக்கான விளக்கங்கள் தரப்படவில்லை. எனினும் சிவபெருமானைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுவதால் பாடல்களை விட்டுவிடவும் மனம் ஒப்பவில்லை. எனவே பாடல்கள் மட்டும் தரப்பட்டிருக்கின்றன. பொருள் எளிதில் விளங்கும் பாடல்களாகவே இவை அமைந்திருக்கின்றன என்பதும் கருதத்தக்கது.

58. திருஅவதாரப் படலம். பக்கம்-211/5-2 கவிக்கூற்று

கறைமிடற்று அண்ணலும் கடவுளோர்களும்
மறைமுதற் கிழவனை வந்து நண்ணலும்,
முறைமையின் கடன்முறை முற்றி, முண்டகத்து
இறைவனும், அவரொடும் இனிதின் ஏகினான். (மி.பா.48)

59. திருஅவதாரப் படலம் பக்கம்-212/15-1 கவிக்கூற்று

வானவர் அம்முறை வழங்க, மாமதித்
தேனுறும் இதழிஅம் தெரியல் வேணியான்
ஆனவர் தமைக் கரம் அமைத்து, அங்கு ஐயனைத்
தான்முகம் நோக்கியே சாற்றல் மேயினான். (மி.பா.54)

60. அகலிகைப்படலம். பக்கம்-219/3-17 கவிக்கூற்று

வெய்ய மாமுனி வெகுளியால் விண்ணகம் முதலாம்
வையம் யாவையும் வறுமைநோய் நலிய, வானோரும்
தையல் பாகனும், சதுமுகக் கடவுளும், கூடி
செய்ய தாமரைத் திருமறு மார்பினைச் சேர்ந்தார். (மி.பா.115)

61. அகலிகைப்படலம். பக்கம்-220/3-24

வெருவும் ஆலமும் பிறையும் வெள்விடையவற்கு அளித்து,
தருவும் வேறுள தகைமையும் சதமகற்கு அருளி,
மருவு தொல்பெரு வளங்களும் வேறுற வழங்கி,
திருவும் ஆரமும் அணிந்தனன், சீதரமூர்த்தி. (மி.பா.122)

62. அகலிகைப்படலம்பக்களண்-220/3-28
விசுவாமித்திரன் கூற்று

''ஆயது இவ்விடம்; அவ்விடம் அவிர்மதி அணிந்த
தூயவன் தனக்கு உமைவயின் தோன்றியே, தொல்லை
வாயுவும் புனல் கங்கையும் பொறுக்கலா வலத்த
சேய் வளர்ந்தருள் சரவணம் என்பதும் தெரித்தான். (மி.பா.126)

63. அகலிகைப்படலம் பக்க எண்-221/5-7
விசுவாமித்திரன் கூற்று

மூளும் வெஞ்சினத்து அருந்தவன் முனிந்து, எரிவிழிப்ப,
பூளை சூடி தன் நகையினில் எயில் பொடிந்தனபோல்,
ஆளும் மைந்தர் ஆறு அயுதரும் சாம்பராய் அவிந்தார்;
வேள்வி கண்ட நல்வேந்தனுக்கு உரைத்தனர் வேயர்.
(மி.பா.133)

64. அகலிகைப் படலம் பக்களண்-222/5-17
விசுவாமித்திரன் கூற்று

''மாக மாநதி புவியிடை நடக்கின், மற்று அவள்தன்
வேகம் ஆற்றுதல் கண்ணுதற்கு அன்றி வேறு அரிதால்;
தோகை பாகனை நோக்கி, நீ அருந்தவம் தொடங்கு'' என்று
ஏகினான், உலகனைத்தும் எவ்வுயிர்களும் ஈன்றான். (மி.பா.143)

65. அகலிகைப்படலம். பக்களண்-222/5-18
விசுவாமித்திரன் கூற்று

மங்கை பாகனை நோக்கி, முன்மொழிந்தன வருடம்
தங்கு மாதவம் புரிதலும், தழல்நிறக் கடவுள்,
அங்கு வந்து, 'நின் கருத்தினை முடித்தும்' என்று அகன்றான்;
கங்கையைத் தொழ, காலம் ஐயாயிரம் கழித்தான். (மி.பா.144)

66. அகலிகைப்படலம். பக்களண்-223/5-19

விசுவாமித்திரன் கூற்று

ஒருமடக் கொடி ஆகிவந்து, ''உனது மாதவம் என்?
பொருபுனல் கொடி வரின், அவள் வேகம் ஆர் பொறுப்பார்?
அரன் உரைத்த சொல் விநோதம், மற்று இன்னும் நீ அறிந்து,
பெருகுநல் தவம் புரிக!'' என, வரநதி பெயர்ந்தாள்.
(மி.பா.145)

67. அகலிகைப் படலம். பக்களண்-223/5-20

விசுவாமித்திரன் கூற்று

கரந்தை, மத்தமொடு, எருக்குஅலர், கூவிளை, கடுக்கை,
நிரந்த பொற்சடை நின்மலக் கொழுந்தினை நினையா,
அரந்தை உற்றவன், இரண்டரை ஆயிரம் ஆண்டு
புரிந்து நல்தவம் பொலிதர, வரைஉறை புனிதன்
(குளகப்பாடல்) (மி.பா.146)

68. அகலிகைப்படலம் பக்களண்-223/5-23

விசுவாமித்திரன் கூற்று

உந்தி அம்புயத்து உதித்தவன் உறைதரும் உலகும்,
இந்திராதியர் உலகமும், நடுக்குற இரைத்து,
வந்து தோன்றினள் வரநதி; மலைமகள் கொழுநன்
சிந்திடாது, ஒரு சடையினின் கரந்தனன் சேர. (மி.பா.149)

69. அகலிகைப்படலம் பக்களண்-223/5-24

விசுவாமித்திரன் கூற்று

புல் நுனித்தரு பனிஎன வரநதி, புனிதன்
சென்னியில் கரந்து ஒளித்தலும், வணங்கினன் திகைத்து,
மன்னன் நிற்றலும், ''வருந்தல்; நம் சடையள் வான்நதி இன்று''
என்ன விட்டனன், ஒருசிறிது; அவனி போந்து இழிந்தாள்.
(மி.பா.150)

பாலகாண்டக் குறிப்பு நிறைவுற்றது

2. அயோத்தியா காண்டம்

70. மந்திரப்படலம்- பக்கம்-236 / 41 கவிக்கூற்று

மற்று, அவன் சொன்ன வாசகம் கேட்டலும், மகனைப்
பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில்
இற்ற அன்றினும், எறி மழுவாளன் இழுக்கம்
உற்ற அன்றினும், பெரியதோர் உவகையன் ஆனான். (1354)

தசரதன் தன் முதுமை கருதி தான் வனம் சென்று தவம் இயற்ற விரும்புவதாகவும், தன் மகன் இராமபிரான் இம்மாநில முடி தரித்து அரசனாக ஆகவேண்டும் எனவும், தன் விருப்பத்தை அமைச்சர்களிடம் தெரிவித்ததும், அமைச்சர்கள் அவன் கருத்திற்கு உடன்பட்ட பின்னர், குலகுரு வசிட்டன் எழுந்து தன் கருத்தைத் தெரிவித்தான். தசரதன் கருத்திற்கு அவன் உடன்பட்டதோடு, இராமபிரானின் சிறப்புக்களையும் எடுத்துரைத்தான். அதனைக் கேட்ட தசரதச் சக்கரவர்த்தியின் மனநிலையை எடுத்து உரைக்கும் பாடல் இது.

முன்பு தான் தவமிருந்து இந்த இராமபிரானைத் தன் மகனாகப் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும், பிறகு மிதிலையில் சிவபெருமானின் சிவதனுசுவை ஒடித்த செய்தியைக் கேட்டபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும், பின்னர் மழுப்படையை ஏந்தியவனான பரசுராமன், இராமபிரானின் வில்லாற்றலுக்குத் தோற்றுத் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு இராமபிரானைப் பணிந்து வணங்கிச்சென்றபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும், இவை எல்லாவற்றையும் விடப் பெரியதோர் மகிழ்ச்சியை இப்போது அடைந்தான் என்கிறான் கவிஞன். ''வசிட்டர் வாயால் பிரம்மரிஷி'' என்ற வழக்குச்சொல்போல, இப்போது தன் குலகுருவான வசிட்டனே, தன் மைந்தன் இராமபிரானின் பெருமைகளையும் சிறப்புக்களையும் எடுத்துப் புகழ்ந்துரைத்தபொழுது தசரதன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான் என்பதாம்.

இங்கே ''பிஞ்ஞகன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும், ''பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க'' என்பது சிவபுராணம். ''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்'' என்பது குறள்- ''ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனனே'' என்பது புறநானூறு.

71. மந்தரை சூழ்ச்சிப்படலம் பக்கம்-244/15 வசிட்டன் கூற்று

''கரிய மாலினும் கண்ணுதலானினும்,
உரிய தாமரைமேல் உறைவானினும்,
விரியும் பூதம் ஓர் ஐந்தினும், மெய்யினும்,
பெரியர் அந்தணர், பேணுதி உள்ளத்தால். (1413)

நாளை முடிசூடவேண்டிய நாள் என்று அறிவிக்கப்பட்டதும், தசரதன் தன் குலகுரு வசிட்டரை அணுகித் தன் மைந்தன் இராமபிரானுக்கு அரசியல் அறிவுரை புகலுமாறு வேண்டிக் கொள்ளவும், வசிட்டன் இராமபிரான் அரண்மனை சென்று கூறிய அரசியல் அறங்கள் குறித்துக்கூறிய செய்திகளுள் இதுவும் ஒரு செய்தி.

''கரிய நிறமுடைய திருமாலைக் காட்டிலும், நெற்றிக்கண் கொண்ட சிவபெருமானைக் காட்டிலும், தனக்குரிய தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனைக் காட்டிலும், விரிந்து பரந்த பஞ்சபூதங்களைக் காட்டிலும், மெய்ம்மையைக் காட்டிலும் பெரியவர்கள் வேதவிற்பன்னர்கள். எனவே அவர்களை நீ என்றும் உன் உள்ளத்தில் இருத்திப் போற்றித் துதிப்பாயாக!'' என்கிறான் வசிட்டன்.

இங்கே **''கண்ணுதலான்''** என்பது நெற்றிக் கண்ணையுடைய முக்கண்ணனாகிய சிவபெருமானைக் குறிக்கும்.

72. மந்தரை சூழ்ச்சிப்படலம் பக்கம்-245/19 வசிட்டன் கூற்று

உருளும் நேமியும், ஒண்கவர் எஃகமும்,
மருள்இல் வாணியும், வல்லவர் மூவர்க்கும்;
தெருளும் நல்லறமும், மனச்செம்மையும்
அருளும் நீத்தபின், ஆவது உண்டாகுமோ? (1417)

''உருண்டோடும் சக்கரப்படையையுடைய திருமால், ஒள்ளிய மூன்று கவடுகளையுடைய மழுவாயுதத்தையுடைய சிவபெருமான், மயக்கமற்ற கலைமகளை உடைய பிரமதேவன் இவர்கள் மூவரும், தெளிவும், தருமமும், மனத்தில் செம்மையும் அருளும் நீங்கினர் என்றால் அதனால் என்ன பயன் உண்டாகும்? அவர்களுக்கே அவ்வாறு என்றால் அரசின் செங்கோலை ஆளப்போகும் நீ தெளிவு, நல்லறம், மனச்செம்மை, அருள் இவற்றில் சற்றும் பிறழாது விளங்கவேண்டும்'' என்று அரசியல் அறம் கூறுகிறான் வசிட்டன்.

இங்கே **''ஒண்கவர் எஃகம்''** என்பது ஒள்ளிய மூன்று கவடுகளையுடைய மழுவாயுதத்தை உடையவன் என்று ஆகுபெயராய்ச் சிவபெருமானைக் குறித்து நின்றது என்க.

73. மந்தரை சூழ்ச்சிப்படலம் பக்கம்எண்-245/23 வசிட்டன் கூற்று

உமைக்கு நாதற்கும், ஓங்கு புள் ஊர்திக்கும்,
இமைப்புஇல் நாட்டம் ஓர் எட்டுடையானுக்கும்,
சமைத்த தோள்வலி தாங்கினர் ஆயினும்,
அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே. (1421)

''உமையம்மையின் கணவனான சிவபெருமான், உயர்ந்த பறவையாகிய கருடனைத் தன் வாகனமாகக் கொண்டிருக்கும் திருமால், இமையா நாட்டம் எட்டினைக் கொண்டுள்ள நான்முகனாகிய பிரமதேவன் ஆகிய இம்மூவர்க்கும் இணையான தோளாற்றலை உடையவர் என்றாலும், அரசர்கள் தம் அமைச்சர்கள் அறிவுரையில் சற்றும் பிறழாது ஒழுகுதலே நற்பேராற்றல் ஆகும்'' என்கிறான் வசிட்டன்.

இங்கே ''உமைக்கு நாதற்கும்'' என்பது உமையம்மையின் கேள்வனாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

74. மந்தரை சூழ்ச்சிப்படலம் பக்கம்-248/40 கவிக்கூற்று

துனி அறு செம்மணித் தூணம் நீல்நிறம்
வனிதை ஓர் கூறினன் வடிவு காட்டின;
புனை துகில் உறைதொறும் பொலிந்து தோன்றின,
பனிபொதி கதிரெனப் பவளத் தூண்களே! (1438)

நாளை இராமபிரானுக்கு முடிசூட்டுவிழா என்றதும் ஊரினை அழகுபடுத்துகிறார்கள் நகரமக்கள். அரண்மனையில் அமைந்துள்ள சிவந்த இரத்தினக்கற்களாலான தூண்களை வெள்ளைநிறம் பொருந்திய உறையைக் கொண்டு மூடுகிறார்கள். அலங்கரிக்கப்பட்ட வெள்ளை உறைகளால் மூடப்பெற்ற பவளத்தூண்கள் எல்லாம் இளங்காலைச் சூரியனின் செங்கதிர் ஒளிபரப்பிற்று. குற்றமற்ற சிவந்த இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தூண்களை வெள்ளைநிற உறைகள் மூடியிருப்பது, சிவந்த நிறம் கொண்ட உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்ட சிவபெருமானின் வடிவம்போலத் தோன்றிற்று. பவளங்கள் பதிக்கப்பெற்ற தூண்களை மூடியிருக்கும் அலங்கரிக்கப்பட்ட உறைச்சீலைகளின் உள்புறம் எல்லாம் பனியால் மூடப்பெற்ற குளிர்ச்சி பொருந்திய சூரியன்போல அழகாகத் தோன்றின.

இங்கே ''நீல்நிறம்'' என்ற பாடத்தைக் காட்டிலும், மற்ற பதிப்புகளில் காண்பதுபோல ''நீறுதோய்'' என்ற பாடம் மிகவும் பொருந்தும். வெண்ணீறு பூசப்பட்ட மேனியைக்கொண்ட சிவபெருமான் என்றும் உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவபெருமான் என்றும் பொருள் தந்து அச்சொற்றொடர் சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''செம்மேனி அம்மான்''

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். ''எரிபோல் மேனிப்பிரான்'' என்பதும் தேவாரம். பவளத்தூணைவிடச் செம்மணித்தூண் ஒளிமிக்கது என்பதுபோல சூரியனைக் காட்டிலும் சிவபெருமான் ஒளிமிக்கவன் என்பது உட்கருத்து.

75. கைகேயி சூழ்வினைப் படலம். பக்கம்-264/66 கவிக்கூற்று

மூவராய், முதலாகி, மூலம் அதுஆகி, ஞாலமும் ஆகிய
தேவதேவர் பிடித்த போர்வில் ஒடித்த சேவகன், சேண் நிலம்
காவல் மாமுடிசூடு பேர்எழில் காணலாம் எனும் ஆசை கூர்
பாவைமார் முகம் என்ன, முன்னம் மலர்ந்த, பங்கயராசியே.
(1556)

இராமபிரான் நாளை முடிசூட்டிக்கொள்ளப் போகிறான் என்றதும் அந்நகரத்துப் பெண்களின்முகம் அன்று அலர்ந்த தாமரைபோல் மலர்ந்திருந்தன என்பதைக் கூறவருகின்ற கவிஞன் அதற்கு ஓர் உவமை கூறுகிறான்.

பிரமன், திருமால், சிவபெருமான் ஆகிய மூவரும்ஆகி, அம்மூவர்க்குள்ளும் முதல்வனாகி, அம்முதல்வனுக்கும் மூலப்பொருளாகி உயிர்களனைத்தும் உறைகின்ற இவ்வுலகமும் ஆகி, தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய சிவபெருமான் கைக்கொண்டிருந்த போர்புரியும் வில்லை ஒடித்த வீரனாகிய இராமபிரான், இந்நீண்ட உலகத்தைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காக, சிறந்த மணிமகுடத்தைச் சூட்டிக்கொள்ளப் போகின்ற பேரழகுக் காட்சியைக் காணலாம் என்னும் ஆசைமிக, மகிழ்வுடன் பொலியும் பெண்களின் அழகிய முகம்போல மலர்ந்து விரிந்தன தாமரை மலர்க்கூட்டங்கள் என்கிறான் கவிஞன்.

இங்கே ''முதல்ஆகி, மூலம் அது ஆகி ஞாலமும் ஆகும் அத்தேவ தேவர்'' என்பது சிவப்பரம்பொருள் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்ததாகும்.

76. நகர்நீங்கு படலம் பக்கம்-274/25 இராமபிரான் கூற்று

''மான் மறிக் கரத்தான் மழு ஏந்துவான்,
தான் மறுத்திலன் தாதைசொல்; தாயையே
ஊன் அறக்குறைத்தான்; உரவோன் அருள்
யான் மறுப்பது என்று எண்ணுவதோ?'' என்றான். (1630)

கைகேயி கட்டளையிட்டபின் தன் தாய் கோசலையிடம் வந்து அங்கு நிகழ்ந்ததை இராமபிரான் தெரிவிக்க, அதுகேட்ட கோசலை, தானும் அவன் உடன் கானகம் வருவதாகக் கூற, அப்பொழுது இராமபிரான் அவள் அவ்வாறு செய்யக்கூடாது என்றும், தந்தை வனவாசம் செல்லும்போது அவளும் அவன்

உடனிருந்து தொண்டு ஆற்றவேண்டும் என்றும், தான் தன் தந்தை சொல்லை மதிப்பதுபோல அவளும் அவன் வாய்மை காக்க உதவிடவேண்டும் என்றும் கூறும்பொழுது, இதுபோல முன்பு நிகழ்ந்த நிகழ்வை எடுத்துக்காட்டாகக் கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

மான்குட்டியைத் தன் ஒருகரத்தில் ஏந்தியிருப்பவனாகிய சிவபெருமானுக்குரிய மழுப்படையையுடையவனான பரசுராமன், தன்தந்தை, ஜமதக்னி முனிவன் தன்தாய் இரேணுகாதேவியைக் குத்திக் கொலை செய்யுமாறு கட்டளையிட, மற்ற நான்கு புதல்வர்களும் மறுத்துவிட, பரசுராமன் மட்டும் சிறிதும் தயக்கமே இல்லாமல் தன் மழுப்படை கொண்டு தன் சொந்தத் தாயையே வெட்டி வீழ்த்தினான். அவ்வாறிருக்கும்போது, அறிவிற் சிறந்தோனாகிய தந்தை தசரதன் அருளிய சொல்லை மறுத்துரைப்பது என்பது என்னால் ஆகக்கூடியதா? அவ்வாறு நீ கருதலாமா?'' என்று கேட்கிறான் இராமபிரான்.

இங்கே ''மான்மறிக் கரத்தான்'' என்பது மானின் குட்டியைத் தன் கரத்தில் ஏந்தியுள்ளவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

77. நகர்நீங்கு படலம் 279/57 தசரதன் கூற்று

''கறுத்தாய் உருவம்; மனமும் கண்ணும் கையும் செய்யாய்;
பொறுத்தாய் பொறையே; இறைவன் புரம் மூன்று எரித்த போர்வில்
இறுத்தாய்; ''தமியேன்'' என்னாது, என்னை இம் மூப்பிடையே,
வெறுத்தாய்; இனி நான் வாழ்நாள் வேண்டேன்; வேண்டேன்,'' என்றான். (1662)

இராமபிரான் அயோத்தி நகரினின்றும் நீங்கிச் செல்வதை உணர்ந்த தசரதன் புலம்புவதாக வருவது இப்பாடல்.

தசரதன் இராமபிரானை நோக்கி ''கரிய உருவமும், மனம், கண், கை, ஆகிய மற்ற உறுப்புக்கள் மட்டும் செம்மையாய்ச் சிவந்திருப்பவனே! இராம! பொறுமை என்னும் பெருங்குணத்தைக் கொண்டிருப்பவனே! எல்லோர்க்கும் இறைவனானவனும், முப்புரங்களையும் சுட்டெரித்தவனுமாகிய சிவபெருமானின் சிவதனுசை ஒருநொடியில் ஒடித்தவனே! நான் இப்போது தனியனாக இருக்கிறேன் என்பதைக் கருதாமலும், என்னை இம் முதுமைப் பருவத்திலும் வெறுத்து என்னைத் தனியே விட்டுவிட்டுக் கானகம் செல்லத் துணிந்துவிட்டாயே! இதற்குப் பின்னும் நான் வாழ்வது முறையோ? எனவே நான் இவ்வாழ்க்கையையே துறந்து போகிறேன்'' என்று புலம்புகிறான்.

இங்கே ''இறைவன் புரம் மூன்று எரித்த போர்வில்'' என்பது முப்புரம் எரித்த சிவபெருமானின் சிவதனுசைக் குறிக்கும் என்க.

78. நகர்நீங்கு படலம் 288 / 132 இலக்குவன் கூற்று

''நல் தாதையும் நீ; தனி நாயகன் நீ; வயிற்றில்
பெற்றாயும் நீயே; பிறர்இல்லை; பிறர்க்கு நல்கக்
கற்றாய்!; இது காணுதி இன்று'' எனக் கைம்மறித்தான்;
முற்றா மதியம் மிலைந்தான் முனிந்தானை அன்னான். (1737)

''விதிக்கும் விதியாகும் என் வில்தொழில் காண்டி'' என்று வஞ்சினம்கூறிய இலக்குவன், இராமபிரானை நோக்கி, ''எனக்குத் தாயாகத் திகழ்பவனும் நீயே! ஒப்பற்ற தலைவனும் நீதான்; என்னை வயிற்றில் பெற்றெடுத்த தாயும் நீதான். கைகேயி அல்லள்; தசரதன் அல்லன்; உனக்குக் கிடைப்பனவற்றையெல்லாம் பிறர்க்குக் கொடுத்து மகிழும் குணம் படைத்தவன் நீ; இப்பொழுது என் சினத்தைக் காண்பாயாக!'' என்று இராமபிரானின் கைகளை விலக்கி உருத்தெழுந்தான் இலக்குவன். இப்போது அவனுடைய தோற்றத்திற்குக் கவிஞன் முற்றாத இளம் பிறைச்சந்திரனை அணிந்துள்ள சிவபெருமான் ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் உருத்திரன் தோற்றம்போல் தோன்றுகிறான் இலக்குவன் என்று இலக்குவன் தோற்றத்தைச் சிவபெருமான் தோற்றத்திற்கு ஒப்பிடுகிறான்.

இங்கே ''முற்றாமதியம் மிலைந்தான்'' என்பது இளம் பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் அணிந்திருக்கும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

79. நகர்நீங்கு படலம் 289 / 138 இலக்குவன் கூற்று

அன்னான்தனை ஐயனும், ஆதியோடு அந்தம் ஒன்றாம்,
தன்னாலும் அளப்ப அரும் தானும், தன் பாங்கர் நின்ற,
பொன்மான் உரியானும், தழீஇ எனப் புல்லி, பின்னை,
சொல் மாண்புடை அன்னை சுமித்திரை கோயில் புக்கான்.
(1743)

இலக்குவனை ஆற்றுப்படுத்திய இராமபிரான், இலக்குவனுடன் சுமித்திரையின் அரண்மனைக்குச் சென்றுசேர்ந்த நிகழ்வைக் கூறும் பாடல் இது.

ஒரு ஆரம்பம், ஒரு முடிவு என்று ஒன்று தனக்கு உண்டு என்பதைத் தன்னாலேயே உணர்ந்து கொள்ளமுடியாத மூலமும், ஈறும் இல்லாத் திருமாலும், அழகிய மானின் தோலைப் போர்த்துக் கொண்டிருக்கின்ற சிவபெருமானும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டதைப்போல, இராமபிரான் தன் பக்கத்தில் நின்றிருந்த தன் இளவல் இலக்குவனைத் தழுவியபின், இருவரும், சொல்மாட்சிமையுடைய பெருந்தகையளான சுமித்திரையின் அரண்மனையைச் சென்று சேர்ந்தார்கள்.

எப்படி சிவனும் உமையும் ஒருசேரக் கலந்திருக்கும் வடிவத்தை அர்த்தநாரீஸ்வரர் என்கிறோமோ, அதுபோல சிவனும் வலப்பக்கத்தில் திருமாலும் கலந்திருக்கும் வடிவத்தைச் சங்கரநாராயணன் என்கிறோம் என்பது இங்கு நினைவுகொள்ளத் தக்கது.

இங்கே ''பொன்மான் உரியான்'' என்ற சொற்றொடர் அழகிய மான்தோலைப் போர்த்தியிருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும். ''பொன் திகழும் மேனிப்புரிசடை அப் புண்ணியனும், நின்று உலகம் தாய நெடுமாலும், என்றும் இருவர் அங்கத்தால் திரிவரேனும், ஒருவன் ஒருவன் அங்கத்து என்றும் உளன்'' என்பது பொய்கையாழ்வார் பாசுரம்.

80. கங்கைப்படலம் பக்களண்-317 / 18 கவிக்கூற்று

வெங்கண் நாகக் கரத்தினன், வெண்நிறக்
கங்கை வார்சடைக் கற்றையன், கற்புடை
மங்கை காண நின்று ஆடுகின்றான், வகிர்த்
திங்கள் சூடிய செல்வனின் தோன்றினான். (1943)

இராமபிரான் கங்கையில் நீராடியதைக் கூறுகிறான் கவிஞன்.

கொடிய கண்களையுடைய பாம்பினைத் '' தன் கைகளில் கொண்டுள்ளவனும், வெள்ளிய நிறம் கொண்ட ஆகாய கங்கையையும் இளம் பிறைச்சந்திரனையும் தன் நீண்ட சடைமுடியில் தாங்கியிருப்பவனு மாகிய சிவபெருமான், கற்பிற் சிறந்த உமையம்மை கண்முன் எதிரே நின்று நடனம் ஆடுகின்றான் என்பன சிவபெருமானைக் குறிக்கும் சொற்றொடர்கள். இங்கே நாகம் என்ற சொல்லுக்கு யானை என்று பொருள்கொண்டு, கொடிய கண்களையுடைய யானையின் துதிக்கையைப்போல திரண்ட கைகளை யுடைய இருகை வேழத்து இராகவன், கற்புக்கரசியான தன் மனைவி சீதாதேவி காணும்வண்ணம் கங்கையில் நீராடுகின்றான் என்று, சிவபெருமானுக்கும் இராமபிரானுக்கும் சிலேடை வகையில் அமைந்தது இந்தப் பாடல். அவன் அவ்வாறு நீராடும்போது அவன் வெண்நிறக் கங்கைவார் சடைக்கற்றை யுடையவனும், வகிர்த்திங்கள் சூடிய செல்வனுமாகிய சிவபெருமான்போல் தோற்றம் அளித்தான் என்பதாம்.

இங்கே ''வெங்கண் நாகக் கரத்தினன்'' என்பதும், ''வெண்நிறக் கங்கை வார்சடைக்கற்றையன்'' என்பதும், ''வகிர்த்திங்கள் சூடிய செல்வன்'' என்பதும் சிவபெருமானைக் குறிப்பனவாகும்.

81. கங்கைப்படலம் 317 / 21 கவிக்கூற்று

தேவதேவன் செறிசடைக் கற்றையுள்,
கோவை மாலை எருக்கொடு கொன்றையின்
பூவும் நாறலள்; பூங்கழல் கற்றையின்
நாவி நாள்மலர்க் கங்கையும் நாறினாள். (1946)

இங்கே சீதாதேவி கங்கையில் நீராடுதல் பற்றிப் பேசுகிறது இப்பாடல்.

அவ்வாறு அவள் கங்கையில் நீராடும்பொழுது தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய சிவபெருமானின் நெருங்கிய சடைமுடியில் அணிந்திருக்கும் தொடுக்கப்பட்ட மாலையிலுள்ள எருக்கமலரின் மணமும், கொன்றை மலரின் மணமும்வீச வில்லை, அந்தக் கங்கையில் சீதாதேவி நீராடியதால், அவளுடைய அழகிய அன்றலர்ந்த மலர்த்தொகுதியின் நறுமணமும், அவள் பூசியிருந்த கத்தூரிப்புனுகின் நறுமணமும்தான் கங்கைமுழுதும் மணம் கமழ்ந்தன என்கிறான் கவிஞன்.

இங்கே ''தேவதேவன்'' என்பது சிவபெருமானையும், ''செறிசடைக் கற்றையுள் கோவை மாலை எருக்கொடு கொன்றையும்'' என்பது அவன் அணிந்திருக்கின்ற எருக்கமலர் மாலையையும், கொன்றை மலர்மாலையையும் குறித்து நின்றன என்க. இராமபிரானும், சீதாதேவியும் ஒருசேரத்தான் கங்கையில் நீராடுகிறார்கள் என்றாலும் கவிஞன் சீதாதேவியின் ''பூங்கழல் கற்றையின் நாவி நாள்மலர்க் கங்கைதான் மணந்தது'' என்று கூறுவது நகைச்சுவைநயம் மிக்கது என்பது கருதத்தக்கது.

82. சித்திரகூடப் படலம் பக்களண்.333/7 இராமபிரான் கூற்று

''நீண்ட மால்வரை மதிஉற, நெடுமுடி நிவந்த
தூண்டு மாமணிச் சுடர்சடைக் கற்றையின் தோன்ற,
மாண்ட வால்நிற அருவி, அம்மழவிடைப் பாகன்
காண்தகும் சடைக் கங்கையை நிகர்ப்பன காணாய்!'' (2052)

வனம்புகுந்த இராமபிரான், சீதாதேவிக்குச் சித்திரகூட மலையின் அழகைக் காட்டிக்கூறுவது இப்பாடல்.

நீண்ட பெரிய சித்திரகூட மலையின் சிகரத்தின்மேல் சந்திரன் உலாவருவது. நீண்ட அந்தச் சிகரத்தில் சிறந்து விளங்குகின்ற சிறந்த அழகிய ஒளிவீசும் சிவபெருமானின் சடைக்கற்றையைப்போலத் தோன்றுவதையும், அதனின்றும் தோன்றுகின்ற மிகச்சிறந்த வெண்மைநிறமுடைய அருவி, அந்த இளமையான ரிஷபத்தை வாகனமாகக்கொண்டு செலுத்துபவனாகிய சிவபெருமானின் காண்பதற்குரிய சடைமுடியில் இருக்கும் ஆகாயகங்கையை ஒத்திருப்பதையும் காண்பாயாக!'' என்று காட்டிக்கொண்டு வருகிறான்.

இங்கே, சித்திரகூட மலையின் சிகரத்திற்குச் சிவபிரானின் சடைமுடிக்கற்றையும், அந்தச் சிகரத்தின் அருகே தோன்றும் சந்திரனுக்கு சிவபெருமான் சடைமுடியில் உள்ள பிறைச்சந்திரனும், அதனின்றும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் சந்திரகிரணங்களுக்கு சிவபெருமான் சடைமுடியினின்று எழும் ஒளிக்கற்றையும், அச்சிகரத்திளின்றும் பெருகிவரும் அருவிக்கு, சிவபெருமான் சடைமுடியினின்றும் பெருகும் ஆகாய கங்கையும் உவமைகள்.

83. பள்ளிபடைப்படலம் பக்கஎண்.347/50 பரதன் கூற்று

''முதலவன் முதலிய முந்தையோர் பழங்
கதையையும் புதுக்கிய தலைவன், கண்ணுடை
நுதலவன் சிலை விலின் நோன்மை நூறிய
புதல்வனை, எங்ஙனம் பிரிந்து போயினாய்?'' (2151)

விதேகநாட்டிலிருந்து திரும்பிவந்த பரதன், தன் தந்தை தசரதன் இறந்தது கேட்டறிந்து, தனது துயரத்தை வெளிப்படுத்துவதாக வருவது இப்பாடல்.

''சூரியகுல முதல்வனான சூரியன் முதலான பழமையானவர்களின் பழைய வரலாறுகளையெல்லாம் புதுப்பித்து எழுதிய தலைவனும், நெற்றிக்கண்களையுடைய சிவபெருமானின் மேருமலையாகிய வில்லின் வலிமைமையை அழித்துப்போக்கிய ஆற்றலுடையவனுமான உன் மகன் இராமபிரானை எவ்வாறு பிரிந்து சென்றாய்?'' என்று பரதன் இறந்துபோன தன்தந்தை தசரதனை மனத்துள் நினைத்து இவ்வாறு கேட்கிறான் என்பதாம்.

இங்கே **''கண்ணுடை நுதலவன்''** என்பது நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைக் குறித்து நின்றது.

84. ஆறுசெல் படலம் பக்கஎண்.363/27 கவிக்கூற்று

ஈசன் இவ்வுலகினை அழிக்கும் நாள்எழும்
ஓசையின் நிமிர்ந்துளது, ஒல்லென் பேரொலி;
காசையின் கரியவற் காண மூண்டு எழும்
ஆசையின் நிமிர்ந்தது அவ் அனிக ராசியே. (2270)

மணிமுடி தரிக்கத் தன்னால் இயலாது என்று மறுத்துக்கூறிய பரதன், இராமபிரானைக் கண்டு அவனை அழைத்து வருவதற்காக சேனையைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போகும்போது, அந்தச் சேனையின் எழுச்சிபற்றிக் கூறுகிறபாடல் இது.

ஊழியிறுதிக்காலத்தில் இவ்வுலகெல்லாவற்றையும் அழிக்கும் உருத்திரன் எழுப்பும் ஓசையைக் காட்டிலும், மேம்பட்டிருந்தது இப்பொழுது பரதனுடன் எழுந்த சேனையின் பேராரவாரம். காயாம்பூவைப் போன்ற கரிய நிறம் கொண்ட இராமபிரானைக் காணவேண்டும் என்று மூண்டு எழுகின்ற அம் மக்களின் ஆசையைக் காட்டிலும், அவன் உடன் செல எழுந்த சேனையின் கூட்டம் மிக்கிருந்தது. காசை-காயாம்பூ.

இங்கே **''ஈசன்''** என்ற சொல் அழிக்கும் தன்மையுடைய உருத்திரன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

85. கங்கைகாண் படலம் பக்கஎண்.374/45 கவிக்கூற்று

''நன்று'' எனப் புளிஞர் வேந்தன் நண்ணினன் தமரை; ''நாவாய்
சென்று இனித் தருதிர்'' என்ன, வந்தன சிவன் சேர் வெள்ளிக்
குன்றுஎன, குனிக்கும் அம்பொன் குவடுஎன, குபேரன் மானம்
ஒன்று என, நாணிப் பல்வேறு உருவு கொண்டு அனைய ஆன.
(2347)

பரதனைப் படைகளுடன் கண்ட வேடுவர் தலைவனாகிய குகன், முதலில் தவறாகக் கருதி, பின்னர் தன் எண்ணங்களை மாற்றிக்கொண்டு, அவன் சுற்றத்தாரை நோக்கி, ''நல்லது, இப்பொழுது நம் படகுகளைக் கொண்டு வாருங்கள்'' என்று கட்டளையிட்டான். அவ்வாறு வந்த படகுகள் ஒவ்வொன்றும் எப்படியிருந்தன என்பதைக் கூறவந்த கவிஞன், ஒருபடகு சிவபெருமான் உறைகின்ற வெள்ளிய கயிலயங்கிரிபோல இருந்தது என்றும், மற்றொரு படகு சிவபெருமான் முன்பு வளைத்த அழகிய பொன்நிறமான மேருமலையைப்போல இருந்தது என்றும், இன்னொரு படகு குபேரனுக்குச் சொந்தமான புட்பகவிமானம்போல இருந்தது என்றும் கூறி, இவையெல்லாம் தனித்தனியாக உருவம் கொண்டு வருவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு, ஒன்று சேர்ந்து வந்தன என்கிறான்.

இங்கே ''சிவன்சேர் வெள்ளிக்குன்றம்'' என்று கயிலயங்கிரியையும், ''குனிக்கும் அம்பொன் குவடு'' என்று மேருமலையின் சிகரத்தையும் குறித்தார் என்க.

86. திருவடி சூட்டுபடலம் பக்கஎண்.379/1 கவிக்கூற்று

வந்த மாதவத்தோனை அம் மைந்தனும்,
தந்தையாம் எனத் தாழ்ந்து வணங்கினான்,
இந்து மோலி அன்னானும், இரங்கினான்,
அந்தம்இல் நலத்து ஆசிகள் கூறினான். (2375)

குகன் செலுத்திவந்த படகினின்றும் இறங்கிக் காலாலேயே நடந்து சென்ற பரதன் பரத்துவாச முனிவனை அடைந்தான். பெருந்தவ முனிவனான பரத்துவாசனை பரதன் தன் தந்தையை வணங்குதல்போலவே வணங்கி எழுந்தான். திங்களைத் தன் சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமான் போன்றவனான பரத்துவாச முனிவனும் அவனிடம் எல்லையில்லாத அன்புகொண்டு, ஆசிமொழிகளைக் கூறி வாழ்த்தினான்.

இங்கே ''இந்துமோலி அன்னான்'' என்பது பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமான் போன்ற முனிவன் என்று முனிவனைச் சிறப்பித்தார் என்க. சடைமுடி தரித்திருத்தலாலும், தவஒழுக்கம் மேற்கொண்டிருப்பதாலும், காமம் முதலிய மும்மலங்களையும்

அழித்திருப்பதாலும், பரத்துவாச முனிவனைச்சிவபெருமானுக்கு ஒப்பிட்டார் என்பதாம்.

87. திருவடிசூட்டு படலம் பக்களண்.384/41 இலக்குவன் கூற்று

''அரம்சுட அழல் நிமிர் அலங்கல் வேலினாய்!
விரைஞ்சு ஒரு நொடியில், இவ் அனிக வேலையை
உரம் சுடு வடிக்கணை ஒன்றில் வென்று, முப்
புரம் சுடு ஒருவனின் பொலிவென் யான்'' என்றான். (2415)

பரதன் படையுடன் வருவதை, சித்திரகூட மலையின்மீது ஏறிநின்று கண்டவனான இலக்குவன், பரதன் இராமபிரானோடு, போரிடத்தான் வருகிறான் என்று தவறாகக் கருதிக்கொண்டு போர்க்கோலம் பூண்டு, இராமபிரானை நோக்கிக் கூறிய வீர உரை இது.

''அரத்தினால் அராவப்பட்டுக் கூராக்கப்பட்டு, நெருப்பைக் கக்குகின்ற வேற்படையையுடைய மாலை சூடியுள்ளவனே! இராமா! நான் ஒருநொடிப் பொழுதில் விரைந்து சென்று இந்தச் சேனைக்கடலை, ஆற்றல் மிகுந்ததும், சுட்டெரிப்பதும், கூர்மையானதுமான ஒரே ஒரு அம்பினால் வென்று, முன்பு முப்புரங்களையும் சுட்டெரித்தவனான ஒப்பற்ற சிவபெருமானைப்போல் பொலிவுற்றுத் திகழ்வதைக் காண்பாயாக!'' என்கிறான் இலக்குவன்.

இங்கே ''முப்புரம் சுடு ஒருவன்'' என்பது, முப்புரங்ளையும் சுட்டெரித்து அழித்தவனான ஒப்பற்ற சிவபெருமானைக் குறிக்கும் என்க.

88. திருவடி சூட்டு படலம் பக்களண்.388/73 வசிட்டன் கூற்று.

''சீலமும் தருமமும் சிதைவுஇல் செய்கையாய்!
சூலமும், திகிரியும், சொல்லும் தாங்கிய
மூலம் வந்து உதவிய மூவர்க்கு ஆயினும்,
காலம் என்று ஒரு வலை கடக்கல் ஆகுமோ? (2447)

சித்திரகூடம் வந்த பரதன், இராமபிரானைத் தொழுது, தந்தை தசரதன் இறந்துபட்ட செய்தியைக் கூறியதும், இராமபிரான் அழுது மாழ்கி, சோர்ந்து தளர்ந்து பின் தெளிவுற்று எழுந்ததும், வசிட்டன் கூறுவதாக அமைந்தது இந்தப்பாடல்.

''இறத்தலும் பிறத்தலும் இயற்கை'' என்றுகூறிய வசிட்டன், ''ஒழுக்கத்திலும், அறத்திலும் சிறிதும் குறைவுபடாது ஒழுகும் நேர்மையானவனே! இராமா! முத்தலைச் சூலத்தையும், சக்கரப்படையையும், மறைநூல்களையும் தத்தம் கைகளில் ஏந்திக்கொண்டிருக்கின்ற மூலப்பரம்பொருளாகிய அரன், அரி, அயன் ஆகிய முப்பெருந் தேவர்களானாலும் காலம் என்ற ஒரு வலையைக் கடந்துபோவது என்பது

இயலுமோ? காலத்தை யாராலும் வெல்லமுடியாது!'' என்று தேறுதல் கூறுகிறான்.

இங்கே ''சூலம் தாங்கிய மூலம்'' என்பது சூலப்படையைத் தாங்கிய மூலப்பரம்பொருளான சிவபெருமானைக் குறித்தது என்க.

இவைதவிர, சென்னைக் கம்பன்கழகச் செம்பதிப்பில் மிகைப்பாடல்கள் என்று தரப்பெற்றிருக்கின்ற பாடல்களில் கீழ்க்காணும் 2பாடல்களில் சிவபெருமான் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவை மிகைப்பாடல்கள் எனப் பிரிக்கப்பட்டிருப்பதால் அவற்றிற்கான விளக்கங்கள் தரப்படவில்லை.

89. மந்திரப்படலம் பக்கஎண்.399/66-1 தசரதன் கூற்று.

ஆளும் நல்நெறிக்கு அமைவரும் அமைவினன் ஆகி,
நாளும் நல்தவம் புரிந்து, நல்நளிர்மதிச் சடையோன்
தாளில் பூசையின் கங்கையைத் தந்து தந்தையரை
மீள்வுஇல் இள்உலகு ஏற்றினன் ஒருமகன் மேல்நாள்.

90. மந்திரப்படலம் பக்கஎண்.399/76-1 மன்னர்கள் கூற்று

''நறைக்குழற் சீதையும், ஞால நங்கையும்
மறுத்தும், இங்கு ஒருவற்கு மணத்தின்பாலரோ,
கறுத்த மாமிடறுடைக் கடவுள் கால வில்
இறுத்தவற்கு அன்றி'' என்று இரட்டர் கூறினார்.

அயோத்தியா காண்டக் குறிப்பு நிறைவுற்றது

3. ஆரண்யகாண்டம்

91. சரபங்கன் பிறப்புநீங்கு படலம் பக்கஎண்.419/6 கவிக்கூற்று

செம் மாமலராள் நிகர் தேவியோடும்,
மும்மாமத வெண்நிற முன் உயர்தாள்
வெம் மா மிசையான்; **விரிவெள்ளி விளங்கு**
அம் மாமலை அண்ணலையே அனையான். (2592)

சரபங்கனைத்தேடி, சிவந்த செந்தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் திருமகள் போன்ற தன் மனைவி இந்திராணி ஆகிய சசிதேவியோடும், மூன்றுவகைப்பட்ட மதநீரை உகுக்குகின்ற வெள்ளை நிறமுடையதும், உயர்ந்த முன்னங்கால்களையுடையதுமான வெம்மைமிக்க தனது வாகனமாகிய ஐராவதம் என்னும் யானையின்மேல் ஏறி தேவேந்திரன் வந்தான். அவன் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற பெரிய கயிலைமலையில் உறைந்திருப்பவனாகிய பெருமைக்குரிய சிவபெருமானையே ஒத்தவனாவான்.

சரபங்கனைக் காண சசிதேவியோடும் வந்த தேவேந்திரனை, வெள்ளியங்கிரியில் உமையம்மையோடு வீற்றிருக்கும் சிவபெருமானோடு ஒப்பிடுகிறார் என்பதாம். இங்கே **''விரிவெள்ளி விளங்கு அம்மாமலை அண்ணல்''** என்பது வெள்ளியங்கிரியில் உறையும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

92. அகத்தியப்படலம் பக்கஎண்-428/22 இராமபிரான் கூற்று

''சூர் அறுத்தவனும், சுடர்நேமியும்,
ஊர் அறுத்த ஒருவனும், ஓம்பினும்,
ஆர் அறத்திினொடு அன்றி நின்றார் அவர்
வேர் அறுப்பென்; வெருவன்மின் நீர்'' என்றான். (2652)

தண்டக ஆரண்யம் வந்துசேர்ந்த இராமபிரானிடம் அங்கு உறைகின்ற முனிவர்கள் தமக்கு அரக்கர்களால் விளைவிக்கப்படும் துன்பங்களை எடுத்துக்கூறி, அபயம் என்று அவனை அடைக்கலம் அடைந்தபோது இராமபிரான் அவர்களை நோக்கி, ''சூரபத்மன் என்ற அரக்கனை அழித்த முருகப்பெருமானும், ஒளிமிக்க சுதர்சனம் என்னும் சக்கரப்படையைக் கொண்டுள்ள திருமாலும், முப்புரங்களையும் சுட்டெரித்த ஒப்பற்ற சிவபெருமானும் ஒன்று சேர்ந்து வந்து அரக்கர்களைப் பாதுகாத்தாலும்கூட,

யார் தருமத்தின் வழியினின்றும் மாறுபட்ட காரியங்களைச் செய்கின்றார்களோ, அவர்களை வேரோடும் அழித்தொழிப்பேன்; நீங்கள் கலங்காதீர்கள்'' என்று இராமபிரான் உறுதியளிக்கிறான்.

இங்கே ''ஊர் அறுத்த ஒருவனும்'' என்பது முப்புரங்களையும் சுட்டெரித்தழித்த சிவபெருமானைக் குறிக்கும்.

93. அகத்தியப்படலம் பக்கஎண்-431 / 40 கவிக்கூற்று

மூசு அரவு சூடு முதலோன் உரையின், ''மூவா,
மாசுஇல் தவ! ஏகு'' என, வடாதுதிசை மேல்நாள்
நீசம்உற, வானின் நெடு மாமலையம் நேரா,
ஈசன் நிகராய், உலகு சீர்பெற இருந்தான். (2670)

தண்டகவன முனிவர்களும், சுதீக்கணனும், இராமஇலக்குவர், அகத்தியரைச் சென்று பார்க்கவேண்டும் என்றும் அதனால் தேவர்களுக்கும் யாவர்க்கும் நன்மைவிளையும் என்றும்கூறி அனுப்ப, இராமபிரான் அகத்தியரை வந்தடையும் பொழுது, அகத்தியரின் பெருமைகளைக் கூறிவரும் கவிஞன் பாடுவதாக அமைந்தது இப்பாடல். இது கவிக்கூற்று.

மொய்க்கின்ற பாம்புகளைத் தன் சடைமுடியில் தரித்திருப்பவனும், மூலமுதல்வனுமான சிவபெருமான், அகத்தியனை நோக்கி, ''மூப்பும், குற்றமும் அற்ற தவச்செல்வனே! என்னுடைய திருமணக்கோலத்தைக் காண முப்பத்து முக்கோடித் தேவர்களும் ஏனையோரும் ஒருசேர வடக்குத்திசையில் குழுமி விட்டதால் அது மிகத் தாழ்ந்துபோயிற்று. எனவே வானளாவ உயர்ந்த நீண்ட பெரிய பொதியமலைக்கு நீ உடனே சென்று அந்நிலையைச் சமனப்படுத்துவாயாக'' என்று வேண்டிக்கொள்ள, எல்லா ஐஸ்வர்யங்களுக்கும் தலைவனான சிவபெருமானைப் போன்றவனான அகத்தியமுனிவன், இவ்வுலகைச் சமனப்படுத்தும் பொருட்டு, பொதியமலையில் சிறப்புடன் வந்து சேர்ந்தான்.

இங்கே ''மூசு அரவு சூடு முதலோன்'' என்பதும், ''ஈசன்'' என்பதும் சிவபெருமானைக் குறித்தன என்க.

94. அகத்தியப்படலம் பக்கஎண்-431 / 41 இராமபிரான் கூற்று

உழக்கும் மறைநாலினும் உயர்ந்து, உலகம் ஓதும்
வழக்கினும், மதிக் கவியினும், மரபின் நாடி,
நிழல் பொழி கணிச்சி மணி நெற்றி உமிழ் செங்கண்
தழல் புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான். (2671)

அகத்திய முனிவனது பெருமையைக் கூறிவருகின்ற கவிஞன், அகத்திய முனிவன் தமிழுக்கு இலக்கணங்கள் ஆக்கி மொழியை வளப்படுத்தினான் என்று கூறுகின்ற பாடல் இது. இது கவிக்கூற்று.

வருந்திப் பயிலதத்தக்க நான்கு வேதங்களையும் நன்கு படித்து மேன்மைபெற்று, உலகம் சொல்லுகின்ற, அனுபவப் பாடத்தையும் கற்றறிந்து, அறிவுதருகின்ற கவிதையிலும் தேர்ந்து, முறைப்படி அவற்றையெல்லாம் ஆராய்ந்து, ஒளிமிக்கு வீசுகின்ற மழுவாயுதத்தைக் கையில் கொண்டிருப்பவனும், அழகிய நெற்றியில் தோன்றும் சிவந்த நெற்றிக்கண்ணை உடையவனும், நெருப்புப்போல் சிவந்த மேனியை உடையவனுமாகிய சிவபெருமான் தோற்றுவித்த நற்றமிழை இவ்வுலகெங்கும் பரவச்செய்து வளப்படுத்தியவன் அகத்தியன் ஆவான்.

இங்கே "நிழல் பொழி கணிச்சி, மணி நெற்றி உமிழ் செங்கண், தழல்புரை சுடர்க்கடவுள்" என்பன சிவபெருமானைக் குறிக்கும் சொற்றொடர்கள் என்க.

95. அகத்தியப்படலம் பக்கஎண்-432/51 அகத்தியன் கூற்று

"தண்டகவனத்து உறைதி" என்று, உரைதரக்கொண்டு,
உண்டு வரவு இத்திசை எனப் பெரிது உவந்தேன்;
எண்தகு குணத்தினை!" எனக்கொடு, உயர் சென்னித்
துண்ட மதி வைத்தவனை ஒத்த முனி சொல்லும். (2681)

அகத்தியமுனிவன் இராமபிரானை வரவேற்கும் நிகழ்ச்சியைக் குறிக்கும் பாடல் இது.

சிறந்த தன் தலைமீது பிறைச்சந்திரனைத் தரித்துள்ள சிவபெருமானை ஒத்து விளங்குகின்ற அகத்திய முனிவன் இராமபிரானை நோக்கி, "மதிக்கத்தக்க சிறந்த குணங்களை உடையவனே! இராமா! நீ தண்டகவனத்திற்கு வந்து தங்கியிருக்கிறாய் என்று முனிவர்கள்மூலம் கேள்விப்பட்டு, நீ எப்படியும் நான் இருக்கும் இடம் நாடி வருவாய் என்று எண்ணி மிக்க மகிழ்ந்திருந்தேன்" என்றுகூறி வரவேற்கிறான்.

இங்கே "உயர் சென்னித் துண்டமதி வைத்தவன்" என்பது சிவபெருமானைக் குறிக்கும்.

96. அகத்தியப்படலம் பக்கஎண்-433/56 இராமபிரான் கூற்று

இப்புவனம் முற்றும் ஒரு தட்டினிடை இட்டால்
ஒப்பு வரவிற்று என உரைப்ப அரிய வாளும்,
வெப்பு உருவு பெற்ற அரன் மேருவரை வில்லாய்
முப்புரம் எரித்த தனி மொய்க்கணையும் நல்கா. (2686)

அவ்வாறு இராமபிரானை வரவேற்ற அகத்தியமுனிவன் வில், அம்பு, அம்பறாப்புட்டிலோடு வாட்படையும், சிவபெருமான் பயன்படுத்திய அம்பு முதலியவற்றையும் இராமபிரானுக்குக் கொடுப்பதைக் கூறும் பாடல் இது.

இந்த உலகங்கள் எல்லாவற்றையும் ஒருபக்கத்துத் தராசுத் தட்டில் வைத்து, மற்றொரு தட்டில் இந்த வாட்படையை வைத்தால், அதற்கு நிகரானது என்று கூறத்தக்க பெருமையுடையது இந்த வாள். அதனையும் வெப்பம் மிகுந்த நெருப்பையே தன் மேனியின் வடிவமாகக் கொண்ட சிவபெருமான் முப்புரத்தை அழிக்க மேருமலையையே வில்லாகக் கொண்டபோது பயன்படுத்திய ஒப்பற்ற வலிமைவாய்ந்த அம்பினையும், அகத்தியமுனிவன் இராமபிரானுக்குக் கொடுத்து - பாடல் தொடர்கிறது.

இங்கே ''வெப்பு உருவு பெற்ற அரன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''முப்புரம் எரித்த தனி மொய்க்கணை'' என்பது சிவபெருமானின் அம்பினைக் குறிக்கும்.

97. சடாயுகாண் படலம் பக்களண்.435/12 சடாயு கூற்று

''புரந்தரன் முதலிய புலவர் யாரையும்
நிரந்தரம் நோக்குவென்; நேமியானும், அவ்
வரந்தரும் இறைவனும், மழுவலாளனும்,
கரந்திலர் என்னை; யான் என்றும் காண்பெனால்'' (2701)

இராமஇலக்குவர் பஞ்சவடி நோக்கிவருவதை, சடாயு ஒரு குன்றின்மேல் அமர்ந்து நோக்கும்பொழுது அவர்கள் உருவத்தைக் கண்டு வியந்து அவன் தனக்குள் எண்ணிக்கொள்ளும் பாடல் இது.

''இந்திரன் முதலான தேவர்கள் எல்லோரையும் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருப்பவன் நான்; சக்கரப்படையையுடைய திருமாலும், வரம் தருகின்றவனான பிரமதேவனும், மழுப்படையை ஏந்திய சிவபெருமானும் என்னைக்கண்டு தன் உருவத்தை மறைத்துக் கொள்ளமாட்டார்கள். அவர்களையும் நான் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருப்பவன். எனவே இவர்கள் இருவரும் யாராய் இருப்பர்?'' என்று ஐயுற்று நோக்குகிறான் சடாயு.

இங்கே ''மழுவலாளன்'' என்பது மழுப்படையையேந்திய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

98. சூர்ப்பணகைப்படலம்பக்களண்.442/12 சூர்ப்பணகை கூற்று

''சிந்தையின் உறைபவற்கு உருவம் தீர்ந்ததால்;
இந்திரற்கு ஆயிரம் நயனம்; ஈசற்கு
முந்திய மலர்க்கண் ஓர் மூன்று, நான்குதோள்
உந்தியில் உலகு அளித்தாற்கு'' என்று உன்னுவாள். (2743)

பஞ்சவடியில் இராமஇலக்குவரைக் கண்ட சூர்ப்பணகை அவர்கள் மேனியழகைக் கண்டு வியந்துகூறும் பாடல் இது.

''எல்லோருடைய மனத்திலும் தங்கி வாழ்பவனாகிய மன்மதனின் அங்கங்களைத்தான் சிவபெருமான் எரித்துவிட்டானே? தேவேந்திரனுக்குத்தான் ஆயிரம் கண்கள் இருக்குமே? சிவபெருமானுக்கோ பெருமைக்குரிய தாமரைமலர்போன்ற ஒப்பற்ற மூன்று கண்கள் இருக்கவேண்டுமே? தனது உந்தித் தாமரையினின்றும் இவ்வுலகைத் தோற்றுவித்த பிரமதேவனுக்கோ நான்கு தோள்கள் இருக்கவேண்டுமே? இவை எல்லாம் இல்லாத சாதாரண மரஉரி தரித்த மானிடர்கள்போல் அல்லவா இவர்கள் தோற்றுகிறார்கள்?'' என்று சூர்ப்பணகை, இராமஇலக்குவரைக் கண்டதும் அவர்கள் மேனியழகைக் கண்டு வியந்துபோய் நிற்கிறாள்.

இங்கே ''ஈசன்'' என்பது எல்லா ஐஸ்வர்யங்களுக்கும் தலைவனான சிவபெருமானைக் குறிக்கும் என்க.

99. சூர்ப்பணகைப்படலம்பக்கஎண்.442/13 சூர்ப்பணகை கூற்று

''கற்றை அம் சடையவன் கண்ணின் காய்தலால்,
இற்றவன், அன்று தொட்டு இன்று காறும், தான்
நற்றவம் இயற்றி, அவ்அனங்கன், நல் உருப்
பெற்றனனாம்'' எனப் பெயர்த்தும் எண்ணுவாள். (2744)

''தொகுதியான அழகிய சடைமுடியை உடையவனான சிவபெருமானின் நெற்றிக்கண்ணினால் எரிக்கப்பட்டு அங்கம் இழந்தவனான மன்மதன், அன்றிலிருந்து இன்றுவரை மிகப் பெருந்தவம் இயற்றி அதன் பயனாய் முன்னைவிட, இப்பொழுது மிக்க அழகிய வடிவம்பெற்று வந்திருக்கிறானோ?'' என்று மீண்டும் எண்ணத்தொடங்கினாள் சூர்ப்பணகை.

இங்கு ''கற்றைஅம் சடையவன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

100. சூர்ப்பணகைப்படலம்பக்கஎண்.446/39 சூர்ப்பணகை கூற்று

''பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி; முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவன் ஆன செங்கையோன் தங்கை; திக்கின்
மா எலாம் தொலைத்து, வெள்ளிமலை எடுத்து, உலகம் மூன்றும்
காவலோன் பின்னை; காமவல்லிஆம் கன்னி'' என்றாள். (2770)

தன்னை எதிர்நோக்கிவந்த சூர்ப்பணகையை வியந்து நோக்கிய இராமபிரான் ''ஏதுபதி? ஏதுபெயர்? யாவர்உறவு?'' என வினவியதற்குச் சூர்ப்பணகை பதில்கூறுவதாக அமைந்த பாடல் இது.

''தாமரைமலரில் உறைபவனான பிரமதேவனின் புதல்வனான புலத்தியனின் மைந்தனான விச்சிரவசுவின் புதல்வி நான்; முப்புரங்களையும்

சுட்டெரித்தவனும், காளையை ஊர்தியாகக் கொண்டு செலுத்துபவனுமான சிவபெருமானின் நண்பனும், கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கைகளையுடையவனுமான குபேரனின் தங்கை நான். எட்டுத்திக்குகளில் காவல்காத்து நிற்கும் சிறந்த யானைகள் எல்லாவற்றையும் தோற்கச்செய்தவனும், சிவபெருமான் வீற்றிருக்கின்ற கயிலைமலையையே பெயர்த்தெடுத்தவனும், மேல், நடு, கீழ் என்ற மூன்று உலகங்களையும் காத்துவருபவனுமாகிய இராவணனின் பின் பிறந்தவள்நான். என்பெயர் காமவல்லி என்பது; இன்னும் திருமணம் ஆகாத கன்னிப்பெண்'' என்று கூறுகிறாள் சூர்ப்பணகை. சே-இடபம்.

இங்கே ''முப்புரங்கள் செற்ற சேவலோன்'' என்பது சிவபெருமானைக் குறித்ததாகும்.

101. சூர்ப்பணகைப்படலம்பக்கஎண்.450/68 சூர்ப்பணகை கூற்று

பொற்புடை அரக்கி, ''பூவில், புனலினில், பொருப்பில் வாழும்
அற்புடை உள்ளத்தாரும், அனங்கனும், அமரர் மற்றும்
எற்பெறத்தவம் செய்கின்றார்; என்னை நீ இகழ்வது என்னே!
நற்பொறை நெஞ்சில் இல்லாக் கள்வியை நச்சி?'' என்றாள்.
(2799)

இராமபிரான் சூர்ப்பணகையை மணக்க இயலாது என்று பல காரணங்களைக்கூறி மறுத்தபோதும் அந்த அழகு நிரம்பிய அரக்கி சூர்ப்பணகை மேலும் அவனை நோக்கி, ''தாமரை மலரில் உறையும் பிரமதேவனும், பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலும், கயிலை மலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிவபெருமானும், மன்மதனும், மற்றும் உள்ள தேவர்கள் எல்லோரும் என்னிடம் மிக்க அன்புள்ளம் கொண்டு, என்னை அடைவதற்காகத் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். நீ என்னவோ என்னை இகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறாயே! நல்ல பொறுமைக்குணம் என்பதே கொஞ்சமும் இல்லாதவளான இந்தக் கள்ள மனம் கொண்ட பெண்ணை விரும்பித்தானே என்னை இகழ்ந்து பேசுகிறாய்?'' என்று கேட்கிறாள் சூர்ப்பணகை.

''அன்பு'' என்பது அற்பு என்றும், ''என்பெற'' என்பது ''எற்பெற'' என்றும் எதுகைநோக்கித் திரிந்தன.

இங்கே ''பொருப்பில் வாழும் அற்புடை உள்ளத்தார்'' என்பது வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையில் வாழுபவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

102. சூர்ப்பணகைப்படலம்பக்களண்.455/101 சூர்ப்பணகை கூற்று

''நிலை எடுத்து, நெடுநிலத்து நீ இருக்க, தாபதர்கள்
சிலை எடுத்துத் திரியும் இது சிறிதன்றோ? தேவர் எதிர்
தலையெடுத்து விழியாமைச் சமைப்பதே! தழல் எடுத்தான்
மலை எடுத்த தனி மலையே! இவை காண வாராயோ?''
(2832)

இலக்குவனால் மூக்கறுபட்ட சூர்ப்பணகை தன் தமையன் இராவணனைக் கூவி அழைக்கின்ற பாடல்களுள் இதுவும் ஒன்று.

''நெருப்பைக் கையிலேந்தி நிற்கும் சிவபெருமான் உறைகின்ற வெள்ளியங்கிரியையே அள்ளி எடுத்த ஆற்றல் உடையவனே! இராவணா! நீ இம்மூவுலகத்தையும் வென்று, நிலையான அரசாட்சி செய்து கொண்டிருக்கும்போது, தவக்கோலம் பூண்ட இந்த இரு மனிதர்கள் வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு திரியும் இந்தச் செய்கை சிறுமையுடையதல்லவா?, இது இகழ்ச்சிக்குரியதல்லவா? அவர்கள் என் மூக்கை அறுத்தெறிந்த இந்தக் கொடுமையைப் பார்க்க நீ விரைந்து வரமாட்டாயோ?'' என்று இராவணனைக் கூவி அழைக்கிறாள் சூர்ப்பணகை.

இங்கே ''தழல் எடுத்தான்'' என்பது நெருப்பைக் கையிலேந்தியுள்ள சிவபெருமானைக் குறிக்கும் என்க.

103. சூர்ப்பணகைப்படலம்பக்களண்.455/104 சூர்ப்பணகை கூற்று

''காற்றினையும், புனலினையும், கனலினையும், கடுங்காலக்
கூற்றினையும், விண்ணினையும், கோளினையும், பணி கொண்டற்கு
ஆற்றினை நீ; ஈண்டு இருவர் மானுடவர்க்கு ஆற்றாது
மாற்றினையோ உன் வலத்தை? சிவன் தடக்கை வாள் கொண்டாய்!''
(2835)

''சிவபெருமானின் பெரிய திருக்கரங்களினின்றும் சந்திரகாசம் என்னும் வாட்படையைப் பெற்றுக்கொண்டவனே! இராவணா! காற்று, நீர், நெருப்பு, கடுமையான காலத்திலும் காலந்தவறாது வந்து உயிரை உடம்பினின்றும் பிரிக்கும் இயல்புடைய இயமன், விண்ணுலகத்துத் தேவர்கள், ஒன்பது கிரகங்கள், முதலிய எல்லாவற்றையும் நீ ஏவல்கொள்ளும் ஆற்றல் பெற்றவனாயிற்றே? இப்போது இந்த இரு மனிதர்களின் ஆற்றலுக்குத் தாங்கமாட்டாது, உனது வலிமையை மாற்றிக் கொண்டு விட்டாயோ?'' என்று கூவி அழைக்கிறாள் சூர்ப்பணகை.

இங்கே ''சிவன்'' என்று நேராகவே சிவபெருமானைக் குறிக்கிறார் என்க.

104. சூர்ப்பணகைப்படலம்பக்களண்.455/107 சூர்ப்பணகை கூற்று

''மரன் ஏயும் நெடுங்கானில் மறைந்துறையும் தாபதர்கள்
உரனேயோ? அடல் அரக்கர் ஓய்வேயோ? உற்று எதிர்ந்தார்,
அரனேயோ? அரியேயோ? அயனேயோ?'' எனும் ஆற்றல்
கரனேயோ? யான்பட்ட கையறவு காணாயோ?'' (2838)

''முன்பு உன்னை வந்து எதிர்த்துப் போரிடும் பகைவர்கள் சிவபெருமானாக இருந்தாலும்சரி, திருமாலாக இருந்தாலும்சரி, பிரமதேவனாக இருந்தாலும்சரி, அவர்களையெல்லாம் எதிர்த்துப் போரிட்டு வெற்றிகொண்ட வலிய கரங்களைக் கொண்ட அண்ணா!! இராவணா!! இப்போது என்னுடைய இந்தத் துன்ப நிலையை வந்து காணமாட்டாயா? நீண்ட காடுகளில், மரங்களில் பொருந்தி, மறைந்து வாழும் இந்த தவவேடம் தாங்கிய மானிடர்கள், உன்னைவிட மிக வலிமைபெற்று விட்டார்களா? அல்லது வலிமைமிக்க நமது அரக்கர்கள் படைகள் எல்லாம் ஓய்வெடுத்துக்கொண்டு விட்டனவா?'' என்று கேட்டு அழுது அரற்றுகிறாள் சூர்ப்பணகை.

இங்கே **''அரனேயோ''** என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

105. சூர்ப்பணகைப்படலம்பக்களண்.456/109 சூர்ப்பணகை கூற்று

''உரன் நெரிந்துவிழ, என்னை உதைத்து, உருட்டி, மூக்கரிந்த
நரன் இருந்து தோள் பார்க்க, நான் கிடந்து புலம்புவதோ?
கரன் இருந்த வனம் அன்றோ? இவை படவும் கடவேனோ?
அரன் இருந்த மலையெடுத்த அண்ணாவோ! அண்ணாவோ!!
(2840)

''சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையையே பெயர்த்தெடுத்த அண்ணா! இராவணா!! என்னுடைய மார்பு நொறுங்கிப்போகும்படி என்னைப் பிடித்து உதைத்து, நிலத்தில் உருட்டிவிட்டு, என்னுடைய மூக்கையும் அறுத்தெறிந்த அந்த மனிதன் இலக்குவன், தன் தோள்வலிமையைப் பார்த்துப் பூரித்துக்கொண்டு நிற்க, நான் இவ்வாறு தரையில் கிடந்து புலம்பிக் கொண்டிருப்பது தகுமோ? இந்த ஜனஸ்தானம் நமது கரன் இருந்து காவல்புரிந்த வனம் அல்லவா? அது இவ்வாறு சீர் குலைந்து போகவும், நான் இவ்வாறு துயரப்படவும் கடமைப்பட்டவளோ!'' என்று கேட்டுப் புலம்புகிறாள் சூர்ப்பணகை.

இங்கேயும் **''அரன்''** என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

106. சூர்ப்பணகைப்படலம்பக்களண்.459/132 சூர்ப்பணகை கூற்று

''சிவனும், மலர்த்திசை முகனும், திருமாலும், தெறுகுலிசத்து
அவனும், அடுத்து ஒன்றாகி நின்றன்ன உருவோனே!
புவனம் அனைத்தையும் ஒருதன் பூங்கணையால் உயிர்வாங்கும்
அவனும், உனக்கு இளையானோ? இவனேபோல் அருள் இலனால்''
(2863)

''சிவபெருமானும், தாமரைமலரில் வீற்றிருக்கும் நான்முகனாகிய பிரமதேவனும், திருமாலும், பகைவர்களை அழிக்கக்கூடிய வல்லமைவாய்ந்த வச்சிரப்படையைக் கொண்டவனான இந்திரனும், எல்லோரும் ஒன்றுசேர்ந்து வந்து நிற்பதுபோல் நிற்கும் வடிவழகுடையவனே! இராமா!! மெல்லிய ஒப்பற்ற மலரம்புகளால் இந்த உலகத்துள்ள அனைவரின் உயிரையும் பறிக்கும் அந்த மன்மதன் உனக்கு இளைய தம்பியோ? என்னை உறுப்பரிந்த இந்த இலக்குவனைப்போல சிறிதும் கருணை கொள்ளாமல் அவனும் அவனது மலர்க்கணைகளால் என் உயிரை வாங்குகிறானே?'' என்று புலம்புகிறாள் சூர்ப்பணகை.

இங்கே ''சிவனும்'' என்று நேராகவே சிவபெருமானைக் குறிக்கிறார் என்க.

107. கரன்வதைப் படலம் பக்களண்.465/22 கவிக்கூற்று.

''அங்கு அரக்கர் அவிந்து அழிந்தார்'' என,
பொங்கு அரத்தம் விழிவழிப் போந்து உக,
வெங் கரப் பெயரோன், வெகுண்டான், **விடைச்**
சங்கரற்கும் தடுப்ப அரும் தன்மையான். (2896)

இடபத்தை வாகனமாகக் கொண்டுள்ளவனும், அழித்தல் தொழிலையுடையவனுமான சிவபெருமானாலேயே தடுத்தற்கரிய பேராற்றல்படைத்த கரன் என்னும் பெயர்கொண்ட அந்தக் கொடிய அரக்கன், ''அங்கே போர்க்களத்தில் அரக்கர்கள் பதினால்வரும் இறந்து அழிந்துபோனார்கள்'' என்பதைக் கேட்டதும், கண்களின் வழியே இரத்தம் பொங்கிச் சிந்துமாறு பெரும் சீற்றம் கொண்டான்'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''விடைச்சங்கரன்'' என்பது இடபவாகனத்தை உடைய சம்காரக் கடவுளாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

108. கரன்வதைப் படலம் பக்களண்.475/97 கவிக்கூற்று.

நாகத்தனி ஒரு வில்லியை, நளிர் முப்புரர், முன்நாள்
மாகத்திடை வளைவுற்றனர் என, வள்ளலை மதியார்,
ஆகத்து எழு கனல் கண்வழிஉக, உற்று எதிர் அழன்றார்;
மேகத்தினை நிகர் வில்லியை வளைத்தார், செரு விளைத்தார்.
(2971)

ஒப்பற்ற மேருமலையையே தனது வில்லாகக் கொண்டவனாகிய சிவபெருமானை, முன்பு அடர்ந்து நெருங்கியவரான முப்புரத்தார்களும் ஆகாயத்தில் வளைத்துச் சூழ்ந்துகொண்டதைப்போல, இப்பொழுது கரனுடைய படைத்தலைவர்கள், கரிய மேகத்தினைப் போன்றவனும், வில்லாற்றலில் சிறந்தோனுமாகிய வள்ளல் இராமபிரானை, சற்றும் மதிக்காமல், தம் உள்ளத்தில் எழுகின்ற நெருப்பாகிய சினத்தீ கண்கள் வழியாக வெளிப்பட்டுச் சிந்தும் வண்ணம், அவனைச் சுற்றி நின்று எதிர்த்து வந்து போர்புரிய முற்பட்டனர்.

இங்கே ''நாகத்தனி ஒரு வில்லி'' என்பது முன்பு முப்புரங்களைச் சுட்டெரிக்க மேருமலையையே வில்லாகக் கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க. நாகம்-மலை

109. கரன்வதைப் படலம் பக்கஎண்.477 / 113 கவிக்கூற்று

அத்தலைத் தானையன், அளவுஇல் ஆற்றலன்,
முத்தலைக் குரிசில், பொன்முடியன்; முக்கணான்
கைத்தலைச் சூலமே அனைய காட்சியான்,
வைத் தலைப் பகழியால், மழைசெய் வில்லினான். (2987)

படைத்தலைவர் பதினால்வரும் இறந்துபட இப்போது திரிசிரா, போர்க்களத்துள் வந்து போர்செய்தலைக் குறிக்கும் பாடல் இது.

அந்தப் பெரும்படையை உடையவனும், அளவுகடந்த போராற்றல் பெற்றவனும், மூன்று தலைகளையுடையவனும் ஆண்களில் சிறந்தவனும், பொன்னாலாகிய மகுடத்தையுடையவனுமான திரிசிரா என்னும் அரக்கன், மூன்று கண்களை உடைய சிவபெருமான் கையில் ஏந்தியிருக்கும் முத்தலைச் சூலத்தைப்போன்ற தோற்றத்தையுடையவன், கூர்மையான நுனியை உடைய அம்புகளை வில்லில் தொடுத்து மழைபோலப் பொழியலானான்.

இங்கே ''முக்கணான்'' என்பது மூன்று கண்களையுடைய சிவபெருமானையும், ''கைத்தலைச் சூலம்'' என்பது அவன் கைகளில் கொண்டிருக்கும் முத்தலைச் சூலத்தையும் குறிக்கும் என்க.

110. கரன்வதைப் படலம் பக்கஎண்.484 / 171 கவிக்கூற்று.

செறுத்து இறுதியில் புவனி தீய எழு தீயின்,
மறத்தின் வயிரத்து ஒருவன் வந்து அணுகும் முந்தை,
கறுத்த மணிகண்டர் கடவுட் சிலை கரத்தால்
இறுத்தவனும், வெங்கணை தெரிந்தனன், எதிர்ந்தான். (3045)

திரிசிராவும், தூடணனும் இராமபிரானால் அழிக்கப்பட்ட பின்னர், கரன் தன் படையோடும் வந்து எதிர்க்கின்ற நிகழ்வைக் கூறும் பாடல் இது.

ஊழியிறுதிக்காலத்தில் இவ்வுலகமே அழிந்துபோகும் வண்ணம் சினந்து எழுகின்ற வடஅனல்போல, வீரத்துடனும், வைராக்கியத்துடனும், ஒப்பற்றவனான கரன் வந்து தன்னை நெருங்குவதற்கு முன்பே, கரிய நீலநிறம் பொருந்திய அழகிய கழுத்தினையுடைய சிவபெருமானது தெய்வத்தன்மை பொருந்திய சிவதனுசை, தனது கைகளாலேயே ஒடித்துப்போக்கியவனான இராமபிரான், கொடிய அம்புகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அந்தக் கரனை எதிர்த்துப் போர்செய்யத் தொடங்கினான்.

இங்கே ''கறுத்த மணிகண்டர்'' என்பது கரிய அழகிய கழுத்தை உடையவர் என்று சிவபெருமானையும், ''கடவுட்சிலை'' என்பது தெய்வத்தன்மை பொருந்திய சிவதனுசுவையும் குறிக்கும் என்க.

111. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்கஎண்.488/3 கவிக்கூற்று

புலியின் அதள் உடையானும், பொன்னாடை
புனைந்தானும், பூவினானும்
நலியும் வலத்தார் அல்லர்; தேவரின் இங்கு
யாவர் இனி நாட்டல் ஆவார்?
மெலியும் இடை, தடிக்கும் முலை, வேய் இளந்தோள்,
சேயரிக்கண், வென்றி மாதர்
வலிய நெடும் புலவியினும் வணங்காத
மகுட நிரை வயங்க மன்னோ! (3069)

கரன் இறந்துபட்ட செய்தியைக் கூற இலங்கைக்கு ஓடி வருகிறாள் சூர்ப்பணகை. அப்போது இராவணன் திருவோலக்கத்தில் வீற்றிருக்கிறான். அந்த நிலையை எடுத்துக்காட்டும் பாடல் இது.

''புலியின் தோலை ஆடையாக அணிந்து கொண்டிருக்கின்ற சிவபெருமானும், அழகிய உத்தரீயத்தை ஆடையாக அணிந்திருக்கின்ற திருமாலும், தாமரைமலரில் விளங்குகின்ற பிரமதேவனும் இந்த இராவணனுக்கு வருத்தம் தரும் செய்கைகளைச் செய்யும் வல்லமை பெற்றவர்கள் அல்லர்; என்றால் தேவர்களுக்குள்ளே வேறு யார்தான் இவனுடன் போரிட்டு வெற்றி கொள்ளமுடியும்? ஒருவராலும் முடியாது. இவன் வணங்காமுடியன். மெல்லிய இடை, பருத்த தனங்கள், மூங்கில் போன்ற இளமையான தோள்கள், சிவந்த இரேகையும் வரிகளும் ஓடும் கண்களை உடையவரும் எப்போதும் வெற்றிபெறுகின்ற இயல்புடைய வருமான பெண்களிடம்கூட, வன்மையான நீண்ட ஊடற்காலத்திலும்கூட தனது மகுடங்கள் அணிந்த முடிவரிசை சற்றும் தாழ்ந்து வணங்காத பத்துத் தலைகளை உடைய இராவணன் திருவோலக்கத்தில் பொலிவு பெற்று வீற்றிருக்கும்போது - பாடல் தொடர்கிறது.

இங்கே ''புலியின் அதள் உடையான்'' என்பது புலித்தோலை இடையில் அணிந்திருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும். ''பொன்னார் மேனியனே! புலித்தோலை அரைக்கு அசைத்து'' என்பது தேவாரம். மன்னோ என்பது அசை.

112. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்கஎண்.492/28 கவிக்கூற்று

''இந்திரன் மேலதோ? உலகம் ஈன்ற பேர்
அந்தணன் மேலதோ? ஆழியானதோ?
சந்திர மௌலிபால் தங்குமே கொலோ,
அந்தரம்?'' என்று நின்று அழல்கின்றார் சிலர். (3094)

அவ்வாறு இலங்கை மாநகருக்குள் இரத்த வெள்ளத்தோடு அரசவையை நோக்கி ஓடிவருகின்ற சூர்ப்பணகையை நோக்கி நகரமாந்தர்கள் கூறுவதாக வருவது இப்பாடல்.

''இவள் பெற்று வந்திருக்கின்ற இந்த இழிவின்பயன், இந்திரனிடத்துப்போய்ச் சேருமோ? அல்லது இவ்வுலகத்தைத் தோற்றுவித்த பெரியவனான பிரமதேவனிடத்துப்போய்ச் சேருமோ? அல்லது சக்கரப்படையை உடைய திருமாலைப் போய்ச்சேருமோ? அல்லது இளம்பிறைச் சந்திரனைத் தனது சடைமுடியில் தரித்துக் கொண்டிருக்கும் சிவபெருமானைப்போய்ச் சேருமோ?'' என்று கொதிக்கின்றார்கள் என்கிறான் கவிஞன்.

இங்கே ''சந்திரமௌலி'' என்பது பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமானைக் குறித்தது என்க. இவளை இந்த நிலையில்கண்ட பின்பு, இராவணனின் சீற்றம் இந்திரனிடமோ, பிரமதேவனிடமோ, திருமாலினிடமோ, சிவபெருமானிடமோ, சென்று சேரப்போகிறது என்று அஞ்சுகின்றனர் நகரமக்கள் என்பதாம்.

113. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்கஎண்.492/31 கவிக்கூற்று

''போர்இலான் புரந்தரன், ஏவல் பூண்டனன்;
ஆர்உலாம் நேமியான், ஆற்றல் தோற்றுப்போய்,
நீரினான்; நெருப்பினான்; பொருப்பினான்; இனி
ஆர்கொலாம் ஈது?'' என அறைகின்றார் சிலர். (3097)

''இந்திரனோ இராவணனுக்கு அஞ்சி, அவனோடு போர்புரிதலை நிறுத்திவிட்டு, அவனுக்கு ஏவல்கூவல் பணி செய்துகொண்டிருக்கிறான்; கூர்மையான சக்கரப்படையைக் கையில் ஏந்தியிருக்கும் திருமாலோ இராவணனுடைய போராற்றலுக்குத் தோற்றுப்போய் நீராகிய பாற்கடலில்போய்ப் படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறான்; நெருப்பைக்

கையில் ஏந்திக் கொண்டிருப்பவனாகிய சிவபிரானோ, இராவணனுக்கு அஞ்சி வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையில்போய் தன்னை ஒளித்துக் கொண்டுவிட்டான். இவ்வாறு இருக்கும்போது இப்போது இத்தகைய கொடுமையான செயலைச் செய்தவர் யாராக இருக்கமுடியும்?'' என்று தமக்குள் பேசிக்கொள்கிறார்கள் இலங்கை நகரத்து மக்கள் என்பதாம்.

இங்கே ''நெருப்பினான் பொருப்பினான்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

114. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்கஎண்.494/43 கவிக்கூற்று

''அங்கையின் அரன் கயிலை கொண்ட திறல் ஐயன்
தங்கைநிலை இங்கு இதுகொல்?'' என்று, தளர்கின்றார்;
கொங்கை இணை செங்கையின் மலைந்து குலை கோதை
மங்கையர்கள் நங்கை அடிவந்து விழுகின்றார். (3109)

நிலைகுலைந்துபோன கூந்தலையுடைய அரக்கியர்கள், ''தனது உள்ளங்கையாலேயே, சிவபெருமான் வீற்றிருக்கின்ற கயிலைமலையைப் பெயர்த்தெடுத்து வைத்துக்கொண்ட ஆற்றல் பெற்றவனான இராவணனின் தங்கை சூர்ப்பணகைக்கு இத்தகைய நிலை உண்டாகலாமா? இது எவ்வாறு நிகழ்ந்தது?'' என்று சோர்ந்துபோய், தமது இரண்டு கொங்கைகளிலும் தங்கள் சிவந்த கைகளைக்கொண்டு அடித்துக்கொண்டு அழுதுகொண்டே சூர்ப்பணகையின் காலடியில்வந்து வீழ்கின்றார்கள்.

இங்கே ''அரன் கயிலை'' என்பது சிவபெருமான் வீற்றிருக்கும் வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையைக் குறித்தது என்க.

115. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்கஎண்.496/60 இராவணன் கூற்று

''மூளும் உளது ஆயபழி என்வயின் முடித்தோர்,
ஆளும் உளதாம்; அவரது ஆர்உயிரும் உண்டாம்;
வாளும் உளது; ஓத விடம் உண்டவன் வழங்கும்
நாளும் உள; தோளும் உள; நானும் உளன் அன்றோ?''
(3126)

சூர்ப்பணகை கூறியதுகேட்ட இராவணன் தன்னைத்தானே நொந்துகொண்டு கூறும் பாடல் இது.

''மீண்டும் மீண்டும் கிளைத்து எழுகின்ற பழியை என்னிடத்துத்தந்து அதனை முடித்துக்கொண்டவர்களான அந்த ஆட்கள் இன்னும் இருக்கின்றனராம்; அவர்கள் இன்னும் உயிருடனே இருக்கின்றனராம்; கடலில் எழுந்த ஆலகால விஷத்தைப் பருகியவனான சிவபெருமான்

எனக்களித்த அவனுடைய வாட்படையும், அவன் எனக்கு அளித்த முக்கோடி வாழ்நாளும் என்னிடம் இன்னும் இருக்கின்றன. என்னுடைய பேராற்றல் வாய்ந்த இருபது தோள்களும் இருக்கின்றன; நானும் இன்னும் உயிருடன் இருக்கின்றேனே!'' என்று தன்னைத்தானே நொந்து கூறிக்கொள்ளுகிறான் இராவணன்.

இங்கே ''ஓதவிடம் உண்டவன்'' என்பது பாற்கடலில் முதலில் எழுந்த ஆலகால விஷத்தைப் பருகியவன் என்று சிவபெருமானைக் குறித்தது என்க.

இங்கே ''ஆளும் உளதாம்'' என்ற சொற்றொடரும் கூர்ந்து நோக்கத்தக்கது. இராவணன் மனிதர்களை ஒரு பொருட்டாகவே மதிப்பவனல்லன். எனவே மானுடர் என்றோ, இராம இலக்குவர் என்றோ, மனிதர் என்றோ, மனிசர் என்றோகூடக் கூறாது, ''ஆள்'' என்று கூறியிருக்கும் அலட்சியப்பான்மை நோக்குக.

''தோளாண்மைகருதி, வரையெடுத்த தூர்த்தன் தோள்வலியும், தாள்வலியும் தொலைவித்து, ஆங்கே, நாளோடு வாள் கொடுத்த நம்பன் தன்னை நரையூர் நன்னகரில் கண்டேன் நானே!'' என்பது அப்பர் தேவாரம்.

116. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்கஎண்.498/71
சூர்ப்பணகை கூற்று

''ஈசனார் கண்ணின் வெந்தான்'' என்னும் ஈது இழுதைச்சொல்; இவ்
வாசம்நாறு ஓதியாளைக் கண்டனன், வவ்வல் ஆற்றான்,
பேசலாம் தகைமைத்து அல்லாப்பெரும்பிணி பிணிப்ப, நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான் அனங்கன் அவ்வுருவம் அம்மா!''
(3137)

''அந்த மன்மதன் இருக்கிறானே, அவன் இந்த நறுமணம்கொண்ட கூந்தலையுடைய சீதையைக் கண்டிருக்கிறான்; அவளைக் கவர்ந்துபோக எண்ணியிருக்கிறான்; அது நடக்காமல் போகவே, என்னதன்மைத்து என்று கூறவேமுடியாத பெரும் காம நோய் அவனை வந்து பிடித்துக்கொள்ள, அவன் அவள்மீது கொண்ட பேராசையால், தானாகவே உடல் தேய்ந்து அழிந்து போயிருப்பானேயன்றி, அவன் சிவபெருமானின் நெற்றிக்கண் பட்டு வெந்து அழிந்தான் என்று கூறுவதெல்லாம் அறியாமையின் பாற்பட்டதாகும்'' என்று சூர்ப்பணகை இராவணனுக்கு, ''மன்மதன் சீதையைக் கவர்ந்து செல்ல எண்ணினான். அது அவனால் முடியாது போயிற்று, ஆனால் உன்னால் முடியும் அண்ணா'' என்று கூறாமல் கூறுவதுபோல் அமைந்தது இந்தப்பாடல்.

இங்கே ''ஈசனார்'' என்பது எல்லா ஐஸ்வர்யங்களுக்கும் தலைவனான ஈசன் என்று நேராகவே சிவபெருமானைக் குறித்தது என்க.

117. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்கஎண்.498/75
சூர்ப்பணகை கூற்று

''இந்திரன் சசியைப் பெற்றான்; இருமூன்று வதனத்தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்றான்; தாமரைச் செங்கணானும்
செந் திருமகளைப் பெற்றான்; சீதையைப் பெற்றாய் நீயும்;
அந்தரம் பார்க்கின், நன்மை அவர்க்கு இலை, உனக்கே ஐயா!''
(3141)

மேலும் சூர்ப்பணகை இராவணனை நோக்கி, ''இந்திரன் இந்திராணியைத் தன் மனைவியாகப் பெற்றான்; ஆறுமுகம் கொண்ட முருகப்பெருமானின் தந்தையாகிய சிவபெருமான் உமையம்மையைத் தன் துணைவியாகப் பெற்றான்; தாமரைமலர் போன்ற சிவந்த கண்களை உடைய திருமால் செம்மையான திருமகளை-இலக்குமியைத் தன் வாழ்க்கைத் துணையாகப் பெற்றான். நீகூட சீதையைப் பெற்றுவிட்டாய்; இவர்களுக்கும் உனக்கும் உள்ள வேறுபாட்டை ஆராய்ந்து பார்த்தால் இதனால் உனக்குத்தான் பெரும் நன்மை கிடைக்கும். அவர்களுக்குக் கிடைப்பதற்கு இல்லை. அவர்களைக் காட்டிலும் உனக்கே நன்மைகள் மிகுதியாக விளையும்'' என்கிறாள் சூர்ப்பணகை என்பதாம்.

இங்கே ''இருமூன்று வதனத்தோன்தன் தந்தை'' என்பது ஆறுமுகம் கொண்ட முருகப்பெருமானின் தந்தையாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

118. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்கஎண்.498/76
சூர்ப்பணகை கூற்று.

''பாகத்தில் ஒருவன் வைத்தான்; பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்; அந்தணன் நாவில் வைத்தான்;
மேகத்தில் பிறந்த மின்னை வென்ற நுண் இடையினாளை
மாகத் தோள்வீர! பெற்றால், எங்ஙனம் வைத்து வாழ்தி?''
(3142)

சூர்ப்பணகை இராவணனை நோக்கி ''வானளாவ உயர்ந்த தோள்களைப் பெற்ற வீரனே! இராவணா! ஒப்பற்றவனாகிய சிவபெருமான் தனது மனைவி உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் வைத்துப் போற்றுகிறான்; ஒப்பற்ற திருமாலோ, தாமரைமலரில் வீற்றிருக்கும் அழகிய திருமகளைத் தன் மார்பில் வைத்துப் போற்றுகிறான். அழகிய தண்ணளி-கருணை உடையவனாகிய பிரமதேவன் தனது துணைவி கலைமகளைத் தன் நாவிலே வைத்துப் போற்றுகிறான்; மேகத்தினின்றும் தோன்றுகின்ற மின்னலை ஒத்த நுட்பமான இடையை உடையவளான சீதாதேவியை நீ அடையப்பெற்றால் எங்கே வைத்து எவ்வாறு வாழ்வாய்?'' என்று கேட்கிறாள்.

இங்கே ''பாகத்தில் ஒருவன் வைத்தான்'' என்பது உமையம்மையைத் தன் இடப்பாகத்திலே கொண்டு விளங்கும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

119. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்கஎண்.499/83 கவிக்கூற்று

கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால், முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட மங்கையை மறந்திலாதான்.
(3149)

முன்பு சிவபெருமானையும் வெற்றிகொண்ட மன்மதனது மலரம்புகளால் தாக்கப்பெற்ற இராவணன், சீதாதேவிபற்றி சூர்ப்பணகை கூறியதைக்கேட்ட அளவில், அங்கே ஜனஸ்தானத்தில் மாண்டுபோன தன் சகோதரன் கரனையும் மறந்தான்; தனது தங்கை சூர்ப்பணகையின் மூக்கை அறுத்தெறிந்த பின்னும், இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இலக்குவனின் பேராற்றலையும் மறந்து போனான். அதனால் தனக்கும், தன் குலத்துக்கும், தன் நாட்டுக்கும் உண்டாகியிருக்கின்ற பழியையும் மறந்துபோனான்; முன்பு சிவபெருமானிடமிருந்தும், பிரமதேவனிடமிருந்தும் தான் பெற்ற எண்ணற்ற வரங்களின் வன்மையையும் மறந்துபோனான். ஆனால் சீதாதேவியை மட்டும் மறக்காதவனாக நின்றிருந்தான்.

இங்கே ''அரன்'' என்பது சிவபெருமானைக் குறித்தது என்க.

120. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்கஎண்.506/135 கவிக்கூற்று

தாது உண் சடிலத்தலை வைத்தது தண் தரங்கம்
மோதும் கடலிற்கிடை முந்து பிறந்த போதே,
ஓதும் கடுவைத் தன் மிடற்றில் ஒளித்த தக்கோன்
''ஈதும் கடு ஆம்'' என எண்ணிய எண்ணம் அன்றே? (3201)

இராவணன் விரகதாபத்தால் சந்திரன், பகலவன், பிறை முதலியவற்றைப் பழித்துரைப்பது பற்றிக் கூறுவது இப்பாடல்.

குளிர்ச்சிபொருந்திய அலைகள் வீசுகின்ற பாற்கடலைக் கடைந்தபோது, முதன்முதலாக அதனிடமிருந்து, கடுமையானது என்று கூறப்படும் ஆலகால விஷம்தான் தோன்றியது. அதை விழுங்கித் தன் கழுத்தில் நிறுத்திக்கொண்ட பெருந்தன்மையானவன் சிவபெருமான். அவன்கூட, அதற்கு முன்னர்த் தோன்றிய இளம்பிறைச்சந்திரனை ஏன் தெரியுமா உள்ளே விழுங்காமல் தலையின் மேற்புறத்திலேயே மகரந்தத் துகள் நிறைந்த கொன்றை மலர் சூடப்பெற்ற சடைமுடியில் தரித்துக்கொண்டான்? அந்தக் கொடிய

விஷத்தைவிடக் கொடுமையானது இந்தச் சந்திரன் என்பதால்தான் ''என்று இராவணன் தன் விரகதாபத்தைத் திங்களின்மீது ஏற்றிச் சொல்லுகிறான் என்பதாம்.

இங்கே ''கடுவைத் தன் மிடற்றில் ஒளித்த தக்கோன்'' என்பது ஆலகாலவிஷம் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் எந்தத் தீங்கும் விளைவித்து விடக் கூடாது என்ற நோக்கத்தோடு அவ்விஷத்தைத் தானே விழுங்கித் தன் தொண்டையில் நிறுத்திக்கொண்ட பெருந்தன்மையுடையவன் என்று சிவபெருமானைக் குறித்தது என்க.

121. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்களண்.507/140 இராவணன் கூற்று

விள்ளாது செறிந்து, இடைமேல் உற ஓங்கி, எங்கும்
நள்ளா இருள் வந்து, அகன் ஞாலம் விழுங்கலோடும்,
''எள்ளா உலகு யாவையும், யாவரும் வீவது என்பது
உள்ளாது, உமிழ்ந்தான், விடம் உண்ட ஒருத்தன்'' என்றான்.
(3206)

பிளவுபடாமல் நெருங்கி, மண்ணுலகுக்கும் விண்ணுலகுக்கும் பொருந்துமாறு ஓங்கி உயர்ந்து, இவ்வுலகம் முழுவதும் யாராலும் விரும்பப்படாததான இருட்பிழம்பு வந்து இந்த இடம் அகன்ற உலகத்தை விழுங்கும்போது இகழ்தற்குரியதல்லாத இவ்வுலகமும், உலகத்து உயிரினங்களும், வீழ்ந்து அழிந்துபோகும் என்பதைச் சற்றும் எண்ணிப்பார்க்காமல், அந்த ஆலகால விஷத்தை உண்டவனான ஒப்பற்ற சிவபெருமான் மீண்டும் அதை உமிழ்ந்துவிட்டான் போலும்'' என்று இராவணன் விரகதாபத்தால் இருட்டைப் பழித்துப் புலம்புகிறான்.

இங்கே ''விடம் உண்ட ஒருத்தன்'' என்பது பாற்கடலினின்றும் எழுந்த ஆலகால விஷத்தைப் பருகிய ஒப்பற்றவனான சிவபெருமானைக் குறித்தது என்க. சிவபெருமான் உண்டு உமிழ்ந்த நஞ்சே இப்போது இருட்பிழம்பாகத் தோன்றுகிறது என்பது இராவணன் கருத்து. இப்போது இராவணன் விரகதாபத்தால் நோக்கும் கரிய இருட்பிழம்புக்கு சிவபெருமான் உண்ட கடுநஞ்சு ஒப்பு.

122. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பக்களண்.507/141 இராவணன் கூற்று

''வேலைத்தலை வந்து, ஒருவன் வலியால் விழுங்கும்
ஆலத்தின் அடங்குவது அன்று இது; அறிந்து உணர்ந்தேன்;
ஞாலத்தோடு விண்முதல் யாவையும், நாவின் நக்கும்
காலக்கனல் கார்விடம் உண்டு கறுத்தது அன்றே!'' (3207)

''பாற்கடலினின்றும் தோன்றிய விஷத்தை, ஒப்பற்றவனான சிவபெருமான் தனது வலிமையால் உட்கொண்ட ஆலகால நஞ்சைப்போல் ஓரிடத்திற்குள் கழுத்திற்குள் அடங்குவது அல்ல இந்தப் பேரிருள். அதனை நான் நன்கு அறிந்து தெளிந்து கொண்டேன். இந்நிலவுலகத்தோடு விண்ணுலகத்தையும், மற்றும் ஏனைய உலகங்களையும் தன் நாவினாலேயே நக்கி அழிக்கும் ஊழிக்கால நெருப்பே, இந்தக் கரிய நஞ்சை உண்டு இவ்வாறு கறுத்துப்போய் விளங்குகிறது'' என்று புலம்புகிறான் இராவணன்.

இங்கே ''ஒருவன்'' என்பது ஒப்பற்ற சிவபெருமானைக் குறிக்கும்.

123. மாரீசன் வதைப்படலம் பக்களண்-513/19 இராவணன் கூற்று

''கங்கை சடை வைத்தவனோடும், கயிலை வெற்பு ஓர்
அங்கையின் எடுத்த எனது ஆடு எழில் மணித்தோள்
இங்கு ஒரு மனிதற்கு எளிய'' என்றனை'' என, தன்
வெங்கண் எரிய, புருவம் மீதுற, விடைத்தான். (3255)

சீதாதேவியை உருவெளியிற் கண்ட இராவணன் அவளை எப்படியும் அடையவேண்டும் என எண்ணி, மந்திரியரோடு ஆலோசனை செய்தான். பின்னர் தானே தனியாக வேறொருவர் துணையும் இன்றித் தன் மாமன் மாரீசன் தனித்துத் தவம் செய்து கொண்டிருக்கும் தவச்சாலை வந்து அவனுடைய உதவியைப் பெற முயற்சிக்கும் போது வருகின்ற பாடல் இது.

''ஆகாய கங்கையைத் தன் சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமானோடு, அவன் உறையும் கயிலைமலையை ஒப்பற்ற என் உள்ளங்கையால் பெயர்த்தெடுத்து வந்த என்னுடைய வெற்றியும் வலிமையும் நிறைந்த அழகிய மணி அணிபூண்ட திண்தோள்கள், இந்த அற்பமான மனிதர்களுக்குமிக எளிமையானது என்று கூறிவிட்டாயே!'' என்று மாரீசனை நோக்கித் தனது கொடிய கண்கள் நெருப்பைச் சிந்தவும், புருவங்கள் நெற்றியின்மீது ஏறவும் கொதித்தான் இராவணன்.

இங்கே ''கங்கை சடைவைத்தவன்'' என்பது ஆகாயகங்கையைத் தனது சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

124. மாரீசன் வதைப்படலம் பக்களண்-514/22 மாரீசன் கூற்று

''எடுத்த மலையே நினையின்,, ''ஈசன், இகல் வில்லாய்
வடித்தமலை நீ இது வலித்தி'' என, வாரிப்
பிடித்தமலை, நாண் இடை பிணித்து, ஒருவன் மேல்நாள்
ஒடித்தமலை, அண்ட முகடு உற்ற மலை அன்றோ?'' (3258)

மாரீசன் இராமபிரானின் ஆற்றலை இராவணனுக்கு எடுத்துரைக்கும் பாடல் இது.

''நீ பெயர்த்தெடுத்த கயிலாய மலையையே எண்ணிக் கொண்டிருக்கிறாயே! முன்பு சிவபெருமான் போர் செய்வதற்கென்று மேருமலையை வில்லாய் வளைத்து எடுத்துக்கொண்டுபோனானே! அந்த மேருமலை போன்ற வில்லை வளைப்பாயாக என்று சனகமன்னன் இராமபிரானை வேண்டியபோது, அதை மிக எளிதாக ஏடவிழ்மாலை என்று கையில் எடுத்து, நாண் இடையில்பூட்டி, அதனை ஒடித்தவன் அல்லவா நீ எதிர்க்கப்போகும் அந்த இராமபிரான்? அந்த மேருமலை வானவெளிப்பரப்புக்கும் அப்பாற்பட்டு மேம்பட்டு நிற்பது அல்லவா?'' என்று மாரீசன் இராமபிரான் பேராற்றலை எடுத்துரைக்கிறான்.

இங்கே ''ஈசன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

125. மாரீசன் வதைப்படலம் பக்களண்-514/25 மாரீசன் கூற்று

ஈசன் முதல் மற்றும் இமையோர் உலகும் மற்றைத்
தேசம் முதல் முற்றும், ஓர் இமைப்பின் உயிர் தின்ப,
கோசிகன் அளித்த கடவுட்படை, கொதிப்போடு
ஆசுஇல, கணிப்புஇல, இராமன் அருள் நிற்ப. (3261)

மாயமானாக மாறிப்போகவேண்டும் என்று மாரீசனை இராவணன் வேண்டிக்கொண்டபோது, மாரீசன் இராமபிரான் ஆற்றலையும் தெய்வீகத்தன்மையையும் இராவணனுக்கு எடுத்துக்கூறுகின்ற பாடல் இது.

''சிவபெருமான் முதலாக மற்றுமுள்ள தேவர்கள் அனைவரும் வாழும் எல்லா உலகங்களையும், அங்குவாழும் உயிரினங்கள் எல்லாவற்றையும் ஒரே நொடிப்பொழுதில் அழித்து ஒழிக்கவல்ல ஆற்றல்பெற்றவனும், விசுவாமித்திரன் மனம் உவந்து அளித்த தெய்வீகத்தன்மை வாய்ந்த படைக்கலன்களை உடையவனும், மிக்கக் கடுமையோடு கூடியனவும், குற்றமற்றனவும், எண்ணிக்கையில் அடங்காதவையுமான அஸ்திர சஸ்திரங்கள் இராமபிரான் கட்டளைக்காக ஏங்கி நிற்பனவாகும்'' என்று விசுவாமித்திரன் இராமஇலக்குவர்க்கு அளித்த படைக்கலன்களின் பெருமைபற்றி மாரீசன் இராவணனுக்கு எடுத்துரைக்கிறான்.

இங்கே ''ஈசன்'' என்பது சிவபெருமானைக் குறித்து நின்றது என்க.

126. இராவணன் சூழ்ச்சிப்படலம் பக்களண்.523/9 இலக்குவன் கூற்று

''மாற்றம் என் பகர்வது? மண்ணும் வானமும்
போற்ற, வன் திரிபுரம் எரித்த புங்கவன்
ஏற்றி நின்று எய்தவில் இற்றது; எம்பிரான்
ஆற்றலின் அமைவது ஓர் ஆற்றல் உண்மையோ?'' (3327)

மாரீசன் இறந்துபடும் சமயம் இராமபிரானின் குரலெடுத்துக் கூவினான், அதுகேட்ட சீதாதேவி மயங்கி விழுந்து ''என் அயல் நிற்றியோ ''இளையோய்

ஒரு நீ'' என்று கடிந்து கூறியபோது இலக்குவன் மாற்றம் கூறுவதாக வருவது இப்பாடல்.

இலக்குவன் சீதாதேவியை நோக்கி, ''இதற்குமேலும் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? நிலவுலகும் வானுலகும் போற்றும் வண்ணம், வலிய முப்புரங்களைச் சுட்டெரித்த தூயவனான சிவபெருமான் நாண் ஏற்றி எய்த வில்லை அல்லவா நம் இராமபிரான் மிதிலையில் ஒடித்தான்? இதைக்காட்டிலும் எனது தலைவனான இராமபிரானின் ஆற்றலைக் குறிக்க வேறு ஓர் சான்று வேண்டுமோ?!'' எனக் கேட்கிறான் இலக்குவன்.

இங்கு ''திரிபுரம் எரித்த புங்கவன்'' என்பது முப்புரத்தைச் சுட்டெரித்த தூயவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

127. இராவணன் சூழ்ச்சிப்படலம் பக்கஎண்-528/42
இராவணன் கூற்று.

''ஈசன் ஆண்டு இருந்த பேர் இலங்கு மால்வரை
ஊசி வேரோடும் பறித்து எடுக்கும் ஊற்றத்தான்;
ஆசைகள் சுமந்த பேர் அளவில் யானைகள்
பூசல் செய் மருப்பினைப் பொடிசெய் தோளினான்'' (3360)

கபடவேடம் தாங்கிவந்த இராவண சந்நியாசி, சீதாதேவியிடம் தன்னைப்பற்றிக் கூறிக்கொள்ளும் பாடல் இது.

''சிவபெருமான் உறைந்திருக்கும் பெரிய கயிலாயமலையையே ஆணி வேரோடும் பெயர்த்தெடுக்கும் ஆற்றல் பெற்றவன் இராவணன்; இந்த எட்டுத்திசைகளையும் தாங்கி நிற்கும் அளவற்ற ஆற்றல் கொண்டனவும், போர்செய்யும் இயல்புடையனவுமான திசையானைகளின் கொம்புகளை ஒடித்துப் பொடிப்பொடியாக்கிய தோளாற்றல் மிக்கவன் இராவணன்'' என்று இராவணன் சீதாதேவியிடம் தன்னைப் பற்றித் தானே பெருமையாகக்கூறிக் கொள்ளுகிறான்.

இங்கே ''ஈசன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

128. இராவணன் சூழ்ச்சிப்படலம் பக்கஎண்-528/45
இராவணன் கூற்று.

''தாளுடை மலருளான் தந்த, அந்தம்இல்
நாளுடை வாழ்க்கையன்; நாரி பாகத்தன்
வாளுடைத் தடக்கையன்; வாரிவைத்த வெங்
கோளுடைச் சிறையினன்; குணங்கள் மேன்மையான்''
(3363)

கபட சந்நியாசி இராவணன் தன்னைப்பற்றி மேலும் கூறிக் கொள்ளுகிறான்.

''தண்டுகளையுடைய தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் அளித்த எல்லையற்ற வாழ்நாளுடை வாழ்க்கையையுடையவன் இராவணன். உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவபெருமான் உவந்தளித்த வாட்படையைக் கொண்ட நீண்ட இருபது கைகளையுடையவன் இராவணன்; ஒன்பது கோள்களையும் வாரி எடுத்துத் தனக்கு அடிமையாக்கிச் சிறையிட்டவன் இராவணன். மேம்பட்ட சிறந்த குணங்கள் கொண்டவன் இராவணன்'' என்று தன்னைத்தானே புகழ்ந்து பேசிக்கொண்டே போகிறான் இராவணன்.

இங்கே ''நாரிபாகத்தன்'' என்பது உமையம்மையை இடதுபாகத்தில் கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

129. இராவணன் சூழ்ச்சிப்படலம் பக்களண்-534/83
இராவணன் கூற்று

மொழிதரும் அளவில், ''நங்கை! கேள் இது; முரண் இல் யாக்கை
இழிதரு மனிதரோடே, யான்செரு ஏற்பென் என்றால்,
விழிதரு நெற்றியாளன்தன் வெள்ளி வெற்பு எடுத்த தோட்குப்
பழிதரும்; அதனின் சாலப் பயன்தரும் வஞ்சம்'' என்றான்.
(3401)

அவ்வாறு சீதாதேவி, இராமபிரான் அரக்கர்கூட்டத்தை வேரோடு அழிக்கத்தான் இலங்கைநகர் வந்திருக்கிறான் என்பதைக் கூறக்கேட்ட அளவில், இராவணன் அவளை நோக்கி, ''பெண்ணே! நான் சொல்வதைக் கேள்; வலிமையற்ற உடம்பையுடைய அற்பமான இந்த மனிதர்களுடன் நான் போர்செய்ய முற்படுவேன் என்றால், நெற்றிக்கண் படைத்த சிவபெருமான் உறையும் வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையையே பெயர்த்தெடுத்துவந்த என் தோளாற்றலுக்குப் பழிவந்து சேரும். எனவே அத்தகைய பழியை அடைவதைக் காட்டிலும் வஞ்சனையால் காரியமாற்றி வெற்றி பெறுவதே அதிகப்பயனைத்தரும்'' என்கிறான்.

இங்கே ''விழிதரு நெற்றியான்'' என்பது நெற்றியில் மூன்றாவது கண்ணையுடைய முக்கணானான சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''வெள்ளி வெற்பு'' என்பது அவன் உறையும் வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையைக் குறிக்கும்.

130. சடாயு உயிர்நீத்த படலம் பக்களண்-536/15 சடாயு கூற்று

''புரம் பற்றிய போர் விடையோன் அருளால்
வரம் பெற்றவும், மற்று உள விஞ்சைகளும்,
உரம் பெற்றன ஆவன; உண்மையினோன்
சரம் பற்றிய சாபம் விடும் தனையே'' (3417)

சடாயு எதிர்த்துப் போரிடும்முன், இராவணனுக்குச் சில கருத்துக்களைச் சொல்ல விழைந்து கூறத்தொடங்கும் பாடல் இது.

''முப்புரங்களும் நெருப்புப்பற்றி எரியும் வண்ணம் போர்செய்தவனும், காளை வாகனத்தைத் தன் ஊர்தியாகக் கொண்டவனுமாகிய சிவபெருமானின் பெருங் கருணையினால் நீ பெற்ற வரங்களும், மற்றும் உன்னிடம் உள்ள மாயச் செயல்களும், உண்மையின் உறைவிடமானவனான இராமபிரான் தன்னுடைய வில்லை எடுத்து அம்பைப் பொருத்தித்தொடுக்கும் வரையிலும்தான் வலிமைபெற்று விளங்கும். அதன்பின்னர் அவையெல்லாம் தம் வலிமை அழிந்து உன்னை அழிக்கத் தொடங்கிவிடும்'' என்று எச்சரிக்கிறான் சடாயு.

இங்கே ''புரம் பற்றிய போர் விடையோன்'' என்பது முப்புரத்தைச் சுட்டெரித்தவனும், இடபவாகனத்தைக் கொண்டவனுமான சிவபெருமானைக் குறிக்கும் என்க.

131. சடாயு உயிர்நீத்த படலம் பக்கஎண்-538/29 கவிக்கூற்று

''எல் இட்ட வெள்ளிக்கயிலைப் பொருப்பு, ஈசனோடும்
மல் இட்ட தோளால் எடுத்தான் சிலை வாயின் வாங்கி,
வில் இட்டு உயர்ந்த நெடுமேகம் எனப் பொலிந்தான்
சொல் இட்டு அவன் தோள்வலி, யார் உளர் சொல்லவல்லார்?''
(3431)

''ஒளிமிகுந்த வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையை, அதில் வீற்றிருந்த சிவபெருமானோடும் சேர்த்துத் தன் வலிமைமிக்க தோளாற்றலால் பெயர்த்தெடுத்தவனான இராவணனின் வில்லைத் தன் வாயால் பறித்துக்கொண்டு, ஆகாயத்தில் ஒளிபெற்று உயர்ந்துவிளங்கும் வானவில்லைப் போல் உயர்ந்து பொலிந்து தோன்றினான் சடாயு. அவனுடைய தோள்வலிமையை யாரால் புகழ்ந்துரைக்க முடியும்? அவன் தோள்வலிமை அளந்து சொல்ல வல்லவர் யார் உளர்?'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''வெள்ளிக்கயிலைப் பொருப்பு ஈசன்'' என்பது வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையில் வீற்றிருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் எனக்கொள்க.

132. சடாயு உயிர்நீத்த படலம் பக்கஎண்-539/30 கவிக்கூற்று

மீளா நிறத்து ஆயிரங்கண்ணவன் விண்ணின் ஓட,
வாளால் ஒறுத்தான் சிலை வாயிடை நின்றும் வாங்கி,
தாளால் இறுத்தான், தழல் வண்ணன் தடக்கை வில்லைத்
தோளால் இறுத்தான் துணைத்தாதைதன் அன்பின் தோழன்.
(3432)

செம்மேனிப்பிரானாகிய சிவபெருமானின் பெரிய கையில் வைத்திருந்த சிவதனுசை, தன் தோளாற்றலால் ஒடித்தவனான இராமபிரானின் சிறிய தந்தை போன்றவனும், அவன் தந்தை தசரதனுக்கு அன்பிற்கினிய தோழனானவனு மான சடாயு, ஒருபோதும் புறமுதுகுகாட்டி ஓடாத மார்பினையுடையவனும், ஆயிரம் கண்களையுடையவனுமான இந்திரன் அஞ்சி வானத்தில்ஓட, அவனைத் தன் வாட்படையால் தோற்றோடச்செய்தவனான இராவணனின் வில்லைத் தன் வாயினில் பற்றிக் கைகளால் எடுத்து அதனைத்தன் கால்களால் ஒடித்துப்போட்டான்.

இங்கே '' **தழல் வண்ணன்**'' என்பது நெருப்புப்போன்ற சிவந்த மேனியையுடைய சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''**எரிபோல் மேனிப்பிரான்**'' என்பது தேவாரம்.

133. சடாயு உயிர்நீத்தபடலம் பக்கஎண்-539/31 கவிக்கூற்று

ஞாலம் படுப்பான், தனது ஆற்றலுக்கு ஏற்ற நல்வில்
மூலம் ஒடிப்புண்டது கண்டு, முனிந்த நெஞ்சன்,
ஆலம் மிடற்றான்புரம் அட்டது ஓர் அம்புபோலும்
சூலம் எடுத்து ஆர்த்து எறிந்தான், மறம் தோற்றிலாதான்.
(3433)

வீரத்திற்கு அஞ்சாதவனும் இவ்வுலகத்தையே அழித்து ஒழிக்கும் ஆற்றல் பெற்றவனுமாகிய இராவணன், தனது ஆற்றலுக்கு ஏற்ற நல்ல வில், சடாயுவினால் அடியோடு ஒடித்துப் போடப்பட்டது கண்டு, மிக்க சீற்றம்கொண்ட உள்ளத்தவனாய், ஆலகால விஷத்தைத் தன் கழுத்தில் தேக்கிக் கொண்டவனான சிவபெருமான் முப்புரங்களைச் சுட்டெரிக்கப் பயன் படுத்திய அம்பைப்போன்ற ஒப்பற்ற சூலாயுதத்தை எடுத்து, ஆரவாரித்துக் கொண்டு அதனை சடாயுவின்மேல் வீசி எறிந்தான்.

இங்கே ''**ஆலம் மிடற்றான்**'' என்பது ஆலகால விஷத்தைத் தன் தொண்டையில் கொண்டிருப்பவனான நீலகண்டன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

134. சடாயு உயிர்நீத்த படலம் பக்கஎண்-548/93 கவிக்கூற்று

துள்ளி, ஓங்கு செந்தாமரை நயனங்கள் சொரிய,
தள்ளி ஓங்கிய அமலன், தன் தனி உயிர்த்தந்தை
வள்ளியோன் திருமேனியில், **தழல்நிற வண்ணன்**
வெள்ளி ஓங்கலில் அஞ்சன மலை என, வீழ்ந்தான். (3495)

செந்தாமரை மலர்போலும் கண்களினின்றும் கண்ணின் நீர்த்துளி மிகுந்து விளங்க, மற்ற எல்லோரது உயர்ச்சியினையும் புறந்தள்ளி ஓங்கிய புகழ்கொண்ட குற்றமற்றவனான இராமபிரான், தனது ஒப்பற்ற உயிர்போன்ற தந்தையானவனும், தன் உயிரையே தன் மனைவியைக் காப்பாற்றும்

பொருட்டு ஈந்த வள்ளன்மை மிக்கவனுமான சடாயுவின் அழகிய வெள்ளிய உடம்பின்மேல், நெருப்புப்போன்ற, சிவந்த நிறமுடைய சிவபெருமான் வீற்றிருக்கின்ற வெண்மையான வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையின் மேல் ஒரு கரிய மைபோன்ற மலை வீழ்ந்ததுபோல வீழ்ந்தான்.

தழல்நிற வண்ணன் சிவபெருமான், வெள்ளி ஓங்கல் வெண்மையான சடாயு. அஞ்சன மலை-கரிய இராமபிரான். மூன்று நிறங்களையும் கூறி மூன்றுபேர்களையும் குறிப்பால் உணர்த்திய நயம் நோக்குக.

இங்கே ''தழல்நிற வண்ணன்'' என்பது சிவபெருமானையும், ''வெள்ளி ஓங்கல்'' என்பது சிவபெருமான் உறையும் கயிலை மலையையும் குறித்தது எனக்கொள்க.

135. சடாயு உயிர்நீத்த படலம் பக்கஎண்-550/108 சடாயு கூற்று

''அலக்கணும் இன்பமும் அணுகும் நாள், அவை
விலக்குவம் என்பது மெய்யிற்று ஆகுமோ?
இலக்கு முப்புரங்களை எய்த வில்லியார்
தலைக் கலத்து இரந்தது தவத்தின் பாலதோ?'' (3510)

இராவணனுடன் போரிட்டு வீழ்ந்த சடாயு, மூர்ச்சை தெளிந்து இராமஇலக்குவர்க்கு ஆறுதல் கூறும் பாடல் இது.

''இன்பமும் துன்பமும் நம்மை வந்துசேரும் போது, அவற்றை விலக்கித் தடுத்துவிடுவோம் என்று முயற்சித்தல் உண்மையில் அறிவுடைமை யாகுமோ? முப்புரங்களையும் தனது இலக்காகக் கொண்டு அதனைச் சுட்டெரித்து வென்ற வில்வலானாகிய சிவபெருமான், பிரமனது தலையைக் கொய்ததால் அவனுடைய கபாலத்தை ஏந்திப் பிச்சை எடுக்க நேர்ந்ததே? அது சிவபெருமான் செய்த அரிய தவத்தால் நேர்ந்ததா? அவர் விதி-ஊழ்வினைப்பயன் அவ்வாறு செய்வித்ததா?'' என்று கேட்கிறான் சடாயு. எனவே நீ உன் மனைவியைப் பிரிந்தது ஊழ்வினைப்பயனே- விதியினாலே யாகும். நீ வருந்தாதே'' என்று சடாயு ஆறுதல் கூறினான் என்பதாம்.

இங்கே ''முப்புரங்களை எய்த வில்லியார்'' என்பது மேருமலையை வில்லாகக்கொண்டு முப்புரங்களைச்சுட்டெரித்த சிவபெருமானைக் குறிக்கும் என்க.

136. சடாயு உயிர்நீத்த படலம்பக்கஎண்-551/113 சடாயு கூற்று

''வடுக்கண், வார்கூந்தலாளை, இராவணன் மண்ணினோடும்
எடுத்தனன் ஏகுவானை, எதிர்ந்து, எனது ஆற்றல் கொண்டு
தடுத்தனென் ஆவது எல்லாம்; அரன் தந்த வாளால்
படுத்தனன்; இங்கு வீழ்ந்தேன்; இது இன்று பட்டது'' என்றான்.
(3515)

''மாவடுவின் பிளவு போன்ற அழகிய கண்களையுடையவளும், நீண்ட கூந்தலை உடையவளுமான சீதாதேவியை, இராவணன் அவள் தங்கியிருந்த பர்ணசாலையோடும் பெயர்த்தெடுத்துக்கொண்டு போனான். அவ்வாறு போனவனை என்னால் முடிந்த அளவு என்னுடைய வலிமை கொண்டு எதிர்த்துத் தடுத்துப்பார்த்தேன். ஆனால் அவன் செய்த அருந்தவத்தால் சிவபெருமான் அவனுக்கு உவந்தளித்த சந்திரகாசம் என்னும் வாட்படையினால் என் சிறகுகளை அறுத்தெறிந்து என்னை வீழ்த்திவிட்டான். நான் இப்போது இங்கு வந்து வீழ்ந்து கிடக்கிறேன். இதுதான் இன்று இங்கு நிகழ்ந்தது'' என்று கூறுகிறான் சடாயு.

வான்மீகி சொல்லாத கருத்தைக் கம்பன் சொல்கிறான் என்பது மட்டுமல்ல. வான்மீகி சொன்ன கருத்தை மாற்றிச் சொல்கிறான் கம்பன். வான்மீகி, இராவணன் சீதாதேவியைக் கையினால் அவள் கூந்தலைப் பற்றித் தன் தொடையில் வைத்துக்கொண்டு சென்றான் என்பார். அதை மாற்றி அவன் அவளைத் தீண்டாமலேயே பர்ணசாலையோடு தூக்கிச் சென்றான் என்கிறான் கம்பன். இதற்கு அரண் சேர்ப்பதுபோல் இலங்கையில் சீதாதேவியைக் கண்டு வந்த அனுமனும், ''நும்பி புல்லினால் தொடுத்த தூய சாலையுள் இருந்தாள் ஐய! தவம் செய்த தவமாம் தையல்'' என்று கூறுவதையும் இங்கு ஒப்புநோக்குதல் தகும். இந்திய மண்ணில் இலக்குவன் கட்டிய தவச்சாலையிலேயே இலங்கையில் சீதாதேவி இருப்பதாகக் கூறுகிறான் கம்பன். கம்பன் இன்னும் பல இடங்களில் இந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்வதையும் காணலாம்.

''வடுக்கண்'' என்பது தமிழ் இலக்கியத்தில் பல இடங்களில் பயின்று வந்துள்ளது. ''வடுப்பிளவு அனைய கண்ணாள்'' என்பது சீவகசிந்தாமணி. ''மாவடு வகிர் அன்ன கண்ணி பங்கா!'' என்பது திருவாசகம்.

இங்கே ''அரன் தந்த வாள்'' என்பது சிவபெருமான் தந்தருளிய சந்திரகாசம் என்னும் வாட்படையைக் குறித்தது என்க.

137. அயோமுகிப் படலம் பக்கஎண்-561 / 45 கவிக்கூற்று

ஆழி வறக்க முகக்க அமைந்த
மூழை எனப் பொலி மொய் பிலவாயாள்;
கூழை புறத்து விரிந்தது ஓர் கொட்பால்,
ஊழி நெருப்பின் உருத்தனை ஒப்பாள். (3585)

இராமபிரானின் நீர்வேட்கை தணிவிக்கும் எண்ணத்துடன் காட்டுக்குள் நீர் மொள்ளச் சென்ற இலக்குவனை, அயோமுகி என்னும் அரக்கி, அவன்பால் கொண்ட காம இச்சையால் அவனைத் தன் குகைக்குள் எடுத்துச்சென்று முயங்க விழைந்து இலக்குவனைத் தூக்குகின்ற இடத்தில் வருகின்ற பாடல் இது. அந்த அரக்கி அயோமுகியின் தன்மையைக் கூறுகிறான் கவிஞன்.

''கடல் நீரெல்லாம் வற்றிப்போகும்படி, அதை மொண்டு எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் அகப்பையைப்போன்ற அகன்ற குகைபோன்ற வாயினைப் பெற்றுத் திகழ்பவள்; அவளது விரிந்து பரந்த கூந்தல் அலையும் தன்மைக்கு உவமைகூற வேண்டுமென்றால், ஊழியிறுதிக்காலத்தில் இவ்வுலகை அழிக்கும் பொருட்டு எரிக்கும் நெருப்பைத் தன் கைகளில் கொண்டு ருத்ர தாண்டவம் ஆடும் உருத்திரமூர்த்தியாகிய சிவபெருமானை ஒத்திருப்பாள்'' என்கிறான் கவிஞன். மூழை-அகப்பை

இங்கே ''உருத்தன்'' என்பது உருத்திரனாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

138. அயோமுகிப் படலம் பக்கஎண்-564/61 கவிக்கூற்று.

ஆங்கு அவள் மார்பொடு கையின் அடங்கி,
பூங்கழல் வார்சிலை மீளி பொலிந்தான்;
வீங்கிய வெஞ்சின வீழ் மத வெம்போர்
ஓங்கல் உரிக்குள் உருத்திரன் ஒத்தான். (3601)

அவ்வாறு அந்த அயோமுகி என்னும் அரக்கியின் மார்புகளோடு கைக்குள்ளும் அடங்கிக்கிடந்த அழகிய வீரக்கழல் அணிந்தவனும், நீண்ட வில்லைக் கொண்டவனுமான வீரன் இலக்குவன், பொலிவுற்றுத் திகழ்ந்தான். மிக்கு பெருகிய கொடிய கோபம் கொண்டதுவும், மதநீரை மிக்குப் பொழிகின்றதும், கொடிய போரினைச் செய்யும் ஆற்றல் பெற்றதுமான மலைபோன்ற துதிக்கையையுடைய கயாசுரன் என்னும் யானையின் தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்திக்கொண்டு இருக்கும் சிவபெருமானைப்போல் தோன்றினான் இலக்குவன் என்கிறான் கவிஞன்.

அயோமுகி அரக்கி; கருநிறத்தவள்; இலக்குவன் செந்நிறம் கொண்டவன். அந்தக் கரிய அரக்கியின் கைக்குள் அடங்கிக்கிடந்த சிவந்த மேனியை உடைய இலக்குவனுக்குக் கரிய மலைபோன்ற யானையின்தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்திக்கொண்ட சிவந்த மேனியையுடைய சிவபெருமானை ஒப்புக்கூறினார் என்க. தாருகவனத்து முனிவர்கள் சிவபெருமானுடன் மாறுபாடு கொண்டு, அவனை அழித்தொழிக்கப் பல்வேறு மிருகங்களை அவன்மீது ஏவினர். அவற்றுள் ஒன்று இந்த கயாசுரன் என்னும் யானை. அதனைக் கொன்று அதன் தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்திக்கொண்டான் சிவபெருமான் என்பது ஒரு புராணக்குறிப்பு. அது இங்கே பேசப்படுகிறது.

இங்கே ''ஓங்கல் உரிக்குள் உருத்திரன்'' என்பது யானைத்தோலைப் போர்த்திக்கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க. ஓங்கல்-மலைபோன்ற யானை.

139. கவந்தன் படலம் பக்கஎண்-576/53 கவந்தன்கூற்று.

''பழிப்பு அறு நிலைமை ஆண்மை பகர்வது என்? பதுமபீடத்து
உழிப்பெருந்தகைமை சான்ற அந்தணன் உயிர்த்த எல்லாம்,
அழிப்பதற்கு ஒருவன் ஆன அண்ணலும் அறிதிர் அன்றே;
ஒழிப்ப அருந்திறல் பல்பூதக் கணத்தொடும் உறையும் உண்மை''
(3695)

இராமபிரான் திருவடிகள் தீண்டப்பெற்றதால் மீண்டும் கந்தருவனான கவந்தன், இராமபிரானைத் துதித்து, சுக்கிரீவனின் நட்பைப் பெறுமாறு வேண்டுகின்ற பாடல் இது.

''குற்றமற்ற தன்மையையுடைய சிவபெருமானின் ஆண்தகைமையைப் பற்றி எவ்வாறு புகழ்ந்துரைப்பது? தாமரை மலரைத் தன் இருப்பிடமாகக் கொண்ட மிக்க பெருந்தன்மை வாய்க்கப்பெற்ற பிரமதேவன் படைத்த உயிரினங்களை எல்லாம் அழிப்பதற்கு என்றே அழித்தல் தொழிலை மேற்கொண்டுள்ள பெருமைக்குரியவன் சிவபெருமான் என்பதைத் தாங்கள் அறிவீர்கள் அல்லவா? நீக்குதற்கரிய வலிமைபடைத்த பல பூத கணங்களோடு சிவபெருமான் இதற்கெனவே அவர்களுடன் கூடி வாழ்கின்ற உண்மையும் தாங்கள் அறிந்ததுதானே?'' என்கிறான் கவந்தன்.

உலக உயிரினங்களை அழிப்பதையே தன் தொழிலாகக் கொண்ட சிவபெருமான்கூட அந்தத் தொழிலைத் தானாகத் தனியே நின்று செய்வதில்லை. அவரும் தனது பூதகணங்களோடு சேர்ந்துதான் இக்காரியத்தைச் செய்துவருகிறார். எனவே ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும் என்று சங்கல்பம் கொண்டுள்ளவர்கள், தாமே தனித்து நின்று அதை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றிருந்தாலும், எவ்வளவு வலிமை உடையவர்க்கும் வேறு சிலரின் துணைவலியும் இன்றியமையாததாகும். எனவே நீங்கள் இரலையன் குன்று சென்று, அங்குள்ள சுக்கிரீவனுடன் நட்புப் பூண்டு, சீதாதேவியைத் தேட முயற்சிப்பீர்களாக!'' என்று அறிவுரை கூறுகிறான் கவந்தன் என்பதாம்.

இங்கே ''அழிப்பதற்கு ஒருவன் ஆன அண்ணல்'' என்பது, உயிரினங்களை அழித்தலையே தொழிலாகக் கொண்ட ஒப்பற்றவனான பெருமைக்குரியவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

140. சவரி பிறப்புநீங்கு படலம் பக்கஎண்-578/4 சபரி கூற்று

''ஈசனும் கமலத்தோனும் இமையவர்யாரும் எந்தை!
வாசவன்தானும், ஈண்டு வந்தனர் மகிழ்ந்து நோக்கி,
''ஆசுஅறு தவத்திற்கு எல்லை அணுகியது, இராமற்கு ஆய
பூசனை விரும்பி, எம்பால் போதுதி'' என்று போனார். (37C2)

தன்னைக் காணவந்த இராமபிரானிடம் சபரி, ''என் தந்தை போன்றவனே! சிவபெருமானும், தாமரைமலரில் உறைபவனான பிரமதேவனும், மற்றுமுள்ள, தேவர்களும், இந்திரனும், இங்குவந்து என்னைக் கண்டு மகிழ்ந்து, ''குற்றமற்ற உன் தவம் நிறைவேறி அதன் பயன் விளைவதற்கான காலம் நெருங்கிவிட்டது. எனவே இராமபிரானுக்கு ஆற்றுதற்குரிய வழிபாடுகளையெல்லாம் மகிழ்வுடன் இயற்றி நிறைவுசெய்து, எங்களிடம் வீட்டுலகிற்கு வந்து சேருவாயாக!'' என்று கூறிப்போனார்கள்'' என்று இராமபிரானின் வருகைக்காகவே அருந்தவம் செய்து கொண்டிருந்தவளான சபரி, இராமபிரானிடம் தெரிவிக்கிறாள்.

இங்கு ''ஈசன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

ஆரண்யகாண்டம் மிகைப்பாடல்கள்

இவைதவிர, சென்னைக் கம்பன் கழகச் செம்பதிப்பில் மிகைப்பாடல்கள் என்று தரப்பெற்றிருக்கின்ற பாடல்களில் கீழ்க்காணும் 4 பாடல்களில் சிவபெருமான் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவை மிகைப்பாடல்கள் எனப் பிரிக்கப்பெற்றிருப்பதால் அவற்றிற்கான விளக்கங்கள் தரப்படவில்லை

141. அகத்தியப் படலம் பக்கஎண்-580/14-3 முனிவர்கள் கூற்று

அவன் வலி படைத்து, மற்று அரக்கர் யாவரும்,
சிவன் முதல் மூவரை, தேவர், சித்தரை,
புவனியின் முனிவரை, மற்றும் புங்கவர்
எவரையும் துரந்தனர், இறைவ! இன்னுமே

142. அகத்தியப் படலம் பக்கஎண்-580/14-5 முனிவர்கள் கூற்று

வெள்ளியங்கிரியிடை விமலன், மேலைநாள்
''கள்ளிய அரக்கரை கடிகிலேன்'' எனா,
ஒள்ளிய வரம் அவர்க்கு உதவினான்; கடற்
பள்ளி கொள்பவன் பொருது இளைத்த பான்மையான்.

143. கரன் வதைப்படலம் பக்கஎண்-583/35-1 கவிக் கூற்று

பத்துடன் ஆறு எனப் படுத்த ஆயிரம்
வித்தக வரத்தர்கள் வீரவேள்வியில்
முத்தலைக் குரிசிலுக்கு அன்று முக்கணான்
அத்துணைப் படைத்து அவன் அருள உற்றுளார்.

144. சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம் பக்களண்-583/2-1

கவிக்கூற்று

பரிக்கும் அண்டப்பரப்பு எவைக்கும் தனியரசு என்று
அரன் கொடுத்த வரத்தின் பான்மை,
உரைக்கு உவமைபெற, குலிசத்தவன் முதலாம்
உலகு இறைமைக்கு உரிய மேலோர்
இருக்கும் அரித்தவிசு எவைக்கும் நாயகம் ஈது எனக்
குறித்து அங்கு இமையோர் தச்சன்
அருக்கர் வெயில் பறித்து அமைத்த அரிமுகத்தின்
மணிப்பீடத்து அமர்ந்தான் மன்னோ.

ஆரண்யகாண்டக் குறிப்பு நிறைவுற்றது

4. கிஷ்கிந்தா காண்டம்

145. அனுமப் படலம் பக்கஎண்.598/3கவிக்கூற்று

அவ்விடத்து அவர் மறுகி, அஞ்சி, நெஞ்சு அழி அமைதி
வெவ்விடத்தினை மறுகு தேவர், தானவர், வெருவல்
தவ்விட, தனி அருளு தாழ்சடைக் கடவுள் என,
''இவ்விடத்து இனிது இருமின்; அஞ்சல்'' என்று இடை உதவி.
(3753)

சபரி வழிகாட்டியபடி, இராமஇலக்குவர் இரலைக்குன்றம் எய்திய சமயத்தில் அதனைக் கண்ணுற்ற சுக்கிரீவன் அஞ்சி குகையில் சென்று ஒளிந்து கொள்ளவும், மற்ற அமைச்சர்கள் வேண்டுதலுக்கிணங்கி அனுமன் அவர்களைக் காண விழைந்து சென்றபோது வருவது இப்பாடல்.

''அவ்வாறு அங்கே சுக்கிரீவனும், அவனுடைய அமைச்சர்களும், குரங்குக் கூட்டங்களும் மனக்கலக்கமுற்று அச்சம்கொண்டு, உள்ளம் தடுமாறுகின்ற சமயத்தில், பாற்கடலினின்றும் முதலில் தோன்றிய கொடிய ஆலகால விஷத்தைக் கண்டு மனம் கலங்கிய தேவர்களும், அசுரர்களும் அச்சம் நீங்கும் வண்ணம், ஒப்பற்றவனாகியவனும், அருட்குணம் கொண்டவனும், தாழ்ந்து தொங்குகின்ற சடைமுடியைக் கொண்டவனும், தெய்வீகத்தன்மை பொருந்தியவனுமான சிவபெருமான், அவர்களை ஆற்றுப்படுத்தியதுபோல, இப்போது அனுமன் இவர்கள் எல்லோரையும் நோக்கி, ''இங்கேயே இருங்கள்; அஞ்சாதீர்கள்'' என்று தேறுதல் கூறினான் என்பதாம்.

இங்கே ''தாழ்சடைக் கடவுள்'' என்பது தாழ்ந்து தொங்குகின்ற சடைமுடியை உடையவன் என்று சிவபெருமானைக் குறிக்கும். அனுமனின் ஆற்றலுக்குச் சிவபெருமானின் ஆற்றல் ஒப்பு.

146. அனுமப் படலம் பக்கஎண்.600/18இராமபிரான் கூற்று

''இல்லாத உலகத்து எங்கும், இங்கு இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும், வேதக்கடலுமே'' என்னும் காட்சி,
சொல்லாலே தோன்றிற்று அன்றே! யார்கொல் இச்சொல்லின் செல்வன்?
வில் ஆர் தோள் இளையவீர! விரிஞ்சனோ? விடைவலானோ?'' (3768)

''வில்பொருந்திய தோள்களை உடைய இளைய வீரனே! இலக்குவ! இப்பொழுது நம் கண் எதிரே தோன்றி நிற்கின்ற மிக்க புகழுடையவனான

இவன் கல்லாத நூல்களும், வேதங்களாகிய கடலுமே, இவ்வுலகத்தில் இல்லாதனபோலும், என்று கூறும்படி தோற்றமளிக்கின்றானே. அது இவனுடைய சொற்களாலேயே விளங்குகிறது அல்லவா? இத்தகைய இனிய சொற்களைச் செல்வமாகக் கொண்ட இவன் யார்? பிரமதேவனா? அல்லது இடபவாகனத்தைக் கொண்ட சிவபெருமானா?'' என்று இராமபிரான் இலக்குவனிடம் கேட்டு அனுமனைப் பாராட்டுகிறான் என்பதாம்.

இங்கு ''விடைவலான்'' என்பது இடப வாகனத்தை ஊர்தியாகக் கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

147. நட்புக்கோட்படலம் பக்கஎண்-603/2 அனுமன் கூற்று.

மேலவன், திருமகற்கு உரைசெய்தான், ''விரைசெய் தார்
வாலி என்ற அளவிலா வலியினான் உயிர்தெறக்
காலன் வந்தனன், இடர்க்கடல் கடந்தனம்'' எனா,
ஆலம் உண்டவனின் நின்று, அருநடம் புரிகுவான். (3787)

சுக்கிரீவன் கட்டளைப்படி, இரலைக் குன்றிலிருந்து இறங்கி வந்த அனுமன், இராமஇலக்குவர்களைக் கண்டு, நெஞ்சம் நெக்குருகி, அச்செய்தியைத் தெரிவிப்பதற்காகக் குன்றின் மேலேறி வந்து சுக்கிரீவனிடம் கூறுவதாக வரும் பாடல் இது.

''மேலே செல்லுகின்ற சூரியனின் புதல்வனாகிய அழகிய சுக்கிரீவனுக்கு அனுமன் பின்வருமாறு கூறினான். ''நறுமணம் பொருந்திய மலர்மாலையணிந்த வாலி என்னும் பெயருடைய அளவற்ற ஆற்றல் கொண்டவனின் உயிரைப் பறித்து அழிக்கும்பொருட்டு ஒரு இயமன் வந்திருக்கிறான். இன்று முதல் நாம் துன்பக்கடலைக் கடந்தவர்களாவோம்'' என்று கூறியதோடு மட்டுமல்லாமல், ஆலகால விஷத்தை அருந்திய சிவபெருமான்போல் நின்று மகிழ்ச்சிமிகுதியால் அருமையான நடனம் ஆடத் தொடங்கிவிட்டான் அனுமன்'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''ஆலம் உண்டவன்'' என்பது பாற்கடலைக் கடையும்பொழுது அதனின்றும் எழுந்த ஆலகால நஞ்சைப் பருகியவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

148. நட்புக்கோட்படலம் பக்கஎண்-604/7 அனுமன் கூற்று.

''நல் உறுப்பு அமையும் நம்பியரில், முன்னவன் நயந்து
எல் உறுப்பு அரிய பேர் எழுசுடர்க் கடவுள்தன்
பல் இறுத்தவன் வலிக்கு அமை தியம்பகம் எனும்
வில் இறுத்து அருளினான், மிதிலை புக்க அனைய நாள்''
(3792)

''நல்ல விரும்பத்தக்க அவயவங்கள் அமையப்பெற்ற ஆண்களிற் சிறந்தோராகிய இருவரில் முதன்மையானவனான இராமபிரான், மிக விரும்பி மிதிலையில் வில்லை ஒடித்த அந்த நாளில், இருள் என்னும் சுவடே தெரியாத அளவிற்கு ஒளிவீசித் திகழும் பெரிய கடவுள்தன்மை வாய்ந்தவனான சூரியனின் பல்லை உடைத்தவனாகிய சிவபெருமானின் வலிமைக்கு ஏற்ற திரியம்பகம் என்னும் வில்லை ஒடித்தவன்தான் இப்போது இங்கு வந்திருக்கும் இராமபிரான் ஆவான்'' என்று சுக்கிரீவனிடம் கூறுகிறான் அனுமன்.

''திரியம்பகம்'' என்பது தியம்பகம் எனத் திரிந்து நின்றது. அது முக்கண்ணனாகிய சிவபெருமானுக்கு உரியது. அதனை மிதிலை நகரில் ஒடித்தவன் இந்த இராமபிரான்தான் என்று அங்கே வந்திருக்கும் இராமபிரானைப் பற்றிச் சுக்கிரீவனுக்குக் கூறுகிறான் அனுமன் என்பதாம். இங்கே ''சுடர்க்கடவுள் தன் பல்இறுத்தவன்'' என்பது தக்கன் வேள்விசெய்தபோது அவன் சிவபெருமானை அழைக்காது அவமானப்படுத்தியதால், அவ்வேள்வியில் கலந்துகொண்ட சூரியனைத் தன் சிவகணத்துள் ஒருவராகிய வீரவாகுவைக் கொண்டு சூரியனின் பல்லை உடைக்கச்செய்தான் சிவபெருமான் என்பது ஒரு புராணக்குறிப்பு. அது இங்கே பேசப்படுகிறது என்க. ''அந்தரமே செல்லும் அலர் கதிரோன் பல் தகர்த்து'' என்பது திருவாசகம்.

149. நட்புக்கோட்படலம் பக்கஎண்-604/10 அனுமன்கூற்று

''கரன்முதல் கருணையற்றவர் கடற்படையொடும்
சிரம்உகச் சிலை குனித்து உதவுவான்; திசைஉளார்
பரம்உகப் பகை துமித்து அருளுவான்; பரமராம்
அரன்முதல் தலைவர்க்கு அதிசயத் திறலினான்'' (3795)

அனுமன் சுக்கிரீவனிடம் ''இங்கு வந்திருக்கும் இராமபிரான், கரன் முதலான இரக்கம் என்று ஒரு பொருளிலா அரக்கர்களை அவர்களது கடல்போன்ற படைகளோடு, தலைகள் சிந்தி விழும்படி தன் வில்லை வளைத்து அரக்கர்களை அழித்து அறக்கடவுளுக்கு உதவுபவன். எட்டுத் திக்குகளிலும் உள்ள திசைக்காவலர்களின் பாரம் குறையும் வண்ணம், அவர்களது பகைவர்களையெல்லாம் அழித்து அவர்களுக்கு அருள் பாலிப்பவன். மேலான இறைவனாகிய சிவபெருமான் முதலான முத்தேவர், தலைவர்களெல்லாம் வியக்கத்தக்க பேராற்றல் படைத்தவனாவான்'' என்கிறான் அனுமன்.

இங்கே ''பரமராம் அரன்'' என்பது மேலோனாகிய இறைவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

150. நட்புக்கோட்படலம் பக்களண்-605/19சுக்கிரீவன்கூற்று.

''தேறினன், அமரர்க்கெல்லாம் தேவராம் தேவர் அன்றே,
மாறி, இப்பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ!
ஆறுகொள் சடிலத்தானும், அயனும், என்று இவர்கள் ஆதி
வேறுள குழுவையெல்லாம், மானுடம் வென்றது'' அன்றே!
(3804)

''தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய இறைவனே, இப்பொழுது மாறி, மானிடப்பிறப்பு என்று ஒரு பிறவியை எடுத்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறான்போலும்! ஆகாயகங்கையைத் தன் சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமான், பிரமதேவன் என்று சொல்லப்படுகின்ற இவர்கள் முதலாக உள்ள மற்ற எல்லாக் கடவுள் கூட்டத்தையும் இந்த மானுடம் என்ற பிறவி வெற்றிகொண்டு விட்டதே!'' என்று வியந்து நிற்கிறான் சுக்கிரீவன்.

இங்கே ''ஆறுகொள் சடிலத்தான்'' என்பது ஆகாயகங்கையைத் தன் சடை முடியில் தரித்திருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

151. நட்புக்கோட்படலம் பக்களண்-608/37அனுமன்கூற்று.

''நாலு வேதமாம் நவைஇல் ஆர்கலி
வேலி அன்னவன், மலையின்மேல் உளான்
சூலி தன் அருள்துறையின் முற்றினான்,
வாலி என்று உளான், வரம்புஇல் ஆற்றலான். (3822)

''நான்கு என்று சொல்லப்படுகின்ற குற்றமற்ற வேதக் கடலுக்கு ஒரு வேலி போன்றவன் ஆவான் இந்த வாலி; கயிலாய மலையின்மேல் வீற்றிருக்கும் சூலப்படையை உடையவனான சிவபெருமானின் அருள்நெறியில் மிக்க முதிர்ச்சி பெற்றவன் அவன். அவன் பெயர் வாலி என்பதாகும். அவன் அளவற்ற ஆற்றல் பொருந்தியவன்'' என்கிறான் அனுமன்.

வாலி சிவபெருமானின் அருள்துறை முற்றியவன் என்பதைத் திருஞான சம்பந்தர் தேவாரம் கூறுகிறது கேளுங்கள். ''கோலமா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி, வாலியார் வழிபடப் பொருந்தினார்'' என்பதும் ''நீலமாமணி நிறத்து அரக்கனை இருபது கரத்தோடு ஓங்க, வாலினால் கட்டிய வாலியார் வழிபடு மன்னு கோயில்'' என்பதும், திருஞான சம்பந்தர் தேவாரம். ''அணங்கு ஆர் பாகனை ஆசைதொறும் உற்று, உணங்கா ஒள்மலர் கொண்டு, உள் அன்போடும், இணங்காக் காலம் இரண்டொடு ஒன்றினும் வணங்காது இத்துணை வைக வல்லையோ?'' என்பது வாலி இறப்பின்போது தாரை புலம்பும் காட்சி. ''பஞ்சின்மெல் அடியாள் பங்கன் பதயுகம் அலாது, யாதும் அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய்'' என்பது அங்கதன் புலம்பும் காட்சி.

இங்கே ''மலையின்மேல் உளான் சூலி'' என்பது கயிலைமலையில் வீற்றிருப்பவனும், சூலாயுதத்தைக் கையில் கொண்டிருப்பவனுமாகிய சிவபெருமானைக் குறித்தது என்க.

152. நட்புக்கோட்படலம் பக்கஎண்-613/75அனுமன்கூற்று.

''செறுக்கும் வன்திறல் திரிபுரம் தீ எழச் சினவிக்
கறுக்கும், வெஞ்சினக் காலன் தன் காலமும் காலால்
அறுக்கும் புங்கவன் ஆண்ட பேர் ஆடகத் தனி வில்
இறுக்கும் தன்மை, அம்மாயவற்கு அன்றியும் எளிதோ?''

(3860)

''எல்லோரையும் துன்புறுத்திக் கொண்டிருந்த மிக்க ஆற்றல்பெற்ற முப்புரங்களை உடையவர்களை, நெருப்புப்பொறி பறக்கும்படி மிக்க சீற்றம் கொண்டு எரித்தவனும், மற்றொருமுறை சினம் மிகக்கொண்டு தன் கால்களாலேயே கொடுமைமிகுந்த இயமனின் வாழ்நாளை முடிவித்த சிறந்தவனுமாகிய சிவபெருமான் கைக்கொண்டிருந்த அந்தப் பெரிய பொன்மயமான அழகிய ஒப்பற்ற சிவதனுசை ஒடித்துப்போடும் வல்லமை, அந்தத் திருமாலுக்கு அன்றி வேறு யாருக்கும் இத்தனை எளிதான செயலாகுமோ?'' என்று இராமபிரான் மிதிலையில் சிவனது வில் ஒடித்த நிகழ்ச்சியைக் கூறுகிறான் அனுமன்.

இங்கே ''திரிபுரம் தீ எழச் சினவி'' என்பது முப்புரங்களைச் சுட்டெரித்தவன் என்றும், ''கறுக்கும் வெஞ்சினக் காலன் தன் காலமும் காலால் அறுக்கும் புங்கவன்'' என்பது, காலனைக் காலால் உதைத்து மார்க்கண்டேயனுக்கு அருள்பாலித்தவன் என்றும், சிவபெருமானைக் குறித்து நின்றன என்க.

153. துந்துபிப் படலம்பக்கஎண்.618/4 சுக்கிரீவன் கூற்று.

அங்கு வந்து அரி எதிர்ந்து, ''அமைதி என்?'' என்றலும்,
''பொங்கு வெஞ்செருவினில் பொருதி'' என்று உரை செய
''கங்கையின் கணவன், அக் கறைமிடற்று இறைவனே
உங்கள் வெங்கத வலிக்கு ஒருவன்'' என்று உரை செய்தான்.

(3889)

இராமபிரான் ஏழு மராமரங்களையும் தன் அம்பினால் ஊடுருவிப் போக்கியபின், அங்கு ஒருமலைமேல் ஒருமலை கிடந்தது போன்ற ஒரு எலும்புக்கூட்டினைப் பார்த்து இது என்ன என்று கேட்டபோது சுக்கிரீவன் துந்துபியின் வரலாற்றைக் கூறத்தொடங்கும் பாடல் இது.

திருமால் துந்துபி என்பவனை எதிர்ப்பட்டு, ''நீ இங்கு வந்ததன் காரணம் என்ன?'' என்று கேட்கவும் துந்துபி திருமாலை நோக்கி, ''இப்பொழுது நான்

முற்பட்டிருக்கும் இந்தச் சினம் மிகுந்த போரில் என்னுடன் போர்புரிவாயாக!'' என்று கூறியதும் திருமால், ''கங்கையின் கணவனும், தன் கண்டத்தில் ஆலகால விஷத்தைத் தேக்கியதால் நீலநிறக் கறை படிந்த கழுத்தை உடையவனுமான ஒப்பற்ற சிவபெருமான் ஒருவனே உங்கள் வலிமைக்கு ஈடுகொடுக்கத் தகுதியானவன்'' என்று கூறினான்.

இங்கு ''கங்கையின் கணவன்'' என்பது ஆகாயகங்கையைத் தன் தலையில் அடக்கிக் கொண்டிருப்பவன் என்ற பொருளிலும் ''கடைமிடற்று இறைவன்'' என்பது, ஆலகால விஷத்தைப் பருகியபோது அதனைத் தன் தொண்டையிலே அடக்கிக் கொண்டவனான ஒப்பற்ற இறைவன் என்ற பொருளிலும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

154. துந்துபிப் படலம்பக்கஎண்.618 / 5 சுக்கிரீவன் கூற்று

கடிது சென்று அவனும், இக்கடவுள் தன் கயிலையை,
கொடிய கொம்பினின் மடுத்து எழுதலும், குறுகி, முன்
நொடிதி, நின் குறை என்? என்றலும், நுவன்றனன் அரோ!
''முடிவு இல் வெஞ்செரு எனக்கு அருள் செய்வான் முயல்க!'' எனா
(3890)

அந்தத் துந்துபி என்ற அசுரன் விரைந்து சென்று இறைவனான சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையை அடைந்து, தன் கொடிய கொம்பினால் அதனைக் குத்தித் துன்புறுத்தி எழுந்ததும், இறைவன் சிவபெருமான் அவன்முன் எதிர்ப்பட்டு, ''உன்னுடைய குறை என்ன? கூறுவாயாக!'' என்றதும், அவன் ''முடிவே இல்லாத கொடிய போரை எனக்கு அருளும் பொருட்டு என்னுடன் போர்செய்ய முற்படுவாயாக!'' என்றான்.

இங்கு ''கடவுள்'' என்ற ஒரேசொல் சிவபெருமானையும், ''தன் கயிலை'' என்பது அவன் வீற்றிருக்கும் கயிலாய மலையையும் குறித்தன என்க.

155. கலன்காண் படலம் பக்கஎண்.621 / 17 சுக்கிரீவன் கூற்று

''முளரிமேல் வைகுவான், முருகன் தந்த அத்
தளிர் இயல் பாகத்தான், தடக்கை ஆழியான்,
அளவி ஒன்று ஆவரே அன்றி, ஐயம்இல்
கிளவியாய்! தனித்தனி கிடைப்பரோ துணை!'' (3917)

சுக்கிரீவன் இராமபிரானை நோக்கி, ''ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவனே! இராமா! தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், முருகப்பெருமானை இவ்வுலகிற்கு அளித்தவனும், தளிர்போன்ற மென்மையான மேனியையுடைய உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டவனுமாகிய சிவபெருமானும், சுதர்சனம் என்னும் சக்கரப்படையைத்

தன் பெரிய கைகளில் கொண்டுள்ளவனுமான திருமாலும் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து உன்னை எதிர்த்துப் போர்புரிந்தாலும் புரியலாமே அன்றி, அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக உனக்கு ஈடாவார்களோ!'' என்கிறான் சுக்கிரீவன்

இங்கே ''முருகன் தந்த அத்தளிரியல் பாகத்தான்'' என்பது, முருகப்பெருமானின் தந்தையானவன் என்றும், உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டவன் என்றும் சிவபெருமானைக் குறித்தன என்க.

156. வாலிவதைப்படலம்பக்களஎண்.634/72 வாலிகூற்று.

''நேமிதான் கொலோ? நீலகண்டன் நெடுஞ்சூலம்
ஆம் இது ஆம் கொலோ? அன்று எனின், குன்று உருவு அயிலும்
நாம இந்திரன் வச்சிரப்படையும், என் நடுவண்
போம் எனும் துணை போதுமோ? யாது?'' எனப்புழுங்கும்
(4006)

தன் மார்பில் தைத்த அம்பினை நோக்கி வாலி பேசுகிறான். ''என் மார்பில் பாய்ந்தது திருமாலின் சக்கரப்படையோ? நஞ்சுண்ட நீலகண்டனாகிய சிவபெருமானின் நீண்ட சூலாயுதப்படையோ? இல்லை என்றால் கிரௌஞ்சமலையை ஊடுருவிச் சென்ற முருகப்பெருமானின் வேற்படையோ? இல்லாவிட்டால் இந்திரனின் அச்சம்தரும் வச்சிரப்படையோ? இவையெல்லாம் என் மார்பின் நடுவே நுழையும் ஆற்றல் பெற்றனவா? ஒருபோதும் முடியாதே? அப்படியென்றால் இது யார் ஏவிய படை?'' என்று சிந்திக்கலானான் வாலி என்பதாம்.

இங்கே ''நீலகண்டன் நெடுஞ்சூலம்'' என்பது ஆலகால விஷத்தைப் பருகிய நீலகண்டனாகிய சிவபெருமான் கையில் ஏந்தியுள்ள உயர்ந்த சூலாயுதம் என்று சிவபெருமானின் படைக்கலத்தைக் குறித்து நின்றது என்க.

157. வாலிவதைப்படலம்பக்களஎண்.641/121 இராமபிரான் கூற்று

''காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்
பாலின் ஆற்றிய பத்தி பயத்தலால்,
மாலினால் தரு வன்பெரும் பூதங்கள்
நாலின் ஆற்றலும் ஆற்றுழி நண்ணினாய்'' (4055)

வாலியை நோக்கி இராமன் ''இயமனுடைய வலிமையை அழித்த மழுப்படை ஏந்தியவனான சிவபெருமானிடத்து நீ கொண்டிருந்த அளவற்ற பக்தி பயன் தந்ததால், திருமாலால் படைக்கப்பட்ட வலிய பெரிய பூதங்கள் நான்கின் வலிமையும் செயல்படும் ஆற்றல் உன் இடத்தில் வந்து சேர்ந்திருக்கிறது'' என்கிறான்.

இங்கே ''காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்'' என்பது மார்க்கண்டேயனுக்காகச் சிவபெருமான் இயமனைக் காலால் உதைத்த நிகழ்ச்சியையும், அவன் கையில் கொண்டிருக்கும் மழுவாயுதத்தையும் குறித்தன என்க.

158. வாலிவதைப்படலம்பக்களண்.642/130 வாலி கூற்று.

''புரம் எலாம் எரிசெய்தோன் முதலினோர், பொரு இலா
வரம் எலாம் உருவி, என் வசைஇலா வலிமைசால்
உரம் எலாம் உருவி, என் உயிர் எலாம் நுகரும் நின்
சரம் அலால் பிறிது வேறு உளது அரோ, தருமமே?'' (4064)

''முப்புரங்களையும் சுட்டெரித்தவனான சிவபெருமான் முதலிய தேவர்கள் எனக்கு உவந்து அளித்த ஒப்பற்ற வரங்கள் எல்லாவற்றையும் கடந்து, என்னுடைய பழியற்ற ஆற்றல்மிக்க மார்பு முழுவதிலும் நுழைந்து துளைத்து, என் உயிர் முழுவதையும் பருகும் ஆற்றல் அறத்தினை நிலைநிறுத்த வந்த உன்னுடைய இராமபாணத்தைத் தவிர, வேறுஒரு அம்பிற்கு உண்டோ?'' என்று இராமபாணத்தைப் பாராட்டுகிறான் வாலி.

இங்கே ''புரமெலாம் எரிசெய்தோன்'' என்பது முப்புரங்களையும் சுட்டெரித்த சிவபெருமானைக் குறிக்கும் என்க.

159. வாலிவதைப்படலம்பக்களண்.645/152 அங்கதன் கூற்று

''பஞ்சின் மெல் அடியாள் பங்கன் பாதுகம் அலாது, யாதும்
அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய்! அமரர் யாரும்
எஞ்சலர் இருந்தார் உன்னால்; இன் அமுது ஈந்த நீயோ
துஞ்சினை; வள்ளியோர்கள் நின்னின் யார் சொல்லற்பாலார்?''
(4086)

அங்கதன் தன் தந்தை வாலியின் உடலைப் பார்த்துப் புலம்பும் காட்சி இது.

''பஞ்சைக் காட்டிலும் மெல்லிய திருவடிகளை உடையவளான உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டிருப்பவனான சிவபெருமானின் திருவடிகளைத் தவிர, வேறு எதனையும் வணங்கி அறியாத செம்மையான கரங்களையுடைய ஆணை செலுத்தும் ஆற்றல் பொருந்தியவனே! தேவர்கள் ஒருவர்கூட இறக்கவில்லை. எல்லோரும் உன்னால்தான் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள். காரணம் முன்பு நீதான் உன் தோளாற்றலால் பாற்கடலைக் கடைந்து அதனின்றும் தோன்றிய தேவ அமிர்தத்தைத் தேவர்களுக்கு அளித்தாய்; அவ்வாறு இந்த இனிய அமிழ்தத்தை ஊட்டிய நீயோ இன்று இறந்து கிடக்கிறாய். உன்னைக்காட்டிலும்

வள்ளன்மைமிக்கவர்கள் என்று வேறுயாரையும் குறிப்பிட்டுக் கூறமுடியுமோ?'' என்று புலம்புகிறான் அங்கதன்

இங்கு ''பஞ்சின் மெல்லடியாள் பங்கன்'' என்பது பஞ்சைக் காட்டிலும் மென்மையான திருவடிகளை உடைய உமையம்மையை இடப்பாகத்தில் கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

160. வாலிவதைப்படலம்பக்கஎண்.647/167 தாரை கூற்று.

''அணங்கு ஆர் பாகனை ஆசைதோறும் உற்று,
உணங்கா நாள்மலர் தூய் உள் அன்பினால்
இணங்கா, காலம் இரண்டொடு ஒன்றினும்
வணங்காது, இத்துணை வைக வல்லையோ?'' (4101)

களத்தில் மாண்டு கிடக்கும் வாலியின் உடலைப் பார்த்து அவன் மனைவி தாரை புலம்பும் காட்சி இது.

''உமையம்மையைத் தனது ஒரு பகுதியில் கொண்டு விளங்கும் சிவபெருமானை எட்டுத் திசைகளிலும் சென்று, வாடிப்போகாத அன்றலர்ந்த மலர்களைத்தூவி, உள்ளன்போடு பொருந்தி, மூன்று காலமும் வணங்காமல், இவ்வளவு நேரம் உன்னால் இவ்வாறு தரையில் வாளா கிடக்க முடியுமோ?'' என்று புலம்புகிறாள் தாரை.

இங்கு ''அணங்கு ஆர் பாகன்'' என்பது உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

161. கார்காலப் படலம் பக்கஎண்.655/3 கவிக்கூற்று

''நண்ணுதல் அருங்கடல் நஞ்சம் நுங்கிய
கண்ணுதல் கண்டத்தின் காட்சியாம் என,
விண்ணகம் இருண்டது; வெயிலின் வெங்கதிர்
தண்ணிய மெலிந்தன; தழைத்த மேகமே. (4150)

இராமபிரான் சுக்கிரீவனுக்கு அரசியல் அறிவுரை கூறியபின், ''நான்கு திங்கள் கழித்துக் கார்காலம் முடிந்தவுடன் பெரும் படையுடன் இங்கு வருக'' என்று விடைகொடுத்து அனுப்பியபோது இரவு வந்துவிட்டது என்பதைக் கூறும் பாடல் இது.

நெருங்குதற்கு அரிய பாற்கடலினின்றும் தோன்றிய ஆலகால விஷத்தை விழுங்கியவனும், நெற்றிக் கண்ணையுடையவனுமான சிவபெருமானின் கழுத்தைப்போலக் கருமையாக காட்சி தந்து வானப்பரப்பு முழுவதும் இருள் பரவியது; சூரியனின் கொடிய கிரணங்கள்கூட குளிர்ச்சி பொருந்தியனவாய் தண்ணொளி பரப்பின. மேகம் செழித்துத் திகழ்ந்தது.

மேகம் எப்படிக் கறுத்து வானப்பரப்பு இருண்டு போனது என்பதற்குச் சிவபெருமான் கழுத்து கறுத்திருப்பதுபோல் கறுத்திருந்தது என்று உவமிக்கிறான் கவிஞன். இங்கே ''அருங்கடல் நஞ்சம் நுங்கிய கண்ணுதல் கண்டம்'' என்பது பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தைத் தானே உண்டு, கறுத்த கழுத்தை உடையவன் என்றும், நெற்றிக் கண்ணையுடையவன் என்றும் சிவபெருமானைக் குறித்தார் என்க.

162. கார்காலப் படலம் பக்கஎண்.656/11 கவிக்கூற்று.

எண்வகை நாகங்கள், திசைகள் எட்டையும்
நண்ணின நா வளைத்தனைய, மின் நக;
கண்ணுதல் மிடறு எனக் கருகி, கார் விசும்பு
உள்நிறை உயிர்ப்பு என, ஊதை ஓடின. (4158)

எட்டுவகை என்று கூறப்படுகின்ற பாம்புகள், எட்டுத் திசைகளையும் நெருங்கி, தங்கள் நாக்குகளை வளைப்பனபோல, மின்னல்கள் ஒளிவீசின. நெற்றிக்கண்ணை உடையவனான சிவபெருமானின் கழுத்துப் போலக் கருநிறம் கொண்டு கரிய ஆகாயம் தன்னுள்ளே இருக்கும் மூச்சுக்காற்றை வெளிவிடுவதுபோல வாடைக்காற்று வீசியது என்கிறான் கவிஞன்.

வானம் இருண்டுபோனதற்கு மீண்டும் கவிஞன் ''கண்ணுதல் மிடறு'' என்ற உவமையையே கையாளுகிறான். ''கண்ணுதல் மிடறு'' என்பது நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானது கரிய கழுத்து என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

163. கார்காலப் படலம் பக்கஎண்.657/21 கவிக்கூற்று

பரஞ்சுடர்ப் பண்ணவன், பண்டு, விண்தொடர்
புரம்சுட விடும் சரம் புரையும் மின் இனம்;
அரம் சுடர்ப் பொறி நிமிர் அயிலின், ஆடவர்
உரம்சுட உளைந்தனர், பிரிந்துளோர் எலாம். (4168)

எல்லோர்க்கும் மேலானவனும், ஒளிவடிவானவனுமான இறைவனாகிய சிவபெருமான் முன்நாளில், ஆகாயத்தில் இடைவிடாது உலவிக்கொண்டிருந்த முப்புரங்களையும் சுட்டெரிக்கத் தொடுத்த அம்பினைப்போல, நட்சத்திரக்கூட்டங்கள் விண்ணில் ஒளிவீசித் திகழ்ந்தன. அரத்தால் அராவப்பட்டு ஒளிமிகுந்து விளங்குகின்ற வேற்படை, ஆடவர்களின் நெஞ்சினைச் சுட்டதால் தலைவரைப் பிரிந்துள்ள தலைவியர் அனைவரும் மனம் வருந்தித் துன்புற்றார்கள்.

தலைவனைப் பிரிந்த தலைவியர், துன்புற்ற நிலைக்கு அரத்தால் அராவப்பட்ட கூரிய வேற்படை துன்புறுத்தும்நிலை உவமை. அதுபோல

நட்சத்திரங்கள் விண்ணில் ஒளிவீசித் திகழ்ந்தமைக்கு முன்பு சிவபெருமான் முப்புரங்களைச் சுட்டெரிக்கப் பயன்படுத்திய அம்புகளின் ஒளி உவமை.

இங்கே ''பரஞ்சுடர்ப் பண்ணவன்'' என்பது எல்லோருக்கும் மேலானவனான இறைவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும். ''புரம்சுட விடும் சரம்'' என்பது சிவபெருமான் முப்புரங்களையும் சுட்டெரிக்கப் பயன்படுத்திய அம்பினைக் குறிக்கும் என்க.

164. கார்காலப் படலம் பக்கஎண்.669/99 இலக்குவன் கூற்று

''கண்ணிடை நுதலினன், கணிச்சி வானவன்,
விண்ணிடைப் புரம்சுட, வெகுண்ட மேலைநாள்,
எண்ணிய சூழ்ச்சியும், ஈட்டிக் கொண்டவும்,
அண்ணலே! ஒருவரால் அறியற்பாலதோ?'' (4246)

''நெற்றியில் கண் பெற்ற முக்கணானும், மழுப்படையை ஏந்தியவனுமான தேவர்தலைவன் சிவபெருமான், ஆகாயத்தில் நின்று துன்புறுத்தி வந்த முப்புரங்களையும் சுட்டெரிப்பதற்காக, சினந்து எழுந்தபோது, அவன் மேற்கொண்ட ஆலோசனையையும், அதற்காக அவன் சேகரித்துக் கொண்ட ஆயுதங்களையும், பெருமையிற் சிறந்த இராம! ஒருவரால் எண்ணிப்பார்க்கத் தக்கதுவோ?'' என்று கேட்கிறான் இலக்குவன்.

''சிவபெருமான் போன்ற கடவுளர்கள்கூட, தான் ஒரு காரியம் நிறைவேற்ற முற்படும்போது அதனைச் செய்வதற்குரிய வழிமுறைகளையும், அதற்குத் தேவைப்படுகின்ற கருவிகளையும் முதலிலேயே நன்கு ஆலோசித்துத் தெரிந்து எடுத்துச் செய்வார்கள். எனவே நாமும் சீதாதேவியைத் தேடிக் கண்டு பிடித்தற்குரிய வழிமுறைகளை ஆராயவேண்டும். அதற்குத் தேவையான கருவிகளை, துணையைத் தேடிப் பெறவேண்டும். அதை விடுத்து இவ்வாறு வாளா அமர்ந்து கொண்டு துன்பப்படுவதில் ஒரு பயனும் விளையாது'' என்று அறிவுரை கூறுகிறான் இலக்குவன் என்பதாம்.

இங்கு ''கண்ணிடை நுதலினன்'' என்பது நெற்றிக் கண்ணை உடையவன் என்றும் ''கணிச்சி வானவன்'' என்பது மழுப்படையை ஏந்திய தேவர்தலைவன் என்றும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

165. தானைகாண் படலம் பக்கஎண்.695/24 கவிக்கூற்று

''எண்ணின், நான்முகர் எழுபதினாயிரர்க்கு இயலா;
உண்ணின், அண்டங்கள் ஓர்பிடி உண்ணவும் உதவா;
கண்ணின் நோக்குறின், கண்ணுதலானுக்கும் கதுவா;
மண்ணின்மேல் வந்த வானர சேனையின் வரம்பே!'' (4430)

அனுமனால் இராமபிரான் முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட சேனையின் அளவைக் கணக்கிட்டுப் பார்ப்போம் என்றால், அது நான்கு முகங்களையுடைய எழுபதினாயிரம் பிரமதேவர்கள் வந்தாலும் முடியாது. இந்த அண்டங்களிலுள்ள உணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தாலும் அவர்களின் ஒரு பிடி உண்ணும் அளவுக்கும்கூடப் போதாது. கண்களால் ஓரிடத்திலிருந்து அவற்றைப் பார்க்கலாம் என்றாலும், நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானாலும்கூடப் பார்த்து முடிக்கமுடியாது. அவ்வளவு பெரும் அளவுள்ள சேனையை அனுமன் கொணர்ந்தான் என்பதாம்.

இங்கே ''**கண்ணுதலான்**'' என்பது நெற்றியில் கண்ணை உடைய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

166. நாடவிட்ட படலம் பக்கஎண்.701/24சுக்கிரீவன் கூற்று

''அரன் அதிகன், உலகளந்த அரி அதிகன்''
என்று உரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதி சென்று அடைவு அரிய பரிசேபோல்,
புகலரிய பண்பிற்று ஆமால்;
சுர நதியின் அயலது; வான்தோய் குடுமிச்
சுடர்த் தொகைய, தொழுதோர்க்கெல்லாம்
வரன் அதிகம் தரும் தகைய, அருந்ததியாம்
நெடுமலையை வணங்கி, அப்பால்'' (4470)

தெற்கே செல்ல இருக்கின்ற அனுமன், அங்கதன், சாம்பன், நீலன் ஆகியோர்களுக்கு, தென்திசைநோக்கி அவர்கள் செல்லவேண்டிய இடங்களை சுக்கிரீவன் கூறுவதாக அமைந்த பாடல் இது.

''சிவபெருமான்தான் சிறந்தவன் பெரியவன்; அல்லது இவ் உலகளந்த உத்தமனான திருமால்தான் பெரியவன் சிறந்தவன் என்று கூறிக்கொண்டிருக்கும் அறிவற்ற புலவர்கள் வீடுபேறு அடைவது கடுமையான தன்மையாகி விடுவதைப்போல, சென்றடைவதற்கரியதான தன்மையை உடையதானதும், தேவகங்கையின் அருகே உள்ளதும், வானளாவப் படிந்திருக்கும் சிகரங்களில் உலவும் ஒளிமிக்க சூரிய சந்திரர்கள் பொருந்தியிருப்பதும், அதனை வணங்குகின்றவர்களுக்கெல்லாம் மிக அதிகமான வரங்களை அளித்தருளும் இயல்புடையதுமான அருந்ததி என்று கூறப்படுகின்ற நீண்ட பெரிய மலையை வணங்கிச் செல்லுவீர்களாக! அதன் பிறகு - பாடல் தொடர்கிறது.

இங்கே ''**அரன்**'' என்ற சொல் சிவபெருமானைக் குறித்து நின்றது எனக்கொள்க.

167. பிலம்புக்கு நீங்கு படலம் பக்கஎண்.709/3 கவிக்கூற்று

சிந்துராகத்தொடும் திரள் மணிச் சுடர் செறிந்து
அந்தி வானத்தின் நின்று அவிர்தலான், அரவினோடு
இந்து யாறு எய்தலான், இறைவன் மா மௌலி போல்
விந்த நாகத்தின் மாடு எய்தினார், வெய்தினால். (4523)

வானரவீரர்கள் விந்தியமலையைச் சென்றடைந்த செய்தியைக் கூறுகிறான் கவிஞன்.

சிவந்த செந்துரப் பொடியோடும், திரண்ட மாணிக்கக் கற்களின் ஒளிநிறைந்து அந்தி வானம் சிவந்து தோன்றுவதாலும், பாம்பு, பிறைச்சந்திரன், ஆகாயகங்கை முதலியவற்றைக் கொண்டிருக்கின்ற, சிவபெருமானின் சிறந்த சடைமுடியைப்போல, திரண்டு உயர்ந்து விளங்குகின்ற விந்திய மலையின் அருகே விரைந்து சென்று அடைந்தார்கள்.

பாம்பையும், பிறைச்சந்திரனையும் ஆகாயகங்கையையும் தன் சிறந்த சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமான் என்பது ''அரவினொடு இந்து யாறு, எய்தலான், இறைவன் மாமௌலிபோல்'' எனக் கூறப்பட்டது என்க.

168. சம்பாதிப் படலம் பக்கஎண்.736/61 சம்பாதி கூற்று.

''நான்முகத்து ஒருவன், மற்றை நாரி ஓர் பாகத்து அண்ணல்,
பால்முகப் பரவைப் பள்ளிப் பரம்பரன் பணி என்றாலும்
காலனுக்கேயும் சேறல் அரிது; இது காவல் தன்மை;
மேல் உமக்கு உறுவது எண்ணிச் செல்லுமின், விளிவு இல் நாளீர்!''
(4708)

சம்பாதி, அனுமன் முதலியோருக்கு இலங்கையின் காவல்தன்மை பற்றித் தெரிவிக்கும் பாடல் இது.

''நான்கு முகங்களையுடைய ஒப்பற்ற பிரமதேவனும், உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டுள்ள பெருமைக்குரியவனான சிவபெருமானும், பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பரம்பொருளான திருமாலும், இயமனும்கூட அங்கு போவது என்பது மிகவும் அரிதானதாகும். இதுதான் இலங்கை மாநகரின் காவல் தன்மை. எனவே உங்களுக்கு மேலே என்ன நிகழும் என்பதை நன்கு சிந்தித்துச் செல்லுங்கள்'' என்று கூறி, அவர்களை அழிவில்லாத வாழ்நாளை உடையவர்களே! என்றும் அழைக்கிறான் சம்பாதி.

இலங்கைக்குள் சென்று மீண்டும் உயிருடன் திரும்பிவருதல் மிகவும் அரிது என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான் சம்பாதி என்பதாம்.

இங்கே ''நாரி ஓர் பாகத்து அண்ணல்'' என்பது உமையம்மையை இடப்பாகத்தில் கொண்டுள்ளவன் என்று சிவபெருமானைக் குறிக்கும்.

169. மயேந்திரப் படலம் பக்கஎண்.738/9 சாம்பவன் கூற்று

''மேலை விரிஞ்சன் வீயினும் வீயா மிகை நாளீர்;
நூலை நயந்து நுண்ணிது உணர்ந்தீர், நுவல் தக்கீர்;
காலனும் அஞ்சும் காய்சின மொய்ம்பீர்; கடன் நின்றீர்;
ஆலம் நுகர்ந்தான் ஆம் என, வெம்போர் அடர்கிற்பீர்!''(4719)

கடலைத்தாண்டி இலங்கை சென்று மீண்டு வரும் தகுதிபடைத்தவன் அனுமன் ஒருவனே என்று சாம்பவன் கூறுவதாக வரும் பாடல் இது.

''சிறந்தவனான பிரமதேவனே அழிந்தாலும்கூட அழியாத நீண்ட வாழ்நாளைப் பெற்றவர் நீங்கள். சாத்திர, நீதிநூல்கள் எல்லாவற்றையும் நுணுகி ஆராய்ந்து விரும்பிப் படித்து உணர்ந்தவர்கள் ஆவீர்கள். அவற்றை எடுத்துச் சொல்லும் ஆற்றலும் தகுதியும் படைத்தவர்கள் நீங்கள். இயமன்கூட அஞ்சத்தக்க பெருஞ்சீற்றமும் வல்லமையும் பொருந்தியவர்கள் நீங்கள்; உங்கள் கடமையைச் செவ்வனே ஆற்றுவதில் உயர்ந்து நிற்கின்றீர்கள்; பாற்கடலினின்றும் தோன்றிய ஆலகால விஷத்தையே உண்டு அருளியவனான சிவபெருமானைப் போல, வெற்றி தருகின்ற கொடிய போரைக்கூட நெருக்கிச் செய்யும் ஆற்றல் கொண்டவர்கள் நீங்கள்'' என்று சாம்பவன் அனுமனை ஊக்குவிக்கிறான் என்பதாம்.

இங்கே ''ஆலம் நுகர்ந்தான்'' என்பது பாற்கடலினின்றும் முதலில் தோன்றிய ஆலகால விஷத்தை அருந்தியவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க. அனுமனைக் குறிக்கும்போது கவிஞன் மரியாதைப் பன்மையிலேயே கூறுவதை நோக்குக.

இவைதவிர, சென்னைக் கம்பன்கழகச் செம்பதிப்பில் மிகைப்பாடல்கள் என்று தரப்பெற்றிருக்கின்ற பாடல்களில் கீழ்க்காணும் 4 பாடல்களில் சிவபெருமான் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவை மிகைப்பாடல்கள் எனப் பிரிக்கப்பெற்றிருப்பதால் அவற்றிற்கான விளக்கங்கள் தரப்படவில்லை.

170. அனுமப்படலம் பக்கஎண்.741/8-2 அனுமன்கூற்று.

சிவனும், அம்புய மலரில் அயனும், இந்திரை கொழுநன்
அவனும் வந்திட, உதவும் அரி எனும் பிரமம் அது
துவளும் அஞ்சன உருவுதொடரு செங்கமல மலர்
உவமை கொண்டு, இதில் ஒருவன் உலகில் வந்தது கொல்என.

171. நட்புகோட் படலம் பக்களண்.742/71-1 இராமன் கூற்று

நீலகண்டனும், நேமியும், குலிசனும், மலரின்
மேல் உளானும், வந்து, அவன் உயிர்க்கு உதவினும், வீட்டி
ஆலும் உன் அரசு உரிமையோடு அளிக்குவென்; அனலோன்
சாலும் இன்று எனது உரைக்கு அருஞ்சான்று எனச் சமைந்தான்.

172. தானைகாண் படலம் பக்களண்.745/1-4 கவிக்கூற்று.

கங்கைசூடி தன் கருணை பெற்றுடைய முன் வாலி
பொங்கும் ஆணையின் எண்திசைப் பொருப்பினும் பொலியத்
தங்கி வாழ் கவித் தானை அங்கு ஆறு ஐந்து கோடி
வங்க வேலையின் பரந்திட, வசந்தன் வந்து அடைந்தான்.

173. மயேந்திரப் படலம் பக்களண்.749/18-1 சாம்பன் கூற்று

நாலுமறைக்கும் வேலியும் ஆகி, நடு நிற்கும்
சீலம் மிகுந்தீர்! திங்கள் மிலைச்சித் திகழ் வேணி
ஆல மிடற்றான் மேலும் உதித்தீர்! அது போதில்
காலின் நிறைக்கோ காலனும் ஆகக் கடிது உற்றீர்.

கிஷ்கிந்தா காண்டம் குறிப்பு நிறைவுற்றது

5. சுந்தரகாண்டம்

174. கடல்தாவு படலம் பக்கம்-754/11 கவிக்கூற்று.

வெயில் இயல் குன்றம் கீண்டு வெடித்தலும், நடுக்கம் எய்தி,
மயில் இயல் தளிர்க்கை மாதர் தழீஇக் கொளப் பொலிந்த வானோர்,
அயில் எயிற்று அரக்கன் அள்ளத் திரிந்த நாள், அணங்கு புல்லக்
கயிலையில் இருந்த தேவைத் தனித்தனி கடுத்தல் செய்தார்.

(4751)

ஒளிமிக்க மயேந்திரமலையில் அனுமன் தன் கால்களை ஊன்றி அழுத்தியதால் அது இரண்டாகப் பிளவுபட்டு வெடித்தது கண்டும், அதனால் எழுந்த பேரோசை கேட்டும் அச்சம்கொண்டு, மயில்போன்ற சாயலையுடையவரும், தளிர்போன்ற மெல்லிய அழகிய கைகளையுடையவருமான தேவமகளிரை அணைத்துக்கொண்டு பொலிந்து விளங்கிய தேவர்களின் தோற்றம், முன்பு, கூரிய பற்களையுடைய அரக்கனாகிய இராவணன் கயிலைமலையைப் பெயர்த்தெடுத்தபோது அதனால் நிலைகுலைந்துபோன உமையம்மையை தழுவிக்கொண்டிருந்த பரம்பொருளாகிய சிவபெருமானை, ஒவ்வொருவரும் தனித்தனியாக ஒத்திருந்ததைப் போன்றிருந்தது.

சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையைப் பெயர்த்தெடுத்தான் கூரிய பற்களையுடைய அரக்கன் இராவணன். அப்பொழுது சிவபெருமான் தன் தேவி உமையம்மையை அன்புடன் அணைத்துக்கொண்டிருந்தான். அதுபோல இப்போது அனுமன் தன் கால்விரலை ஊன்றி அழுத்தியதால் மயேந்திரமலை நிலைகுலைந்தபொழுது, தேவர்கள் தத்தம் தேவிமார்களை அணைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதாம்.

இங்கே ''கயிலையில் இருந்த தேவு'' என்பது கயிலைமலையில் வீற்றிருப்பவன் என்று சிவபெருமானைக் குறித்தது என்க.

175. கடல்தாவு படலம் பக்கம்-756/25 கவிக்கூற்று.

விண்ணவர் ஏத்த, வேத முனிவரர் வியந்து வாழ்த்த,
மண்ணவர் இறைஞ்ச, செல்லும் மாருதி, மறம்உள் கூர,
''அண்ணல் வாள் அரக்கன் தன்னை அமுக்குவென் இன்னம் என்னா,
கண்ணுதல் ஒழியச் செல்லும் கயிலைஅம் கிரியும் ஒத்தான்.

(4765)

''விண்ணுலகத்துத் தேவர்கள் போற்றித் துதிக்கவும், சிறந்த முனிவர்கள் வியந்து வாழ்த்துரைக்கவும், நிலவுலகத்து மக்கள் கைகூப்பி வணங்கவும், வானத்தில் செல்லுகின்ற அனுமன், பகை உணர்ச்சி மனத்துள் மிகுதியாக வெளிப்பட, ''கொடிய அரக்கனாகிய இராவணனை இன்னும் ஒருமுறை அழுத்துவேன்'' என்று கருதி, முக்கண்ணனாகிய சிவபெருமானை விட்டுவிட்டுத் தான் மட்டும் தனியாகச் செல்லும் கயிலைமலையை ஒத்துத் தோன்றினான்.

சிவபெருமான் வீற்றிருந்த கயிலைமலையைப் பெயர்த்தெடுத்தான் இராவணன். அப்பொழுது சிவபெருமான் தன் கால் கட்டை விரலால் இராவணனின் கைகளை அழுத்தினான். அதனால் துன்புற்ற இராவணன் அழுது அரற்றி, சிவபெருமானுக்குப் பிடித்த சாமகானம் பாடி அந்த இக்கட்டினின்றும் மீண்டு, சிவபெருமானால் நாளும் வாளும் கொடுக்கப்பெற்றான். இப்பொழுது சிவபெருமானைத் தனியே விட்டுவிட்டு அந்தக் கயிலைமலை மட்டும் அரக்கன் இராவணனை இன்னும் ஒருமுறை அழுத்துவேன் என்று கருதிச் செல்லுவதைப் போன்றிருந்தது அனுமன் வானில் பறந்துசென்ற காட்சி என்பதாம். அனுமனுக்குச் சிவபெருமானில்லாத கயிலைமலை ஒப்பு.

இங்கே ''கண்ணுதல்'' என்பது சிவபெருமானையும் ''கயிலைஅம் கிரி'' என்பது அவன் உறையும் கயிலை மலையையும் குறித்தன என்க.

176. கடல்தாவு படலம் பக்கம்-764/77 கவிக்கூற்று

துண்டப் பிறைத்துணை எனச் சுடர் எயிற்றாள்;
கண்டத்திடைக் கறையுடைக் கடவுள், கைம்மா
முண்டத்து உரித்த உரியால், முளரி வந்தான்
அண்டத்தினுக்கு உறை அமைத்தனைய வாயாள் (4817)

கடல்தாவி இலங்கை செல்லுகின்ற அனுமனைத் தடுக்கின்ற அங்காரதாரையின் தோற்றம் பற்றிக் கூறும் பாடல் இது.

''இரண்டாகப் பிளவுபட்ட பிறைச்சந்திரனைப்போல ஒளிவீசும் இரண்டு கோரப்பற்களை உடையவள்; கழுத்தின் நடுவில் ஆலகால விஷத்தைக் கறையாக உடையவனும், தண்டகவனத்து முனிவர்கள் ஏவிய துதிக்கையையுடைய யானையின் உடம்பினின்றும் உரித்த அதன் தோலை ஆடையாக அணிந்தவனுமாகிய சிவபெருமான், திருமாலின் உந்தித்தாமரையினின்றும் தோன்றியவனான பிரமதேவன் ஆகியோர் படைத்த இந்த உலக உருண்டைக்கு உறைபோல் அமைந்த பெரிய வாயினை உடையவள்'' என்கிறான் கவிஞன்.

இங்கே **''கண்டத்திடைக் கறையுடைக் கடவுள்''** என்பது கழுத்தில் நஞ்சைத் தேக்கிவைத்துள்ள நஞ்சுண்ட கண்டன் என்று சிவபெருமானைக்

குறிக்கும். ''கைம்மா முண்டத்து உரித்த உரி'' என்பது, தண்டகவனத்து முனிவர்கள் ஏவிய யானையின் தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்திக்கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

177. கடல்தாவு படலம் பக்கம்-765/85 கவிக்கூற்று

ஆர்த்தனர்கள் வானவர்கள்; தானவர் அழுங்கா
வேர்த்தனர்; விரிஞ்சனும் வியந்து, மலர்வெள்ளம்
தூர்த்தனன்; **அகன் கயிலையில் தொலைவு இலோனும்**
பார்த்தனன்; முனித்தலைவர் ஆசிகள் பகர்ந்தார். (4825)

அங்கார தாரையின் வயிற்றுள் புகுந்து வெளிவந்த அனுமனின் நிலையைக் கண்டவர்களின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன்.

அங்கார தாரையின் குடலைக் கிழித்து வெளிவந்த அனுமனின் செயலைக் கண்டு தேவர்கள் ஆரவாரம் செய்தார்கள்; அசுரர்கள் மனம் வருந்தி உடல் வியர்க்கப்பெற்றார்கள்; பிரமதேவனும் வியப்புற்று மலர்மாரி பொழிந்தான்; அகன்ற கயிலைமலையில் வாழ்கின்ற, அழிவேயில்லாத சிவபெருமானும் இதனைக் கண்ணுற்றான், தலைமைசான்ற முனிவர்களும் வாழ்த்துரை கூறி ஆசிர்வதித்தார்கள்.

இங்கே ''அகன் கயிலையில் தொலைவிலோன்'' என்பது இடம் அகன்ற கயிலைமலையில் வீற்றிருப்பவன் என்றும், அழிவென்பதே இல்லாதவன் என்றும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

178. ஊர்தேடு படலம் பக்கம்-768/10 அனுமன் கூற்று

''தேவர் என்பவர் யாரும் இத்திருநகர்க்கு இறைவற்கு
ஏவல் செய்பவர்; செய்கிலாதவர் எவர் என்னின்,
மூவர் தம்முளும் ஒருவன் அங்கு உழையனா முயலும்!
தாஇல் மாதவம் அல்லது, பிறிது ஒன்று தகுமோ?'' (4844)

சீதையைத் தேடி இலங்கை மாநகரை அடைந்த அனுமன், இலங்கையின் செல்வச்செழிப்பையும் இராவணனின் மாட்சிமையையும் காணும்பொழுது அங்கு சிவபெருமான், திருமால் என்ற இரு கடவுள்களைத் தவிர, மற்ற எல்லாத் தேவர்களும், பிரமனும்கூட இராவணனுக்குக் குற்றேவல் செய்து கொண்டிருப்பதைக் காணுகின்றான். அப்பொழுது அவன் கூறுவதாக வருவது இப்பாடல்.

''தேவர்கள் என்று சொல்லப்படுகின்ற எல்லோரும் இந்த அழகிய நகரான இலங்கை மாநகருக்கு அரசனான இராவணனுக்குக் குற்றேவல் செய்பவர்களே ஆவார்கள். அவ்வாறு அவனுக்கு ஏவல் கூவல் பணி செய்யாதவர்கள் யார் என்றால் பிரமதேவன், திருமால், சிவபெருமான் ஆகிய

முத்தேவர்களுக்குள் ஒருவனாகிய பிரமதேவன்கூட அங்கே குற்றேவல் செய்வதற்கென இப்பொழுது முயன்று கொண்டிருக்கிறான் என்றால் குற்றமற்ற பெருந்தவம் அல்லாது வேறு ஏதேனும் இத்தகைய சிறப்புக்கும் பெருமைக்கும் தகுதிபடைத்ததாகுமோ?'' என்கிறான் அனுமன். எனவே இராவணன் அரும்பெரும் தவம் செய்ததனால்தான் இத்தகைய சிறப்புப் பெற முடிந்தது என்று கருதுகிறான் என்பதாம்.

இங்கே ''முத்தேவருள்ளும்'' என்பதில் சிவபெருமானையும் ஒருவராகக் குறித்தார் என்க.

179. ஊர்தேடு படலம் பக்கம்-773/44 கவிக்கூற்று

கரித்த மூன்று எயிலுடைக் கணிச்சி வானவன்
எரித்தலை அந்தணர் இழைத்த யானையை,
உரித்த பேர் உரிவையால் உலகுக்கு ஓர் உறை
புரித்தனனாம் என, பொலியும் பொற்பதே (4878)

இலங்கை சென்றுசேர்ந்த அனுமன் அந் நள்ளிரவில் இலங்கையில் பரவியிருக்கும் இருள் பற்றிக் கூறுவதாக வருவது இப்பாடல்.

மூன்றுவகையான மதிற்புரத்தைக் கொண்ட முப்புரங்களையும் சுட்டெரித்துக் கரியாக்கிய மழுவாயுதத்தை உடைய தேவர் தலைவனான சிவபெருமான், தண்டகவனத்து முனிவர்கள் வேள்வித்தீயில் உண்டாக்கி அனுப்பிய யானையைக் கொன்று அதன் தோலை இவ்வுலகுக்கே ஒரு போர்வையாகச் செய்தனன்போலும் என்று கருதும்படி இருட்பிழம்பு பொலிவுபெற்றுத் திகழ்ந்தது.

இங்கே ''கரித்த மூன்று எயிலுடைக் கணிச்சி வானவன்'' என்பது முப்புரங்களையும் சுட்டெரித்துக் கரியாக்கிய மழுப்படையையுடைய தேவர்தலைவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

180. ஊர்தேடு படலம் பக்கம்-778/84 இலங்கை மாதேவி கூற்று

என்னா முன்னம், ''ஏகு'' என, ஏகாது, எதிர்மாற்றம்
சொன்னாயே? நீ யாவன் அடா? தொல்புரம் அட்டான்
அன்னாரேனும் அஞ்சுவர் எய்தற்கு, அளி உற்றால்
உன்னால் எய்தும் ஊர்கொல் இவ்வூர்?'' என்று உற நக்காள்.
(4918)

இலங்கை நகருக்குள் புகுந்த அனுமனைக் கண்டு, இலங்கையின் காவல் தெய்வமான இலங்கைமாதேவி அனுமனை நோக்கி, நான் ''இங்கிருந்து போய்விடு'' என்று சொன்ன பின்பும், இங்கிருந்து போகாது, என்னை எதிர்த்துப் பேசிக் கொண்டிருக்கிறாயே? யாரடா நீ? பழமையான

முப்புரங்களையும் சுட்டெரித்தவனான சிவபெருமானைப் போன்றவர்கள்கூட இவ்வூரினுள் நுழைவதற்குச் சற்று அச்சம் கொள்வர். உனக்கு இவ்வூரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மிகுதியாக இருந்தால், உன்னைப்போன்றவர்களெல்லாம் நுழையக்கூடிய ஊரா இந்த ஊர்?'' என்று வெகுண்டுகூறி, மிக ஆவேசமாகச் சிரித்தாள்.

இங்கே ''தொல்புரம் அட்டான் '' என்பது பழமையான முப்புரங்களையும் சுட்டெரித்தவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

181. ஊர்தேடு படலம் பக்கம்-779/86 இலங்கை மாதேவி கூற்று

''வஞ்சம் கொண்டான்; வானரம் அல்லன்; வரு காலன்
துஞ்சும் கண்டால் என்னை; இவன் சூழ்திரை ஆழி
நஞ்சம் கொண்ட கண்ணுதலைப்போல் நகுகின்றான்''
நெஞ்சம் கண்டே, கல்என நின்றே, நினைகின்றாள். (4920)

தான் விரட்டியும் போகாத அனுமனைக் கண்டு இலங்கைமாதேவி தன்மனத்துள் சிந்தித்துக் கொள்ளுதல் பற்றிக் கூறும் பாடல் இது.

''இவன் உண்மையில் குரங்கு அல்லன்; ஏதோ வஞ்சக எண்ணத்துடன் குரங்கு வடிவம் கொண்டு வந்துள்ளான்; இங்கே வருகின்ற இயமன்கூட என்னைக் கண்டால் செயலிழந்து போய்விடுவான்; அலைகள் சூழ்ந்த பாற்கடலினின்றும் தோன்றிய ஆலகால விஷத்தைப் பருகிய நஞ்சுண்ட கண்டனும், நெற்றிக் கண்ணையுடையவனுமாகிய சிவபெருமானைப்போல் சிரித்துக்கொண்டு நிற்கிறான்'' எனத் தன் உள்ளத்தில் நினைத்துக்கொண்டு கல்லைப்போல இவளும் சற்றுநேரம் அசைவற்று நின்றாள்.

இங்கே ''சூழ்திரை ஆழி நஞ்சம் கொண்ட கண்ணுதல்'' என்பது அலைகள் சூழ்ந்த பாற்கடலினின்றும் எழுந்த ஆலகால விஷத்தை அருந்தியவன் என்றும், நெற்றிக்கண்ணை உடையவன் என்றும் சிவபெருமானைக் குறித்தார் என்க.

182. ஊர்தேடு படலம் பக்கம்-786/140 கவிக்கூற்று.

முக்கண் நோக்கினன் முதல் மகன் அறுவகை முகமும்
திக்கு நோக்கிய புயங்களும், சில கரந்தனையான்
ஒக்க, நோக்கியர் குழாத்திடை உறங்குகின்றானைப்
புக்கு நோக்கினன், புகைபுகா வாயிலும் புகுவான். (4974)

மூன்று கண்களையுடைய சிவபெருமானின் முதன்மையான சிறந்த மகனானவனும், ஆறுவகையான முகங்களைக் கொண்டவனும், திசைகளின் எல்லைவரை நீண்ட பன்னிரண்டு கரங்களையுடையவனுமாகிய முருகப்பெருமான் போன்ற பேரழகுடையவன் இப்போது ஒரு தலையும்,

இரு கைகளும் பெற்றுத் தன் தோற்றத்தை மறைத்துக் கொண்டிருப்பவன்போல, பொலிந்து விளங்குகின்றவனும், அழகிய கண்களையுடைய பெண்களின் கூட்டம் சூழ்ந்திருக்க உறக்கம் கொள்கின்றவனுமாகிய இந்திரசித்து வாழும் அரண்மனைக்குள், புகைகூடப் புகமுடியாத இடத்திலும் நுழைந்து செல்லும் ஆற்றலுடையவனான அனுமன் நுழைந்து சென்று தேடினான்.

இங்கே ''முதல் மகன்'' என்ற சொல்லுக்கு முதன்மையான சிறந்த புதல்வன் என்று முருகப்பெருமானைக் கொண்டிருக்கிறோம். சில சான்றோர்கள் முதல்மகன் என்பது விநாயகக் கடவுளையே குறிக்கும் என்றும் கூறுவர். எனினும் இங்கே விநாயகக் கடவுளைக் குறிக்கின்ற சொற்கள் வேறேதும் கிடைக்கப்பெறாமை கருதத்தக்கது.

இங்கே ''முக்கண் நோக்கினன்'' என்பது மூன்று கண்களையுடையவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

183. ஊர்தேடு படலம் பக்கம்-786/141 அனுமன் கூற்று

''வளையும் வாள் எயிற்று அரக்கனோ? கணிச்சியான் மகனோ?
அளையில் வாள் அரி அனையவன் யாவனோ?, அறியேன்;
இளைய வீரனும், ஏந்தலும், இருவரும், பலநாள்
உளைய உள்ள போர் இவனொடும் உளது'' என உணர்ந்தான்.
(4975)

அனுமன் இந்திரசித்தனைப் பார்த்து, ''குகையில் வாழும் கொடிய சிங்கத்தைப்போன்று தோற்றமளிப்பவன் இவன் யாராக இருப்பான்? தெரியவில்லையே! வளைந்த ஒளிமிகுந்த கோரப்பற்களைக் கொண்ட அரக்கனாக இருப்பானோ? அல்லது மழுவாயுதம் தாங்கிய சிவபெருமானின் புதல்வனாகிய முருகப்பெருமானாக இருப்பானோ? என்றாலும் இவன் வீரம்மிக்க பராக்கிரமசாலியாகத்தான் தோற்றமளிக்கிறான். எனவே நமது இளைய வீரனான இலக்குவனும், தலைவனான இராமபிரானும், இருவரும் ஒன்றுசேர்ந்து பலநாட்கள் இவனுடன் போர்செய்ய வேண்டிவரும்போலத் தோன்றுகிறது'' என்று தன் மதி நுட்பத்தால் உணர்கிறான் அனுமன்.

இது அனுமன், இந்திரசித்தனின் முகக்குறிப்பைக் கொண்டே அவன் முருகப்பெருமான்போன்ற போராற்றல் கொண்டவனாயிருப்பான் என்றும், அவனை இலக்குவனோ, இராமபிரானோ தனித்து நின்று எதிர்க்கமுடியாது என்றும், இருவரும் ஒருசேரப் போர்புரிய வேண்டியிருக்கும் என்றும், இருவரும் சேர்ந்து போர்புரிந்தாலும் ஒரேநாளில் இவனை வெற்றிகொள்ள முடியாது என்றும், பலநாட்கள் இவனுடன் இருவரும் சேர்ந்து போர்புரிந்தால்தான் வெற்றிபெறமுடியும் என்றும் தன் நுண்மாண் நுழை புலம் கொண்டு உணர்கிறான் அனுமன் என்பதாம்.

இங்கே ''கணிச்சியான்'' என்பது மழுப்படை தாங்கிய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

184. ஊர்தேடு படலம் பக்கம்-787/142 அனுமன் கூற்று

''இவனை, இன்துணை உடைய போர் இராவணன், என்னே
புவனம் மூன்றையும் வென்றது ஓர்பொருள் எனப் புகறல்?
சிவனை, நான்முகத்து ஒருவனை, திருநெடுமாலாம்
அவனை அல்லவர் நிகர்ப்பவர் என்பதும், அறிவோ? (4976)

''இத்தகையவனைத் தனக்கு இனிய துணைவனாகப் பெற்றிருக்கும், போராற்றல் வாய்ந்த இராவணன், இந்த மேல், நடு, கீழ் என்று கூறப்படுகின்ற மூன்று உலகங்களையும் வெற்றிகொண்டு அரசோச்சினான் என்பதை ஒருபொருட்டாக எடுத்துக்கொண்டு பாராட்டிப் புகழ்வது ஒரு சிறப்பாகுமோ? சிவபெருமான், ஒப்பற்ற நான்முகனாகிய பிரமதேவன், அழகிய பெருமைவாய்ந்த திருமால் முதலியோர்கள்தவிர, இவனை ஒத்த அழகும், போராற்றலும் கொண்டவர்கள் வேறுசிலர் இருக்கிறார்கள் என்று கூறுவது அறிவுடைமையாகுமோ?'' என்று கேட்கிறான் அனுமன்.

இங்கே ''சிவனை'' என்பது நேரான பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

185. ஊர்தேடு படலம் பக்கம்-798/209 கவிக்கூற்று

குழந்தை வெண்மதிக் குடுமியன் நெடுவரை
குலுக்கிய குலத் தோளைக்
கழிந்து புக்கு, இடைகரந்தன, அனங்கன் வெங்
கடுங்கணை பல பாய,
உழந்த வெஞ் சமத்து உயர்திசை யானையின்
ஒளி மருப்பு உற்று இற்ற,
பழந் தழும்பினுக்கு இடையிடையே, சில
பசும் புண்கள் அசும்பு ஊற; (5043)

இராவணனை அவனது அரண்மனையில் அனுமன் கண்ட காட்சியை விவரிக்கும் பாடல் இது.

வெள்ளிய பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் தரித்திருக்கின்றவனான சிவபெருமான் உறைகின்ற நீண்ட பெரிய கயிலாய மலையைத் தன் கூட்டமான சிறந்த இருபது தோள்களினாலும் அசைத்துக் குலுக்கிய இராவணன், முன்பு உயர்ந்த எட்டுத் திசையானைகளுடனும் போர்செய்து வருத்தமுற்றபோது, அவற்றின் ஒளி மிகுந்த தந்தங்கள் அவன் மார்பில் பாய்ந்து ஒடிந்ததனால் படிந்துபோன பழைய தழும்புகள் காணப்படுகின்றன; அவற்றின் நடுநடுவே, மன்மதன் செலுத்திய கொடிய கடிய மலரம்புகள்

இப்போது பாய, அவை புதிய புண்களைத் தோற்றுவிக்கவே அவற்றினின்றும் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

இங்கே ''குழந்தை வெண்மதிக் குடுமியன் நெடுவரை'' என்பது வெள்ளிய பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் தரித்திருக்கும் சிவபெருமான் உறையும் நீண்ட பெரிய கயிலாயமலை என்று பொருள்படும்.

186. ஊர்தேடு படலம் பக்கம்-799/216 கவிக்கூற்று

தழுவா நின்ற கருங்கடல் மீது உதயகிரியில் சுடர் தயங்க,
எழுவான் என்ன, மின் இமைக்கும் ஆரம் புரளும் இயல்பிற்றாய்,
முழுவானவராய், உலகம் ஒரு மூன்றும் காக்கும் முதல் தேவர்
மழுவாள், நேமி, குலிசத்தின் வாய்மை துடைத்த மார்பானை
(5050)

இராவணனின் கம்பீரத் தோற்றத்தைக் கண்டு அனுமன் வியந்து கூறுவதாக வரும் பாடல் இது.

இவ்வுலகத்தைச் சூழ்ந்து நிற்கின்ற கருங்கடலின்மீது உதயமாகின்ற கிரணங்களால் ஒளிவீசிப் பொலிவுற்றுத் திகழும் சூரியன், உதயகிரியினின்றும் எழுவதைப்போல, மின்னல்போல ஒளிவீசும் இரத்தினமாலை மார்பில் புரளும் தன்மையுடையவனும், இவ்வுலகங்கள் மூன்றையும் முற்றமுழுக்கக் காத்துவரும் முதல் தேவர்களான சிவபெருமான், திருமால், இந்திரன் ஆகியவர்களின் படைக்கலன்களாகிய மழுவாயுதம், ஒளிமிக்க சுதர்சனம் என்னும் சக்கரப்படை, இந்திரனின் வச்சிராயுதம் ஆகியவற்றின் வலிமையைத் துடைத்துப் போக்கிய மார்பினைக் கொண்டவனுமான இராவணனை - பாடல் தொடர்கிறது.

இங்கே முதல் தேவர் என்று சிவபெருமானையும், திருமாலையும் கூறிய கவிஞன், பிரமதேவனுக்குப் பதில் இந்திரனைக் கூறியிருப்பதை நுனித்து நோக்க வேண்டும். பிரமதேவன் போர்செய்யும் இயல்பினன் அல்லன். அவன் எப்போதும் வேதம் ஓதிக்கொண்டிருப்பவன்; எனவே பிரமதேவனை முத்தேவரில் இங்கு சேர்க்கவில்லை எனக் கொள்ளலாம். கருங்கடல் இராவணனின் கரிய உடலுக்கும், உதயகிரி அவனுடைய விரிந்து பரந்த மார்புக்கும், சூரியனின் ஒளிக்கிரணங்கள் அவன் மார்பில் அணிந்திருக்கும் இரத்தினமாலையின் ஒளிக்கும் உவமை எனக்கொள்க.

187. ஊர்தேடு படலம் பக்கம்-800/222 கவிக்கூற்று

ஆலம் பார்த்து உண்டவன்போல், ஆற்றல் அமைந்துளர் எனினும்
சீலம் பார்க்க உரியோர்கள், எண்ணாது செய்பவோ?
மூலம் பார்க்குறின், உல்கை முற்றுவிக்கும் முறை தெரினும்
காலம் பார்த்து, இறை வேலை கடவாத கடல் ஒத்தான். (5056)

ஆலகால விஷத்தை, அதன் பின்விளைவுகளை நன்றாக உணர்ந்து கொண்டபின்னும், உண்டு, தேவர்களைக் காப்பாற்றிய சிவபெருமான்போல வலிமை உள்ளவர்கள் என்றாலும், ஒழுக்கநெறியினின்றும் பிறழாமல் நடக்கும் சான்றோர்கள், பின்விளைவுகளை ஆராயாது காரியங்களைச் செய்ய முற்படுவார்களோ? மாட்டார்கள் அல்லவா? அதுபோல, மூலமுதல் காரணத்தை ஆராய்ந்து பார்த்தால், இவ்வுலகங்கள் எல்லாவற்றையும் முற்றமுழுக்க அழித்தொழிக்கும் ஆற்றல் தனக்கு உண்டென்றாலும், ஊழியிறுதிக்காலம் வரும்வரை காத்திருந்து அதுவரை சிறிதும் கரைகடவாத பெரிய கடலை ஒத்திருந்தான் அனுமன்.

இராவணனைப் பார்த்ததும் அவனது தலைபத்தையும், தோள்கள் இருபதையும் பற்றிப் போர்செய்து அழித்தொழிக்க எண்ணினான் அனுமன். அந்த ஆற்றல் அவனுக்கு இருந்தது என்றாலும் அவன் தன்னைத்தானே அடக்கிக்கொண்டான். எதைப்போல என்றால், கடல் இவ்வுலகம் முழுமையையும் அழிக்கும் ஆற்றல் பெற்றதுதான் என்றாலும் அது ஊழி இறுதிக்காலம் வரும்வரை கரையை ஒரு சிறிதும் கடவாமல் அடங்கி இருத்தல்போல - கரைகடவாமல் இருப்பதுபோல - அனுமனும் இப்போது தன்னைத்தான் சினம் காத்துக் கொண்டான் என்பதாம்.

இங்கே ''ஆலம்பார்த்து உண்டவன்'' என்பது உயிரைக் கொல்லும் நஞ்சு என்பதை உணர்ந்தும், தேவர்களைக் காக்கும் பொருட்டுத் தானே அதனை அருந்தியவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்தது என்க. உலகை அழிக்கும் ஆற்றல் கடலுக்கு இருப்பதுபோல, இராவணனை அழிக்கும் ஆற்றல் அனுமனுக்கு உண்டு என்பதும், கடல் அடங்கி இருப்பதுபோல அனுமனும் அடங்கி இருந்தான் என்பதும் கருத்து.

188. காட்சிப் படலம் பக்கம்-805/21 கவிக்கூற்று

தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணான்
வாங்கு கோல வடவரை வார்சிலை
ஏங்கு மாத்திரத்து, இற்று இரண்டாய் விழ
வீங்கு தோளை நினைந்து, மெலிந்துளாள். (5089)

அசோகவனத்தில் சீதை, இராமபிரானது நினைவால் துன்புறுதலைக் கூறும் பாடல்களுள் இதுவும் ஒன்று.

ஆகாயகங்கையைத் தன் அழகிய சடைமுடியில் தேக்கி வைத்திருப்பவனும், சிவந்த மூன்று கண்களையுடையவனுமாகிய சிவபெருமான் முப்புரங்களை எரிக்கும்பொருட்டு வடக்குத் திக்கிலிருக்கும் அழகிய மேருமலையை நீண்ட வில்லாகக் கொண்டான். இராமபிரான் மிதிலையில் அந்த சிவதனுசை வளைக்க முற்பட்டபோது, அவன் வளைப்பானா, மாட்டானா என்று சீதை ஏங்கி இருந்தாள். அப்போது அந்த

வில்லை இரண்டுகூறாக இராமபிரான் ஒடித்துப்போட்ட போது இருந்த அவனது பூரித்த தோளை, இப்போது இலங்கையில் அசோகவனத்தில் நினைத்துப் பார்த்து உடல் மெலிந்து போகிறாள் சீதை.

இங்கே ''தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணான்'' என்பது ஆகாயகங்கையைத் தன் அழகிய சடைமுடியில் தேக்கிவைத்திருப்பவன் என்றும் சிவந்த மூன்று கண்களையுடையவன் என்றும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

189. காட்சிப் படலம் பக்கம்-819/102 கவிக்கூற்று

ஈசற்கு ஆயினும் ஈடு அழிவுற்று இறை
வாசிப்பாடு அழியாத மனத்தினான்;
ஆசைப் பாடும் அந்நாணும் அடர்த்திட,
கூசிக்கூசி இனையன கூறினான். (5170)

அசோகவனத்தில் சிம்சுபா மரத்தின்மேல் அனுமன் அமர்ந்திருக்கிறான். இராவணன் தேவமகளிர் புடைசூழ சீதையின் அருகில் வருகிறான். உடன் வந்தவர்களைத் தனியே நிறுத்தி அவளை நெருங்கிவந்து இராவணன் அவளுடன் உரையாடுகின்ற காட்சி இது.

''சிவபெருமானின் ஆற்றலுக்குச் சற்றும் குறைவில்லாத பெருமிதம் கொண்ட இராவணன், தான் சீதையின்மேல் கொண்ட ஆசையினால் சிறிது வெட்கம் வந்து வருத்தவும், உள்ளம் கூச்சம் கொண்டு, கீழ்வருமாறு பேசத்தொடங்குகிறான்'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''ஈசன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும். ஈசற்கு ஆயினும் என்பதில் உள்ள உம்மை உயர்வு சிறப்புக் குறித்தது.

190. காட்சிப் படலம் பக்கம்-821/120 சீதை கூற்று

''தோற்றனை பறவைக்கு அன்று; துள்ளுநீர் வெள்ளம் சென்னி
ஏற்றவன் வாளால் வென்றாய்; அன்றெனின், இறத்தி அன்றே?
நோற்ற நோன்பு; உடைய வாழ்நாள், வரம்; இவை நுனித்த எல்லாம்
கூற்றினுக்கு அன்றே? வீரன் சரத்திற்கும் குறித்தது உண்டோ?''
(5188)

சீதை இராவணன் முன்பு ஒரு துரும்பைக் கிள்ளிப்போட்டு அவனைத் தான் ஒரு துரும்பாகக் கருதுவதை அவனுக்குக் குறிப்பால் உணர்த்திக் கூறும் வெய்ய மாற்றங்கள் இவை.

''முன்பு நீ என்னைக் கவர்ந்துகொண்டு வந்தபோது உன்னை எதிர்த்துப் போரிட்ட கழுகின் வேந்தன் சடாயு என்ற பறவையிடம் தோற்றவன் அல்லவா நீ? பொங்கிப் பெருகிவரும் கங்கையாற்றின் வெள்ளத்தைத் தன் சடைமுடியில்

ஏற்றுக்கொண்டவனான சிவபெருமான் உனக்கு உவந்து அளித்த சந்திரகாசம் என்னும் வாட்படையினால்தானே சடாயுவின் சிறகை அரிந்து அவனை வெற்றிகொண்டாய்? அந்த வாள்மட்டும் அன்று உன்கையில் இருந்திருக்காவிட்டால், நீ நிச்சயம் இறந்துபோய் இருப்பாய் அல்லவா? நீ ஆற்றிய அரும்பெருந்தவம், அதனால் நீ இறைவனிடமிருந்து பெற்ற மூன்றரைக்கோடி வாழ்நாள், சந்திரகாசம் என்னும் வாட்படை, யாராலும் வெல்லப்படாய் என்ற வரம் இன்னும் இவைபோன்று நீ சிந்தித்துச் சிந்தித்துக்கேட்ட வரங்கள் எல்லாம் நீ இயமனிடமிருந்து தப்பிப்பதற்காகக் கேட்டதுதானே? ஆனால் அந்த வரங்கள் எல்லாம் வீரனாகிய இராமபிரானின் அம்பினின்றும் தப்பிப்பதற்காகக் கேட்கப்பட்டவை இல்லையே?'' என்கிறாள் சீதை. நீ பெற்ற வரத்தினாலும், வாளினாலும் கூற்றுவனிடமிருந்து தப்பிக்கலாம். ஆனால் வீரன் இராமபிரானின் அம்பினின்று தப்பிக்கமுடியாது என்பது கருத்து.

இங்கே **''துள்ளு நீர் வெள்ளம் சென்னி ஏற்றவன்வாள்''** என்பது பொங்கி வருகின்ற வெள்ளத்தையுடைய ஆகாய கங்கையைத் தன் சடைமுடியில் தேக்கித் தரித்துள்ள சிவபெருமான் என்றும், அவன் தந்தருளிய சந்திரகாசம் என்னும் வாள் என்றும் பொருள்தரும்.

191. காட்சிப் படலம் பக்கம்-821/122 சீதை கூற்று

> **''குன்று நீ எடுத்த நாள், தன் சேவடிக் கொழுந்தால் உன்னை**
> **வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரம் துரந்த மேரு,**
> **என்துணைக் கணவன் ஆற்றற்கு உரன் இலாது, இற்று வீழ்ந்த**
> **அன்று எழுந்து உயர்ந்த ஓசை, கேட்டிலை போலும் அம்மா!''**
> (5190)

''முன்பு நீ கயிலைமலையைப் பெயர்த்தெடுத்தேன் என்று சொல்லுகிறாயே, அப்பொழுது அங்கே வீற்றிருந்த சிவபெருமான் தன் சிவந்த திருவடிகளின் ஒருவிரலின் நுனியால் உன்னை நோகச்செய்து வெற்றி கொண்டானே அந்தச் சிவபெருமான் முப்புரங்களையும் சுட்டெரிக்க அந்த மேருமலையையே ஒப்பற்ற வில்லாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டானே, அந்த வில், என் வாழ்க்கைத் துணைவனாகிய இராமபிரானின் வலிமைக்குத் தாங்காமல் மிதிலை மாநகரில் இற்று ஒடிந்துபோனதே, அப்பொழுது அங்கு எழுந்த பேரொலியை நீ கேட்கவில்லையோ?'' என்று கேட்கிறாள் சீதை.

இங்கு **''சேவடிக் கொழுந்தால் உன்னை வென்றவன்''** என்பது சிவந்த தன் திருவடிகளின் நுனியில் உன்னை அலறவைத்தவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

192. காட்சிப் படலம் பக்கம்-822/126 சீதை கூற்று

''அங்கண் மா ஞாலமும், விசும்பும் அஞ்சவாழ்
வெங்கணாய்! புன்தொழில் விலக்கி, மேற்கொளாய்;
செங்கண்மால், நான்முகன், சிவன் என்றே கொலாம்
எங்கள் நாயகனையும் நினைந்தது? ஏழை நீ'' (5194)

''அழகிய சிறந்த அகன்ற இடமாகிய இந்நிலவுலகும், விண்ணுலகும் அச்சம்கொள்ளும்படியான ஓர் வாழ்க்கையைக் கொண்டுள்ள கொடுமையானவனே! அறிவில்லாத தலைவனாகிய நீ, தானாகவே இழிந்த செயல்கள் செய்வதைத் தவிர்த்து விலக்கிக் கொள்ளமாட்டாய்; சிவந்த கண்களை உடைய திருமால், நான்கு முகங்களை உடைய பிரமதேவன், சிவபெருமான் முதலியவர்களைப்போல மிகவும் எளிமையானவன் என்று எங்கள் தலைவனான இராமபிரானையும் எண்ணிக்கொண்டு விட்டாயா? இராமபிரான் அவ்வளவு எளிமையானவனல்லன்'' என்கிறாள் சீதை.

இங்கே ''சிவன்'' என்பது சிவபெருமானை நேராகக் குறிக்கும் எனக்கொள்க.

193. காட்சிப் படலம் பக்கம்-822/131 சீதை கூற்று

இப்பெரும் செல்வம் நின்கண் ஈந்த பேர் ஈசன், யாண்டும்
அப்பெரும் செல்வம் துய்ப்பான், நின்று மாதவத்தின் அன்றே?
ஒப்பு அரும் திருவும் நீங்கி, உறவொடும் உலக்க உன்னி,
தப்புதி அறத்தை; ஏழாய்! தருமத்தைக் காமியாயோ? (5199)

''நீ இப்பொழுது அடைந்திருக்கின்ற இந்தப் பெரும் செல்வம் எல்லாமும், அந்தப் பெரிய கடவுளான சிவபெருமான் தந்தன அல்லவா? அவன் உன்னுடைய சிறந்த தவத்தைப் பாராட்டி, நீ எப்பொழுதும் அந்தப்பெரும் செல்வத்தை நுகர்ந்து இனிது வாழத்தானே அளித்தான்? ஆனால் நீயோ அந்தப்பெரும் செல்வம் எல்லாம் அழியப்பெற்று, உன் உற்றார் உறவினர் எல்லாம் கெட்டுப்போகும்படி அறத்தினின்றும் பிறழ்ந்து வாழ்கிறாயே? அறிவற்றவனே! நீ ஒருபோதும் தருமத்தை விரும்பவே மாட்டாயோ? தருமநெறியில் வாழவே மாட்டாயோ?'' என்று சாடுகிறாள் சீதை.

இங்கே ''பேர்ஈசன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

194. உருக்காட்டுப் படலம் பக்கம்-838/84 அனுமன் கூற்று

''கன்மத்தை, ஞாலத்தவர் யார் உளரே கடப்பார்?
பொன் மொய்த்த தோளான், மயல்கொண்டு, புலன்கள் வேறாய்,
நல்மத்தை நாகத்து அயல்சூடிய நம்பனே போல்,
உன்மத்தன் ஆனான்; தனை ஒன்றும் உணர்ந்திலாதான்''
(5311)

கணையாழியை அசோகவனத்திலுள்ள சீதையிடம் கொடுத்தபிறகு, சீதை இராமஇலக்குவர் உடல்நலம் பற்றி வினவியதற்கு அனுமன் பதில் கூறியதாகவரும் பாடல்களுள் இதுவும் ஒன்று.

''உலகத்திலுள்ளோர் தத்தம் வினைப்பயனைத் தாமே அனுபவிக்கத்தான் வேண்டும். அதை அனுபவிக்காது கடந்து செல்பவர் யார் இருக்கிறார்கள்? வீர இலக்குமி தோய்ந்திருக்கின்ற திண்மையான தோள்களை உடைய இராமபிரானும், சித்தம் பேதலித்து, மயக்கம்கொண்டு, ஐம்புலன்களும் மாறுபட்டு, வெறுப்படைந்து, நல்ல ஊமத்தம்பூவையும், பாம்பையும் தன் சடைமுடியில் சூடிக்கொண்டிருக்கின்ற சிவபெருமானைப்போல் பித்துப் பிடித்தவன்போல் ஆகிவிட்டான்'' என்கிறான் அனுமன்.

இங்கே ''நல்மத்தை நாகத்து அயல்சூடிய நம்பன்'' என்பது சிறந்த ஊமத்தம் பூவையும், பாம்பையும் தலையில் சூடிக்கொண்டிருப்பவன் என்று சிவபெருமானைக் குறித்தது என்க. இராமபிரான் தான் திருமாலின் அவதாரம் என்பதை மறந்து சாதாரண மனிதனைப்போல் உணர்வின்றி நடமாடுகிறான் என்கிறான் அனுமன் என்பதாம். இயந்திரப் படிவம் ஒத்தான் என மீண்டும் ஓரிடத்தில் கூறுவதும் இங்கு நினையத்தகும்.

195. பொழில்இறுத்த படலம் பக்கம்-860/46 கவிக்கூற்று

தாழ்இரும் பொழில்கள் எல்லாம் துடைத்து, ஒரு தமியன் நின்றான்;
ஏழினோடு ஏழுநாடும் அளந்தவன் எனலும் ஆனான்;
ஆழியின் நடுவண் நின்ற அருவரைக்கு அரசும் ஒத்தான்;
ஊழியின் இறுதிக்காலத்து உருத்திரமூர்த்தி ஒத்தான். (5474)

அனுமன் அசோகவனத்தை அழித்தபின்பு நின்ற நிலையைக் கவிஞன் படம்பிடித்துக் காட்டும் பாடல் இது.

நன்கு செழித்துத் தழைத்திருந்த பெருஞ்சோலைகள் எல்லாவற்றையும் முற்றமுழுக்க அழித்துவிட்டுத் தன்னந்தனியனாய் நின்றிருந்தான் அனுமன். அப்போது அவன் இவ் ஈரேழு பதினான்கு உலகங்களையும் தன் ஈரடியால் ஓங்கி உலகளந்த உத்தமனான திருமால் என்று கூறும்படி தனியனாக நின்றான். பாற்கடலின் நடுவில் தேவர்களும் அசுரர்களும் அதனைக் கடைந்தபொழுது மத்தாக நின்ற மலைகளுக்கெல்லாம் அரசு என்று போற்றப்படுகின்ற மந்தரமலையை ஒத்துத் தனித்து நின்றான். ஊழியிறுதிக்காலத்தில் உலக உயிரினங்கள் எல்லாவற்றையும் அழித்துச் சீற்றம்கொண்டு நிற்கும் உருத்திரமூர்த்தியாகிய சிவபெருமானைப்போலத் தன்னந்தனியனாய் அனுமன் நின்றிருந்தான் என்கிறான் கவிஞன்.

ஒரேபாடலில் திருமால், மந்தரமலை, சிவபெருமான் முதலியோர்க்கு அனுமனை உவமித்த நயம் கருதுக. இங்கே ''உருத்திரமூர்த்தி'' என்பது சம்ஹாரமூர்த்தியாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

196. கிங்கரர் வதைப் படலம் பக்கம்-862/1 கவிக்கூற்று.

அருவரை முழையில் முட்டும் அசனியின் இடிப்பும், ஆழி
வெருவரு முழக்கும், ஈசன்வில் இறும் ஒலியும், என்ன
குருமணி மகுடகோடி முடித்தலை குலுங்கும் வண்ணம்,
இருபது செவியினூடும் நுழைந்தது, அவ் எழுந்த ஓசை. (5489)

அனுமன் அந்த அசோகவனத்தை அழித்தொழித்தபோது எழுந்த பேரோசை பற்றிக் கூறுகிறது இப்பாடல்.

மிகப்பெரிய குகையில் எதிரொலிக்கும் இடியின் முழக்கம், ஊழியிறுதிக்காலத்தில் உலகமே அஞ்சும்வண்ணம் ஏற்படுகின்ற கடல்களின் பேரொலி முழக்கம், சிவபெருமானின் திரியம்பகம் என்னும் வில்லை மிதிலையில் இராமபிரான் ஒடித்தபோது எழுந்த பேரொலியின் முழக்கம் என்று கூறும்படி, ''அண்டமும் பிளந்துவிட்டதாம் என எழுந்த அந்தப் பேரோசை ஒளிமிக்க இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற கிரீடங்களை வரிசையாக அணிந்துள்ள இராவணனின் பத்துத் தலைகளும் அசைந்து குலுங்கும்படி, அவனுடைய இருபது செவிகளினுள்ளும் புகுந்தது,

197. கிங்கரர் வதைப் படலம் பக்கம்-865/20 கவிக்கூற்று.

வயிர்ஒலி, வளைஒலி, வன்கார் மழைஒலி, முரசுஒலி, மண்பால்
உயிர் உலைவுற நிமிரும் போர் உறும்ஒலி, செவியின் உணர்ந்தான்;
வெயில்விரி கதிரவனும் போய் வெருவிட, வெளியிடை, விண்தோய்
கயிலையின் மலை என நின்றான்; அனையவர் வரு தொழில் கண்டான். (5508)

தன் விரிந்த கிரணங்களைப் பரப்பிக்கொண்டு உதயமாகும் சூரியனும்கூட அஞ்சி ஒதுங்கிக்கொள்ளுமாறு, வானப் பரப்பினிடையில், வானளாவிய கயிலைமலையைப் போன்று உறுதியாக நின்றிருந்த அனுமன், அரக்கர்படை எழுப்பிக்கொண்டு வருகின்ற ஊதுகொம்பின் ஓசை, சங்குகளின் ஓசை, வலிய கரிய மேகத்தின் இடியோசை, போர்ப் பேரிகைகளின் ஒலி, இந்நிலத்தில் உள்ள உயிரினங்கள் எல்லாம் நடுங்கும்படி உயர்ந்து ஒலிக்கும் பேரோசை, முதலியவற்றைத் தன் காதுகளால் கேட்டு உணர்ந்தான். அரக்கவீரர்கள் தன்னை எதிர்த்துப் போர்த்தொழில் புரியவருவதையும் தன் கண்ணால் கண்டான்.

இங்கே **''விண்தோய் கயிலையின் மலை''** என்பது வானளாவ உயர்ந்து நிற்கும் சிவபெருமான் வீற்றிருக்கும் மலை என்று கயிலைமலையைக் குறித்தது என்க.

198. சம்புமாலி வதைப்படலம் பக்கம்-876/38 கவிக் கூற்று

கறுத்து எழு நிறத்தினர், எயிற்றினர், கயிற்றார்,
செறுத்து எரி விழிப்பவர், சிகைக்கழு வலத்தார்,
மறுத்து எழு மறலிகள் இவர் என அதிர்ந்தார்,
ஒறுத்து உருத்திரன் என, தனித்தனி உதைத்தான். (5587)

கிங்கரர்கள் வதைபட்டு இறந்துபட்ட செய்தியைக்கேட்ட இராவணன், தன் படைத்தலைவர்களுள் ஒருவனான சம்புமாலியை அழைத்துப் போர்க்களம் செல்ல ஆணையிட, அவனைப் போர்க்களத்தில் அனுமன் படுத்திய பாட்டைக் கவிஞன் விவரிக்கும் பாடல் இது.

கரிய கறுப்புநிறம் கொண்டு விளங்குபவர்களும், கோரப்பற்களை யுடையவர்களும் பாசக்கயிற்றையே ஒரு படைக்கலமாகக் கொண்டிருப்பவர் களும், மிக்க சீற்றம்கொண்டு நெருப்புப்பொறி பறப்பதுபோல் விழிப்பவர்களும், கூரிய நுனியையுடைய ''கழு'' என்னும் படைக்கலத்தை உடைய வலிமையானவர்களும், மாறுபட்டுத் தோன்றுகின்ற இயமன்களைப் போன்று பெருமுழக்கம் செய்து கொண்டிருப்பவர்களுமாகிய சம்புமாலியின் உடன்வந்த படைகளையெல்லாம் தண்டித்து, ஊழியிறுதிக்காலத்தில் ருத்ரதாண்டவமாடும் சிவபெருமான்போல, ஒவ்வொரு படைவீரரையும் தனித்தனியாக உதைத்து அழித்தான் அனுமன்.

இங்கே ''உருத்திரன்'' என்பது, ஊழியிறுதிக்காலத்தில் தோன்றுபவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

199. பஞ்சசேனாபதிகள் வதைப் படலம் பக்கம்-880/17 கவிக்கூற்று

வாசவன் வயக்குலிசமும், வருணன் வன் கயிறும்,
ஏசுஇல் தென்திசைக் கிழவன்தன் எரிமுனை எழுவும்,
ஈசன் வன் தனிச்சூலமும், என்று இவை ஒன்றும்
ஊசி போழ்வது ஓர் வடுச்செயா, நெடும்புயம் உடையார்.
(5617)

பஞ்சசேனாபதிகளின் உடல் வலிமையைக் கூறும் பாடல் இது.

தேவர்தலைவனாகிய தேவேந்திரனது வெற்றி பொருந்திய வச்சிரப்படை, வருணனின் வலிய பாசக்கயிறு, குற்றமற்ற தெற்குத் திசைக் காவலனான இயமனின் ஒப்பற்ற நெருப்பை நுனியில் கொண்ட தண்டாயுதம், சிவபெருமானின் வலிய ஒப்பற்ற முத்தலைச் சூலம், என்று கூறப்படுகின்ற இத்தகைய கொடிய ஆயுதங்கள், ஊசி குத்துவதுபோன்ற ஒரு சிறு தழும்பைக்கூடச் செய்யமுடியாத நீண்ட வலிய தோள்களை உடையவர்கள் இந்தப் பஞ்ச சேனாபதிகள் என்கிறான் கவிஞன்.

இத்தகைய ஆயுதங்கள் அவர்கள் உடலில் பாய்ந்தாலும், அது ஒரு ஊசி குத்துவதுபோன்ற ஒரு சிறு தழும்பைக்கூட அவர்கள் உடம்பில் செய்யமுடியாது என்று அவர்கள் உடலின் வலிமை பேசப்படுகிறது.

இங்கே ''ஈசன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

200. பஞ்ச சேனாபதிகள் வதைப்படலம் பக்கம்-884 / 46 கவிக்கூற்று

முழுமுதல், கண்ணுதல், முருகன் தாதை, கைம்
மழு எனப்பொலிந்து, ஒளி வயிரவான் தனி
எழுவினின், பொலங்கழல் அரக்கர் ஈண்டிய
குழுவினை, களம்படக் கொன்று நீக்கினான். (5646)

உலக உயிரினங்களுக்கெல்லாம் முழுமுதற் கடவுளானவனும், நெற்றிக்கண் படைத்தவனும், முருகப்பெருமானின் தந்தையுமான சிவபெருமான் தன் கையில் கொண்டுள்ள மழுவாயுதம் என்று சொல்லப்படுகின்ற ஆயுதத்தைப்போலப் பொலிவுற்றுத் திகழும் ஒளிநிறைந்த, உறுதியான, சிறந்த, ஒப்பற்ற எழு என்று கூறப்படும் இருப்பு உலக்கையால், அழகிய பொன்னாலான வீரக்கழல் அணிந்த அரக்கர்களின் கூட்டத்தை எல்லாம், போர்க்களத்திலே மடிந்து சாயும்படி கொன்று குவித்தான் அனுமன்.

பஞ்சசேனாபதிகள் கூட்டம் கொண்டு வந்திருந்த எழு என்னும் இருப்பு உலக்கைக்குச் சிவபெருமானின் மழுவாயுதம் உவமை. இங்கே முழுமுதல் கண்ணுதல் என்பதும் முருகன் தாதை என்பதும் நெற்றிக்கண்ணையுடைய மூலப் பரம்பொருளானவன் என்றும், முருகப்பெருமானின் தந்தை என்றும் சிவபெருமானையும் ''கைம்மழு'' என்பது சிவபெருமான் கைக்கொண்டிருக்கும் மழுவாயுதத்தையும் குறிக்கும் எனக்கொள்க.

201. அக்ககுமாரன் வதைப்படலம் பக்கம்-887 / 2

அக்ககுமாரன் கூற்று

''முக்கணான் ஊர்தி அன்றேல், மூன்று உலகு அடியின் தாயோன்
ஒக்க ஊர் பறவை அன்றேல், அவன்துயில் உரகம் அன்றேல்,
திக்கயம் அல்லதேல், புன்குரங்கின்மேல் சேறி போலாம்!
இக்கடன் அடியேற்கு ஈதி; இருத்தி ஈண்டு இனிதின் எந்தாய்''
(5669)

கிங்கரர்கள், சம்புமாலி, பஞ்சசேனாபதிகள் முதலியோர் இறந்துபட்டதும், தானே போருக்கு எழுந்த இராவணனைத் தடுத்து அவனது மற்றொரு புதல்வன் அக்ககுமாரன் தன்னைப் போருக்கு அனுப்ப வேண்டும் என்று வேண்டும் பாடல் இது.

''மூன்று கண்களையுடைய சிவபெருமான் ஊர்ந்து செல்லுகின்ற வாகனமாகிய ரிஷபம்; அது இல்லாவிட்டால் இம்மூன்று உலகங்களையும் தன் ஈரடியால் தாவி அளந்தவனாகிய திருமால் ஊர்ந்து செல்லுகின்ற கருடவாகனம்; அதுவும் அன்றேல் அந்தத் திருமால் அறிதுயில் கொள்ளுகின்ற ஆதிசேஷன் என்னும் பாம்பு; அதுவும் இல்லையென்றால் எட்டுத் திக்குகளையும் காத்து நிற்கின்ற திசையானைகள்; இவற்றின்மீது போர் தொடுப்பதை விட்டுவிட்டு, அற்பமான ஒரு குரங்கின்மேல் சென்று போர்தொடுக்கிறேன் என்கிறாயே? இந்தப் பொறுப்பை என்னிடம் தாருங்கள் தந்தையே! தந்து, தாங்கள் இங்கேயே இன்பமாய் அமர்ந்திருங்கள்'' என்கிறான் அக்ககுமாரன்.

202. அக்ககுமாரன் வதைப் படலம் பக்கம்-887/4

அக்ககுமாரன் கூற்று.

''கொய்தளிர் கோதும் வாழ்க்கைக் கோடரத்து உருவுகொண்டு,
கைதவம் கண்ணி, ஈண்டு ஓர் சிறுபழி இழைக்கும் கற்பான்,
எய்தினன், **இமையா முக்கண்** ஈசனே என்றபோதும்,
நொய்தினின் வென்று, பற்றித் தருகுவென் நொடியில் நுன்பால்''
(5671)

''இலைகளைக் கொய்து உணவாக உண்ணும் அற்பமான வாழ்க்கையையுடைய இந்தக் குரங்கின் உருவத்தை எடுத்துக்கொண்டு நமக்கு ஓர் இழிவைத் தரவேண்டும் என்ற வஞ்சனை எண்ணம் கொண்டு, அந்த இமையாநாட்டமுடைய, நெற்றிக்கண்ணைக் கொண்ட சிவபெருமானே இங்கு வந்து சேர்ந்து நம்மை எதிர்த்துப் போரிட்டாலும், நான் அவனை எளிதாக வெற்றிபெற்று அவனைப் பற்றிக்கொண்டு வந்து உன்னிடம் ஒரு நொடிப்பொழுதில் தருவேன் தந்தையே!'' என்கிறான் அக்ககுமாரன்.

இங்கே ''இமையா முக்கண் ஈசன்'' என்பது இமையா நாட்டமுடைய நெற்றிக் கண்ணையுடையவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்தது என்க.

203. பாசப்படலம். பக்கஎண்-895/2 கவிக்கூற்று

அரம்சுடர் வேல் தனது அனுசன் இற்றசொல்
உரம்சுட, எரி உயிர்த்து, ஒருவன் ஓங்கினான்;
புரம்சுட வரிசிலைப் பொருப்பு வாங்கிய
பரஞ்சுடர் ஒருவனைப் பொருவும் பான்மையான். (5718)

அராவப்பட்ட ஒளிமிக்க வேற்படையைக் கொண்டு போர்புரிந்த தனது தம்பி அக்ககுமாரன் இறந்துபட்டான் என்ற சொல் தன் செவியில் பட்டதும், தனது உள்ளம் கொதிக்க, நெருப்புப்பொறி பறக்கும்படி பெருமூச்சு விட்டு,

ஒப்பற்றவனான தமையன் இந்திரசித்து எழுந்தான். முன்பு முப்புரங்களைச் சுட்டெரிப்பதற்காகக் கட்டமைந்த வில்லாக, மேருமலையையே வளைத்தவனான, மேலான ஒளிபடைத்த ஒப்பற்ற சிவபெருமானையும் ஒத்திருக்கும் தன்மையனானான் இந்திரசித்து.

இங்கே ''புரம்சுட வரிசிலைப் பொருப்பு வாங்கிய பரஞ்சுடர் ஒருவன்'' என்பது முப்புரத்தைச் சுட்டெரிப்பதற்காக மேருமலையை வளைத்துத் தனது கட்டமைந்த வில்லாகக் கொண்ட, ஒளிமிக்க ஒப்பற்றவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

204. பாசப்படலம். பக்கஎண்-896/10 இந்திரசித்து கூற்று.

''கிங்கரர், சம்புமாலி, கேடுஇலா ஐவர் என்று, இப்
பைங்கழல் அரக்கரோடும், உடன்சென்ற பகுதிச்சேனை
இங்கு ஒரு பேரும் மீண்டார் இல்லையேல், குரங்கு அது எந்தாய்!
சங்கரன், அயன், மால், என்பார்தாம் எனும் தகையது ஆமே''
(5726)

இந்திரசித்தன் தன் தந்தை இராவணனை நோக்கி, ''தந்தையே! கிங்கரர்கள், சம்புமாலி, அழிவேயில்லாத படைத்தலைவர்களான பஞ்ச சேனாபதிகள் என்று கூறப்படுகின்ற இந்தப் பசுமையான வீரக்கழல் அணிந்த அரக்கர்களோடு போருக்குச் சென்ற நம் சேனைப்பகுதிகளில் ஒருவர்கூட இங்கு திரும்பி வரவில்லை; எல்லோரும் போரில் அனுமனால் கொல்லப்பட்டனர் என்றால் அது ஒரு அற்பமான குரங்கு என்று கருதலாமோ? அது சம்ஹாரமூர்த்தியாகிய சிவபெருமான், அல்லது பிரமதேவன், அல்லது திருமால் என்று கூறப்படுபவர்களுடன் ஒன்றாகச் சேர்த்து வைத்து எண்ணப்படும் தகுதிவாய்ந்தது அன்றோ?'' என்று கேட்கிறான் இந்திரசித்து.

இங்கே **''சங்கரன்''** என்பது சம்ஹாரமூர்த்தி என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

205. பாசப்படலம். பக்கஎண்-896/11 இந்திரசித்து கூற்று.

''திக்கய வலியும், மேல் நாள் திரிபுரம் தீயச் செற்ற
முக்கணன் கயிலையோடும் உலகொடு மூன்றும் வென்றாய்;
''அக்கனைக் கொன்று நின்ற குரங்கினை ஆற்றல் காண்டி;
''புக்கு இனி வென்றும்'' என்றால் புலம்பு அன்றி, புலமைத்தாமோ!''
(5727)

''தந்தையே! எட்டுத்திக்கு யானைகளின் ஆற்றலையும், முன் நாள் முப்புரத்தைச் சுட்டெரித்து அவை தீய்ந்து எரிந்துபோகும்படி செய்த மூன்று

கண்களையுடைய சிவபெருமானை, அவன் வீற்றிருந்த கயிலைமலையோடும் பெயர்த்தெடுத்து, மேல், நடு, கீழ் என்னும் மூன்று உலகங்களையும் வெற்றிபெற்று நின்றாய். இப்பொழுது நம் அக்ககுமாரனைக் கொன்ற பின்பும், அந்தக் குரங்கு உயிர்சுமந்து நின்று கொண்டிருக்கிறது என்றால் அதன் ஆற்றலை என் என்பது? இப்பொழுது நாம் போர்க்களத்தில் சென்று அதனை வென்று விடுவோம் என்று கூறுவது வருத்தம்தரும் செயலே அன்றி, அறிவுடைய செயலாகுமா?'' என்று கேட்கிறான் இந்திரசித்து.

இங்கே ''திரிபுரம் தீயச் செற்ற முக்கணன் கயிலை'' என்பது முப்புரங்களைச் சுட்டெரித்து வென்ற மூன்று கண்களையுடையவன் என்று சிவபெருமானையும், அவன் வீற்றிருந்த கயிலைமலையையும் குறிக்கும் என்க.

206. பாசப்படலம் பக்களண்-901/49 கவிக்கூற்று

ஈண்டு இவை நிகழ்வுழி, இரவி தேர் எனத்
தூண்டுறு தேரின்மேல், தோன்றும் தோன்றலை,
மூண்டு, முப்புரம்சுட முடுகும் ஈசனின்,
ஆண்தகை வனைகழல் அனுமன், நோக்கினான். (5765)

இவ்வாறு இங்கே நிகழ்ந்துகொண்டிருக்கும்போது, சூரியனின் ஒற்றைச் சக்கரத்தேரைப் போல விரைவுடன் வருகின்ற தேரின்மேல் வரும் இந்திரசித்தனை, முப்புரங்களையும் சுட்டெரிப்பதற்காகப் பொங்கியெழுந்து விரைந்து வரும் சிவபெருமானைப் போன்றவனும், ஆண்மைக்குணம் நிரம்பியவனும், வீரக்கழல் அணிந்தவனுமான அனுமன் நன்கு உற்றுப் பார்த்தான்.

இங்கே ''முப்புரம் சுட முடுகும் ஈசன்'' என்பது முப்புரங்களையும் சுட்டெரிப்பதற்காக விரைந்துவருபவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

207. பிணிவீட்டு படலம் பக்களண்-908/15
இலங்கை மக்கள் கூற்று

''கயிலையின் ஒரு தனிக் கணிச்சி வானவன்,
மயில் இயல் சீதை தன் கற்பின் மாட்சியால்,
எயிலுடைத் திருநகர் சிதைப்ப எய்தினன்,
அயில் எயிற்று ஒரு குரங்கு ஆய்'' என்பார் பலர். (5819)

இலங்கை அனுமனால் அழிக்கப்பட்டது கண்ட இலங்கை மக்கள் கூறும் கூற்றாகக் கவிஞன்கூறும் பாடல் இது.

''கயிலைமலையில் வீற்றிருக்கும் ஒப்பற்றவனும், மழுப்படையை ஏந்தியவனும் ஆகிய தேவதேவன் சிவபெருமான்தான், மயில்போலும் சாயலை உடைய சீதையை அவள் கற்பின் மாண்பினால் இந்தக் காவல்கோட்டை அமைந்துள்ள பொன்னாலாகிய அழகிய இலங்கை நகரை அழித்து ஒழிப்பதற்காக, கூரிய பற்களைக் கொண்ட ஒரு குரங்கு வடிவம் கொண்டு இங்கு வந்து சேர்ந்திருக்கிறான்'' என்று பலர் கூறலானார்கள்.

இங்கே ''கயிலையின் ஒரு தனிக் கணிச்சி வானவன்'' என்பது கயிலை மலையில் வீற்றிருக்கும் ஒப்பற்ற மழுப்படையைக் கொண்டிருக்கும் தேவாதிதேவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

208. பிணிவீட்டு படலம் பக்கம்எண்-912/39 கவிக்கூற்று.

''புள் உயர்த்தவன் திகிரியும், புரந்தரன் அயிலும்,
தள்இல் முக்கணான் கணிச்சியும், தாக்கிய தழும்பும்,
கள் உயிர்க்கும் மென் குழலியர் முகிழ்விரல் கதிர்வாள்
வள் உகிர்ப் பெருங் குறிகளும், புயங்களில் வயங்க. (5843)

இந்திரசித்தன் அனுமனைப் பிரமாஸ்திரத்தால் கட்டுப்படுத்தி இராவணன் அரண்மனைக்கு அழைத்துவந்தபோது இராவணன் அரசவையில் பொலிவோடு வீற்றிருந்த நிலையைக் கவிஞன் கூறுவதாக அமைந்தது இந்தப் பாடல்.

''கருடப் பறவையை வாகனமாக உடையவனாகிய திருமாலின் சக்கரப்படை, இந்திரனின் வச்சிரப்படை, தவறுதல் இல்லாத மூன்று கண்களையுடைய சிவபெருமானின் மழுவாயுதப்படை, ஆகியவை தாக்கியதால் உண்டான விழுப்புண்களும், தேன் சொட்டுகின்ற மெல்லிய கூந்தலையுடையவரும், அரும்புபோன்ற மெல்லிய விரல்களைக் கொண்டவரும், ஒளிபொருந்திய கூரிய நகங்களை உடையவருமான உரிமைமகளிரால் ஊடற்காலத்தே தோற்றுவிக்கப்பட்ட நகக்குறிகளும், தனது தோள்களிலும் மார்பிலும் விளங்கித் தோன்றுமாறு வீற்றிருந்தான் இராவணன்'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''முக்கணன் கணிச்சி'' என்பது நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் கைக்கொண்டுள்ள மழுவாயுதம் என்று பொருள்படும்.

209. பிணிவீட்டு படலம் பக்கஎண்-915/67 இந்திரசித்தன் கூற்று

புவனம் எத்தனை அவை அனைத்தும் போர் கடந்த
அவனை உற்று, ''அரி உருவான ஆண்தகை
சிவன் என, செங்கணான் என, செய் சேவகன்
இவன்'' எனக் கூறி நின்று இருகை கூப்பினான். (5871)

இந்திரசித்தன் தன் தந்தை இராவணனுக்கு அனுமனைப் பற்றிக் கூறும் பாடல் இது.

இங்கே எத்தனை உலகங்கள் உள்ளனவோ அவை அனைத்தின்மீதும் போர்தொடுத்து வெற்றிகொண்டவனான இராவணனை அணுகி, இந்திரசித்து அனுமனைக் காட்டி ''இந்தக் குரங்கு உருவம் கொண்டு வந்திருக்கின்ற இவன் ஆண்மையிற் சிறந்தவன். இவன் சிவபெருமானையும், சிவந்த கண்களையுடைய திருமாலையும், போரிட்டு வெல்லும் ஆற்றல்படைத்தவன் ஆவான்'' என்றுகூறித் தனது இரு கைகளையும் கூப்பித்தொழுது வணங்கினான் இந்திரசித்து.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

210. பிணிவீட்டு படலம் பக்கஎண்-916/70 இராவணன் கூற்று

''நேமியோ? குலிசியோ? நெடுங்கணிச்சியோ?
தாமரைக் கிழவனோ? தறுகண் பல்தலைப்
பூமி தாங்கு ஒருவனோ? பொருது முற்றுவான்
நாமமும் உருவமும் கரந்து நண்ணினாய்?'' (5874)

இந்திரசித்தால் பற்றிக்கொண்டு வரப்பட்ட அனுமனைநோக்கி இராவணன் கேட்பதாக வரும் பாடல் இது.

இராவணன் அனுமனை நோக்கி, ''நீ யார்? சக்கரப்படையை ஏந்திய திருமாலோ? வச்சிராயுதத்தைக் கொண்ட தேவேந்திரனோ? நீண்ட சூலாயுதத்தைக்கொண்ட சிவபெருமானோ? தாமரைமலரை இருப்பிடமாகக் கொண்ட பிரமதேவனோ? கொடிய கண்களையும், பலதலைகளையும் கொண்டு இவ்வுலகைத் தாங்கி நிற்கின்ற ஒப்பற்றவனான ஆதிசேஷனோ? எங்களுடன் போரிட்டு அழிந்து போகும்பொருட்டு, உன்னுடைய பெயரையும், வடிவத்தையும் மாற்றி மறைத்துக்கொண்டு வந்து சேர்ந்திருக்கிறாயோ! நீ யார்?'' என்று இராவணன் அனுமனை நோக்கிக் கேட்கிறான்.

இங்கே ''நெடுங்கணிச்சியோ?'' என்பது மழுவாயுதத்தைக் கைக்கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

211. பிணிவீட்டு படலம் பக்கஎண்-916/77 அனுமன்கூற்று.

''தேவரும் பிறரும் அல்லன்; திசைக்களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன் கயிலைஅம் கிரியும் அல்லன்;
மூவரும் அல்லன்; மற்றை முனிவரும் அல்லன்; எல்லைப்
பூவலயத்தை ஆண்ட புரவலன் புதல்வன் போலாம். (5881)

நீ யார்? எனக் கேட்ட இராவணனுக்கு அவன் கேட்ட முறைப்படியே பதில்கூறுகிறான் அனுமன். ''என்னை இங்கே அனுப்பியவர் யார் என்றால், தேவர்கள் அல்லர்; அவர்களைத் தவிர மற்றவர்கள் அல்லர்; எட்டுத்திசைகளையும் காக்கும் திக்கு யானைகள் அல்ல; திசைகளைக் காவல்புரியும் திக்கு பாலகர்களும் அல்லர்; கயிலைமலையில் வீற்றிருக்கும் சிவபெருமானும் அல்லன்; அயன், அரன், அரி எனப்படும் மும்மூர்த்திகளும் அல்லர்; வேறு முனிவர்களும் அல்லர்; இந்தப் பூவுலகத்தையே எல்லையாகக் கொண்டு அரசோச்சிவரும் மன்னவனான தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வனான இராமபிரானே ஆவான்'' என்கிறான் அனுமன்.

இங்கே ''**கயிலையங்கிரியின் ஈசன்**'' என்பது கயிலாயமலையில் வீற்றிருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க

212. பிணிவீட்டு படலம் பக்கஎண்-917/80 அனுமன்கூற்று.

''மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய,
காலமும், கணக்கும், நீத்த காரணன், கைவில் ஏந்தி,
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு, அயோத்தி வந்தான்''
(5884)

அனுமன் மேலும் இராவணனை நோக்கி, ''முதல், இடை, கடை என்று கூறப்படுகின்றதும், இறந்த, நிகழ்,எதிர் நிலைகள் என்று கூறப்படுவதுமாகிய காலங்களையும் கணக்குகளையும் நீக்கி விட்டு வந்த மூலமுதற் பரம்பொருள், தன் கைகளில் வில்லை ஏந்திக்கொண்டு, சிவபெருமானுக்குரிய சூலாயுதத்தையும், திருமாலுக்குரிய சக்கரப்படையையும் சங்கையும், பிரமதேவனுக்குரிய கமண்டலத்தையும் துறந்துவிட்டு, மிகப்பழமையான தங்களது இருக்கைகளாகிய திருமால் தனக்குரிய ஆல்இலையையும், பிரமதேவன் செந்தாமரை மலரையும், சிவபெருமான் வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையையும் விட்டுவிட்டு இங்கே அயோத்தியில் வந்து இராமபிரானாகப் பிறந்திருக்கிறான்'' என்று கூறுகிறான் அனுமன்.

இங்கே இராமபிரானை மும்மூர்த்திகளும் ஒருங்கே சேர்ந்து வந்து பிறந்தவன் என்கிறான் கவிஞன். இங்கே ''**சூலம்**'' என்பது சிவபெருமானின் சூலாயுதத்தையும், ''**வெள்ளிப் பொருப்பு**'' என்பது சிவபெருமான் உறையும் வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையையும் குறித்தது என்க.

213. பிணிவீட்டுபடலம் பக்கஎண்-920/103 அனுமன்கூற்று.

''புரம் பிழைப்பு அருந் தீப்புகப் பொங்கியோன்,
நரம்பு இழைத்தன பாடலின் நல்கிய,
வரம் பிழைக்கும்; மறை பிழையாதவன்
சரம் பிழைக்கும் என்று எண்ணுதல் சாலுமோ?'' (5907)

''முப்புரங்கள் தப்பித்துப்போகா வண்ணம் மிகுந்த நெருப்பை உண்டாக்கிச் சினந்தெழுந்த சிவபெருமான், நீ உன் நரம்புகளை ஒன்றுகூட்டிப் பாடிய சாமகானப் பாடலில் மகிழ்ந்து, உனக்குத் தந்தருளிய வரங்கள் தவறினாலும் தவறலாம். ஆனால் வேதநெறியினின்றும் இம்மியும் பிறழாதவனான இராமபிரானின் அம்புகள் தப்பும் என்று நீ எண்ணுவது பொருந்துமோ?'' என்று கேட்கிறான் அனுமன்.

இராவணன், சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையைப் பெயர்த்தெடுக்க முயன்றபோது சிவபெருமான் தன் கால் கட்டை விரலால் அவனது கைகளை அழுத்தினான். வலி தாங்காது பலமுறை அழுது மன்றாடினான் இராவணன். அப்பொழுது வாகீச முனிவர் என்பவர் இதனைக் கண்டு, ''சிவபெருமான் சாமகானப் பிரியன். அவனைச் சாமகீதத்தில் துதி'' என்று கூறினார். அதற்கிணங்க இராவணன் தனது ஒருதலையைக் கிள்ளி வீணையாகவும், தனது நரம்புகளில் சிலவற்றை உருவி வீணைத் தந்திகளாகவும் கொண்டு சாமகானம் பாடத் தொடங்கினான். அதுகண்டு மகிழ்ந்து, சிவபெருமான் இராவணனுக்கு முக்கோடி வாழ்நாளும், யாராலும் வெலப்படாய் என்ற வரமும், சந்திரகாசம் என்னும் வாளும் நல்கி அருளினான் என்பது ஒரு புராணக்குறிப்பு. அது இங்கே ''நரம்பு இழைத்தன பாடலின் நல்கிய வரம்'' எனப் பேசப்படுகிறது என்க.

இங்கே ''புரம்பிழைப்பு அரும் தீப்புகப் பொங்கியோன்'' என்பது முப்புரங்களைச் சுட்டெரிக்கச் சினந்தெழுந்தவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

214. பிணிவீட்டு படலம் பக்களண்-922/115 வீடணன்கூற்று.

''முத்தலை எஃகன், மற்றை முராந்தகன், முனிவன், முன்னா,
அத்தலை நம்மை நோனா அமரர்க்கும் நகையிற்றாமால்;
எத்தலை உலகும் காக்கும் வேந்த! நீ, வேற்றோர் ஏவ,
இத்தலை எய்தினானைக் கொல்லுதல் இழுக்கம்; இன்னும்''
(5919)

''அனுமனைக் கொல்க'' என்று ஆணையிட்ட இராவணனைத் தடுத்து, வீடணன் கூறுவதாக வரும் பாடல் இது.

''இந்நிலத்தில் உள்ள எல்லா உலகங்களையும் பாதுகாக்கும் உரிமைபெற்ற வேந்தனே! இராவணா! நீ, நமது பகைவர்கள் ஏவ, அதனால் நமது இடமாகிய இலங்கைக்குத் தூதனாக வந்து உள்ளவனை, கொல்லுதல் என்பது குற்றம் ஆகும். அது உனக்குப் பழியையும் தரும். மேலும் மூன்று கவடுகளையுடைய சூலாயுதப் படையைக் கைக்கொண்டுள்ள சிவபெருமானும் முரன் என்னும் அசுரனைக் கொன்றவனான திருமாலும், பிரமதேவனும் முதலான மற்ற எல்லாத் தேவர்களும் நம்மை ஒரு பொருட்டாகக் கருதாமல்

எள்ளிநகையாடுவதற்கும் இடம் தரும்'' என்று வீடணன், இராவணனுக்கு எடுத்துரைக்கிறான்.

இங்கே ''முத்தலை எஃகன்'' என்பது முத்தலைச் சூலாயுதத்தைத் தன் கையில் கொண்டுள்ளவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''முரன்'' என்ற அசுரனைக் கொன்றழித்ததால் ''முராந்தகன்'' என்பது திருமாலுக்கு மற்றொருபெயர் என்பதறிக.

215. பிணிவீட்டு படலம் பக்களண்-924 / 129 கவிக்கூற்று.

''மற்று இனிப்பல என்? வேலைவட அனல், புவி அளாய,
கற்றை வெங்கனலி, மற்றைக் காயத்தீ, முனிவர் காக்கும்
முற்றுறு மும்மைச் செந்தீ, முப்புரம் முருங்கச் சுட்ட
கொற்றவன் நெற்றிக் கண்ணின் வன்னியும் குளிர்ந்த அன்றே!''
(5933)

இராவணன் அனுமனின் ''வாலை மூலமறச்சுட்டு நகரைச் சூழ்போக்கி எல்லைகடக்க விடுமின்கள்'' என்று சொன்னதும், இதனையறிந்த சீதாதேவி ''தூயேன் என்னின் தொழுகின்றேன் எரியே அவனைச் சுடல்'' என்றதும் அவ்வனல் குளிர்ந்தமை கண்டு அனுமன் மகிழும்போது வருகின்ற பாடல் இது.

''வேறு சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? கடலில் மறைந்திருக்கும் வட அனல்-வடவாமுகாக்கினி, நிலத்தில் பரவியிருக்கின்ற கொடிய நெருப்புக்கூட்டம், மற்றும் ஆகாயத்தில் இயற்கையாகத் தோன்றுகின்ற மின்னல் என்னும் நெருப்பு, முற்றும் துறந்த முனிவர்கள் ஏற்றிப்போற்றிச் செய்யும் மூன்றுவகையான வேள்வித்தீ, முப்புரங்களையும் சுட்டெரித்து அழித்த, வெற்றியையுடையவனும் நெற்றிக் கண்ணையுடையவனுமான சிவபெருமான் தோற்றுவித்த நெருப்பு, ஆகிய எல்லாமும் குளிர்ச்சி பெற்றன ஆயின'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''முப்புரம் முருங்கச் சுட்ட கொற்றவன் நெற்றிக்கண்ணின் வன்னி'' என்பது முப்புரங்களையும் முற்றும் அழிந்துபோகும் வண்ணம் சுட்டெரித்த நெற்றிக்கண்ணையுடைய வெற்றிவீரன் என்று சிவபெருமானையும், அவன் இட்ட நெருப்பு ''நெற்றிக்கண்ணின் வன்னி'' என்றும் சிறப்பித்துச் சொல்லப்பட்டது என்க.

216. பிணிவீட்டு படலம் பக்களண்-925 / 135 கவிக்கூற்று.

''துன்னலர் புரத்தை முற்றும் சுடுதொழில் தொல்லையோனும்,
பன்னின பொருளும் நாண, ''பாதகர் இருக்கை பற்ற,
மன்னனை வாழ்த்தி, பின்னை வயங்கு எரி மடுப்பென்'' என்னா,
பொன் நகர் மீதே, தன் போர் வாலினைப் போக விட்டான்.
(5939)

தன் வாலில் கொளுவப்பட்ட நெருப்பை, அனுமன் இலங்கைமீதே செலவிடுதல் பற்றிக் கூறும் பாடல் இது.

''என் மன்னனாகிய இராமபிரானை மனத்துள் எண்ணி வாழ்த்தியபிறகு, பகைவர்களது முப்புரங்களையும் முழுவதும் சுட்டெரித்த செயலை மேற்கொண்டவனாகிய முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழமையானவனான சிவபெருமானும் அவனுக்குத் துணையாக வந்தன என்று கூறப்படுகின்ற போர்க்கருவிகளும் வெட்கமடையும்படி, இந்தப் பாவிகளான அரக்கர்கள் இருக்கின்ற இவ்விலங்கை மாநகர் நெருப்புப்பற்றி எரியும்படி, பொலிவுற்றுத் திகழும் நெருப்பைக் கொளுவுவேன்'' என்று அனுமன் தன் மனத்துள் கருதிக்கொண்டு, தன்னுடைய போராற்றலில் பொலிந்து விளங்குகின்ற வாலை இலங்கை மாநகருக்குள் செல்லும்படி செலவிட்டான்.

சிவன் துணையாகக் கொண்ட போர்க்கருவிகள் மேருமலையை வில்லாகவும், திருமாலை அம்பாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு முப்புரத்தைச் சுட்டெரித்தான் என்பது ஒரு புராணக்குறிப்பு. இங்கே அனுமன் ஒருதுணைக்கருவியும் இன்றி இலங்கையைக் கொளுத்தப் போவதற்கு, முன்பு முப்புரங்களைச் சுட்டெரித்த சிவபெருமானும் அவனுக்குத் துணைபுரிந்த போர்க்கருவிகளும் வெட்கமடையும்படி அவ்வளவு தீவிரமாக நெருப்பைக் கொளுத்தினான் என்பதாம். ''போர்வாள்'' என்பதுபோல அனுமன் ''போர்வால்'' பற்றிக்கூறிய கவிஞனின் நகைச்சுவை உணர்வை உணர்க.

இங்கே ''துன்னலர் புரத்தை முற்றும் சுடுதொழில் தொல்லையோன்'' என்பது பகைவர்களின் முப்புரங்களையும் முழுவதும் சுட்டெரிக்கும் செயலைச்செய்த மிகப்பழமையானவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

217. பிணிவீட்டு படலம் பக்கஎண்-925/136 கவிக்கூற்று.

அப்பு உறழ் வேலை காறும் அலங்குபேர் இலங்கை தன்னை,
எப்புறத்து அளவும்தீய, ஒரு கணத்து எரித்த கொட்பால்,
துப்பு உறழ் மேனி அண்ணல், மேருவில் குழைய, தோளால்
முப்புறத்து எய்த கோலே ஒத்தது அம் மூரிப் போர்வால்.
(5940)

நீர்ப்பரப்பையே தன் எல்லையாகக்கொண்டு விளங்குகின்ற இலங்கை மாநகரத்தை, அதன் எல்லாப்புறமும் சென்று பரவி எரிந்து அழியும்படி ஒரு நொடிப்பொழுதில் எரித்து அழித்த திறமையினால், பவளம்போன்ற சிவந்த நிறம் கொண்ட உடலைக் கொண்ட சிவபெருமான், மேருமலையையே வில்லாக வளைத்துத் தன் தோளாற்றலால் முப்புரங்களையும் எதிர்த்துச் செலுத்திய அம்பினைப்போல, இப்போது வலிமைமிக்க, போராற்றல்

பொருந்திய அனுமனது வால் இருந்தது. சிவபெருமான் செலுத்திய மேருமலையாகிய வில்லுக்கு அனுமனது போர்செய்யும் இயல்புடைய வால் உவமை.

இங்கே ''துப்பு உறழ் மேனி அண்ணல்'' என்பது பவளம் போன்ற எரிபோல் மேனிப்பிரான் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்தது. ''முப்புரத்து எய்த கோல்'' என்பது மேருமலையினைக் குறித்தது என்க.

218. பிணிவீட்டு படலம் பக்கஎண்-925/138 கவிக்கூற்று.

நீல்நிற நிருதர் யாண்டும் நெய்பொழி வேள்வி நீக்க,
பால்வரு பசியன், அன்பான் மாருதி வாலைப்பற்றி,
ஆலம் உண்டவன் நன்று ஊட்ட, உலகெலாம் அழிவின் உண்ணும்
காலமே என்ன மன்னோ, கனலியும் கடிதின் உண்டான்.
(5942)

கரியநிறம் கொண்ட அரக்கர்கள், எல்லா இடங்களிலும் நிகழ்த்தும், நெய்பொழிந்து இயற்றப்படுகின்ற வேள்விகளையெல்லாம் தடுத்ததனால், மிக்க பசியை உடையவனாகிய நெருப்புக்கடவுள் அன்பு மிகுதியால், தனது துணைவனான காற்றுக்கடவுளின் மைந்தனான அனுமனின் வாலைப் பற்றிக்கொண்டு ஆலகால விஷத்தைப் பருகியவனான சிவபெருமான் அவனுக்கு அந்நெருப்பை நன்றாக உண்பிக்க இவ்வுலகங்கள் எல்லாவற்றையும் அழித்து உண்டுவிடும் ஊழியிறுதிக்காலம் என்று கருதும்படி, அந்த நெருப்புக்கடவுள் இலங்கை மாநகரம் முழுவதையும் உண்டு தீர்த்தான்.

''பசியன்'' என்ற சொல் பசியோடு இருந்தவன் என்று அக்னிதேவனைக் குறித்தது. ''அன்பான்'' என்பது அன்பின் காரணமாக என்ற பொருளைத் தந்து நின்றது. ''ஆலம் உண்டவன்'' என்பது ஆலகால விஷத்தைப் பருகியவன் என்று சிவபெருமானைக் குறித்தது என்க.

219. திருவடி தொழுத படலம் பக்கஎண்-936/13 கவிக்கூற்று.

முத்தலை எஃகினாற்கும், முடிப்ப அரும் கருமம் முற்றி,
வித்தகத் தூதன் மீண்டது இறுதியாய் விளைந்த தன்மை,
அத்தலை அறிந்த எல்லாம், அறைந்தனம்; ஆழியான் மாட்டு
இத்தலை நிகழ்ந்த எல்லாம், இயம்புவான் எடுத்துக் கொண்டாம்.
(6019)

அனுமன் இலங்கைக்கு எரியூட்டி மயேந்திரமலை வழியாக இராமபிரானை அடைந்த நிகழ்வைக் குறிக்கத் தொடங்கும் பாடல் இது.

மூன்று கவடுகளையுடைய முத்தலைச் சூலத்தை உடையவனாகிய சிவபெருமானாலும் செய்து முடித்தற்கு அரிதான காரியத்தை முழுவதும் செய்து முடித்து மீண்டு வந்த, அறிவில் மேம்பட்டவனாகிய அனுமன், தூதுவனாகச் சென்று திரும்பிய வரையும் நிகழ்ந்த நிகழ்வுகளை இதுவரையிலும் கூறிவந்தோம். இப்போது இங்கே சக்கரப்படையை உடையவனாகிய திருமாலின் திரு அவதாரமான இராமபிரானிடத்து நிகழ்ந்த நிகழ்வினைக் கூறத்தொடங்குவோம் என்கிறான் கவிஞன். இது கவிக்கூற்று.

இங்கே ''முத்தலை எஃகினான்'' என்பது முத்தலைச் சூலத்தைத் தன் ஆயுதமாகக் கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

220. திருவடி தொழுத படலம் பக்கஎண்-939/34 அனுமன் கூற்று

''சோகத்தாள் ஆய நங்கை கற்பினால் தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவிமாரும் வான் சிறப்பு உற்றார்; மற்றைப்
பாகத்தாள், இப்போது ஈசன் மகுடத்தாள்; பதுமத்தாளும்
ஆகத்தாள் அல்லள், மாயன் ஆயிரம் மௌலி மேலாள்''
(6040)

இலங்கையில் அசோகவனத்தில் சீதாதேவியைக் கண்டுவந்த அனுமன், இராமபிரானிடம் திரும்பிவந்து சீதாதேவியின் கற்பின் திறத்தை எடுத்துக்கூறுவதாக வருவது இப்பாடல்.

''சோகமே வடிவெடுத்து அசோகவனத்தில் அமர்ந்திருக்கும் பெண்களிற் சிறந்தவளாகிய சீதையின் கற்பின் திறத்தினால், இயல்பாகவே எல்லோராலும் தொழுதற்கு அமைந்த விண்ணுலகத்தவரான இந்திரன், பிரமன் முதலியவர்களின் மனைவிமார்களும் இப்போது மிகச் சிறப்பு மிக்கவராயினர். மேலும் சிவபெருமானின் ஒரு பாகத்தில் அமர்ந்திருந்த உமையம்மை, இப்போது அவன் முடிமேல் அமர்பவளானாள். தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகள்கூட இப்போது திருமாலின் மார்பில் இருப்பவள் அல்லள். அவனுடைய ஆயிரம் முடியின்மேல் அமர்ந்திருக்கிறாள்'' என்கிறான் அனுமன்.

சீதையின் கற்பு, பெண்குலத்தின் சிறப்பை மேலும் சிறக்கச்செய்திருக்கிறது. முன்பு சாதாரணமாக இருந்தவர்கள் இப்பொழுது உயர்ந்த நிலையை அடைந்துவிட்டனர். முன்பு சிவபெருமானின் ஒருபுறத்தில் பாதியாக அமர்ந்திருந்த உமையம்மை இப்போது அவன் தலைமுடியின்மேல் அமர்ந்தவளானாள். அதுபோலத் திருமகளும் இப்போது அவன் மார்பினை விட்டு திருமாலின் ஆயிரம் முடிகளின் மேலே அமர்ந்திருப்பவளானாள் என்கிறான் அனுமன் என்பதாம்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

இவைதவிர, சென்னைக்கம்பன் கழகச் செம்பதிப்பில் மிகைப்பாடல்கள் என்று தரப்பெற்றிருக்கின்ற பாடல்களில் கீழ்க்காணும் 3 பாடல்களில் சிவபெருமான் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவை மிகைப்பாடல்கள் எனப் பிரிக்கப்பட்டிருப்பதால் அவற்றுக்கான விளக்கங்கள் தரப்படவில்லை.

221. சூடாமணிப் படலம் பக்களண்-947/77-1 சீதைக்கூற்று

''அங்கு அது அஞ்சி நடுங்கி, அயன்பதி அண்மி,
''இங்கு நின் வரவு என்னை?'' எனக் கனல்வு எய்த,
மங்கை பங்கனொடு எண்திசையும்செல, மற்றோர்
தங்கள் இடங்கள் மறுத்தமை தைப்பாய்''

222. பிணிவீட்டு படலம் பக்களண்-953/136-1 கவிக்கூற்று

உகக் கடை உலகம் யாவும் உணங்குற, ஒரு தன் நாட்டம்
சிகைக் கொழுங்கனலை வீசும் செயல் முனம் பயில்வான் போல,
மிகைத்து எழு தீயர் ஆயோர் விரிநகர் வீய, போர்வால்
தகைத்தல் இல் நோன்மை சாலும் தனி வீரன், சேணில் உய்த்தான்.

223. திருவடி தொழுத படலம் பக்களண்-960/49-4 கவிக்கூற்று

கருடனில், விடையில் தோன்றும் இருவரும் கடுப்ப, காலின்
அருள்தரு குமரன் தோள்மேல், அங்கதன் அலங்கல் தோள்மேல்,
பொருள் தரும் வீரர் போத, பொங்கு ஒளி விசும்பில் தங்கும்
தெருள்தகு புலவர் வாழ்த்திச் சிந்தினர் தெய்வப் பொற்பூ

சுந்தரகாண்டக் குறிப்பு நிறைவுற்றது.

6. யுத்தகாண்டம்

224. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-969/25
மகோதரன் கூற்று.

''வெள்ளிஅம் கிரியினை விடையின் பாகனோடு
அள்ளி, விண்தொட எடுத்து, ஆர்த்த ஆற்றலாய்!
சுள்ளியில் இருந்து உறை குரங்கின் தோள்வலிக்கு
எள்ளுதி போலும் நின்புயத்தை எம்மொடும்?'' (6095)

இலங்கையை அனுமன் எரியூட்டிச் சென்றபிறகு, இராவணன் மந்திரிசபையைக் கூட்டியபோது, படைத்தலைவனுக்குப் பிறகு அமைச்சர்களுள் ஒருவனான மகோதரன் பேசும் பேச்சு இப்பாடல்.

''அழகிய வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையில் உறைபவனும், ரிஷபத்தை வாகனமாகக் கொண்டு செலுத்துபவனுமான சிவபெருமானோடு, அதை வானளாவ வாரிஎடுத்து, பேராரவாரம் செய்த பேராற்றலுடையவனே! இராவணா! மரக்கொம்புகளிடையே இருந்துகொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் அந்தக் குரங்குகளின் தோளாற்றலுக்கு உன் தோளாற்றல் ஈடாகும் என்று உன்னை நீயே இகழ்ந்து எங்களிடம் கூறிக்கொண்டிருக்கிறாயோ?'' என்கிறான் மகோதரன்.

பெரும் பேராற்றல்படைத்த இராவணன், அமைச்சர்கள் நடுவில் தனது தோள்வலியைக் குறைவாகச் சொல்லிக் கொள்ளக்கூடாது என்பது மகோதரன் கருத்து.

இங்கே ''வெள்ளியங்கிரி'' என்பது சிவபெருமான் உறையும் கயிலைமலையையும், ''விடையின் பாகன்'' என்பது ரிஷபத்தைத் தன் வாகனமாகக் கொண்டு செலுத்துபவன் என்று சிவபெருமானையும் குறிக்கும் என்க.

225. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-970/32 துன்முகன் கூற்று

''திக்கயம் வலிஇல; தேவர் மெல்லியர்;
முக்கணான் கயிலையும் முரண் இன்றாயது;
மக்களும் குரங்குமே வலியராம் எனின்,
அக்கட, இராவணற்கு அமைந்த ஆற்றலே!'' (6102)

மகோதரனுக்குப் பிறகு துன்முகன் எழுந்து, இராவணனை நோக்கி, ''எட்டுத்திசைகளும் தங்கள் வலிமை இழந்து நிற்கின்றன. தேவர்கள் எல்லாம் வலிமை ஒடுங்கிப்போய் இருக்கிறார்கள்; மூன்று கண்களையுடைய சிவபெருமான் உறையும் கயிலைமலையும் தன் வலிமை குன்றிப்போய் நிற்கிறது; மனிதர்களும், குரங்கும்தான் மிக்க வலிமைபடைத்தவர் என்றால், அடடா! இராவணனுக்கு அமைந்த வீரம் இவ்வளவுதானா?'' என்று வியந்து இகழ்கிறான் துன்முகன்.

''அக்கட'' என்பது வியப்புக்குறித்த இடைச்சொல்லாகும்.

இங்கே ''முக்கணான் கயிலை'' என்பது மூன்று கண்களையுடைய சிவபெருமான் உறையும் கயிலைமலை எனப் பொருள்படும்.

226. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-972/45
புகைநிறக்கண்ணன் கூற்று

''தொகைநிலைக் குரங்குடை மனிதர்ச் சொல்லி என்?
சிகைநிறச் சூலிதன் திறத்துச் செல்லினும்,
நகை உடைத்தாம்; அமர்செய்தல் நன்று'' எனா,
புகைநிறக்கண்ணனும் புகன்று பொங்கினான். (6115)

புகைநிறக் கண்ணன் என்பவன் இராவணனை நோக்கி, ''நெருப்பைக் கக்குகின்ற நிறத்தையுடைய சூலாயுதத்தைக் கையில் கொண்டுள்ளவனான சிவபெருமானை எதிர்த்துப் போர்செய்யச் செல்லும் ஆற்றல் உடையவனான நீ, கூட்டமாக வாழும் இயல்புடைய இந்தக் குரங்குகளையே தன் படைவீரர்களாகக் கொண்டுள்ள இந்த மானிடர்களுடன் போர்செய்யச் செல்லுவோம் என்று கூறுவது கேலிக்குரியதாகும். அவர்களாகவே நம்மிடத்திற்கு வருவார்கள் என்றால் அப்போது நாம் போர்செய்தலே நலம்பயக்கும்'' என்று சினந்து கூறுகிறான்.

இங்கே ''சிகைநிறச் சூலி'' என்பது சிவந்த நிறமுடைய நெருப்பைக் கக்குகின்ற கூரிய நுனியை உடைய சூலாயுதத்தை ஏந்தியவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க

227. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-974/59
இந்திரசித்தன் கூற்று.

''ஈசன் அருள் செய்தனவும், ஏடு அவிழ் மலர்ப்பேர்
ஆசனம் உவந்தவன் அளித்தனவும், ஆய
பாசம்முதல் வெம்படை சுமந்து, பலர் நின்றார்;
ஏச உழல்வேன் ஒருவன் யானும் உளென் அன்றோ?'' (6129)

இந்திரசித்து இராவணனிடம் ''சிவபெருமான் கருணைகூர்ந்து அருளியவையும், இதழ்கள் விரிகின்ற தாமரைமலரைத் தனது பெரிய இருக்கையாக மனமுவந்து கொண்டிருக்கின்ற பிரமதேவன் ஈந்தனவுமாகிய, நாகபாசம் முதலான கொடிய படைக்கலன்களைச் சுமந்துகொண்டு பல படைத்தலைவர்கள் நிற்கிறார்கள். எல்லோரும் இகழ்ந்து பழிக்குமாறு திரிபவனாகிய நானும் அவர்களுள் ஒருவனாய் இன்னும் இங்கு நின்றுகொண்டிருக்கிறேன் அல்லவா?'' என்று தன்னைப் போருக்கு அனுப்பும்படி தன் தந்தையிடம் வேண்டுகிறான் இந்திரசித்து என்பதாம்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறித்தது என்க.

228. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-976/80 வீடணன் கூற்று

''மேல்உயர் கயிலையை எடுத்த மேலைநாள்,
நாலு தோள் நந்திதான் நவின்ற சாபத்தால்,
கூலவான் குரங்கினால் குறுகும் கோள்; அது
வாலிபால் கண்டனம், வரம்புஇல் ஆற்றலாய்!'' (6150)

இந்திரசித்தனைப் பேசாதிருக்கும்படி அடக்கிவிட்டு, வீடணன் இராவணனைப் போற்றிப் புகழ்ந்து, தான் கூறுவது அவன் இந்திரப் பெரும்பதம் இழக்கின்றானே என்ற ஆதங்கத்தினால்தான் என்று முகமன்கூறி, தான் கூறுபவை அனைத்தையும் கேட்டுவிட்டுப் பின்னர் சினம்கொள்ள வேண்டியிருந்தால் அவ்வாறே செய்வாயாக என்று கூறியபின் கீழ்வருமாறு கூறுகிறான்.

''அளவற்ற ஆற்றல் உடையவனே! இராவணா! முன்பு நீ உயர்ந்து விளங்குகின்ற கயிலாய மலையைப் பெயர்த்தெடுத்தாயே, அப்பொழுது அங்கே நின்றிருந்த நான்கு தோள்களையுடைய நந்திதேவன் உனக்கு ஒரு சாபம் அளித்தானே நினைவிருக்கிறதா? உனக்குப்பெரிய வாலையுடைய ஒரு குரங்கினால்தான் கேடுவரும் என்று கூறினான் அல்லவா? அது மெய்ப்பிக்கப்பட்டதை, நீ குரக்கினத்தைச் சார்ந்த வாலியிடம் தோற்றுப்போனதில் இருந்தே தெரிந்துகொண்டோம் அல்லவா?'' என்று கூறுகிறான்.

இங்கே ''மேல்உயர் கயிலை'' என்பது சிவபெருமான் உறைகின்ற உயர்ந்த கயிலைமலையைக் குறிக்கும் என்க.

229. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-978/86 வீடணன் கூற்று

''கோசிகப் பெயருடைக் குலமுனித் தலைவன் ''அக்குளிர் மலர்ப்பேர்
ஆசனத்தவனொடு எவ்வுலகமும் தருவென்'' என்று அமையலுற்றான்,
ஈசனின் பெறு படைக்கலம், இமைப்பு அளவில் எவ்வுலகில், யாவும்
நாசம் உற்றிட நடப்பன, கொடுத்தன பிடித்துடையர், நம்ப! (6156)

மேலும் வீடணன் இராவணனை நோக்கி, ''தலைவனே! அந்தக் குளிர்ச்சிபொருந்திய தாமரைமலரைப் பெரிய இருக்கையாகக் கொண்டவனாகிய பிரமதேவனைப்போல், நானும் எல்லா உலகங்களையும் படைக்கும் ஆற்றல் பெற்றவனாவேன்'' என்றுகூறி, கோசிகன் என்ற முனிவர்களுக்கெல்லாம் தலைவனான விசுவாமித்திரன், தான் சிவபெருமானிடமிருந்து பெற்றனவும், கண்மூடித்திறக்கும் நொடிப் பொழுதில் எல்லா உலகங்களிலும் உள்ள எல்லா உயிரினங்களையும் அழிக்கவல்லனவுமான அரிய படைக்கலன்களை அவர்களுக்குக்கொடுக்க, அவற்றைக் கைக் கொண்டுள்ளவர்கள் அந்த இராமஇலக்குவர்'' என்கிறான் வீடணன்.

கோசிகன் என்னும் விசுவாமித்திரன்-பிரமதேவனுடன் ஒப்பிட்டுக் கூறக்கூடிய ஆற்றல்பெற்றவன். தான்சிவபெருமானிடமிருந்து பெற்றவையும், உலகங்கள் எல்லாவற்றையும் அழிக்கும் வல்லமை கொண்டவையுமான படைக்கலங்களை அவன் இராமஇலக்குவர்க்குத் தந்திருக்கிறான். அவர்கள் இப்பொழுது அவற்றைக் கைக்கொண்டிருக்கிறார்கள் என்று அறிவுறுத்துகிறான் வீடணன்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

230. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-978/87 வீடணன் கூற்று

எறுழ்வலிப் பொருஇல் தோள் அவுணரோடு,
　　அமரர் பண்டு, இகல்செய் காலத்து,
உறுதிறல் கலுழன்மேல் ஒருவன் நின்று
　　அமர் செய்தானுடைய வில்லும்,
தெறு சினத்தவர்கள், முப்புரம்
　　நெருப்புற உருத்து எய்த அம்பும்,
குறுமுனிப் பெயரினான், நிறைதவர்க்கு
　　இறை தரக் கொண்டு நின்றார். (6157)

''மிக்க வலிமைகொண்ட, ஒப்பற்ற தோள்களையுடைய அவுணர்களோடு, முன்பு தேவர்கள் போர்செய்த காலத்தில், மிக்க வலிமையுடைய கருடன்மேல் வந்து தன்னந்தனியாய்ப் போர்செய்து நின்ற ஒப்பற்றவனாகிய திருமாலின் வில்லையும், பகைவர்களை அழிக்கும்வண்ணம் மிக்க கோபம் கொண்டவர்களான முப்புரத்தவர்களைச் சுட்டெரிக்க சிவபெருமான் பயன்படுத்திய அம்பையும், முற்றமுழுக்கத் தவம் செய்தவர்களுக்கெல்லாம் தலைவன் என்று போற்றப்படுபவனும், குறுகிய உருவம் கொண்டவனுமான அகத்தியன் என்னும் பெயருடைய முனிவன், இவர்களுக்கு அருள் செய்து வழங்க, இராமஇலக்குவர் இருவரும் அவற்றை இப்பொழுது கைக்கொண்டிருக்கிறார்கள்'' என்றும் அறிவுறுத்துகிறான் வீடணன்.

திருமாலுடைய வில்லையும், சிவபெருமானுடைய அம்பையும் அகத்திய முனிவன் இராமஇலக்குவர்க்கு அளித்தருளினான் என்பதாம்.

இங்கே ''முப்புரம் நெருப்புற உருத்து எய்த அம்பு'' என்பது முப்புரங்களைச் சுட்டெரிக்கச் சிவபெருமான் பயன்படுத்திய அம்பு என்று மேருமலையைக் குறிக்கும் என்க.

231. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-981/97 வீடணன் கூற்று

''சிந்த மாநாகரைச் செருமுருக்கிய கரன், திரிசிரத்தோன்,
முந்த மான் ஆயினான், வாலியே முதலினோர் முடிவு கண்டால்,
அந்த மான் இடவனோடு, ஆழிமா வலவனும், பிறரும் ஐயா!
இந்த மானிடவராம் இருவரோடு எண்ணலாம் ஒருவர் யாரே?''
(6167)

''தலைவனே! சிறந்த தேவலோகத்தைச் சேர்ந்தவர்களான தேவர்கள் சிதறி ஓடும்படி போர்செய்து அழித்தொழித்ததையும் நமது கரன், திரிசிரன், முன்பு மாயமானாக மாறிவந்த மாரீசன், வாலி முதலியவர்களுக்கு ஏற்பட்ட முடிவினையும் ஆராய்ந்துபார்த்தால், அந்த மான் போன்றவளான உமையம்மையை இடப்புறத்திலும், மான்குட்டியைத் தன் இடக்கரத்திலும் கொண்டவனான சிவபெருமானும், சிறந்த ஆணைச்சக்கரத்தைத் தன் வலக்கையில் கொண்டுள்ள வலிமைபெற்றவனான திருமாலும், இன்னும் உள்ள பிரமதேவன் முதலானவர்களும், இந்த அற்பமான மனிதர்களான இராமஇலக்குவர் என்ற இருவரோடும் ஒப்பிட்டுட்டுப் பார்க்கும் தன்மை கொண்டவர்கள் ஆவார்களோ? அவ்வளவு ஆற்றல்கொண்டவர்கள் நம்மில் யாரும் இன்னும் இருக்கிறார்களா?'' என்றும் கேட்கிறான் வீடணன்.

''மான் இடவன்'' என்பது இடக்கரத்தில் மான்போன்ற விழிகளையுடைய உமையம்மையையும், அபிச்சார ஓமத்தில் தண்டகவன முனிவர்களால் அனுப்பப்பெற்ற மான்குட்டியையும், கொண்டுள்ளவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க. இடவன், வலவன் என்ற சொல்லாட்சியை நோக்குக. இடவன் என்ற சொல்லுக்கு இடபவாகனத்தில் ஊர்ந்து செல்பவன் என்று சிவபெருமானுக்கு மற்றொரு பெயரும் உண்டு என்பதும் கருதத்தக்கது.

232. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-982/102
இராவணன் கூற்று

''ஈங்கு மானுடப் பசுக்களுக்கு இலை வரம்'' என்றாய்;
தீங்கு சொல்லினை; திசைகளை உலகொடும் செருக்கால்
தாங்கும் யானையைத் தள்ளி, அத்தழல் நிறத்தவனை
ஓங்கல் ஒன்றொடும் எடுக்கவும், வரம் கொண்டது உண்டோ?''
(6172)

இராவணன் வீடணனை நோக்கி, ''பசுக்களைப் போலச் சாதுவான, தீமை இயற்றத்தெரியாத அற்பமான இந்த மானிடர்களுக்கு எதிராக, நான் பிரமதேவனிடம் வரம்வாங்கி வரவில்லை என்று கூறினாய்; நீ தவறாகக் கருதிக்கொண்டிருக்கிறாய்; எட்டுத்திசைகளையும் தாங்கிக்கொண்டிருக்கும் திக்கயங்களோடும் போரிட்டு, அவற்றை வென்று, இம்மூவுலகங்களையும் என்னுடைய பேராற்றலால் என் குடைக்கீழ் கொண்டுவந்து இப்போது அரசாட்சி செய்கிறேனே? அந்த நெருப்புப்போன்ற சிவந்தநிற மேனியை உடைய சிவபெருமானை, அவன் வசிக்கும் பெரிய கயிலாயமலையோடு சேர்த்துப் பெயர்த்தெடுத்தேனே? இவற்றிற்கெல்லாம் நான் ஏதேனும் வரம்வாங்கி வந்தேனா?'' என்று திருப்பிக்கேட்கிறான் இராவணன்.

தான்செய்த காரியங்கள் அனைத்தும் தன்னுடைய பேராற்றலால்தான் செய்து முடித்ததாகச் செருக்குக்கொண்டு பேசுகிறான் இராவணன் என்பதாம்.

இங்கே ''தழல் நிறத்தவன்'' என்பது செம்மேனிப் பிரானாகிய சிவபெருமானையும், ''ஓங்கல்'' என்பது அவன் உறையும் கயிலாயமலையையும் குறிக்கும் என்க.

233. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-982/105
இராவணன் கூற்று

''தேவரின் பெற்ற வரத்தினது என் பெருஞ்செருக்கேல்,
மூவரில் பெற்றம் உடையவன் தன்னோடும், முழுதும்
காவலின் பெற்ற திகிரியான் தன்னொடும், கடந்தது
ஏவரின் பெற்ற வரத்தினால்? இயம்புதி! இளையோய்!''
(6175)

''என் இளவல் வீடண! நான் தேவர்களிடமிருந்து பெற்ற வரத்தினால்தான் மிக்க ஆணவம்கொண்டிருக்கிறேன் என்று நீ கூறுகிறாயே! அவ்வாறானால் முன்பு மும்மூர்த்திகள் என்று கூறப்படும் அரன், அயன், அரி என்பவர்களுக்குள், காளையைத் தன் வாகனமாகக் கொண்டுள்ள சிவபெருமானையும், இவ்வுலகம் முழுவதையும் காக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள சக்கரப்படையை உடையவனான திருமாலையும், நான் போரில் வெற்றிகொண்டேனே! அவையெல்லாம் நான் யாரிடமிருந்து பெற்ற வரங்களினால் என்று நீ கருதுகிறாய்?'' என்று மாற்றம் கூறுகிறான் இராவணன்.

இங்கே பெற்றம் என்ற சொல் நமக்குப்புதிது. எருது, காளை, ரிஷபம், இடபம் என்ற பொருளைத்தரும். இங்கே ''பெற்றம் உடையவன்'' என்பது ரிஷபத்தை வாகனமாகக் கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''பெற்றம் மேய்த்துண்ணும் குலத்துப் பிறந்த நீ குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது'' என்பது ஆண்டாள் திருப்பாவை.

234. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-982/107
இராவணன் கூற்று

''அரங்கில் ஆடுவார்க்கு அன்பு பூண்டுடை வரம் அறியேன்;
இரங்கி யான் நிற்ப, என்வலி அவன் வயின் எய்த,
வரம்கொள் வாலிபால் தோற்றனென்; மற்றும் வேறுள
குரங்கெலாம் எனை வெல்லும் என்று எங்ஙனம் கோடி?''
(6177)

''அம்பலத்தில் நடனமாடுகின்றவனாகிய சிவபெருமானிடம் பேரன்புகொண்டு, அவனிடமிருந்து வாலி பல வரங்கள் பெற்றிருக்கிறான் என்பதை நான் அப்போது அறிந்திருக்கவில்லை. அதற்காக அவன் எதிரில் நான் வருந்தி நின்றபோது, என்னுடைய ஆற்றல் அவனிடம் சென்று சேர்ந்திருக்கிறது. எனவே அத்தகைய வரத்தைப் பெற்றிருந்த வாலியினிடம் போரிட்டுத் தோற்க நேர்ந்தது. அதனாலேயே மற்றும் உள்ள குரங்குகள் எல்லாம் என்னை வென்றுவிடும் என்று நீ எதை ஆதாரமாகக் கொண்டு கூறுகிறாய்?'' எனக் கேட்கிறான் இராவணன்.

இங்கே ''அரங்கில் ஆடுவார்'' என்பது அம்பலத்தில் நடனமாடுபவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும். ''பேதையர் எதிர்குவர் எனினும், பெற்றுள ஊதியவரங்களும், உரமும் உள்ளதில் பாதியும், என்னதால்; பகைப்பது எங்ஙனம்?'' என்னும் வாலி கூற்றும் இங்கு நினைக்கற்பாலது.

235. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-982/108
இராவணன் கூற்று

''நீலகண்டனும், நேமியும், நேர்நின்று நேரின்,
ஏலும்அன்னவருடை வலி அவன்வயின் எய்தும்;
சாலும் நல்வரம் நினைந்து, அவன் எதிர்செலல் தவிர்ந்து,
வாலிதன்னை, அம்மனிதனும், மறைந்து நின்று எய்தான்''
(6178)

''நீலநிறமான கழுத்துப்பகுதியை உடைய சிவபெருமானும், சக்கரப்படையை உடைய திருமாலும்கூட, வாலியுடன் நேருக்குநேர் நின்று எதிர்த்துப் போர் செய்வார்களானால், அவர்களுடைய வலிமையில் பாதி வாலியிடம் சென்றுசேர்ந்துவிடும். அந்த வரத்தை நன்கு நினைவு கூர்ந்துதான், அவன் எதிரில் நேரிடையாகச் செல்வதைத் தவிர்த்து, திருமாலின் அவதாரமான இராமபிரானே மனித உருவில் அவ்வாலியை மறைந்து நின்று அம்பு செலுத்தினான்'' என்று விளக்கமாகக் கூறுகிறான் இராவணன்.

இங்கே ''நீலகண்டன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

236. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-983/114
இராவணன் கூற்று.

''சிவனும், நான்முகத்து ஒருவனும், திருநெடுமாலாம்
அவனும், மற்றுள அமரரும், உடன் உறைந்து அடங்க,
புவனம் மூன்றும் நான் ஆண்டுளது, ஆண்ட அப்பொருஇல்
உவன் இலாமையினோ? வலி ஒதுங்கியோ? உரையாய்!''
(6184)

''சிவபெருமானும், ஒப்பற்ற பிரமதேவனும், நீண்ட திருமால் என்று கூறப்படுகின்ற அவனும், மற்றும் உள்ள தேவர்களும், எல்லோரும் எனக்கு அடங்கி ஒடுங்கி இருக்க, நான் மேல், நடு, கீழ் என்ற மூவுலகங்களையும் அரசோச்சிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது மேலே கூறப்பட்ட சிவனும், பிரமனும், திருமாலும் உயிருடன் இருக்கவில்லையா? உயிருடன்தானே இருந்தார்கள்? அவர்கள் அப்பொழுது என்னை எதிர்த்துப் போரிடாததற்குக் காரணம், அவர்கள் வலிகுன்றிப்போய் இருந்ததனால்தான் என்னை எதிர்த்துப் போரிடாமல் ஒதுங்கியே இருந்தார்கள்'' என்கிறான் இராவணன்.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறித்தது என்க.

237. இராவணன் மந்திரப் படலம் பக்கம்-983/116
இராவணன் கூற்று.

பித்தனாகிய ஈசனும், அரியும், என்பெயர் கேட்டு,
எய்த்த சிந்தையர், ஏகுழி ஏகுழி எல்லாம்,
கைத்த ஏற்றினும் கடவிய புள்ளினும், முதுகில்
தைத்த வாளிகள் நின்றுள, குன்றின் வீழ் தடித்தின். (6186)

''பித்தன் என்று பலராலும் கூறப்படுகின்ற சிவபெருமானும், திருமாலும் என்னுடைய பெயரைக் கேட்டாலேயே தளர்வுற்ற மனம் உடையவராய், தோற்றோடிச் செல்லும் இயல்புடையவர்கள். அவர்கள் செலுத்திச்செல்லுகின்ற காளை வாகனத்தின் முதுகிலும், கருடப்பறவையின்முதுகுப்பக்கத்திலும் என்னுடைய அம்புகள் தைத்ததால் ஏற்பட்ட தழும்புகள், மலையில் விழுந்த இடியால் மலையில் பிளவுஏற்படுவதுபோல, இன்றும் இருக்கின்றன'' அவற்றை நீ பார்த்ததில்லையா? என்று கேட்கிறான் இராவணன்.

சிவனும் திருமாலும் தன்னிடம் தோற்றோடியபோதெல்லாம், அவர்களுடைய வாகனங்களில் நான் செலுத்திய அம்புகளால் ஏற்பட்ட தழும்புகள் இன்னும் இருப்பதை நீ காணலாம் என்று தன் போர்த்திறத்தின் சிறப்பைக் கூறுகிறான் இராவணன்.

இங்கே ''பித்தனாகிய ஈசன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும். ''பித்தா! பிறைசூடி'' என்பது சுந்தரமூர்த்திகள் தேவாரம். ''பிட்டு நேர்பட மண் சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தன்!'' என்பது மாணிக்கவாசகர் திருவாசகம்.

238. இரணியன் வதைப்படலம் பக்கம்-984 / 1 வீடணன் கூற்று

''வேதம் கண்ணிய பொருளெலாம் விரிஞ்சனே ஈந்தான்;
போதம் கண்ணிய வரமெலாம் தரக்கொண்டு போந்தான்;
காதும் கண்ணுதல், மலர்அயன், கடைமுறை காணாப்
பூதம் கண்ணிய வலியெலாம் ஒரு தனி பொறுத்தான்'' (6189)

வீடணன் இராவணனுக்கு, இரணியன் பற்றிக் கூறத்தொடங்குகிறான்.

''இரணியனுக்கு நான்கு வேதங்களில் கூறப்பட்டிருக்கும் பொருள்கள் அனைத்தையும் பிரமதேவனே நேராகக் கற்பித்தான்; அறிவு நிரம்பப்பெற்ற வரங்கள் அனைத்தையும் அவனே மனமுவந்து அளிக்க இரணியன் அதை ஏற்றுக்கொண்டு வந்தான்; அழிக்கும் தொழிலையுடைய நெற்றிக் கண்ணனாகிய சிவபெருமான், தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன், அழிவற்ற, முடிவுகாணமுடியாத ஐம்பெரும் பூதங்கள் முதலியோர் கொண்டிருக்கின்ற ஆற்றலெல்லாம் அவன் ஒருவனே பெற்று ஒப்பற்றவனாகத் திகழ்ந்தான்'' என்கிறான் வீடணன்.

இங்கே ''**காதும் கண்ணுதல்**'' என்பது அழிக்கும் தொழிலையுடைய நெற்றிக்கண்ணன் என்று சிவபெருமானைக் குறிக்கும். காதுதல் - அழித்தல்.

239. இரணியன் வதைப்படலம் பக்கம்-984 / 2 வீடணன் கூற்று

''எற்றை நாளினும் உளன் எனும் இறைவனும், அயனும்,
கற்றை அம் சடைக் கடவுளும், காத்து, அளித்து, அழிக்கும்
ஒற்றை அண்டத்தின் அளவினோ? அதன்புறத்து உலவா,
மற்றை அண்டத்தும், தன் பெயரே சொல வாழ்ந்தான்'' (6190)

''எந்தக்காலத்திலும் அழியாது நிலைத்திருப்பவன் என்று கூறப்படும் இறைவனான திருமாலும், பிரமதேவனும், அழகிய சடைமுடியைக் கொண்டவனான சிவபெருமானும், ஒப்பற்ற இவ்வண்டகோளத்தைக் காத்து, படைத்து, அழிக்கும் இயல்புடையவர்களே! இவ்வொரு அண்டம் மட்டுமோ? இவ்வண்டத்திற்கு அப்புறத்தே உள்ள, அளவிடமுடியாத மற்றைய எல்லா அண்டங்களிலும்கூடத் தன் பெயரையே எல்லோரும் உச்சரிக்கும்படி புகழுடன் வாழ்ந்திருந்தவன் இரணியன்'' என்கிறான் வீடணன்.

இங்கே ''அளித்து'' என்பது படைத்து எனும் பொருளது. திருமால், பிரமன், சிவன் என்று கூறியமுறையால் முதலில் காத்து என்றும், பின்னர் படைத்து என்றும், பின்னர் அழித்து என்றும் முறைமாற்றிக் கூறினார் என்க.

இங்கே ''கற்றைஅம் சடைக்கடவுள்'' என்பது தொகுதியான அழகிய சடைமுடியைக் கொண்ட கடவுள் என்று சிவபெருமானைக் குறிக்கும்.

240. இரணியன் வதைப்படலம் பக்கம்-985/10 வீடணன் கூற்று

''மருக்கொள் தாமரை நான்முகன், ஐம்முகன், முதலோர்
குருக்களோடு கற்று ஓதுவது, அவன் பெருங் கொற்றம்;
சுருக்குஇல் நான்மறை, ''தொன்று தொட்டு உயிர்தொறும் தோன்றாது
இருக்கும் தெய்வமும் இரணியனே!நம!'' என்னும் (6198)

''நறுமணம்மிக்க தாமரைமலரில் தோன்றிய நான்கு முகங்களையுடைய பிரமதேவன், ஐந்துமுகங்களையுடைய சிவபெருமான், ஆகியோர் அவர்களது குருமார்களோடு சேர்ந்து கற்றுப்போற்றுவது இரணியனின் பெரிய வெற்றிகளைப் பற்றியே; சுருங்கச்சொல்வோமானால், சுருக்கமாகச் சொல்லப்படாது விரித்துரைக்கப்பட்டிருக்கும் நான்கு வேதங்களும், மிகப்பழங்காலந்தொட்டே உயிர்கள்தோறும் வெளிப்படையாகத் தோன்றாது மறைபொருளாய் நின்று இலங்கும் தெய்வங்களும்கூட, ''இரணியாய நமஹ!'' என்றுதான் கூறும்'' என்கிறான் வீடணன்.

இங்கே ''ஐம்முகன்'' என்பது ஐந்து முகங்களைக்கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க. சிவபெருமானின் ஐந்து முகங்களாவன. ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பனவாம்.

241. இரணியன் வதைப்படலம் பக்கம்-986/15 வீடணன் கூற்று

''தேவர் ஆயினர் ஏவரும், திரிதரும் இயக்கர்
யாவரேயும், மற்று எண்ணவும் நினைக்கவும் இயன்ற,
கோவை மால், அயன், மான்இடன், யாவரும் கொல்ல,
ஆவி தீர்கிலன்; ஆற்றலும் தீர்கிலன், அனையான்'' (6203)

வீடணன் மேலும் கூறுவான். ''தேவர்கள் என்று கூறப்படுபவர் எல்லோரும், வானத்தில் திரிகின்ற இயக்கர், என்பவரும், எண்ணவும் நினைக்கவும் அரியவர்களான திருமால், பிரமதேவன், மானை இடக்கரத்தில் கொண்டுள்ள சிவபெருமான், இவர்கள் யாராயிருந்தாலும் இரணியனைக் கொல்ல இயலாது. கொல்ல முயன்றாலும் அவனது உயிர் நீங்காது. அவன் ஆற்றலும் குறையாது. அப்படிப்பட்ட வரங்களை வாங்கிவந்தவன் இரணியன்'' என்கிறான் வீடணன்.

இங்கே ''மான்இடன்'' என்ற சொல்லுக்கு மானை இடக்கரத்தில் கொண்டுள்ளவன் என்று பொருள் கொண்டிருக்கிறோம். மான்போன்ற விழிகளையுடைய உமையம்மையை இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவபெருமான் என்ற பொருளும் பொருந்திவரும் என்பதையும் உணர்க.

242. இரணியன் வதைப்படலம் பக்கம்-990/44 பிரகலாதன் கூற்று

''முக்கண் தேவனும், நான்முகத்து ஒருவனும், முதலா,
மக்கள்காறும், இம்மந்திரம் மறந்தவர், மறந்தார்;
புக்குக் காட்டுவது அரிது; இது பொதுவுறக் கண்டார்,
ஒக்க நோக்கினர் அல்லவர் இதன்நிலை உணரார்'' (6232)

பிரகலாதன் தன்தந்தை இரணியனிடம் நாராயணனின் பெருமையை எடுத்துக்கூறுவதாக அமைந்த பாடல்களுள் இதுவும் ஒன்று. நாராயணனையே வழிபடு தெய்வமாகக் கொண்ட பிரகலாதன்கூட, சிவபெருமானைப் பற்றிப் பேசியிருப்பதால் இங்கே இந்தப்பாடல் இடம்பெறுகிறது என்பது சிறப்புக்குரியது.

''மூன்று கண்களையுடைய சிவபெருமானும், நான்கு முகங்களையுடைய ஒப்பற்ற பிரமதேவனும் முதலாக சாதாரண மக்கள்வரை, இந்த எட்டெழுத்து மந்திரத்தை யாரும் மறந்து போவார்களேயானால், அவர்கள் வீடுபேறு அடைதல் என்பதை மறந்தவர்கள் ஆவார்கள். இந்த எட்டெழுத்து மந்திரத்தின் சிறப்பை உள்ளே நுழைந்து எடுத்துக்காட்டுவது என்பது மிக அரிதான செயலாகும். இதை நடுவுநிலையினின்றும் ஆராய்ந்து பார்ப்பவர்களும், இன்பம்துன்பம் எல்லாவற்றையும் ஒன்றுபோல் நோக்கும் ஞானியர்களும், யோகியர்களும்தவிர, வேறு எவரும் இதன் பரிபூரண நிலையை உணரவல்லவர்கள் அல்லர்'' என்று பேசுகிறான் பிரகலாதன்.

இங்கே ''**முக்கண் தேவனும்**'' என்பது மூன்று கண்களையுடைய இறைவனானவன் என்று சிவபெருமானைக் குறிக்கும்.

243. இரணியன் வதைப்படலம் பக்கம்-992/54 இரணியன் கூற்று

''செய்த மாதவம் உடைமையின், அரி, அயன், சிவன் என்று
எய்தினார் பதம் இழந்தனர்; யான்தவம் இயற்றி,
பொய்இல் நாயகம் பூண்டபின், இனி அது புரிதல்
நொய்யது ஆகும் என்று, ஆரும்என் காவலில் நுழைவார்''
(6242)

''திருமால், பிரமன், சிவபெருமான் என்று கூறப்படும் இவர்கள் எல்லோரும், நான் அவர்களைக் காட்டிலும் மேம்பட்ட தவம் செய்து உயர்ந்திருப்பதனால், அவர்கள் தவம்செய்து பெற்ற பதவிகளையெல்லாம்

இழந்தார்கள்; நான் தலைமைப் பதவியை ஏற்றபின்னர், அவர்கள் மூவரும் இனி படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் தொழிலைச் செய்வது எளிமையுடையதாகும் என்று கருதி அதனைத் தவிர்த்து என் அரசாட்சிக்குள் அடங்கிப்போயினர்'' என்று இறுமாப்புடன் கூறுகிறான் இரணியன்.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

244. இரணியன் வதைப்படலம் பக்கம்-1007 / 154 கவிக் கூற்று

''முக்கணான், எண்கணானும், முளரி ஆயிரம் கணானும்,
திக்கண்ஆம் தேவரோடு முனிவரும், பிறரும், தேடிப்
புக்கநாடு அறிகுறாமல் திரிகின்றார் புகுந்து மொய்த்தார்,
''எக்கணால் காண்டும் எந்தை உருவம்?'' என்று இரங்கி நின்றார்.
(6342)

நரசிங்கப்பெருமானால் இரணியன் அழிக்கப்பட்ட பின்னர் அப்பொழுது சீற்றம்கொண்ட உருவத்தைக்கண்டு தேவர்கள் நடுங்கி நின்றதுபற்றிக் கூறுவது இப்பாடல்.

மூன்றுகண்களையுடைய சிவபெருமானும், எட்டுக்கண்களையுடைய நான்முகனாகிய பிரமதேவனும், தாமரைமலர் போன்ற ஆயிரம் கண்களையுடைய இந்திரனும், திக்குகளில் பொருந்தியிருக்கின்ற தேவர்களும், முனிவர்களும் மற்றும் அங்கு இருந்தவர்கள் எல்லோரும், நரசிங்கமூர்த்தியின் அந்த வடிவத்தையும் சீற்றத்தையும் கண்டு அச்சம்கொண்டு, தாம் எந்த நாட்டில் நுழைந்திருக்கிறோம் என்பதைக்கூட அறியமுடியாமல், இரணியன் இறந்துபட்டதும் ஒளிந்து நெருக்கிக்கொண்டு நின்றனர். அவ்வாறு நின்றவர்கள் நமது தலைவனாகிய நரசிங்கமூர்த்தியின் உண்மையான உருவத்தை இனிமேல் எப்போது, எந்தக் கண்ணைக்கொண்டு பார்க்கப்போகிறோம்?'' என்று சற்று வருத்தமுற்று நின்றிருந்தார்கள்.

இங்கே ''முக்கணான்'' என்பது மூன்று கண்களையுடையவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

245. இரணியன் வதைப்படலம் பக்கம்-1008 / 161 கவிக் கூற்று

''என்று ஆங்கு இயம்பி, இமையாத எண்கணனும்,
வன்தாள் மழுவோனும், யாரும் வணங்கினரால்
நின்றார் இருமருங்கும்; நேமிப்பெருமானும்,
ஒன்றாத சீற்றத்தை உள்ளே ஒடுக்கினான்'' (6349)

பிரமதேவன் அவ்வாறு நரசிங்கமூர்த்தியைத் துதித்தபின்னர், இமையாநாட்டமுடைய எட்டுக்கண்களையுடைய நான்முகனான பிரமதேவன், வலிய அடிப்பகுதியை உடைய மழுப்படையை ஏந்தியவனான சிவபெருமான், மற்றும் உள்ள எல்லோரும் நரசிங்கப் பெருமானை

வணங்கியவர்களாய் இரண்டு பக்கத்திலும் நின்றிருந்தார்கள். அப்போது சக்கரப்படையை உடைய திருமாலாகிய நரசிங்கப் பெருமானும், தீர்க்கமுடியாத தனது சீற்றத்தைத் தன் உள்ளே அடக்கிக்கொண்டு காட்சி அளித்தான்.

இங்கே ''வன்தாள் மழுவோன்'' என்பது வலிய பாதத்தை (அடிப்பகுதியைக்) கொண்ட மழுவாயுதம் தாங்கியவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

246. வீடணன் அடைக்கலப் படலம் பக்கம்-1027/108
இராமபிரான் கூற்று.

''இடைந்தவர்க்கு ''அபயம் யாம்'' என்று இரந்தவர்க்கு, எறிநீர்வேலை
கடைந்தவர்க்கு ஆகி, ஆலம் உண்டவற் கண்டிலீரோ?
உடைந்தவர்க்கு உதவான் ஆயின், உள்ளது ஒன்று ஈயான் ஆயின்,
அடைந்தவர்க்கு அருளான் ஆயின், அறம் என்னாம்? ஆண்மை என்னாம்?''
(6472)

இலங்கையிலிருந்து இராவணனால் துரத்தப்பட்டுத் தன் அமைச்சர் நால்வருடன் தன்னைச் சரணடைய வந்த வீடணனைத் தன்னுடன் சேர்த்துக் கொள்வதா? வேண்டாமா? என்று தன் துணைவர்களுடன் இராமபிரான் ஆலோசித்தபின், அனுமன் தன் கருத்தைக் கூறியபிறகு, இராமபிரான் தனது முடிவைக் கூறும் பாடல்இது.

''அலைகள் மோதுகின்ற கடலைத் தேவாசுரர்கள் கடைந்தபோது அதனின்றும் எழுந்த ஆலகால விஷத்தைத் தானே பருகியருளித் தேவர்களைக் காத்த சிவபெருமானைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கவில்லையா? தம் ஆற்றலில் மெலிந்துபோனவர்களுக்கு ஒருவன் தன்னாலான உதவிகளைச் செய்யாதிருந்தால், தன்னிடமுள்ள பொருளில் கொஞ்சமாவது அவனுக்குத் தந்து உதவவில்லை என்றால், நம்மையே நம்பிவந்து சரணம் என்று கூறுபவர்களை ஏற்றுக்கொண்டு, காப்பாற்றி அருளவில்லை என்றால், ''அச்சம்கொண்டு ''நான் உங்களுக்கு அடைக்கலம்'' என்று நம்மிடம் வந்து கெஞ்சிக் கேட்கின்றவர்களுக்கு அடைக்கலம் அளித்து அவர்களைக் காப்பாற்றவில்லையென்றால், பின்னர் அறம் என்ற ஒன்று என்ன ஆகும்? ஆண்மை என்று கூறப்படுகின்றவை எல்லாம் என்ன ஆகும்? அறத்தாலும், ஆண்மையாலும் என்ன பயன் விளையும்?'' என்று கேட்கிறான் இராமபிரான்.

இங்கே ''ஆலம் உண்டவன்'' என்பது தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையும்போது அதனின்றும் முதலில் வெளிப்பட்ட ஆலகால விஷத்தைத் தேவர்களைக் காப்பாற்றுவதற்காகத் தானே பருகி அருளியவன் என்று சிவபெருமானைக் குறிக்கும்.

247. வீடணன் அடைக்கலப் படலம் பக்கம்-1027/112

இராமபிரான் கூற்று

''நஞ்சினை மிடற்று வைத்த நகை மழுவாளன் ''நாளும்
தஞ்சு'' என, முன்னம், தானே தாதைபால் கொடுத்து, ''சாதல்
அஞ்சினேன் அபயம்!'' என்ற அந்தணற்கு ஆகி, அந்நாள்,
வெஞ்சினக் கூற்றை மாற்றும் மேன்மையின் மேன்மை உண்டோ?''
(6476)

இராமபிரான் தன் துணைவர்களை நோக்கி, ஒரு பேடைப்புறாவுக்குத் தன் உயிரையும் ஈந்த ஒரு ஆண்புறாவின் செயலையும், கஜேந்திரன் என்ற யானைக்குப் பரம்பொருள் ஓடிவந்து உதவிய செயலையும் நினைவுபடுத்தி, சிவபெருமான் மார்க்கண்டேயனுக்கு உதவிய செயலை இப்போது கூறுகிறான்.

''என்னுடைய குறைந்த வாழ்நாள் எல்லாம் உனக்கு அடைக்கலம்'' என்று முன்பு தன் தந்தை மிருகண்டு முனிவரிடம் கொடுத்து, ''இந்த இளம் வயதில் இறப்புப்பற்றி மிகவும் அஞ்சுகிறேன். நான் உனக்கு அடைக்கலம்'' என்று தன்னை வந்து சரணடைந்த மார்க்கண்டேயனாகிய சான்றோனுக்காக, கொடுமையான சினம்கொண்ட இயமனையே ''பாற்கடலினின்றும் எழுந்த ஆலகால விஷத்தைத் தன் கண்டத்திலேயே தேக்கி வைத்துக்கொண்ட ஒளிமிக்க மழுப்படையை உடையவனான சிவபெருமான் தன் திருவடிகளால் உதைத்து, மார்க்கண்டேயனுக்கு அடைக்கலம் தந்தருளிய சிறப்பைக் காட்டிலும் வேறுஒரு சிறப்பு உண்டோ?'' என்று அவர்களுக்குச் சரணாகதியின் மேன்மையினைப் புலப்படுத்தி எடுத்துரைக்கிறான் இராமபிரான் என்பதாம்.

இங்கே ''நஞ்சினை மிடற்று வைத்த நகை மழுவாளன்'' என்பது ஆலகால விஷத்தைத் தன் கண்டப்பகுதியிலேயே தேக்கி வைத்துக்கொண்டவன் என்றும், ஒளிமிக்க மழுவாயுதப் படையைத் தாங்கியவன் என்றும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

248. வீடணன் அடைக்கலப் படலம் பக்கம்-1029/123

வீடணன் கூற்று

''பஞ்சு எனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை, ''வருக'' என்று அருள் செய்தானோ?
தஞ்சு எனக் கருதினானோ? தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்சு எனச் சிறந்தேன் அன்றோ? நாயகன் அருளின் நாயேன்''
(6487)

தன்னை வந்து தஞ்சம்அடைய விரும்பிய வீடணனைத் தன்னிடம் அழைத்துவரச் சொல்லி சுக்கிரீவனை அனுப்பினான் இராமபிரான். சுக்கிரீவன்

சென்று வீடணனிடம் ''இராமபிரான் உன்னை அழைத்துவரச் சொன்னார்'' என்று கூறியபோது மனம்மகிழ்ந்து வீடணன் பேசுவதாக வரும் பாடல் இது.

''செம்பஞ்சுக்குழம்பு என்று கூறியவுடனேயே, அதை எடுத்துப் பூசியபின் சிவப்பதற்கு முன்பே, சிவந்து தோன்றும் மெல்லிய திருவடிகளையுடைய சீதாதேவியை, அவனிடமிருந்து அபகரித்துக்கொண்டு வந்த பாவியாகிய வஞ்சனை மிகுந்த அரக்கன் இராவணனுக்குத் தம்பிதான் நான் என்று தெரிந்த பின்னும், என்னை ''வருக'' என்று அழைத்து அருள்பாலித்தானோ? நான் அவனுக்கு அடைக்கலம் என்பதை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொண்டு விட்டானோ? முன்பு பாற்கடலைக் கடையும்போது வெளிப்பட்ட ஆலகால விஷம், தாழ்ந்து தொங்குகின்ற சடைமுடியை உடைய சிவபெருமான் உண்டதனால் எவ்வாறு சிறப்புப்பெற்றதோ, அதைப்போல் நாயைப்போன்ற அடியவனான நான், அருளாளனாகிய இராமபிரானின் கருணையால் அடைக்கலம் தரப்பட்டதும் சிறந்தவனாக ஆகிவிட்டேன்'' என்கிறான் வீடணன்.

இங்கே ''தாழ்சடைக் கடவுள் உண்ட நஞ்சு'' என்பது, தொங்குகின்ற சடைமுடியை உடைய இறைவனான சிவபெருமான் உண்ட ஆலகால விஷம் என்ற பொருளைத்தரும்.

249. இலங்கை கேள்விப் படலம் பக்கம்-1036/20
வீடணன் கூற்று

''வடதிசை வயங்குஒளி வாயில் வைகுவோர்,
இடைஇலர் எண் இருகோடி, என்பரால்;
கடையுக முடிவினில் காலன் என்பது என்?
விடை வரு பாகனைப் பொருவும் மேன்மையோர்'' (6535)

வீடணனுக்கு அடைக்கலம் தந்து, அவனைப் பாடி வீட்டை வலம்வரச்சொல்லிய பின்னர், தன் அருகில் இருத்தி, இராமபிரான் இலங்கையின் அரண், அதன் வன்மை, படையின் அளவு அவற்றின் தன்மை பற்றி வினவியதற்கு வீடணன் விடைதரத் தொடங்குகிற பாடல்களுள் வாயில்காப்போர் பற்றி எடுத்துரைக்கும் பாடல் இது.

''வடதிசையில் பொலிந்து விளங்கும் வாயிலில் காவல்காத்துக் கொண்டு தங்கியிருப்பவர்கள், ஒருபோதும் பின்வாங்காத இயல்புடையோர். அளவில் பதினாறுகோடி என்னும் எண்ணிக்கை கொண்டவர்கள் ஆவார்கள்; ஊழிக்கால முடிவில் இயமன்தான் உலகை அழிப்பவன் என்று எப்படிச் சொல்லமுடியும்? இயமனைக் காட்டிலும் வல்லமைபடைத்தவர்கள் இவர்கள். காளை வாகனத்தைச் செலுத்தி வருபவனாகிய சிவபெருமானைப் போன்ற சிறப்புப் பெற்றவர்கள் ஆவார்கள்'' என்று வீடணன் கூறுகிறான்.

இங்கே ''விடைவரு பாகன்'' என்பது காளையை வாகனமாகக் கொண்டு அதனைச் செலுத்தி வருபவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

250. இலங்கை கேள்விப் படலம் பக்கம்-1037/32
வீடணன் கூற்று

''இலங்கையின் அரண் இது; படையின் எண் இது;
வலங்கையில் வாள் சிவன் கொடுக்க வாங்கிய
அலங்கல் அம் தோளவன் துணைவர், அந்தம்இல்
வலங்களும், வரங்களும், தவத்தின் வாய்த்தவர்'' (6547)

இராவணனின் துணைவர்கள் பற்றி வீடணன், இராமபிரானுக்கு எடுத்துரைக்கும் பாடல் இது.

''இலங்கையின் பாதுகாவல் இத்தகையதானது. படையின் அளவும் இதுதான்; சிவபெருமான் கொடுத்த சந்திரகாசம் என்னும் வாட்படை எப்போதும் அவன் வெற்றிமிக்க வலக்கையில் இருக்கும். அசைந்தாடும் மலர்மாலையணிந்த தோள்களையுடைய அவனது தோழர்கள் முடிவில்லாத வெற்றிகளையும், வரங்களையும், தாங்கள் இயற்றிய அரும்பெரும் தவத்தினால் வாய்க்கப்பெற்றவர்கள் ஆவார்கள்'' என்கிறான் வீடணன்.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

251. இலங்கை கேள்விப் படலம் பக்கம்-1039/40
வீடணன் கூற்று

''உச்சிரத்து எரி கதிர்என உருத்து எரி முகத்தன்;
நச்சிரப்படை நால் இரு கோடிக்கு நாதன்;
முச்சிரத்து அயில் தலைவற்கும் வெலற்கு அரு மொய்ம்பன்;
வச்சிரத்து எயிற்றவன் உளன், கூற்றுவன் மாற்றான்'' (6555)

இராவணனின் படைத்தலைவன் வச்சிரத்து எயிற்றனின் தோளாற்றல்பற்றி வீடணன் இராமபிரானுக்கு எடுத்துரைக்கும் பாடல் இது.

''தலைக்குமேலே சுட்டெரிக்கின்ற சூரியனைப்போல மிக்க சீற்றம்கொண்டு கொதிப்பைக் காட்டுகின்ற முகத்தை உடையவனும், எட்டுக்கோடிப் படையினருக்கு உயர்ந்த சிறந்த தலைவனானவனும், மூன்று கவடுகளையுடைய கூரிய முத்தலைச் சூலத்தைக்கொண்டுள்ள தலைவன் சிவபெருமானும் வெல்லுதற்கு அரிதான வலிமையுடையவனும், இயமனுக்கே எதிரியானவனுமான வச்சிரத்து எயிற்றன் என்று ஒருவனும் இராவணனுக்குத் துணையாக இருக்கிறான்'' என்கிறான் வீடணன்.

பொதுவாக ''ந'' என்ற சொல் உயர்ந்த, சிறந்த என்ற பொருளைத்தரும் ஒற்றைச்சொல். இங்கே ''நச்சிரம்'' என்பது சிறந்த தலைமை என்ற பொருளைத்தரும். ''வஜ்ரத்மிஷ்டிரன்'' ''வஜ்ரதந்தன்'' என்ற வடசொல்லின் தமிழாக்கம் வச்சிரத்து எயிற்றன் என்பதாம்.

இங்கே ''முச்சிரத்து அயில் தலைவன்'' என்பது கூரிய முத்தலைச்சூலத்தை உடைய கடவுள் என்று சிவபெருமானைக் குறிக்கும்.

252. இலங்கை கேள்விப் படலம் பக்கம்-1040/52

வீடணன் கூற்று

''இனைய தன்மையர் வலி இஃது; இராவணன் என்னும்
அனையவன் திறம், யான் அறி அளவெலாம் அறைவென்;
தனையன், நான்முகன் தகை மகன் சிறுவற்கு; தவத்தால்
முனைவர்கோன் வரம், முக்கணான் வரத்தொடும் உயர்ந்தான்''
(6567)

வீடணன் மேலும் கூறுகிறான். ''இத்தகைய தன்மைவாய்ந்தவர்கள் இராவணனின் துணைவர்கள்; எனக்குத் தெரிந்தவரை எல்லாவற்றையும், நான் கூறுகிறேன்; அவன் நான்முகனாகிய பிரமதேவனின் மகனாகிய புலத்தியனின் மகனாகிய விச்ரவசு என்னும் முனிவனின் புதல்வன் ஆவான். அவன் செய்த மாபெரும் தவத்தால் முனிவர்கள் தலைவனான பிரமதேவனிடமிருந்தும், மூன்று கண்களையுடைய சிவபெருமானிடத்திருந்தும் பெற்ற வரங்களால் சிறப்புற்றுத் திகழ்கிறான்'' என்கிறான் வீடணன்.

''நான்முகன் தகைமகன் சிறுவற்குத் தனையன்'' என்பதுடன் முன்பு சூர்ப்பணகை இராமபிரானிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும்போது ''பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி'' என்று மூன்று தலைமுறையினர் பற்றிக் கூறியதையும் ஒப்பிட்டு நோக்கலாம். இங்கே ''முக்கணான்'' என்பது மூன்று கண்களையுடைய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

253. இலங்கை கேள்விப் படலம் பக்கம்-1040/53

வீடணன் கூற்று

''எள்இல் ஐம்பெரும் பூதமும் யாவையும் உடைய
புள்ளிமான் உரி ஆடையன் உமையொடும் பொருந்தும்
வெள்ளி அம் பெருங்கிரியினை வேரொடும் வாங்கி,
அள்ளி விண்தொட எடுத்தனன், உலகெலாம் அனுங்க''
(6568)

''இகழ்தல் இல்லாத ஐம்பெரும் பூதங்களையும், ஏனைய அசையும் அசையாப் பொருள்களையும் தன்னதாக உடையவனும், புள்ளிமானின் தோலை அரைக்கு ஆடையாகப் போர்த்திக் கொண்டிருப்பவனுமாகிய சிவபெருமான் உமையம்மையோடு பொருந்தி அமர்ந்திருக்கும் வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையை இவ்வுலகத்தார் எல்லோரும் நடுங்கும்படி வேரோடும் பிடுங்கி வானளாவ உயர்த்தித் தூக்கி, எடுத்தவன் ஆவான் இவ்விராவணன்'' என்கிறான் வீடணன்.

இங்கே ''புள்ளிமான் உரி ஆடையன்'' என்பது மான்தோலை ஆடையாக அணிந்தவன் என்றும், ''உமையொடு பொருந்தும்'' என்பது தனது துணைவி உமையம்மையோடு அமர்ந்திருப்பவன் என்றும், ''வெள்ளிஅம்பெருங்கிரி'' என்பது அவன் வாழும் கயிலாயமலை என்றும் பொருள்படும்.

254. இலங்கை கேள்விப் படலம் பக்கம்-1042/61 வீடணன் கூற்று

''எம் குலத்தவர் எண்பதினாயிரர், இறைவர்,
கிங்கரப்பெயர், கிரி அன்ன தோற்றத்தர் கிளர்ந்தார்;
வெங்கரத்தினும், காலினும், வாலினும் வீக்கி,
சங்கரற்கு அழி முப்புரத்தவர் எனச் சமைந்தார்'' (6576)

வீடணன் இலங்கையில் அனுமன் புரிந்த வீரதீரச் செயல்களை இராமபிரானுக்குத் தெரிவிக்கும் பாடல் இது.

''எங்கள் அரக்கர் குலத்திலேயே தோன்றியவர்கள் எண்பதினாயிரம் பேர். அனைவரும் படைத்தலைவர்கள்; அவர்களுக்குக் கிங்கரர் என்பது பெயர்; அவர்கள் அனைவரும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மலைபோன்ற தோற்றத்தினர் ஆவர்; அவர்கள் அனுமனை எதிர்த்துப் போர் செய்யக் கிளர்ந்து எழுந்து வந்தார்கள்; அனுமன் தனது வலிய கைகளினாலும், கால்களினாலும், வாலினாலும் அவர்களைத் தாக்கி அழித்தான். முன்பு சிவபெருமான் முப்புரத்தைச் சுட்டெரித்து அழித்தான் அல்லவா? அதுபோல இவர்கள் எல்லோரும் அனுமனால் அழிக்கப்பட்டவர் ஆனார்கள்'' என்கிறான் வீடணன்.

அனுமன் இதுவரை இராமபிரானிடம் தான் இலங்கையில் வீரர்களுடன் போர்புரிந்து அவர்களை அழித்ததையும், இலங்கைக்கு எரியூட்டியதையும் தெரிவிக்கவே இல்லை. இப்போதுதான் வீடணன்மூலம் அச்செய்தியை இராமபிரான் முதன்முதலில் தெரிந்துகொள்ளுகிறான் என்பது கருதத்தக்கது.

இங்கே ''சங்கரன்'' என்பது நேராகச் சம்காரக் கடவுளாகிய சிவபெருமானையும், ''அழி முப்புரத்தவர்'' என்பது, சிவபெருமானால் சுட்டெரிக்கப்பட்டு அழிக்கப்பட்ட மூன்று புரங்களைக்கொண்ட அசுரர்கலளையும் குறிக்கும் என்க.

255. வருணனை வழிவேண்டு படலம் பக்கம்-1046/16
கவிக்கூற்று

வாங்கி வெஞ்சிலை வாளிபெய் புட்டிலும், மலைபோல்
வீங்கு தோள்வலம் வீக்கினன்; கோதையை விரலால்
தாங்கி, நாணினைத் தாக்கினன்; தாக்கிய தமரம்,
ஓங்கு முக்கணான் தேவியைத் தீர்த்துளது ஊடல். (6604)

ஏழுநாட்கள் தருப்பைப் புல்லினாலாய ஆசனத்தில் அமர்ந்து வருணனை வழிவேண்டியும், வருணன் வாராதிருந்ததால் சினம் கொண்ட இராமபிரான், இலக்குவனிடமிருந்து தனது கொடிய வில்லை வாங்கி, அம்பறாத்தூணியைத் தனது மலைபோலும் பருத்த வலத்தோளில் கட்டிக்கொண்டான்; உடும்புத் தோலினாலாய உறையைக் கைவிரல்களில் மாட்டிக்கொண்டு வில்லை நாண்ஏற்றினான். அந்த நாண் ஓசை, உயர்ந்த கயிலைமலையில் வீற்றிருந்த மூன்று கண்களையுடைய சிவபெருமானின் துணைவியாகிய பார்வதிதேவியின் ஊடலைத் தீர்த்துவிட்டது என்கிறான் கவிஞன்.

சிவபெருமானுடன் ஊடல் கொண்டிருந்த உமையம்மை, இராமபிரான் எழுப்பிய நாண் ஓசையால் நடுங்கி, சிவபெருமானைத் தழுவிக்கொண்டாள். எனவே அவர்கள் ஊடல் தீர்ந்தது என்பதாம்.

இங்கே ''ஓங்கு முக்கணான்'' என்பது சிறந்த மூன்று கண்களையுடைய சிவபெருமானையும், ''தேவி'' என்பது அவன் துணைவியாகிய உமையம்மையையும் குறித்தன என்க.

256. வருணனை வழிவேண்டு படலம் பக்கம்-1052/61
கவிக்கூற்று

அண்ட மூலத்துக்கு அப்பால் ஆழியும் கொதித்தது; ஏழு
தெண் திரைக்கடலின் செய்கை செப்பி என்? தேவன் சென்னிப்
பண்டைநாள் இருந்த கங்கை நங்கையும் பதைத்தாள்; பார்ப்பான்
குண்டிகை இருந்த நீரும் குளுகுளு கொதித்தது அன்றே.
(6649)

வருணன் வாராதுபோகவே இராமபிரான் சினந்து தொடுத்துச் செலுத்திய, பிரம்மாத்திரத்தினால் விளைந்த விளைவுகள் பற்றிக் கூறிக்கொண்டு வரும் பாடல்களுள் இதுவும் ஒன்று.

இராமபிரான் செலுத்திய அம்பினால் அண்டகோளத்திற்கு அப்பாலும் உள்ள பெரும்புறக் கடலும்கூடக் கொதித்துப்போனது என்றால், இவ்வுலகைச் சுற்றியுள்ள தெள்ளிய அலைகளையுடைய ஏழு என்று கணக்கிட்டுச் சொல்லப்படுகின்ற கடல்களின் நிலை பற்றி என்ன சொல்வது? தேவதேவனாகிய சிவபெருமான் சடைமுடியில் பழங்காலத்தொட்டே

இருந்துவரும் ஆகாய கங்கை என்னும் பெண்ணும் நடுநடுங்கிவிட்டாள்; பிரமதேவனின் கையில் இருந்த கமண்டலத்தில் இருந்த குளிர்ச்சி பொருந்திய நீரும் குளுகுளு என்ற ஓசையுடன் கொதித்துப்போனது'' என்கிறான் கவிஞன்.

முன்பு எப்படி இராமபிரான் அம்பு, ஏழு மராமரங்களைத் தொளைத்தபோது ஏழு என்று சொல்லப்படுகின்ற எல்லாவற்றையும் தொளைத்துச் சென்றுமீண்டதோ, அதுபோல இப்போது நீர் என்று சொல்லப்படுகின்ற பெரும்புறக் கடல், சிவபெருமான் தலையில் இருக்கும் ஆகாயகங்கை, பிரமதேவன் கையில் இருக்கும் கமண்டலத்தில் உள்ள நீர் ஆகிய எல்லாமும் கொதித்தன என்று கூறுவது கருதத்தக்கது.

இங்கே ''தேவன்'' என்பது சிவபெருமானையும், ''சென்னிப் பண்டைநாள் இருந்த கங்கை நங்கை'' என்பது, அவன் சடைமுடியில் தரித்திருக்கும் ஆகாயகங்கையையும் குறித்தது என்க. குளுகுளு கொதித்தது என்ற முரண்பட்ட சொல்லாட்சி சுவைக்கத்தக்கது.

257. ஒற்றுக் கேள்விப்படலம் பக்கம்-1071/35 இராமபிரான் கூற்று

''சண்டம்கொள் வேகமாகத் தனிவிடை உவணம் தாங்கும்
துண்டம் கொள் பிறையான், மௌலித் துளவினானோடும், தொல்லை
அண்டங்கள் எவையும் தாங்கிக் காப்பினும், அறமிலாதான்
கண்டங்கள் பலவும் காண்பென்'' என்பதும் கழறுவீரால்!''
(6780)

மாறுவேடம் கொண்டு குரங்குவேடத்தில் வந்த இராவணனது ஒற்றர்களை மன்னித்து இராமபிரான் இராவணனிடம் தெரிவிக்கும்படி அவர்களிடம் கூறுவதாக வருவது இப்பாடல்.

''மிக்க வேகம்கொண்டு செல்லும் ஒப்பற்ற காளையால் சுமக்கப்பெற்றவனும், பிறைச்சந்திரனை முடியில் சூடிக்கொண்டிருப்பவனுமாகிய சிவபெருமானும், மிக்க வேகம் கொண்டு பறக்கும் கருடப்பறவையால் சுமக்கப்பெற்றவனும், துளசிமாலையணிந்த மகுடம் தரித்திருப்பவனுமாகிய திருமாலும், இன்னும் மிகப்பழமையான அண்டங்கள் எல்லாமும் அவற்றில் உள்ள எல்லாமும் சேர்ந்து வந்து உங்கள் வேந்தன் இராவணனைக் காப்பாற்றினாலும், தருமத்தின் வழிநின்றும் பிறழ்ந்தவனாகிய அரக்கன் இராவணனைப் பல துண்டங்களாக எல்லோர் முன்னாலும் ஆக்கிக்காட்டுவேன் என்பதையும் அவனிடம் தெரிவியுங்கள்'' என்று இராமபிரான் அரக்கர்குல ஒற்றர்களிடம் கூறுகிறான்.

இங்கே ''விடை தாங்கும் துண்டம்கொள் பிறையான்'' என்பது ரிஷபவாகனத்தைக் கொண்டவனும், பிறைச்சந்திரனை அணிந்தவனும் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

258. ஒற்றுக் கேள்விப் படலம் பக்கம்-1073/51
சேனைத்தலைவன் கூற்று

''கூசி, வானரர் குன்றுகொடு இக்கடல்
வீசினார்'' எனும் வீரம் விளம்புவாய்;
ஊசி வேரோடும் ஓங்கலை, ஓங்கிய
ஈசனோடும் எடுத்ததும் இல்லையோ?'' (6796)

இராமபிரான் தெரிவிக்கச் சொன்னதை ஒற்றர்கள் வந்து தெரிவித்ததும் இராவணன் அதே இரவில் மந்திராலோசனை செய்யும்பொழுது சேனைத்தலைவன் பேசுவதாக வருவது இப்பாடல்.

மாலியவான் பகைவர்களின் வலிமையை எடுத்துச் சொன்னபிறகு, மந்திரிசபையில் இருந்த சேனைத்தலைவன் மாலியவானை நோக்கி, ''நடுங்குகின்ற வானரப்படைகள் மலைகளைப் பெயர்த்தெடுத்து எறிந்து இந்தக் கடலை அடைத்துச் சேதுபந்தனம் செய்துவிட்டார்கள் என்று அவர்கள் வீரப்பாட்டை எடுத்துச் சொன்னாயே? நமது தலைவன் இராவணன், தன்னந்தனியனாய் சிவபெருமான் உறையும் கயிலைமலையை ஊசிவேரோடும் சேர்த்துப் பெயர்த்தெடுத்ததை நீ அறியமாட்டாயோ?'' என்று கேட்கிறான்.

இங்கே ''ஓங்கல்'' என்பது சிவபெருமான் வசிக்கும் கயிலை மலையையும், ''ஈசன்'' என்பது சிவபெருமானையும் குறிக்கும் என்க.

259. ஒற்றுக் கேள்விப்படலம் பக்கம்-1078/86 இராவணன் கூற்று

''சூலம் ஏய் தடக்கை அண்ணல் தானும் ஓர் குரங்காய்த் தோன்றி
ஏலுமேல், இடைவது அல்லால், என் செய வல்லன் என்னை?
வேலைநீர் கடைந்த மேல்நாள், உலகெலாம் வெருவ வந்த
ஆலமோ விழுங்க, என்கை அயில்முகப் பகழி? அம்மா!''
(6831)

மாலியவான் கூறியவற்றுக்கு அவனை இகழ்ந்து மறுப்புக்கூறி இராவணன் பேசுவதாக வருவது இந்தப்பாடல்.

''சூலாயுதத்தைத் தன் பெரிய கைகளில் கொண்டுள்ளவனும், பெருமையிற் சிறந்தவனுமாகிய சிவபெருமானே ஒரு குரங்கு வடிவம் கொண்டு வந்தாலும், அவனால் என்னை என்ன செய்துவிட முடியும்? அவன் புறமுதுகு காட்டி ஓடுவானேஅன்றி அவனால் என்ன செய்யமுடியும்? முன்பு பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்டுத் தோன்றியதே ஆலகாலவிஷம், அதைத்தான் அந்தச் சிவபெருமானால் விழுங்க முடியும். என்னுடைய கையில் இருக்கும் கூரிய நுனியைஉடைய அம்பு என்ன அந்த ஆலகால விஷத்தைப்போன்ற சாதாரண நஞ்சா இது? அதைவிடக் கொடுமையானதல்லவா?'' என்று கேட்கிறான் இராவணன்.

இங்கே ''சூலம்ஏய் தடக்கை அண்ணல்'' என்பது சூலாயுதத்தைத் தன் பெரிய கையில் ஏந்தியிருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

260. இலங்கைகாண் படலம் பக்கம்-1081/20 இராமபிரான் கூற்று

''வாகை வெஞ்சிலைக்கை வீர! மலர்க்குழல் புலர்த்த, மாலைத்
தோகையர் இட்ட தூமத்து அகிற்புகை முழுதும் சுற்ற,
வேக வெங்களிற்றின் வன்தோல் மெய்யுறப் போர்த்த தையல்
பாகனின் பொலிந்து தோன்றும் பவள மாளிகையைப் பாராய்!''
(6855)

இராமபிரான் இலக்குவனுக்கு இலங்கையின் தோற்றப் பொலிவைக் கூறிக்கொண்டு வரும்போது இலங்கையில் உள்ள மாளிகைகளின் சிறப்பைக் குறிக்கும் பாடல் இது.

''வெற்றிமாலையைச் சூடியுள்ள, கொடிய வில்லைக் கைக்கொண்டிருக்கும் வீரனே! இலக்குவ! மயில்போலும் சாயலையுடைய அரக்கமகளிர் தங்கள் மலர்நிறைந்த கூந்தலை உலர்த்துவதற்காக இட்ட அகிற்புகை, மாளிகை முழுவதும் சுற்றிக் கருமைநிறத்தை உண்டாக்கியிருப்பதைக் காண்பாயாக! வேகம் மிகுந்த கொடிய யானையின் வலியதோலைத் தன் உடம்புமுழுவதும் மறையும் வண்ணம் போர்த்திக் கொண்டிருக்கிறானே, உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டிருக்கிற சிவபெருமான், அவனைப்போலப் பொலிவுற்றுத் தோன்றும் பவளத்தால் இயற்றப்பட்ட இந்த மாளிகைகளையும் காண்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

சிவந்த பவளத்தால் இயற்றப்பட்ட சிறந்த மாளிகைக்கு சிவபெருமானின் செம்மேனி உவமை. அம்மாளிகைகளில் சூழ்ந்திருக்கும் கரியநிற அகிற்புகைக்கு அந்தச் சிவபெருமான் போர்த்தியிருக்கிற கரிய யானையின் தோல்போர்வை உவமை.

இங்கே ''வேகவெங்களிற்றின் வன்தோல் மெய்யுறப் போர்த்த தையல் பாகன்'' என்பது யானைத்தோலைப் போர்த்தியிருப்பவன் என்றும், உமையம்மையை இடப்பாகத்தில் கொண்டவன் என்றும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

261. இராவணன் வானரத்தானை காண் படலம் பக்கம்-1084/10 கவிக்கூற்று

வெங்கரத்தர், அயில் வாளினர், வில்லோர்
சங்கரற்கும் வலி சாய்வுஇல் வலத்தோர்,
அங்கு அரக்கர் சதகோடி அமைந்தோர்,
பொங்கு அரத்த விழியோர் புடைசூழ, (6869)

இராவணன் வானரத்தானையைக் காண்பதற்காக அரக்கர்கள் சூழ்ந்துவர மலைமீது ஏறிச்செல்லும் பாங்கை விவரிக்கும் பாடல்களுள் இதுவும் ஒன்று.

''கொடிய கைகளையுடையவரும், கூர்மைமிக்க நுனியை உடைய வாட்படையை உடையவரும், விற்படையைக் கொண்டுள்ளோர்களும், சிவபெருமானுக்குச் சற்றும் குறைதலில்லாத வலிமை கொண்டுள்ளவர்களும் ஆகிய அரக்கர்கள் நூறுகோடிப்பேர் என்று சொல்லத்தக்க அளவில், கண்களில் இரத்தம் பொங்குமாறு அவனைச் சூழ்ந்து வந்தனர்'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. ''சங்கரன்'' என்பது சம்காரக் கடவுளாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க

262. இராவணன் வானரத்தானை காண் படலம் பக்கம்-1086/26

சாரன் கூற்று.

''நீலன் நின்றவன்; நெருப்பின் மகன்; திண்
சூலமும் கயிறும் இன்மை துணிந்தும்,
ஆலம் உண்டவன் அடுந்திறல் மிக்கான்;
காலன் என்பர் இவனைக் கருதாதார்'' (6885)

வானரத்தானையின் படைத்தலைவர்களை இராவணனுக்கு அறிமுகப்படுத்திக்கொண்டு வரும் சாரன், படைத்தளபதி நீலனைப் பற்றிக் கூறும் பாடல் இது.

''இதோ அங்கே நிற்கிறானே அவன்தான் நீலன் என்பவன்; அக்னிதேவனின் புதல்வன்; இவன் கையில் வலிமையான சூலாயுதமும், பாசக்கயிறும் இல்லை என்றாலும் இவனை எல்லோரும் அந்த ஆலகால விஷத்தைப் பருகிய சிவபெருமானைக் காட்டிலும் வலிமைமிக்கவன் என்றும், இயமன் என்றும் கூறுவார்கள்'' என்கிறான்.

இங்கே ''சூலம்'' என்பது சிவபெருமானின் சூலாயுதத்தையும், ''ஆலம் உண்டவன்'' என்பது பாற்கடலைக் கடையும்போது எழுந்த ஆலகால விஷத்தைப் பருகியவன் என்று சிவபெருமானையும் குறிக்கும் என்க.

263. இராவணன் வானரத்தானை காண் படலம் பக்கம்-1086/30

சாரன் கூற்று

''உவன்காண் குமுதன்; குமுதாக்கனும் ஊங்கு அவன் காண்;
இவன்காண் கவயன்; கவயாக்கனும் ஈங்கு இவன்காண்;
சிவன்காண் அயன்காண் எனும் தூதனைப் பெற்ற செல்வன்
அவன்காண் நெடுங்கேசரி என்பவன், ஆற்றல் மிக்கான்'' (6889)

''அதோ அங்கே நடுவில் நிற்பவன்தான் குமுதன் என்பவன். அவன் அருகில் நிற்பவன் குமுதாக்கன் ஆவான்; இங்கே நிற்பவன் பெயர் கவயன்; அவன் அருகில் நிற்பவன்தான் கவயாக்கன் என்பவன். சிவபெருமான் என்றும், பிரமதேவன் என்றும் சொல்லத்தக்க ஆற்றல்வாய்ந்த தூதுவனான அனுமனைப் பெற்றெடுத்த மிக்க நீண்ட புகழ்பெற்ற இவன்தான் கேசரி எனப்படுபவன். மிகுந்த வல்லமை படைத்தவன்'' என்று சாரன் இராவணனுக்குப் படைத்தலைவர்களை அறிமுகப்படுத்துகிறான்.

இவன் என்பது அண்மைச்சுட்டு; அவன் என்பது சேய்மைச் சுட்டு; உவன் என்பது அண்மைக்கும் சேய்மைக்கும் நடுவில் இருக்கும் இடைப்பட்ட சுட்டு எனக்கொள்க. இங்கே அனுமனின் தந்தை எனக் கேசரியைக் குறிக்கிறான் சாரன். அனுமனின் தாய் அஞ்சனை என்பது நாம் அறிந்ததே;

இங்கே ''சிவன்'' என்பது நேரே சிவபெருமானைக் குறிக்கும் என்க.

264. இராவணன் வானரத்தானை காண் படலம் பக்கம்-1087/32 சாரன் கூற்று

''மூன்று கண் இலன் ஆயினும், மூன்று எயில் எரித்தோன்
போன்று நின்றவன் பனசன்; இப்போர்க்கு எலாம் தானே
ஏன்று நின்றவன் இடபன்; மற்று இவன் தனக்கு எதிரே
தோன்றுகின்றவன் சுடேணன், மூதறிவோடு தொடர்ந்தோன்''
(6891)

''மூன்று கண்களைப் பெற்றிருக்கவில்லை என்றாலும், முப்புரங்களையும் சுட்டெரித்தவனான சிவபெருமானைப் போன்று நிற்கிறானே இவன்தான் பனசன் என்பவன்; இந்தப் போருக்கு எல்லாம் தானே என்று பொறுப்புக்களை ஏற்று நடத்துகிறவன் இவன்தான் இடபன் என்பவன்; அவனுக்கு எதிரே நிற்கிறானே அவன்தான் பேரறிவுமிக்கவனான சுடேணன் என்பவன்'' என்று மேலும் சிலரை அறிமுகப்படுத்துகிறான் சாரன்.

இங்கே ''மூன்றுகண் இலனாயினும் மூன்றுஎயில் எரித்தோன்'' என்பது முக்கண்ணனானவனும், முப்புரம் எரித்தவனுமான சிவபெருமானைக் குறிக்கும் என்க.

265. மகுடபங்கப் படலம் பக்கஎண்-1088/7 கவிக்கூற்று

''காலஇருள் சிந்து கதிரோன் மதலை, கண்ணுற்று
ஏலஎதிர் சென்று அடல் இராவணனை எய்தி,
நீலமலை முன் கயிலை நின்றதுஎன, நின்றான்;
ஆலவிடம் அன்றுவர, நின்ற சிவன் அன்னான். (6901)

''நல்ல இருண்ட நேரத்தைப் போக்க உதயம் செய்கின்ற கதிரவனின் மைந்தனான சுக்கிரீவன், இராவணன் மலைமேல் நிற்பதைக் கண்டு பொறுக்கமாட்டாமல் அவன் எதிரே சென்று, ஆற்றல்மிக்க இராவணனை மிக நெருங்கி, நீலமலை முன்னால் கயிலைமலை நிற்பதைப்போல நின்றான். அன்று பாற்கடலைக் கடையும்போது எழுந்த ஆலகால விஷத்தைக்கண்டு சற்றும் அஞ்சாது நின்ற சிவபெருமானைப்போல, இப்போது சுக்கிரீவனும் இராவணனைக் கண்டு அஞ்சாது அவன் எதிரே நின்றான்'' என்கிறான் கவிஞன்.

இங்கே கரியநிறம் கொண்ட இராவணனுக்கு நீலமலையும், வெண்மைநிறம் கொண்ட சுக்கிரீவனுக்கு வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையும் உவமை. கரிய ஆலகால விஷத்திற்குக் கரிய இராவணனையும், வெண்ணீறணிந்த வெண்மை நிறம் காணப்படும் சிவபெருமானுக்கு வெண்மைநிறமுடைய சுக்கிரீவனும் ஒப்பு.

இங்கே ''சிவன்'' என்பது நேரே சிவபெருமானைக் குறிக்கும் என்க.

266. மகுடபங்கப் படலம் பக்கஎண்-1089/14 கவிக்கூற்று.

திரித்தவன் உரத்தின் உகிர் செற்றும் வகை குத்தி,
பெருத்து உயர் தடக்கை கொடு அடுத்து இடைபிடித்து,
கருத்து அழிவுற, திரிதிறத்து எயில், கணத்து அன்று
எரித்தவனை ஒத்தவன், எடுத்து அகழி இட்டான். (6908)

சுக்கிரீவனும் இராவணனும் மற்போர் செய்தலைக் குறித்துக் கூறும் பாடல் இது.

நகர்ந்து திரியும் இயல்புடைய முப்புரங்களையும் முன்பு ஒரு நொடிப்பொழுதில் எரித்து அழித்தவனான சிவபெருமானை ஒத்த வலிமையுடையவனான சுக்கிரீவன், தன்னைச் சுழற்றி எறிந்த இராவணனின் மார்பில் தன் நகங்கள் நன்கு பதியும்படி ஓங்கிக் குத்தி, பெருத்து உயர்ந்த பெரிய கைகளினால் இராவணனுடைய இடையைப் பிடித்து, அவன் மனம் சினந்து அழியுமாறு அவனைத் தன் கைகளால் தூக்கி, அகழியின் உள்ளே போட்டுவிட்டான்.

பத்துத்தலை, இருபது திண்தோள்களைக் கொண்ட இராவணனை சுக்கிரீவன் பிடித்து அகழியில் தள்ளிவிட்டான் என்பது ஒரு அரும்பெரும் சாதனை.

இங்கே ''திரிதிறத்து எயில் கணத்து அன்று எரித்தவன்'' என்பது முப்புரங்களைச் சுட்டெரித்தவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

267. மகுடபங்கப் படலம் பக்களண்-1093/45 வீடணன் கூற்று

''பாரகம் சுமந்த பாம்பின் பணாமணி பறிக்க வேண்டின்,
வார்கழல் காலினாலே கல்ல வல்லவனை முன்னா,
தார்கெழு மௌலி பத்தின் தனிமணி வலிதின் தந்த
வீரதை, விடைவலோர்க்கும் முடியுமோ? வேறும் உண்டோ?''
(6939)

''இந்த உலகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஆதிசேஷன் என்னும் பாம்பின் பருத்த மாணிக்கக்கற்களைப் பிடுங்கி எடுக்கவேண்டுமென்றாலும், தனது நீண்ட வீரக்கழல் அணிந்த கால்களினாலேயே அதனைத் தோண்டி எடுத்துவிடும் ஆற்றல் மிக்கவனான இராவணனை நெருங்கிச் சேர்ந்து, மாலையணிந்து செழிப்புற்று விளங்கும் அவனுடைய பத்து கிரீடங்களிலும் உள்ள ஒப்பற்ற இரத்தினக் கற்களை வன்மையுடன் பறித்துக்கொண்டுவந்த உன்னுடைய வீரச்செயல், அந்த ரிஷபத்தை வாகனமாகக் கொண்டு ஊர்ந்து வருகிற சிவபெருமானாலாவது ஆகக்கூடிய செயலா? இல்லை. வேறு எவராலும் ஆகக்கூடிய செயலன்று'' என்று வீடணன் சுக்கிரீவனது வீரச்செயலைப் புகழ்ந்து பாராட்டுகிறான்.

இங்கே ''விடைவலோன்'' என்பது காளையை வாகனமாகக் கொண்டுள்ளவன் என்று சிவபெருமானைக் குறிக்கும்.

268. மகுடபங்கப் படலம் பக்களண்-1094/46 வீடணன் கூற்று.

''கருமணி கண்டத்தான்தன் சென்னியில் கறைவெண் திங்கள்
பருமணி வண்ணன் மார்பின் செம்மணி பறித்திட்டாலும்,
தருமணி இமைக்கும் தோளாய்! தசமுகன் முடியில் தைத்த
திருமணி பறித்துத் தந்த வென்றியே சீரிது அன்றோ?'' (6940)

''அழகிய இரத்தினங்களைப் பறித்துவந்த ஒளிவீசும் தோள்களையுடையவனே! சுக்கிரீவ! கருத்த கழுத்தினையுடைய சிவபெருமானின் தலையில் சூடியிருக்கும் களங்கம் பொருந்திய வெள்ளிய பிறைச்சந்திரனைப் பறித்துவிடுவதைக் காட்டிலும், திருமாலின் பருத்த சிறந்த கௌத்துவமணியைப் பறித்து வருவதைக்காட்டிலும், நீ இப்பொழுது பறித்து வந்திருக்கிறாயே பத்துமுகங்களையுடைய இராவணனின் முடியில் பதிந்திருந்த அழகிய இரத்தினங்கள், இந்த வெற்றிதான் மற்றெல்லா வெற்றிகளைக்காட்டிலும் சிறந்தது ஆகும். இந்த வீரச்செயல்தான் மற்றெல்லா வீரச்செயல்களைக்காட்டிலும் சிறந்ததாகும்'' என்று பாராட்டுகிறான் வீடணன்.

இங்கே ''கருமணி கண்டத்தான்'' என்பது நீலகண்டன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

269. மகுடபங்கப் படலம் பக்களண்-1094/47 வீடணன் கூற்று.

''தொடிமணி இமைக்கும் தோளாய்! சொல் இனி வேறும் உண்டோ?
வடிமணி வயிர ஒள்வாள் சிவன்வயின் வாங்கிக் கொண்டான்
முடிமணி பறித்திட்டாயோ? இவன் இனி முடிக்கும் வென்றிக்கு
அடிமணி இட்டாய் அன்றே? அரிக்குலத்து அரச!'' என்றான்.
(6941)

''ஒளிவீசுகின்ற மாணிக்கங்களாலான வளையல்களை அணிந்த தோள்களை உடையவனே! குரக்கினத்திற்கெல்லாம் அரசனே! சுக்கிரீவ! ஆராய்ந்து கூர்மையாக வடிக்கப்பெற்ற இரத்தினங்களாலும், ஒளிவீசுகின்ற வயிரக்கற்களாலும் ஆன உறுதிபடைத்த சந்திரகாசம் என்னும் வாட்படையை, இந்த இராவணன் சிவபெருமானிடமிருந்து பெற்றுக்கொண்டான். அத்தகைய பெருமைபொருந்திய இராவணனுடைய முடியில் பதித்திருந்த இரத்தினக் கற்களைப் பறித்துக்கொண்டு வந்து நிற்கிறாயே! இது இங்கே நிற்கின்ற இராமபிரான் இராவணனை அழித்தொழிக்கும் வெற்றிக்கு அடிநிலை போட்டதுபோலாகும் அல்லவா? இதைவிட உனக்கு வேறு என்ன புகழும் பாராட்டும் கிடைத்துவிடப் போகிறது?'' என்று வீடணன் சுக்கிரீவனது வீரச்செயலைப் பாராட்டுகிறான்.

இங்கே ''சிவன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''வடிமணி வயிரஒள்வாள்'' என்பது சந்திரகாசம் என்னும் வாட்படையைக் குறிக்கும்.

270. அங்கதன் தூதுப்படலம் பக்களண்-1102/22 இராவணன் கூற்று

''அரன்கொலாம்? அரிகொலாம்? மற்று அயன்கொலாம்? என்பார் அன்றி,
குரங்கெலாம் கூட்டி, வேலைக் குட்டத்தைச் சேது கட்டி,
''இரங்குவான் ஆகில் இன்னம் அறிதி!'' என்று உன்னை ஏவும்
நரன்கொலாம் உலகநாதன்'' என்று கொண்டு அரக்கன் நக்கான்.
(6995)

இராமபிரானின் தூதுவனாக இலங்கை வந்துசேர்ந்த அங்கதனுடன் இராவணன் நிகழ்த்தும் உரையாடல்களில் ஒரு பாடல் இது.

இராவணன் அங்கதனை நோக்கி, ஏளனமாகச் சிரித்து, ''நீ சொல்லுகின்ற அவன் என்ன பெரிய சிவபெருமானா? திருமாலா? பிரமதேவனா? அவர்கள் வீரம்மிக்க தேவர்கள்; தேவர்களுக்கெல்லாம் தலைவர்கள். அவர்களை விட்டுவிட்டு, குரங்குக்கூட்டங்களையெல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டு கடல் என்று ஒரு சிறு குட்டையின்மேல் அணையைக்கட்டி, ''இப்போதாவது இராவணன் இரக்கம் கொள்ளுகின்றானா? இல்லையா? என்று அறிந்துகொண்டு வருவாயாக!'' என்று கூறி உன்னை இங்கு

அனுப்பிவைத்திருக்கும் அந்த அற்பமான மனிதனையா நீ இந்த உலகங்களுக்கெல்லாம் தலைவன் என்கிறாய்?'' என்று ஏளனமாகச் சிரித்தான் இராவணன்.

இங்கே ''அரன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

271. அங்கதன் தூதுப்படலம் பக்கஎண்-1102/23
இராவணன் கூற்று

''கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல், கரத்து நேமி
சங்கமும் தரித்த மால், மற்று இந்நகர்தன்னைச் சாரார்;
அங்கு அவர் தன்மை நிற்க; மனிசனுக்காக, அஞ்சாது
இங்கு வந்து இதனைச் சொன்ன தூதன் நீ யாவன்?'' என்றான்.
(6996)

''ஆகாய கங்கையையும், பிறைச்சந்திரனையும் தன் சடைமுடியில் தரித்திருக்கும் நெற்றிக் கண்ணையுடையவனான சிவபெருமான், தன் கைகளில் சுதர்சனம் என்னும் சக்கரப்படையையும், பஞ்சசான்னியம் என்னும் சங்கினையும் கொண்டுள்ள திருமால், ஆகிய இவர்களே என்னுடைய நகரமாகிய இலங்கைக்குள் வருவதற்கு அஞ்சி, வரவேமாட்டார்கள். அவர்கள் எல்லாம் ஒருபுறம் இருக்க; நீ ஒரு அற்பமான மனிதனுக்காக, சிறிதும் அச்சம்கொள்ளாது, இலங்கைநகருக்குள் வந்து, என் எதிரே நின்று தூதுரைக்க வந்தவன் என்கிறாயே? நீ யார்? கூறுவாயாக!'' என்று அங்கதனைக் கேட்கிறான் இராவணன்.

இங்கே **''கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல்''** என்பது ஆகாயகங்கையையும் பிறைச்சந்திரனையும் தன் சென்னியில் சூடியிருக்கின்ற முக்கண்ணன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

272. முதற்போர்புரி படலம் பக்கஎண்-1122/118 கவிக்கூற்று

ஊழியின் உருத்திரன் உருவுகொண்டு, தான்
ஏழ் உயர் உலகமும் எரிக்கின்றான் என,
வாழிய வரிசிலைத் தம்பி, மாப்படைக்
கூழையின் நெற்றி நின்றானைக் கூடினான். (7134)

முதல்நாள் போர்க்களத்திற்கு வந்த இராமபிரான் பற்றிக் கூறுவது இப்பாடல்.

ஊழியிறுதிக்காலத்தில் உயர்ந்த இந்த ஏழு உலகையும் அழிக்கும்பொருட்டு சம்ஹாரமூர்த்தியாக உருக்கொள்ளும் சிவபெருமான்போல, உலகை வாழ்விப்பதற்காகத் தன் கையில் கட்டமைந்த வில்லைக்கொண்டு பெரிய

பின்னணிப்படையில் முன்னணியில் நிற்கும் தன் தம்பி இலக்குவனைச் சென்றடைந்தான் இராமபிரான்.

இங்கே ''ஊழியின் உருத்திரன்'' என்பது ஊழியிறுதிக்காலத்தில் உலகை அழிக்கும்பொருட்டு சங்காரமூர்த்தியாகத் தோற்றமளிப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

273. முதற்போர்புரி படலம் பக்கஎண்-1135/209 கவிக்கூற்று

உள்ளி, வெம்பிணத்து உதிரநீர் வெள்ளத்தின் ஓடி,
அள்ளி அம்கைகள் இருபதும் பற்றி, பண்டு அரன் மா
வெள்ளி அம்கிரி எடுத்தது வெள்கினான் என்ன,
எள்இல் பொன்மலை எடுக்கலுற்றான் என, எடுத்தான். (7225)

இராவணனின் வேற்படையால் தாக்குண்டு அயர்ந்து வீழ்ந்த இலக்குவன் பற்றிக் கூறுவது இப்பாடல்.

அயர்ந்து வீழ்ந்த இலக்குவனைத் தூக்கிச் செல்லலாம் என்று நினைத்து, கொடிய பிணங்களின் இரத்தவெள்ளத்தின் நடுவே ஓடிச்சென்று, தனது இருபது அழகிய கைகளினாலும் அவனை வாரிஎடுத்து, முன்பு சிவபெருமான் வசிக்கும் சிறந்த வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையைப் பெயர்த்தெடுத்ததை இப்போது நினைந்து, அதற்காக வெட்கப்பட்டவன்போல, குற்றமற்ற பொன்மலையைப் பெயர்த்தெடுப்பதைப்போல இலக்குவனைத் தூக்கமுற்பட்டான் இராவணன்.

சிவபெருமான் இருக்கும் மலை வெள்ளியங்கிரி வெண்மையான வெள்ளிமலை. ஆனால் இப்போது வீழ்ந்து கிடப்பவன் பொன்மயமான நிறம்படைத்த இலக்குவன். எனவே இந்தப் பொன்மலையை முன்பே தூக்காது அந்த அற்பமான வெள்ளிமலையைப்போய்த் தூக்கினோமே என்பதை நினைத்து வெட்கப்பட்டான் என்று கூறும் கவிஞனின் மேதாவிலாசத்தை உணர்க.

இங்கே ''அரன்மா வெள்ளி அம்கிரி'' என்பது சிவபெருமான் உறையும் சிறந்த வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையைக் குறிக்கும் என்க.

274. முதற்போர்புரி படலம் பக்கஎண்-1135/210 கவிக்கூற்று

அடுத்த நல்உணர்வு ஒழிந்திலன், அம்பரம் செம்பொன்
உடுத்த நாயகன் தான் என, உணர்தலின்; ஒருங்கே
தொடுத்த எண்வகை மூர்த்தியைத் துளக்கி, வெண் பொருப்பை
எடுத்த தோள்களுக்கு எழுந்திலன், இராமனுக்கு இளையான்.
(7226)

இராமபிரானுக்கு இளையவனான இலக்குவன், இராவணன் செலுத்திய வேற்படையினால் அயர்ந்து வீழ்ந்தானே அன்றி அவனது நல்ல உணர்வுகள் அழியப்பெற்றான் அல்லன். காரணம் அவன் செம்பொன்னாலான பட்டுப்பீதாம்பரம் அணிந்துள்ள திருமாலாகவே தன்னைக் கருதிக்கொண்டான் என்பதாம். எனவே எட்டுவகைக் குணங்களைக் கொண்ட மூர்த்தி வடிவினனான சிவபெருமான் அமர்ந்திருந்த வெள்ளிய கயிலாயமலையையே அசைத்துப் பெயர்த்தெடுத்த இராவணனின் இருபது கைகளினாலும்கூட இலக்குவனை எடுக்கமுடியவில்லை'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''எண்வகை மூர்த்தி'' என்பது சிவபெருமானைக் குறிக்கும். ''கோளில் பொறியின்குணம் இலவே எண் குணத்தான் தாளை வணங்காத் தலை'' என்பது குறள்-8 இங்கே எண்குணத்தான் என்பது பொதுவாக இறைவனைக் குறிக்கும். சைவசித்தாந்தக் கொள்கைப்படி எட்டு குணங்களை உடையவனும் எட்டு உருவங்களை உடையவனும் சிவபெருமான் என்பது ஒரு துணிபு. எனவேதான் சிவபெருமான் அஷ்டமூர்த்தி என வழங்கப்பெறுகிறான். அவனுடைய எட்டு வடிவங்களாவன நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களும், சூரிய, சந்திரர் என்னும் இருசுடர்களும், இயமானன் என்னும் யாககர்த்தா என்றும் புராணங்கள் பேசுகின்றன. ''இருநிலனாய் தீயாகி, நீருமாகி, இயமானனாகி, எரியும், காற்றுமாகி, அருநிலையத் திங்களாய், ஞாயிறாகி, ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி'' என்பது அப்பர்தேவாரம். ''இருசுடரோடு, இயமான், ஐம்பூதம் என்று எட்டுவகையும் உயிரும் யாக்கையுமாய்க் காட்டி நிற்போரும்'' என்பது மணிமேகலை.

எனவே இங்கே ''எண்வகை மூர்த்தி'' என்பது சிவபெருமானையும், ''வெண்பொருப்பு'' என்பது வெள்ளியங்கிரியாகிய கயிலாயமலையையும் குறிக்கும் என்க.

275. முதற்போர்புரி படலம் பக்கஎண்-1137 / 223 கவிக்கூற்று

ஆசி சொல்லினர் அருந்தவர்; அறம்எனும் தெய்வம்
காசுஇல் நல்நெடுங்கரம் எடுத்து ஆடிட, கயிலை
ஈசன், நான்முகன் என்று இவர் முதலிய இமையோர்
பூசல் காணிய வந்தனர், அந்தரம் புகுந்தார். (7239)

அனுமன் இலக்குவன் உடலை மந்திதன் மகவுகொண்டு போய் மரம்புகுவதைப்போல எளிதாய் எடுத்துச் செல்வதைக்கண்ட அரிய தவத்தினைச் செய்த தவசிகள் நல்லாசி வழங்கினர்; தருமம் என்னும் தெய்வமே குற்றமற்ற தன் நல்ல நீண்ட கைகளைத் தூக்கிக் கூத்தாடியது; கயிலைமலையில் வாழும் சிவபெருமான், நான்கு முகங்களைக்கொண்ட

பிரமதேவன் இவர்களை முதலாகக் கொண்ட இமையாநாட்டமுடைய தேவர்கள் எல்லோரும் வானவெளியில் வந்து இவர்கள் நடத்தும் போரினைக் காணும்பொருட்டு ஒருங்கே கூடினார்கள்.

இங்கே ''கயிலை ஈசன்'' என்பது கயிலைமலையில் வாழ்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும்.

276. முதற்போர்புரி படலம் பக்களண்-1137/224 கவிக்கூற்று

அண்ணல் அஞ்சனவண்ணனும் அமர் குறித்து அமைந்தான்;
எண்ண அரும் பெரும்தனி வலிச்சிலையை நாண் எறிந்தான்;
மண்ணும், வானமும், மற்றைய பிறவும், தன்வாய்ப் பெய்து,
உண்ணும் காலத்து, அவ்உருத்திரன் ஆர்ப்பு ஒத்தது ஓதை.
(7240)

பெருமையிற் சிறந்தவனும், மைபோன்ற கரிய நிறமுடையவனுமான இராமபிரான் போர்செய்ய முற்படலானான்; எண்ணுதற்கரியதானதுவும், ஒப்பற்றதானதுவும், வலியபெரிய தனது கோதண்டம் என்னும் வில்லின் நாணைத் தெறித்து த்வனி எழுப்பினான். இம்மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும், மற்ற எல்லா உயிரினங்களையும் தன் வாயில் போட்டு ஒடுக்கிக்கொள்ளுகின்ற ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் சங்காரமூர்த்தியான சிவபெருமான் எழுப்புகின்ற பேராரவாரத்தின் ஒலியைக் காட்டிலும் மிக்க பேரொலியைப் போன்று இருந்தது அந்த நாண்ஒலி.

இங்கு ''உருத்திரன்'' என்பது மண்ணும் வானமும் மற்றைய பிறவும் தன்வாய்ப்பெய்து உண்ணும் இயல்புடையவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

277. முதற்போர்புரி படலம் பக்களண்-1137/225 கவிக்கூற்று

ஆவிசென்றிலர்; நின்றிலர்; அரக்கரோடு இயக்கர்;
நா உலர்ந்தனர்; கலங்கினர் விலங்கினர்; நடுங்கி;
கோவை நின்ற பேர் அண்டமும் குலைந்தன; குலையாத்
தேவதேவனும், விரிஞ்சனும், சிரதலம் குலைந்தார். (7241)

அந்நாண் ஒலியைக் கேட்ட அரக்கர்களும் இயக்கர்களும் உயிர்மட்டும் போகாதவராய், ஒருநிலையில் இல்லாமல், நாக்குகள் உலரப்பெற்றனர்; கலக்கமுற்று, நடுங்கி, ஒருபுறமாக ஒதுங்கி நிற்கலாயினர்; வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டுள்ள பெரிய உலகங்கள் எல்லாமும் தம்நிலை குலைந்தன; எப்போதும் அசைதல் இல்லாத நிலைபேறுடைய சிவபெருமானும், பிரமதேவனும்கூடத் தம் தலை ஆட்டம் கொண்டு நிலைதடுமாறினர்.

இங்கே ''தேவதேவன்'' என்பது தேவர்களுக்கெல்லாம் இறைவனானவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

278. கும்பகருணன் வதைப்படலம் பக்களண்-1142/1 கவிக்கூற்று

வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்,
நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்,
தார் அணி மௌலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும்,
வீரமும் களத்தே போட்டு, வெறுங்கையே மீண்டு போனான்.
(7272)

இராவணன் இராமபிரானோடு முதல்நாள் போர்புரிந்து தோற்றுநின்ற நிலையை எடுத்துக்கூறும் புகழ்பெற்ற பாடல் இது.

இராவணன் தனது திக்குயானைகளோடு போர்செய்த மார்பையும், சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையைப் பெயர்த்தெடுத்த தோள்களையும், இசைவல்லனாகிய நாரதமுனிவனே ஏற்றுக்கொள்ளும் வண்ணம் மிக்க நயமான சாமகானம்பாடிய நாக்கையும், மாலைகள் அணியப்பெற்ற தனது பத்து மகுடங்களையும், சிவபெருமானால் மனமுவந்து அளிக்கப்பட்ட சந்திரகாசம் என்னும் வாட்படையையும், தனது வீரப்பண்பினையும், போர்க்களத்திலே விட்டுவிட்டு, வெறுங்கையோடு இலங்கைக்குத் திரும்பிப்போனான் என்கிறான் கவிஞன்.

இங்கே மார்பு, தோள், நா, மௌலி, வாள், வீரம் முதலிய எல்லாவற்றின் ஆற்றலும் சற்றும் பயன்படாதவகையில், களத்திலே விட்டுவிட்டு மீண்டு வந்தான் என்று பொருள்கொள்ள வேண்டும்.

இங்கே ''சங்கரன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும் மற்றொரு பெயர் என்க.

279. கும்பகருணன் வதைப்படலம் பக்களண்-1144/16 இராவணன் கூற்று

''முளைஅமை திங்கள் சூடும் முக்கணான் முதல்வர்ஆக,
கிளைஅமை புவனம் மூன்றும் வந்து உடன் கிடைத்தவேனும்,
வளைஅமை வரிவில் வாளி மெய்உற வழங்கும் ஆயின்,
இளையவன் தனக்கும் ஆற்றாது என்பெரும் சேனை, நம்ப!''
(7287)

முதல்நாள் போரில் தோற்றுத் திரும்பிவந்த இராவணன் உற்ற தளர்ச்சியைக் கண்டு அவனுடைய பாட்டனான மாலியவான் ''போர்க்களத்தில் என்ன நிகழ்ந்தது?'' என்று கேட்டபோது இராவணன் கூறும் விடையாக அமைந்தது இந்தப்பாடல்.

''முளைக்கின்ற இயல்புடையதான இளம் பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் தரித்திருப்பவனும், மூன்று கண்களையுடையவனுமான சிவபெருமான் முதலாக, அவனுடன் சேர்ந்து அமைந்த இம்மூவுலகத்தவரும் ஒருசேர வந்து பக்கத்துணையாய் நின்று போர்செய்தாலும், என்னுடைய பெரிய சேனையானது, இராமபிரானது இளவலான இலக்குவன், தனது வளைந்த கட்டமைந்த வில்லை உடம்புடன் பொருத்திச் செலுத்துவானானால் அதற்கு நேர் எதிர் நிற்கமுடியாது பின்வாங்கித் தோற்றுவிடும்'' என்று இராவணன் இலக்குவனது வில்லாற்றலைப் பாராட்டியும், தனது பெருஞ்சேனையின் ஆற்றலின்மையையும் கூறுகிறான்.

இங்கே ''முளைஅமை திங்கள்'' என்பது சிவபெருமான் தனது சடைமுடியில் அணிந்திருக்கும் பிறைச்சந்திரனையும், ''முக்கணான்'' என்பது மூன்று கண்களையுடையவன் என்று சிவபெருமானையும் குறிக்கும் என்க.

280. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1145/23

இராவணன் கூற்று

''இந்திரன் குலிசவேலும், ஈசன்கை இலை மூன்று என்னும்
மந்திர அயிலும், மாயோன்வளை எஃகின் வரவும் கண்டேன்,
அந்தரம் நீளிது அம்மா! தாபதன் அம்புக்கு ஆற்றா
நொந்தனென் யான்அலாதார் யார் அவை நோற்ககிற்பார்?''
(7294)

இந்திரனுடைய வச்சிராயுதம், சிவபெருமானின் கையில் இருக்கும் இலைவடிவான மூன்று கவடுகளையுடைய மந்திரசக்தி வாய்ந்த வேற்படையாகிய முத்தலைச்சூலம், திருமாலின் வளைந்த வட்டவடிவமான சக்கரப்படை, ஆகியவற்றையெல்லாம் எதிர்த்து நின்று போரிட்டிருக்கிறேன். ஆனால் இவை அனைத்திற்கும், இப்போது தவவேடம் பூண்டிருக்கும் இந்த இராமன் செலுத்தும் விற்படைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. இவன் செலுத்துகின்ற அம்புகளை என்னாலேயே தாங்கமுடியாது நான் நொந்துபோனேன் என்றால் என்னைத்தவிர, வேறுயார் இவனுடைய அம்பினை எதிர்த்து நிற்கமுடியும்?'' என்று இராமபிரானது வில்லாற்றலையும் புகழ்ந்து பேசுகிறான் இராவணன்.

''அம்மா'' என்பது வியப்புக்குறித்த இடைச்சொல். இங்கே ''ஈசன்'' என்பது சிவபெருமானையும், ''கைஇலை மூன்று என்னும் மந்திர அயில்'' என்பது அவன் கைக்கொண்டிருக்கும் முத்தலைச்சூலத்தையும் குறிக்கும் என்க.

281. கும்பகருணன் வதைப்படலம் பக்களண்-1145/24
இராவணன் கூற்று

''பேய் இருங்கணங்களோடு சுடுகளத்து உறையும் பெற்றி
ஏயவன் தோள்கள் எட்டும், இந்திரன் இரண்டு தோளும்,
மாஇரு ஞாலம் முற்றும் வயிற்றிடை வைத்த மாயன்
ஆயிரம் தோளும், அன்னான்விரல் ஒன்றின் ஆற்றல் ஆற்றா!''
(7295)

''பெரிய பேய்களின் கூட்டத்தோடு சுடுகாட்டில் வசிப்பவனாகிய பெருமைபொருந்திய சிவபெருமானின் எட்டுத் தோள்களும், இந்திரனின் இரண்டு தோள்களும், பெரிய சிறந்த இந்த உலகங்கள் எல்லாவற்றையும் தன் வயிற்றினுள்ளே அடக்கிக்கொண்டிருக்கும் திருமாலின் ஆயிரம் தோள்களும், இந்த இராமபிரானுடைய ஒருவிரலின் வலிமைக்கு ஈடாகமாட்டா'' என்று இராவணன் இராமபிரானின் வில்லாற்றலை மீண்டும் பாராட்டுகிறான்.

இங்கே ''பேய் இருங்கணங்களோடு, சுடுகளத்து உறையும் பெற்றி ஏயவன்'' என்பது பேய்க்கூட்டங்களோடு சுடுகாட்டில் வாழ்பவன் என்றும், எட்டுத்தோள்களை உடையவன் என்றும் சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''எண் தோள்வீசி நின்றாடும்பிரான்'' என்பது தேவாரம். இங்கே ஒன்று நோக்கவேண்டும். ஊழியிறுதிக்காலத்தில் இவ்வுலகத்து உயிரினங்கள் அழிந்துபோகா வண்ணம் அவற்றைத் தன் வயிற்றினிடத்தில் ஒடுக்கிக்காக்கும் ஆற்றல் திருமால், சிவபெருமான் ஆகிய இருவருக்கும் உண்டு என்று கவிஞன் கூறிப்போவதை நினைவிற்கொள்ள வேண்டும்.

282. கும்பகருணன் வதைப்படலம் பக்களண்-1145/26
இராவணன் கூற்று.

''முப்புரம் ஒருங்கச் சுட்ட மூரி வெஞ்சிலையும், வீரன்
அற்புத வில்லுக்கு, ஐய! அம்பு எனக் கொளலும் ஆகா;
ஒப்பு வேறு உரைக்கல் ஆவது ஒருபொருள் இல்லை; வேதம்
தப்பினபோதும், அன்னான் தனுஉமிழ் சரங்கள் தப்பா!''
(7297)

''முப்புரங்களை முற்றமுழுவதும் சுட்டெரித்த வலிமைவாய்ந்த கொடிய வில்லையோ, வேறு எந்த அம்பையோ வீரனாகிய இராமபிரானின் அற்புதமான வில்லுக்கு உவமையாகக் கொள்ளமுடியாது. அவனுடைய வில்லுக்கு ஒப்பானதாக வேறு எந்தப் பொருளும் இவ்வுலகில் இல்லை. என்றும் பொய்க்காத வேதங்கள் பொய்த்தாலும் பொய்க்கும்; ஆனால் இவனுடைய வில்லினின்றும் புறப்படுகின்ற அம்புகள் தம் இலக்கைத் தப்பாது குறிக்கொண்டு அழிக்கும் வன்மை உடையன'' என்று மேலும்

இராமபிரானின் வில்லாற்றலை இராவணன் மாலியவானிடம் பாராட்டிப்பேசுகிறான்.

இங்கே ''முப்புரம் ஒருங்கச் சுட்டமூரி வெஞ்சிலை'' என்பது முப்புரங்களை முற்றமுழுக்கச் சுட்டெரித்த சிவபெருமானின் கொடிய வலிமைமிக்க வில் என்று மேருமலையைக் குறிக்கும் என்க. இங்கே ஒரு பாடவேறுபாடு கிடைக்கிறது. முதலடியில் ''ஒருங்க'' என்பது மற்ற சுவடிகளில் ''முருங்க'' எனக் காணப்படுகிறது. ''முருங்க'' என்ற சொல்லுக்கும் முற்றமுழுவதும் என்பதே பொருள்.

283. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1145/27
இராவணன் கூற்று

''உற்பத்தி அயனே ஒக்கும்; ஓடும்போது அரியே ஒக்கும்;
கற்பத்தின் அரனே ஒக்கும் பகைஞரைக் கலந்த காலை;
சிற்பத்தின் நம்மால் பேசச் சிறியவோ? என்னைத் தீராத்
தற்பத்தைத் துடைத்த என்றால், பிறிது ஒரு சான்றும் உண்டோ?''
(7298)

''இராமபிரானுடைய வில்லினின்றும் வெளிப்பட்டுத் தோன்றும் அம்புகள், முதலில் நான்கு முகங்களையுடைய பிரமதேவனை ஒத்திருக்கும்; அது பகைவர்களை நோக்கி விரைந்து ஓடும்போது ஆயிரம் முகங்களையுடைய திருமாலைப் போன்றிருக்கும்; அது பகைவர்களைச் சென்று சேரும்பொழுது யுகமுடிவுக்காலத்தில் ஓங்கி விரிந்து நிற்கும் சங்காரக் கடவுளான சிவபெருமானை ஒத்திருக்கும்; அவற்றின் செயல்திறன் எல்லாம் நம்மால் பேசக்கூடிய அளவுக்குக் குறைந்த ஆற்றல் உடையனவோ? மிக்க ஆணவம் கொண்ட என்னுடைய செருக்கையே அவை நீக்கிவிட்டன என்றால், அவற்றின் வலிமைக்கு வேறு ஒரு சாட்சியும் வேண்டுமோ?'' என்று கேட்கிறான் இராவணன்.

இங்கே ''கற்பத்தின்அரன்'' என்பதுஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் உருத்திரன் வடிவுகொண்ட சிவபெருமானைக் குறிக்கும் என்க.

284. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1146/31
இராவணன் கூற்று

''வாசவன், மாயன், மற்றை மலருளோன், மழுவாள் அங்கை
ஈசன், என்று இனையதன்மை இளிவரும் இவரால் அன்றி,
நாசம் வந்துற்றபோதும், நல்லதோர் பகையைப் பெற்றேன்;
பூசல் வண்டு உறையும் தாராய்! இது இங்கு புகுந்தது'' என்றான்.
(7302)

''ரீங்காரம் செய்கின்ற வண்டுகள் உறைகின்ற மாலையை அணிந்தவனே! எனக்கு அழிவு வந்தடைந்தபோது, இந்திரன், திருமால், மற்றும் தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவன், மழுப்படையைத் தன் அழகிய கைகளில் ஏந்தியிருக்கும் சிவபெருமான் என்று என்னிடம் தோற்றோடிய, எனக்குக் கீழோராகக் கருதப்படுகிற இவர்களைப்போல் அல்லாமல், சிறந்த நல்லதோர் பகைவனாக இராமனைப் பெற்றேனே என்று நான் மகிழ்கிறேன். இதுதான் இங்கு நிகழ்ந்தது'' என்றுகூறி முடிக்கிறான் இராவணன்.

இந்திரன், திருமால், சிவபெருமான் ஆகியோரெல்லாம் இராவணனிடம் தோற்றுப்போனவர்கள். எனவே அவர்களைத் தன்னைவிடத் தாழ்ந்தவர்கள் என்பதைத்தான் ''இளிவரல் இவர்'' என்றார் என்க. ''நல்லதோர் பகை'' என்பது இராவணன் இராமபிரானின் ஆற்றலையும், அவனது தெய்வீகத்தன்மையையும் உணர்ந்ததோடு மட்டுமல்லாமல் தனக்கு ''நாசம் வந்துற்றது'' என்பதையும் உணரத் தொடங்குகிறான் என்பது இங்கு குறிக்கொள்ளத்தக்கது.

இங்கே ''மழுவாள் அம்கை ஈசன்'' என்பது மழுவாயுதத்தைத் தன் அழகிய கைகளில் ஏந்தியவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

285. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1147/36

மகோதரன் கூற்று

''திரிபுரம் எரிய, ஆங்கு ஓர் தனிச்சரம் துரந்த செல்வன்,
ஒருவன் இப்புவனம் மூன்றும் ஓர்அடி ஒடுக்கிக் கொண்டோன்,
பொருது, உனக்கு உடைந்து போனார்; மானிடர் பொருத போர்க்கு
வெருவுதி போலும்; மன்ன! கயிலையை வெருவல் கண்டாய்!''
(7307)

மாலியவானுக்குப் பின் மகோதரன் கூறுகின்ற உறுதிமொழிகளுள் இதுவும் ஒன்று.

''முப்புரங்களையும் சுட்டெரிப்பதற்காக அப்போது ஒரு ஒப்பற்ற அம்பினைச் செலுத்திய செல்வனான சிவபெருமான், இம்மூவுலகங்களையும் தன் ஓர்அடியில் ஒடுக்கி அளந்துகொண்ட ஒப்பற்ற ஒருவனான திருமால், ஆகிய இவர்களுடனெல்லாம் போர்செய்தாய், அவர்கள் எல்லாம் உனக்கு அடங்கித் தோற்றுப்போனார்கள்; இப்பொழுது இந்த அற்பமான மானிடர்களுடன் செய்த போரைக்கண்டு அஞ்சுகிறாயோ? நீ அந்தக் கயிலைமலையையே அச்சம்கொள்ளச் செய்தவனாயிற்றே! ஏன் மானிடர்களைக் கண்டு அஞ்சுகிறாய்!'' என்று உறாதபேர் உறுதி சொல்லும் இயல்பினனான அவனது அமைச்சன் மகோதரன் பேசுகிறான்.

இங்கே ''திரிபுரம் எரிய ஆங்கோர் தனிச்சரம் துரந்த செல்வன்'' என்பது முப்புரங்களைச் சுட்டு எரிப்பதற்காக ஒப்பற்ற வில்லைச் செலுத்தியவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''கயிலை'' என்பது சிவபெருமானின் உறைவிடம் என்பதும் அறிக.

286. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1150/57
கவிக்கூற்று.

''மூவகை உலகும் உட்க, முரண்திசைப் பணைக்கை யானை
தாவரும் திசையின் நின்று சலித்திட, கதிரும் உட்க,
பூவுளான், புணரி மேலான், பொருப்பினான் முதல்வராய
யாவரும் துணுக்குற்று ஏங்க, எளிதினின் எழுந்தான் வீரன்.''
(7328)

கும்பகருணன் நீள்துயிலினின்று எழுந்த காட்சி.

''மேல், நடு, கீழ் என்னும் மூன்று உலகங்களும் அஞ்சவும், வலிய பருத்த துதிக்கைகளையுடைய எட்டுத்திக்கு யானைகளும் தத்தம் இடங்களினின்றும் நிலைபெயர்ந்திடவும், சூரியன்கூட அச்சம்கொள்ளவும், தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவன், பாற்கடலின்மேல் பள்ளிகொண்டிருக்கும் திருமால், கயிலைமலையில் வீற்றிருக்கும் சிவபெருமான் முதலிய எல்லோரும் திகைப்புற்று ஏங்குமாறு, வீரனாகிய கும்பகருணன் இப்போது மிக எளிதாக நீள்துயிலினின்றும் எழுந்தான்.

கும்பகருணன் மிகப்பருத்த உடம்பை உடையவனாய் இருந்தாலும் அதற்கு ஏற்ற ஆற்றல் பெற்றிருந்ததனால் சிரமமின்றி எளிதில் எழுந்தான் என்பதாம்.

இங்கே ''பொருப்பினான்'' என்பது கயிலைமலையில் வீற்றிருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

287. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1152/76
கவிக்கூற்று

விடம் எழுந்ததுபோல் நெடு விண்ணினைத்
தொட உயர்ந்தவன் மார்பிடைச் சுற்றினான்,
இடபம் உந்தும் எழில் இரு நான்குதோள்
கடவுள் ஈந்த கவசமும் கட்டினான். (7347)

தூங்கி எழுந்துவந்த கும்பகருணனுக்கு இராவணன் போர்க்கோலம் செய்வித்தலைப் பேசுகிற பாடல்களுள் இதுவும் ஒன்று.

ரிஷபத்தை வாகனமாகக் கொண்டு ஊர்ந்துசெல்லும் அழகிய எட்டுத்தோள்களையுடைய கடவுளான சிவபெருமான் அவனுக்குத் தந்தருளிய

கவசத்தை, இராவணன் நஞ்சு பரவி எழுந்ததுபோல் நீண்ட ஆகாயத்தைத் தொடுமளவு உயர்ந்து நின்ற கும்பகருணனின் மார்பைச் சுற்றிவந்து, கட்டிவிட்டான்.

கும்பகருணன் உடலில் நேருக்குநேர் நின்று இராவணனால் அந்தக் கவசத்தைக் கட்டிவிட முடியவில்லை. அத்தகைய பேருருவம் கொண்டவன் கும்பகருணன். கும்பகருணன் சாதாரணமாக அமர்ந்திருப்பதும் இராவணன் ஓங்கி உயர்ந்து நின்றிருப்பதும் ஒன்றுபோலவே இருக்குமாம். அதனை ''இருந்த போதும் இராவணன் நின்றெனத் தெரிந்த மேனியன்'' என்பான் கம்பன். எனவே அவனைச் சுற்றிவந்துதான் அந்தக் கவசத்தை அவனுக்குக் கட்டிவிட முடிந்தது என்பது கருத்து.

இங்கே ''இடபம் உந்தும் எழில் இருநான்கு தோள் கடவுள்'' என்பது ரிஷபத்தை வாகனமாகச் செலுத்திடும் எட்டுத்தோள்களையுடையவன் என்று சிவபெருமானைக் குறிக்கும்.

288. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1158/115
வீடணன் கூற்று

''தவன் நுணங்கியரும் வேதத்தலைவரும் உணரும் தன்மைச்
சிவன் உணர்ந்து, அலரின்மேலைத் திசைமுகன் உணரும் தேவன்
அவன் உணர்ந்து எழுந்த காலத்து, அசுரர்கள் படுவதெல்லாம்
இவன் உணர்ந்து எழுந்த காலத்து, இமையவர்படுவர் எந்தாய்!''
(7386)

வீடணன் இராமபிரானுக்குக் கும்பகருணன் ஆற்றல்பற்றிக் கூறத்தொடங்கும் பாடல் இது.

''என் தந்தைபோன்றவனே! மிகுந்த நுட்பமான தவஆற்றல் பொருந்திய தவசிகள்; வேதத்தில் துறைபோகிய வேதவிற்பன்னர்களால் மட்டுமே தனது உண்மைத்தன்மையை அறிந்துகொள்ளும் தன்மைபடைத்தவனான சிவபெருமான், தாமரைமலரில் வாழும் தொன்மையான நான்முகனான பிரமதேவன் முதலியோர் மட்டுமே உணர்ந்து கொள்ளும் இயல்புடைய திருமால், தன் அறிதுயில் நீங்கிப் பாற்கடலினின்றும் எழுந்து வருகின்ற பொழுதெல்லாம் அசுரர்கள் குலம் மாண்டு அழியும்; அதுபோல இந்தக் கும்பகருணன் துயில் நீங்கி எழுந்து வருகின்றபொழுதெல்லாம் தேவர்கள் இறந்துபடுவர்; அத்தகைய ஆற்றல்பெற்றவன் இந்தக் கும்பகருணன்'' என்று வீடணன் இராமபிரானுக்குக் கும்பகருணனின் ஆற்றல்பற்றித் தெரியச் சொல்லுகிறான்.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும். எனினும் சிவபெருமானை யார் எவ்வாறு உணர்ந்து கொள்ளலாம் என்பதை மிக

அழகாகக் குறிக்கிறான் கவிஞன் என்பது கருதத்தக்கது. ''தவன் நுணங்கியரும், வேதத்தலைவரும் உணரும் தன்மைச் சிவன்'' என்பது கவிஞன் சிவபெருமானைப் பற்றிக்கூறும் கூற்றுகளின் உச்சம் என்பதைக் கற்போர் நன்கு உணரலாம்.

289. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1159/122

வீடணன் கூற்று

''சூலம் உண்டு; அது சூர்உளோர்
காலம் உண்டது; கைக் கொள்வான்;
ஆலம் உண்டவன் ஆழிவாய்
ஞாலம் உண்டவ! நல்கினான்'' (7393)

''இவ்வுலக உயிரினங்களையெல்லாம் தன் வயிற்றில் ஒடுக்கிக் காத்தருளுகின்ற திருமாலின் திரு அவதாரமான இராமபிரானே! இவன் எப்பொழுதும் கையில் ஒரு சூலாயுதத்தை வைத்திருப்பான்; அது சூரத்தன்மைபடைத்த எல்லோரது உயிரையும் பறித்ததாகும். அது பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை உண்டருளியவனான சிவபெருமானால் அளிக்கப்பட்டதாகும்'' என்று வீடணன் இராமபிரானிடம் கும்பகருணனது சூலாயுதத்தின் சிறப்பைத் தெரிவிக்கிறான்.

இங்கே ''ஆழிவாய் ஆலம் உண்டவன்'' என்பது பாற்கடலினின்றும் தோன்றிய ஆலகால விஷத்தைப் பருகியவனான சிவபெருமானைக் குறிக்கும் என்க.

290. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1162/145

வீடணன் கூற்று.

''கண்ணுதல், தீமைசெய்ய, கமலத்து முளைத்த தாதை
அண்ணல்தன் தலையின் ஒன்றை அறுக்க, அன்று அமைந்தான் அன்றே?
புண்உறு புலவு வேலோய்! பழியொடும் பொருந்தி, பின்னை,
எண்ணுறு நரகின் வீழ்வது, அறிஞரும் இயற்றுவாரோ?''
(7416)

இராமபிரான் பக்கம் வந்து சரணாகதி அடையும்படி வீடணன் கும்பகருணனுக்குக் கூறும் அறிவுரை இப்பாடல்.

''புண்பட்ட மாமிசத் துண்டங்கள் பொருந்திய வேற்படையை உடையவனே! முன்பு நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் சில தீங்குகள் செய்ததால் திருமாலின் உந்தித்தாமரை மலரில் இருந்து தோன்றியவனும், உலக உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் தந்தையாக விளங்குபவனும் பெருமையிற் சிறந்தவனுமாகிய பிரமதேவனாகிய நான்முகனின்

ஒருதலையினைக் கிள்ளி எடுத்துவிட்டான் அல்லவா? அதனால் அவனுக்கு உண்டான பழியும், அதன்பின்னர் அவன் எண்ணுதற்கரிய நரகில் வீழ்ந்து அல்லற்பட்டதும் நாமறிந்ததுதானே? அத்தகைய பழிமிகுந்த செயலை மேலும் ஒருமுறை கற்றறிந்த அறிஞர்கள் செய்வார்களோ?'' என்று அறிவுறுத்துகிறான் வீடணன்.

இது ஒரு புராணக்கதையை ஒட்டியது. பிரமனுக்கு நான்கு தலைகள் உண்டென்பதும் எனவே அவனுக்கு நான்முகன் என்பது பெயர் என்பதும் நாம் அறிந்ததே. அவன் தனது நான்கு தலைகளோடு இன்னொரு ஐந்தாவது தலையையும் தனக்குத்தானே படைத்துக்கொண்டு சிவபெருமானோடு தானும் நிகர் என்று கருதிச் செருக்குற்றிருந்தான். அதுகண்ட சிவபெருமான் அவன் ஐந்தாவதாகப் படைத்துக்கொண்ட தலையைக் கிள்ளி எடுத்து அவன் ஆணவத்தை அடக்கியருளினார் என்பது ஒரு புராணக்குறிப்பு. அதனை அடிப்படையாகக் கொண்டது இந்தப் பாடலாகும்.

இங்கே ''கண்ணுதல்'' என்பது நெற்றிக்கண்ணை உடையவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

291. கும்பகருணன் வதைப்படலம் பக்களண்-1164/159
கும்பகருணன் கூற்று.

''அணையின்றி உயர்ந்தவென்றி அஞ்சினார் நகையதாக,
பிணை ஒன்று கண்ணாள் பங்கன், பெருங்கிரி நெருங்கப் பேர்த்த,
பணை ஒன்று திரள்தோள் காலபாசத்தால் பிணிப்ப, கூசி,
துணை இன்றிச் சேரல் நன்றோ, தோற்றுள கூற்றின் சூழல்?''
(7430)

இராமபிரானைச் சரணாகதி அடைவதே கும்பகருணன் செய்யத்தக்கது என்று அறிவுறுத்திய வீடணனுக்குக் கும்பகருணன் கூறும் மறுப்புரை இந்தப்பாடல்.

''பெண்மான்களின் கண்கள்போன்று மருட்சி நிறைந்த கண்களை உடையவளான உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவபெருமான் வீற்றிருக்கின்ற பெரிய கயிலாயமலையை நெருங்கி, அதனைப் பெயர்த்தெடுத்த பெருமைபொருந்திய திரண்ட பருத்த இருபது தோள்களையுடைய நம் மூத்தவன் இராவணன், இயமனது பாசக்கயிற்றால் பிணிக்கப்பட்டு உடல் நடுங்கி, நம் ஒருவரது துணையும் இல்லாமல் நம்மிடம் தோற்றுத் திரிகின்ற இயமனிடத்துச் செல்லுவது என்பது நமக்குப் பெருமை தரும் செயலா? அஃதோடன்றி, இதுவரையிலும் எந்தத்தடையுமில்லாமல் நமக்கு அஞ்சி ஒளிந்து திரிந்த தேவர்களும் இப்பொழுது தாம் மிகச்சிறந்த வெற்றிபெற்று விட்டதாகக்கருதி ஆரவாரம் செய்து எள்ளிநகைப்பார்களே?

இது நமக்குப் பெருமைசேர்க்குமா?'' என்று இராவணனுக்கு நிகழவிருக்கும் நிலையை எண்ணிப்பார்த்துக் கும்பகருணன் வீடணனிடம் மறுத்துரைக்கிறான்.

இங்கே ''பிணை ஒன்று கண்ணாள் பங்கன்'' என்பது பெண்மானைப் போன்று அழகிய கண்களையுடைய உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டிருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும். ''பெருங்கிரி'' என்பது அவன் உறையும் பெரிய கயிலாயமலையைக் குறிக்கும்.

292. கும்பகருணன் வதைப்படலம் பக்களண்-1174/228
கவிக்கூற்று

செருவில் மாண்டவர் பெருமையும், இலக்குவன் செய்த
வரிவில் ஆண்மையும் நோக்கிய புலத்தியன் மருமான்,
''திரிபுரம் செற்ற தேவனும், இவனுமே செருவின்
ஒரு விலாளர்'' என்று ஆயிரம் கால் எடுத்துரைத்தான். (7499)

போரில் இறந்துபட்டவர்களின் மிகுதியையும், இலக்குவன் செய்த கட்டமைந்த விற்பயிற்சியின் ஆண்மையையும் நோக்கிய புலத்தியன் வழிவந்தவனான கும்பகருணன் ''முப்புரங்களையும் சுட்டெரித்தவனான சிவபெருமானும், இந்த இலக்குவனும் மட்டுமே, போரில் ஒப்பற்ற வில்லாற்றலைப் பெற்றவர்களாவார்கள்'' என்று ஆயிரம்முறை எடுத்துக் கூறிக்கொண்டே இருந்தான் என்கிறான் கவிஞன்.

பகைவர்களுள் கும்பகருணன் இலக்குவனையும், அவன் போராற்றலையும், பாராட்டும் பாடல்களுள் இதுவும் ஒன்று. ''மருமான்'' என்பது பரம்பரையைக் குறிக்கும்.

இங்கே ''திரிபுரம் செற்ற தேவன்'' என்பது முப்புரத்தையும் சுட்டெரித்த தலைவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

293. கும்பகருணன் வதைப்படலம் பக்களண்-1179/261
கவிக்கூற்று.

சித்திர வனமுலைச் சீதை செவ்வியால்
முத்தனார் மிதிலை ஊர், அறிவு முற்றிய
பித்தன் வெஞ்சிலையினை இறுத்த பேரொலி
ஒத்தது, சூலம் அன்று இற்ற ஓசையே. (7532)

''செம்பஞ்சுக் குழம்பால் தொய்யில் எழுதப்பட்ட கொங்கைகளையுடைய சீதாதேவியின் நற்குணங்களால், தன்னை வேண்டியவர்க்கு வீடுபேறு அளிக்கும் மேலோனான திருமாலின் அவதாரமான இராமபிரான் முன்பு மிதிலை நகரத்தில், அறிவு நிரம்பப்பெற்ற வித்தகனாகிய பித்தன்

சிவபெருமானுடைய கொடிய சிவதனுசை ஒடித்த பேரோசையைப்போல், இன்று இப்பொழுது கும்பகருணன் செலுத்திய முத்தலைச்சூலத்தை இலக்குவன் ஒடித்ததனால் எழுந்த பேரோசை இருந்தது'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. சித்திர வனமுலைச்சீதை என்று சீதாதேவியையும், முத்தனார் என்று வீடுபேறளிக்கும்-முக்தியையளிக்கும் இராமபிரானையும், வெறும்பித்தன் என்னாது அறிவு முற்றிய பித்தன் என்று சிவபெருமானையும் கூறி, கும்பகருணனின் சூலாயுதத்திற்குச் சிவபெருமானின் சிவதனுசை ஒப்பிட்டார் என்க. இங்கு ''அறிவு முற்றிய பித்தன்'' என்பது பேரறிவாளனான சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''பித்தா! பிறைசூடி'' என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம். ''பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே'' என்பது திருவாசகம்.

294. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1190/331
கவிக்கூற்று.

அண்ணல்வில் கொடுங் கால் விசைத்து உகைத்தன,
அலைகடல் வறளாக
உண்ணகிற்பன; உருமையும் சுடுவன,
மேருவை உருவிப் போய்
விண்ணகத்தையும் கடப்பன; பிழைப்பு இலா
மெய்யன; மேல் சேர்ந்த
கண்ணுதல் பெருங்கடவுள்தன் கவசத்தைக்
கடந்தில கதிர் வாளி. (7602)

''பெருமையிற் சிறந்தவனான இராமபிரான், கோதண்டம் என்னும் தன் வில்லினின்றும் கொடிய நுதிகளை விசையுடன் வளைத்துச் செலுத்திய ஒளிமிக்க அம்புகள், அலைகள் நிறைந்த கடல்களை வற்றச்செய்தன; பேரிடியையும் சுட்டெரித்தன; மேருமலையையும் ஊடுருவிப்போய் ஆகாயத்தையும் கடந்து போயின; இலக்கில் தப்பாத உண்மையான அவ்வம்புகள், கும்பகருணன் மேலே கட்டிக்கொண்டிருக்கின்ற, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானாகிய பெரிய கடவுள் அருள்கூர்ந்து அவனுக்கு அளித்த கவசத்தை மட்டும் துளைத்துக்கொண்டு செல்லமுடியாதன ஆயின'' என்கிறான் கவிஞன்.

கடல், மேருமலை, பேரிடி, விண்ணுலகு ஆகிய எல்லாவற்றையும் துளைத்துச்செல்லும் இராமபாணமாகிய கோதண்டம், கும்பகருணனின் கவசத்தை மட்டும் துளைத்துக்கொண்டு செல்லமுடியவில்லை என்கிறான் கவிஞன். இதனால் கும்பகருணனின் வரவலிமை புலப்படுத்தப்பட்டது என்க.

இங்கே ''கண்ணுதல் பெருங்கடவுள்'' என்பது நெற்றிக்கண்ணையுடைய பெரிய கடவுள் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''கண்ணுதல் பெருங்கடவுளும் கழகமொடு அமர்ந்து'' என்பது திருவிளையாடற்புராணம்.

295. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1191/332 கவிக்கூற்று

தாக்குகின்றன; நுழைகில; தலையது
 தாமரைத் தடங்கண்ணான்,
நோக்கி, ''இங்கு இது சங்கரன் கவசம்'' என்று
 உணர்வுற, நுனித்து உன்னி,
ஆக்கி அங்கு அவன் அடுபடை தொடுத்துவிட்டு
 அறுத்தனன்; அது சிந்தி,
வீக்கு இழந்தது வீழ்ந்தது, வரைசுழல்
 விரிசுடர் வீழ்ந்தென்ன. (7603)

தான் செலுத்தும் அம்புகள் கும்பகருணனைச் சென்று இலக்குத்தப்பாமல் தாக்குகின்றன என்றாலும் அவற்றால் அவன் கட்டியிருக்கின்ற கவசத்தை அறுக்கமுடியவில்லையே என்பதை உணர்ந்துகொண்ட தாமரைமலர்போலும் பெரிய கண்களையுடையவனான இராமபிரான், அவ்வம்பின் நுனியை நன்கு பார்த்து ''இவன் அணிந்திருக்கின்ற கவசம் இவனுக்குச் சிவபெருமானால் அளிக்கப்பட்டதாகும்'' என்பதை நன்கு நுணுகி ஆராய்ந்து, தெளிந்து, பின்னர் அதனை அறுப்பதற்குரிய மந்திரங்களைக்கூறி, அவனைக் கொல்லுதற்குத் தகுதியான படைக்கலத்தைச் செலுத்தி, அந்தக் கவசத்தை அறுத்தெறிந்தான். அந்தக் கவசம் நிலைகுலைந்து, சிதறிப்போய், பிணைப்பு விட்டுக் கீழே விழுந்தது. அது எப்படி இருந்ததென்றால் மேருமலையையே சுற்றிச்சுற்றி வந்து விரிக்கின்ற ஒளியைப் பரப்பும் சூரியன், அந்த மேருமலையினின்றும் கீழே விழுந்ததுபோல் இருந்தது'' என்கிறான் கவிஞன்.

இங்கே கும்பகருணன் அணிந்திருந்த ஒளிமிக்க கவசத்திற்கு மேருமலையைச் சுற்றிவரும் ஒளிமிக்க சூரியன் உவமை.

இங்கே ''சங்கரன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

296. மாயாசனகப் படலம் பக்கஎண்-1199/13 இராவணன் கூற்று

''ஈசனே முதலா மற்றை மானிடர் இறுதியாகக்
கூச, மூன்று உலகும் காக்கும் கொற்றத்தென்; வீரக்கோட்டி
பேசுவார் ஒருவற்கு ஆவி தோற்றிலென்; பெண்பால் வைத்த
ஆசைநோய் கொன்றதென்றால், ஆண்மைதான் மாசுணாதோ?''
(7644)

அசோகவனத்தில் இராவணன் சீதாதேவியிடம் பேசுவதாக அமைந்த பாடல்களுள் இதுவும் ஒன்று.

''எல்லா ஐஸ்வர்யங்களுக்கும் தலைவனான சிவபெருமான் முதலாகச் சாதாரணமக்கள்வரை உள்ள எல்லோரும் அஞ்சும்படி, இந்த மேல், நடு, கீழ் என்னும் மூன்று உலகங்களையும் காத்துவருகின்ற வெற்றிச் சிறப்பை உடையவன்நான்; வீரர்கள் கூட்டத்திலேயே சிறந்த வீரன் என்று கூறப்படுபவர்களில் யாரேனும் ஒருவருக்குக்கூட நான் இதுவரை என் உயிர் தோற்றவனல்லன்; ஆனால் ஒரு மானிடப் பெண்ணின்மேல் கொண்ட காதல்நோய் என்னைக் கொன்றுவிட்டது என்று சொன்னால், அது என் ஆண்மை பொருந்திய வீரப்பாட்டிற்கு இழுக்காகாதோ?'' என்று கேட்கிறான் இராவணன்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

297. மாயாசனகப் படலம் பக்கஎண்-1200/21சீதைகூற்று.

> ''வாசவன், மலரின் மேலான், மழுவலான் மைந்தன், மற்று அக்
> கேசவன் சிறுவர் என்ற இந்தத் தன்மையோர் தம்மைக் கேளாய்;
> ''பூசலின் எதிர்ந்தேன்'' என்றாய்; போர்க்களம் புக்கபோது, என்
> ஆசையின் கனியைக் கண்ணின் கண்டிலைபோலும், அஞ்சி!''
> (7652)

தன்முன் நிலத்தில் விழுந்து வணங்கிய இராவணனை நோக்கி, சீதை ''தேவர்தலைவன் இந்திரன். தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவன், மழுப்படை ஏந்திய சிவபெருமானின் புதல்வனான முருகப்பெருமான், மற்றும் திருமால் என்ற அந்தச் சிறுவன் என்று சொல்லப்படுகின்ற இவர்கள் எல்லோருடைய இயல்பையும் அறிந்து கொள்ளாதவனாய், அவர்களை ஒரு பொருட்டாகவே மதிக்காமல், அவர்களுடன் எதிர்த்துப் போர்செய்தேன் என்கிறாயே! அவ்வாறு நீ போர்க்களத்துக்குள் சென்றபொழுது, என்னுடைய ஆசையின் இனிய துணைவனாகிய இராமபிரானை உன் கண்களால் காணுதற்கு அச்சம்கொண்டு, அவனைக் காணாது போய்விட்டாய்போலும்!'' என்று இகழ்ச்சிக்குறிப்புக் தோன்றக் கூறுகிறாள் சீதாதேவி.

''ஆசையின் கனி'' என்ற சொற்றொடர் அன்பின் வெளிப்பாடு. இங்கே ''மழுவலான்'' என்பது மழுவாயுதத்தைக் கைக்கொண்டிருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

298. அதிகாயன் வதைப்படலம் பக்களண்-1212/8

அதிகாயன் கூற்று

''வான் அஞ்சுக; வையகம் அஞ்சக; மா
லான், அஞ்சு முகத்தவன் அஞ்சுக; ''மேல்
நான் அஞ்சினென்'' என்று உனை நாணுக; போர்
யான் அஞ்சினென் என்றும் இயம்புவதோ?'' (7734)

இராவணன் அமைச்சர்களைக் கடிந்துரைத்தபின், அவன் மகன் அதிகாயன் எழுந்து, தன் வீரத்தை மிகுத்துக் கூறும் பாடல் இது.

''அந்த இரு மானிடர்களையும், வானரச்சேனையையும் பார்த்து, விண்ணுலகத்துத் தேவர்கள் அஞ்சலாம்; மண்ணுலகத்து மக்கள் அஞ்சலாம்; திருமால், ஐந்து முகங்களைக்கொண்ட சிவபெருமான்கூட அஞ்சலாம்; மேலும் சொல்லப்போனால் ''நான் அஞ்சினேன்'' என்று நீ வேண்டுமானால் உன்னைப் பற்றியே சொல்லிக்கொள்ளலாம்; நீயே வெட்கப்பட்டுக் கொள்ளலாம்; ஆனால் அவர்களுடன் போர்செய்வதற்கு நான் அஞ்சினேன் என்று நீ எப்படிக் கூறலாம்?'' என்று கேட்கிறான் அதிகாயன்.

இங்கே ''அஞ்சு முகத்தவன்'' என்பது ஐந்து முகங்களைக் கொண்ட சிவபெருமானைக் குறிக்கும் என்க. சிவபெருமானுடைய ஐந்து முகங்களாவன. தத்புருஷம், வாமனம், சத்தியோசாதம், அகோரம், அதோமுகம் என்பனவாம்.

299. அதிகாயன் வதைப்படலம் பக்களண்-1213/17

இராவணன் கூற்று

''ஓர் ஏறு சிவற்கு உளது ஒப்பு உளவாம்
வார் ஏறு வயப்பரி ஆயிரம், வன்
போர் ஏறிட ஏறுவ, பூணுறு திண்
தேர் ஏறுதி, தந்தனென், வெந்திறலோய்'' (7743)

போருக்குத்தயாரான அதிகாயனை நோக்கி இராவணன், ''கொடிய போராற்றல் அமையப்பெற்றவனே! சிவபெருமானின் வாகனமாகிய ஒப்பற்ற காளைக்குச் சமமானதும், வார்கள் கட்டப்பெற்றனவும், வெற்றியையே தருகின்றவையுமான ஆயிரம் குதிரைகள் பூட்டப்பட்டனவும் அலங்கரிக்கப்பெற்றனவும் ஆகிய திண்ணிய தேர்களை நீ இந்தப்போரில் நிச்சயமாக வெற்றிபெற்று வரவேண்டும் என்ற நோக்கத்துடனேயே உனக்குத் தந்திருக்கிறேன். இந்தத் திண்ணிய தேரில் நீ ஏறிப் போருக்குப் புறப்பட்டுப் போவாயாக!'' என்று கூறுகிறான் இராவணன்.

இங்கு ''சிவற்கு உளது ஓர் ஏறு'' என்பது சிவபெருமான் ஊர்ந்துவரும் ஒப்பற்ற காளை வாகனம் என்று சிவபெருமானின் ரிஷபவாகனத்தைக் குறிக்கும் என்க.

300. அதிகாயன் வதைப்படலம் பக்கஎண்-1219/57
வீடணன் கூற்று

''கடம்ஏய் கயிலைக்கிரி, கண்ணுதலோடு
இடம் ஏற எடுத்தனம் என்று இவனை,
திடமே உலகில் பல தேவரொடும்
வடமேரு எடுக்க வளர்த்தனனால்'' (7783)

வீடணன் அதிகாயனது போர்த்திறம் பற்றி இராமபிரானுக்கு எடுத்துரைக்கும் பாடல் இது.

''காடுகள் நிறைந்த கயிலாயமலையைச் சிவபெருமானோடு பெயர்த்தெடுத்த இராவணன், தான் ஒரே ஒரு சிவபெருமான் இருந்த மலையைத்தானே பெயர்த்தெடுத்திருக்கிறோம், இது நமக்குப் புகழைத்தாராது என்று கருதி, பல தேவர்கள் வசிக்கும் மேருமலையையே பெயர்த்தெடுக்க வேண்டும் என்ற பெரும் நோக்கோடு, இந்த அதிகாயனை வளர்த்துவந்தான்'' என்று வீடணன் அதிகாயன் வலிமைபற்றி இராமபிரானுக்கு எடுத்துக்கூறுகிறான்.

இங்கே ''கண்ணுதலோடு'' என்பது நெற்றிக்கண்ணையுடையவன் என்று பொருள்தந்து சிவபெருமானைக் குறிக்கும் என்க.

301. அதிகாயன் வதைப்படலம் பக்கஎண்-1219/60
வீடணன் கூற்று

''காலங்கள் கணக்கு இற, கண் இமையா
ஆலம்கொள் மிடற்றவன், ஆர் அழல்வாய்
வேல் அங்கு எறியக்கொடு, ''விட்டது நின்
சூலம்கொல்?'' எனப் பகர் சொல் உடையான்'' (7786)

''அளவற்ற மிக நீண்ட காலமாகக் கண்கள் இமைக்கப்பெறாதவனும், பாற்கடலில் இருந்து தோன்றிய ஆலகால விஷத்தைத் தன் தொண்டையிலே நிறுத்திக்கொண்டவனுமான சிவபெருமான், நெருப்புமிக்க நுனியையுடைய தன் சூலாயுதத்தை, முன்பு நடந்த ஒரு போரில் அந்த அதிகாயன்மீது வீசிஎறிய, அதனை அதிகாயன் தன் கைகளில் பற்றிக்கொண்டு சிவபெருமானிடம் வந்து ''நீ வீசியெறிந்த சூலாயுதப்படை இதுதானா பார்?'' என்று எதிர்த்துக் கூறும் ஆற்றல்வாய்ந்த புகழ்வாய்ந்தவனாவான் இந்த அதிகாயன்'' என்று அதிகாயனது போராற்றல்பற்றி வீடணன் இராமபிரானுக்கு எடுத்துரைக்கிறான்.

இங்கே "கண் இமையா ஆலம்கொள் மிடற்றவன்" என்பது இமையாநாட்டமுடையவன் என்றும், ஆலகால விஷம் பருகிய கழுத்தினையுடையவன் என்றும் சிவபெருமானைக் குறிக்கும்.

302. அதிகாயன் வதைப்படலம் பக்கஎண்-1219/63

வீடணன் கூற்று

"கற்றான், மறை நூலோடு கண்ணுதல்பால்;
முற்றாதன தேவர் முரண்படைதாம்,
மற்று ஆரும் வழங்க வலார் இலவும்
பெற்றான்; நெடிது ஆண்மை பிறந்துடையான்" (7789)

"இந்த அதிகாயன் நான்கு வேதங்களுடன்கூட, தேவர்கள் யாரும் நிறைவாகக் கற்றுக்கொள்ளாதனவும், மற்ற யாராலும் செலுத்தும் வல்லமையற்றவையுமான வலிமைமிக்க படைக்கலங்களைத் தொடுத்துச் செலுத்தும் போர்க்கல்வியையும், முக்கண்ணனான சிவபெருமானிடத்திருந்து கற்றுக் கொண்டவனாவான். எனவே இவனது போராண்மை, மிக்க நீண்ட பெருமைவாய்ந்த புகழுடையதாகும். இவன் மிகப்பெருமை படைத்தவனாவான்" என்கிறான் வீடணன்.

இங்கே "**கண்ணுதல்**" என்ற சொல் நெற்றிக்கண்ணனாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

303. அதிகாயன் வதைப்படலம் பக்கஎண்-1222/78

இராமபிரான் கூற்று

"வான் என்பது என்? வையகம் என்பது என்? மால்
தான் என்பது என்? வேறு தனிச் சிலையோர்,
யான் என்பது என்? ஈசன் என்று இமையோர்
கோன் என்பது என்? எம்பி கொதித்திடுமேல்?" (7804)

இராமபிரான் வீடணனை நோக்கித் தன் தம்பி இலக்குவன் பற்றிக் கூறிக்கொண்டு வரும்போது "இவன் சீற்றம் கொள்வானானால், விண்ணுலகத்துத் தேவர்களோ, மண்ணுலகத்து மக்களோ, திருமாலோ, வேறு ஒப்பற்ற வில்லைக் கையிலேந்தியவனாகிய நானாகிய இராமனோ, சிவபெருமானோ, தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனோ, இவர்களில் யாராக இருந்தாலும் இவன் எதிரில் நின்று போர்செய்ய இயலாதவர்களாவார்கள்" என்கிறான் இராமபிரான்.

இங்கே "**ஈசன்**" என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்க.

304. அதிகாயன் வதைப்படலம் பக்கஎண்-1222/83
இராமபிரான் கூற்று

''சிவன்; அல்லன் எனில், திருவின் பெருமான்;
அவன் அல்லன் எனில், புவி தந்தருளும்
தவன்; அல்லன் எனில், தனியே வலியோன்
இவன்; அல்லன் எனில், பிறர் யார் உளரோ?'' (7809)

இராமபிரான் வீடணனிடம் இலக்குவன் அதிகாயனோடு செய்யப்போகும் போர் நிகழ்வுகளை நேரில் போய்ப் பார்க்கும்படி கூறும்போது, இலக்குவனுடைய போராற்றல் பற்றி விதந்து பேசும் பாடல் இது.

''அதிகாயனை வெல்ல வல்லவர்கள் சிவபெருமானாகலாம்; அவன் அல்லன் என்றால் தெய்வத் திருமகளாகிய இலக்குமியின் கணவனான திருமால் ஆகலாம்; அவனும் இல்லை என்றால் இந்த உலகத்தைப் படைத்தருளியவனான மிக்க தவம் இயற்றியவனான பிரமதேவன் ஆகலாம்; அவனும் இல்லையென்றால் ஒப்பற்ற வலிமையையுடைய இந்த இலக்குவன் ஒருவனால்தான் முடியும். இவனும் இல்லையென்றால் வேறு எவரால் அதிகாயனை வெல்லமுடியும்?'' என்று கேட்கிறான் இராமபிரான்.

அதிகாயனை வெல்லும் ஆற்றல் சிவபெருமானுக்கோ, திருமாலுக்கோ, பிரமதேவனுக்கோ இல்லையென்றால் அந்த ஆற்றல் என்தம்பி இலக்குவனைத்தவிர வேறு யாரிடம் உண்டு? என்று கேட்கிறான் இராமபிரான் என்பதாம்.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

305. அதிகாயன் வதைப்படலம் பக்கஎண்-1233/161 கவிக்கூற்று

''வாலால் வர வளைக்கும் நெடுமலைப் பாம்பு என; வளையா,
மேல் ஆளோடு பிசையும்; முழுமலை மேல்செல, விலக்கும்;
ஆலாலம் உண்டவனே என, அகல்வாயின் இட்டு அதுக்கும்;
தோல் ஆயிரம் இமைப்போதினின் அரி ஏறு எனத் தொலைக்கும்''
(7887)

அனுமன், யானைப்படையை அழிக்கும்முறை பற்றிப் பேசுகிறான் கவிஞன். இது கவிக்கூற்று.

அனுமன் தனது நீண்ட வாலால் ஆயிரம் யானைகளை நீண்ட மலைப்பாம்புபோல வளைத்துக்கொள்வான். அவ்வாறு வளைக்கமுடியாத வற்றை அவற்றின் மேல் உள்ள யானைப்பாகர்களோடு சேர்த்து வளைத்து நசுக்கிவிடுவான்; பின் அவற்றை அவற்றின் முழு உடலும் மலைமேல் விழும்படி தூக்கி வீசி எறிவான்; பாற்கடலினின்றும் தோன்றிய ஆலகால

விஷத்தைப் பருகியவனான சிவபெருமானைப்போல, அவற்றைத் தன் வாயில் இட்டுப் பற்களின் இடையில் அதுக்கிக்கொள்வான். ஒருநொடிப் பொழுதில் ஆயிரக்கணக்கான யானைகளை ஆண்சிங்கம் போலத்தொலைத்து அழித்துவிடுவான்'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''ஆலாலம் உண்டவன்'' என்பது ஆலகால விஷத்தைப் பருகியவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

306. அதிகாயன் வதைப்படலம் பக்களண்-1236/178 கவிக்கூற்று

''இமையிடையாகச் சென்றான்; இகல் அதிகாயன் நின்றான்;
அமைவது ஒன்று ஆற்றல் தேற்றான்; அருவியொடு அழல் கால்கண்ணான்;
''உமையொரு பாகனேயும், இவன் முனிந்து உருத்தபோது
கமையிலன் ஆற்றல்'' என்னா, கதத்தொடும் குலைக்கும் கையான்''
(7904)

அதிகாயன் இலக்குவனுடன் செய்த போர்பற்றிக் கவிஞன் பேசுவதாக வரும் பாடல் இது.

கண்மூடிக் கண்திறப்பதற்குள் அனுமன் அங்கிருந்து அகன்று போய்விட்டான். போர்ஆற்றல் மிக்க அதிகாயன் இப்பொழுது என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து நின்றான். கண்களினின்றும் கண்ணீர் அருவியாய்ப் பெருகினாலும், அதே கண்கள் நெருப்பையும் கக்குகின்றனவாயின; அப்பொழுது அவன் ''உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டிருக்கும் சிவபெருமான்கூட இவன்முன்னால் சீற்றம்கொண்டு வந்து நின்றால் அவன் அதனைப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றல் அற்றவனாகிவிடுவான்'' என்று அனுமன் போராற்றலைப் பாராட்டித் தன் கைகளைக் கோபத்தோடு பிசைந்துகொண்டு நின்றிருந்தான் அதிகாயன் என்கிறான் கவிஞன்.

இங்கே ''உமையொரு பாகன்'' என்பது, உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டிருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

307. அதிகாயன் வதைப்படலம் பக்களண்-1237/189 அதிகாயன் கூற்று

''உமையனே காக்க; மற்று அங்கு உமை ஒரு கூறன் காக்க;
இமையவர் எல்லாம் காக்க; உலகம் ஓர் ஏழும் காக்க;
சமையும் உன் வாழ்க்கை இன்றோடு'' என்று, தன் சங்கம் ஊதி
அமைஉருக் கொண்ட கூற்றை, நாண் எறிந்து உருமின் ஆர்த்தான்.
(7915)

அதிகாயன் இலக்குவனை நோக்கி, ''உன்னுடைய தலைவனானவனும், உன்னுடைய தமையன் ஆனவனுமான இராமபிரானே வேண்டுமென்றால் வந்து உன்னைக் காக்கட்டும்; அல்லது உமையம்மையைத் தன் உடலில் ஒரு பகுதியாக வைத்திருக்கிறானே சிவபெருமான்! அவனே வேண்டுமானாலும் உன்னைக் காக்கட்டும்; அல்லது முப்பத்து முக்கோடித் தேவர்கள் எல்லோரும் ஒன்றுகூடிவந்து உன்னைக் காக்கட்டும்; அல்லது இந்தக் கீழ் ஏழு, மேல்ஏழு உலகத்தில் உள்ளார் எல்லோரும் வேண்டுமானாலும் வந்து உன்னைக் காக்கட்டும். ஆனால் உன்னுடைய ஆயுட்காலம் இன்றே இப்பொழுதே என் கையாலேயே முடியப்போகிறது'' என்று கூறிக்கொண்டே, தனது வெற்றிச் சங்கை எடுத்து ஊதிக்கொண்டு, மூங்கில்போலும் உருவம் அமைந்த வில்லாகிய இயமனை நாண்தெறித்து, இடியோசையைக் காட்டிலும் மிகுந்த பேரொலி எழுப்பினான் அதிகாயன்.

இங்கே ''உமையனே!'' என்ற சொல்லாட்சி மிகவும் சுவைக்கத்தக்கது. இச்சொல் உம்ஐயன் என்றும் உம் தமையன் என்றும் பிரியும். உமையன் என்பது உம் தலைவன் என்ற பொருளில் இராமபிரானையும் குறிக்கும் என்பதை நுனித்து உணர்க. இங்கே ''உமையொரு கூறன்'' என்பது உமையம்மையைத் தன் உடலில் ஒரு பகுதியாக வைத்திருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

308. அதிகாயன் வதைப்படலம் பக்கஎண்-1240/213 கவிக்கூற்று

அத்தொழில் கண்ட வானோர், ஆவலம் கொட்டி ஆர்த்தார்;
''இத்தொழில் இவனுக்கு அல்லால் ஈசற்கும் இயலாது'' என்பார்;
குத்து ஒழித்து, அவன் கைவாள் தன் கூர் உகிர்த்தடக்கை கொண்டான்;
ஒத்து இரு கூறாய் வீழ வீசி, வான் உலைய ஆர்த்தான். (7939)

அங்கதன் நராந்தகனுடன் போர்செய்யும் போராற்றல் பற்றி கவிஞன் வியந்து கூறும் பாடல் இது.

''அவ்வாறு அங்கதன் சாரி திரிந்ததைக் கண்ட தேவர்கள் தங்கள் கைகளைக் கொட்டி ஆரவாரம் செய்தார்கள். இத்தகைய மேம்பட்ட செயலை இவனைத்தவிர வேறு யாராலும் செய்ய முடியாது; ஏன்? சிவபெருமானால்கூட அவன் உருத்திரமூர்த்தி வடிவத்தில்கூட செய்யமுடியாது'' என்று தமக்குள் கூறிக்கொண்டனர்; இப்போது அங்கதன் அந்த நராந்தகனைக் குத்துவதை நிறுத்திக்கொண்டு, அவனுடைய பெரிய கைகளிலிருந்த வாட்படையைத் தனது கூரிய நகங்கள் மிகுந்த பெரிய கைகளில் பற்றிக்கொண்டு, அவன் உடல் இரு பகுதிகளாகச்சரியாகப் பிளந்துபோகுமாறு அந்த வாட்படையைவீசி அவனைத் தரையில் விழுமாறுசெய்து விண்ணுலகமே அஞ்சும்படியாக ஆரவாரம் செய்தான்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

309. நாகபாசப் படலம் பக்களண்-1250/6 இராவணன் கூற்று

''ஆர்கொன்றவர்?'' என்றலுமே, ''அதிகாயன் என்னும்
பேர் கொன்றவன் வென்றி இலக்குவன்; பின்பு நின்றார்
ஊர் கொன்றவனால், பிறரால் என உற்ற எல்லாம்
தார் கொன்றையினான் கிரி சாய்த்தவன் தான் உரைத்தான்.
(8007)

இந்திரசித்தன் இராவணனை நோக்கி, ''எல்லோரையும் கொன்றவன் யார்?'' எனக் கேட்டதும், கொன்றைமாலையை அணிந்தவனான சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலாயமலையைப் பெயர்த்தெடுத்தவனான இராவணன், தானே முன்வந்து, ''அதிகாயன் என்னும் பெரும் பேர்படைத்தவனை வெற்றியையுடைய இலக்குவன் கொன்றழித்தான். பின்பு நின்றிருந்தவர்களை நம் இலங்கை மாநகரை எரியூட்டியவனான அனுமன் கொன்றொழித்தான். மற்றவர்களையெல்லாம் பிற வானரச் சேனைகள் கொன்றழித்தன'' என்று அங்கு நிகழ்ந்தனவற்றையெல்லாம் எடுத்துரைத்தான்.

இங்கே ''**தார் கொன்றையினான்**'' என்பது கொன்றை மாலையைச் சூடியுள்ள சிவபெருமான் என்றும் ''கிரி'' என்பது சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலையிங்கிரியையும் குறிக்கும் என்க.

310. நாகபாசப் படலம் பக்களண்-1251/12 இந்திரசித்தன் கூற்று

''பாம்பின் தரு வெம்படை, பாசுபதத்தினோடும்,
தேம்பல் பிறை சென்னி வைத்தான் தரு தெய்வ ஏதி
ஓம்பித் திரிந்தேன் எனக்கு இன்று உதவாது போமேல்
சோம்பித் துறப்பென்; இனிச் சோறும் உவந்து வாழேன்''
(8013)

''தேயும் தன்மையுடைய பிறைச்சந்திரனைத் தன் தலையில் சூடியிருக்கும் சிவபெருமானால் எனக்கு அளிக்கப்பட்ட கொடிய நாகபாசம், பாசுபதாஸ்திரம் இன்னும் மற்ற தெய்வத்தன்மை பொருந்திய படைக்கலன்கள் எல்லாவற்றையும் நான் பாதுகாத்து வைத்திருந்து இவ்வளவுநாளும் சோம்பித் திரிந்து காலத்தைக் கழித்துவிட்டேன். அவையெல்லாம் இந்தச் சமயத்தில் எனக்குப் பயன்படாது போகுமேயானால், நான் எந்த முயற்சியும் செய்யாது என் உயிரை மாய்த்துக்கொள்வேன். இனிமேல் சோறுகூட விரும்பி உண்ணமாட்டேன்'' என்று வஞ்சினம் கூறுகிறான் இந்திரசித்து.

முன்பாடலில் இலக்குவனைக் கொல்லாது இலங்கை திரும்பிவரமாட்டேன் என்று இந்திரசித்தன் கூறிய வஞ்சினமும் இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது.

இங்கே ''தேம்பல் பிறை சென்னி வைத்தான்'' என்பது தேயும் தன்மையுள்ள இளம்பிறைச்சந்திரனைத் தன் தலையில் தரித்திருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

311. நாகபாசப் படலம் பக்கஎண்-1252/20 கவிக்கூற்று

''பொன் சென்று அறியா உவணத்தனிப் புள்ளினுக்கும்,
மின் சென்று அறியா மழுவாளன் விடைக்கும், மேல்நாள்
பின் சென்றது அல்லது ஒரு பெருஞ்சிறப்பு உற்றபோதும்
முன் சென்று அறியாதது, மூன்று உலகத்தினுள்ளும்'' (8021)

பொன்னின் நிறத்திற்கு ஈடு என்று கூறமுடியாத பேரழகு வாய்ந்த இந்திரசித்தன் ஏறியதேர், திருமாலின் வாகனமாகிய கருடன் என்ற ஒப்பற்ற பறவையும், மின்னலின் நிறத்தைச் சமம் என்று கூறமுடியாத மழுப்படையை ஏந்திய சிவபெருமானின் வாகனமாகிய காளையும், முன்பு இராவணன் இவர்கள் இருவரோடும் போர்செய்தபோது அவர்கள் இரு வாகனங்களும் முன்னால்ஓட இவனது தேர்மட்டும் அவர்களைத் துரத்திக்கொண்டு பின்னால்தான் வரும். அத்தகைய பெருஞ்சிறப்பைப் பெற்றதேயல்லாமல் அவற்றிற்கு முன்னே செல்லும் தன்மைத்தன்று. மேல், நடு, கீழ் என்னும் மூன்று உலகத்தினுள்ளும் அது முன்னே சென்று அறியாதது ஆகும் என்கிறான் கவிஞன்.

''முக்கணான் முதலினோரை உலகொரு மூன்றினோடும் புக்க போர் எல்லாம் வென்று நின்ற என்புதல்வன்'' என்பது இந்திரசித்தன் பற்றி மண்டோதரி கூறும் கூற்று. இவனுடைய தேர் புறமுதுகுகாட்டி முன்னால் ஓடாது. பகைவர்களை துரத்திக்கொண்டு பின்னால் மட்டுமே ஓடும் இயல்பினது என்று அவனது தேரின் சிறப்புப் பேசப்படுகிறது.

இங்கே ''மழுவாளன் விடை'' என்பது மழுப்படையை ஏந்திய சிவபெருமானின் வாகனமாகிய காளையைக் குறிக்கும் என்க.

312. நாகபாசப் படலம் பக்கஎண்-1256/54 கவிக்கூற்று

சூலமும் மழுவும் தாங்கி, தோள் இரு நான்கும் தோன்ற,
மூலம் வந்து உலகை உண்ணும் உருத்திரமூர்த்தி என்ன,
நீலன் நின்றுழியே நின்றான்; நிரந்தரம் கணங்களோடும்
காலன் என்று ஒருவன், யாண்டும் பிரிந்திலன், பாசக் கையான்.
(8055)

''சூலாயுதத்தையும், மழுவாயுதத்தையும் தம் கைகளில் ஏந்தி நின்று கொண்டிருப்பவனும், எட்டுத்தோள்களும் பொலிந்து விளங்குபவனுமாகிய மூலப்பரம்பொருளாகிய சிவபெருமான், ஊழியிறுதிக்காலத்தில் இவ்வுலகை

அழிக்கும்பொருட்டு நிற்பவன்போல, படைத்தலைவன் நீலன் மட்டும், தான் நின்ற இடத்திலேயே சற்றும் அசையாது நின்றிருந்தான்'' அவன் எப்பொழுதும் தம் கூட்டத்துடனேயே நிற்பவன், இயமன் என்று சொல்லத்தக்க ஒப்பற்றவனானவன், எப்பொழுதும் எங்கும் பிரிந்துசெல்ல முடியாததான பாசக்கயிற்றைக் கையில் கொண்டிருப்பவனாகிய இயமன் என்று கூறத்தக்கவன் என்கிறான் கவிஞன்.

இங்கே ''உருத்திரமூர்த்தி'' என்பது உலகை ஊழியிறுதிக்காலத்தில் ஒடுக்கி உமிழ்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

313. நாகபாசப் படலம் பக்களண்-1269/120 இந்திரசித்தன் கூற்று

''அந்நரன்; அல்லனாகில், நாரணன் அனையன்; அன்றேல்
பின், அரன்; பிரமன் என்பார்ப் பேசுக; பிறந்து வாழும்
மன்னர், நம் பதியின் வந்து, வரிசிலை பிடித்த கல்வி
இந்நரன் தன்னோடு ஒப்பார் யார் உளர் ஒருவர்?'' என்றான்.
(8121)

இந்திரசித்து இலக்குவனின் வில்லாற்றலைப் பாராட்டிப் பேசுவது இந்தப்பாடல்.

இந்திரசித்து ''அவன் மனிதன்தான், அவன் மனிதனாக இல்லாவிட்டால் நாராயணனாகத்தான் இருக்கவேண்டும். அவனும் இல்லையென்றால் பின்னர் சிவபெருமானாகவோ, பிரமதேவனாகவோ இருப்பான் என்று கருதவேண்டும். நமது ஊரில் வந்து, நமக்கு எதிராகத் தான் கற்ற விற்போர்க்கல்வியைக் காட்டும் இவனை நிகர்ப்பவர் இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள்? இங்கே பிறந்து வாழ்கின்ற எந்த மன்னனாலும் இவ்வாறு செய்யமுடியுமா? இவனைப்போலப் போர்புரிய இவ்வுலகில் வேறு யாரேனும் ஒருவர் பிறந்து வந்து இருக்கிறாரா?'' என்று இலக்குவன் வில்லாற்றல் பற்றிப் பாராட்டிப் பேசுகிறான் இந்திரசித்து.

இங்கே ''அரன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

நரன், நாரணன் என்பவர் இரட்டைப் பிறவியர் என்பது ஒரு புராணக்குறிப்பு.

314. நாகபாசப் படலம் பக்களண்-1269/122 கவிக்கூற்று

ஆசை எங்கணும் அம்புஉக, வெம்புபோர்
ஓசை விம்ம, உருத்திரரும் உடல்
கூச, ஆயிரகோடி கொலைக்கணை
வீசி, விண்ணை வெளிஇலது ஆக்கினான். (8123)

இந்திரசித்தன் எட்டுத்திசைகள் எல்லாவற்றிலும் அம்புகளைச் செலுத்தி, கொடிய போரோசை பெருக்கலானான். உருத்திரமூர்த்தியாகிய சிவபெருமானும்கூட அந்தப் பேரோசையைக் கேட்டு உடல் நடுங்கினான். இந்திரசித்து ஆயிரக்கோடிக்கணக்கான கொல்லும் இயல்புடைய அம்புகளைச் செலுத்தி, வானவெளியில் வெற்றிடமே இல்லை என்னும்படி ஆக்கிவிட்டான்.

இங்கே ''உருத்திரர்'' என்பது உருத்திரமூர்த்தி என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

315. நாகபாசப் படலம் பக்கஎண்-1278/186 கவிக்கூற்று

வாங்கினான் மலரின் மேலான், வானகமணி நீர்க்கங்கை
தாங்கினான், உலகம் தாங்கும் சக்கரத்தவன் என்றாலும்,
வீங்கு வான்தோளை வீக்கி, வீழ்த்துஅலால் மீள்கிலாத
ஓங்கு வாள் அரவின் நாமத்து, ஒரு தனிப்படையை உன்னி.
(8187)

தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவன், ஆகாயத்திலுள்ள அழகிய கங்கையைத் தன் சடைமுடியில் தரித்திருப்பவனாகிய சிவபெருமான், இந்த உலகங்களைக் காத்தருளும் சக்கரப்படையைக் கைக்கொண்டவனான திருமால் முதலியவர்களால்கூட, தாங்கிக்கொள்ளமுடியாத நாகபாசம் என்னும் பெயருடைய ஒப்பற்ற படையைத் தன் கைகளில் பெற்று வளைக்க முற்பட்டான் இந்திரசித்தன். அது பகைவர்களைக் கொல்லாது மீண்டு திரும்பாத இயல்புடையது.

இங்கே ''வானகமணி நீர்க்கங்கை தாங்கினான்'' என்பது ஆகாயத்திலுள்ள அழகிய கங்கையாற்றைத் தன் சடைமுடியில் தரித்திருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

316. நாகபாசப் படலம் பக்கஎண்-1282/219 கவிக்கூற்று

படை உறு பிணத்தின் பம்மல் பருப்பதம் துவன்றி, பல்வேறு
இடைஉறு குருதி வெள்ளத்து, எறிகடல் எழுநீர் பொங்கி,
உடைஉறு தலைக்கை அண்ணல் உயிரெலாம் ஒருங்க உண்ணும்
கடைஉறு காலத்து, ஆழிஉலகு அன்ன, களத்தைக் கண்டான்.
(8220)

இந்திரசித்து வானில்சென்று மாயையினால் நாகாஸ்திரத்தை இலக்குவன்மீதும் வானரச்சேனைமீதும் ஏவிய காரணத்தால் அவர்கள் மூர்ச்சையுற்றுக் கிடந்த போர்க்களத்தை இராமபிரான் காணும் நிகழ்ச்சியைக் கூறும் பாடல் இது.

நாகாஸ்திரத்தால்தாக்கப்பட்ட வானரச்சேனையின்பிணங்கள்நிறைந்து மலைபோன்று கூட்டமாகக் கிடக்கவும், அவற்றினிடையே ஓடுகின்ற பலவகைப்பட்ட, இரத்த வெள்ளம், அலைவீசுகின்ற கடல்நீரைப்போலப் பொங்கி எழவும், பிரமதேவனிடமிருந்து கிள்ளி எடுத்த ஒருதலையைக் கையில் கபாலமாகக் கொண்டிருக்கும் பெருமைக்குரிய சிவபெருமான் இவ்வுலக உயிரினங்கள் எல்லாவற்றையும் ஒருசேர அழிக்கின்ற ஊழியிறுதிக்காலத்தில் காணப்படும் கடல்போலத் தோற்றமளித்த போர்க்களத்தை, இராமபிரான்தன்கண்களால்கண்டான்.

இங்கே ''உடைஉறு தலைக்கை அண்ணல்'' என்பது பிரமதேவனின் ஒருதலையைச்சிவபெருமான்கொய்ததால்அவர்பிட்சாடனராகத்தன்கையில் கபாலம் ஏந்தி நிற்கும் ஒரு புராண வரலாற்றைக் குறித்து சிவபெருமானைக் குறிக்கும் என்க.

317. நாகபாசப் படலம் பக்கஎண்-1285/235 வீடணன்கூற்று

''ஆழி அம் செல்வ! பண்டு இவ் அகல் இடம் அளித்த அண்ணல்
வேள்வியில் படைத்தது; ஈசன் வேண்டினன் பெற்று, வெற்றித்
தாழ்வுறு சிந்தையோற்குத் தவத்தினால் அளித்தது; ஆணை!
ஊழியின் நிமிர்ந்த காலத்து, உருமினது; ஊற்றம் ஈதால்''
(8236)

வீடணன் நாகபாசத்தின் வரலாற்றை இராமபிரானுக்குத் தெரிவிக்கத் தொடங்கும்பாடல்இது.

வீடணன் இராமபிரானை நோக்கி, ''சக்கரப்படையையுடைய அழகிய செல்வம் நிறைந்தவனே! முன்பு இந்தப் பரந்த உலகத்தைத் தோற்றுவித்தவனானபிரமதேவன்இயற்றியவேள்வியில்உண்டானதுஇந்த நாகபாசம். அதனைச் சிவபெருமான் மிக விரும்பி அவனிடமிருந்து பெற்றுக்கொண்டான். பெற்று, வெற்றியில் பின்னடையாத மனத்திண்மையுடையவனான இந்திரசித்தனுக்கு, அவனுடைய தவத்தின் பெருமை கருதி சிவபெருமான் மனமுவந்து அவனுக்கு அருளியது இந்த நாகபாசப்படை. இதுதான்உண்மை. இது ஊழியிறுதிக்காலத்தில்தோன்றும் இடியைப்போன்றுமிக்கவலிமைபடைத்ததாகும்'' என்றுகூறுகிறான்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச்சிவபெருமானைக் குறிக்கும் என்க.

318. நாகபாசப் படலம் பக்கஎண்-1285/239 இராமன்கூற்று

''வரம்கொடுத்து இனைய பாசம் வழங்கினான் தானே நேர்வந்து
இரங்கிடத் தக்கது உண்டேல், இகழ்கிலென்; இல்லை என்னின்,
உரம்கெடுத்து, உலகம் மூன்றும், ஒருவன் ஓர் அம்பின் சுட்ட

புரங்களின் தீய்த்துக் காண்பென் பொடி, ஒரு கடிகைப் போழ்தின்''
(8240)

''இவ்வாறு வரத்தையும் கொடுத்து, இந்த நாகபாசத்தையும் தோற்றுவித்தவனான அந்தப் பிரமதேவன் என்னிடம் நேரில் வந்து வருத்தம் தெரிவித்தான் என்றால், நான் இதைப் பெரிதாகக் கருதமாட்டேன்; அவ்வாறு அவன் செய்யவில்லை என்றால், இந்த மூன்று உலகங்களின் வலிமையையும் கெடுத்து, ஒப்பற்றவனான சிவபெருமான் முன்பு ஒரே அம்பினால் முப்புரங்களையும் சுட்டெரித்தான் அல்லவா? அதுபோல நானும் ஒரே நாழிகைப் பொழுதில் சுட்டெரித்துப் பொடிப்பொடியாக்கிவிடுவேன்'' என்று வஞ்சினம் கூறுகிறான் இராமன்.

இங்கே ''ஒருவன்'' என்பது ஒப்பற்றவன் என்ற பொருளில் சிவபெருமானையும், ''ஓர் அம்பின் சுட்ட புரங்கள்'' என்பது சிவபெருமான் ஒரு அம்பினாலேயே முப்புரங்களையும் சுட்டெரித்த வரலாற்றையும் குறிக்கும் என்க.

319. நாகபாசப் படலம் பக்கஎண்-1293/274 கவிக்கூற்று

பழிப்பு அறு மேனியாள்பால் சிந்தனைபடர, கண்கள்
விழிப்பு இலன், மேனிசால வெதும்பினன்; ஈசன்வேலும்
குழிப்பு அரிதுஆய மார்பை மன்மதன் கொற்ற வாளி
கிழிப்புற, உயிர்ப்பு வீங்கிக் கிடந்த வாள் அரக்கன் கேட்டான்.
(8275)

நாகபாசத்தால் கட்டுண்டு மூர்ச்சையுற்றுக்கிடந்த இலக்குவனும், வானரச்சேனையும், கருடன் வருகையால் புத்துயிர்பெற்று எழுந்ததை மிக்க ஆரவாரம்செய்து பகைவர்க்குத் தெரிவிக்கவேண்டும் என்று கருதிய அனுமன், இராமபிரானின் அனுமதியோடு செய்த பேராரவாரத்தை இராவணனும் கேட்டான் என்பதைக் கூறுகிறது இந்தப்பாடல். அப்பொழுது இராவணன் இருந்த நிலையை எடுத்துக்காட்டுகிறது.

சிறிதும் குற்றமற்ற மேனியை உடையவளான சீதாதேவியினிடத்தே தன் உள்ளம் எல்லாம் லயித்துக்கிடக்கவும், அவனுடைய கண்கள் சீதாதேவியின் உருவெளித்தோற்றத்தை மூடிய கண்களுக்குள்ளேயே கண்டு கொண்டிருக்கவும், கண்களைத் திறக்க இயலாதவனாய்த் தன் உடம்பு காமஇச்சையால் கொதித்துப்போகவும், சிவபெருமானின் கூரிய வேலாயுதம் கூடத் துளைத்துச் செல்லுதற்கரிய இராவணனின் மார்பை, இப்போது மன்மதனின் வெற்றிபொருந்திய மலரம்புகள் குத்திக்கிழிக்கவும், பெருமூச்சு விட்டுக்கொண்டு கிடந்த கொடிய, ஒளிமிக்க, வாட்படை ஏந்திய இராவணனும், அந்த ஆரவாரத்தைக் கேட்டான்.

இங்கே ''பழிப்பறு மேனியாள்'' என்று கூறுவது கருதத்தக்கது. காரணம் இராவணன் சீதாதேவியை இதுவரை தன் கைகளால் தீண்டவில்லை என்பதைக் கவிஞன் குறிப்பால் உணர்த்துவதை நோக்கவேண்டும்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானையும், ''வேலும்'' என்பது அவனுடைய சூலாயுதத்தையும் குறிக்கும் என்க.

320. நாகபாசப் படலம் பக்கஎண்-1295/288 இந்திரசித்தன் கூற்று

''இந்திரன், விடையின் பாகன், எறுழ்வலிக் கலுழன் ஏறும்
சுந்தரன், அருக்கன் என்று இத்தொடக்கத்தார் தொடர்ந்த போரில்,
நொந்திலென்; இனையது ஒன்றும் நுவன்றிலென்; மனிதன் நோன்மை,
மந்தரம் அனைய தோளாய்! வரம்பு உடைத்து அன்று மன்னோ!''
(8289)

உடம்பெல்லாம் புண்ணாகிப்போய்ப் படுக்கையில் கிடந்த இந்திரசித்து, தன்தந்தை தன் படுக்கையருகே வந்து, ''என்ன நிகழ்ந்தது?'' என்று கேட்டதும், இந்திரசித்தன் அந்நிலையிலும் இலக்குவனின் போராற்றலைப் புகழ்ந்துபேசும் பாடல் இது.

இந்திரசித்தன், தன் தந்தை இராவணனை நோக்கி மந்தரமலைபோன்ற தோள்களையுடைய தந்தையே! ''தேவேந்திரன், இடபவாகனத்தைச் செலுத்துகின்ற சிவபெருமான், மிக்க வலிமையுடைய கருடவாகனத்தில் ஊர்ந்துவரும் அழகன் திருமால், சூரியன் என்று இந்தக் கூட்டத்தினர்களுடன் முன்பு நான் நடத்திய போர்களிலெல்லாம்கூட நான் இவ்வளவு தளர்ந்துபோனதில்லை. அவ்வாறு தளர்ந்து சோர்ந்துபோனதாக நான் உன்னிடம் கூறியதும் இல்லை. ஆனால் இந்த மனிதனான இலக்குவனின் போராற்றலுக்கு ஒரு எல்லை என்பதே கிடையாது'' என்கிறான் இந்திரசித்தன்.

இங்கே ''எறுழ்வலி'' என்பது ஒரு பொருட்பன்மொழி. நாம் மிக்க வலிமை என்று பொருள்கொண்டிருக்கிறோம். இங்கே ''விடையின் பாகன்'' என்பது ரிஷபவாகனத்தைச் செலுத்தி வருபவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

321. படைத்தலைவர் வதைப்படலம் பக்கஎண்-1301/35
வீடணன் கூற்று

''சாலி வண்கதிர் நிகர் புரவித் தானையான்,
மூல வெங்கொடுமையின் தவத்தின் முற்றினான்,
சூலியும் வெருக்கொளத் தேரில் தோன்றுவான்,
மாலி'' என்று அடிமுறை வணங்கிக் கூறினான். (8336)

இந்திரசித்தன் இராவணனிடம் ''உடற்புண்களை ஆற்றிக்கொண்டு நாளை சென்று போரிடுவேன்'' என்று கூறியதும், படைத்தலைவர்கள் தாம் போவதாக முன்வந்து போர்க்களம் நோக்கிப் புறப்பட்டனர். போர்க்களத்துள் நுழையும் அவர்களைப் பார்த்து இராமபிரான் வீடணனிடம் ''அவர்கள் யார்?'' என்று வினவும்போது, வீடணன், மாலி என்னும் பெரும்படைத்தலைவன் பற்றிக் கூறும் பாடல் இது.

இராமபிரானின் திருவடிகளை முறைப்படி வணங்கி, வீடணன், ''இராம! சிறந்த செந்நெல்லின் வளமைமிகுந்த கதிரை ஒத்த முகத்தினை உடைய குதிரைப்படைகளைக் கொண்டவனும், கொடிய கடுமையின் மூலமே இதுதானோ என்று காண்பவர் வியக்கும் வண்ணம் கடுமையான தவத்தை முற்ற முழுக்க நிறைவேற்றியவனும், சூலாயுதத்தைக் கையில் கொண்டுள்ள சிவபெருமானே அஞ்சும்வண்ணம் அந்தத்தேரில் வருபவன்தான் மாலி என்று பெயர் பெற்ற பெரும்படைத் தலைவனாவான்'' என்று கூறுகிறான் வீடணன்.

இங்கே ''சூலி'' என்றசொல் சூலாயுதத்தைக் கையில் கொண்டவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

322. பிரமாத்திரப் படலம் பக்கஎண்-1318/14 கவிக்கூற்று

''சங்கத்தின் முழக்கம் கேட்ட கவிப்பெருந்தானை, தள்ளி,
சிங்கத்தின் நாதம் வந்து செவிப்புக விலங்கு சிந்தி,
'எங்கு உற்ற?' என்னா வண்ணம் இரிந்தபோல் இரிந்த; ஏழை
பங்கத்தன் மலை வில் அன்ன சிலை ஒலி பரப்பி, ஆர்த்தான்.
(8454)

அவ்வாறு இந்திரசித்து எழுப்பிய சங்கின் ஓசையைக் கேட்ட குரங்குப்பெரும்படை, சிங்கத்தின் கர்ஜனைக்குரல் தம் செவியில் வந்து கேட்டவுடன் சிதறி அடித்துக்கொண்டு ஓடும் விலங்கினங்கள்போல, காண்பவர்கள் ''எங்கே போய் ஒளிந்து கொண்டன'' என்று வியக்கும்வண்ணம் எல்லாப் பக்கங்களிலும் நிலைகுலைந்து ஓடிப்போயின; உமையம்மையாகிய பெண்ணைத் தன் இடப்பாகத்தில் கொண்டவனாகிய சிவபெருமான் கைக்கொண்ட மேருமலையாகிய வில்லைப் போன்று மிக்க ஓசையை எழுப்பிக்கொண்டு, இந்திரசித்தன் பேராரவாரம் செய்தான்.

இங்கே ''ஏழைபங்கத்தன்'' என்பது உமையம்மையாகிய பெண்ணைத் தன் இடப்பாகத்தில் கொண்டவன் என்று சிவபெருமானையும், ''மலைவில்'' என்பது சிவபெருமான் முப்புரங்களைச் சுட்டெரிக்கப் பயன்படுத்திய வில்லாகிய மேருமலையையும் குறிக்கும் என்க.

323. பிரமாத்திரப் படலம் பக்களண்-1319/19 கவிக்கூற்று

விடையின்மேல், கலுழன் தன்மேல், வில்லினர் விளங்குகின்ற
கடைஇல் மேல் உயர்ந்த காட்சி, இருவரும் கடுத்தார்; கண்ணுற்று
அடையின் மேருவையும் சாய்க்கும் அனுமன் அங்கதன் என்று இன்னார்
தொடையின்மேல் மலர்ந்த தாரர், தோளின்மேல் தோன்றும் வீரர்.
(8459)

இராமஇலக்குவர் முறையே அனுமன், அங்கதன் தோள்களில் அமர்ந்து போர்புரியும் செயலைக் கவிஞன் படம்பிடித்துக் காட்டும் பாடல் இது.

கட்புலன்கொண்டு பார்த்தால் மேருமலையைக்கூடச் சாய்த்துவிடும் திண்மைவாய்ந்த அனுமன்தோள்மேலும், அங்கதன்தோள்மேலும், மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலைகளையணிந்தவர்களான இராமஇலக்குவர் இருவரும் அமர்ந்திருந்த உயர்ந்த காட்சி, ரிஷபவாகனத்தின்மேல் வீற்றிருக்கும் சிவபெருமானைப்போலவும், கருடவாகனத்தில் வீற்றிருக்கும் திருமாலைப்போலவும் தோற்றமளித்தது.

இங்கு இராமபிரானுக்குத் திருமாலும், இலக்குவனுக்குச் சிவபெருமானும், அனுமனுக்கு கருடனும், அங்கதனுக்கு ரிஷபமும் உவமைகள். ''**விடையின்மேல் வில்லினர்**'' என்பது ரிஷப வாகனத்தில் வீற்றிருக்கும் விற்படையையுடைய சிவபெருமான் என்ற பொருளைத்தரும். சிவபெருமான் கையில் இருக்கும் வில்லுக்குப் பினாகம் என்பது பெயர். திருமாலின் கையில் இருக்கும் வில்லுக்குச் சார்ங்கம் என்பது பெயர். இராமபிரான் கையில் இருக்கும் வில்லுக்குக் கோதண்டம் என்பது பெயர். அர்ஜுனன் கையில் இருக்கும் வில்லுக்குக் காண்டீபம் என்பது பெயர்.

324. பிரமாத்திரப் படலம் பக்களண்-1319/23 கவிக்கூற்று

இமைப்பதன் முன்னம் வந்த இராக்கத வெள்ளம் தன்னைக்
குமைத்தொழில் புரிந்த வீரர் தனுத்தொழில் குறித்து இன்று எம்மால்
அமைப்பது என்? பிறிது ஒன்று உண்டோ? மேரு என்று அமைந்த வில்லான்,
உமைக்கு ஒரு பாகன் எய்த புரங்களின் ஒருங்கி வீழ்ந்த.
(8463)

இராமஇலக்குவர் போர்த்திறன் பற்றிக் கவிஞன் வியந்து கூறும் பாடல் இது.

''கண்மூடிக் கண்திறப்பதற்குள் ஒருநொடிப்பொழுதில் வந்து எதிர்ந்த வெள்ளம்போன்ற அரக்கர்படையைக் கொல்லும் தொழிலைச் செய்த வீரர்களான இராமஇலக்குவரின் வில்லாற்றலைப்பற்றி இப்பொழுது நம்மால் என்ன சொல்லமுடியும்? மேருமலையையே வில்லாக வளைத்துக் கைக்கொண்டவனும், உமையம்மைக்குத் தன் இடப்பாகத்தை

அளித்தவனுமாகிய சிவபெருமான், முன்பு அந்த வில்லைச் செலுத்தியதால் அந்த முப்புரங்களும் எரிந்து அழிந்துபோயின அல்லவா? அதைப்போல இந்த அரக்கர்படையும் முற்றமுழுக்க அழிந்துபோனது என்று கூறுவதைத்தவிர வேறு ஒரு உவமையால் இவர்கள் வில்லாற்றலைக் கூறமுடியுமோ?'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''மேரு என்று அமைந்த வில்லான்'' என்பது மேருமலையையே வில்லாகக்கொண்டு முப்புரங்களையும் சுட்டெரித்தவன் என்றும், ''உமைக்கு ஒரு பாகன்'' என்பது உமையம்மைக்குத் தன் இடப்பாகத்தைத் தந்தருளியவன் என்றும், சிவபெருமானைக் குறிக்கும் என்க.

325. பிரமாத்திரப் படலம் பக்கஎண்-1323/45 இராமபிரான் கூற்று

''முறுவல் வாள் முகத்தினன், முளரிக் கண்ணனும்,
''அறிவ! நீ அடுவல்'' என்று அமைதி ஆம் எனின்,
இறுதியும் காவலும் இயற்றும் ஈசரும்,
வெறுவியர்; வேறு இனி விளைவது யாது?'' என்றான். (8485)

தாமரைமலர் போலும் சிவந்த கண்களையுடைய இராமபிரான், புன்சிரிப்பு நிறைந்த ஒளிமிகுந்த முகத்தினனாய், இலக்குவனை நோக்கி, ''அறிவிற் சிறந்தவனே! நீ அழிப்பேன் என்று தீர்மானித்து அழிக்க முற்படுவாயானால், இவ்வுலகத்தை அழிக்கின்ற தொழிலையுடைய சிவபெருமானும், காத்தல் தொழில் புரிகின்ற திருமாலும்கூட உன்எதிரில் ஒன்றும் இல்லாதவர்களாகி விடுவார்கள். இதைக்காட்டிலும் வேறு என்ன நிகழ்ந்துவிடும்?'' என்று இலக்குவனின் போராற்றலைப் பாராட்டுகிறான் இராமபிரான்.

இங்கே ''ஈசர்'' என்பது சிவபெருமானையும் திருமாலையும் ஒருங்கே குறித்து நின்றது என்க. ''இறுதி ஈசர்'' என்றும் ''காவல் ஈசர்'' என்றும் இருஇடத்தும் கூட்டிப் பொருள்கொள்ள வேண்டும்.

326. பிரமாத்திரப் படலம் பக்கஎண்-1325/64 இந்திரசித்தன் கூற்று

''இலக்குவன் எனும் பெயர் உனக்கு இயைவதே என்ன,
இலக்கு வன்கணைக்கு ஆக்குவென்'' இது புகுந்து இடையே
விலக்குவன்'' என விடையவன் விலக்கினும்'', வீரம்
கலக்குவன்; இது காணும் உன் தமையனும் கண்ணால்!''
(8504)

இந்திரசித்து இலக்குவனை நோக்கி ''நீ என்னுடன் தனியே நின்று போர்செய்யப் போகிறாயா? உன் தமையனுடன் வரப்போகிறாயா? உன்னுடைய பெரும் படையை அழைத்துக்கொண்டு வந்து எல்லோரும் இறந்துபடப் போகிறீர்களா? என்று முன் பாடலில் கேட்டதற்கு, இப்போது இலக்குவன், தான் தனியே நின்று இந்திரசித்தனுடன் பொருது அவன்

உயிரைக் கொள்ளாது போர்க்களத்தைவிட்டுப் போகமாட்டேன் என்று வஞ்சினம் கூறியபொழுது, இந்திரசித்தன் அவனுக்கு மறுமொழி கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

இந்திரசித்தன் இலக்குவனை நோக்கி, ''உனக்கு இடப்பெற்ற இலக்குவன் என்ற பெயர் உனக்குப் பொருத்தமாகவே அமையும் என்பதைக் காட்டுவதற்காகவே நான் என்னுடைய வலிமைமிக்க அம்புகட்கு உன்னை இலக்காக்கப்போகிறேன். இதனிடையில் புகுந்து, ரிஷபத்தை வாகனமாகக்கொண்ட சிவபெருமானே தடுக்க முற்பட்டாலும், அவனையும் போரிட்டுக் கலக்குவேன்; இந்த நிகழ்ச்சியை உன் தமையனான இராமபிரானும் தன் கண்களால் காணும்படி செய்வேன்'' என்கிறான் இந்திரசித்து.

இங்கே ''விடையவன்'' என்பது இடபத்தை வாகனமாகக் கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

327. பிரமாத்திரப் படலம் பக்கஎண்-1334/124 அகம்பன் கூற்று

''பாகசாதனனும், மற்றைப் பகை அடும் திகிரி பற்றும்
ஏகசாதனனும், மூன்று புரமும் பண்டு எரித்துளோனும்
போக; தாம் ஒருவர் மற்று இக்குரங்கொடு பொரக் கற்றாரே
ஆக; கூற்று ஆவி உண்பது இதனின் மேற்று ஆகும்'' என்றான்.
(8564)

அனுமனுடன் போர்செய்யும் அகம்பன் என்ற இராக்கதவீரன் தன் நிலை மறந்து, அனுமனுடைய போர்த்திறத்தில் ஈடுபட்டு வியந்து பாராட்டுவதாக வருவது இப்பாடல்.

''பாகன் என்ற அசுரனைக் கொன்றழித்தவனான தேவேந்திரனும், மற்றும் பகைவர்களை அழிக்கின்ற சக்கரப்படையை ஏந்தியிருக்கும் ஒப்பற்ற திறம்படைத்த திருமாலும், முன்பு முப்புரங்களைச் சுட்டெரித்த சிவபெருமானும்கூட இவனுடன் போர்செய்யவரட்டும். அல்லது வேறு எவரேனும் அனுமனைக்காட்டிலும் போர்க்கல்வி பற்றிக் கற்றிருந்தால் அவர்கள் வேண்டுமானாலும் போர்புரியட்டும். ஆனால் இப்பொழுது இயமன் இவர்கள் உயிரை உண்பது என்பது இந்த இலக்குவனிடத்துப் பொருந்திய செயலாகும்'' என்று அகம்பன் அனுமனின் போராற்றலைப் பாராட்டி வியக்கிறான்.

இங்கே ''மூன்று புரமும் பண்டு எரித்துளோன்'' என்பது முன்பு முப்புரங்களையும் சுட்டெரித்தவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

328. பிரமாத்திரப் படலம் பக்கஎண்-1337 / 147 கவிக்கூற்று

அருளுடைக் குரிசில் வாளி, அந்தரம் எங்கும் தாம்ஆய்,
தெருள்உறத் தொடர்ந்து வீசிச் செல்வன, தேவர்காண,
இருளிடைச் சுடலை ஆடும் எண்புயத்து அண்ணல் வண்ணச்
சுருளுடைச் சடையின் கற்றைச் சுற்று எனச் சுடர்வ, கண்டான்.
(8587)

அனுமன், அங்கதன், இலக்குவன் முதலியோர் ஒருவரையொருவர் பார்க்கஇயலாமல் திகைத்து நின்றபோது, இலக்குவன் தனித்திருந்து செலுத்துகின்ற அம்புகளின் ஒளிக்கற்றை பிரகாசித்தது. அதுஇலக்குவன் இருக்குமிடத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள உதவியது என்பதைக் கூறுவது இப்பாடல்.

அருள்நிறைந்த ஆண்களிற் சிறந்தோனாகிய இலக்குவன் செலுத்துகின்ற அம்புகள் எல்லாம் ஆகாயத்திற்சென்று அதனை மூடிக்கொண்டன. அவற்றைத் தேவர்கள் கண்டார்கள்; அவ்வாறு இடைவிடாது செலுத்தப்பட்ட அம்புகளின் பேரொளி நள்ளிருட்டில் சுடுகாட்டில் நடனம் ஆடும் இயல்புடைய எட்டுத் தோள்களையுடையவனான சிவபெருமானின் அழகிய சுருட்டப்பெற்ற சடைமுடியின் தொகுதியினின்றும் எழும் ஒளிபோலப் பிரகாசித்ததை அனுமன் கண்டான்.

இங்கே ''இருளிடைச் சுடலை ஆடும் எண்புயத்து அண்ணல்'' என்பது நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

329. பிரமாத்திரப் படலம் பக்கஎண்-1338 / 156 கவிக்கூற்று

''அன்னது புரிவென்'' என்னா, ஆயிரநாமத்து அண்ணல்
தன்னையே வணங்கி வாழ்த்தி, சரங்களைத் தெரிந்து தாங்கி,
பொன்மலை வில்லினான்தன் படைக்கலம் பொருந்தப் பற்றி,
மின் எயிற்று அரக்கர்தம் மேல் ஏவினான் வில்லின் செல்வன்.
(8596)

இலக்குவன் பாசுபதாஸ்திரத்தைத் தொடுக்க முற்படுவதைக் கூறுவது இப்பாடல்.

''தெய்வப்படையை ஏவாவிட்டால் நம் சேனைகள் யாரும் திரும்பமாட்டார்கள் என்று அனுமன் அறிவுறுத்தியதைக் கேட்ட, வில்தொழிலையே தனது செல்வமாகப் பெற்ற இலக்குவன், ''சரி அப்படியே செய்கிறேன்'' என்றுகூறி, ஆயிரம் பெயர்களைக் கொண்ட சிறந்தவனான இராமபிரானை வணங்கித் துதித்து, அம்புகளை நன்கு ஆராய்ந்து

தேர்ந்தெடுத்து, அவற்றை பொன்மலையாகிய மேருமலையையே வில்லாக வளைத்துக்கொண்ட சிவபெருமானுக்குரிய பாசுபதாஸ்திரத்தைக் கைகளில் நன்றாகப் பற்றிக்கொண்டு, மின்னல்போல் ஒளிவீசும் பற்களை உடைய அரக்கர்கள்மேல் அதனைத் தொடுத்துச் செலுத்தினான்.

இங்கே ''பொன்மலை வில்லினான்'' என்பது முப்புரங்களை அழிக்கப் பொன்மயமான மேருமலையையே வில்லாகக் கைக்கொண்டவன் என்று சிவபெருமானைக் குறிக்கும். முன்பு அனுமனைச் ''சொல்லின் செல்வன்'' என்று இராமபிரான் குறிப்பிட்டதுபோல, இங்கே கவிஞன் இலக்குவனை ''வில்லின்செல்வன்'' என்று பாராட்டுவதை நோக்குக.

330. பிரமாத்திரப் படலம் பக்கஎண்-1338/157 கவிக்கூற்று

முக்கணான் படையை மூட்டி விடுதலும், மூங்கில் காட்டில்
புக்கது ஓர் ஊழித்தீயின், புறத்தின் ஓர் உருவும் போகாது
அக்கணத்து எரித்து வீழ்த்தான், அரக்கர்தம் சேனை; ஆழித்
திக்கெலாம் இருளும் தீர்ந்த; தேவரும் மயக்கம் தீர்ந்தார்.(8597)

இலக்குவன், நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானின் பாசுபதாஸ்திரத்தைச் செலுத்தியவுடன், அது மூங்கில்காட்டில் ஒப்பற்ற ஊழியிறுதிக்காலத்தீ பற்றிக்கொண்டதுபோல, ஒரு சிறு உருவம்கூட வெளியில் போகாதவண்ணம், அரக்கர்களின் சேனைக்கடலை முற்றமுழுக்க அழித்து வீழ்த்தியது. கடல் சூழ்ந்த திசைகள் எல்லாம் இருள் நீங்கப்பெற்றுப் பொலிந்து விளங்கின; இதுவரை மயக்கம் கொண்டிருந்த தேவர்கள் அந்தத் துயரம் நீங்கப்பெற்றனர் என்கிறான் கவிஞன்.

இங்கே ''முக்கணான்'' என்பது நெற்றிக் கண்ணை உடையவன் என்று சிவபெருமானையும் ''படை'' என்பது அவனுக்குரிய பாசுபதாஸ்திரத்தையும் குறித்தது என்க.

331. பிரமாத்திரப் படலம் பக்கஎண்-1339/160 கவிக்கூற்று

இலங்கையர் கோனை எய்தி, எய்தியது உரைத்தார் ''நீவிர்
விலங்கினீர் போலும்; வெள்ளம் நூற்றை, ஓர் வில்லின், வேழக்
குலங்களினோடும் கொல்லக் கூடுமோ?'' என்ன, ''கொன்றை
அலங்கலான் படையின்'' என்றார்; ''அன்னதேல் ஆகும்'' என்றான்.
(8600)

தூதர்கள் ஓடிவந்து, இலங்கையரசனான இராவணனை அடைந்து, அரக்கர்சேனை முழுவதும் அழிந்துபோனது எனத் தெரிவித்தார்கள். அதற்கு இராவணன் ''நீங்கள் அஞ்சி, ஒதுங்கி ஓடி வந்துவிட்டீர்கள் போலிருக்கிறது; ஒரேஒரு வில்லினால் நம்முடைய யானைக் கூட்டங்கள் அனைத்தையும், ஒரு நூறுவெள்ளம் அரக்கர் சேனையையும் ஒருவரால் கொன்று

அழிக்கமுடியுமோ?'' என்று இகழ்ச்சி தோன்றக்கேட்க, அதற்குத் தூதர்கள் ''கொன்றை மாலையணிந்த சிவபெருமானுக்குரிய பாசுபதாஸ்திரத்தினால் இது நிகழ்ந்தது'' என்று கூறவும் இராவணன் ''அப்படியென்றால் அது நடந்திருக்கலாம்'' என்றான்.

இங்கே ''கொன்றை அலங்கலான் படை'' என்பது கொன்றை மாலையையணிந்த சிவபெருமானின் பாசுபதாஸ்திரம் என்ற பொருளைத்தரும் என்க.

332. பிரமாத்திரப் படலம் பக்கஎண்-1345 / 203 கவிக்கூற்று

முகையின் நாள்மலர்க் கிழவற்கும், முக்கணான் தனக்கும்,
நகையும் நீங்கிய; திருமுகம் கருணையும் நலிந்த;
தொகையுள் நின்றவர்க்கு உள்ளது சொல்லி என்? தொடர்ந்த
பகையும் பார்க்கின்ற பாவமும் கலுழ்ந்தது, பரிவால். (8643)

இந்திரசித்தன் செலுத்திய பிரமாஸ்திரத்தால் கட்டுண்டு மூர்ச்சித்துக் கிடந்த இலக்குவன், மற்ற வானரப்படைத் தலைவர்கள், சேனை முதலியவற்றைக் கண்டு இராமபிரான் உற்ற துயரத்தைப் பற்றிக் கூறிவரும் கவிஞன், மற்ற தெய்வங்களும், தேவர்களும் பட்ட துயரத்தைப் பற்றியும் கூறும் பாடல் இது.

''அன்றலர்ந்த தாமரைமலரினுக்கு உரிமையானவனான பிரமதேவனுக்கும், மூன்று கண்களையுடைய சிவபெருமானுக்கும், எப்பொழுதும் அவர்கள் முகத்தில் தெரிகின்ற புன்சிரிப்பு மறைந்துபோனது. அவர்களின் கருணைபொருந்திய முகங்கள் நலிவுற்று வாடிப்போய்த் தோன்றின; இக்கடவுளர்களுக்கே இந்த நிலைமை என்றால் அவர்கள் இனத்தைச் சேர்ந்தவர்களாகிய மற்ற முப்பத்து முக்கோடித் தேவர்களுக்கும் உற்ற நிலையை என்னவென்று சொல்லுவது? அதைச் சொல்வதால் என்னபயன் விளையும்? தொடர்ந்த பகைஉணர்வுடைய அரக்கர்களும், அத் துன்பத்தினைப் பார்க்கின்ற பாவத்திற்கு அதிதேவதையான கடவுளர்களும்கூட இரக்கம்கொண்டு கண்ணீர் சொரிந்துகொண்டே இருந்தார்கள்'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''முக்கணான்'' என்பது மூன்று கண்களையுடையவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

333. பிரமாத்திரப் படலம் பக்கஎண்-1348 / 228 தேவர்கள் கூற்று

''அம்பரீடற்கு அருளியதும், அயனார் மகனுக்கு அளித்ததுவும்,
எம்பிரானே! எமக்கு இன்று பயந்தாய் என்றே ஏமுறுவேம்;
வெம்பு துயரம் நீ உழக்க, வெளிகாணாது மெலிகின்றேம்;
தம்பி துணைவா! நீ இதனைத் தவிர்த்து, எம் உணர்வைத் தாராயோ?''
(8668)

இராமபிரான் துயருற்று அலமருவதைக்கண்ட தேவர்கள் அவனை நோக்கி, ''எம் தலைவனே! நீ அம்பரீடன் என்ற சூரியகுல மன்னனுக்கும், பிரமதேவனின் மகனாகிய சிவபெருமானுக்கும் அருள்செய்ததுபோல, எங்களுக்கும் அருள்செய்து அரக்கர்களிடமிருந்து காப்பாற்றுவாய் என்று கருதியே உன்னை வந்து எங்களுக்குப் பாதுகாப்புத் தரும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டோம். எனினும் இப்போது நீயே இத்தகைய கொடிய துயரத்தை அனுபவிக்கும்போது, அதனின்றும் வெளியேறும் வழிதெரியாமல் திகைத்து மெலிகின்றோம். ஐயனே! தம்பி இலக்குவனுக்கு எப்போதும் துணையாய் இருப்பவனே! இந்தத் துயரத்தைத் தவிர்த்து, எங்களுக்கு நல்லுணர்வை அளித்து அருள்செய்ய மாட்டாயோ?'' என்று வேண்டுகிறார்கள் தேவர்கள்.

இங்கே அம்பரீடனுக்கு அருளியது என்பதும், அயனார் மகனுக்கு அளித்ததுவும் என்பதுவும் இரண்டு புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டன.

இங்கே ''அயனார்மகன்'' என்பது பிரமதேவனின் புதல்வன் என்று சிவபெருமானைக் குறிக்கும். பிரமதேவனின் மகன் சிவபெருமான் என்பது வைணவக் கருத்து.

334. சீதை களம்காண் படலம் பக்களண்-1350/5 கவிக்கூற்று

மங்கை அழலும், வான் நாட்டு
        மயில்கள் அழுதார்; மழவிடையோன்
பங்கின் உறையும் குயில் அழுதாள்;
        பதுமத்து இருந்த மாது அழுதாள்;
கங்கை அழுதாள்; நாமடந்தை
        அழுதாள்; கமலத் தடங்கண்ணன்
தங்கை அழுதாள்; இரங்காத
        அரக்கிமாரும் தளர்ந்து அழுதார். (8675)

''இலக்குவன், இராமபிரான் முதலியோர் களத்தில் இறந்துபட்டனர்'' என்று தூதர்கள் வந்து கூறியதும், இராவணன் களியாட்டத்திற்கு ஏற்பாடு செய்யச்சொல்லியும், களத்தில் இறந்துபட்ட அரக்கர்கள் உடல்களையெல்லாம் கடலில் தள்ளி விடும்படியும் மகோதரனுக்குக் கட்டளையிட்டுவிட்டு, அரக்கியரை அழைத்து, ''இப்போது சீதையை விமானத்தில் அழைத்துக்கொண்டுபோய் போர்க்களத்தில் இறந்துபட்டுக் கிடக்கும் இராமனைக் காணுமாறு செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டான். சீதை களத்திற்கு வந்து இராமபிரானைக் கண்டு பட்ட துயரத்தையும், மற்றவர்கள் பட்ட துயரத்தையும் படம்பிடித்துக் காட்டும் பாடல் இது. இது கவிக்கூற்று.

பெண்களிற் சிறந்தவளாகிய சீதை போர்க்களம் வந்து விமானத்திலிருந்து இராமபிரான் நிலையைக் கண்டதும் அதனைத் தாங்கவொண்ணாது அழலானாள். அவள் அழுததுகண்டு விண்ணுலகத்திலுள்ள மயில்போலும் சாயலைக்கொண்ட தேவமகளிர் எல்லோரும் அழுதார்கள். இளமையான காளைவாகனத்தையுடைய சிவபெருமானின் இடப்பாகத்தில் உறையும் குயில்போலும் குரலினிமையுடைய உமையம்மை அழுதாள்; செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் அழுதாள்; சிவபெருமானின் சடைமுடியில் தங்கியிருக்கும் கங்கை என்னும் பெண்ணும் அழுதாள்; தாமரைமலர் போலும் பெரிய கண்களையுடைய திருமாலின் தங்கையாகிய துர்காதேவியும் அழுதாள்; இரக்கம் என்று ஒரு பொருளே இல்லாத அரக்கியர்களும்கூட மனம்மிக வருந்தி அழலானார்கள்.

இங்கே ''மழவிடையோன்'' என்பது இளமையான காளையை வாகனமாக உடையவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

335. மருத்துமலைப் படலம் பக்களண்-1361 / 37 தேவர்கள் கூற்று

வானநாட்டு உறைகின்றார், ''வயக்கலுழன்
வல்விசையால், மாயன் வைகும்
தானநாட்டு எழுகின்றான்'' என்றுரைத்தார்
சிலர்; சிலர்கள் ''விரிஞ்சன்தான் தன்
ஏனை நாட்டு எழுகின்றான்'' என்றுரைத்தார்
சிலர்; சிலர்கள் ''ஈசன் அல்லால்
போன நாட்டிடைப் போகவல்லாரோ?
இவன் முக்கண் புனிதன்'' என்றார் (8739)

சீதாதேவி களம்கண்டு அரற்றியபோது, திரிசடை காரணகாரியங்களைக்கூறித் தேற்றி, விமானம் ஏற்றி அசோகவனத்திற்குச் சென்றபின்பு, வீடணன் வந்து போர்க்களத்தில் இராமன், இலக்குவன் உட்பட எல்லோரும் மயங்கிக் கிடந்தது கண்டு திகைத்து, யாராவது உயிரோடு இருக்கின்றனரா என்று அம்கையில் விளக்கொன்று ஏந்திச்சென்று பார்க்கும்போது அனுமன் மட்டும் முனகிக்கொண்டிருந்ததைக் கண்டு, அவன் உடம்பின்மேல் படிந்திருந்த அம்புகளை அகற்றி அவனைத் தேற்றுவித்து, இருவரும் சேர்ந்து மூத்தவனான சாம்பவனைக் கண்டார்கள். சாம்பவன், அனுமன் உயிருடனிருப்பதைக் கண்டு மிக மகிழ்ந்து அவனுக்கு மருத்துமூலிகைகள் இருக்கும் இடத்தின் அடையாளத்தைச் சொல்லி அவனை மிக விரைவாக அவற்றைக் கொணரும்படி பணித்தான். அனுமன் நொடிப்பொழுதில் பேருருக்கொண்டு வானில் எழுந்தான். அவன் போக்கைக்கண்டு வானவர் பேசிக்கொண்டது பற்றிக் கூறும் பாடல் இது.

விண்ணுலகில் வசிக்கின்ற தேவர்கள் சிலர், ''வெற்றிபொருந்திய கருடன்தான் தனது மிக்க வேகத்தால் திருமால் உறைகின்ற இடமாகிய பாற்கடலினின்றும் எழுந்து செல்கின்றான்'' என்றார்கள். இன்னும் சிலர் ''பிரமதேவன்தான், தான்உறையும் சத்தியலோகத்தை விட்டு வேறு ஏதோ ஒரு பிற நாட்டிற்குச் செல்லுகின்றான்'' என்றார்கள்; மற்றும்சிலர், ''சிவபெருமானைத் தவிரவேறு எவராலும் மிகச் சேய்மையிலுள்ள நாட்டிற்குப் போக இயலுமோ? எனவே இவன்தான் அந்த மூன்று கண்கள் படைத்த தூயவனான சிவபெருமான்'' என்றார்கள்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமான் என்ற பொருளைத்தரும். ''முக்கண் புனிதன்'' என்பது மூன்று கண்களையுடையவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

336. மருத்துமலைப் படலம் பக்களண்-1363/43கவிக்கூற்று

இமய மால்வரையை உற்றான்; அங்குஉள இமைப்பிலோரும்,
கமையுடை முனிவர் மற்றும் அறன்நெறி கலந்தோர் எல்லாம்,
''அமைக நின் கருமம்!'' என்று வாழ்த்தினர்; அதனுக்கு அப்பால்,
உமையொரு பாகன் வைகும் கயிலை கண்டு, உவகை உற்றான்.
(8745)

சாம்பவன் கூறிய வழியில் சென்ற அனுமன் கயிலயங்கிரியைச் சென்று அடைந்தது பற்றிக் கூறுகிறது இப்பாடல்.

அனுமன் பெரிய இமயமலையை அடைந்தான். அங்கிருந்த இமையாநாட்டத்தவர்களாகிய தேவர்களும், மிக்க பொறுமையுள்ள முனிவர்களும், அறநெறி வழுவாது வாழ்கின்ற சான்றோர்களும், ''நீ கருதிவந்த செயல் இனிதாகவும், எளிதாகவும், விரைவாகவும் நிறைவேறுக!'' என்று வாழ்த்தினார்கள். பின்னர் உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவ பெருமான் உறையும் கயிலைமலையைக் கண்டு அனுமன் மிக்க மகிழ்வெய்தினான்.

இங்கே ''உமையொரு பாகன்'' என்பது உமையம்மையை இடப்பாகத்தில் கொண்டிருக்கும் சிவபெருமான் என்றும், ''வைகும் கயிலை'' என்பது சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலை மலையையும் குறிக்கும் என்க.

337. மருத்துமலைப் படலம் பக்களண்-1363/44 கவிக்கூற்று

வட குணதிசையில் தோன்றும் மழுவலான் ஆண்டு வைகும்
தடவரை அதனை நோக்கி, தாமரைக் கைகள் கூப்பி,
படர்குவான் தன்னை, அன்பால் பரமனும் விசும்பில் பார்த்தான்;
தடமுலை உமைக்குக் காட்டி, ''வாயுவின் தனையன்'' என்றான்.
(8746)

வடகிழக்குத் திசையில் காட்சி தருகின்ற மழுப்படையை ஏந்தியுள்ள வனாகிய சிவபெருமான், தான் வீற்றிருக்கும் பெரிய கயிலாயமலையை நோக்கித் தன் சிவந்த தாமரைமலர் போன்ற கைகளைக் குவித்துக்கொண்டே ஆகாயத்தில் வருகின்றவனாகிய அனுமனைப் பார்த்து, மிக்க அன்புகொண்டு, தன் துணைவியாகிய உமையம்மைக்கு அனுமனைச் சுட்டிக்காட்டி ''இவன் வாயுதேவனின் மைந்தனாவான்'' என்று கூறினான்.

இங்கே ''மழுவலான்'' என்பது மழுவாயுதத்தைக் கைக்கொண்டிருப் பவன் என்று சிவபெருமானையும் ''பரமன்'' என்பது ஈசன், பரம்பொருள் என்ற பொருளில் சிவபெருமானையும் குறிக்கும் என்க.

338. மருத்துமலைப் படலம் பக்களண்-1364/51 கவிக்கூற்று

ஆயதன் வடகீழ்ப் பாகத்து, ஆயிரம் அருக்கர் ஆன்ற
காய்கதிர் பரப்பி, ஐந்து கதிர்முகக் கமலம் காட்டி,
தூய பேர் உலகம் மூன்றும் தூவிய மலரின் சூழ்ந்த
சேயிழை பாகத்து எண்தோள் ஒருவனை வணக்கம் செய்தான்.
(8753)

அனுமன் அந்த மலையின் வடகிழக்குப் பகுதியில் ஆயிரக்கணக்கான சூரியர்கள், நிறைந்து குவிந்திருக்கின்ற இருளைப்போக்கி ஒளிபரப்பி, ஐந்து முகங்களான சிவபெருமானின் தாமரைமலரையும் பூக்கச்செய்து கொண்டிருப்பதையும் கண்டான். மேலும் தூய்மையான பெரிய மூன்று உலகத்தவர்களும் சொரிந்த மலர்களால் சூழ்ந்திருக்கின்றவளும், செம்மையான சிவந்த அணிகலன்களை அணிந்திருப்பவளுமான உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டுள்ளவனும் எட்டுத் தோள்களையுடையவனுமான ஒப்பற்றவனான சிவபெருமானை மன மொழி மெய்களால் வணங்கிச் சென்றான்.

இங்கே ''சேயிழை பாகத்து எண்தோள் ஒருவன்'' என்பது செம்மையான அணிகலன்களை அணிந்துள்ள உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டிருக்கும் எட்டுத் தோள்களையுடைய ஒப்பற்றவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

339. மருத்துமலைப் படலம் பக்களண்-1365/58 கவிக்கூற்று

வன்னி நாட்டிய பொன்மௌலி வானவன், மலரின் மேலான்,
கன்னி நாள் திருவைச் சேரும் கண்ணனும், ஆளும் காணி,
சென்னி நாள் தெரியல் வீரன், தியாக மா விநோதன் தெய்வப்
பொன்னி நாட்டு உவமை வைப்பை, புலன்கொள, நோக்கிப் போனான்.
(8760)

நெருப்புப்போன்று சிவந்த பொன்நிறத்தை எடுத்துக் காட்டுகின்ற சடைமுடியை உடையவனான தேவர்தலைவன் சிவபெருமான், தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவன், இளமைமாறாத, கன்னிப் பருவமுடைய திருமகளாகிய இலக்குமியை அடைந்திருக்கும் கருணைவடிவானவனான திருமால், ஆகியோரெல்லாம் ஆளுகின்ற சிவலோகம், சத்தியலோகம், வைகுந்தம் ஆகிய இடங்களெல்லாம் அன்றலர்ந்த மலர்மாலையைச் சூடிய தலையை உடைய சோழமன்னனான வீரன் தியாகமாவிநோதன் ஆட்சிசெய்யும் தெய்வத்தன்மை வாய்ந்த காவிரிபாயும் நாடாகிய சோழநாட்டுக்கு உவமைகூறத் தக்கனவாகும். அவ்விடங்களையெல்லாம் நன்றாகக் கண்டுகொண்டு உத்தரகுரு நாட்டை நோக்கிப் போனான் அனுமன்.

இங்கே ''வன்னி நாட்டிய பொன்மௌலி வானவன்'' என்பது நெருப்புப்போல் சிவந்துகாட்டும் பொன்நிறமாகிய சடைமுடியையுடைய தேவர்தலைவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''வன்னி'' என்ற சொல்லுக்கு வன்னி இலை என்றும் ஒரு பொருள் உண்டு. கொன்றை மலர்போல் இவ்வன்னி இலையையும் சிவபெருமான் சூடியுள்ளதாகவும் ஒரு குறிப்பு உண்டு.

340. மருத்துமலைப் படலம் பக்கஎண்-1369/87 சாம்பவன் கூற்று

''யான் அலால், எந்தையாய் உலகை ஈன்றுளான்
தான் அலால், சிவன் அலால், நேமிதாங்கிய
கோன் அலால், எனைவரும் உணரும் கோள்இலர்;
வேனிலான் மேனியாய்! மருந்தை மெய்உற. (8789)

இராமபிரான் பூசனை முடித்துவந்து, ''இங்கு என்ன நிகழ்ந்தது?'' என்று கேட்டபொழுது சாம்பவன் தான் அனுமனை மருத்துமலை சென்று மருத்து மூலிகைகளைக் கொண்டுவரச் சொன்னதையும் அதன் சிறப்புப் பற்றித் தானும், பிரமதேவன், சிவபெருமான், திருமால் ஆகிய மூவர்மட்டுமே அறிந்திருப்பதாகவும் கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

சாம்பவன் இராமபிரானைப் பார்த்து, ''மன்மதனைப் போன்று மேனி அழகுடையவனே! இராம! நான் அனுமனை அனுப்பி இவர்களை உயிர் பெற்றெழச்செய்யும் மருந்து மூலிகைகளைக் கொண்டுவரச்செய்திருக்கிறேன். அனுமன் இன்னும் ஒரு நொடிப்பொழுதில் வந்து சேருவான். அந்த மருந்து மூலிகைகளின் உண்மைத்தன்மையை என்னைத்தவிர, இவ்வுலகத்தைப் படைத்தருளிய என் தந்தைபோன்ற பிரமதேவனைத்தவிர, சிவபெருமானைத் தவிர, சக்கரப்படையை ஏந்தியுள்ள தலைவன் திருமாலைத்தவிர, வேறு

ஒருவரும் அறியமாட்டார்கள். அதனை அறிந்துகொள்ளும் ஆற்றலும் அற்றவர்களாவார்கள்'' என்கிறான் சாம்பவன்.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

341. மாயாசீதைப் படலம் பக்கஎண்-1377 / 7 மாலியவான் கூற்று

''வாலியை வாளி ஒன்றால் வானிடைவைத்து, வாரி
வேலையை வென்று, கும்பகருணனை வீட்டினானை,
ஆலியின் மொக்குள் அன்ன அரக்கரோ அமரின் வெல்வார்?
சூலியைப் பொருப்பினோடும் தூக்கிய விசயத் தோளாய்!''
(8846)

அனுமன் கொணர்ந்த மருந்து மூலிகைகளால் மீண்டும் உயிர்பெற்றெழுந்த இலக்குவன் முதலான வானரச்சேனை எழுப்பிய பேராரவாரத்தைக் கேட்டுத் திகைத்து நின்ற இராவணனுக்கு, அவன் பாட்டன் மாலியவான் மீண்டும் அறிவுரை கூறத் தொடங்கும் பாடல் இது.

''சூலாயுதத்தைக் கையில் ஏந்திய சிவபெருமானை அவன் வீற்றிருந்த கயிலை மலையொடும் பெயர்த்தெடுத்த வெற்றித் தோள்களையுடையவனே! இராவணா! வாலியை ஒரே அம்பினால் வானுலகத்துக்கு அப்புறத்து உலகுக்கு அனுப்பிவைத்து, நீர்நிறைந்த கடலைக் கற்களால் அடைத்து, வருணனையும் வென்று, கும்பகருணனைப் போரில் அழித்து வந்திருப்பவனான இராமபிரானை, நீரில்தோன்றும் குமிழிபோலத் தோன்றிமறையும் அரக்கர்களால் போரிட்டு வெல்லவும் முடியுமோ?'' என்று மாலியவான் இராமபிரானின் போராற்றலை வியந்து பாராட்டி இராவணனிடம் சீதையை விட்டுவிட்டுப் போர்செய்வதை நிறுத்திவிடுதலே தக்கது என்று அறிவுறுத்துகிறான்.

இங்கே ''சூலி'' என்பது சூலப்படையைக் கைக்கொண்டவன் என்று சிவபெருமானையும், ''பொருப்பு'' என்பது சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையையும் குறிக்கும் என்க.

342. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1390 / 4
இராமபிரான் கூற்று

''முக்கணான் படையும், ஆழிமுதலவன் படையும், முன்நின்று
ஒக்கவே விடுமே; விட்டால், அவற்றையும், அவற்றால் ஓயத்
தக்கவாறு இயற்றி, மற்று உன்சிலை வலித் தருக்கினாலே
புக்கவன் ஆவிகொண்டு, போதுதி, புகழின் மிக்கோய்!'' (8937)

இராமபிரான் இலக்குவனை நோக்கி, ''புகழால் மேம்பட்டவனே! அந்த இந்திரசித்தன் மூன்று கண்களையுடைய சிவபெருமானின் பாசுபதாஸ்திரத்தையும், சக்கரப்படையை உடையவனான மூலப்பரம்பொருளான திருமாலின் நாராயணாஸ்திரத்தையும், முதன்முதலாக ஒருசேரச் செலுத்துவான். அவன் அவ்வாறு செலுத்தினால், நீ அவ்வம்புகளைக் கொண்டே அவற்றின் வலிமை குறைந்து போகுமாறு அதற்குத்தக்கவாறு எதிர்த்துப் போர்செய்து, உன்னுடைய போராற்றலின் திறமையினால், போர்க்களத்தில் நுழைந்து வந்திருப்பவனாகிய இந்திரசித்தனின் உயிரைப்பறித்துக் கொண்டு வருவாயாக!'' என்றான்.

இங்கே ''முக்கணான் படை'' என்பது நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானின் படைக்கலமாகிய பாசுபதாஸ்திரத்தைக் குறிக்கும் என்க.

343. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1391/10 கவிக்கூற்று

ஆணி இவ்வுலகுக்கு ஆன ஆழியான், புறத்தின் ஆர்த்த
தூணியும் கொடுத்து, மற்றும் உறுதிகள் பலவும் சொல்லி,
தாணுவின் தோற்றத்தானைத் தழுவினன்; தழுவலோடும்,
சேண்உயர் விசும்பில் தேவர், ''தீர்ந்தது எம் சிறுமை'' என்றார்.
(8943)

நிகும்பலை யாகத்தை அழித்து வருமாறு இராமபிரான் இலக்குவனுக்கு அம்பறாத்தூணியைக் கொடுத்து அனுப்பிவைக்கும் நிகழ்வைக் குறிக்கும் பாடல் இது.

இவ்வுலகமாகிய தேர் இயங்குவதற்கு அச்சாணி போன்றவனான சக்கரப்படையை உடைய திருமாலின் அவதாரமான இராமபிரான், தன் முதுகுப்புறத்தில் கட்டியிருந்த அம்பறாத்தூணியையும் இலக்குவனுக்கு கொடுத்து, மேலும் பல நன்மைபயக்கும் உறுதிமொழிகளைக்கூறி, செந்நிறம் பொருந்திய சிவபெருமானைப்போன்று தோற்றம் அளிப்பவனான இலக்குவனை மார்புறத் தழுவிக்கொண்டான். அவ்வாறு இராமபிரான் இலக்குவனைத் தழுவிக்கொண்டதும், மிகுந்த உயரத்தில் இருக்கும் விண்ணுலகத்துத் தேவர்கள் எல்லோரும் மிக்க மகிழ்ந்து ''இன்றுடன் எங்கள் சிறுமை நீங்கிவிட்டது'' என்று கூறலானார்கள்.

இங்கே ''தாணு'' என்றசொல் சிவந்த நிறமுடையவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்தது என்க. தாணு என்ற சொல்லுக்கு ''மலை'' என்ற ஒரு பொருளும் உண்டு. மலைபோன்ற தேகஉறுதிகொண்ட சிவபெருமானைப் போன்றவன் இலக்குவன் என்று பொருள்கொள்ளுதலும் பொருந்தும். ''தாணு ஆலயன்'' என்றசொல் தாணுமாலயன் என்று இப்போது வழங்கப்படுவதையும் நினைத்துப் பார்க்கலாம்.

344. நிகும்பலை யாகப்படலம் பக்களண்-1392/11 கவிக்கூற்று

மங்கலம் தேவர்கூற, வானவ மகளிர் வாழ்த்தி,
பங்கம்இல் ஆசிகூறி, பலாண்டு இசைபரவ, பாகத்
திங்களின் மோலி அண்ணல் திரிபுரம் தீக்கச் சீறிப்
பொங்கினன் என்னத்தோன்றிப் பொலிந்தனன், போர்மேல் போவான்.
(8944)

இலக்குவன் நிகும்பலை யாகத்தை அழிக்கும்பொருட்டுப் போருக்குப் புறப்பட்டுச் செல்லும் காட்சி இது.

போர்மேற்கொண்டு செல்பவனாகிய இலக்குவன் தேவர்கள் ஆசிகூறவும், தேவமகளிர் வாழ்த்துக்கூறி, குற்றமற்ற சொற்களால் பல்லாண்டு பாடிப்பரவவும், பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் தரித்திருக்கும் பெருமைக்குரியவனான சிவபெருமான் முப்புரத்தைச் சுட்டெரிக்கச் சீறிப் பொங்கியெழுந்ததுபோன்ற தோற்றத்தை உடையவனாகிப் பொலிவுற்றுத் திகழ்ந்தான்.

இங்கே ''பாகத்திங்களின் மோலி அண்ணல்'' என்பது பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் சூடியிருக்கும் பெருமைக்குரியவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்தது என்க. சிவபெருமான் முப்புரத்தைச் சுட்டெரிப்பதற்காகப் பொங்கியெழுந்து சென்றதுபோல் இப்பொழுது இலக்குவன் இந்திரசித்தனின் யாகத்தைக் குலைப்பதற்காகப் போரிடப் பொங்கி எழுந்து சென்றான் என்பதாம்.

345. நிகும்பலை யாகப்படலம் பக்களண்-1394/28 கவிக்கூற்று

தேவாசுரரும், திசை நான்முகனும்,
மூவா முதல் ஈசனும், மூஉலகின்
கோ ஆகிய கொற்றவனும், முதலோர்
மேவாதவர் இல்லை, விசும்பு உறைவோர். (8961)

இலக்குவன் இந்திரசித்தனோடு போர்செய்வதைக் காண்பதற்காகத் தேவர்களும், அசுரர்களும், நான்கு திசைகளிலும் நான்கு முகங்களைக்கொண்டவனான பிரமதேவனும், மூப்பு என்பதே இல்லாத தலைவனான சிவபெருமானும், மேல், நடு, கீழ் என்ற இம் மூவுலகங்களின் தலைவன் என்று போற்றப்படும் வெற்றிக்குரியவனான திருமாலும், ஆகிய அனைவரும் ஆகாயத்தில் ஒருசேரக் குழுமினார்கள். விண்ணுலகில் உறைபவர்களில் அங்குவந்து சேராதவர்கள் வேறுஒருவரும் இல்லை.

இங்கே ''மூவாமுதல் ஈசன்'' என்பது, மூப்பு என்பதே இல்லாத, என்றும் இளமையாகவே தோற்றமளிக்கும் தலைவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

346. நிகும்பலை யாகப்படலம் பக்களண்-1401/74 அனுமன் கூற்று

''பாசமோ, மலரின் மேலான் பெரும்படைக்கலமோ, பண்டை
ஈசனார் படையோ, மாயோன் நேமியோ, யாதோ, இன்னம்
வீச நீர் விரும்புகின்றீர்? அதற்கு நாம் வெருவி, சாலக்
கூசினோம்; போதும் போதும்; கூற்றினார் குறுகவந்தார்''
(9007)

அனுமன் இந்திரசித்தனை நோக்கி, ''நாகபாசத்தையா அல்லது தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனின் பெரிய படைக்கலமாகிய பிரமாஸ்திரத்தையா, அல்லது மிகப்பழமையான சிவபெருமானின் படைக்கலமாகிய சூலாயுதத்தையா, அல்லது திருமாலின் சக்கரப்படையையா? எதை இன்னும் எங்கள்மீது வீசலாம் என்று கருதியிருக்கிறாய்? அவற்றிற்கெல்லாம் நாங்கள் மிகவும் அஞ்சி, மிகவும் நடுக்கமுற்றுப் பின்வாங்கி நிற்கிறோம்; நீங்கள் செய்ததெல்லாம் போதும்; இத்துடன் நிறுத்திக்கொள்ளுங்கள்; இயமன் உங்களுக்கு மிக அருகில் நெருங்கிவந்து விட்டான்'' என்று இகழ்ச்சியாகவும் எச்சரிக்கை தருவதுபோலவும் பேசுகிறான் அனுமன்.

இங்கே ''ஈசனார்'' என்பது சிவபெருமானையும், ''ஈசனார் படை'' என்பது சிவபெருமானின் சூலாயுதத்தையோ அல்லது இராவணனுக்கு அவன் உவந்தளித்த சந்திரகாசம் என்னும் வாட்படையையோ கொள்ளலாம். ''நாம் வெருவி சாலக் கூசினோம்'' என்பது இகழ்ச்சிக் குறிப்பு. ''போதும் போதும்'' என்ற அடுக்கு நிறுத்திக்கொள்ளுங்கள் என்று வேண்டிக்கொண்ட குறிப்பாகக் கொள்ளவேண்டும்.

347. நிகும்பலை யாகப்படலம் பக்களண்-1401/76 அனுமன் கூற்று

''விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணலும், விரிஞ்சன்தானும்,
படம் துடிக்கின்ற நாகப் பாற்கடல் பள்ளியானும்,
சடம் துடிக்கிலராய் வந்து தாங்கினும், சாதல் திண்ணம்;
இடம் துடிக்கின்றது உண்டே? இருத்திரோ? இயம்புவீரே!''
(9009)

ஆலகால விஷத்தைப் பருகியதால் அது தங்கியிருக்கின்ற கழுத்தை உடையவனான சிவபெருமானும், பிரமதேவனும், படம்விரித்து ஆடுகின்ற பாம்பையே பாற்கடலில் படுக்கையாகக் கொண்டிருக்கும் திருமாலும், தங்கள் உடம்பு நடுக்கமுறாதவராய் வந்து உங்களைக் காப்பாற்ற நினைத்தாலும் நீங்கள் அழிந்துபோகப்போவது உறுதியானதாகும். இப்போதே உங்களுக்கு உடம்பின் இடப்பகுதி துடித்துக் கொண்டிருக்கவேண்டுமே! நீங்கள் இன்னும் உயிரோடு இருக்கிறீர்களா? கூறுங்கள்!'' என்கிறான் அனுமன்.

இங்கே ''விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணல்'' என்பது ஆலகால விஷத்தைப்பருகி, அது தொண்டையில் தங்கியிருக்கும் கழுத்தினையுடைய பெருமைக்குரியவனானவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க. இங்கே ''துடிக்கின்ற'' என்ற ஒரேசொல், தங்கியிருக்கிற, ஆடுகின்ற, நடுங்குகின்ற என்ற பொருள்களில் கையாளப்பட்டிருப்பதையும் உணர்க.

348. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1402/86 கவிக்கூற்று

ஊதினான் சங்கம்; வானத்து ஒண்தொடி மகளிர் ஒண்கண்
மோதினார்; ''கணத்தின் முன்னே, முழுவதும் முருக்கி முற்றக்
காதினான்'' என்ன, வானோர் கலங்கினார்; கயிலையானும்
போதினான்தானும், ''இன்று புகுந்தது பெரும்போர்'' என்றார்.
(9019)

இந்திரசித்தன் போர்ச்சங்கை எடுத்து முழக்கினான்; விண்ணுலகத்தில் உள்ள ஒளிமிக்க வளையலணிந்த தேவமகளிர் எல்லோரும் தங்கள் ஒளிவாய்ந்த கண்களைத் தம் கைகளால் அடித்துக்கொண்டார்கள். ''ஒருநொடிப் பொழுதிற்குள் பகைவர்படை எல்லாவற்றையும் முற்றமுழுக்க அழித்து ஒழித்துவிடுவானே!'' என்று தேவர்கள் கலக்கம் அடைந்தனர். கயிலைமலையில் வீற்றிருப்பவனாகிய சிவபெருமானும், தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும் ''இன்று நல்லபெரிய போர் நிகழப்போகிறது'' என்று தமக்குள் கூறிக்கொண்டார்கள்.

இங்கே ''கயிலையான்'' என்பது கயிலைமலையை இருப்பிடமாகக் கொண்டவன் என்றபொருளில் சிவபெருமானைக் குறித்தது என்க.

349. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1406/114 கவிக்கூற்று

நீர்ஒத்தன; நெருப்புஒத்தன; பொருப்புஒத்தன; நிமிரும்
கார்ஒத்தன; உரும்ஒத்தன; கடல்ஒத்தன; கதிரோன்
தேர்ஒத்தன; விடைமேலவன் சிரிப்புஒத்தன; உலகின்
வேர்ஒத்தன; செருஒத்து இகல்அரக்கன் விடு விசிகம். (9047)

இந்திரசித்தனும் இலக்குவனும் செய்கின்ற சமமான போரில், இந்திரசித்தன் செலுத்துகின்ற அம்புகளில் சில நீரை ஒத்திருந்தன; சில நெருப்பை ஒத்திருந்தன; சில மலையை ஒத்திருந்தன; சில உயர்ந்த மேகங்களை ஒத்திருந்தன; சில இடியை ஒத்திருந்தன; சில கடலைப் போன்றிருந்தன; சில சூரியனின் ஏழு பச்சைக் குதிரைகள் பூட்டிய ஒற்றைச்சக்கரத் தேரைப்போன்றிருந்தன; சில காளையின்மேல் ஊர்ந்துவரும் சிவபெருமானின் சிரிப்பைப் போன்றிருந்தன; சில இவ்வுலகத்திற்கே மூலமான வேர் போன்றிருந்தன என்கிறான் கவிஞன்.

முன்பு இலக்குவன் செலுத்திய அம்பின் தன்மையை விளக்கிய கவிஞன், இந்தப் பாடலில் இந்திரசித்தன் செலுத்திய அம்பின் தன்மையைச் சிறப்பிக்கிறான் என்பதாம்.

இங்கே ''விடைமேலவன்'' என்பது காளையை வாகனமாகக் கொண்டு ஊர்ந்து வருபவன் என்றபொருளில் சிவபெருமானைக் குறித்தது என்க.

350. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1408 / 123 கவிக்கூற்று

பதைத்தான், உடல் நிலைத்தான், சில பகுவாய் அயில்பகழி
விதைத்தான்; அவன் விலக்காதமுன், விடைமேல் வரு விமலன்
மதத்தால் எதிர் வரு காலனை, ஒருகால் உற மருமத்து
உதைத்தால் என, தனித்து ஓர்கணை அவன் மார்பிடை உய்த்தான்.
(9056)

இந்திரசித்தன் செலுத்திய அம்புகளால் உடல் பதைத்துப்போன இலக்குவன். தன்னை ஒருவாறு நிலை நிறுத்திக்கொண்டு, சில பிளவுபட்ட வாயையுடைய கூரிய அம்புகளை இந்திரசித்தன்மீது செலுத்தினான். அவ்வம்புகளை இந்திரசித்தன் தடுத்து விலக்கிக்கொள்ளுவதற்கு முன்பே, காளைமீது ஊர்ந்து வருபவனும், குற்றமற்றவனுமான சிவபெருமானின் எதிரில் முன்னொரு காலத்தில், செருக்கு மிகுதியால் வந்துநின்ற இயமனை, தனது ஒருகால் நன்றாகப் பொருந்தும்படி மார்க்கண்டேயனுக்காக அவன் மார்பில் உதைத்துத் தள்ளினான் அல்லவா? அதுபோல ஒப்பற்ற ஒரு அம்பினை இந்திரசித்தனது மார்பின்மீது செலுத்தினான் இலக்குவன்.

இங்கே ''விடைமேல் வரு விமலன்'' என்பது காளையை வாகனமாகக் கொண்டு ஊர்ந்துவருபவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''மதத்தால் எதிர்வரு காலனை ஒருகால் உற மருமத்து உதைத்தது'' என்பது, மார்க்கண்டேயனுக்காகச் சிவபெருமான் இயமனை உதைத்துத் தள்ளிய புராணக்குறிப்பை உணர்த்துவது காண்க.

351. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1408 / 127 கவிக்கூற்று

''வில் இங்கு இது, நெடுமால், சிவன் எனும் மேலவர் தனுவே
கொல்?'' என்று கொண்டு அயிர்த்தான், நெடுங்கவசத்தையும் குலையாச்
செல்லும் கொடுங்கணை யாவையும் சிதையாமையும் தெரிந்தான்,
வெல்லும் தரம் இல்லாமையும் அறிந்தான்; அகம் மெலிந்தான்.
(9060)

''இப்போது இலக்குவன் கைக்கொண்டிருக்கும் வில், பெருமை பொருந்திய கடவுள்களாகிய திருமாலினது சார்ங்கம் என்னும் வில்லோ? அல்லது சிவபெருமான் கையில் இருக்கும் பினாகம் என்னும் வில்லோ?''

என்று சிறிது ஐயுற்றான் இந்திரசித்து. இலக்குவன் செலுத்திய அம்புகள் தனது நீண்ட பெரிய கவசத்தை நிலைகுலையச் செய்தபின்னும் அந்தக் கொடுமையான அம்புகள் எல்லாம் சற்றும் சிதைவடையாமல் முன்பு இருந்ததுபோலவே இருப்பதையும் நன்கு ஆராய்ந்து தெரிந்துகொண்டான்; எனவே, தான் இந்த இலக்குவனை வெல்லமுடியுமோ? என்று தன்மீது இருந்த தன்னம்பிக்கையும் சற்று தளரப்பெற்றான். எனவே உள்ளம் தளர்ந்து உடலும் சோர்ந்துபோனான் இந்திரசித்து.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

352. நிகும்பலை யாகப் படலம் பக்களண்-1409/132 கவிக்கூற்று

வானின்தலை நிலைநின்றவர் மழுவாளியும், மலரோன்
தானும், முனிவரரும், பிற தவத்தோர்களும், அறத்தோர்
கோனும், பிறபிற தேவர்கள் குழுவும், மனம் குலைந்தார்;
''ஊனம் இனி இலதாகுக, இளங் கோக்கு'' என உரைத்தார்.
(9065)

இலக்குவன் இந்திரசித்தன் இடையே நிகழ்ந்த பெரும் போரைக்கண்டு மற்றவர்கள் அடைந்த துயரநிலையைக் கூறுவது இப்பாடல்.

விண்ணுலகத்தில் நிலையாக வாழ்ந்துவருபவர்களான தேவர்களும், மழுவாயுதத்தை ஏந்திய சிவபெருமானும், தாமரை மலரில் வீற்றிருப்பவனான பிரமதேவனும், முனிவர்களும், மற்றும் தவம்செய்யும் இருடிகளும், அறத்தோர் குலத்திற்குத் தலைவனான தேவேந்திரனும், இன்னும் மற்றுமுள்ள தேவர்கூட்டம் எல்லாமும் மனம்மிக்க நடுங்கினர்; ''இனி இளவரசனாகிய இலக்குவனுக்கு எந்தத்தீங்கும் நிகழாது இருப்பதாக!'' என்று வேண்டிக்கொண்டனர்.

இங்கே ''மழுவாளி'' என்பது மழுப்படையை ஏந்தியவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

353. நிகும்பலை யாகப்படலம் பக்களண்-1410/139 கவிக்கூற்று

விண்ணோர் அது கண்டார்; ''வய வீரர்க்கு இனி மேன்மேல்
ஒண்ணாதன உளவோ? என மனம் தேறினர், உவந்தார்;
கண்ஆர் நுதல் பெருமான், ''இவர்க்கு அரிதோ?'' எனக் கடை பார்த்து
''எண்ணாது இவை பகர்ந்தீர்; பொருள் கேளீர்!'' என இசைத்தான்.
(9072)

தான் செலுத்திய பிரமாத்திரத்தின் வேகத்தைத் தணிப்பதற்காக மற்றுமொரு அம்பைச் செலுத்திய இலக்குவனின் போராற்றலைக்கண்ட விண்ணுலகத்துத்

தேவர்கள், ''வெற்றிபொருந்திய வீரர்களான இராமஇலக்குவர்க்கு இனிமேல் மேலும் செய்யமுடியாதது என்று ஏதேனும் காரியம் உள்ளதோ?'' இல்லை; என்று மனம் தெளியப்பெற்று மகிழ்ச்சியடைந்தார்கள். நெற்றியில் கண்பொருந்திய நெற்றிக்கண்ணனான சிவபெருமான் அவர்களை நோக்கி, ''கடைசிவரையிலும் நிகழப்போவதை எண்ணிப்பார்க்காது ''இவர்களால் முடியாதது உண்டோ?'' என்று கூறிவிட்டீர்களே! அதன் உண்மைப் பொருளை நான் கூறுகிறேன் கேளுங்கள்'' என்று கூறத்தொடங்கினான்.

இங்கே ''கண்ஆர் நுதல் பெருமான்'' என்பது கண் பொருந்திய நெற்றியை உடைய பெருமைக்குரியவன் என்றபொருளில் முக்கண்ணனாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''கண்ணார் நுதலோய்'' என்பது திருவாசகம்.

354. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1411/143 சிவபெருமான் கூற்று

''நெடும் பாற்கடல் கிடந்தாரும், பண்டு, இவர் நீர்குறை நேர,
விடும் பாக்கியம் உடையார்களைக் குலத்தோடு அற வீட்டி,
இடும் பாக்கியத்து அறம் காப்பதற்கு இசைந்தார்'' என, இது எலாம்
அடும்பு ஆக்கிய தொடைச் செஞ்சடை முதலோன் பணித்து அமைந்தான்.
(9076)

''நீண்ட பெரிய பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பவனாகிய திருமாலும், முன்பு உங்களின் குறைகளைத் தீர்க்கும்படி நீங்கள் கேட்டுக்கொண்டபடி, நற்பேறு பெறும் பாக்கியம் இல்லாதவர்களான இவ்வரக்கர்களை வேரோடு முழுதும் அழித்து ஒழிக்கும் பேறுபெற்றவர்களும், இவர்களே. அறம்தலை நிறுத்துவதற்கு உடன்பட்டு இவ்வேடத்தை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்று, தளிர்கள் நிறைத்துத் தொடுக்கப்பட்ட மலர்மாலையை அணிந்தவனும், சிவந்த சடைமுடிக் கற்றையை உடையவனும், மூலப்பரம்பொருளானவனுமான சிவபெருமான் தேவர்களிடம், இராமஇலக்குவரின் தெய்வீகநிலை பற்றி இவ்வாறு எடுத்துரைத்தான் என்கிறான் கவிஞன்.

இங்கே ''செஞ்சடை முதலோன்'' என்பது சிவந்த சடைமுடியை உடைய மூலப்பரம்பொருள் எனும் பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

355. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1411/148 கவிக்கூற்று

ஏத்து ஆடினர் இமையோர்களும்; கவியின் குலம் எல்லாம்
கூத்து ஆடினர்; அரமங்கையர் குனித்து ஆடினர்; தவத்தோர்,
''காத்தாய் உலகு அனைத்தும்'' எனக் களித்து ஆடினர்; கமலம்
பூத்தானும், அம்மழுவாளியும் முழு வாய்க் கொடு புகழ்ந்தார்.
(9081)

இந்திரசித்து செலுத்திய நாராயணாஸ்திரம் இலக்குவனைத் தாக்காது அவனை விட்டுவிலகி, வலம்கொண்டு போனது. அதுகண்டு தேவர்கள் இலக்குவனைப் போற்றித் துதித்து ஆடினார்கள். குரங்குக்கூட்டங்கள் எல்லாம் ஆனந்தக் கூத்தாடின; தேவமகளிரெல்லாம் வளைந்து வளைந்து ஆடினார்கள்; தவம்மிக்க தவசிகள் எல்லாம் ''எல்லா உலகங்களையும் காப்பாற்றினாய்'' என்றுகூறி மகிழ்ந்து ஆடினார்கள்; தாமரைமலரில் தோன்றியவனான பிரமதேவனும், மழுப்படையேந்திய அந்த சிவபெருமானும்கூடத் தம் வாய்நிறைய வாழ்த்தினார்கள்.

இங்கே ''மழுவாளி'' என்பது மழுவாயுதத்தை ஏந்தியவன் என்றபொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க. இங்கே ''முழுவாய்க் கொடு'' என்பது பெரிதும் மகிழ்ந்து மனமாரப் பாராட்டினார்கள் என்ற பொருளைத்தரும்.

356. நிகும்பலை யாகப்படலம் பக்களண்-1411/149 கவிக்கூற்று

அவன் அன்னது கண்டான்; ''இவன் ஆரோ?'' என அயிர்த்தான்;
''இவன் அன்னது முதலே உடை இறையோன்'' என, வியவா,
''எவன் என்னினும் நன்று ஆகுக! இனி எண்ணலென்'' என்னா,
''சிவன் நன்படை தொடுத்து ஆர்உயிர் முடிப்பென்'' எனத் தெரிந்தான்.
(9082)

தான் செலுத்திய நாராயணாஸ்திரம் இலக்குவனை ஒன்றும் செய்யாதது மட்டுமின்றி அவனிடமிருந்து விலகி வலம்கொண்டு போனதைக்கண்ட இந்திரசித்தன், ''இவன் யாராய் இருப்பான்? சாதாரணமனிதனாகத் தோன்றவில்லையே?'' என்று ஐயுற்றான். இவன் அந்தச் சக்கரப்படையை ஏந்திய முதலோனான இறைவன் திருமாலாகத்தான் இருக்கவேண்டும்'' என்று வியப்பெய்தி, பின்னர் ''யாராய் இருந்தாலும் இருக்கட்டும். என் படைக்கலம் நன்றே செய்யும். என் செயல் நன்றே முடியும்'' என்று கருதி, ''இனி வேறுவகையாக எண்ணமாட்டேன்'' என்று கூறிக்கொண்டே ''சிவபெருமானது நல்ல படைக்கலனான பாசுபதாஸ்திரத்தைச் செலுத்தி அவன் உயிரைக் குடிப்பேன்'' என்று தீர்மானித்தான் இந்திரசித்து.

இங்கே ''சிவன் நன்படை'' என்பது எப்பொழுதும் நன்றே ஆற்றும் சிவபெருமானின் பாசுபதாஸ்திரத்தைக் குறித்தது என்க.

357. நிகும்பலை யாகப்படலம் பக்களண்-1412/151 இந்திரசித்தன் கூற்று

தானே சிவன் தரப்பெற்றது தவம் நாள்பல உழந்தே;
தானே ''பிறர் அறியாதது தந்தேன்'' எனச் சமைந்தான்;
ஆனால் இவன் உயிர் கோடலுக்கு ஐயம் இலை'' என்னா
மேல்நாளும் இதனை ஏவிடின், எதிர் நிற்பவர் இல்லை'' (9084)

இந்திரசித்தன் நீண்டநாட்கள் தன்னை வருத்திக்கொண்டு செய்த தவத்தின்பயனாகச் சிவபெருமான் தானே நேரில் தோன்றி, இவனுக்குக் கொடுத்தது இந்தப் பாசுபதாஸ்திரம். ''இந்த அஸ்திரம் இதுவரை பிறர் யாரும் அறியாததாகும்; உனக்கு இதனைத் தருகிறேன்'' என்று சிவபெருமான் மனமுவந்து அளித்தருளியது. எனவே இந்தப் பாசுபதாஸ்திரம் இந்த இலக்குவனது உயிரைப் பறித்துவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்றும், எப்பொழுது இதனைச் செலுத்தினாலும், இதனை எதிர்த்து நிற்கும் ஆற்றல் ஒருவருக்கும் கிடையாது என்றும் கருதினான் இந்திரசித்து.

இங்கே ''சிவன்'' என்ற சொல் நேராகச் சிவபெருமானைக் குறித்தது என்க.

358. நிகும்பலை யாகப்படலம் பக்களண்-1413/157

இலக்குவன் கூற்று

''அவயம் உனக்கு அவயம்!'' எனும் அனைவோரையும் ''அஞ்சேல்
அவயம் உமக்கு அளித்தோம்'' என, தன் கைத்தலத்து அமைத்தான்;
''உவயம் உறும் உலகின் பயம் உணர்ந்தேன்; இனி ஒழியேன்;
''சிவன், ஐம்முகம் உடையான், படைதொடுப்பென்'' எனத் தெளிந்தான்.
(9090)

அவ்வாறு இந்திரசித்து பாசுபதாஸ்திரத்தைச் செலுத்தியதைக் கண்ட எல்லோரும், இலக்குவனை நோக்கி ''இலக்குவ! நாங்கள் எல்லோரும் உனக்கு அடைக்கலம், உனக்கே அடைக்கலம் ஆவோம்! என்று அடைக்கலம் புகுந்ததைக் கண்ட இலக்குவன், அவர்களை நோக்கி, ''அஞ்சாதீர்கள்; உங்களுக்கு அடைக்கலம் தந்து உங்களைக் காப்பாற்றுவேன்'' என்று தன் கைகளால் அபயம் அளித்தான்; ''விண்ணுலகு, மண்ணுலகு என்ற இரண்டு உலகங்களிலும் உள்ளவர் அனைவரும் அஞ்சுவதை நான் நன்கு உணர்கிறேன். இனிச் சிறிதும் ஒய்ந்திருக்கமாட்டேன்; ஐந்து முகங்களையுடைய சிவபெருமானது படைக்கலமாகிய அதே பாசுபதாஸ்திரத்தை நானும் செலுத்துவேன்'' என்று தீர்மானித்தான்.

இங்கே ''சிவன், ஐம்முகம் உடையான்படை'' என்பது ஐந்து முகங்களையுடைய சிவபெருமானது படைக்கலம் என்று பாசுபதாஸ்திரத்தைக் குறிக்கும். சிவபெருமானது ஐந்து முகங்களாவன. வாமதேவம், சத்தியோஜாதம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்பனவாம். இவை முறையே சிவப்பு, அதிவெள்ளை, கருமை, பொன்நிறம், ஸ்படிக நிறம்கொண்டு அமைந்திருக்கும் என்கிறது ஒரு புராணக்குறிப்பு.

359. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1414/166
இந்திரசித்தன் கூற்று

''முந்தை நாள் உலகம் தந்த மூத்த வானோர்கட்கு எல்லாம்
தந்தையார் தந்தையாரைச் செருவிடைச் சாயத் தள்ளி,
கந்தனார் தந்தையாரைக் கயிலையோடு ஒரு கைக்கொண்ட
எந்தையார் அரசுசெய்வது, இப்பெரும் பலம் கொண்டேயோ?''
(9099)

இந்திரசித்தன் தன் சிறிய தந்தையார் வீடணன் பகைவரோடு சேர்ந்து அவர்களுக்கு உதவிசெய்வது குறித்து இகழ்ந்து பேசிக்கொண்டு வரும்போது வருவது இப்பாடல்.

''முன்பு இவ்வுலகத்தைப் படைத்தருளிய முதியவர்களான தேவர்களுக்கெல்லாம் தந்தையாராகிய பிரமதேவனுக்கும் தந்தையாராகிய திருமாலைப் போரில் வென்று அவனைப் புறந்தள்ளியவனும், முருகப்பெருமானின் தந்தையாராகிய சிவபெருமானை அவன் வீற்றிருந்த கயிலைமலையோடு ஒரே கையினால் பெயர்த்தெடுத்துக்கொண்டு வந்தவனுமான ஆற்றல்மிக்க எனது தந்தையாரான இராவணன், இந்த அற்பமான மனிதர்களின் வலிமையைக் கொண்டுதான் இப்போது மூவுலகங்களையும் ஒரு குடைக்கீழ் அரசோச்சுகிறான் என்று நீ கருதுகிறாயா?'' என்று வீடணனைப் பார்த்துக் கேட்கிறான் இந்திரசித்து.

இங்கே ''கந்தனார் தந்தையார்'' என்பது முருகப்பெருமானின் தந்தையார் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க. தந்தையார் என்ற சொல்லைப் பலமுறை பயன்படுத்திப் பலபொருள்களைத் தரவைத்த கவிஞனின் கவித்திறம் நோக்குக.

360. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1415/178 கவிக்கூற்று

அக்கணை அசனி என்ன, அன்று என, ஆலம் உண்ட
முக்கணான் சூலம் என்ன, முடுகிய முடிவை நோக்கி,
''இக்கணத்து இற்றான் இற்றான்'' என்கின்ற இமையோர்காண,
கைக்கணை ஒன்றால், வள்ளல் அக்கணை கண்டம் கண்டான்.
(9111)

அவ்வாறு இகழ்ந்து பேசிய இந்திரசித்தனை நோக்கி வீடணன் பலவாறும் மறுமொழி பகர்ந்தான். அப்பொழுது இந்திரசித்தன் அர்த்த சந்திரபாணம்-பிறைமுகப்பகழி-ஒன்றை இலக்குவனது செம்பொன் உறும் சுடர்க்கழுத்தை நோக்கிச்செலுத்தினான். அந்த அம்பு பேரிடிபோலவும், அல்ல என்பது போலவும், ஆலகால விஷத்தைப் பருகியவனும், மூன்று கண்களையுடையவனுமான சிவபெருமானின் சூலாயுதத்தைப்போலவும்

விரைந்து சென்று முடிந்த நிலையை நோக்கிய இமையா நாட்டத்தவரான தேவர்கள் ''அவ்வளவுதான் இன்றோடு வீடணன் அழிந்தான், அழிந்தான்'' என்று வருந்தினார்கள் அவர்கள் அக்காட்சியைக் கண்டு கொண்டிருக்கும்போதே வள்ளன்மை மிக்கவனான இலக்குவன், தான் கையில் கொண்டிருந்த ஓரம்பால் இந்திரசித்தன் செலுத்திய அந்தப் பிறைமுகப் பகழியைக் கண்டதுண்டமாக்கினான்.

இங்கே **''ஆலம் உண்ட முக்கணான் சூலம்''** என்பது பாற்கடலினின்றும் எழுந்த ஆலகால விஷத்தைத் தேவர்கள் உய்யும் பொருட்டுத் தானே பருகியவன் என்ற பொருளிலும் நெற்றிக்கண்ணாகிய மூன்றாவது கண்ணையும் பெற்றவன் என்ற பொருளிலும் சிவபெருமானைக் குறிக்கும் என்க. சூலம் என்பது சிவபெருமான் கைக்கொண்டுள்ள முத்தலைச் சூலாயுதத்தைக் குறிக்கும் என்க.

361. இந்திரசித்து வதைப்படலம் பக்களண்-1418/14 கவிக்கூற்று

படைக்கல விஞ்சை மற்றும் படைத்தன பலவும், தன்பால்
அடைக்கலம் என்ன ஈசன் அளித்தன, தேர்மேல் ஆக்கி,
கொடைத்தொழில் வேட்டோர்க்கெல்லாம் கொடுத்தனன், கொடியோன் தன்னைக்
கடைக்கணால் நோக்கி நோக்கி, இருகண் நீர் கலுழப் போனான்.
(9129)

இலக்குவனை எதிர்த்துப் போர்செய்ய ஆற்றாது, உடம்பெல்லாம் அம்பு துளைத்த புண்ணாகத் தன் படுக்கையில் வந்து படுத்திருந்த இந்திரசித்தனை, தந்தை இராவணன் வந்து பார்த்து, அங்கு நிகழ்ந்தவற்றைத் தானே உணர்ந்துகொண்டான். இந்திரசித்தன் முதன்முறையாகத் தந்தை இராவணனை நோக்கி ''ஆசைதான் அச்சீதைபால் விடுதி'' என்றும் அவ்வாறு ''விடுதி ஆயின் அனையவர் சீற்றம் தீர்வர்; போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர்; உன்மேல் காதலால் உரைத்தேன்'' என்று அறிவுறுத்துகிறான். இராவணன் சீற்றம் கொண்டு ''மீது எழும் மொக்குள் அன்ன யாக்கையை விடுவது அல்லால் சீதையை விடுவதுண்டோ இருபது திண்தோள் உண்டால்'' என்று மறுத்து தானே போருக்கு எழுந்து ''வருகதேர்'' என்று ஆணையிட்டதும், அதை மறுத்து இந்திரசித்தன் ''நானே மறுபடியும் போருக்குப் போகிறேன்'' என்று சொல்லிப் போருக்குப் புறப்படும் ஓர் அவலம் நிறைந்த காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன் இந்தப்பாடலில்.

தங்கள்வசமுள்ள போர்க்கருவிகள், தாங்கள் மாயத்தால் உண்டாக்கிக்கொண்ட கருவிகள், அவற்றுடன் சிவபெருமான் பாதுகாப்புக்காகக் கொடுத்துவைத்திருந்த கருவிகள் ஆகிய எல்லாவற்றையும் தேரின்மேல் ஏற்றிக்கொண்டு, வேண்டுவார்க்கெல்லாம் வேண்டுவன

எல்லாம் தானமாகக் கொடுத்துவிட்டு, கொடிய குணங்கள் நிறைந்த தன்தந்தை இராவணனை, இனிமேல் பார்க்கமுடியுமோ முடியாதோ என்ற ஓர் அச்சம் உள்ளத்துள்பொங்க, தன் கடைக்கண்ணால் மீண்டும் மீண்டும் பார்த்து, இருகண்களினின்றும் கண்ணீர்மழை பொழியப் போர்க்களம் நோக்கிப் போனான் இந்திரசித்தன் என்கிறான் கவிஞன்.

முன்பு கும்பகருணன் போருக்குப் புறப்பட்டுச் சென்றபோது நேரிடையாகவே ''நான் இறந்துபடுவேன், திரும்பி வரமாட்டேன்'' என்றே கூறிச்சென்றான். இப்போது இங்கே இந்திரசித்தன் தான் திரும்பிவரப்போவதில்லை என்பதை நேரிடையாகக் கூறாமல், தன் தந்தையைத் திரும்பித் திரும்பிப் பார்த்துப்போகிறான். இது இந்திரசித்தன் இரண்டாவது முறையாகப் போர்செய்யப் புறப்பட்டுப்போகும் நிகழ்ச்சி. முதல்முறை போருக்குச் சென்றபோது அவன் கொடைத்தொழில் வேட்டோர்க்கு எல்லாம் கொடுக்கவில்லை; இப்போதுதான் கொடுத்துப் போகிறான் என்பதினின்றும் இந்திரசித்தன் தன் முடிவை உள்ளுக்குள் உணர்ந்து கொண்டுவிட்டான் என்பதைக் கவிஞன், கற்போரே உணர்ந்துகொள்ளும் வகையில் சொற்களைப் பெய்திருக்கும் பாங்கு நோக்குக.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறித்தது என்க.

362. இந்திரசித்து வதைப்படலம் பக்கஎண்-1422/36

வீடணன் கூற்று

''ஆர் அழியாத சூலத்து அந்தணன் அருளின் ஈந்த
தேர் அழியாத போதும், சிலை கரத்து இருந்தபோதும்,
போர் அழியான் இவ்வெய்யோன்; புகழ் அழியாத பொன்தோள்
வீர! இது ஆணை!'' என்றான் வீடணன்; விளைவது ஓர்வான்.
(9151)

வீடணன் இந்திரசித்தன் இரவுநேரத்தில் இறக்கமாட்டான். அவனைப் பகல் முடிவதற்குள் வென்று கொன்றுவிடவேண்டும் என்று அறிவுறுத்தும்போது, மேலும் சில எச்சரிக்கைகளை இலக்குவனுக்குச் சொல்லுவதாக அமைந்தது இப்பாடல்.

''புகழ் நிரம்பி விளங்கும் அழகிய தோளாற்றல் படைத்த பெருவீரனே! இலக்குவ! ''சூலப்படையைக் கைக்கொண்டிருப்பவனும், மிகுந்த கருணையுடையவனுமான சிவபெருமான் அருள்கூர்ந்து இந்திரசித்தனுக்கு அளித்த ஆரம் என்கின்ற சக்கரத்தின் குறுக்குச்சட்டம் சிதைந்து, அந்தத்தேர் அழிந்துபோகாதவரையிலும், அவன் கைகளில் கொண்டிருக்கின்ற வில் கீழே விழாதவரையிலும், இந்தக் கொடியவனான இந்திரசித்து போரில் அழியமாட்டான். இது உறுதி'' என்று பின்விளைவுகளை நன்கு சிந்தித்துச் செயலாற்றும் வீடணன், இலக்குவனிடம் அறிவுறுத்துகிறான்.

இங்கே ''சூலத்து அந்தணன்'' என்பது சூலாயுதத்தைக் கையில் கொண்டிருந்தாலும் கருணைமிக்கவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

363. இந்திரசித்து வதைப்படலம் பக்கஎண்-1424/49
இந்திரசித்தன் கூற்று

காலம் கொண்டு எழுந்த மேகக் கருமையான், ''செம்மை காட்டும்
ஆலம் கொண்டு இருண்ட கண்டத்து அமரர்கோன் அருளின் பெற்ற
சூலம் கொண்டு எறிவல்'' என்று தோன்றினான், ''பகையின் தோற்ற
மூலம் கொண்டு உணரா நின்னை முடித்தன்றி முடியேன்'' என்றான்.
(9164)

கார்காலத்தில் தோன்றுகின்ற மேகத்தைப்போலக் கரிய நிறம் கொண்டவனான இந்திரசித்து, ''சிவந்த தோற்றத்தை உடையவனும், ஆலகால விஷத்தைப் பருகியதால் இருள் நிறைந்த கரிய கழுத்தினையுடையவனும், தேவர்தலைவனுமான சிவபெருமான் அருள்கூர்ந்து எனக்கு அளித்த முத்தலைச்சூலாயுதத்தை இப்போது உன்மீது வீசுவேன்'' ''பகைவர்களின் குடிப்பிறப்பின் சிறப்பையும், அவர்கள் வரலாற்றையும் அறிந்துகொள்ளாத உன்னை, இப்போது அழித்து ஒழிக்காது நான் முடிந்து போகமாட்டேன்'' என்று வஞ்சினம் கூறுகிறான் இந்திரசித்து.

இங்கே ''செம்மை காட்டும் ஆலம் கொண்டு இருண்ட கண்டத்து அமரர்கோன்'' என்பது சிவந்த மேனியையுடையவனும், ஆலகால விஷத்தைப் பருகியதால் கருத்த கழுத்தை உடையவனும், தேவர்கள் தலைவனுமானவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

364. இந்திரசித்து வதைப்படலம் பக்கஎண்-1425/52 கவிக்கூற்று

நேமியும், குலிசவேலும், நெற்றியின் நெருப்புக் கண்ணான்
நாம வேல்தானும், மற்றை நான்முகன் படையும் நாண,
தீமுகம் கதுவ ஓடிச்சென்று, அவன் சிரத்தைத் தள்ளி,
பூமழை அமரர் சிந்த, பொலிந்தது அப்பகழிப் புத்தேள். (9167)

இலக்குவன் செலுத்திய அந்தப் பிறைமுகப்பகழி - அர்த்தசந்திரபாணம்- திருமாலுடைய சக்கராயுதம், இந்திரனுடைய வச்சிராயுதம், நெற்றியில் நெருப்புக்கண்ணையுடைய சிவபெருமானின் அச்சம் தரத்தக்க வேற்படை, மற்றும் பிரமதேவனின் பிரமாஸ்திரம், இவைகளெல்லாம் அஞ்சி வெட்கமடையும்படி, தன் நுனியில் நெருப்பைத் தழுவிக்கொண்டு விரைந்து சென்று, இந்திரசித்தனின் தலையை அவன் உடலினின்றும் நீக்கி, மிக்க பொலிவுபெற்றுத் திகழ்ந்தது. அதனைக்கண்ட தேவர்கள் மலர்மழை பெய்து இலக்குவனை வாழ்த்தினார்கள்.

இங்கே ''நெற்றியில் நெருப்புக் கண்ணன்'' என்பது நெற்றியில் நெருப்புப் பறக்கும் கண்களையுடையவன் என்று சிவபெருமானைக் குறிக்கும். ''நாமவேல்'' என்பது சிவபெருமான் கைக்கொண்டிருக்கும் அச்சம்தரும் வேற்படையைக் குறிக்கும் என்க.

365. இந்திரசித்து வதைப்படலம் பக்கஎண்-1425/57 கவிக்கூற்று

வரம்தரு முதல்வன், மற்றை மான்மறிக் கரத்து வள்ளல்,
புரந்தரன், முதல்வராய நான்மறைப் புலவர், பாரில்
நிரந்தரம் தோன்றி நின்றார்; அருளினால் நிறைந்த நெஞ்சர்
கரந்திலர்; அவரை யாக்கை கண்டன குரங்கும் கண்ணால்.
(9172)

இலக்குவன் பிறைமுகப் பகழிகொண்டு இந்திரசித்தன் தலையை அறுத்து எறிந்தபோது ஏனையோரின் நிலையை விளக்குவது இப்பாடல்.

வரம்அளிக்கின்ற கடவுளராகிய திருமால், பிரமன், மற்றும் மான்குட்டியைத் தன் ஒருகரத்தில் ஏந்திநிற்கும் வள்ளன்மைமிக்கவனான சிவபெருமான், நான்கு வேதங்களையும் கற்றறிந்த தேவர்கள், அவர்களின் தலைவன் இந்திரன், முதலியோர் எல்லோரும் இப்பூவுலகில் நிரந்தரமாகத்தோன்றி நின்றனர். அவர்கள் கருணைமிக்க உள்ளம் கொண்டவராகித் தமது உண்மையான உடம்பினை மறைக்காமல் அப்படியே காட்சிதந்தனர். அதனைக் குரங்குக்கூட்டமெல்லாம் தங்கள் கண்களால் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தன.

இங்கே ''வரம்தரு முதல்வன்'' என்பது மும்மூர்த்திகளுக்கும் பொருந்தும் என்றாலும் ''மான்மறிக் கரத்து வள்ளல்'' என்று சிவபெருமானைத் தனித்துக் கூறிவிட்டதனால் வரம்தரு முதல்வன் என்பதற்குத் திருமால், பிரமன் என்ற இருபொருளும் கொள்ளப்பட்டது. இங்கே ''மான்மறிக் கரத்து வள்ளல்'' என்பது மான்குட்டியைத் தன் ஒருகையில் கொண்டிருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்தது என்க. ''மறி'' என்ற சொல் பொதுவாக இளமைப்பருவத்து விலங்கினங்களைக் குறிக்கும்.

366. இராவணன் சோகப்படலம் பக்கஎண்-1429/11
இராவணன் கூற்று

''புரந்தரன் பகை போயிற்று அன்றோ?'' எனும்;
''அரந்தை வானவர் ஆர்த்தனரோ?'' எனும்;
கரந்தை சூடியும், பாற்கடல் கள்வனும்,
நிரந்தரம் பகை நீங்கினரோ?'' எனும். (9196)

இலக்குவனுக்கும் இந்திரசித்தனுக்கும் நடந்த கடும் போரில் இறுதியாக இந்திரசித்தனின் தலையை அறுத்தெறிந்தான் இலக்குவன். தரையில் விழுந்த தலையை அங்கதன் எடுத்துக்கொண்டு வர எல்லோரும் இராமபிரானை அடைந்தார்கள். இராமபிரான் மகிழ்ந்து இலக்குவனை நெஞ்சாரத் தழுவிக்கொண்டான். இந்திரசித்து இறந்துபட்ட செய்தியைத் தூதுவர்கள் இராவணனுக்குத் தெரிவித்தார்கள். அவ்வாறு தூது கூறியவர்களைத் தன் வாளால் வெட்டிச்சாய்த்து இராவணன் புலம்புவதாக வருவது இப்பாடல்.

''இதுவரை நம்மிடம் அஞ்சி ஒதுங்கியிருந்த இந்திரனின் பகைமை நீங்கிவிட்டதோ?'' என்பான். ''இதுவரை நம்மிடம் துன்பத்தையே அனுபவித்துவந்த தேவர்கள், இப்பொழுது மகிழ்ச்சி மிகுதியால் ஆரவாரித்தனரோ!'' என்பான். ''திருநீற்றுப்பச்சை இலையைத் தன் சடைமுடியில் சூடியிருக்கும் சிவபெருமானும், நமக்கு அஞ்சிப் பாற்கடலுள் புகுந்துகொண்ட வஞ்சனான திருமாலும், இனிமேல் நிரந்தரமாகப் பகை என்பதே இல்லாது தனித்து மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்வார்களோ?'' என்று புலம்புகிறான் இராவணன்.

இங்கே ''கரந்தை சூடி'' என்பது திருநீற்றுப் பச்சை இலையைத் தன் தலையில் சூடிக்கொண்டிருப்பவன் என்று சிவபெருமானைக் குறிக்கும். சிவபெருமான் என்னென்ன சூடியிருக்கிறான் என்று கூறுகிறார் திருஞானசம்பந்தர் கேளுங்கள். ''நீரோடு, கூவிளமும், நிலாமதியும், வெள்ளெருக்கும், நிறைந்த கொன்றைத்தாரோடு, தண்கரந்தை சடைக்கணிந்த தத்துவனார்'' என்பது சம்பந்தர் தேவாரம்.

367. இராவணன் சோகப்படலம் பக்கஎண்-1429/12
இராவணன் கூற்று

''நீறு பூசியும், நேமியும் நீங்கினார்,
மாறு குன்றொடு வேலை மறைந்துளார்,
ஊறு நீங்கினராய், உவணத்தினோடு
ஏறும் ஏறி உலாவுவார்'' என்னுமால். (9197)

''திருநீற்றை உடம்பெல்லாம் பூசியிருப்பவனாகிய சிவபெருமானும், சக்கரப்படையை உடைய திருமாலும், இதுவரை என்னிடம் அச்சம் கொண்டு, கயிலைமலையிலும் பாற்கடலிலும் ஒளிந்துகொண்டிருந்தார்கள். இப்போது இந்திரசித்தன் இறந்துபட்டதும் அவர்களுக்கு எந்த இடையூறும் இல்லை. அது நீக்கப்பட்டுவிட்டது. எனவே அவர்கள் தம் வாகனங்களாகிய காளையின்மேலும், கருடனின்மேலும் அமர்ந்து அச்சமின்றி உலாவருவார்களே?'' என்று புலம்புகிறான் இராவணன்.

இங்கே ''நீறுபூசி'' என்பது உடம்பெல்லாம் திருநீற்றைப் பூசிக்கொண்டிருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''சுடலைப்பொடி பூசி'' என்பது தேவாரம்.

368. இராவணன் சோகப்படலம் பக்களண்-1430/18 கவிக்கூற்று

''நீலம் காட்டிய கண்டனும், நேமியும்,
ஏலும் காட்டின், எறிந்த படையெலாம்
தோலும் காட்டித் துரந்தனை; மீண்டும் நின்
ஓலம் காட்டிலையோ?'' எனும் ஓர்தலை. (9203)

இந்திரசித்தன் இறந்துபட்டது பற்றிக் கேள்வியுற்ற இராவணனது பத்துத்தலைகளும் புலம்புவதைக் கூறுகிறான் கவிஞன். அதில் ஓர்தலை பேசுவதாக அமைந்தது இப்பாடல்.

''தன் கழுத்தில் நீலநிறம் பொருந்திய ஆலகால விஷத்தைத் தேக்கி வைத்திருப்பவனாகிய சிவபெருமானும், சக்கரப்படையை உடைய திருமாலும், மரங்களடர்ந்த காட்டைப்போல படைக்கலன்களைக் கூட்டம்கூட்டமாக எறிந்தபோது, அவர்களுக்குத் தோல்வியை உண்டாக்கி அவர்களை ஓட ஓடத் துரத்தினாயே, அப்பொழுது நீ எழுப்பிய கூக்குரல் ஓசையை இப்போது எழுப்பமாட்டாயோ?'' என்று கேட்கும் ஓர்தலை'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''நீலம் காட்டிய கண்டன்'' என்பது ஆலகால விஷத்தைப் பருகியதால் உண்டான நீலநிறம் பொருந்திய கழுத்தை உடையவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

369. இராவணன் சோகப்படலம் பக்களண்-1432/35
இராவணன் கூற்று

''நிலையின் மாதிரத்து நின்ற யானையும், நெற்றிக்கண்ணன்
மலையுமே எளியவோ நான் பறித்தற்கு? மறுஇல் மைந்தன்
தலையும் ஆருயிரும் கொண்டார் அவர் உடலோடும் தங்க
புலையனேன் இன்னும் ஆவி சுமக்கின்றேன் போலும் போலும்!''
(9220)

போர்க்களத்தில் இறந்துபட்ட இந்திரசித்தனது உடலை மட்டும் கண்டு தலையைக் காணாது, இராவணன் அரற்றுவதாக வரும் பாடலில் இதுவும் ஒன்று.

''எட்டுத்திக்குகளிலும் நிலைத்து நிற்கின்ற திசையானைகளும், அந்த நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையும் மட்டும்தான் நான் வெற்றிகொள்வதற்கும், பெயர்த்தெடுப்பதற்கும் எளியனவாக அமைந்தனவோ? என்னுடைய குற்றமற்ற புதல்வனாகிய இந்திரசித்தனின் தலையையும் அவனுடைய அருமையான உயிரையும் பறித்துக்கொண்டவர்களான அந்தப் பகைவர்கள் இன்னும் உடலைத் தாங்கிக்கொண்டு உயிரோடு இருக்கவும், மிக அற்பமான

இழிதகவுடையவனான நான்மட்டும் இன்னும் உடலில் உயிரைச் சுமந்துகொண்டிருக்கிறேனே!'' என்று தன்னைத்தானே நொந்துகொள்ளுகிறான் இராவணன்.

இங்கே ''நெற்றிக் கண்ணன் மலை'' என்பது நெற்றியில் கண்ணையுடைய முக்கண்ணனாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலை என்ற பொருளைத்தரும்.

370. இராவணன் சோகப்படலம் பக்கஎண்-1434/52

மண்டோதரி கூற்று

''முக்கணான் முதலினோரை, உலகு ஒரு மூன்றினோடும்,
புக்க போர்எல்லாம் வென்று நின்ற என் புதல்வன் போலாம்,
மக்களில் ஒருவன் கொல்ல, மாள்பவன்? மானமேரு
உக்கிட, அணுஒன்று ஓடி உதைத்தது போலும் அம்மா!''(9237)

இந்திரசித்து போர்க்களத்தில் இறந்துபட்டதும் அவன் தலையற்ற உடலை எடுத்துக்கொண்டு அரண்மனையுள் புகுந்த இராவணனிடம் வந்து, இந்திரசித்தனின் தாயாகிய மண்டோதரி அழுது புலம்பும் பாடல்களுள் இதுவும் ஒன்று.

''மூன்று கண்களையுடைய சிவபெருமான் முதலியோரை, மேல், நடு, கீழ் என்று கூறப்படுகின்ற மூவுலகங்களோடும் சேர்த்து, தான் சென்ற போர்க்களத்திலெல்லாம் வெற்றிபெற்று நிலைத்துநின்ற என் புதல்வன் இந்திரசித்தனா இவ்வாறு மனிதர்களுள் ஒருவனால் கொல்லப்பட்டு இறந்துகிடக்கிறான்? மிக நுண்ணிய ஒரு அணு ஓடிச்சென்று உதைத்ததனால் விண்ணைத்தொடும் அளவு உயர்ந்து பருத்த மேருமலையே நொறுங்கிப்போனதுபோல் அல்லவா இருக்கிறது இக்காட்சி?'' என்று புலம்புகிறாள் மண்டோதரி.

இங்கே ''முக்கணான்'' என்பது மூன்று கண்களையுடையவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க. ''அம்மா!'' என்பது வியப்புக்குறித்த இடைச்சொல்.

371. இராவணன் சோகப்படலம் பக்கஎண்-1435/58

மகோதரன் கூற்று

''மங்கையை, குலத்துளாளை, தவத்தியை, முனிந்து வாளால்
சங்கை ஒன்று இன்றிக் கொன்றால், ''குலத்துக்கே தக்கான்'' என்று
கங்கை அம் சென்னியானும், கண்ணனும், கமலத்தோனும்,
செங்கையும் கொட்டி உன்னைச் சிரிப்பரால், ''சிறியன்'' என்னா
(9243)

இவ்வளவுக்கும் காரணம் அந்தப் பொன் தழைத்தனைய அல்குல் சீதைதானே? அவளை இப்பொழுதே வாளால் கொன்று அழித்திடுவேன் என்று அவளை நோக்கி வாளுடன் ஓடினான் இராவணன். ''உயர்பெரும் பழியை உச்சிச் சூடுகின்றானே?'' என்று நன்கு சிந்தித்து, அவனது அமைச்சனான மகோதரன் இதனால் பேராப்பெரும் பழிபிடிக்கும் என்று கூறித்தடுக்கும்போது மகோதரன் கூறுவதாக வருவது இப்பாடல்.

''ஒரு நல்ல பெண்ணை, மாதர்களுள் சிறந்தவளை, நல்ல பெயர்பெற்ற குலத்தில் பிறந்து வந்தவளை, தவக்கோலம் பூண்டிருப்பவளை, நீ மிகக் கோபம்கொண்டு வாளால் சிறிதும் கூச்சம்இன்றிக் கொன்று விட்டாய் என்றால், கங்கையைத் தன் அழகிய தலையில் சூடியிருப்பவனாகிய சிவபெருமானும், திருமாலும், தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும் ஆகிய மும்மூர்த்திகளும் உன்னைப்பார்த்து, ''இவன் அரக்கர் குலத்திற்கு ஏற்றபடியே தகுதி உடையவனாவான், மிகச் சிறியவன்; இகழத்தக்கவன்'' என்றுகூறித் தங்கள் சிவந்த கைகளைக் கொட்டிச் சிரிக்கமாட்டார்களோ?'' என்று கேட்கிறான் மகோதரன்.

இங்கே ''கங்கைஅம் சென்னியான்'' என்பது ஆகாயகங்கையைத் தன் அழகிய தலையில் சூடிக்கொண்டிருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும்.

372. படைக்காட்சிப் படலம் பக்கஎண்-1437/12 தூதுவர் கூற்று

''இலவத்தீவினின் உறைபவர் இவர்கள்; பண்டு இமையாப்
புலவர்க்கு இந்திரன் பொன்நகர் அழிதரப் பொருதார்;
நிலவைச் செஞ்சடை வைத்தவன் வரம்தர, நிமிர்ந்தார்;
உலவைக் காட்டு உறுதீ என, வெகுளி பெற்றுடையார்''(9258)

எல்லாத் திக்குகளிலும் இருந்து வந்த அரக்கர்சேனை இலங்கைநகர் வந்து புகுந்தது. அதனை ஒரு அணிகொள் கோபுரத்தில் எய்தி இராவணன் பொதுவுற நோக்கலுற்றான். அப்பொழுது தூதுவர்கள் வேதவேதாந்தம் கூறும் பொருளினை விரிக்கின்றார்போல் அணிகள்தோறும் வரன்முறை காட்டிக்கூறுவதாக வரும் பாடல்களுள் இதுவும் ஒன்று.

''இவர்கள் இலவத்தீவில் வாழ்பவர்கள்; முன்பு இவர்கள் இமையாநாட்டம் உடைய தேவர்களின் தலைவனான இந்திரனின் பொன்மயமான அழகிய தலைநகரமான அமராவதியே அழிந்துபோகும் வண்ணம் போர் செய்தவர்கள். தனது சிவந்த சடைமுடியில் பிறைச்சந்திரனைத் தரித்திருக்கும் சிவபெருமான், இவர்களுக்கு நிறைந்த வரங்களைத்தர, அதனால் உயர்ந்து நின்றவர்கள்; உலர்ந்துபோய்ப் பட்டமரங்கள் நிறைந்த காட்டில்

காற்றுடன்கூடிய காட்டுத்தீ பரவுவதுபோல இவர்கள் மிக்க சினம் கொண்டுள்ளவர்கள் ஆவார்கள்'' என்கின்றனர் தூதுவர்கள்.

இங்கே ''நிலவைச் செஞ்சடையில் வைத்தவன்'' என்பது பிறைச்சந்திரனைத் தன் சடைமுடியில் சூடியிருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

373. படைக்காட்சிப் படலம் பக்கஎண்-1439/23 தூதுவர்கூற்று

''காளியைப் பண்டு கண்ணுதல் காட்டிய காலை,
மூள முற்றிய சினக் கடுந்தீயிடை முளைத்தோர்;
கூளிகட்கு நல் உடன் பிறந்தார்; பெருங்குழுவாய்
வாள் இமைக்கவும், வாள்எயிறு இமைக்கவும், வருவார்'' (9269)

''நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் முன்பு காளிதேவியைத் தன் நடனத்தால் வெற்றி கொண்டபொழுது மூண்ட, முதிர்ந்த கோபக்கனலில் தோன்றியவர்கள் இவர்கள். பேய்களுக்கு நல்ல உடன்பிறந்தவர் போல்பவர்; இவர்கள் பெருங்கூட்டமாய் தம் கைகளில் கொண்டிருக்கும் வாட்படைகள் மின்னவும், அவர்களது ஒளிவீசும் கோரப்பற்கள் மேலும் ஒளிவீசவும் வருகின்றனர்'' என்றனர் தூதுவர்கள்.

இங்கே ''கண்ணுதல்'' என்பது நெற்றியில் கண்ணை உடைய நெற்றிக் கண்ணன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

374. படைக்காட்சிப் படலம் பக்கஎண்-1439/25தூதுவர்கூற்று

''சீற்றம் ஆகிய ஐம்முகன், உலகெலாம் தீப்பான்
ஏற்ற மாநுதல் விழியிடைத் தோன்றினர் இவரால்;
கூற்றம் ஆகிய கொம்பின் ஐம்பாலுடை கொடுமைக்கு
ஊற்றம் ஆகிப் பண்டு உதித்தனர் என்பவர் உவரால்'' (9271)

''ஐந்து முகங்களைக்கொண்ட சிவபெருமான் முன்பு இவ்வுலகையே சுட்டெரிக்கும்வண்ணம் ஏற்றுக்கொண்ட சிறந்த நெற்றியில் உள்ள கண்ணினிடத்தினின்றும் தோன்றியவர்கள் இவர்கள். இன்னும் சிலர் கூந்தலையுடைய பெண்களின் கொடுமைக்குத் துணையாக முன்பு தோன்றியவர்கள் இயமன் போன்று கொல்லும் தன்மையையுடையவர் என்று கூறப்படுபவர் ஆவர்'' என்று இரண்டு குழுக்களைப்பற்றிக் கூறுகின்றனர் தூதுவர்கள்.

இங்கே ''ஐம்முகன்'' என்பது ஐந்து முகங்களைக் கொண்டவன் என்ற பொருளிலும், ''நுதல்விழி'' என்பது நெற்றிக்கண்ணையுடையவன் என்ற பொருளிலும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

375. படைக்காட்சிப் படலம் பக்களண்-1439/26 தூதுவர்கூற்று

''காலன் மார்பிடைச் சிவன் கழல்பட, பண்டு கான்ற
வேலை ஏழ் அன்ன குருதியில் தோன்றிய வீரர்,
சூலம் ஏந்தி முன்நின்றவர்; இந்நின்ற தொகையார்,
ஆலகாலத்தின், அமிழ்தின் முன்பிறந்த போர் அரக்கர்'' (9272)

''இங்கே முன்னால் சூலாயுதத்தைக் கையில் ஏந்திக்கொண்டு நிற்கிறார்களே இந்தக் கூட்டத்தினர் அனைவரும் முன்பு இயமனது மார்பினிடத்துச் சிவபெருமான் திருவடிகள் பட்டதனால் உண்டான குருதிக்கடல் வெள்ளத்தினின்றும் தோன்றியவர்களாவார்கள். இவர்களுக்கு அருகில் நிற்பவர்கள் பாற்கடலினின்றும் ஆலகாலவிஷமும், அதனைத் தொடர்ந்து தோன்றிய, அமிழ்தமும் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய போர்செய்யும் இயல்புடைய அரக்கர்களாவார்கள்'' என்கின்றனர் தூதுவர்கள். அரக்கர்களின் கொடுமையும் பெருக்கமும் குறிக்கப்பட்டது என்க.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

376. படைக்காட்சிப் படலம் பக்களண்-1442/42 மாலியவான் கூற்று

''இங்குவந்து நீர் வினாயது என்? எறிதிரைப் பரவை
அங்கு வெந்திலதோ? சிறிது அறிந்ததும் இலிரோ?
கங்கை சூடிதன் கடுஞ்சிலை ஒடித்த அக்காலம்
உங்கள் வான்செவி புகுந்திலதோ முழங்கு ஓதை?'' (9288)

மாலியவான் அந்தப் படைப்பெருங்குலத் தலைவர்களைப் பார்த்தபொழுது, புட்கரத்தீவுக்கு மன்னனான வன்னி என்பவன் ''அன்னமானுடர்ஆர் வலி யாவது?'' என்று கேட்டதற்கு மாலியவான் கூறிய மறுமொழி இந்தப்பாடல்.

''நீங்கள் இங்கு வந்து அந்த மானிடர்களின் வலிமையைப் பற்றிக் கேட்பதில் என்ன பொருள் இருக்கிறது? முன்பு அலைவீசும் கடல் இராமபிரானின் வருணாஸ்திரத்தால் எரிந்து போகவில்லையோ? அது பற்றிச் சிறிதும் நீங்கள் அறியவில்லையோ? மேலும் கங்கையைத் தன் தலையில் சூடியிருக்கும் சிவபெருமானின் சிவதனுசை இராமபிரான் மிதிலையில் ஒடித்தபோது எழுந்த அந்தப் பேரோசை, உங்களுடைய பெரிய காதுகளில் விழவில்லையோ?'' என்று கேட்கிறான் மாலியவான்.

அவர்களுக்கு மறுமொழி கூறும்வகையில், இராமபிரான் வருணனை வழிவேண்டியபோது ஏழு கடல்களும், அண்டகோளத்திற்கு அப்பால் உள்ள பெரும்புறக் கடல்களும் எரிந்து போனதையும், இராமபிரான் மிதிலையில்

சிவபெருமானின் சிவதனுசை ஒடித்தபோது எழுந்த பேரோசையையும் சுட்டிக்காட்டுகிறான் மாலியவான்.

இங்கே ''கங்கை சூடி தன் கடுஞ்சிலை'' என்பது கங்கையைத் தன் தலையில் சூடியுள்ளவன் என்று சிவபெருமானையும், அவனது வில் சிவதனுசு கடுமையான வில் என்றும் பேசப்படுகிறது என்க.

377. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1445/11கவிக்கூற்று

''சூலம் வாங்கிடின், சுடர்மழு எறிந்திடின், சுடர் வாள்
கோல வெஞ்சிலை பிடித்திடின், கொற்றவேல் கொள்ளின்
சால வன் தண்டு தரித்திடின், சக்கரம் தாங்கிடின்,
காலன், மால், சிவன், குமரன் என்று இவரையும் கடப்பார்''
(9309)

இராவணன் படைத்தலைவர்களுக்கு இட்ட கட்டளையால் வந்து சேர்ந்த மூலபலப் படையின் சிறப்பியல்புகளைக் கூறும்பொழுது வருவது இப்பாடல்.

''இந்த மூலபலப்படையில் உள்ள ஒவ்வொரு வீரரும், சூலாயுதத்தைக் கையில் கொண்டாலும், ஒளிமிகுந்த மழுவாயுதத்தை எறிவதற்காகக் கையில் கொண்டாலும், ஒளிவீசும் வாட்படையையும் அழகிய கொடிய விற்படையைக் கைக்கொண்டாலும், வெற்றிபொருந்திய வேற்படையைக் கைக்கொண்டாலும், மிகவும் பெரிய கொடுமையான தண்டாயுதத்தைக் கைக்கொண்டாலும், சக்கரப்படையைக் கைக்கொண்டாலும், இவர்கள் இயமன், திருமால், சிவபெருமான், முருகப்பெருமான் ஆகிய எல்லோரையும் வென்றுவிடும் ஆற்றல் பெற்றவர்களாவார்கள்'' என்று மூலபலப்படையின் சிறப்புப் பற்றிப் பேசுகிறான் கவிஞன்.

இங்கே சூலாயுதம் எமனுக்குரியதாகவும், மழுப்படை சிவபெருமானுக் குரியதாகவும், வாள், வில், வேல், தண்டு முதலிய படைக்கலன்கள் திருமாலுக்குரியனவாகவும், வேற்படை முருகப்பெருமானுக்கு உரியதுமாகிய ஆயுதங்கள் என்பது நாம் அறிந்ததே. திருமாலின் ஒருகையில் இருக்கும் சங்கு அழித்தல் தொழிலைச் செய்யாது என்பதனால் இங்கே தவிர்க்கப்பட்டிருக்கிறது என்பது நோக்கத்தக்கது. வாங்குதல், எறிதல், பிடித்தல், கொள்ளுதல், தரித்தல், தாங்குதல் இவையெல்லாம் கைக்கொள்ளுதல் என்ற ஒரே பொதுப்பொருளைத் தந்தாலும் அவற்றுக்குள் சிறு சிறு வேறுபாடு உண்டு என்பதும் கருதத்தக்கது.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

378. மூலபல வதைப்படலம் பக்களண்-1446 / 24 தேவர்கள் கூற்று

நடுங்கி, நஞ்சுஅடை கண்டனை, வானவர், ''நம்ப!
ஒடுங்கி யாம் கரந்து உறைவிடம் அறிகிலம்; உயிரைப்
பிடுங்கி உண்குவர்; யார் இவர் பெருமை பண்டு அறிந்தார்?
முடிந்தது எம் வலி'' என்றனர், ஓடுவான் முயல்வார். (9322)

தேவர்கள் இப்படைப் பெருக்கத்தைக் கண்டு அஞ்சி, நஞ்சுபொருந்திய கழுத்தினையுடைய சிவபெருமானை அடைந்து, ''தலைவனே! இவர்களிடமிருந்து ஒதுங்கி, நாம் ஒளிந்துகொள்வதற்கான இடம் ஒன்றும் காணப்பெற்றிலம்; இங்கு இருந்தால் இவர்கள் எங்கள் உயிரைப் பிடுங்கி உண்டுவிடுவார்கள்; இவர்களுடைய சிறப்பியல்புகளை இதற்கு முன் யார் அறிந்து இருந்தார்கள்? இப்பொழுது எங்கள் வலிமையெல்லாம் குன்றிப்போய்விடும் போலிருக்கிறது!'' என்று முறையிட்டு, அங்கிருந்து ஓடிப்போவதற்கு முற்பட்டார்கள்.

இங்கே ''நஞ்சு அடை கண்டன்'' என்பது ஆலகால விஷத்தைத் தொண்டையில் தேக்கிவைத்திருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்தது என்க. முன்பு திருப்பாற் கடலைக் கடையும்காலத்தும், ''நஞ்சு அட எழுதலும், நடுங்கி நாள்மதிச் செஞ்சடைக் கடவுளை அடையும் தேவர்'' என்று கூறியிருப்பதையும் இங்கு நினைக.

379. மூலபல வதைப்படலம் பக்களண்-1447 / 26 கவிக்கூற்று

என்று இறைஞ்சலும், மணிமிடற்று இறைவனும், ''இனி நீர்
ஒன்றும் அஞ்சலீர்! வஞ்சனை அரக்கரை ஒருங்கே
கொன்று நீக்கும் அக்கொற்றவன்; இக்குலம் எல்லாம்
பொன்றுவிப்பது ஓர் விதி தந்ததாம்'' எனப் புகன்றான். (9324)

மூலபலப் படையோடு நால்வகைச் சேனையும் ஒருசேரப் போர்க்களத்துள் புகுந்ததைக் கண்ட தேவர்கள் நடுங்கி, சிவபெருமானை அடைந்து முறையிடுவது பற்றிக் கூறுவது இப்பாடல்.

என்று அஞ்சி, தேவர்கள் வணங்கியதும், அழகிய நீலநிறம் பொருந்திய கழுத்தை உடைய இறைவனாகிய சிவபெருமான், ''இனிமேல் இது பற்றிச் சிறிதும் அச்சம் கொள்ளத் தேவையில்லை; இந்த வஞ்சம் மிகுந்த அரக்கர்கூட்டத்தை எல்லாம் ஒருசேரக் கொன்று குவிப்பான் அந்த வெற்றிபொருந்திய இராமபிரான்; இந்த அரக்கர்கூட்டத்தையெல்லாம் கொன்று குவிக்கத்தக்கதான ஊழ்வினைதான் இவ்விராமபிரானை இங்கே கொண்டுவந்து சேர்த்திருக்கிறது'' என்று ஆறுதல்கூறினான் சிவபெருமான்.

இங்கே ''மணி மிடற்று இறைவன்'' என்பது நீலநிறம் பொருந்திய கழுத்தையுடைய இறைவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

380. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1448/38

வானரப் படைத்தலைவர் கூற்று

''புரம் கடந்த அப்புனிதனே முதலிய புலவோர்
வரங்கள் தந்து, உலகு அளிப்பவர் யாவரும் மாட்டார்
கரந்து அடங்கினர்; இனி, மற்று அவ்வரக்கரைக் கடப்பார்
குரங்கு கொண்டுவந்து, அமர் செய்யும் மானுடர் கொல்லாம்?''
(9336)

இந்திரசித்து இறந்தபின், மூலபலப்படை வந்தது; அந்தப் படையின் பெருக்கத்தையும் வலிமையையும் கண்ட வானரவீரர்கள் அச்சம்கொண்டு நிலைகுலைந்து ஓடிப்போனார்கள். இராமபிரான் அங்கதனை அழைத்து ''ஓட்டின் மேற்கொண்ட தானையைப் பயம் துடைத்து மீட்டி'' என்று வேண்ட, அவ்வாறே அங்கதன் அழைத்த பின்னும் வானரச்சேனையினர் போர்க்களத்திற்குள் வர உடன்படவில்லை; எனினும் பெரும்படைத்தலைவர்கள் மட்டும் மீண்டு வந்து அங்கதனிடம் பேசுவதாக அமைந்த பாடல் இது.

''முப்புரங்களை வென்ற அந்தத் தூய்மையானவனான சிவபெருமான் முதலிய தேவர்கள் எல்லாம் இவ்வரக்கர்களுக்கு அவர்கள் வேண்டிய வரங்கள் எல்லாம் தந்தனர்; இவ்வுலகத்தைக் காப்பாற்றுபவர்களான மும்மூர்த்திகளும்கூட இவர்களிடம் போர்செய்யமாட்டாமல் தம்மை மறைத்து ஒளித்துக்கொண்டு அடங்கிப்போனார்கள்; அத்தகைய இவ்வரக்கர்களைச் சாதாரண இந்த இரு மனிதர்கள் நமது குரங்குப்படையை உடன் அழைத்துக்கொண்டு வந்தா வென்றுவிடப் போகிறார்கள்?'' என்று ஏளனமாகப் பேசினர்.

இங்கே ''புரம் கடந்த அப்புனிதன்'' என்பது முப்புரங்களைச் சுட்டெரித்து வெற்றிகொண்ட தூயவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

381. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1449/39

வானரப் படைத்தலைவர் கூற்று

''ஊழி ஆயிரகோடி நின்று, உருத்திரனோடும்
ஆழியானும், மற்று அயனொடு, புரந்தரன் அவனும்,
சூழ ஓடினர்; ஒருவரைக் கொன்று தம் தோளால்
வீழுமா செய்ய வல்லரேல், வென்றியின் நன்றே!'' (9337)

வானரப்படைத் தலைவர்கள் அங்கதனை நோக்கி, ''சிவபெருமானோடு, சக்கரப்படையையுடைய திருமாலும், பிரமதேவனோடு இந்திரனும், ஓராயிரகோடி ஊழிக்காலம் முழுவதும் இவ்வரக்கர்களை எதிர்த்துப் போர்செய்து அவர்களை வெல்லமுடியாமல் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பின்வாங்கி ஓடி ஒளிந்துகொண்டனர்; அவர்கள் இவ்வரக்கர்களில் ஒருவனையாவது தம் தோளாற்றலால் வீழ்த்தியிருப்பார்களேயானால், அதுவே இவர்கள் வெற்றிபெற்றதாகும். நன்மைபயப்பதாகும். அவ்வாறு அவர்களால் செய்யமுடியவில்லையே? என்கிறார்கள் படைத்தலைவர்கள்.

இங்கே ''உருத்திரன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும்.

382. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1450/50 சாம்பவன் கூற்று

நாணத்தால் சிறிதுபோது நலங்கினன் இருந்து, பின்னர்,
''தூண் ஒத்த திரள்தோள் வீர! தோன்றிய அரக்கர் தோற்றம்
காணத்தான், நிற்கத்தான், அக்கறை மிடற்றவற்கும் ஆமே?
கோணற்பூ உண்ணும் வாழ்க்கைக் குரங்கின்மேல் குற்றம் உண்டோ?''
(9348)

வானரப்படைத் தலைவர்கள் தம் அச்சத்தைத் தெரிவித்தபிறகு அங்கதன் சாம்பவனை நோக்கி, ''முன்பு நீதானே எங்களுக்கு, பாம்பணை அமலனே மற்றுஇவ் இராமன்'' என்று சொல்லித் தேற்றினாய்; இப்பொழுது நீயே ஏன் அச்சம்கொண்டு ஓடுகிறாய்?'' என்று கேட்டதும், சாம்பவன் சிறிதுநேரம் வெட்கத்தால் முகம் வாடப்பெற்று, பின்னர் ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு, அங்கதனை நோக்கி ''தூண்போன்ற திரண்ட தோள்களையுடைய வீரனே! அங்கதா! அந்த மூலபலப்படையினர் போர்க்களத்தில் தோன்றிய தோற்றத்தைக் காண்பதற்கோ, அவர்கள் எதிரில் எதிர்த்து நிற்கவோ, அந்த நீலகண்டனாலும் முடியுமோ? முடியாதல்லவா? அப்படி இருக்கும்போது வெறும் பூக்களைத் தின்று உயிர்வாழும் இந்த வளைந்த உடம்பைக் கொண்ட குரங்குகள் போர்க்களத்தை விட்டு ஓடிப்போவதை ஒரு குற்றமுடைய செயல் என்று கருதலாமோ?'' என்று கேட்கிறான் சாம்பவன்.

இங்கே ''கறை மிடற்றவன்'' என்பது நீலநிறம் பொருந்திய கழுத்தை உடையவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

383. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1453/74 அரக்கர்கள் கூற்று

''புரங்கள் எய்த புங்கவற்கும் உண்டு தேர்; பொருந்தினார்
பரந்த தேவர்; மாயன் நம்மை வேரறுத்த பண்டை நாள்,
விரைந்து புள்ளின்மீது விண்ணுளோர்களோடு மேவினான்;
கரந்திலன்; தனித்து ஒருத்தன் நேரும் வந்து காலினான்''
(9372)

போர்க்களத்தில் தனித்து நின்று போர்செய்ய முற்பட்ட இராமபிரானின் ஆற்றலைக்கண்ட அரக்கவீரர்கள் வியந்து பேசுவதாக அமைந்தது இப்பாடல்.

''முன்பு முப்புரங்களைச் சுட்டெரித்த சிவபெருமானுக்குக்கூட தேர் என்ற வாகனம் இருந்தது. அவனுடன் துணைக்குத் தேவர்கள் வந்து சேர்ந்தனர். திருமாலும் நம்மை முன்பு வேரோடு அழித்து ஒழித்தபோதும், அவன் தனது கருடவாகனத்தின்மீது ஏறி, விண்ணுலகத்துத் தேவர்களின் துணையோடுதான் வந்து சேர்ந்தான்; ஆனால் இம்மனிதனோ தன்னை ஒளித்துக்கொள்ளவும் இல்லை; ஒரு வாகனத்திலும் வரவில்லை; ஒருவர் துணையோடும் வரவில்லை; தன்னந்தனியனாக வந்திருக்கிறான். தன் கால்களாலேயே நடந்து வந்து நம்மை எதிர்த்து நிற்கின்றானே!'' என்று அரக்கர்கள் வியக்கின்றனர்.

இங்கே ''புரங்கள் எய்த புங்கவன்'' என்ற சொல் முப்புரங்களையும் சுட்டெரித்த தூயவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்தது என்க.

384. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1465 / 148 கவிக்கூற்று

அக்கணையை அக்கணம் அறுத்தனர்
　　செறுத்து இகல் அரக்கர் அடைய,
புக்கு அணையலுற்றனர்; மறைத்தனர்;
　　புயற்கு அதிகம் வாளி பொழிவார்;
திக்கு அணை வகுத்தனர் எனச்செல
　　நெருக்கினர், செருக்கின் மிகையால்;
முக்கணனை உற்று அடி வணங்கி
　　இமையோர் இவை மொழிந்தனர்களால். (9446)

மிக்க வலிமைபடைத்த அந்த மூலபலச்சேனையில் இருந்த அரக்கர்கள் யாவரும் மிக்கக் கோபம்கொண்டு போர்க்களத்துள் புகுந்து இராமபிரான் செலுத்திய அந்த அம்பை அப்பொழுது அறுத்து எறிந்தனர். மேகக்கூட்டத் திற்கும் அதிகமான அம்புகளைச் செலுத்தி இராமபிரானையே மறைத்து விட்டனர்; செருக்குக்கொண்டு, திக்குகள் எல்லாம் அணைகட்டியதுபோல இராமபிரானை நெருக்கினார்கள்; இதனைக் கண்ட இமையா நாட்டமுடைய தேவர்களெல்லாம் மூன்று கண்களையுடைய வனாகிய சிவபெருமானை அடைந்து, அவன் திருவடிகளை வணங்கி, கீழ்கண்டவாறு கூறலானார்கள்.

இங்கே ''முக்கணான்'' என்பது நெற்றிக்கண்ணோடு மூன்று கண்களையுடையவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

385. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1467 / 153 கவிக்கூற்று

என்று பரமன் பகர, நான்முகனும்
　　அன்னபொருளே இசைதலும்,
நின்று நிலை ஆறினர்கள், வானவரும்;
　　மானவனும் நேமி எனலாம்

வென்றி நெடு வாளி மழை, மாரியினும்
மேலன துரந்து, விரைவின்
கொன்று, குலமால்வரைகள் மானு தலை
மாமலை குவித்தனன் அரோ! (9451)

முன்பாடலில் ''இன்று ஒரு கடும் பகலிலே குரக்கின் முதல் நாயகனை, ஆளுடைய கோள் உழுவை கொல்லும் இவரை'' என்று சிவபெருமான் கூறினான்; பிரமதேவனும் அதனையேகூறி உடன்பட்டான்; அதுகேட்ட வானவர்கள் மனம் தேறுதல் அடைந்தார்கள்; மனுகுலத்தில் தோன்றியவனும், பெருமைமிக்கவனுமான இராமபிரான், சக்கரப்படை என்று சொல்லும்படியாக நீண்ட பெரிய வெற்றியைத்தரும் அம்புகளை மழையைக் காட்டிலும் மிகுதியாகப் பொழிந்து விரைவில் அரக்கர்களின் மலையை ஒத்த பெரிய தலைகளை அறுத்து பெரிய மலைக்குவியல்போலக் குவித்துவிட்டான்'' என்கிறான் கவிஞன். இது கவிக்கூற்று.

இங்கே ''பரமன்'' என்பது பரமேஸ்வரன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறித்தது என்க.

386. மூலபல வதைப்படலம் பக்களண்-1468 / 164 கவிக்கூற்று

சிவனும், அயனும் எழு திகிரி அமரர் பதி
அவனும், அமரர்குலம் எவரும், முனிவரொடு
கவனம் உறு கரணம் இடுவர்; கழுது இனமும்,
நமனும், வரிசிலையும், அறனும், நடன் நவில. (9462)

உருத்து எழுந்த அரக்கர்படையை இராமபிரான் தனி ஒருவனாகவே அழித்தொழித்ததைக் கண்டவர்களின் நிலையைக் கவிஞன் கூறுவதாக வரும் பாடல்களுள் இதுவும் ஒன்று.

''சிவபெருமானும் பிரமதேவனும், போரில் ஈடுபடுகின்ற சக்கரப்படையையுடையவனும், தேவர்தலைவனுமாகிய திருமாலும், தேவர்கள் கூட்டமும், மற்றுமுள்ள எல்லோரும் முனிவர்களோடும் மிக விரைவாகக் குட்டிகரணம் போட்டு ஆனந்தக் கூத்தாடினர். பேய்க் கூட்டங்களும், இயமனும், இறுக்கக் கட்டப்பட்ட வில்லும், அறக்கடவுளும் கூட ஆனந்த நடனம் ஆடின'' என்கிறான் கவிஞன்.

இராமபிரான் அரக்கர் தலைகளை மலைபோலக் குவித்ததனால் தமக்கு நல்ல மிகுதியாக உணவு கிடைத்ததென்று கழுது இனமும், நமனும் நடனம் நவின்றன. சிவனும் பிரமதேவனும், திருமாலும் இனி அரக்கர்களால் தொல்லை இராது என்று களித்து ஆடினார்கள். இராமபிரானது விற்படை, வெற்றிகுறித்தும், அறக்கடவுள் அரக்கர்கள் அழிந்தது குறித்தும் மகிழ்ச்சியடைந்தன என்பதாம்.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

387. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1469/171

அரக்கர்கள் கூற்று

''புரம்சுடு கடவுளும், புள்ளின் பாகனும்,
அரம் சுடு குலிசவேல் அமரர் வேந்தனும்,
உரம் சுடுகிற்கிலர்; ஒருவன் நாமுடை
வரம் சுடும்; வலிசுடும்; வாழும் நாள் சுடும்'' (9469)

போர்க்களத்தில் தன்னந்தனியனாக நின்று தம் படைகளையெல்லாம் அழித்து ஒழித்த இராமபிரானின் போராற்றலைக் கண்டு வியந்து அரக்கவீரர்கள் கூறுவதாக வருவது இப்பாடல்.

''முப்புரங்களையும் சுட்டெரித்தவனான சிவபெருமானும், கருடப்பறவையைத் தன் வாகனமாகக் கொண்டு செலுத்தும் திருமாலும், அரத்தால் அராவப்பட்டுக் கூர்மையாக்கப்பட்ட வச்சிராயுதத்தைக் கைக்கொண்ட தேவர் தலைவனான தேவேந்திரனும்கூட, நமது வலிமையை அழிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் அல்லர்; ஆனால் இந்த அற்பமான மனிதன், அவன் ஒருவன் மட்டும் தன்னந்தனியனாய் நின்றுகொண்டு அரிதின் பெற்ற நம்முடைய வரங்களை அழிக்கிறான்; நமது வலிமையை அழிக்கிறான்; நம்முடைய வாழ்நாளையும் குறைத்து அழிக்கிறானே! என்ன வியப்பு இது!'' என்று அவ்வரக்கர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளுகின்றனர்.

இங்கே ''புரம் சுடு கடவுள்'' என்பது முப்புரங்களையும் சுட்டெரித்த பெருமான் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

388. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1470/174

அரக்கர்கள் கூற்று

''பண்டு உலகு அளித்தவனோடும், பண்அமை
குண்டையின் பாகனும், பிறரும் கூடினார்;
அண்டர்கள் விசும்பினின்றும் ஆர்க்கின்றாருழைக்
கண்டிலம்; இவன் நெடு மாயக் கள்வனால்'' (9472)

''முன்பு இவ்வுலகத்தைப் படைத்தருளியவனான பிரமதேவனோடு இசைக்குத்தகுந்தாற்போல நடந்து செல்லும் கால்களையும், தவிசையும் உடைய காளை வாகனத்தைச் செலுத்துகின்றவனாகிய சிவபெருமானும், மற்றெல்லாத் தேவரும் ஆகாயத்தில் ஒருங்குகூடி நின்று இந்தப் போரைக்கண்டு மகிழ்ச்சியால் ஆரவாரித்துக்கொண்டு நிற்கிறார்கள். ஆனால் அந்தக் கூட்டத்தினுள்ளே திருமாலைக்காணவில்லையே; எனவே இங்கே நம்மோடு போர்செய்து கொண்டிருக்கும் இந்த வஞ்சனை மிக்கவன் அந்தத்

திருமாலாகத்தான் இருக்கவேண்டும்'' என்று அவ்வரக்கர்கள் இப்பொழுது உணரத் தொடங்குகிறார்கள்.

இங்கே ''பண்அமை குண்டையின் பாகன்'' என்பது தவிசு அமைந்த காளையைச் செலுத்துபவன் என்ற பொருளிலும் இசைக்குத் தகுந்தாற்போல் அடிஎடுத்து வைத்து நடக்கும் காளையைச் செலுத்துபவன் என்ற பொருளிலும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

389. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1471/181 கவிக்கூற்று

மூன்று கண் அமைந்தன; ஐம்முகத்தன;
ஆன்ற மெய் தழலன; புனலும் ஆடின,
வான்தொட நிமிர்வன; வாளி மாமழை
தோன்றின, புரம்சுடு ஒருவன் தோற்றத்த. (9479)

இராமபிரான் செலுத்திய அம்புமழை மூன்று கண்களையுடையனவாகவும், ஐந்து முகங்கள் கொண்டனவாகவும், சிறந்த அனல்போன்ற வடிவுடையதாயும், நீர்நிரம்பப் பெற்றதுபோன்றும், வானளாவ உயர்ந்துதோன்றுவதாயும் இருந்தன. அவற்றின் தோற்றத்தைப் பார்த்தால் முன்பு முப்புரங்களைச் சுட்டெரிக்கத் தோன்றிய ஒப்பற்றவனான சிவபெருமானுடைய உருவத்தைப் போன்றிருந்தது'' என்கிறான் கவிஞன்.

இந்தப்பாடல் இராமபிரான் செலுத்திய அம்புக்கூட்டத்திற்கும் சிவபெருமானுக்கும் பொருந்திவருமாறு அமைந்த சிலேடைப் பாடல்போல் தோன்றும். ஆனால் இதனை முற்று உருவகம் என்கிறது இலக்கணம்.

இங்கே ''புரம் சுடு ஒருவன்'' என்பது முப்புரங்களைச் சுட்டெரித்த ஒப்பற்றவன் என்ற பொருளில் சிவபெருமானையும், மூன்று கண் என்பதும் ஐம்முகம் என்பதும் அவனது உருவத்தையும் ''மெய்தழல்'' என்பது அவனது வண்ணத்தையும், ''புனல் ஆடின'' என்பது அவன் ஆகாய கங்கையைத் தலையில் தாங்கியிருத்தலையும், ''வான்தொட-நிற்பவன்'' என்பது அவனது நெடிதுயர்ந்த வடிவத்தையும் குறித்தன என்க.

390. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1476/219 கவிக்கூற்று

கண்ணுதல் பரமன்தானும், நான்முகக் கடவுள்தானும்,
''எண்ணுதும் தொடர எய்த கோல்'' என, எண்ணலுற்றார்;
பண்ணையால் பகுக்க மாட்டார், தனித்தனி பார்க்கலுற்றார்;
''ஒண்ணுமோ கணிக்க?'' என்பார், உவகையின் உயர்ந்த தோளார்.
(9517)

நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானும், நான்கு முகங்களையுடைய கடவுளான பிரமதேவனும், ''இராமபிரான் இடைவிடாது செலுத்துகின்ற

அம்புகளை எண்ணத்தொடங்குவோம்'' என்று கூறி, தனித்தனியாக எண்ணத் தொடங்கினார்கள். ஆனால் அவன் செலுத்துகின்ற அம்புகளின் பெருக்கத்தைக்கண்டு ''இதனை எண்ணி மாளாது; எண்ணிக்கையில் அடங்காது'' என்று மகிழ்ச்சியுடன் கூறி, பூரித்த தோள்களைப் பெற்றவர்களானார்கள். மகிழ்ச்சியால் அவர்கள் தோள்கள் பூரித்தன என்பது கருத்து.

இங்கே **''கண்ணுதல் பரமன்''** என்றசொல் மூன்று கண்களையுடைய பரம்பொருளானவன் என்று சிவபெருமானைக் குறிக்கும் என்க.

391. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1477 / 229 கவிக்கூற்று

தீ மொய்த்த அனைய செங்கண் அரக்கரை முழுதும் சிந்தி,
பூமொய்த்த கரத்தர்ஆகி, விண்ணவர் போற்ற, நின்றான்;
பேய் மொய்த்து, நரிகள் ஈண்டி, பெரும் பிணம் பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தமியன் நின்ற கறைமிடற்று இறைவன் ஒத்தான்.
(9527)

நெருப்பு நிறைந்திருப்பதுபோன்ற சிவந்த கண்களையுடைய அரக்கர்கள் எல்லோரையும் அழித்து ஒழித்துவிட்டு, மலர்கள் நிறைந்திருக்கும் கைகளையுடையவர்களாகிய விண்ணுலகத்துத் தேவர்கள் போற்றித் துதிக்கும்படி, போர்க்களத்தில் இராமபிரான் நின்று கொண்டிருந்தான். அவனுடைய இப்போதையத் தோற்றம் எப்படி இருந்தது என்றால், பேய்கள் நிறைந்து, நரிகள் நெருங்கி நிற்கவும், மிக்க பிணங்கள் விளங்கித் தோன்றும் சுடுகாட்டுக்குள் தன்னந்தனியனாய் நின்றுகொண்டிருக்கும் விஷம்பொருந்திய கழுத்தை உடையவனான சிவபெருமானைப்போல இருந்தது என்கிறான் கவிஞன்.

இங்கே **''கறைமிடற்று இறைவன்''** என்பது ஆலகால விஷத்தைப் பருகியதால் உண்டான களங்கத்தைத் தன் கழுத்தில் கொண்டுள்ளவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும். ''ஈமத்துள் தமியன் நின்ற'' என்ற சொற்றொடர் ''நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே'' என்னும் திருவாசக அடிகளை நினைவுபடுத்தவேண்டும்.

392. வேல்ஏற்ற படலம் பக்கஎண்-1481 / 23 இராவணன் கூற்று

''மோகம் ஒன்று உண்டு; முதலவன் வகுத்தது முன்னாள்;
ஆகம் அற்றது; கொற்றமும் சிவன்தனை அழிப்பது;
ஏகம் முற்றிய விஞ்சையை இவன்வயின் ஏவி,
காகம் உற்று உழல் களத்தினில் கிடத்துவென் கடிதின்''(9553)

மூலபலப்படை முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிந்துகொண்ட இராவணன், தானே போர்க்களத்துள் புகுந்தான். இப்போது இலக்குவன் அவனை எதிர்ந்தான். இராவணன் இலக்குவனை நோக்கித் தனக்குள் பேசிக்கொள்வதுபோல அமைந்தது இப்பாடல்.

''மோகப்படை'' என்ற ஒரு படைக்கலம் என்னிடம் உள்ளது; அது முற்காலத்தில் பிரமதேவனால் படைக்கப்பட்டது. அதற்கு ஒரு உருவம் கிடையாது; சிவபெருமானது வெற்றியையே அழிக்கவல்லது; ஒப்பற்ற அந்த மாயையான மோகனாஸ்திரத்தை இவன்மீது செலுத்தி, இந்தப் போர்க்களத்தில் விரைவில் இவனுடைய உடலை அங்கே அலைந்துதிரியும் காகம் கடித்துக் குதறுமாறு வீழ்த்திக் காட்டுகிறேன் பார்'' என்று தனக்குள் கூறிக்கொள்ளுகிறான் இராவணன்.

இங்கே ''மோகம்'' என்பது மோகனாஸ்திரத்தைக் குறிக்கும். ''ஏகம் முற்றிய விஞ்சை'' என்பது அது ஒப்பற்ற மந்திரத்திற்கு மட்டுமே கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும். இங்கே ''விஞ்சை'' என்பது வித்தை என்ற பொருளில் மாயையைக் குறிக்கும்.

''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

393. இராவணன் தேரேறு படலம் பக்கஎண்-1495/3 கவிக்கூற்று

ஈசனை, இமையா முக்கண் ஒருவனை, இருமைக்கு ஏற்ற
பூசனை முறையின்செய்து, திருமறை புகன்ற தானம்
வீசினன் இயற்றி, மற்றும் வேட்டன வேட்டோர்க்கெல்லாம்
ஆசுஅற நல்கி, ஒல்காப் போர்த்தொழிற்கு அமைவது ஆனான்.
(9644)

இராவணன் தானே போருக்குச் செல்வது என்று முடிவெடுத்து, இமையாநாட்டமும், மூன்று கண்களையுடையவனும் ஒப்பற்றவனுமான சிவபெருமானை நினைந்து, இம்மை, மறுமை ஆகிய இரண்டுக்கும் பயன்தருவனவான பூசனைகளை முறைப்படி செய்து, திருமறைகள் கூறியபடி எந்தக் குற்றமுமில்லாது வேண்டுவார்க்கெல்லாம் வேண்டியதைக் காட்டிலும் மிக அதிகமாக வாரி வழங்கி, தளர்ச்சியுறாத போர்த்தொழில் செய்வதற்கு முற்பட்டுப் புறப்படலானான்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும், ''இமையா முக்கண் ஒருவன்'' என்பதும் இமையா நாட்டமும், மூன்றுகண்களை யுடையவனும், ஒப்பற்றவனானவனும் என்ற பொருளில் சிவபெரு மானையே குறிக்கும் என்க.

394. இராவணன் தேரேறு படலம் பக்கஎண்-1498/23 கவிக்கூற்று

''கண்ணன் நேமியும், கண்ணுதல் கணிச்சியும், கமலத்து
அண்ணல் குண்டிகைக் கலசமும், அழியினும் அழியாத்
திண்மை சான்றது; தேவரும் உணர்வு அரும் செய்கை
உண்மையாம் எனப் பெரியது; வென்றியின் உறையுள்''
(9664)

''திருமாலின் சக்கரப்படையும், நெற்றியில் கண்ணையுடைய சிவபெருமானின் மழுவாயுதமும், தாமரைமலரில் வீற்றிருக்கும் பெருமைக்குரியவனான பிரமதேவனின் கையில் இருக்கும் கமண்டலமும் அழிந்தாலும்கூட, என்றும் அழியாத, வலிமைபெற்றது இராவணனின் தேர்; தேவர்கள்கூட அறிந்திராத, அருமையான செயல்பாடு கொண்டது என்று கூறும்படியானதும், பெரியதானதும், வெற்றியின் இருப்பிடமானதுமாகும் இராவணனின் தேர்'' என்று இராவணன் தேரினைக் கவிஞன் சிறப்பிக்கிறான்.

இங்கே ''கண்ணுதல்'' என்பது நெற்றிக்கண்ணனாகிய சிவபெருமானையும் ''கணிச்சி'' என்பது அவன் கைக்கொண்டிருக்கும் மழுவாயுதத்தையும் குறிக்கும் என்க.

395. இராமன் தேரேறு படலம் பக்கஎண்-1500/5 சிவபெருமான் கூற்று

''மூண்ட செரு இன்றளவில் முற்றும்; இனி வெற்றி
ஆண் தகையது; உண்மை; இனி அச்சம் அகல்வுற்றீர்;
பூண்ட மணி ஆழி வயமா நிமிர் பொலந்தேர்
ஈண்ட விடுவீர் அமரில்'' என்று அரன் இசைத்தான். (9681)

தேவர்களை நோக்கி சிவபெருமான் ''இப்போது ஏற்பட்டிருக்கின்ற போர் இன்றுடன் முடிந்துபோகும். இனிமேல் வெற்றி என்பது வீரனான இராமபிரானையே சேரும்; இதுதான் உண்மை. இனிமேல் நீங்கள் அச்சம் கொள்வதைத் தவிருங்கள்; மணிகள் பதிக்கப்பெற்ற சக்கரத்தையுடையதும், வெற்றியையே தரும் குதிரைகள் பூட்டப்பெற்றதுமான அழகிய பொன்னாலான இந்திரனது தேரை, போர்க்களத்திற்குள் செல்லுமாறு அனுப்பி வைப்பீர்களாக!'' என்று கூறினான்.

இங்கே ''அரன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

396. இராமன் தேரேறு படலம் பக்கஎண்-1502/19 மாதலி கூற்று

''முப்புரம் எரித்தவனும், நான்முகனும், முன்நாள்
அப்பகல் இயற்றி உளது; ஆயிரம் அருக்கருக்கு
ஒப்பு உடையது; ஊழி திரிகாறும் உலைவில்லா
இப் பொருஇல் தேர் வருவது இந்திரனது; எந்தாய்!'' (9695)

தேர்ப்பாகன் மாதலி இராமபிரானை நோக்கி, ''என் தந்தையே! முன்பு முப்புரங்களையும் சுட்டெரித்தவனான சிவபெருமானும், நான்கு முகங்களையுடைய பிரமதேவனும், இவ்வுலகைப் படைக்கத் தொடங்கிய காலத்துச் செய்யப்பெற்றது இந்தத்தேர். இது ஆயிரம் சூரியர்களின் ஒளிக்கு ஒப்புடையதாகும். ஊழியிறுதிக்காலத்திலும் அழிவில்லாத இந்த ஒப்பற்ற தேர் இந்திரனிடமிருந்து உன்னிடம் வந்திருக்கிறது'' என்றான்.

இங்கே ''முப்புரம் எரித்தவன்'' என்பது முன்பு முப்புரங்களையும் சுட்டெரித்தவனான சிவபெருமானைக் குறிக்கும் என்க.

397. இராமன் தேரேறு படலம் பக்களண்-1503/23 மாதலி கூற்று

''தேவரும், முனித்தலைவரும், சிவனும், மேல்நாள்
மூவுலகு அளித்த அவனும், முதல்வ! முன் நின்று
ஏவினர்; சுரர்க்கு இறைவன் ஈந்துள இது'' என்றான்,
மாவின் மனம் ஒப்ப உணர் மாதலி வலித்தான். (9699)

மாதலி இராமபிரானை நோக்கி, ''எல்லோர்க்கும் முதன்மையானவனே! தேவர்களும், முனிவர்களில் தலைசிறந்தவர்களும், சிவபெருமானும் முன்பு இம்மூவுலகங்களையும் படைத்தருளியவனான பிரமதேவனும், முன்நின்று கட்டளையிட்டனர். அதன்படி, தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரனால் அனுப்பப்பட்டது இந்தத்தேர்'' என்று குதிரைகளின் மனத்தை நன்கு உணர்ந்தவனான தேர்ச்சாரதி மாதலி உறுதிபடக் கூறினான்.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

398. இராவணன் வதைப்படலம் பக்களண்-1507/27 கவிக்கூற்று

துவனி வில்லின் பொருட்டு ஒரு தொல்லைநாள்
''எவன் அவ் ஈசன்?'' என்பார் பொர, ஏற்று எதிர்
புவனம் மூன்றும் பொலங்கழலால் தொடும்
அவனும் அச்சிவனும் எனல் ஆயினார். (9730)

போர்க்களத்தில் எதிர் எதிரே நிற்கும் இராம-இராவணனின் தோற்றத்தைக் காட்டுகிறான் கவிஞன்.

''முற்காலத்தில் ஒருநாள் ஒரு வில்லின் ஓசை காரணமாக ''அந்த ஈசன் என்பவன் யார்?'' என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு தமக்குள் போர் மேற்கொண்டு, எதிர்ப்பட்ட மூன்று உலகங்களையும் தன் அழகிய திருவடிகளால் அளந்தவனான திருமாலும், அம்மூவுலகங்களையும் தன் திருவடிக்குள் ஆட்படுத்திக்கொண்டவனுமான அந்தச் சிவபெருமானும் போலத் தோன்றினர் அந்த இராமபிரானும், இராவணனும்'' என்கிறான் கவிஞன்.

முன்னொரு காலத்தில் யாருடைய வில் உறுதிமிக்கது என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டுத் திருமாலும் சிவபெருமானும், பிரமதேவனின் வேண்டுகோளுக்கு இணங்கிப் போர்புரிந்தனர் என்பது ஒரு புராணக்குறிப்பு. இங்கே இராமபிரான் திருமாலுக்கும், இராவணன் சிவபெருமானுக்கும் ஒப்பு.

இங்கே ''ஈசன்'' என்பதும் ''சிவன்'' என்பதும் நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

399. இராவணன் வதைப்படலம் பக்களண்-1507/28 கவிக்கூற்று

கண்ட சங்கரன் நான்முகன் கைத்தலம்
விண்டு அசங்க, தொல் அண்டம் வெடித்திட,
அண்ட சங்கத்து அமரர்தம் ஆர்ப்பெலாம்
உண்ட சங்கம் இராவணன் ஊதினான். (9731)

இராமஇலக்குவர் போர்புரிதலைக் கண்ட சிவபெருமான், பிரமதேவன் முதலியோரது கைகள் எல்லாம் அசைந்து நடுங்கவும், மிகப்பழமையான இவ்வுலகம் இரண்டாக வெடித்துப்போகும்படியும், மேல்உலகத் தொகுதிகளில் உறையும் தேவர்களின் ஆரவாரத்தையெல்லாம் அடக்கியபடி, இராவணன் போர்ச்சங்கத்தை எடுத்து முழக்கத் தொடங்கினான்.

இங்கே ''சங்கரன்'' என்பது சம்ஹாரத் தொழிலுக்குரியவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

400. இராவணன் வதைப்படலம் பக்களண்-1510/50 கவிக்கூற்று

''விண்போர்த்தன; திசைபோர்த்தன; மலைபோர்த்தன; இமையோர்
கண்போர்த்தன; கடல்போர்த்தன; படிபோர்த்தன; கலையோர்
எண்போர்த்தன; எரிபோர்த்தன; இருள்போர்த்தன;''என்னே
திண் போர்த்தொழில்?'' என்று ஆனையின் உரிபோர்த்தவன் திகைத்தான்.
(9753)

இராவணன் செலுத்திய அம்புகளால் விண்ணுலகம் மூடப்பெற்றது; எட்டுத்திசைகளும் மூடிக்கொண்டன; மலைகளெல்லாம் மூடப்பெற்றன; இமையாநாட்டமுடைய தேவர்களின் கண்களெல்லாம் மூடிக்கொண்டன; கடல்களும், உலகங்களும் மூடிக்கொண்டன; கலையறிவில் சிறந்தவர்களின் எண்ணங்களெல்லாம் வெளிப்படமுடியாது போயின; நெருப்பும், இருளும் சூழ்ந்துகொண்டன; இதனைக்கண்ட யானையின் தோலைப் போர்வையாகப் போர்த்திக்கொண்டவனான சிவபெருமான் ''இவனுடைய போர்த்திறமை எவ்வளவு சிறப்பு வாய்ந்தது?'' என்று வியந்து திகைத்து நின்றான்.

இங்கே ''ஆனையின் உரி போர்த்தவன்'' என்பது அபிச்சார வேள்வி இயற்றிய முனிவர்கள் செய்த யாகத்தினின்றும் அனுப்பப்பெற்ற யானையின்

தோலை உரித்துத் தன் உடம்பில் போர்வையாகப் போர்த்திக்கொண்டவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

401. இராவணன் வதைப்படலம் பக்களண்-1517/94 கவிக்கூற்று

கண்ணுதல் ஒருவனது அடுபடை கருதிப்
பண்ணவன் விடுதலும், அது நனி பருக;
எண்ணுறு கனவினொடு உணர்வுஎன, இமையில்,
துண்ணெனும் நிலையினின் எறிபடை தொலைய. (9797)

இராம இராவணப் போரின்போது இராமன் பாசுபதாஸ்திரத்தைச் செலுத்தி இராவணனுடைய தாமதப்படையை அழித்த செய்தியைக் கூறும் பாடல் இது.

நெற்றிக்கண்ணையுடைய ஒப்பற்றவனான சிவபெருமானது கொல்லும் தன்மையுடைய பாசுபதாஸ்திரத்தை மனத்தில் எண்ணி, அதனை இராமபிரான் செலுத்தியவுடன் அது இராவணன் தொடுத்த படையை மிகவும் நன்றாக அறுத்தெறிந்தது. மதிக்கத்தக்க உள்ளுணர்வு வரப்பெற்றதும், கனவு கலைந்துபோவதுபோல, ஒருநொடிப் பொழுதில் எல்லோரும் திகைப் புறும்வகையில் அரக்கன் இராவணன் எறிந்த படைக்கலன்களெல்லாம் அழிந்துபோயின.

இங்கே ''கண்ணுதல்'' என்பது நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைக் குறிக்கும் என்க.

402. இராவணன் வதைப்படலம் பக்களண்-1519/109 கவிக்கூற்று

பூசனைத்தொழில் புரிந்து, தான் முறைமையின் போற்றும்
ஈசனைத் தொழுது, இருடியும் சந்தமும் எண்ணி,
ஆசை பத்தினும் அந்தரப் பரப்பினும் அடங்கா
வீசினன் செல, வில் இடைத்தொடை கொடு விட்டான். (9812)

இராவணன் மாயப்படையைச் செலுத்தத் தீர்மானித்து அதற்குரிய வழிபாடுகளைச் செய்து, தான் எப்போதும் வணங்கும் வழிபடுதெய்வமாகிய சிவபெருமானை முறையாகத் தொழுது, அப்படைக்குரிய அதிதேவதையை யும், மந்திரத்தையும்கூறி, பத்துத் திசைகளிலும் வானவெளியிலும் அடங்காத வண்ணம் தனது வில்லை எடுத்து அம்பைத் தொடுத்துச் செலுத்தினான்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

403. இராவணன் வதைப்படலம் பக்களண்-1519/113 கவிக்கூற்று

ஆயிரம் பெருவெள்ளம் என்று, அறிஞரே அறைந்த,
காய்சினப் பெருங்கடற்படை களப்பட்ட எல்லாம்,
ஈசனின் பெற்ற வரத்தினால் எய்திய என்ன,
தேசம் முற்றவும் செறிந்தன, திசைகளும் திகைப்ப. (9816)

இராவணன் செலுத்திய மாயப்படையால் விளைந்த மாயத்தோற்றத்தைப் பற்றிக் கூறுவது இப்பாடல்.

இராவணன்படை ஆயிரம் வெள்ளம் கொண்டது என்று அறிவின் மிக்க அறிஞர்கள் கூறிச்சென்றனர், கடுங்கோபம் கொண்ட பெரிய கடலைப்போன்ற அப்படையில் உள்ளவர்கள் எல்லாம் இறந்து, அழிந்துபட்டார்கள். அவர்கள் எல்லாம், இப்போது சிவபெருமானிடம் வரம்பெற்று, மீண்டும் தோன்றுவதுபோல இலங்கை நகரம் முழுவதும் அரக்கர்களாகவே நிறைந்து தோன்றவும், தேவர்களெல்லாம் திகைத்தனர்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும்.

404. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1521/124 கவிக்கூற்று

நீலம் கொண்டு ஆர்கண்டனும், நேமிப்படையோனும்,
மூலம் கொண்டார், கண்டகர் ஆவிமுடிப்பான்,
காலம் கொண்டார்; கண்டன முன்னே கழிவிப்பான்,
சூலம் கொண்டான் அண்டரையெல்லாம் தொழில்கொண்டான்.
(9827)

நீலநிறம் பொருந்திய கழுத்தினையுடைய சிவபெருமானும், சக்கரப்படையை ஏந்திய திருமாலும், திருமாலின் உந்திக்கமலத்தினின்றும் தோன்றிய பிரமதேவனும் முள்போன்று கொடியவர்களான அரக்கர்களை வேரோடு அழிப்பதற்கான தக்கசமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். இப்போது தேவர்களையெல்லாம் தனக்குக் குற்றேவல்செய்யும் பணியாளர்களாக அடிமைகொண்டிருந்த அரக்கனான இராவணன், தன் கண்முன்னே தோன்றிய எல்லாப் பொருட்களையும் அழித்தொழிக்கக் கருதித் தன் கையில் சூலப்படையைக் கொள்வானாயினான்.

இங்கே ''நீலம் கொண்டு ஆர்கண்டன்'' என்பது நீலநிறம் பொருந்திய அழகிய கழுத்தையுடையவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

405. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1522/134
இராவணன் கூற்று

''சிவனோ? அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்,
தவனோ என்னின் செய்து முடிக்கும் தரன் அல்லன்;
இவனோதான் அவ் வேத முதல் காரணன்?'' என்றான். (9837)

இராவணன் தான் சிவபெருமானிடமிருந்து பெற்ற உண்மையான வரங்களையும் தன் படைகளையும் படைக்கலன்களையும் அழித்து ஒழிப்பவனாகிய இராமபிரானைப் பார்த்துத் தனக்குள் எண்ணிக்கொள்வதாக வருவது இப்பாடல்.

''இவன் என்ன சிவபெருமானாய் இருப்பானோ? அல்லது நான்கு முகங்களையுடைய பிரமதேவனின் ஆற்றலைப் பெற்றிருப்பானோ? அல்லது திருமால் என்று கூறப்படுகின்றவனாக இருப்பானோ? இருக்கமுடியாது. காரணம் அவர்களெல்லாம் என்னிடம் தோற்றோடிப் போனவர்கள். சரி; இவன் மிகப்பெரும் தவசியாக இருப்பானோ? நம்மைவிட அதிகமாக எல்லா வரங்களையும் பெற்றவனாய் இருப்பானோ? அப்படியும் கருதமுடிய வில்லையே! இவன் இளமையாகச் சிறுவன்போல இருக்கிறான். எனவே நீண்டகாலமாக பெருந்தவம் இயற்றும் தகுதி படைத்தவனாகத் தெரிய வில்லையே? எனவே இவன்தான் எல்லாவற்றிற்கும் மூலப்பரம்பொருளான - மூலமுதற்காரணனான - பரம்பொருளாக இருக்கவேண்டும்'' என்று கருதிக்கொள்கிறான் இராவணன்.

இங்கே ''சிவனோ'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

406. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1524/146 கவிக்கூற்று

ஒக்க நின்று எதிர்அமர் உடற்றும் காலையில்
முக்கணான் தடவரை எடுத்த மொய்ம்பற்கு
நெக்கன விஞ்சைகள்; நிலையின் தீர்ந்தன;
மிக்கன இராமற்கு வலியும் வீரமும். (9849)

இராமஇராவணர், ஒருவரோடு ஒருவர் சமநிலையில் போர்புரிந்து கொண்டிருக்கும்பொழுது, மூன்று கண்களைக்கொண்ட சிவபெருமான் வீற்றிருக்கும் பெரிய கயிலாயமலையைப் பெயர்த்தெடுத்த வலிமை உடையவனான இராவணனுக்குத் தான் இதுவரை கற்றறிந்த வில்வித்தைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறந்துபோய், இறுதியில் ஒன்றும் நினைவில்லாமல் போயிற்று. எனினும் இராமபிரானுக்கு இப்பொழுது அவனுடைய வலிமையும், வீரமும் மிகுதிப்படலாயின'' என்கிறான் கவிஞன்.

இங்கே ''முக்கணான்'' என்பது நெற்றிக்கண்ணாகிய மூன்றாவது கண்ணையுடையவன் என்று சிவபெருமானையும், ''தடவரை'' என்பது சிவபெருமான் வீற்றிருக்கும் பெரிய கயிலாய மலையையும் குறிக்கும் என்க.

407. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1526/158 கவிக்கூற்று

மாமரத்து ஆர் கையால் வருந்துவானை, ஓர்
தோமரத்தால் உயிர் தொலைப்பத் தூண்டினன்,
தாம் அரத்தால் பொராத் தகைகொள் வாட்படை
காமரத்தால் சிவன் கரத்து வாங்கினான். (9861)

காமரம் என்னும் ஒருவகைப் பண்ணால்பாடி, சிவபெருமானை மகிழ்வித்து, அவன் கைகளினின்றும் பெற்ற அரத்தால் அராவப்படாத, இயல்பிலேயே கூர்மைபொருந்திய தகுதிவாய்ந்த சந்திரகாசம் என்னும்

வாட்படையைக் கொண்டு, இப்பொழுது பெரிய தனது கைகளினால் தாக்கப்பட்டு வருந்திக் கொண்டிருப்பவனாகிய தேர்ச்சாரதி மாதலியை, அவன் உயிர் அழியும்படி ஒரு ஒப்பற்ற தோமரம் என்னும் படைக்கலத்தைச் செலுத்தினான் இராவணன்.

இராவணன் இராமபிரானது தேர்ச்சாரதியாகிய மாதலியை உயிர்பறிக்கக் கருதித் தோமரம் என்னும் படைக்கலத்தைச் செலுத்தினான் என்பதாம்.

இங்கே ''சிவன்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும். ''தகைகொள் வாட்படை'' என்பது இராவணன் சிவபெருமானிடம் இருந்து பெற்ற சந்திரகாசம் என்னும் வாட்படையைக் குறிக்கும் என்க.

408. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1533/206
இராமபிரான் கூற்று

''கார்த்த வீரியன் என்பானால் கட்டுண்டான்'' என்னக் கற்கும்
வார்த்தை உண்டு; அதனைக் கேட்டு நாணுறு மனத்தினேற்குப்
போர்த்தலை புறகிட்டு ஏற்ற புண்ணுடைத் தழும்பும்போலாம்
நேர்த்ததும் காணலுற்ற; ஈசனார் இருக்கை நிற்க'' (9909)

போர்க்களத்தில் வீழ்ந்துபட்ட இராவணனின் முதுகுத்தழும்பினை நோக்கி இராமபிரான் கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

''கார்த்தவீர்யார்ச்சுனன் என்ற மனிதனால் கட்டப்பட்டவன் இந்த இராவணன் என்று மக்கள் பேசிக்கொள்வதை நான் கேட்டதுண்டு. அதற்கே வெட்கப்பட்டு இவனுடன் போர்புரிந்த எனக்கு, இப்பொழுது போர்க் களத்தில் புறமுதுகு காட்டி, வந்ததனால் அவன் ஏற்றுக்கொண்ட புண்களின் தழும்பும்கூட நேராகத் தென்படுகிறதே! இதை நோக்கும்போது இவன் சிவபெருமானின் இருப்பிடமாகிய கயிலையங்கிரியை பெயர்த்தெடுத்தான் என்பது ஒரு பெரும் சாதனை என்று கூறமுடியாதே! இருப்பினும் அது ஒருபுறம் இருக்கட்டும்'' என்கிறான் இராமபிரான்.

இங்கே ''ஈசனார்'' என்பது சிவபெருமானையும், ''இருக்கை'' என்பது அவனின் இருப்பிடமாகிய கயிலையங்கிரியையும் குறிக்கும் என்க.

409. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1534/212
வீடணன் கூற்று

''அவ்வடு அன்றி, இந்த அண்டத்தும் புறத்தும் ஆன்ற
தெவ் அடு படைகள் அஞ்சாது இவன்வயின் செல்லின், தேவ!
வெவ்விடம் ஈசன் தன்னை விழுங்கினும், பறவை வேந்தை
அவ்விட நாகம் எல்லாம் அணுகினும், அணுகல் ஆற்றா!''
(9915)

இராவணன் இறந்துபட்டதும், வீடணன் இராமபிரானை நோக்கி, ''தலைவனே! இராவணன் திக்கு விஜயகாலத்தில் எதிர்ப்பார்கள் யாரும் இல்லாத காரணத்தால் திசைகளைக் காத்துநிற்கும் திக்கஜங்களுடன் போரிட்டதால் அவற்றின் தந்தங்கள் இவன் மார்பில் பதிந்ததனால் உண்டான தழும்புகளேயன்றி, இவ்வுலகத்திலும், இவ்வுலகத்தைத் தாண்டியுள்ள புற அண்டத்திலும் இவனை எதிர்த்துப் போரிடும் சிறந்த பகைவர்களோ, இவனுக்கு அஞ்சாது மேற்செல்லும் படைக்கலன்களோ, வேறு ஏதும் இல்லை. சிவபெருமான் தன் கண்டத்தில் தேக்கி வைத்திருக்கும் ஆலகால விஷம் அவனை விழுங்கினாலும், திருமாலின் வாகனமானதும், பாம்புகளுக்குப் பகைவனானதும், பறவைகளுக்கு அரசனானதுமாகிய கருடனை விஷநாகங்கள் என்று கூறப்படுகின்ற நாகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நெருங்கினாலும், அவைகளில் ஒன்றுகூட இராவணனுக்கு தீங்குசெய்யும் ஆற்றல் படைத்தன அல்ல'' என்கிறான் வீடணன்.

இங்கே ''ஈசன்'' என்பது நேராகச் சிவபெருமானையும், ''வெவ்விடம்'' என்பது அவன் தன் கண்டத்துள் தேக்கிவைத்திருக்கும் கொடிய ஆலகால விஷத்தையும் குறிக்கும் என்க.

410. இராவணன் வதைப்படலம் பக்களண்-1536/221
வீடணன் கூற்று

''மன்றல் மாமலரானும், வடி மழுவாள்
படையானும், வரங்கள் ஈந்த,
ஒன்று அலாதன உடைய முடியோடும்
பொடி ஆகி உதிர்ந்து போன;
அன்றுதான் உணர்ந்திலையே ஆனாலும்
அவன் நாட்டை அணுகா நின்ற
இன்றுதான் உணர்ந்தனையே, இராமன்தான்
யாவர்க்கும் இறைவன் ஆதல்?'' (9924)

போர்க்களத்தில் இறந்துகிடக்கின்ற தன் தமையன் இராவணனை நோக்கி வீடணன் புலம்புவதாக வருவது இப்பாடல்.

''நறுமணம் மிக்க தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், கூரிய ஒளிமிக்க மழுவாயுதத்தைத் தாங்கிய சிவபெருமானும், பல வரங்களை உனக்குத் தந்தனர். இப்போது அவ்வரங்கள் எல்லாம் உன்னுடைய ஒன்றல்லாத பத்துத் தலைகளுடன் சேர்ந்து உதிர்ந்து பொடிப்பொடியாய்ப் போய்விட்டனவே! அன்று நீ சீதாதேவியைக் கவர்ந்து வந்தபோது இவ்விராமபிரானது பெருமையை உணர்ந்திருக்கவில்லை என்றாலும், இப்போது அவனது விண்ணுலகை அடைகின்ற நேரத்திலாவது

அவ்விராமன்தான் இவ்வுலக உயிர்களுக்கெல்லாம் தலைவன் என்பதை உணர்ந்து கொண்டாயோ?'' என்று புலம்புகிறான் வீடணன்.

இங்கே ''வடி மழுவாள் படையோன்'' என்பது கூரிய ஒளிபடைத்த மழுவாயுதத்தைத் தன்னகத்தே கொண்டவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும். ''ஒன்று அலாதன'' என்பது பிரமதேவனும், சிவபெருமானும் இராவணனுக்கு அளித்த ஒரு வரம் அல்லாது பலவரங்கள் என்றும், இராவணனது ஒரு தலை அல்லாது பத்துத் தலைகள் என்றும் இருபொருளும் கொள்ளும்.

411. இராவணன் வதைப்படலம் பக்களண்-1536/222

வீடணன் கூற்று

''வீர நாடு உற்றாயோ? விரிஞ்சனாம்
யாவர்க்கும் மேலான் முன்பன்
பேரன் நாடு உற்றாயோ? பிறைசூடும்
பிஞ்ஞகன்தன் புரம் பெற்றாயோ?
ஆர் அணா! உன்உயிரை அஞ்சாதே
கொண்டு அகன்றார்? அது எலாம் நிற்க;
மாரனார் வலி ஆட்டம் தவிர்ந்தாரோ?
குளிர்ந்தானோ மதியம் என்பான்'' (9925)

வீடணன் இராவணன் திருமேனியை நோக்கி, ''அண்ணா! வீரர்கள் போரில் மடிந்தபின் சென்றடையும் துறக்க நாட்டைச் சென்று சேர்ந்தாயோ? எல்லோருக்கும் மேலானவன் என்று முற்பட்டுச் சொல்லப்படுகின்ற பிரமதேவன் என்கின்ற உன்னுடைய பாட்டனார் ஊராகிய சத்தியலோகம் சென்று சேர்ந்தாயோ? அல்லது பிறைச்சந்திரனைத் தன் தலையில் அலங்காரமாகச் சூடிக்கொண்டிருப்பவனான சிவபெருமான் இருப்பிடமாகிய சிவலோகம் சென்று சேர்ந்தாயோ? உன்னிடம் அச்சம் கொள்ளாது உன் உயிரைப் பறித்துச் சென்றது யார் அண்ணா? சரி; அவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். மன்மதன் தன் வலிமைமிக்க விளையாட்டை இப்போதாவது உன்னிடம் நிறுத்திக்கொண்டானா? சந்திரன் என்பவன் இப்போதாவது உனக்குக் குளிர்ச்சியைத் தருகிறானா?'' என்று புலம்புகிறான் வீடணன்.

வீரநாடு - சுவர்க்கலோகம்; விரிஞ்சன் நாடு - சத்தியலோகம்/பிரமலோகம்; பிஞ்ஞகன் தன்புரம் - சிவலோகம்.

இங்கே ''பிறைசூடும் பிஞ்ஞகன்'' என்பது இளம் பிறைச்சந்திரனைத் தன்தலையில் அலங்காரமாகச் சூடிக்கொண்டிருக்கும் சிவபெருமான் என்றும், ''புரம்'' என்பது அவன் வாழும் சிவலோகத்தையும் குறிக்கும் என்க.

412. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1539/237
மண்டோதரி கூற்று

''வெள் எருக்கஞ் சடைமுடியான் வெற்பு எடுத்த
திருமேனி, மேலும் கீழும்
எள் இருக்கும் இடன்இன்றி, உயிர் இருக்கும்
இடன் நாடி, இழைத்தவாறோ?
''கள் இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும்'' எனக்கருதி, உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?'' (9940)

போர்க்களத்தில் இறந்துகிடக்கும் தன் கணவன் இராவணனின் மார்பில் விழுந்து மண்டோதரி புலம்புவதாக வருவது புகழ்வாய்ந்த இப்பாடல்.

''இராமபிரான் செலுத்திய கொடிய அம்பு, வெண்மை நிறமுள்ள எருக்கம்பூவைத் தன் சடைமுடியில் சூடியுள்ள சிவபெருமான் உறைகின்ற கயிலையங்கிரியைப் பெயர்த்தெடுத்த இராவணனது அழகிய உடம்பின்மேலும் கீழும் சிறு இடத்தைக்கூட விட்டுவிடாதபடி, அவன் உயிர் நிலைத்திருக்கும் இடத்தைத் தேடிச்சென்று துளைத்ததுவோ? தேன் நிறைந்திருக்கும் மலர்மாலையை அணிந்துள்ள கூந்தலையுடைய சீதாதேவியை, தனது மனம் என்னும் சிறையில் எங்கேனும் இன்னும் ஒளித்து வைத்திருக்கிறானோ என்று கருதி, அவன் உடலுக்குள் புகுந்து அந்த அம்பு தேடித் துழாவியதோ?'' என்று புலம்புகிறாள் மயன் மகளான மண்டோதரி.

இங்கே ''வெள் எருக்கஞ் சடைமுடியான்'' என்பது வெண்மையான எருக்கம் பூவைத்தன் சடைமுடியில் சூடியிருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானையும், ''வெற்பு'' என்பது அவன் வீற்றிருக்கும் கயிலையங்கிரியையும் குறிக்கும் என்க.

413. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1540/240
மண்டோதரி கூற்று

''தேவர்க்கும், திசைக்கரிக்கும், சிவனார்க்கும்
அயனாற்கும், செங்கண்மாற்கும்
ஏவர்க்கும் வலியானுக்கு என்று உண்டாம்
இறுதி?'' என்று ஏமாப்புற்றேன்;
ஆவற்கண் நீ உழந்த அருந்தவத்தின்
பெருங்கடற்கும், வரம் என்று ஆன்ற
காவற்கும், வலியான் ஓர் மானுடவன்
உளன் என்னக் கருதினேனோ?'' (9943)

''தேவர்களுக்கும், எட்டுத்திசையானைகளுக்கும், சிவபெருமானுக்கும், பிரமதேவனுக்கும், சிவந்த கண்களையுடைய திருமாலுக்கும், மற்றுமுள்ள எல்லோருக்கும் மேம்பட்ட வலிமை உடையவனான உனக்கு, எப்படி இறப்பு நேரிடும்? ஒருக்காலும் நிகழாது; என்று கருதிச் செருக்குக் கொண்டிருந்தேன். ஆனால் நீ மிகுந்த ஆவலுடன், மிக்க துன்பப்பட்டு ஆற்றிய அரிய, பெரிய கடல்போன்ற பெருந்தவங்களின் பயனாய், நீ உனக்குக் காவலாகப் பெற்ற நிறைந்த வரங்களுக்குப் பகைவனாக, உன்னைவிட ஆற்றலில் மேம்பட்டவனாக, ஒரு அற்ப மனிதன் இருக்கிறான் என்பதைச் சற்றும் நினையாது இருந்துவிட்டேனே?'' என்று புலம்புகிறாள் மண்டோதரி.

இங்கே ''சிவனார்'' என்பது நேராகச் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

414. மீட்சிப் படலம் பக்கஎண்-1542/5 கவிக்கூற்று

வாசநாள் மலரோன் சொல, மான்முகன்
காசும் மாநிதியும் கொடு, கங்கை சூடு
ஈசனே முதலோர் வியந்து ஏத்திட
தேசு உலாம் மணிமண்டபம் செய்தனன். (9956)

இராவணன் வதை முடிந்து, இலங்கை மன்னனாக, வீடணனுக்கு முடிசூட்டும்படி இராமபிரான், இலக்குவனைப் பணிக்கும்போது மயன் அமைத்த மண்டபம் பற்றிக் கூறுவது இப்பாடல்.

மணம்மிக்க, அன்றலர்ந்த புதிய தாமரைமலரில் வீற்றிருப்பவனாகிய பிரமதேவன் கட்டளையிட, அதன்படி மானின் முகத்தையுடையவனான மயன் என்னும் தேவதச்சன், ஆகாயகங்கையைத் தன் தலையில் தரித்திருக்கும் சிவபெருமான் முதலியோர்களும் வியந்து போற்றிடும்வண்ணம் மிகுந்த இரத்தினங்களையும், சிறந்த பொன்னையும் கொண்டு ஒளிமிக்கு விளங்குகின்ற ஒப்பற்ற மண்டபம் ஒன்றைக் கட்டி முடித்தான்.

இங்கே ''கங்கை சூடு ஈசன்'' என்பது ஆகாய கங்கையைத் தன் தலையில் தரித்திருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

415. மீட்சிப் படலம் பக்கஎண்-1549/53இராமபிரான் கூற்று

''பரசுடைக் கடவுள், நேமிப் பண்ணவன், பதுமத்து அண்ணல்,
அரசுடைத் தெரிவைமாரை இன்றியே அமைவது உண்டோ?
கரை செயற்கு அரியதேவர், ஏனையோர், கலந்து காண்பான்
விரசுறின், விலக்குவாரோ? வேறு உளார்க்கு என்கொல்? வீர!''
(10004)

இராமபிரான் வீடணனிடம் ''சென்று தா நம தேவியைச் சீரொடும்'' என்ற பின்னர், வீடணன் சீதையை அழைத்துவரும்போது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி பற்றிக் கூறுவது இப்பாடல்.

இராமபிரான் வீடணனை நோக்கி, ''வீரனே! மழுவாயுதத்தைக் கையில் கொண்டுள்ள கடவுளாகிய சிவபெருமான், சக்கரப்படையைக் கையில்கொண்டுள்ள திருமால், தாமரைமலரில் வீற்றிருக்கும் பெருமைக்குரியோனாகிய பிரமதேவன் முதலிய மும்மூர்த்திகள் எல்லாம், தம்மை ஆட்சிசெய்யும் தத்தம் மனைவியரைத் தவிர்த்துத் தனியாக இருப்பது உண்டோ? அவர்களுக்கே இந்த நிலை என்றால் மற்றவர்கள் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? எண்ணிக்கைக்குள் அடங்காத அளவிடற்கரிய தேவர்களும், மற்றவர்களும் ஒன்றுகூடி நம்மைக் காண்பதற்காக விரைந்து வந்து நெருங்கினால், அவர்களை யாராவது தடுக்கமுடியுமா? தடுக்கலாமோ?'' என்று ''நனிஇதழ் துடித்திட நகைத்து வீடணன்தனை எழநோக்கிக்'' கடிந்துரைக்கிறான் இராமபிரான்.

இங்கே ''பரசுடைக் கடவுள்'' என்பது மழுவாயுதம் ஏந்திய கடவுள் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க. மும்மூர்த்திகளும் தத்தம் மனைவியரைத் தங்கள் உடம்பிலேயே வைத்துள்ளதால் ''அரசுடைத் தெரிவைமார்'' என்றார் என்க.

இங்கே ''பாகத்தில் ஒருவன் வைத்தான், பங்கயத்து இருந்த பொன்னை ஆகத்தில் ஒருவன் வைத்தான்; அந்தணன் நாவில் வைத்தான்'' என்ற சூர்ப்பணகை கூற்றும் ஒப்புநோக்கத்தக்கது. ''ஆதிசக்திதனை உடம்பில் அரனும் கோத்தான்; அயன் வாணிதனை நாவில் அமர்த்திக்கொண்டான்; சோதிமதி முகத்தினளை செல்வமெல்லாம் சுரந்து அருளும் விழியாளை, திருவை, மார்பில் மாதவனும் ஏந்தினான்; வானோர்க்கேனும் மாதர்இன்பம்போல் பிறிது ஓர் இன்பம் உண்டோ? காதல் செயும் மனையாளே சக்திகண்டீர்; கடவுள்நிலை அவளாலே எய்தல் வேண்டும்'' என்பது மகாகவி பாரதியார் பாடல்.

416. மீட்சிப் படலம் பக்கஎண்-1552/76 சீதாதேவி கூற்று

''பங்கயத்து ஒருவனும், விடையின் பாகனும்,
சங்குகைத் தாங்கிய தருமமூர்த்தியும்,
அங்கையின் நெல்லிபோல் அனைத்தும் நோக்கினும்,
மங்கையர் மனநிலை உணரவல்லரோ?'' (10027)

இராமபிரான் சீதாதேவியை ''சாதியால்; அன்று எனின் தக்கது ஓர்நெறி போதியால்'' என்று கடிந்துரைத்ததைக் கேட்ட சீதாதேவி இராமபிரானுக்கு மறுமொழி கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

''தாமரைமலரில் வீற்றிருக்கும் ஒப்பற்றவனாகிய பிரமதேவனும், காளைமாட்டை வாகனமாகக்கொண்டு செலுத்தும் சிவபெருமானும், பாஞ்சசன்யம் என்னும் சங்கினைக் கையில் கொண்டுள்ளவனும், அறத்தின்

வடிவமாகவே அமைந்தவனுமான திருமாலும், உள்ளங்கை நெல்லிக்கனி போல எல்லாவற்றையும் அறிவார்கள் என்றாலும், பெண்களின் மனநிலையைச் சரியாக உணரவல்லவரோ?'' என்று கேட்கிறாள் சீதாதேவி.

இங்கே ''**விடையின் பாகன்**'' என்பது காளையை வாகனமாகக் கொண்டு செலுத்துபவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

417. மீட்சிப் படலம் பக்கஎண்-1556 / 102 பிரமதேவன் கூற்று

''எனக்கும், எண்வகை ஒருவற்கும், இமையவர்க்கு இறைவன்
தனக்கும், பல்பெரு முனிவர்க்கும், உயிருடன் தழீஇய
அனைத்தினுக்கும், நீயே பரம் என்பதை அறிந்தார்
வினைத் துவக்குடை வீட்ட அருந் தளை நின்று மீள்வார்''
(10053)

இராமபிரானுக்கு அவனது உண்மைநிலையை உணர்த்துமாறு தேவர்கள் நான்முகனிடம் வேண்டிக்கொள்ள, அதனால் பிரமதேவன் இராமபிரானை நோக்கி, ''இராமா! எனக்கும், எட்டுவகையான வடிவங்களையும், குணங்களையும் உடைய ஒப்பற்றவனான சிவபெருமானுக்கும், மற்றுமுள்ள மிகப்பலரான முனிவர்களுக்கும், இன்னும் உயிர்கொண்டுள்ள உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் நீ ஒருவன்தான் மூலமுதற்காரணன் - பரம்பொருள் என்பதை உணர்ந்தவர்கள், மட்டுமே தமது நல்வினை, தீவினை ஆகிய மீள்வதற்கரிதான பிணிப்புகளினின்றும் மீண்டுவந்து வீடுபேறடைவர்'' என்கிறான் பிரமதேவன்.

இங்கே ''**எண்வகை ஒருவன்**'' என்பது எட்டுவகை வடிவங்களையுடையவன் என்றும், எட்டுவகை குணங்களையுடையவன் என்றும் சிவபெருமானைக் குறிக்கும். ''கோளில் பொறியின் குணம் இலவே எண் குணத்தான் தாளை வணங்காத் தலை'' என்பது குறள்-9. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் எனக் கூறப்படும் ஐம்பூதங்களும், சூரியன், சந்திரன் என்னும் இரு சுடர்களும், இயமானன் எனப்படும் ஆன்மாவும் சிவபெருமானின் எட்டு வடிவங்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. இவ்வெட்டு வகை வடிவத்திலும் அவன் வீற்றிருக்கும் தலங்கள் அட்டவீரத்தானத்தலங்கள் என வழங்கப்படுகின்றன. ''இருநிலனாய்த் தீயாய், நீரும்ஆகி, இயமானனாய், எறியும் காற்றும் ஆகி, அருநிலை திங்களாய், ஞாயிறாகி, ஆகாசமாகி, அட்டமூர்த்தியாகி'' என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்.

418. மீட்சிப் படலம் பக்கஎண்-1557 / 109 பிரமதேவன்கூற்று

''என் உருக்கொடு இவ்வுலகினை ஈனுதி; இடையே
உன் உருக்கொடு புகுந்து நின்று ஓம்புதி; உமைகோன்
தன் உருக்கொடு துடைத்தி; மற்றுஇது தனி அருக்கன்
முன் உருக்கொடு பகல்செயும் தரத்தது முதலோய்!'' (10060)

பிரமதேவன் இராமபிரானை நோக்கி ''எல்லாவற்றுக்கும் மூலமுதற் பொருளானவனே! என்னுடைய வடிவத்தைக்கொண்டு முதலில் இவ்வுலகத்தை உண்டாக்குகின்றாய். பின்னர் நடுவே உன்னுடைய உண்மையான வடிவத்தைக் கொண்டு இவ்வுலக உயிரினங்களைக் காப்பாற்றுகின்றாய்; பின்னர் இறுதியாக உமையம்மையின் தலைவனான சிவபெருமானின் வடிவத்தைக் கொண்டு அதே உயிரினங்களை அழிக்கின்றாய். இந்தச்செயல் ஒப்பற்ற சூரியன் தனது ஒரே உருவத்தைக் கொண்டு பகற்பொழுதை உண்டாக்கி, அதை நிலைபெறச்செய்து, பின் தானே மறைகின்ற செய்கையை ஒத்ததாகுமன்றோ!'' என்கிறான்.

இங்கே ''உமைகோன்'' என்பது உமையம்மையின் தலைவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

419. மீட்சிப் படலம் பக்களண்-1557/112 சிவபெருமான் கூற்று

என்னும் மாத்திரத்து, ஏறுஅமர் கடவுளும் இசைத்தான்;
''உன்னை நீ ஒன்றும் உணர்ந்திலை போலுமால்; உரவோய்!
முன்னை ஆதி ஆம் மூர்த்தி நீ; மூவகை உலகின்
அன்னை சீதை ஆம் மாது, நின் மார்பின் வந்து அமைந்தாள்''
(10063)

என்று பிரமதேவன் கூறி முடித்தவுடன் காளைவாகனத்தில் வீற்றிருப்பவனாகிய சிவபெருமான் இராமபிரானை நோக்கி, ''வலிமை மிக்கவனே! இராமா! உன்னைப் பற்றியும், உன்னுடைய இப்போதைய நிலையைப் பற்றியும் சற்றும் நீ உணர்ந்து கொள்ளவில்லைபோலும். உலகத்தோற்றத்திற்கு முன் தோன்றிய ஆதி முதல்வன் நீதான்; இம்மூவகை உலகங்களுக்கும் அன்னையாகத் திகழ்கின்ற இலக்குமிதான் உன் மார்பில் இறைப்போதும் அகல கில்லாது உறைபவளாவாள்'' என்று இராமபிரானின் உண்மை நிலையை அவனுக்கு உணர்த்தத் தொடங்குகிறான்.

இங்கே ''ஏறு அமர் கடவுள்'' என்பது ரிஷபத்தின்மேல் வீற்றிருக்கும் கடவுள் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

420. மீட்சிப் படலம் பக்களண்-1557/113 சிவபெருமான் கூற்று

''துறக்கும் தன்மையள் அல்லளால்; தொல்லை எவ்வுலகும்
பிறக்கும் பொன் வயிற்று அன்னை; இப்பெய்வளை பிழைக்கின்
இறக்கும் பல்உயிர்; இராமன்! நீ இவள் திறத்து இகழ்ச்சி
மறக்கும் தன்மையது'' என்றனன், வரதர்க்கும் வரதன்.
(10064)

வரம்தருவார்க்கு எல்லாம் வரம் தருபவனாகிய சிவபெருமான், மேலும் இராமபிரானை நோக்கி, ''இராமா! நீ நினைப்பதுபோல் இவளை நீ ஒதுக்குதல் என்பது இயலாத காரியம் ஆகும். அவள் ஒதுக்கக்கூடிய தகுதி படைத்தவள் அல்லள். மிகப்பழமையான எல்லா உலகங்களையும் பிறப்பித்த அழகிய வயிற்றை உடைய உலக அன்னை இவள். வளையலணிந்த இந்தச் சீதாதேவியை ஒதுக்கவேண்டும் என்று நீ கருதினால், இவ்வுலகத்திலுள்ள பல உயிரினங்கள் இறக்கநேரிடும். இறந்து மடியும். எனவே நீ இவளிடத்தில் கொண்டுள்ள இகழ்ச்சியை மறந்துவிடுதலே நன்மைபயக்கும்'' என்று இராமபிரானுக்கு அறிவுறுத்துகிறான் சிவபெருமான்.

இங்கே ''வரதர்க்கும் வரதன்'' என்பது வரம் தருபவர்களுக்கெல்லாம் வரம் தருபவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

421. மீட்சிப் படலம் பக்கஎண்-1558/115 கவிக்கூற்று

ஆதியான் பணி அருள்பெற்ற அரசர்க்கு அரசன்
காதல் மைந்தனைக் காணிய உவந்தது ஓர் கருத்தால்,
பூதலத்திடைப் புக்கனன்; புகுதலும், பொருஇல்
வேத வேந்தனும் அவன் மலர்த் தாள்மிசை விழுந்தான்.
(10066)

சிவபெருமான் கட்டளைப்படி துறக்கத்திலுள்ள தசரதன் இராமபிரானைக் காணவந்தது பற்றிக் கூறும் பாடல் இது.

எல்லா உயிர்க்கும் மூலப்பரம்பொருளானவனான சிவபெருமானின் கட்டளைக்கிணங்க, அருள்பெற்ற தசரதச் சக்கரவர்த்தி, தன் அன்பு மகன் இராமபிரானைக் காணவேண்டும் என்ற ஆசையால் மிகவும் மகிழ்ந்து நிலவுலகு வந்தடைந்தான். அவன் வந்து சேர்ந்ததும், ஒப்பற்ற வேதங்களுக்கெல்லாம் தலைவனான இராமபிரானும், தசரதச் சக்கரவர்த்தியின் மலர்போலும் பாதங்களில் விழுந்து வணங்கினான்.

இங்கே ''ஆதியான்'' என்பது எல்லா உயிரினங்களுக்கும் மூலப்பரம் பொருள் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

422. மீட்சிப் படலம் பக்கஎண்-1560/135 கவிக்கூற்று

வரம்தரு முதல், மழுவலான், முனிவரர், வானோர்,
புரந்தராதி, மற்று ஏனையோர், தனித்தனி புகழ்ந்து ஆங்கு,
''அரந்தை வெம்பிறப்பு அறுக்கும் நாயக! நினது அருளால்
குரங்கு இனம் பெறுக!'' என்றனர், உள்ளமும் குளிர்ப்பார்.
(10086)

வரம்தருகின்ற முதல்வனாகிய பிரமதேவன், மழுப்படையைக் கைக் கொண்டிருக்கும் சிவபெருமான், முனிவர்கள், தேவர்கள், இந்திரன் முதலிய மற்றுமுள்ள அனைவரும் தனித்தனியாக இராமபிரானைப் பாராட்டி, ''துன்பத்தைத் தருகின்ற கொடிய பிறப்பு என்பதையே நீக்கும் அருள்படைத் தவனே! உனது கருணையால் குரங்கினங்கள் எல்லாம் மீண்டும் உயிர் பெறுக!'' என்று தங்கள் உள்ளம் மகிழ்ந்து வேண்டுவராயினர்.

இங்கே ''மழுவலான்'' என்பது மழுப்படையைக் கைக்கொண்டிருப் பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

423. மீட்சிப் படலம் பக்களண்-1565/170 இராமபிரான் கூற்று

''நெற்றியின் அழலும் செங்கண் நீறு அணி கடவுள் நீடு
கற்றை அம் சடையில் மேவு கங்கையும், ''சேது ஆகப்
பெற்றிலம்'' என்று கொண்டு, பெருந்தவம் புரிகின்றாளால்;
மற்று இதன் தூய்மை எவ்வாறு உரைப்பது? மலர்க்கண் வந்தாய்!''
(10121)

இராவணன் வதம் முடிந்து, புட்பகவிமானத்தில் அயோத்தி நோக்கி எல்லோரும் வரும்போது சீதாதேவிக்கு சேது அணையைச் சுட்டிக்காட்டி இராமபிரான் கூறுவதாக வருவது இப்பாடல்.

''நெற்றியில் நெருப்பைக் கக்குகின்ற சிவந்த கண்களையுடையவனும், திருநீறு பூசியிருப்பவனுமாகிய சிவபெருமானின் நீண்ட சடைமுடித் தொகுதியில் பொருந்தியுள்ள ஆகாயகங்கைகூட, ''இந்தச் சேதுவைப் போல தூய்மையான பேற்றை நாம் பெறவில்லையே'' என்று வருந்தி, அத்தகைய தூய்மையை விரும்பி இன்னும் பெரும் தவம் செய்து கொண்டிருக்கிறாள் என்றால், இந்தச் சேதுவின் புனிதத்தன்மையை இதைவிட வேறு எவ்வாறு விளக்கிக் கூறமுடியும்?'' என்று சேதுவைச் சுட்டிக்காட்டி செந்தாமரை மலரினின்றும் தோன்றியவளான சீதாதேவியிடம் கூறுகிறான் இராமபிரான்.

இங்கே ''நெற்றியில் அழலும் செங்கண் நீறு அணி கடவுள்'' என்பது சிவந்த நெருப்புப்போன்ற நெற்றிக்கண்ணை உடையவன் என்ற பொருளிலும், நீறு பூசியவன் என்ற பொருளிலும் சிவபெருமானைக் குறிக்கும். ''நீடு கற்றை அம் சடையில் மேவு கங்கை'' என்பது அவன் சடைமுடியில் தரித்திருக்கும் ஆகாய கங்கையையும் குறிக்கும் என்க.

424. மீட்சிப் படலம் பக்களண்-1569/195 இராமபிரான்கூற்று

''மின்னை ஏய் உமையினானும், விரை மலர்த் தவிசினானும்,
நின்னையே புகழ்தற்கு ஒத்த நீதி மாதவத்தின் மிக்கோய்!
உன்னையே வணங்கி, உந்தன் அருள் சுமந்து உயர்ந்தேன்; மற்று இங்கு
என்னையே பொருவும் மைந்தன் யான் அலாது இல்லை'' என்றான்.;
(10146)

புட்பகவிமானத்தில் பரத்துவாச ஆசிரமத்தில் வந்திறங்கிய இராமபிரானிடம் நந்தியம்பதியிலுள்ள பரதனின் நிலையை பரத்துவாசர் எடுத்துரைக்கும்போது இராமபிரான் கூறிய மறுமொழி இப்பாடல்.

இராமபிரான் பரத்துவாசரை நோக்கி ''மின்னலைப்போன்ற ஒளிபடைத்த உமையம்மையை இடப்பாகத்தில் உடையவனான சிவபெருமானும், நறுமணம் மிக்க தாமரைமலரைத் தன் இருப்பிடமாகக் கொண்டவனான பிரமதேவனும்கூட, புகழ்ந்து பாராட்டும் அளவுக்கு நீதியும், பெருந்தவமும் மிக்கவனே! நான் உன்னை வணங்கித்தான், உன்னுடைய கருணையையே இதுகாறும் பெற்று உயர்ந்திருக்கிறேன். எனவே, என்னுடைய மைந்தனான பரதன் என்னைப்போலவேதானே இருப்பான் - என்னைக்காட்டிலும் வேறு யார்போல் இருப்பான்?'' என்று கேட்கிறான்.

இங்கே ''*மின்னை ஏய் உமையினான்*'' என்பது மின்னலைப்போன்று ஒளிமிகுந்து விளங்குகின்ற உமாதேவியைத் தன் இடப்பாகத்தில் கொண்டிருப்பவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

425. மீட்சிப் படலம் பக்கஎண்-1581/280 அனுமன் கூற்று

''நான்முகன், விடையை ஊரும் நாரிஓர் பாகத்து அண்ணல்,
மான்முகன் முதலாய் உள்ள வானவர் தொழுது போற்ற,
ஊன்முகம் கெழுவு வேலாய்! உம்பர் நாயகியைச் சீறி,
தேன்முகம் மலரும் தாரான், அரிசொல, சீற்றம் தீர்ந்தான்.
(10231)

இராமபிரான் கட்டளைப்படி பரத்துவாசர் ஆசிரமத்திலிருந்து அனுமன் பரதன் இருக்கும் நந்தியம்பதியிடை விரைந்து வந்து அவன் மூட்டியிருந்த எரியைக் கரியாக்கிய பின்னர், பரதன் இராமபிரான் இலக்குவனோடும், சீதாதேவியோடும் சித்திரகூடத்திலிருந்து சென்றபிறகு நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறும்படி அனுமனை வேண்ட, அனுமன் கூறிவரும் நிகழ்வுகளுள் ஒன்றாக அமைந்தது இப்பாடல்.

''பிரமதேவன், காளையை வாகனமாகச் செலுத்திவருபவனும், பெண்ணாகிய உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டவனுமாகிய பெருமைக்குரிய சிவபெருமான், மானின் முகத்தைக்கொண்ட தேவதச்சன் மயன், முதலாக உள்ள தேவர்கள் எல்லோரும் வணங்கித் துதித்து நிற்க, அனுமன் பரதனை நோக்கி, ''பகைவர்களின் இரத்தம் நுனியில் படிந்திருக்கும் வேற்படையை உடையவனே! பரத! தேன்துளிர்க்கும் மலர்மாலையை அணிந்தவனான இராமபிரான், தேவதேவர்களுக்கெல்லாம் தாயாகிய சீதாதேவியின் மேல் மீக்கசீற்றம்கொண்டான். பின்னர் அக்னிதேவனே முன்வந்து சாட்சிசொல்ல, சீதாதேவியிடம் கொண்டிருந்த சீற்றம் நீங்கப்பெற்றான்'' என்று பரதனிடம் அனுமன் கூறுகிறான்.

இங்கே ''விடையை ஊரும் நாரி ஓர் பாகத்து அண்ணல்'' என்பது காளையைத் தன் வாகனமாகக் கொண்டு செலுத்துபவன் என்ற பொருளிலும், பெண்ணாகிய ஒப்பற்ற உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்ட பெருமைக்குரியவன் என்ற பொருளிலும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

426. திருமுடி சூட்டு படலம் பக்கஎண்-1593/28 கவிக்கூற்று

''நாளை நீ மவுலி சூட நன்மைசால் பெருமை நல்நாள்;
காளை! நீ அதனுக்கு ஏற்ற கடன்மை மீது இயற்றுக!'' என்று,
வேளையே பொடியதாக விழிக்கும் நீள்நுதலின் வெண்பூம்
பூளையே சூடுவானைப் பொருவும் மாமுனிவன் போனான்.
(10317)

எல்லோரும் அயோத்தியில் அரண்மனையை அடைந்த பின்னர் வசிட்டமுனிவன் இராமபிரானை நோக்கி, ''காளைபோன்றவனே! நீ இவ்வரசின் மகுடம் சூடிக்கொள்வதற்கு ஏற்ற, நன்மைபயக்கும் நாள் நாளையே ஆகும். எனவே அதற்குரிய கடமையான காரியங்களை விரைவில் செய்துமுடிப்பாயாக!'' என்று மன்மதனையே தன் நெற்றிக்கண்ணால் சுட்டெரித்துப் பொடிப்பொடியாக்கியவனும், வெண்மையான, மென்மையான பூளைப்பூவை விரும்பி சூடிக்கொண்டிருப்பவனுமான சிவபெருமானைப் போன்ற சிறந்த ஆற்றல்பெற்ற முனிவனான வசிட்டன் கூறிச்சென்றான்.

இங்கே ''வேளையே பொடியதாக விழிக்கும் நீள்நுதல்'' என்பது மன்மதனையே தன் நெற்றிக்கண்ணால் சுட்டெரித்துப் பொடிப்பொடியாக்கிய நெற்றியில் கண்ணையுடையவன் என்ற பொருளிலும் ''வெண்பூம் பூளையே சூடுவான்'' என்பது வெண்மையான, மென்மையான பூளைப்பூவை விரும்பிச் சூடிக்கொள்ளுபவன் என்ற பொருளிலும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

427. மீட்சிப் படலம் பக்கஎண்-1594/35 தேவர்கள் கூற்று

''அம்கண் வான் உலகம் தாய அடி, மலர்த்தவிசோன் ஆட்டும்
கங்கைவார் சடையின் ஏற்றான், கண்ணுதல் ஒருவன்; இந்நாள்
சிங்க ஏறு அனையான், செய்ய திருமுடி சூட்டும் நல்நீர்
எங்கண் ஏற்று அன்னோன் வாழும்?'' என்றனர் புலவர் எல்லாம்.
(10324)

''முன்பு அழகிய இடமாகிய விண்ணுலகத்தையும், மண்ணுலகத்தையும் தாவித் தனது ஈரடியால் அளந்தவனான திருமாலின் திருவடிகளைத்

தாமரைமலரை இருக்கையாகக் கொண்டுள்ள பிரமதேவன் தன் கமண்டலநீரால் நீராட்டினான். தன் நீண்ட சடைமுடியில் ஆகாய கங்கையைத் தரித்தவனும், நெற்றிக்கண்ணையுடையவனுமான ஒப்பற்ற சிவபெருமான் அதனைத் தன் சடைமுடியில் ஏற்றுக்கொண்டான்;. அதுபோல இப்பொழுது ஆண்சிங்கம் போன்றவனாகிய இராமபிரான் செம்மையான சிவந்த திருமுடி சூடிக்கொள்ளும்போது நீராட்டுகின்ற நல்ல புனிதமான தூயநீரை எந்த இடத்தில் ஏற்றுக்கொண்டு அந்தச் சிவபெருமான் வாழுவான்?'' என்று தேவர்களெல்லாம் வியந்து கூறினார்கள்.

இங்கே **''கங்கைவார் சடையின் ஏற்றான் கண்ணுதல் ஒருவன்''** என்பது ஆகாய கங்கையைத் தன் சடைமுடியில் தேக்கி வைத்திருப்பவன் என்ற பொருளிலும், நெற்றிக் கண்ணையுடையவன் என்ற பொருளிலும் சிவபெருமானைக் குறிக்கும் என்க.

இவைதவிர, சென்னைக் கம்பன் கழகச்செம்பதிப்பில் மிகைப்பாடல்கள் என்று பிரித்துக் கூறப்பட்டுள்ள பாடல்களில் கீழ்க்காணும் 51 பாடல்களில் சிவபெருமானைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவை மிகைப்பாடல்கள் என்றுதான் குறிக்கப்பெற்றிருக்கின்றனவேயன்றி இவை கம்பன் பாடல்கள் அல்ல என்று அறுதியிட்டுக்கூறப்படவில்லை. எனவே இந்த ''கம்பன் காட்டும் கண்ணுதலான்'' என்ற தலைப்புக்கு இவையும் அரண்சேர்க்கும் என்ற நோக்கத்தில் பாடல்கள் மட்டும் தரப்பட்டிருக்கின்றன. விளக்கம் தரப்படவில்லை.

428. இராவணன் மந்திரப்படலம் பக்கஎண்-1602/26-1

மகோதரன் கூற்று

''எரிவிழி நுதலினன், இசையும் நின் தவத்து
அருமை கண்டு, அளித்தனன் அழிவிலாதது ஓர்
பெருவரம் என்றிடின், பேதை மானிடர்
இருவரும் குரங்கும் என் செய்யல் ஆவதே?''

429. இராவணன் மந்திரப்படலம் பக்கஎண்-1602/40-1

மபெரும்பக்கன் கூற்று

''கடைமிடற்று இறை அன்று, கமலத்தேவு அன்று;
நிறைகடல் துயில் பரன் அன்று, நின்றுவாழ்
சிறுதொழில் குரங்கொடு சிறிய மானிடர்
உறு திறத்து உணர்ச்சியின் உறுதி யாவதோ?''

430. இராவணன் மந்திரப்படலம் பக்களண்-1602/52-5
கும்பகருணன் கூற்று

''ஆசுஇல் பல அண்டம் உனதே அரசு அதுஆக
ஈசன்முன் அளித்தது, உன் இருந்தவ வியப்பால்;
நீசர் தொழில் செய்து அதனை நீங்கியிடலாமோ?
வாச மலரோன் மரபில் வந்த குல மன்னா!''

431. இராவணன் மந்திரப்படலம் பக்களண்-1602/52-6
கும்பகருணன் கூற்று

''ஆலம் அயில்கின்றவன் அருஞ்சிலை முறித்து
வாலியை வதைத்து, எழு மராமரமும் உட்க,
கோல வரிவில் பகழி கொண்டுடையன்'' என்றார்;
சீலம் உறு மானிடன் எனத் தெளியலாமோ?''

432. இராவணன் மந்திரப்படலம் பக்களண்-1603/52-10
கும்பகருணன் கூற்று

''புரங்கள் ஒரு மூன்றையும் முருக்கு புனிதன் தன்
வரங்களும் அழிந்திடுவதோ? மதியிலாதாய்!
தரம்கொடு இமையோர் எனது தாள்பரவ, யான் என்
சிரம்கொடு வணங்குவதும் மானுடன் திறத்தோ?''

433. இராவணன் மந்திரப்படலம் பக்களண்-1604/116-1
இராவணன் கூற்று

''ஈசன் தன்வயின் வரம் கொளும் முன்னம், யான் அவனை
வீசும் வான்சுடர் வரையொடும் விசும்புஉற எடுத்தேன்;
ஆசுஇல் அங்கு அது கண்டு, அவன் அரும்பதத்து ஊன்றக்
கூசி, என்வலி குறைந்திலென், பாதலத்து அமர்ந்தேன்''

434. இராவணன் மந்திரப்படலம் பக்களண்-1604/116-3
இராவணன் கூற்று

''நின்று பல்பகல் கழிந்திட நிமலன் நெஞ்சுருகி,
''நன்று நன்று'' என நயந்து, எனை வரும்படி அழைத்து
''ஒன்றினாலும் நீ அழிவு இலாது, உகம் பல கழியச்
சென்று வாழுதி'' எனத் தந்த வரம் சிதைந்திடுமோ?''

435. இராவணன் மந்திரப்படலம் பக்களண்-1604/116-4
இராவணன் கூற்று

''கார்த்தவீரியன், வாலி என்று அவர்வலி கடக்கும்
மூர்த்தம் என்னிடத்து இல் எனக் கோடலை; முதல்நாள்
சீர்த்த நண்பினர் ஆயபின், சிவன்படை உவர்மேல்
கோத்து, வெஞ்சமம் புரிந்திலென், எனது உளம் கூசி''

436. இராவணன் மந்திரப்படலம் பக்களண்-1604/116-5
இராவணன் கூற்று

''இந்த மெய்ம்மை நிற்கு உரைப்பது என்? இவ்வரம் எனக்குத்
தந்த தேவனுக்கு ஆயினும், என் வலி தவிர்த்துச்
சிந்த ஒண்ணுமோ? மானிடர் திறத்து எனக்கு அழிவு
வந்தது என்று உரைத்தாய்; இது வாய்மையோ? மறவோய்!''

437. இரணியன் வதைப்படலம் பக்களண்-1605/2-1
வீடணன் கூற்று

''இந்த இந்திரன் இமையவர் அவனுக்கு ஓர் பொருளோ?
உந்தும் அண்டங்கள் அனைத்தினும் உள்ள இந்திரரும்,
அந்த நான்முகர், உருத்திரர், அமரர், மற்று எவரும்
வந்து, இவன்பதம் முறைமுறை வணங்கிட வாழ்ந்தான்''

438. இரணியன் வதைப்படலம் பக்களண்-1605/5-1
வீடணன் கூற்று

''திருமகட்கு இறை உலகினும், சேண்படு புரம்மூன்று
எரிபடுத்திய ஈசன் தன் பொருப்பினும், ஏகி,
சுரர் எனப்படும் தூயவர் யாவரும் தொழுது, ஆங்கு
''இரணியாயநம!'' என்று கொண்டு ஏத்தல் கேட்டிருக்கும்''

439. இரணியன் வதைப்படலம் பக்களண்-1606/67-2
பிரகலாதன் கூற்று

''நான்முகத்து ஒருவனும், நாரிபாகனும்
தான் அகத்து உணர்வதற்கு அரிய தத்துவத்
தோன், இகத்தொடு பரம் இரண்டும் எங்குமாய்
ஊனகத்து உயிரகத்து உலவும் மூர்த்தியான்''

440. இரணியன் வதைப்படலம் பக்களண்-1607/112-2

பிரகலாதன் கூற்று

''வேதன் சிரம் ஒன்றை வெறுத்தமையால்,
காதும் பிரமக் கொலைகாய, உலைந்து,
ஓது உன் திருநாமம் உரைத்த சிவன்
ஏதம்கெட வந்து, இரவு ஒட்டிலையோ?''

441. இரணியன் வதைப்படலம் பக்களண்-1608/164-1

கவிக்கூற்று

மங்கை ஒரு பாகன் முதல் அமரர், மாமலர்மேல்
நங்கைதனை ஏவுதலும், நாராயணக் கடவுள்
சிங்கல்இலா மானுடம் ஆய் சீய உருவம் போக்கி,
பொங்கு பரஞ்சுடராய் எங்கும் பொலிய நின்றான்.

442. இலங்கை கேள்விப்படலம் பக்களண்-1611/58-1

வீடணன் கூற்று

''பண்டு அவன் தவத்து உமை ஒரு பாகன் முன் கொடுக்கும்
திண்திறல் பெறும் வானகத்தேர் ஒன்றின் இவர்ந்தே
அண்ட கோடிகள் எவற்றினும் புகுந்து, அரசுரிமை
கொண்டு மீளுவான் ஒருகணத்து இலங்கையில், கொடியோன்''

443. இலங்கை கேள்விப்படலம் பக்களண்-1611/58-2

வீடணன் கூற்று

''சுற்று தன் கிளைப்பரப்போடும் தொலைவு இன்றி வாழ்தற்கு
உற்ற மூன்றரைக் கோடியின் உகம் அவன் தவத்தின்
பெற்றனன், சிவன் கொடுத்திடப் பெருவரம்; பெரியோய்!
இற்று அவன் செயல்'' என்று கொண்டு, இனையன உரைப்பான்.

444. அங்கதன் தூதுப்படலம் பக்களண்-1621/17-1

அங்கதன் கூற்று.

அரிமுதல் தேவர் ஆதி அமரிடைக் கலந்த போதும்,
வரிசிலை இராமன் வாளிவந்து' உயிர் குடிப்பதல்லால்,
புரம்ஒரு மூன்றும் தீயப்பொடி செய்தோன் தன்னோடு, அந்நாள்
அருவரை எடுத்தவீரன் ஆண்மைக்கும் அவதி உண்டோ?

445. முதற்போர் படலம் பக்கஎண்-1623/94-1 கவிக்கூற்று.

ஏறினான் இடத்தோள் துடித்தே; அறக்
கூறினான், ''குரங்கொடு மனிதரை
நீறது ஆக்குவென்'' என்று, நெருப்பு எழச்
சீறினான், சிவன்போல், அத்தேரின்மேல்.

446. முதற்போர்புரி படலம் பக்கஎண்-1626/216-1 கவிக்கூற்று

பண்டை நாள் தரு பனித்திரைப் புனல் சடை ஏற்றுக்
கொண்ட தூயவன், கொடுந்தொழில் நிருதர்கள் குழுமி
மண்டு வாள் அமர்க்களத்தில் அம்மலர்க்கழல் சேறல்
கண்டு, கூசலன் நிற்கும் என்றால், அது கடனே!

447. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1627/31-3 மாலியவான் கூற்று

''முப்புரம் எரித்தோன் ஆதிதேவரும், முனிவர் தாமும்,
தப்பற உணடர்தற்கெட்டாத் தருமமே, கைவில் ஏந்தி,
இப்பிறப்பு இராமன் என்றே, எம்மனோர் கிளையை எல்லாம்
துப்பற முருக்க வந்தான்'' என்ற சொல், பிழைப்பதுண்டோ?

448. கும்பகருணன் வதைப்படலம் பக்கஎண்-1633/310-1 கவிக்கூற்று

ஆலம் உண்டவன் முதல் அளித்தது, அன்னவன்
சூலம் உண்டு; அளப்பு இல கோடிபேய் சுமந்து,
ஓலம் இட்டு அமரர்கள்ஓட, ஊழியில்
காலன் ஒத்தவன் கரத்து அளித்தது அக்கணம்.

449. அதிகாயன் வதைப்படலம் பக்கஎண்-1637/195-1 கவிக்கூற்று

புரம் எரித்துடைய புத்தேள் முதலிய புலவர் உள்ளம்
திரிதர, அரக்கன்சீறி, திண்சிலை குழைய வாங்கி,
எரிமுகப் பகழிமாரி இடைவிடாது அனந்தகோடி
சொரிதர, அனுமன் ஆதிவீரர்கள், சோர்ந்து வீழ்ந்தார்.

450. படைத்தலைவர் வதைப்படலம் பக்கஎண்-1641/29-1 வீடணன் கூற்று.

''ஐய! கேள்; சிவன் கை வாள்கொண்டு, அளப்பஅரும் புவனம் காக்கும்
வெய்யவன் வெள்ளச்சேனைத் தலைவரின் விழுமம் பெற்றோர்
கைஉறும் சேனையோடும் கருகினர் கணக்கிலாதோர்,
மொய்படைத் தலைவர்'' என்று ஆங்கு, அவர்பெயர் மொழியலுற்றான்.

451. மருத்துமலைப் படலம் பக்கஎண்-1643/99-1 கவிக்கூற்று

அயன் சிவன் அறிவுறா ஆதிநாயகன்;
வியன்கர நேமி அம்படை வெற்பினை,
நியங்கொடு தாங்கி, விண் நின்றதால்; அதில்
இயங்கிய ஊதை வெங்களத்தின் எய்தவே.

452. நிகும்பலை யாகப்படலம் பக்கஎண்-1646/145-1 கவிக்கூற்று

உமைபற்றிய பாகன் முதல் இமையோர் பல உருவம்
சமைவுற்றது தான் அல்லது ஓர்பொருள் வேறு இலது எனவே
அமைவுற்றது, பகிரண்டமும் அழிகாலம் இது எனவே
குமைவுற்றிட, வடவைப்பொறி கொழிக்கின்றது எவ்வுலகும்.

453. இராவணன் சோகப்படலம் பக்கஎண்-1648/50-1 இராவணன் கூற்று.

''பத்து எனும் திசையும் வென்று, கயிலையில் பரனை எய்தி
அத்தலை அமர்செய்து, ஆற்றான்; அவன் இடத்து உமை அன்பால் தன்
கைத்தலைக்கிளி நிற்கு ஈய, கவர்ந்து எனக்கு அளித்து நின்ற
வித்தகக் களிறே! இன்னும் வேண்டினேன், எழுந்திராயோ!''

454. படைக்காட்சிப் படலம் பக்கஎண்-1648/27-1 தூதுவர் கூற்று

''சாலும் மாபெரும் தலைவர்கள் தயங்கு எரி நுதல்கண்
சூலபாணி தன் வரத்தினர்; தொகுத்த பல்கோடி
மேலையாம் அண்டத்து உறைபவர்; இவர் பண்டு விரலால்
கோல வேலுடைக் குமரனைக் கொடுஞ்சமர் துரந்தோர்''

455. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1650/69-1 கவிக்கூற்று

இசைந்தனன் அமருக்கு, ''எல்லா உலகமும் இமைப்பின் வாரிப்
பிசைந்து, சிற்றுதரத்து உண்ணப்பெற்ற நாள் பிடித்த மூர்த்தம்
இசைந்தது போலும்'' என்று ஆங்கு அயன் சிவன் இருவர் தத்தம்
வசம் திகழ் கருத்துனூடே மதித்திட, வயங்கி நின்றான்.

456. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1654/127-13 கவிக்கூற்று.

கடு வைத்து ஆர்களன் கைப்படு கார்முகம்
ஒடியத்தாக்கும் ஒருவன் சிலையின் வாய்,
வடவைத் தீச்சொரி வாளியின் மாமழை
பட, மற்று ஆயிரம் வெள்ளமும் பட்டதால்.

457. மூலபல வதைப்படலம் பக்கஎண்-1654/149-1 கவிக்கூற்று.

ஈது அவர்சொல, கயிலை ஈசனும் நகைத்து, இமையவர்க்கும் ஒளிவான்
ஓதம்இல் அரும் பிரம தத்துவம் முதல் கடவுள் யாமும் உணராப்
பேதம் உறு மாயை பலபேணி விளையாடுதல் செய்யாது, பெருமான்
நீத உருவம் கொளும் இராமன் எனவே சுருதிநின்ற மொழி பொன்றிவிடுமோ?

458. இராவணன் தேர்ஏறுபடலம் பக்கஎண்-1657/4-1 கவிக்கூற்று.

உரைசெயற்கு அருந்தவத்தினுக்கு உவந்து, உமைகேள்வன்
அருள உற்றது, அங்கு அவன் மழுக்குலிசமொடு ஆழி
முரிய, மற்றவை முனை மடித்து, ஒன்றினும் முடியா,
விரவு வச்சிரக் கவசத்தை மேற்படப் புனைந்தான்.

459. இராவணன் தேர்ஏறுபடலம் பக்கஎண்-1657/18-1 கவிக்கூற்று.

அண்டகோடிகள் எவற்றினும் தன் அரசு உரிமை
கண்டு போய்வரும் காட்சியின், கண்ணுதற் பரமன்
பண்டு அவன் செய்யும் தவத்தினின் பரிந்து, இனிது அளிக்கக்
கொண்ட வானகத்தேர் அது; குதிரையைக் குறிக்கின்.

460. இராவணன் தேர்ஏறுபடலம் பக்கஎண்-1658/27-1 கவிக்கூற்று

ஐம்முகம் பயின்று இரட்டி, அங்கு அடல் புயன் நால் ஐந்தும்
ஐந்நான்கு எனும் கரத்தொடும், உமையவள் ஒழிய
இம்மை இவ்வுரு இயைந்து, எழில் கயிலையொடு ஈசன்
வெம்மை ஆடு அமர்க்கு எழுந்தெனத் தேர்மிசை விரைந்தான்.

461. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1659/89-1

கவிக்கூற்று.

உமையவள் ஒருபுடை உடையவன் உதவியது,
அமைவுறும் மயல்வினை அளவுஇல புரிவது,
சுமை பெறும் உலகு ஒரு நொடிவரை தொடருவது,
இமையவர் அடல்வலி பருகியது, எளிமையின்.

462. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1659/107-4

கவிக்கூற்று.

முக்கணான்படை முதலிய தேவர் படைகள்
ஒக்கவாரி, அங்கு அரக்கனும் ஊழ்முறை துரப்ப,
புக்கி, அண்ணலை வலங்கொண்டு போனதும், பொடிபட்டு
உக்கி, ஓடினதும் அன்றி, ஒன்று செய்துளதோ?

463. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1660/118-2

கவிக்கூற்று

''அண்டகோடிகள் முழுவதும் அருக்கு அழிந்து உலையக்
கொண்ட காலம் ஈதோ?'' எனக் குலை குலைந்து, அமரர்
துண்டவான் பிறை சூடியைத் தொழ, அவன் துயரம்
கண்டு, ''இராகவன் கடிந்திடும்; கலங்கலீர்'' என்றான்.

464. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1660/130-1

கவிக்கூற்று.

நெற்றிவிழியான், அயன், நிறைந்த மறையாளர்
மற்றை அமரர், புவியில் வானவர்கள், ''ஈர் ஐந்து
உற்ற தலை தானவன் நெடும் கொடிய சூலம்
இற்று ஒழிய, ஆன்று அழியுமோ? என இசைத்தான்.

465. இராவணன் வதைப்படலம் பக்கஎண்-1660/143-1

கவிக்கூற்று.

எவ்வகை உரகமும் இரியல் போயின,
நொவ்வியல் உற்றென; நொடிப்பது என் இனி!
அவ்வயின் அரன் அணி அடல் அராவுமே
கவ்வையின் உழந்தன, சிறையின் காற்றினே.

466. இராவணன் வதைப்படலம் பக்களண்-1661/199-1

கவிக்கூற்று

மாறுபடத் தேவர்களை ஏவல்கொளும்
வாள் அரக்கன் மடிய, அன்னான்
ஏறிவரு பொன்தடந் தேர்ப்பாகனும் பொன்றிட,
பண்டு அங்கு இமையாமுக்கண்
ஈறுஇல் பரன் புகன்றபடி கரந்து இமைப்பின்
ஏகியதால், இடையே கூடித்
தேறுதல் செய்து உழல்போதில், தீவினை
மாய்த்திடப்போம் நல்வினையே போல.

467. இராவணன் வதைப்படலம் பக்களண்-1662/219-1

வீடணன் கூற்று.

''வான் கயிலை ஈசன், அயன், வானவர்கோன்
முதல் அமரர் வாழ்த்தி ஏத்த,
தான் புவனம் ஒருமூன்றும் தனி புரந்து,
வைகிய நீ, தாய்சொல் தாங்கி,
கான் புகுந்த மறை முதல்வன்விடும் கடவுள்
வாளி ஒன்று கடிதின் வந்து, உன்
ஊன் புகும் கல் உரம் உருவிஓட்,
உளம் நாணினையோ? உயிரும் உண்டோ?''

468. மீட்சிப்படலம் பக்களண்-1676/170-21 கவிக்கூற்று

முன்பெல அரக்கன் தன்னை, முனிகொலை தொடரக்கண்டு, ஆங்கு
''அன்பினால் அரிபால் தோன்றும் அரனை அர்ச்சித்தால் அன்றி
துன்பமே தொடரும், பொல்லாச் சூழ்கொலை தொலையாது'' என்று, ஆங்கு
இன்புறும் இராமன் வேலைக்கு இப்புறத்து இழிந்து நின்றான்.

469. மீட்சிப்படலம் பக்களண்-1676/170-23 கவிக்கூற்று

கப்பை எனும் கன்னியையும், கந்தனார் தாதையையும்
அப்பொழுதே திருவணைக்குக் காவலராய் அங்கு இருத்தி
செப்பரிய சிலையாலே திருவணையை வாய்கீறி,
ஒப்பு அறியாள் தன்னுடனே, உயர்சேனைக் கடலுடனே.

470. மீட்சிப்படலம் பக்கஎண்-1677 / 170-28 கவிக்கூற்று.

புகன்றவன் தனைப் பூங்கழல் இராகவன் சாய்கை
அகன்ற காரணம் குறுமுனி உரைசெய, அவனும்,
''பகர்ந்த தேவரும், பாற்கடல் பள்ளியான், பரமன்,
புகுந்தது இவ்வழி; பூவில் வந்தவனும், மற்று யாரும்

471. மீட்சிப்படலம் பக்கஎண்-1678 / 170-34 கவிக்கூற்று.

காலம் சென்றது எனக்கருதி, கையால்
கோலமான மணலினைக் கூட்டியே,
''ஆலம் உண்ட தே இவர் ஆம்'' என
ஞாலம் உண்டவர் தம் மனம் நாட்டவே.

472. மீட்சிப்படலம் பக்கஎண்-1679 / 170-41 கவிக்கூற்று.

இத்தலத்தினில் யாரும் அங்கு ஓர்சிலை
வைத்து, மாமனத்து உள்ளே வழுத்துவார்
நத்து உலாய கை நாரணன், நான்முகன்
பித்தன் மூவரும் ஏத்தப்பெறுக'' எனா.

473. மீட்சிப்படலம் பக்கஎண்-1679 / 170-42 கவிக்கூற்று.

என்று இராகவன் ஈசன் பெருமையின்
நன்றி தன்னை நவில, அடங்குமோ?
சென்று சென்று, ''செய-செய-போற்றி! என்று
அன்று இராசகுமாரன் அறைகுவான்.

474. மீட்சிப்படலம் பக்கஎண்-1679 / 170-43 கவிக்கூற்று.

பூசனைத்தொழில் முடிந்தபின், பூங்கழல் இராமன்
தேவதச்சனை அழைத்து, ''நீள்திரைக் கடல் கிடந்த
காவல் மாமலை கொணர்ந்து, நீ கண்ணுதல் கோயில்
பூவில் வந்தவன் சொல்வழிச்சமை'' எனப் புகன்றான்.

475. மீட்சிப்படலம் பக்கஎண்-1683 / 182-4 கவிக்கூற்று

''பாகம் மங்கையொடு அமர்ந்தவன் பயில்வுறு கங்கை
ஆகும் ஈது'' என அறநெறி வழுவுறா அலங்கல்
மேகவண்ணனும் துணைவரும் வியந்து உடன்ஆடி,
தாகம் நீங்கினர்; அவ்விடைத் தேவரும் சார்ந்தார்.

476. மீட்சிப்படலம் பக்கஎண்-1685/189-12 கவிக்கூற்று.

அங்கு அவன் சொல, அனுமனும் உரைசெய்வான்; அருளப்
பங்கயம் தன்னில் சீதையாம் பராபரையாட்டி,
சங்கரன் அயன் தன்னையும் தரணி ஈர் ஏழும்
தங்கு பொன் வயிற்று அன்னை தன் தன்மையை நிகழ்த்தும்.

477. மீட்சிப்படலம் பக்கஎண்-1694/332-8 கவிக்கூற்று.

வளம்கெழு கயிலை ஈசன் மலர்அயன், மறைகள் நான்கும்
ஒழுங்கு உறும் அமரர் ஆதி உயிர்களும் உணர்தற்கு எட்டா,
விளங்கு தத்துவங்கள் மூன்றும் உயர்வெளிப் பாழ்மேலாய்
விளங்குறும் நேமிப்புத்தேள் மேவும்மா அயோத்தி கண்டார்.

478. திருமுடி சூட்டுபடலம் பக்கஎண்-1695/26-1 கவிக்கூற்று

கயிலையில் வாழும் ஈசன் முதலிய கடவுளோர் தம்
அயில் விழி அரிவை மாரோடு அந்தரம் புகுந்து மொய்த்தார்;
குயில் மொழிச் சீதை கொண்கன் நிலமகள் தன்னைக் கொள்ளும்
இயல்புடை வதுவை காணும் ஆதரம் இதயத்து எய்த.

யுத்தகாண்டக் குறிப்பு நிறைவுற்றது

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
பிரமதேவன்	1	யு.காண்டம்	மீட்சிப்படலம்	10060	1557/109
அகம்பன்	1	,,	பிரமாத்திரப்படலம்	8564	1334/124
புகைநிறக்கண்ணன்	1	,,	இராவணன் மந்திரப்படலம்	6115	972/45
சேனைத்தலைவன்	1	,,	ஒற்றுக்கேள்விப்படலம்	6796	1073/51
துன்முகன்	1	,,	இராவணன் மந்திரப்படலம்	6102	970/32
சம்பாதி	1	கி.காண்டம்	சம்பாதிப் படலம்	மி.பா.	1606/67-2
தாரை	1	,,	வாலிவதைப்படலம்	4101	647/167
அங்கதன்	1	,,	வாலிவதைப்படலம்	4086	645/152
சவரி	1	ஆ.காண்டம்	சவரி பிறப்புநீங்கு படலம்	3702	578/4
கவந்தன்	1	,,	கவந்தன் வதைப்படலம்	3695	576/53
பரதன்	1	அ.காண்டம்	பள்ளிபடைப்படலம்	2151	347/50
நீலமாலை	1	பா.காண்டம்	கார்முகப்படலம்	725	116/60
மாதலி	2	யு.காண்டம்	இராமன் தேர்ஏறுபடலம்	9695	1502/19
		,,	இராமன் தேர்ஏறுபடலம்	9699	1503/23

✸ சென்னைக் கம்பன்கழகச் செம்பதிப்பு

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
வானரப்படைத்தலைவர்	2	யு.காண்டம்	மூலபலவதைப் படலம்	9336	1448/38
		,,	மூலபலவதைப் படலம்	9337	1449/39
மாலியவான்	2	,,	மாயாசீதைப்படலம்	8846	1377/7
		,,	மூலபலவதைப்படலம்	9288	1442/92
கும்பகருணன்	2	,,	கும்பகருணன்வதைப்படலம்	7430	1164/159
		,,	கும்பகருணன்வதைப்படலம்	7499	1174/228
சாரன் வானரத்தானைகாண் படலம்	2	,, 6889	இராவணன் 1086/30		
வானரத்தானைகாண் படலம்		,, 6891	இராவணன் 1087/32		
அக்ககுமரன்	2	சு.காண்டம்	அக்ககுமாரன்வதைப்படலம்	5669	887/2
		,,	அக்ககுமாரன்வதைப்படலம்	5671	887/4
இலங்கைமாதேவி	2	,,	ஊர்தேடு படலம்	4918	778/84
		,,	ஊர்தேடு படலம்	4920	779/86
வாலி	2	கி.காண்டம்	வாலிவதைப்படலம்	4006	634/72
		,,.	வாலிவதைப்படலம்	4064	642/130

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
மாரீசன்	2	ஆ.காண்டம்	மாரீசன்வதைப்படலம்	3255	513/19
		,,	மாரீசன்வதைப்படலம்	3258	514/22
சாம்பன்	3	கி.காண்டம்	மயேந்திரப்படலம்	4719	738/9
		யு.காண்டம்	மருத்துமலைப்படலம்	8789	1369/87
		,,	மூலபலவதைப்படலம்	9348	1450/50
மகோதரன்	3	,,	இராவணன் மந்திரப்படலம்	6095	969/25
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7307	1147/36
		,,	இராவணன் சோகப்படலம்	9243	1435/58
அதிகாயன்	3	,,	அதிகாயன்வதைப்படலம்	7734	1212/8
		,,	அதிகாயன்வதைப்படலம்	7904	1236/178
		,,	அதிகாயன்வதைப்படலம்	7915	1237/189
அரக்கர்	3	,,	மூலபலவதைப்படலம்	9372	1453/74
		யு.காண்டம்	மூலபலவதைப்படலம்	9469	1469/171
		,,	மூலபலவதைப்படலம்	9472	1470/174
மண்டோதரி	3	,,	இராவணன் சோகப்படலம்	9237	1434/52

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	இராவணன்வதைப்படலம்	9943	1540/240
		,,	இராவணன்வதைப்படலம்	9940	1539/237
தசரதன்	4	பா.காண்டம்	கையடைப்படலம்	326	56/13
		,,	எழுச்சிப்படலம்	736	118/5
		,,	பரசுராமப்படலம்	1281	200/19
		அ.காண்டம்	நகர்நீங்கு படலம்	1662	279/57
இலக்குவன்	4	,,	திருவடிசூட்டு படலம்	2415	384/41
		ஆ.காண்டம்	இராவணன் சூழ்ச்சிப்படலம்	3327	523/9
		கி.காண்டம்	கார்காலப் படலம்	4246	669/99
		யு.காண்டம்	நிகும்பலை யாகப்படலம்	9090	1413/157
சடாயு	4	ஆ.காண்டம்	சடாயுகாண் படலம்	2701	435/12
		,,	சடாயு உயிர்நீத்த படலம்	3417	536/15
		,,	சடாயு உயிர்நீத்த படலம்	3510	550/108
		,,	சடாயு உயிர்நீத்த படலம்	3515	551/113
சதானந்தர்	5	பா.காண்டம்	கார்முகப்படலம்	677	109/12

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	கார்முகப்படலம்	678	109/13
		,,	கார்முகப்படலம்	679	109/14
		,,	கார்முகப்படலம்	680	109/15
		,,	கார்முகப்படலம்	685	110/20
பரசுராமன்	5	,,	பரசுராமப்படலம்	1287	201/25
		,,	பரசுராமப்படலம்	1289	202/27
		,,	பரசுராமப்படலம்	1291	202/29
		,,	பரசுராமப்படலம்	1292	202/30
		,,	பரசுராமப்படலம்	1299	203/37
சுக்கிரீவன்	5	கி.காண்டம்	நட்புக்கோட் படலம்	3804	605/19
		,,	துந்துபிப்படலம்	3889	618/4
		,,	துந்துபிப்படலம்	3890	618/5
		,,	கலன்காண்படலம்	3917	621/17
		,,	நாடவிட்ட படலம்	4470	701/24
சீதை	6	சு.காண்டம்	காட்சிப்படலம்	5188	821/120

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	காட்சிப்படலம்	5190	821/122
		,,	காட்சிப்படலம்	5194	822/126
		,,	காட்சிப்படலம்	5199	822/131
		யு.காண்டம்	மாயாசனகப்படலம்	7652	1200/21
		,,	மீட்சிப்படலம்	10027	1552/76
வசிட்டன்	7	பா.காண்டம்	திருஅவதாரப்படலம்	210	36/31
		,,	திருஅவதாரப்படலம்	212	36/33
		,,	திருஅவதாரப்படலம்	224	38/45
		அ.காண்டம்	மந்தரைசூழ்ச்சிப்படலம்	1413	244/15
		,,	மந்தரைசூழ்ச்சிப்படலம்	1417	245/19
		,,	மந்தரைசூழ்ச்சிப்படலம்	1421	245/23
		,,	திருவடிசூட்டு படலம்	2447	388/73
சூர்ப்பணகை	12	ஆ.காண்டம்	சூர்ப்பணகைப்படலம்	2743	442/12
		,,	சூர்ப்பணகைப்படலம்	2744	443/13
		,,	சூர்ப்பணகைப்படலம்	2770	446/39

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	சூர்ப்பணகைப்படலம்	2799	450/68
		,,	சூர்ப்பணகைப்படலம்	2832	455/101
		,,	சூர்ப்பணகைப்படலம்	2835	455/104
		,,	சூர்ப்பணகைப்படலம்	2838	455/107
		,,	சூர்ப்பணகைப்படலம்	2840	456/109
		,,	சூர்ப்பணகைப்படலம்	2863	459/132
		,,	சூர்ப்பணகைப்படலம்	3137	498/71
		,,	சூர்ப்பணகைப்படலம்	3141	498/75
		,,	சூர்ப்பணகைப்படலம்	3142	498/76
இந்திரசித்தன்	13	சு.காண்டம்	பாசப்படலம்	5726	896/10
		,,	பாசப்படலம்	5727	896/11
		,,	பிணிவீட்டுபடலம்	5871	915/67
		யு.காண்டம்	இராவணன் மந்திரப்படலம்	6129	974/59
		,,	நாகபாசப்படலம்	8013	1251/12
		,,	நாகபாசப்படலம்	8121	1269/120

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	நாகபாசப்படலம்	8289	1295/288
		,,	பிரமாத்திரப்படலம்	8504	1325/64
		,,	நிகும்பலை யாகப்படலம்	9060	1408/127
		,,	நிகும்பலை யாகப்படலம்	9082	1411/149
		,,	நிகும்பலை யாகப்படலம்	9084	1412/151
		,,	நிகும்பலை யாகப்படலம்	9099	1414/166
		யு.காண்டம்	இந்திரசித்தன் வதைப்படலம்	9164	1424/49
அனுமன்	15	கி.காண்டம்	நட்புக்கோட் படலம்	3792	604/7
		,,	நட்புக்கோட் படலம்	3795	604/10
		,,	நட்புக்கோட் படலம்	3822	608/37
		,,	நட்புக்கோட் படலம்	3860	613/75
		சு.காண்டம்	ஊர்தேடு படலம்	4844	768/10
		,,	ஊர்தேடு படலம்	4975	786/141
		,,	ஊர்தேடு படலம்	4976	787/142
		,,	உருக்காட்டு படலம்	5311	838/84

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	பிணிவீட்டு படலம்	5881	916/77
		,,	பிணிவீட்டு படலம்	5884	917/80
		,,	பிணிவீட்டு படலம்	5907	920/103
		,,	திருவடிதொழுத படலம்	6040	939/34
		யு.காண்டம்	நிகும்பலை யாகப்படலம்	9007	1401/74
		யு.காண்டம்	நிகும்பலை யாகப்படலம்	9009	1401/76
		,,	மீட்சிப்படலம்	10231	1581/280
விசுவாமித்திரன்	17	பா.காண்டம்	தாடகை வதைப்படலம்	339	58/1
		,,	தாடகை வதைப்படலம்	340	58/2
		,,	தாடகை வதைப்படலம்	341	58/3
		,,	அகலிகைப் படலம்	மி.பா.	219/3-17
		,,	அகலிகைப் படலம்	மி.பா.	220/3-24
		,,	அகலிகைப் படலம்	மி.பா.	220/3-28
		,,	அகலிகைப் படலம்	மி.பா.	221/5-7
		,,	அகலிகைப் படலம்	மி.பா.	222/5-17

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	அகலிகைப் படலம்	மி.பா.	222/5-18
		,,	அகலிகைப் படலம்	மி.பா.	223/5-19
		,,	அகலிகைப் படலம்	மி.பா.	223/5-20
		,,	அகலிகைப் படலம்	மி.பா.	223/5-23
		பா.காண்டம்	அகலிகைப் படலம்	மி.பா.	223/5-24
		,,	அகலிகைப் படலம்	470	78/19
		,,	அகலிகைப் படலம்	474	78/23
		,,	குலமுறை கிளத்து படலம்	645	104/9
		,,	குலமுறை கிளத்து படலம்	647	105/11
இராமபிரான்	19	பா.காண்டம்	தாடகை வதைப்படலம்	358	61/20
		அ.காண்டம்	நகர்நீங்கு படலம்	1630	274/25
		,,	சித்திரகூடப்படலம்	2052	333/7
		ஆ.காண்டம்	அகத்தியப்படலம்	2652	428/22
		கி.காண்டம்	அனுமப்படலம்	3768	600/18
		,,	வாலிவதைப்படலம்	4055	641/121

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		யு.காண்டம்	வீடணன் அடைக்கலப்படலம்	6472	1027/108
		,,	வீடணன் அடைக்கலப்படலம்	6476	1027/112
		,,	ஒற்றுக்கேள்விப்படலம்	6780	1071/35
		யு.காண்டம்	இலங்கைகாண் படலம்	6855	1081/20
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7603	1191/332
		,,	அதிகாயன் வதைப்படலம்	7804	1222/78
		,,	அதிகாயன் வதைப்படலம்	7809	1222/83
		,,	நாகபாசப் படலம்	8240	1285/239
		,,	பிரமாத்திரப்படலம்	8485	1323/45
		,,	நிகும்பலை யாகப்படலம்	8937	1390/4
		,,	இராவணன் வதைப்படலம்	9909	1533/206
		,,	மீட்சிப்படலம்	10004	1549/53
		,,	மீட்சிப்படலம்	10121	1565/170
இராவணன்	31	ஆ.காண்டம்	சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்	3126	496/60
		,,	சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்	3201	506/135

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்	3206	507/140
		,,	சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்	3207	507/141
		ஆ.காண்டம்	மாரீசன் வதைப்படலம்	3255	513/19
		,,	இராவணன் சூழ்ச்சிப்படலம்	3360	528/42
		,,	இராவணன் சூழ்ச்சிப்படலம்	3363	528/45
		,,	இராவணன் சூழ்ச்சிப்படலம்	3396	534/83
		சு.காண்டம்	பிணிவீட்டு படலம்	5894	916/70
		யு.காண்டம்	இராவணன் மந்திரப்படலம்	6175	982/105
		,,	இராவணன் மந்திரப்படலம்	6177	982/107
		,,	இராவணன் மந்திரப்படலம்	6178	982/108
		,,	இராவணன் மந்திரப்படலம்	6184	983/114
		,,	இராவணன் மந்திரப்படலம்	6186	983/116
		,,	ஒற்றுக்கேள்விப்படலம்	6831	1078/86
		,,	அங்கதன் தூதுப்படலம்	6995	1102/22
		,,	அங்கதன் தூதுப்படலம்	6996	1102/23

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7287	1144/16
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7294	1145/23
		யு.காண்டம்	கும்பகருணன் வதைப்படலம்	7295	1145/24
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7297	1145/26
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7298	1145/27
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7302	1146/31
		,,	மாயாசனகப்படலம்	7644	1199/13
		,,	அதிகாயன் வதைப்படலம்	7743	1213/17
		,,	இராவணன் சோகப்படலம்	9196	1429/11
		,,	இராவணன் சோகப்படலம்	9197	1429/12
		,,	இராவணன் சோகப்படலம்	9203	1430/18
		,,	இராவணன் சோகப்படலம்	9220	1432/35
		,,	வேல்ஏற்ற படலம்	9553	1481/23
		,,	இராவணன் வதைப்படலம்	9837	1522/134
வீடணன்	35	சு.காண்டம்	பிணிவீட்டுபடலம்	5919	922/115

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		யு.காண்டம்	இராவணன் மந்திரப்படலம்	6150	976/80
		யு.காண்டம்	இராவணன் மந்திரப்படலம்	6156	977/86
		,,	இராவணன் மந்திரப்படலம்	6157	977/87
		,,	இரணியன் வதைப்படலம்	6189	984/1
		,,	இரணியன் வதைப்படலம்	6190	984/2
		,,	இரணியன் வதைப்படலம்	6198	985/10
		,,	இரணியன் வதைப்படலம்	6203	986/15
		,,	இரணியன் வதைப்படலம்	6232	990/44
		,,	இரணியன் வதைப்படலம்	6242	991/54
		,,	இரணியன் வதைப்படலம்	6294	1000/106
		,,	இரணியன் வதைப்படலம்	6342	1007/154
		,,	இரணியன் வதைப்படலம்	6349	1008/161
		,,	வீடணன் அடைக்கலப்படலம்	6487	1029/123
		,,	இலங்கை கேள்விப்படலம்	6535	1036/20
		,,	இலங்கை கேள்விப்படலம்	6547	1037/32

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		யு.காண்டம்	இலங்கை கேள்விப்படலம்	6555	1039/40
		,,	இலங்கை கேள்விப்படலம்	6567	1040/52
		,,	இலங்கை கேள்விப்படலம்	6568	1040/53
		,,	இலங்கை கேள்விப்படலம்	6576	1042/61
		,,	மகுடபங்கப் படலம்	6939	1093/45
		,,	மகுடபங்கப் படலம்	6940	1094/46
		,,	மகுடபங்கப் படலம்	6941	1094/47
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7386	1158/115
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7393	1159/122
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7416	1162/145
		,,	அதிகாயன் வதைப்படலம்	7783	1219/57
		,,	அதிகாயன் வதைப்படலம்	7786	1319/60
		,,	அதிகாயன் வதைப்படலம்	7789	1219/63
		,,	நாகபாசப் படலம்	8236	1285/235
		யு.காண்டம்	படைத்தலைவர் வதைப்படலம்	8336	1301/35

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	இந்திரசித்துவதைப்படலம்	9151	1422/36
		,,	இராவணன் வதைப்படலம்	9915	1534/212
		,,	இராவணன் வதைப்படலம்	9924	1536/221
		,,	இராவணன் வதைப்படலம்	9925	1536/222
கவிக்கூற்று	168	பா.காண்டம்	ஆற்றுப்படலம்	13	5/2
		,,	நகரப்படலம்	95	18/3
		,,	நகரப்படலம்	101	19/9
		,,	திருஅவதாரப்படலம்	303	51/124
		,,	வேள்விப்படலம்	442	73/49
		,,	அகலிகைப்படலம்	456	76/05
		,,	மிதிலைக்காட்சிப்படலம்	499	82/20
		,,	மிதிலைக்காட்சிப்படலம்	629	101/150
		,,	மிதிலைக்காட்சிப்படலம்	632	102/153
		பா.காண்டம்	கார்முகப்படலம்	695	111/30
		,,	சந்திரசயிலப்படலம்	831	132/19

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	வரைக்காட்சிப்படலம்	857	136/15
		,,	நீர்விளையாட்டுப்படலம்	930	147/02
		,,	உண்டாட்டுப்படலம்	964	152/03
		,,	எதிர்கொள்படலம்	1047	164/19
		,,	எதிர்கொள்படலம்	1053	165/25
		,,	கோலம்காண் படலம்	1122	176/06
		,,	கடிமணப்படலம்	1212	190/53
		,,	கடிமணப்படலம்	1241	194/82
		,,	பரசுராமப்படலம்	1273	199/11
		அ.காண்டம்	மந்திரப்படலம்	1354	236/41
		,,	மந்தரைசூழ்ச்சிப்படலம்	1438	248/40
		,,	கைகேயி சூழ்வினைப்படலம்	1556	264/66
		அ.காண்டம்	நகர்நீங்கு படலம்	1737	288/132
		,,	நகர்நீங்கு படலம்	1743	289/138
		,,	கங்கைப்படலம்	1943	317/18

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	கங்கைப்படலம்	1946	317/21
		,,	ஆறுசெல் படலம்	2270	363/27
		,,	கங்கைகாண் படலம்	2347	374/45
		,,	திருவடிசூட்டுபடலம்	2375	379/1
		ஆ.காண்டம்	சரபங்கன் பிறப்புநீங்குபடலம்	2592	419/06
		,,	அகத்தியப்படலம்	2670	431/40
		,,	அகத்தியப்படலம்	2671	431/41
		,,	அகத்தியப்படலம்	2681	432/51
		,,	அகத்தியப்படலம்	2686	433/56
		,,	கரன் வதைப்படலம்	2896	465/22
		,,	கரன் வதைப்படலம்	2971	475/97
		ஆ.காண்டம்	கரன் வதைப்படலம்	2987	477/113
		,,	கரன் வதைப்படலம்	3045	484/171
		,,	சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்	3069	488/03
		,,	சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்	3094	492/28

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்	3097	492/31
		,,	சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்	3109	494/43
		,,	சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்	3149	499/83
		,,	சடாயு உயிர்நீத்த படலம்	3431	538/29
		,,	சடாயு உயிர்நீத்த படலம்	3432	539/30
		,,	சடாயு உயிர்நீத்த படலம்	3433	539/31
		,,	சடாயு உயிர்நீத்த படலம்	3495	548/93
		,,	அயோமுகிப்படலம்	3585	561/45
		,,	அயோமுகிப்படலம்	3601	564/61
		கி.காண்டம்	அனுமப்படலம்	3753	598/3
		கி.காண்டம்	நட்புக்கோட் படலம்	3787	603/02
		,,	கார்காலப் படலம்	4150	655/03
		,,	கார்காலப் படலம்	4168	657/21
		,,	தானைகாண் படலம்	4430	695/24
		,,	பிலம்புக்குநீங்கு படலம்	4523	709/03

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		சு.காண்டம்	கடல்தாவு படலம்	4751	754/11
		,,	கடல்தாவு படலம்	4765	756/25
		,,	கடல்தாவு படலம்	4817	764/77
		,,	கடல்தாவு படலம்	4825	765/85
		,,	ஊர்தேடு படலம்	4878	773/44
		,,	ஊர்தேடு படலம்	4974	786/140
		,,	ஊர்தேடு படலம்	5043	798/209
		,,	ஊர்தேடு படலம்	5050	799/216
		,,	ஊர்தேடு படலம்	5056	800/222
		,,	காட்சிப்படலம்	5089	805/21
		சு.காண்டம்	காட்சிப்படலம்	5170	819/102
		,,	பொழில்இறுத்த படலம்	5474	860/46
		,,	கிங்கரர் வதைப்படலம்	5489	862/01
		,,	கிங்கரர் வதைப்படலம்	5508	865/20
		,,	சம்புமாலி வதைப்படலம்	5587	876/38

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	பஞ்சசேனாபதிகள் வதைப்படலம்	5617	880/17
		,,	பஞ்சசேனாபதிகள் வதைப்படலம்	5646	884/46
		,,	பாசப்படலம்	5718	895/02
		,,	பாசப்படலம்	5765	901/49
		,,	பிணிவீட்டு படலம்	5819	908/15
		,,	பிணிவீட்டு படலம்	5843	912/39
		,,	பிணிவீட்டு படலம்	5933	924/129
		,,	பிணிவீட்டு படலம்	5939	925/135
		,,	பிணிவீட்டு படலம்	5940	925/136
		சு.காண்டம்	பிணிவீட்டு படலம்	மி.பா	953/136-1
		,,	பிணிவீட்டு படலம்	5942	925/138
		,,	திருவடிதொழுத படலம்	6019	936/13
		,,	திருவடிதொழுத படலம்	மி.பா.	960/49-4
		யு.காண்டம்	வருணனை வழிவேண்டு படலம்	6604	1046/16

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	வருணனை வழிவேண்டு படலம்	6649	1052/61
		,,	இராவணன் வானரத்தானை		
காண் படலம்	6869	1084/10			
		,,	மகுடபங்கப்படலம்	6901	1088/07
		,,	மகுடபங்கப்படலம்	6908	1089/14
		,,	முதற்போர்புரி படலம்	7134	1122/118
		,,	முதற்போர்புரி படலம்	7225	1135/209
		,,	முதற்போர்புரி படலம்	7239	1137/223
		,,	முதற்போர்புரி படலம்	7240	1137/224
		,,	முதற்போர்புரி படலம்	7241	1137/225
		யு.காண்டம்	கும்பகருணன் வதைப்படலம்	7272	1142/01
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7328	1150/57
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7347	1152/76
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7532	1179/261

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7601	119/330
		,,	கும்பகருணன் வதைப்படலம்	7602	1190/331
		,,	அதிகாயன் வதைப்படலம்	7887	1233/161
		,,	அதிகாயன் வதைப்படலம்	7939	1240/213
		,,	நாகபாசப்படலம்	8007	1250/6
		,,	நாகபாசப்படலம்	8021	1252/20
		,,	நாகபாசப்படலம்	8055	1256/54
		,,	நாகபாசப்படலம்	8120	1269/122
		,,	நாகபாசப்படலம்	8187	1278/186
		,,	நாகபாசப்படலம்	8220	1282/219
		யு.காண்டம்	நாகபாசப்படலம்	8275	1293/274
		,,	பிரமாஸ்திரப்படலம்	8454	1318/14
		,,	பிரமாஸ்திரப்படலம்	8463	1319/23
		,,	பிரமாஸ்திரப்படலம்	8587	1337/147
		,,	பிரமாஸ்திரப்படலம்	8596	1338/156

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	பிரமாஸ்திரப்படலம்	8597	1338/157
		,,	பிரமாஸ்திரப்படலம்	8600	1339/160
		,,	பிரமாஸ்திரப்படலம்	8643	1345/203
		,,	சீதை களம்காண் படலம்	8675	1350/05
		,,	மருத்துமலைப் படலம்	8739	1361/37
		,,	மருத்துமலைப் படலம்	8745	1363/43
		,,	மருத்துமலைப் படலம்	8746	1363/44
		,,	மருத்துமலைப் படலம்	8753	1364/51
		,,	மருத்துமலைப் படலம்	8760	1364/58
		,,	நிகும்பலை யாகப்படலம்	8943	1391/10
		யு.காண்டம்	நிகும்பலை யாகப்படலம்	8944	1391/11
		,,	நிகும்பலை யாகப்படலம்	8961	1394/28
		,,	நிகும்பலை யாகப்படலம்	9019	1402/86
		,,	நிகும்பலை யாகப்படலம்	9047	1406/114
		,,	நிகும்பலை யாகப்படலம்	9056	1408/123

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	நிகும்பலை யாகப்படலம்	9065	1409/132
		,,	நிகும்பலை யாகப்படலம்	9072	1410/139
		,,	நிகும்பலை யாகப்படலம்	9076	1411/143
		,,	நிகும்பலை யாகப்படலம்	9081	1411/148
		,,	நிகும்பலை யாகப்படலம்	9111	1415/178
		,,	இந்திரசித்தன் வதைப்படலம்	9129	1418/14
		,,	இந்திரசித்தன் வதைப்படலம்	9167	1425/52
		,,	இந்திரசித்தன் வதைப்படலம்	9172	1425/57
		,,	படைக்காட்சிப்படலம்	9258	1437/12
		,,	படைக்காட்சிப்படலம்	9269	1439/23
		யு.காண்டம்	படைக்காட்சிப்படலம்	9271	1439/25
		,,	படைக்காட்சிப்படலம்	9272	1439/26
		,,	மூலபல வதைப்படலம்	9309	1445/11
		,,	மூலபல வதைப்படலம்	9322	1446/24
		,,	மூலபல வதைப்படலம்	9324	1447/26

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	மூலபல வதைப்படலம்	9446	1465/148
		,,	மூலபல வதைப்படலம்	9451	1467/153
		,,	மூலபல வதைப்படலம்	9462	1468/164
		,,	மூலபல வதைப்படலம்	9479	1471/181
		,,	மூலபல வதைப்படலம்	9517	1476/219
		,,	மூலபல வதைப்படலம்	9527	1477/229
		,,	இராவணன் தேர்ஏறு படலம்	9644	1495/3
		,,	இராவணன் தேர்ஏறு படலம்	9664	1498/23
		,,	இராமன் தேர்ஏறு படலம்	9681	1500/05
		யு.காண்டம்	இராவணன் வதைப்படலம்	9730	1507/27
		,,	இராவணன் வதைப்படலம்	9731	1507/28
		,,	இராவணன் வதைப்படலம்	9753	1510/50
		,,	இராவணன் வதைப்படலம்	9797	1517/94
		,,	இராவணன் வதைப்படலம்	9812	1519/109
		,,	இராவணன் வதைப்படலம்	9816	1519/113

பேசும் பாத்திரம்	பாடல் எண்ணிக்கை	காண்டம்	படலம்	செ.க.க.பதிப்பு	பக்க எண். பாடல் எண்.
		,,	இராவணன் வதைப்படலம்	9827	1521/124
		,,	இராவணன் வதைப்படலம்	மி.பா.	1660/143-1
		,,	இராவணன் வதைப்படலம்	9849	1524/146
		,,	இராவணன் வதைப்படலம்	9861	1526/158
		,,	இராவணன் வதைப்படலம்	9895	1530/172
		,,	மீட்சிப்படலம்	9956	1542/5
		,,	மீட்சிப்படலம்	10063	1557/112
		,,	மீட்சிப்படலம்	10064	1557/113
		,,	மீட்சிப்படலம்	10086	1560/135
		,,	திருமுடிசூட்டு படலம்	10317	1593/28

செய்யுள் முதற்குறிப்பு அகராதி



பள்ளத்தூர் பழ.பழனியப்பன்

சிவகங்கை மாவட்டம், பள்ளத்தூரில் பாரம்பரியமிக்க ப.அ.ப. குடும்பத்தில் பிறந்தவர். உயர்நிலைக் கல்வியையும்,கல்லூரிக் கல்வியையும் மயிலாடுதுறையிலும், திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியிலும் முடித்தவர். பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன் அவர்களிடம் தமிழ் பயின்றவர். புலவர் திரு. கீரன் அவர்களுடன் மூன்றாண்டுகள் தொடர்ந்து அவர் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கம்பராமாயணத்தைத் தன் விருப்ப இலக்கியமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர். கல்லூரிப் படிப்புக்குப் பின்னர் பரோடா வங்கியில் 33 ஆண்டுகள் பல பதவிகளிலும் இருந்து பணி நிறைவு செய்து ஓய்வு பெற்றவர்.

தனி ஒருவராகவே, கம்பராமாயணம் - 10500 பாடல்கள் முழுவதற்கும் 8 ஆண்டுகளில் 9 தொகுதிகளாக விளக்கவுரையும், நயவுரையும் எழுதி வெளியிட்டவர்.

வேலூர் - **"கம்பன் கழகத்தால் கம்பர் சீர் பரவுவார்"** பட்டமும், அம்பத்தூர் - ஆன்மீக சமாஜத்தால் **"ஆன்மீக இலக்கியச் செம்மல்"** பட்டமும், சென்னை - தமிழ்நாடு கலை மன்றத்தால் **"கம்பன் கவிச் செம்மல்"** பட்டமும், சென்னை - ஆழ்வார்கள் ஆய்வு மையத்தால் **"சான்றோர் விருது"** பட்டமும் பெற்றவர். மதுரை - தமிழிசைச் சங்கத்தால் **"இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் விருதும்"**, பொற்கிழியும், பட்டயமும் பெற்றவர்.

வானதி பதிப்பகம்